
பாரதி
பதிப்பகம்
மண்மலர்
-சாண்டில்யன்-
லதா

# மண் மலர்

சாண்டில்யன்

பாரதி பதிப்பகம்
108, உஸ்மான் சாலை,
தியாகராய நகர்
சென்னை - 600 017.
த.பெ. எண்: 4984 : : போன்: 4340205

# பதிப்புரை

பேராசிரியர் சாண்டில்யன் அவர்களால் எழுதப்பட்ட 'மண் மலர்' என்ற இந்த சரித்திர நாவல் ராணி வார இதழில் தொடராக வெளிவந்தது.

சரித்திர நாவல்கள் எழுதுவதில் சாண்டில்யன் அவர்கள் வல்லரசர் என்று சொன்னால் மிகையாகாது. இந்த நாவல் பத்திரிக்கையில் வெளிவரும் சமயம் நான் வெளியிடவேண்டும் என்று கேட்டேன், மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டார்கள். என்னிடம் மிகுந்த அன்பு கொண்ட பேராசிரியர் அவர்கட்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தங்கள்
பழ. சிதம்பரம்
25-9-83 நிர்வாகி, பாரதி பதிப்பகம்.

19413
3492936

விலை ரூ. 48-00

□ MAN MALAR (Historical Novel) by CHANDILYAN □ First Edition: Sep. 1983 □ Second Edition: Dec. 1985 □ Third Edition: August, 1994 □ Price Rs. 48-00
Copyright CHANDILYAN
□ Published by BHARATHI PATHIPPAGAM, 108, Usman Road, T. Nagar, Madras-17. □ Phone: 4340205 □ Printed at Kadalosai Achagam, Madras-24. □

# முன்னுரை

பாரத நாட்டின் சரித்திரத்தில் பல தலைமுறைகள் நீண்ட அடிமை வாழ்வெனும் இருளில் சிக்கிக்கிடந்த காலத்தில், சுதந்திர ஒளி வீசிய ஒரு மகோன்னத பகுதியை ''மண் மலர்'' மூலம் வாசகர்கள் முன்பு சமர்ப்பிக்கிறேன். சுமார் இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்கு மேல் பாரதத்தின் சுதந்திர தீபத்தை தன்னந்தனியே ஏந்தி நின்ற மேவார் ராணா பிரதாபசிம்மன் வாழ்க்கை வரலாற்றை அஸ்திவாரமாகக் கொண்ட சரித்திர நவீனம் ''மண் மலர்''.

இந்துஸ்தானத்தை தமது ராணுவ பலத்தாலும், பதவி ஆசை காட்டி ராஜபுத்ரர்களை தம் கட்சிக்கு ஈர்த்துக் கொண்டதாலும் அடிமையாக்கி, அசைக்கமுடியாத மொகலாய சாம்ராஜ்யத்தைப் படைத்த அக்பர், யாருக்கும் அஞ்சாத திடமனம் படைத்த அந்த மொகலாய சக்கரவர்த்தி, ஒரு தனி வீரனிடம் பயந்தார். அவன்தான் ராணா பிரதாபசிம்மன்.

பெரிய மேவார் ராஜ்யத்தின் வாரிசாகப் பிறந்தான் பிரதாப். அவன் பிறந்தபோது அவனுக்கு ராணா என்ற பட்டமிருந்தது. நாடில்லை, பணமில்லை, ஆதரவில்லை. ஆனால் மொகலாயருக்குத் தலைவணங்குவதில்லை என்ற திடமிருந்தது; அதை செயல்படுத்தும் வீரமிருந்தது; விடுதலை லட்சியம் இருந்தது. அந்த மகாவீரன் எப்படி பெரிய மொகலாய சாம்ராஜ்யத்தை எதிர்த்து நின்றான்? மற்ற எல்லா ராஜபுத்ரர்களும் அக்பருக்கு அடிமையாகி, அவருக்கு பெண்களைக் கொடுத்து மொகலாய சம்பந்தத்தால் மந்திரிப்பதவிகளைப் பெற்று அந்த சாம்ராஜ்யத்தின் தூண்களாயிருந்த காலத்தில், தன்னந்தனியே மொகலாய சாம்ராஜ்யத்தை அவன் எப்படி அசைத்தான்? என்ற கதைதான் 'மண் மலர்'

மற்ற ராஜபுத்ரர்கள் பஞ்சணையில் படுத்தபோது மலைத் தரையில் படுத்தான் பிரதாப். சுகத்தைத் துறந்தான்; சுற்றத்தைத் துறந்தான்; மானத்தைத் துறக்கவில்லை. ராஜபுத்ர மாணத்தின் ஒரே பிரதிநிதியாக அக்பருடன் போரிட்டான். படுக்கவோ தங்கவோ அவகாசமில்லாமல் ஆராவலிமலைக் கணவாய்களிலும், காடுகளிலும் ஓடியும், மறைந்தும், திரும்பியும் தொடர்ச்சியாகப் போரிட்டு கடைசியில் இழந்த கோட்டைகளை மீட்டான்.

அவன் சரித்திரம் ''மண் மல''ரில் சொல்லப்படுகிறது. சரித்திரத்துக்கு சுவைகூட்ட 'மண்மலர்' சம்பக், வீரனான ரவிசந்த் முதலிய இரண்டு மூன்று பாத்திரங்களை மட்டும் சேர்த்திருக்கிறேன். மற்றபடி இதில் வரும் பார்த்திரங்கள் எல்லாரும் சரித்திர பாத்திரங்கள். இந்தக் கதையின் வரலாற்று அஸ்திவார அம்சங்கள் கர்னல் ஜேம்ஸ் டாட் எழுதிய ''Annals and Antiquities of Rajasthan'' என்ற நூலின் (பழைய பதிப்பு) முதல் பாகத்தில் 107வது பக்கத்தில் துவங்குகின்றன.

'மண் மல'ரில் நூற்றுக்கு தொண்ணூறு, சரித்திரம்; கற்பனை நூற்றுக்கு பத்துதான். சரித்திரத்தைச் சுவைபட சொல்லுவதற்கே கற்பனை வேண்டும் என்று புரிந்து கொண்டவர்களுக்கு இது ரசமாக இருக்கும். 'மண்மலர்' பாரத மாதாவின் சுதந்திர மாலையில் தொடுக்கப்பட்டுள்ள மலர்களில் மிகச்சிறந்த ஒன்று. இதைப் பெருமையுடன் வாசகர்கள் முன்பு சமர்ப்பிக்கிறேன்.

இது 'வாராந்திர ராணி'யில் தொடர்கதையாக வந்தது. இதைப் பிரசுரித்த 'ராணி' ஆசிரியருக்கும், இதை புத்தகமாகக் கொண்டுவரும் பாரதி பதிப்பகத்தாருக்கும், எனது எழுத்துக்கு என்றும் பேராதரவு அளித்துவரும் தமிழ்ப்பெருமக்களுக்கும் எனது நன்றி உரித்தாகும்.

16-9-1983 **சாண்டில்யன்**
சென்னை -17.

19413
3492936

# மண் மலர்

## 1. ஆணைக்குரல்! வளைக்கரம்!!

மார்வார் வம்சத்தைச் சேர்ந்தவனும் மகாவீரனுமான ரவிசந்த், எதிரே பெரிதாக எழுந்து கொண்டிருந்த ஆராவலிமலைத் தொடரையும் அதன் அடர்ந்த காடுகளையும் நோக்கி, மகிழ்ச்சியும் துன்பமும் கலந்த ரேகையை தனது வீரவதனத்தில் படரவிட்டுக் கொண்டான். எதிரேயுள்ள மலைக்காடுகளில் ஏதோ ஒரு மூலையில், தான் தேடிவந்த பரிசு மறைந்துகிடக்கிறதென்ற எண்ணத்தால் மகிழ்ச்சியும், தான் சிறிது அயர்ந்துவிட்ட சமயத்தில் சக்கரவர்த்தி இந்தப் பணிக்கு ஏவி விட்டாரே என்ற சிந்தனையால் துன்பமும் அடைந்த அந்த வாலிப வீரன் ''இப்படி நான் ஏமாந்தது இதுவே முதல் தடவை. சக்காவர்த்தி பெரிய குள்ளநரியென்பதை அறிந்திருந்தும் நான் அறிவைப் பறக்க விட்டது என்ன முட்டாள்தனம்?'' என்று தன்னை நொந்தும் கொண்டான். தான் உட்புக இருக்கும் இடத்தில் அபாயம் தலைக்குமேல்இருக்கிறதென்பதையும், மிகுந்த எச்சரிக்கையுடனிருக்காவிட்டால் தனது தலை தப்புவது கடினமென்பதையும் உணர்ந்திருந்த ரவிசந்த், மலைக்குஅப்பால் மறையத்தொடங்கியசூரியனையும் மலை அடிவாரத்திலேயே பெரிதாக வளர்ந்திருந்த மரங்களையும் பார்த்து ''என் பெயரும் ரவிதானே, நானும் அந்த ரவியைப்போல் இந்த மலைக்குள் மறையவேண்டியவன்தான். அந்த ரவிக்குத்தான் மறுநாள் எழுந்

திருப்பது நிச்சயமென்பது தெரியும்; எழுந்திருக்கும் இடம் எது என்பதும் தெரியும். ஆனால் என் கதி என்னவென்று எனக்கே தெரியாது. முதலில் இந்த அடர்ந்த காடுகளில் கிழக்கு மேற்கு தெரியாதவன் நான். இப்படிப்பட்ட என்னை எதற்காக இந்தப் பணிக்கு சக்கரவர்த்தி தேர்ந்தெடுத்தார்?'' என்று வினவிக் கொண்டான். ஆனாலும் அதைப்பற்றி அப்பொழுது சிந்திப்பதில் பயனேதுமில்லையென்று முடிவுக்கு வந்து தனது மெல்லிய வெள்ளைப் புரவியிலிருந்து கீழே இறங்கினான்.

நாளெல்லாம் பாலைவனத்தில் பயணம் செய்த காரணத்தால் அந்த மெல்லிய புரவியின் உடலெல்லாம் வியர்த்திருந்தாலும், ஆயாசத்துக்கோ அலுப்புக்கோ அடையாளமான நுரை சிறிதளவும் அதன் வாயில் தட்டவில்லை. இறங்கியதும் அந்தப்புரவியையும் பார்த்துத் தன்னையும் லேசாகப் பார்த்துக்கொண்ட ரவிசந்த் ''எசமானைப்போல்அவன்வாகனம்'' என்றுநினைத்ததால் தனது இதழ்களில் சிறிது புன்முறுவலையும் படரவிட்டுக் கொண்டான். உண்மையில் அவனுக்கும் அவன் புரவிக்கும் எந்தவித வித்தியாசமுமில்லை; புரவி மிக மெல்லியதாக இருந்ததென்றால் எசமான் அதைவிட மெலிந்தவனாகக் காணப்பட்டான். புரவி சாதாரண புரவிகளைவிட ஆறு சாணாவது நீளமென்றால் ரவிசந்தும் நன்றாக உயர்ந்து நெடுமாலாகக் காட்சியளித்தான். புரவி ஒருமுறை தலையைத் திருப்பி அவனைத் தனது கண்களால் கவனித்த போது, மாலை உட்புகுந்துவிட்ட அந்த நேரத்திலும் அதன் கண்கள் நட்சத்திரங்கள்போல் ஜொலித்தன. புரவி தன்னை நோக்குவதைக் கண்ட ரவிசந்த் தனது கண்களை அதன் கண்களோடு கலந்தபோது அவன் கண்களும் பெரிதாகப் பளிச்சிட்டு, புரவிக்கும் எசமானுக்கும் உள்ள ஒற்றுமைக்கு அத்தாட்சி கூட்டின. கண்களோடு கண்கள் கலந்தால் காதல் என்பதை கவியும் வீரனுமான பிருத்விராஜன் பலசமயங்களில் தனக்குச் சொல்லிக் கொடுத்திருந்தது



உண்மைதானென்பதை அந்த சில விநாடிகளில் ரவிசந்த் தீர்மானித்துக்கொண்டான். ஆதலால், புரவியில் தொங்கிக் கொண்டிருந்த தனது தோல்பையிலிருந்து ஒரு துணியை எடுத்து புரவியின் கன்னத்தைத் துடைத்து அதை முத்தம் இட்டுக்கொண்டான்; புரவி சந்தரை அவன் காதலித்தான். ஆண் ஆணைக் காதலிக்கமுடியாதென்ற எண்ணம் தவறு என்பதை பலமுறை சக்கரவர்த்தி வட்டாரங்களிலேயே அவன் சொல்லியிருக்கிறான். காதல் என்றால் பெண்ணிடம் செல்லும் காமந்தான் என்பதல்ல; வேறு வகை காதலும் உண்டு. தான் சந்தரைக் காதலித்தது அதில் ஒருவகை தான் என்று சுட்டிக்காட்டியிருக்கிறான். அந்தக் காதலின் விளைவாக எத்தனையோ முறை அவன் சந்தரைப் பொது விடங்களில் கட்டி முத்தமிட்டிருக்கிறான். அவன் செய்கையைக் கண்டு பலர், அவன் நேரில் இல்லாத சமயங்களில் நகைத்திருக்கிறார்கள். எதிரில் நகைத்தது ஒரே ஒருவன்; அவன் பட்ட பாட்டுக்குப்பிறகு யாரும் அவன் புரவிக் காதலை எளனம் செய்ததில்லை.

அந்தச் சம்பவம் நடந்தது ராஜா பிருத்விராஜின் நந்த வனத்தில். அங்கிருந்த சிறு வாவியில் சந்தரைக் குளிப்பாட்டித் துடைத்து விட்டு புல்தரையில் படுக்கவிட்டு உடலைத் தேய்த்த ரவிசந்த், முடிவில் அதன் கழுத்தை தனது இருகைகளாலும் வளைத்து முத்தமிட்டான். அப்பொழுது எட்ட இருந்து ஒரு நகைப்பொலிகேட்கவே, உட்கார்ந்த நிலையிலிருந்து திரும்பிப்பார்த்த ரவிசந்த் சற்று தூரத்தில் சக்கரவர்த்தியின் மெய்க்காவலனான அஹமத் சுபான் நின்று நகைப்பதைக் கண்டான். அதைக்கண்டு அவன் வெகுளவுமில்லை, அஞ்சவுமில்லை. மீண்டும் ஒருமுறை புரவியை முத்தமிட்டு ''சுபான்: இப்படி வா'' என்று சர்வ சாதாரணமாக அந்த மொகலாய வீரனை அழைத்தான். எதற்காக ரவிசந்த் தன்னை அழைக்கிறானென்பதைப் புரிந்து கொள்ளாமலே அவனை நெருங்கி வந்த அந்த மொகலாய வீரனை நோக்கிய ரவிசந்த், உட்கார்ந்த நிலையிலிருந்து

எழுந்து ''சுபான்: உனக்குப் புரவிகளிடத்தில் மிகவும் பிரியமுண்டு என்று கேள்விப்பட்டிருக்கிறேன்'' என்று சொன்னான்.

ரவிசந்த் இப்படி கேட்பதற்குக் காரணம் அறியாத சுபான் ''ஆம். வீரர்கள் எல்லாருக்கும் புரவியென்றால் ஆசைதான்'' என்று கூறினான்.

''அப்படியானால் சந்தரை நீ முத்தமிடலாம்'' என்றான் ரவிசந்த்.

அஹமத் சுபான் ஏதும் புரியாமல் விழித்தான்.'' எதற்காக நான் முத்தமிட வேண்டும்?'' என்று வினவினான்.

''அப்பொழுதுதான் சந்தர் உன்னை மன்னிக்கும்' என்றான் ரவிசந்த், சர்வ சாதாரணமான குரலில்.

''அது மன்னிக்காவிட்டால்?'' சுபான் குரலில் எளனமிருந்தது.

''நானும் மன்னிக்கமாட்டேன்!'' ரவிசந்தின் குரலில் நகைப்பு இருந்தது.

''நான் என்ன தவறு செய்துவிட்டேன்?''

''சந்தரை நான் முத்தமிடும்போது நகைத்தாய்''

''அது ஒரு குற்றமா?''

''பெரும் குற்றம்.''

''நான் இந்த மிருகத்தை முத்தமிடாவிட்டால் என்ன ஆகும்?''

''இரண்டாம் முறை குற்றம் செய்துவிட்டாய். அதை மிருகமென்று அல்பமாகப் பேசிவிட்டாய்'' என்ற ரவிசந்த் ''சுபான்: சொல்வதைக்கேள்; சந்தரிடம் மண்டியிட்டு மன்னிப்பாவது கேள்'' என்று உத்தரவிட்டான்.

அஹமத் சுபான் சக்கரவர்த்தியின் சேவையில் சேர்ந்து அதிக நாளாகவில்லையாதலால் அவன் ரவிசந்தைப் பற்றி சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. ஆகவே ரவிசந்த் மீதும்,



கீழே புல்தரையில் படுத்தவண்ணம் தன்னை உற்று நோக்கிக் கொண்டிருந்த புரவி மீதும் சீற்றம் நிரம்பிய பார்வையொன்றை செலுத்திவிட்டுத் திரும்பினான். திரும்பிய அதே விநாடியில் ரவிசந்தின் இரும்புக் கைகள் அவன் தோளைப்பிடித்தன. அடுத்த விநாடி அஹமதுக்கு ஆகாய தரிசனம் கிடைத்தது; அதற்கும் அடுத்த விநாடி சற்று முன்பு புரவியை நீராட்டிய பொழிலில் நீராட்டம் கிடைத்தது.

இதனால் திகைத்த அஹமத், அடுத்த க்ஷணம் அங்கு நிற்கவில்லை. உடை முழுதும் நீர் சொட்டச் சொட்ட எழுந்து ஓடினான், அந்த வாவியிலிருந்து. அவனைப் பார்த்து புரவியும் நகைத்தது, எசமானும் நகைத்தான். அவர்கள் இருவர்மீதும் கொலைப்பார்வையொன்றை வீசினான் அஹமத்,ஓடும்போதே. இந்த நிகழ்ச்சிக்குப்பிறகு சக்கரவர்த்தியின் வட்டாரங்களில் ரவிசந்தின் புரவியையோ, அதன் மீது அவன் கொண்டுள்ள காதலைப் பற்றியோ யாரும் பேசியது கிடையாது.

ஆராவலி மலைத்தொடரின் முன்பாக நின்ற சமயத்தில் கூட ரவிசந்துக்கு அந்தப் பழைய சம்பவம் நினைவுக்கு வந்ததால் அவன் ஒருமுறை புன்முறுவல் கொண்டு துணியால் புரவியின் உடல் முழுவதையும் துடைத்துவிட்டு ''வா சந்தர், கிரகப் பிரவேசம் செய்வோம்'' என்று அழைத்துவிட்டு கடிவாளத்தை அதன்மீது எறிந்துவிட்டு மலையில் ஏறத்துவங்கினான். மாலை முற்றி இருள் புகத்துவங்கியபடியால் காடு மிகவும் கருமையாகவே தெரிந்தது. அன்று அமாவாசை கழிந்த ஐந்தாம் நாளாகையால் பிறைச்சந்திரன் சிறிதே வளர்ந்து மங்கலான நிலவை காட்டுக்குள் மெல்ல மெல்ல அனுப்பலாயிற்று. மாலை நேரத்தில் கூண்டுகளில் அடைந்த பட்சிகள் சில, சந்திரன் தலைகாட்டியதும் தாங்களும் வெளியே தலை நீட்டி கூவி சந்திரனை வரவேற்ற ஒலிகள் மிகஇன்பமாக ரவிசந்தின் செவியில் விழுந்ததால் அதை அனுபவித்துக் கொண்டே

எங்காவது மலைச்சுனையிருந்தால் தானும் நீராடி புரவியையும் குளிப்பாட்டலாம் என்று எண்ணமிட்ட ரவிசந்த், காதைத் தீட்டிக்கொண்டு மலைப்பாதையில் நடந்து சென்றான். அப்படி நடந்த சில நாழிகைகளுக்கெல்லாம் சற்று தூரத்தே கேட்ட மலைஅருவியின் ஒலியைத் தொடர்ந்து, அது இருக்குமிடம் நோக்கி புரவியுடன் நடந்தான். சுத்த அத்வானமாக மனித சஞ்சாரம் அடியோடு இல்லாத அந்த மலைக்காட்டில் அருவியை அடைந்த ரவிசந்த் அதில் நீராடும் உத்தேசத்துடன் தனது அங்கியைக் கழற்றிவிட்டு புரவிமீது இருபுறமும் தொங்கிக்கொண்டிருந்த தனது இரு தோல் பைகளையும் எடுத்து தனது அங்கியுடன் கழற்றிக் கட்டினான். பிறகு கச்சையையும் அதில் தொங்கிய நீளமான வாளையும் எடுத்து எல்லாவற்றையும் ஒரு பாறைமீது வைத்துவிட்டு அருவியை நோக்கிச் சென்றான். அருவிக்கு முன்னிருந்த நாலைந்து செடிகொடிகளை விலக்கிக்கொண்டு அருவியிருக்குமிடத்தை அடைந்ததும் சட்டென்று நின்றான். அருவியில் ஏற்கனவே ஒருவன் நீராடிக் கொண்டிருந்தான். அவன் யாரென்று புரியவில்லை ரவிசந்துக்கு. அருவிக்கரையில் ஒரு பிரம்மாண்டமான கரியபுரவி நின்றிருந்தது. அப்பேர்ப்பட்ட புரவியை அன்று வரை ரவிசந்த் கண்டதில்லை. எதற்கும் புரவியையும், நீராடிக்கொண்டிருந்த மனிதனையும் அணுகும் எண்ணத்துடன் நடக்க முற்பட்ட ரவிசந்த் திடீரென பிரமை பிடித்து நின்றான். அதுவரை அவனுக்கு முதுகைக் காட்டி நின்று கொண்டிருந்த அந்தப் பெரும் புரவி சரேலென்று திரும்பி அவனுக்கு குறுக்கே சுவர்போல் நின்று அருவிக்குப் போகவிடாமல் அவனைத் தடுத்தது. அதன் விழிகள் சாதாரணப் புரவியின் கண்களைப்போலில்லாமல் மிகப் பெரியனவாய், பயங்கரமாய்க் காணப்பட்டன. அந்த ராட்சஸ விழிகள் உருண்டு, எட்ட நிற்கும்படி ரவிச்சந்தை எச்சரித்தன. அதே சமயத்தில் நீராடிக்கொண்டிருந்த அந்த மனிதன் குரல் கொடுத்தான் ''நகர்ந்து நில், அவன் வரட்டும்'' என்று.



அந்த ஆணையைக் கேட்டதும் அந்தப் புரவி மந்திரத் தால் இயக்கப்பட்டது போல் நகர்ந்து நின்றது. நீராடிய மனிதன் கரைக்கு வந்து ரவிசந்த்தை நோக்கினான். ''இனி நீ நீராடலாம்'' என்றான். அவன் பேச்சில் உத்தர விருந்தது. ஏதோ பணியாளைப் பார்த்து ஆணையிடுபவன் போல் பேசினான். குரல் மிகக் கடுமையாயிருந்தது.

ரவிசந்தின் முகத்தில் சினம் துளிர்த்தது. ''நீ யார்'' என்று அந்த மனிதனை நோக்கி வினவினான்.

''இது நான் கேட்கவேண்டிய கேள்வி. என் காட்டுக்குள் நீ வந்திருக்கிறாய்'' என்று கூறிய அந்த மனிதன், லேசாக நகைத்தான். அந்த நகைப்பில் ஏளனமிருந்தது.

யார் நகைத்தாலும் சினப்படும் சுபாவமுள்ள ரவிசந்துக்கு அந்த மனிதனிடம் கோபம் சிறிதும் வரவில்லை. அவனிடம் அடங்கிப்போவது உசிதம் என்ற எண்ணமும் எழுந்தது, ரவிசந்தின் மனதில். அந்த மனிதன் விழிகளில் அதுவரை ரவிசந்த் காணாத ஏதோ ஒரு வசீகர சக்தியிருந்தது. எவரையும் பணியவைக்கும் கூர்மையுமிருந்தது.

அவன் அதிக உயரமில்லை. நல்ல திடமான தேகத்தைக் கொண்டிருந்தான். கைகள் உருண்டு திரண்டிருந்தன. அவன் இரண்டொருமுறை உடலைத் துவட்டிய போது திரும்பிய முறை ஏதோ சிங்கம் திரும்புவது போலிருந்தது. உடலைத் துடைத்துக்கொண்டதும் ''ஆடையைக் கொண்டு வரலாம்'' என்று கூவினான் அம்மனிதன். ஆடை ஒரு கத்திமுனையில் நீட்டப்பட்டது. அருவிக்கருகிலிருந்த ஒரு கொடியின் மறைவிலிருந்து. நீட்டிய கரத்தில் வளைகள் இருந்தன. பொன் வளைகள் அல்ல;மரத்தில் கடையப்பட்ட கருவளைகள் இரண்டு அந்த அழகிய கரத்தை அலங்கரித்தன.

# 2. அன்று கிடைத்த பரிசு

வாளின் நுனியில் ஆடையை நீட்டிய வளையல் கரம் மெல்லியதாகவும், நீண்டும், மிக அழகாகவும் இருந்ததை கவனித்த ரவிசந்த், ''இந்த கைக்கு உடையவள் அப்சர சாகத்தான் இருக்கவேண்டும்; நிச்சயமாக மனிதவர்க்கத் தைச் சேர்ந்தவளாக இருக்கமுடியாது'' என்று நினைத் தான். சித்திரம் தீட்டுவதில் வல்லவனான அவன், தனது தோல்பைக்குள் இருந்த ஓவியக் கருவிகளை எடுக்க முடியுமானால் அந்தக் கையை வைத்துக்கொண்டே அவள் சித்திரத்தை தீட்டமுடியும் என்று எண்ணினான். ஆனால் அப்படி சித்திரம் தீட்டுவதை அவளோ, அவளை அழைத்து வந்திருக்கும் வீரனோ விரும்ப மாட்டார்கள் என்ற சிந்தனையால் அந்த எண்ணத்தை கைவிட்டு, அந்த அழகிய கரத்தின் மீதிருந்த பார்வையை உடலைத் துவட்டிவிட்டு, ஆடையை அணியத் தொடங்கிய வீரன் மீதும், அவன் புரவி மீதும் செலுத்தினான்.

அந்த வீரனின் ஆடையில் படாடோபம் ஏதும்இல்லை. மிக எளிய ஆடையாயிருந்ததன்றி இரண்டொரு இடங் களில் கிழிந்தும் இருந்தது. அவன் வலது கையில் ஒரு இரும்பு வளையத்தை அணிந்திருந்தான். அவன் காதை யும் ஒரு இரும்பு வளையமே அலங்கரித்தது. உடைகளை அணிந்தபோது அவன் உடலை நெளித்த சமயங்களில் அவன் திண்மையான சதைப் பகுதிகள் அதிகமாக அசை யாமல் கெட்டிப்பட்டு நின்றிருந்ததைக் கண்ட ரவிசந்த், அந்த மனிதன் உடல், இரும்புதான் என்பதை நிர்ணயித்துக் கொண்டான். தவிர செக்கச் செவேலென்ற அந்த உடலில் காணப்பட்ட பல தழும்புகளில் இருந்து அவன் பல போர்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பதையும்.



சொல்ல முடியாமல் அடித்து விட்டான். ஏதோ சொல்ல வாயைத் திறந்த பாவை சட்டென்று பேச்சை நிறுத்தி தன் செம்பருத்தி இதழ்களை மூடிவிட்டதைக் கண்ட ரவிசந்த் மேற்கொண்டு எதும்பேசாமல் அருவியை நோக்கி நடந் தான். அவன் புரவியும் அவனைத் தொடர்ந்தது.

ரவிசந்த் முதலில் புரவியை அருவியில் நிறுத்தி அதை நன்றாகத்தேய்த்துக்குளிப்பாட்டி அதன் உடலை தன்னிடம் இருந்த விலை உயர்ந்த கெட்டியான துணியால் துடைத்து விட்டான். பிறகு புரவியை அப்புறம் செல்லவிட்டு, அதே துணியைத் துவைத்துப் பிழிந்துவிட்டு, தானும் அருவியில் நீராடி, அந்தத் துணியால் உடலைத் துவட்டுவதற்கு சற்று எட்ட பாறையின் மறைவுக்குச் சென்று உடலைத் துவட்டி, அந்த துணியையே பிழிந்து உடுத்திக்கொண்டு திரும்பி வந்து முன்பு பாதையில் வைத்த அங்கி, கச்சை முதலிய வற்றைஅணிந்து கொண்டான். கச்சையில் பத்திரப்படுத்தி யிருந்த தனது விலைஉயர்ந்த தங்கச் சங்கிலியையும் கழுத் தில் அணிய நினைத்தவன் அதை அணியாமல் மீண்டும் கச்சையில் செருகிக் கொண்டான். வாளைக் கச்சையில் கட்டாமல் உறையுடன் கையில் எடுத்துக்கொண்டு எட்ட உட்கார்ந்திருந்த வீரனை அணுகினான். ''வீரரே நான் தயார்'' என்றும் கூறினான்.

அந்த மனிதன் ரவிசந்த்தை ஏறெடுத்து நோக்கினான் ஒரு விநாடி. பிறகு கூடையுடன் நின்ற பெண்ணை நோக்கி, ''சம்பக்! உணவைப் பரிமாறு. இருவருக்கும் இலைபோடு'' என்று கட்டளையிட்டான்.

சம்பக் உடனே இலை போட்டாளில்லை. ''சைதக்!'' என்று அந்தக் கரிய புரவியை அழைத்தான். அந்தப் புரவி அந்த பெரிய வீரனுக்கும், ரவிசந்த்துக்கும் குறுக்கே வந்து நின்றதும், அதன்மீது தனது கூடையில் இருந்த பெரிய சேலையை எடுத்துப்போட்டு தொங்கவிட்டு இரு வீரர் களுக்கும் இடையே திரை போட்டான். திரைக்கு அ

இருந்த வீரனுக்கு ஒரு பலா இலையைப் போட்டுவிட்டு இப்புறம் வந்து ரவிசந்த்துக்கும் இலை போட்டாள்.

இந்த ஏற்பாட்டைக் கண்ட ரவிசந்த் கோபத்தின் எல்லையை எய்தினான். அந்தப் பெண் செய்த ஏற்பாட்டின் நோக்கம் மிக நன்றாகத் தெரிந்தது மார்வார் வாலிபனுக்கு. தான் பார்த்து அந்த வீரன் உணவருந்த இஷ்டப்படவில்லை என்பதைப் புரிந்து கொண்டதால், இலையில் உட்கார்ந்த ரவிசந்த் தன் புரவியை சைகை காட்டி அழைத்தான். அந்த சைகையைப் புரிந்துகொண்ட அவன் புரவி, அவன் சற்று தூரத்தில் வைத்திருந்த தோல் பைகளை வாயில் கவ்விக்கொண்டு வந்ததும், அந்த இரு பைகளில் ஒன்றில் இருந்து ஒரு சேலை முடிப்பை எடுத்துப் பிரித்து அதில் இருந்த உணவை எடுத்து சாப்பிட முற்பட்டான்.

அதைக் கண்ட அந்த வீரனின் கரிய புரவி பற்களைக் காட்டி நகைத்தது. அந்தப் பெண் கோப விழிகளை ரவிசந்த்மீது நாட்டி ''வீரனே! நீ செய்வது இன்னதென்பதைப் புரிந்து கொண்டாயா?'' என்று வினவினாள், உஷ்ணம் தொனித்த குரலில்.

''நான் செய்வதை என்ன, நீங்கள் செய்வதையும் புரிந்து கொண்டேன்'' என்ற ரவிசந்த், உணவில் ஒரு கவளத்தைக் கையில் எடுத்தான்.

''வீரனே! சிந்தித்து எதையும் செய். ஒரு மகா வீருடன் சாப்பிட மறுக்கிறாய்'' என்றாள் சம்பக்.

''மறுப்பது நானல்ல. இடையே திரையிட்டதும் நானல்ல. என்னுடன் உண்பதை கௌரவக்குறைவுஎன்று அவர்தான் நினைக்கிறார். அத்தகைய அவமரியாதையை எந்த ராஜபுத்ரன் சகிப்பான்?'' என்று வினவினான் ரவிசந்த்.

அந்த சமயத்தில் கரிய புரவி தாங்கி நின்ற திரைக்கு அப்புறமிருந்து ஒலித்தது அந்த வீரனின் கம்பீரமானகுரல்.



''சிறுவனே! அவமரியாதை எது என்பது உனக்குப் புரியுமா?'' என்று வினவியது அந்த மனிதன் குரல்.

ரவிசந்த் சிறிதும் சிந்தித்தான் இல்லை. ''தெரியுமா தெரியாதா என்பதை நிரூபிக்க என் வாள் இருக்கிறது'' என்று சொன்னான், குரலில் சிறிதும் கோபத்தைக் காட்டவில்லை அவன். சர்வ சாதாரணமான குரலில் பேசினான்.

''அப்படியானால் அதை எடுத்துக்கொள்'' என்ற அந்த வீரன், உணவு அருந்துவதை பாதியிலேயே நிறுத்திவிட்டு எழுந்து அருவியில் சென்று கை கழுவித் திரும்பினான். புரவியின் முதுகில் இருந்த சேலையை எடுத்து புரவியையும் நகர்த்தி விட்டு தனது பெரிய கனமான வாளுடன் நின்றான், அலட்சியமாக.

ரவிசந்த் உணவு அருந்துவதை பாதியில் நிறுத்தவில்லை. ''நான் சாப்பிட்டு இரண்டு நாள் ஆகிறது; சற்று பொறுக்க வேண்டும்'' என்று கூறிவிட்டு உணவு அருந்தி முடித்துக் கை கழுவி வந்தான். வந்ததும் தனது வாளை உறையில் இருந்து உருவி சரிபார்த்தான். பிறகு புன்முறுவலுடன் எதிரே நின்ற வீரனை நோக்கி ''தாங்கள் துவங்கலாம் முதலில்'' என்றான்.

''இல்லை, நீயே துவங்கு'' என்று பழையஆணைக் குரலில் கூறிய அந்த வீரன், ரவிசந்த் போரை துவங்கக் காத்து நின்றான்.

அந்த மனிதனின் தோரணையில் இருந்தும், அடர்த்தியாக இருந்த மீசையை அடுத்திருந்த வலுத்த உதடுகளில் துலங்கிய புன்முறுவலில் இருந்தும், அவன் சாதாரண வீரனாயிருக்க முடியாது என்பதை சந்தேகமறப் புரிந்து கொண்ட ரவிசந்த், ''வீரரே! சண்டையைத் துவங்கு முன்பு நான் போர் புரிவது யாருடன் என்பதை அறிந்து கொள்ளலாமா?'' என்று வினவினான்.

''போரிடும் சமயத்தில் இது அனாவசிய கேள்வி'' என்றான் அந்த வீரன்.

''அவசியமான கேள்வி. நான் கொன்றது யாரை என்று தெரிந்து கொள்வது நல்லதல்லவா?'' என்றான் ரவிசந்த்.

''அதற்கு அவசியம் இருக்காது!'' என்ற அந்த வீரன் நகைத்தான்.

மேற்கொண்டு எதும் பேசாமல் ரவிசந்த் தனது வாளை உயர்த்திக் கொண்டு விரைந்தான், அந்த மனிதனை நோக்கி. சட்டென்று அவன் வாள் தாழ்ந்தது. காதைத் தீட்டிக் கொண்டு உற்றுக் கேட்டான். நாலைந்து புரவிகள் வரும் ஒலி கேட்கவே, ''வீரரே! நிலைமை மாறிவிட்டது. நமது சண்டை சில விநாடிகள் நிற்க வேண்டும். என்னைக் கொலை செய்ய வருபவர்களை தீர்த்துக்கட்டிவிட்டு வருகிறேன்'' என்று ரவிசந்த் கூறுவதற்கும் நான்கு மொகலாய வீரர்கள் அந்த இடத்தில் தோன்றுவதற்கும் சரியாக இருக்கவே, ரவிசந்த் அவர்களை நோக்கி வாளுடன் சென்றான்.

அந்த நால்வரையும் தன்னை சூழ விடவில்லை அவன். முதலில் வந்தவன் மார்பில் அவன் வாள் வேகமாகப் பாய்ந்துவிட அந்த வீரன் புரவியில் இருந்து சரிந்தான், மரண ஓலத்துடன். அதே வேகத்தில் ரவிசந்த்தின் வாளால் சீவப்பட்ட இன்னொருவன்தலை நிலத்தில் உருண்டு அருவியை நோக்கி ஓடியது; மற்ற இருவர் நிற்கவில்லை; உருண்ட தலையை விட வேகமாகப் பறந்தார்கள் அந்த இடத்தில் இருந்து.

அவர்கள் மறைந்ததும், அருவிக்குச் சென்று தனது வாளில் இருந்த இரத்தத்தை கழுவிக் கொண்டு திரும்பிய ரவிசந்துக்கு முற்றும் எதிர்பாராத அதிர்ச்சி காத்திருந்தது. வியப்பு கலந்த அதிர்ச்சி அது. அதிர்ச்சியின் பரிசு எத்தன்மையது என்பதை உடனே புரிந்துகொள்ளவில்லை ரவிசந்த். பின்னால் புரிந்துகொண்ட போது அதற்கு ஈடான பரிசு உலகத்தில் கிடையாது என்பதை உணர்ந்து கொண்டான் மார்வார் வம்ச வாலிபன்.

# 3. குஷ்ரோஸா

கீர்ட்டருவி நீரில் கத்தியைக் கழுவிவிட்டு தன்னுடன் போரிடக் காத்திருந்த வீரனை நோக்கி வந்த ரவிசந்துக்கு அவன் முற்றும் எதிர்பாராத அதிர்ச்சி காத்திருந்தது. அவன் திரும்பியபோது அந்த மனிதன் கையில் வாளில்லையென்பதையும், அந்த வாளையும் அவன் வேலையுங்கூட அவனுடன் வந்திருந்த அந்தப் பெண் கையில் ஏந்தி நின்றதையும் கவனித்த மார்வார் வாலிபன், அந்த மாற்றத்துக்குக் காரணம் புரியாமல் விழித்தான். கட்டுமஸ்தான திடகாத்திர சரீரத்துடன் நின்றிருந்த அந்த மனிதன் அச்சத்தை லவலேசமும் அறியாதவனென்று அவன் கண்களின் பார்வையிலிருந்தே புரிந்து கொண்ட ரவிசந்த், அந்த வீரன் என் போரிட விரும்பவில்லை என்பதை உணர முடியாமல் அவனருகில் வந்ததும் நாலடி தள்ளியே நின்றான். ஆனால் அந்த இருவருக்கும் இடையிலிருந்த நாலடி இடைவெளி அதிகநேரம் நீடிக்கவில்லை. அடுத்து நடக்கப் போவது என்னவென்பதை ரவிசந்த் தீர்மானிக்கும் முன்பே அந்த நாலடியை வேகமாகத் தாண்டிய அந்த வீரன் ரவிசந்தை இறுகத் தழுவிக் கொண்டான். ''வீரனே! உன்னைப்போல் பத்து ராஜபுத்ர வம்சங்கள் மட்டும் இருக்குமானால் ராஜபுதனம் இன்று மொகலாயரிடம் அடிமைப்பட்டுக் கிடக்காது'' என்று சிலாகிக்கவும் செய்தான்.

அந்த வீரனின் முரட்டுத் தழுவலால் மூச்சு நின்றுவிடும் போலிருந்ததால் அந்த எமத்தழுவலிலிருந்து தன்னை மெல்ல விடுவித்துக் கொண்ட ரவிசந்த் ''வீரரே! தாங்கள் யார் என்பதைச் சொல்லலாமா?'' என்று வினவினான்.

அந்த வீரன் தனது இதழ்களில் புன்முறுவலொன்றைப் படரவிட்டுக் கொண்டான். வீரம் சொட்டிய அவன் மீசை அந்தப் புன்முறுவலால் இழுக்கப்பட்ட மேலுதட்டில் கம்பீரமாக அசைந்தது. "ராஜபுத்ரன் மானத்துக்காகப் போராடும் சிறு கூட்டத்தில் நான் ஒருவன். நீ யார்? இங்கு எதற்காக வந்தாய்? எதை நாடி வந்தாய்?" என்று விசாரித்தான் அந்த வீரன்.

அவன் சொன்ன பதிலில் அவன் பெயரைப் பற்றிய பிரஸ்தாபமில்லையென்பதையும், என்ன காரத்தினாலோ அதை மறைக்கிறானென்பதையும் புரிந்துகொண்ட ரவிசந்த் சற்று குத்தலாகவே பேசத் தொடங்கி "வீரரே! உங்களைப் போல் பெயரை மறைக்கவேண்டிய அவசியம் எனக்கில்லை. எந்த இடத்திலும் எந்த சூழ்நிலையிலும் அதை பகிரங்கமாகச் சொல்ல முடியும். என் பெயர் ரவிசந்த். மார்வார் வம்சத்தவன். நான் இன்னாரென் பதைச் சொல்லி விட்டேன்; இந்த ஆராவலி மலைத் தொடரின் அடர்ந்த காட்டுப் பகுதிக்கு ஏன் வந்தேன் என்பதை சொல்ல அவசியமில்லை. அது என் சொந்த விஷயம்" என்று பதில் சொன்னான்.

இந்த பதிலுக்குப் பிறகு அந்த வீரன் நேராக விஷயத்துக்கு வந்தான். "நீ இங்கு வந்த காரியம் இந்த அருவிக்குள் மறைந்திருக்கும் ராஜபுத்ரர்களை வேவு பார்ப்பதற்கில்லையே?" என்று வினவினான்.

இதற்கு பதில் சட்டென்று வந்தது ரவிசந்திடமிருந்து. "அந்த மாதிரி ஈனப்பணிகளை செய்யும் அளவுக்கு நான் தாழ்ந்துவிடவில்லை. தவிர இந்த மாதிரி என்னிடம் புணிந்து கேள்வி கேட்டுப் பிழைத்தவர்களும் கிடையாது" என்று சர்வசாதாரணமாகப் பதில் சொன்னான்.

இந்த பதிலை, பதிலில் அடங்கிய ரோஷத்தை, சீற்றத்தை, அந்த மனிதன் கவனித்ததாகத் தெரியவில்லை.



"நீ மொகலாயர் படையைச் சேர்ந்தவனா?" என்று அடுத்த கேள்வி பிறந்தது, அந்த வீரனிடமிருந்து.

"ஆம்!"—ரவிசந்தின் பதிலும் திட்டமாக இருந்தது.
"எந்தப் பிரிவில் வேலை செய்கிறாய்?"
"பிருத்விராஜிடம்?"
"எந்த பிருத்விராஜ்?"
"மகாகவி பிருத்விராஜ்"

இந்த பதிலைக் கேட்டதும் அந்த மகாவீரனின் கண்களில் ஒரு இன்பச் சாயை படர்ந்தது. "ராஜபுத்ரர்கள் வீரத்தைப் பற்றி பாடல்கள் எழுதி நாடோடிப் பாடகர்களிடம் கொடுக்கிறானே, அந்த பிருத்விராஜா?" என்று கேட்ட அந்த வீரனின் குரலில் மகிழ்ச்சியின் ஒலி லேசாக ஒலித்தது.

"அவரேதான்" என்று பதில் சொன்ன ரவிசந்தின் குரலில் பெருமையின் சாயை பூர்ணமாக இருந்தது.

அந்த வீரன் சிறிது சிந்தித்தான், "அக்பரின் நவரோஸாவை அம்பலத்துக்குக்கொண்டு வந்தானே......" என்ற வார்த்தையை முடிக்கவில்லை அந்த வீரன், அதற்குள் அவனை இடைமறித்த ரவிசந்த் 'அதே கவிதான். ராஜபுத்ரருள் ஒரு கவி. அவர்களுள் இணையிலாத துணிவுள்ள ஒரு வீரர்"என்று கூறினான், குதூகலத்துடனும் பெருமையுடனும்.

அந்த வீரன் முகத்திலும் பெருமை படர்ந்தது. அத்துடன் துக்கமும் படர்ந்தது. "ரவிசந்த்!" என்று அவன் மார்வார் வீரனைப் பெயர் சொல்லி அழைத்தபோது அதில் அன்பும் கனிவும் அபரிமிதமாயிருந்தது.

இரண்டையும் கவனிக்கவே செய்தான் மார்வார் வம்ச வாலிபன். அதனால் தூண்டப்பட்டு கேட்டான். "வீரரே! உங்களுக்கு மொகலாயரிடம் அதிகக் கசப்பும் வெறுப்பும் ஏற்படக் காரணம்?" என்று.

அந்த வீரன் உடனடியாகப் பதில் சொன்னான், ''ரவிசந்த்! எனக்கு மொகலாயரிடம் அடியோடு வெறுப்பு கிடையாது'' என்று.

''வேறு யாரிடம் வெறுப்பு?'' என்று வினவினான் ரவிசந்த்.

''மந்திரி பதவிக்காக தங்கள் பெண்களையும் சகோதரிகளையும் அக்பருக்குக் கொடுத்திருக்கிறார்களே, அந்த ராஜபுத்ரர்களைத்தான் வெறுக்கிறேன்'' என்ற அந்த வீரன், சற்று நிதானித்தான்-உணர்ச்சிகளின் மிகுதியால். ''மானத்துக்கும் வீரத்துக்கும் மிகப்பெரிய லட்சியங்களுக்கும் சாட்சியாக விளங்கிய இந்த பாரதத்தில், மந்திரிபதவிக்காக யாரும், எதையும் செய்யும் மனப்பான்மை ஏற்பட்டு விட்டது. அதனால் பாரதமாதா தலைகவிழ்ந்து நிற்கிறாள்'' என்றும் அவன் சொற்களை உதிர்த்தான். அப்பொழுது அவன் குரலில் கடுமையிருந்தது.

அந்த வீரன் உணர்ச்சி வசப்பட்டுவிட்டதைக் கவனித்ததும், சிறிது அவனை சமாதானப்படுத்த முற்பட்ட ரவிசந்த் ''வீரரே! நீங்கள் சொல்வதில் உண்மையிருக்கிறது. சரித்திரச்சுழலில் சந்தர்ப்பவசத்தால் ஏற்படும் மாறுதல்களைக் கொண்டு நீங்கள் ராஜபுத்ரர் அனைவரையும் ஒரே மாதிரி எடை போடுவது தவறு. அக்பரின் படையிலும் மானத்தை விற்காத மகாவீரர்கள் இருக்கிறார்கள். உதாரணமாக எனது தலைவர் பிருத்விராஜை எடுத்துக்கொள்ளுங்கள். அவர் எழுதுகோல் இல்லாவிட்டால் டில்லியில் நடக்கும் அக்கிரமங்கள் உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று வினவினான்.

அதைக் கேட்ட அந்த வீரன் சிந்தித்தான் ஒரு வினாடி. பிறகு சொன்னான் ''தனிமரம் தோப்பாகாது! யாரோ ஒரு மானஸ்தனால் ராஜபுத்ரர்களின் மானத்தை காக்கமுடியாது'' என்று.



வீரன் வார்த்தையைக் கேட்டதும் லேசாக நகைத்தான் ரவிசந்த். ''வீரனே! உங்களுக்கு ராஜபுத்ரர்களின் சரித்திரம் சரிவரத்தெரியாது போலிருக்கிறது'' என்றும் சொன்னான், நகைப்பின் ஊடே.

இம்முறை அந்த வீரன் நகைத்தான். ''எனக்கா?ராஜபுதனத்தின் சரித்திரமா?'' என்றான், நகைப்புத் தொடர்ந்தது.

''ஆம்'' என்ற ரவிசந்த், மேலும் சொன்னான்: ''வீரரே! எந்த நாட்டிலும் மானம், வீரம், கற்பு போன்ற ஜீவ உணர்ச்சிகள் அடியோடு மறைவதில்லை. அதுவும் புராணங்களும் இதிகாசங்களும் வேதங்களும் உபநிஷத்துக்களும் பிறந்துள்ள இந்த நாட்டில் நல்ல உணர்ச்சிகள் அடியோடு மறைவது சாத்தியமல்ல. எப்பொழுதும் யாரோ ஒரு மகாவீரன் இந்த உணர்ச்சிகளைக் காத்துத்தான் வருகிறான். டில்லியில் பிருத்விராஜ் இருக்கிறார். ராஜபுதனத்தில் ஒரு ராணாபிரதாப் இருக்கிறார். அங்கு மொகலாயர் ஊழல்களை பிருத்விராஜ்,உயிரையும் லட்சியம் செய்யாமல் அம்பலப்படுத்தி வருகிறார். இந்த அடவிகளில் எங்கோ ஓரிடத்தில் ராணாபிரதாப் மறைந்தும், திடீரென வெளிப்பட்டும் மொகலாயர் படைகளை நாசம் செய்து வருகிறார். ராஜபுதன சுதந்திரச் சுடரை தமது வீரத்தாலும் சிந்தும் ரத்தத்தாலும் பிரகாசிக்கச் செய்கிறார். இந்த மாதிரி மகாவீரர்கள் இருக்கும்வரை இந்த பாரதம் செத்துவிட்டதாகச் சொல்ல முடியாது. சாகவும் சாகாது''.

இதைச் சொன்ன ரவிசந்தின் குரலில் உணர்ச்சி பெருகிக் கிடந்தது. ''என் தலைவர் பிருத்விராஜைப்பற்றி உங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ?டில்லி சாம்ராஜ்யத் தலைநகரில் இருந்து மொகலாய சக்கரவர்த்தியை லட்சியம் செய்யாதவர் அவர் ஒருவர்தான். உங்களுக்கு அக்பரின் நவ்ரோஸாவைப் பற்றி முழுவிவரங்கள் தெரியுமோ தெரியாதோ? அதைப் பற்றி நீண்ட கவிதை எழுதி

வருகிறார் எனது பிருத்விராஜ். ஆண்டுதோறும் சித்ரா பௌர்ணமியில் நடக்கும் நவ்ரோஸா வெறும் வர்த்தகச் சந்தையல்ல. அழகிய பெண்களைப் பிடிக்க அக்பர் ஏற்பாடு செய்துள்ள சந்தை அது. அதை குஷ்ரோஸா என்று சக்கரவர்த்தி அழைக்கிறார். இதைப் பற்றிய முழுவிவரங்கள் உங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ? இந்த அநாகரீகச் சந்தையிலிருந்து ஒரே ஒரு கற்புக்கரசி தப்பினாள். அது ஒரு விசித்திரக்கதை. அதுதான் முன்பே சொன்னேனே, இந்த நாட்டில் ஏதோ ஒரு மூலையில் ஒரு கற்புக்கரசி இருக்கிறாள்; அவள் காக்கிறாள் இந்த நாட்டை என்று. ஒரு மகாவீரனும் இருக்கிறான்; அவன் வாள் நீக்குகிறது சில அநீதிகளை. கேளுங்கள் குஷ்ரோஸாவின் கதையை, இல்லை உண்மைச் சரித்திரத்தை, விவரிக்கிறேன்'' என்று தொடங்கினான் ரவிசந்த்:

அவன் சொன்னதைக் கேட்டு அதிர்ச்சியடைந்தது அந்த வீரன் மட்டுமல்ல. சம்பக் என்று அந்த வீரன் அழைத்த பெண்ணும் பிரமிப்பின் எல்லையை அடைந்தாள்.

# 4. கற்பு எனும் நெருப்பு

குஷ்ரோஸாவைப் பற்றியும் அதிலிருந்து தப்பிய ராஜபுத்ர கற்புக்கரசியைப் பற்றியும் கூற முற்பட்ட ரவிசந்த் அதைத் துவங்குமுன்பு ''வீரரே! அது பெரிய கதை. அதை உட்கார்ந்தே நீங்கள் கேட்கலாம்'' என்று சொல்லிவிட்டு பக்கத்திலிருந்த ஒரு பாறையின்மீது உட்கார்ந்தான். அவனுக்கெதிரே அந்த வீரனும் உட்கார முயன்றபோது ''நீங்கள் அவர் காலடியில் உட்கார வேண்டாம்; இந்தப் பாறையில் உட்காருங்கள்'' என்று சற்று உயரமாயிருந்த கல்லைக் காட்டினாள் சம்பக் என்ற அந்தப்பெண். அப்படி அவள் சொன்னதையும் அந்த வீரன் ஆமோதித்து அவள் சொற்படியே தான் உட்கார்ந்திருந்த பாறையைவிட சற்று உயரமாயிருந்த பாறையில் அமர்ந்ததையும் கண்ட ரவிசந்துக்கு அந்தப் பெண்ணின் மனம் நன்றாகவே புரிந்தது. தனக்கு எதிரே பெரிய பாறைமீது அமர்ந்த அந்த வீரன், ராஜபுதனத்தில் பெரிய அந்தஸ்தை உடையவனாயிருக்க வேண்டுமென்றும், தன்னைப் போன்ற சாதாரண வீரர்களுக்குச் சமமாக உட்கார முடியாத ஏதோ ஒரு நிலை அவனுக்கு இருக்க வேண்டுமென்றும் உணர்ந்து கொண்டதால், அந்தப் பெண்ணையும் அந்த வீரனையும் பார்த்து ஒருமுறை புன்முறுவல் செய்தான். ''வீரரே! கேளுங்கள் கதையை. அக்பர் இந்தச் சந்தையை நடத்துவது புது வருஷத்தன்று மட்டுமல்ல. ஒவ்வொரு மாதமும் ஒன்பதாவது நாள் நடத்தி வந்தார். இது புத்தாண்டு தினமாதலால் 'நவ்ரோஸா' புதுநாள் என்று சிலர் எண்ணினார்கள். அதல்ல உண்மை. ஒவ்வொரு மாதமும் ஒன்பதாவது நாள் நடத்தினார். அதனால் நவ்ரோஸா ஒன்பதாவது நாள் விழா என்று அழைக்கப்பட்டது. இதை அக்பர் குஷ்ரோஸா (குஷி

அளிக்கும் நாள்) என்று அழைத்தார். உண்மையாகவே அந்த தினம் அவருக்கு குஷி அளிக்கும் நாள்தான். ஏனென்றால் அந்த தினத்தில் ஏதாவதொரு ராஜபுத்ரப் பெண் மானமிழப்பாள்.'' இதைச்சொன்ன ரவிசந்த் மேலே பேச முடியாததால் சிறிது நிதானித்தான்.

மறுபடியும் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக்கொண்டு தொடர்ந்தான்: ''இந்தப் பெண் சந்தையில் பெண்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். பாரதத்தின் பல இடங்களிலிருந்தும் வந்த வர்த்தகப் பொருள்களும் குவிந்திருக்கும். அங்கு விற்பனையாளர்கள், வாங்குபவர்கள் எல்லாரும் பெண்கள். இந்தச் சந்தை இரவில் துவங்கும் போது சக்கரவர்த்தி அங்கு, அவரது நண்பனான அபுல் பாஸலுடன் மாறு உடையணிந்து மறைந்திருந்து, வரும் பெண்களைப் பார்வையிடுவார். அவர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுப்பார். அவளை அபுல்பாஸல் எப்படியாவது சுரங்கப் பாதைகளில் திருப்பி அக்பரிடம் சேர்ப்பார். இதிலிருந்து ஒரு ராஜபுத்ரி தப்பினாள் அவள்தான் பிருத்விராஜின் மனைவி..பாரதம் இன்னும் அழிந்துவிடவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டாக அவள் விளங்கினாள் ...''-இந்த இடத்தில் உணர்ச்சிப் பெருக்கால் சிறிது தாமதித்தான் ரவிசந்த்.

பிறகு மேலும் தொடர்ந்தான். ''அந்தப் பெருமைகளையும் அக்பர் கண்டார். அபுல்பாஸலிடம் சுட்டிக் காட்டினார். அபுல்பாஸலும் அவளைச் சுரங்க வழியாக வரத் திருப்பினான். சுரங்க வழியில் ஒரு அறையில் சக்கரவர்த்தி அவள் முன்பு தோன்றினார். அந்த வீரப் பெண்மணி அக்பரைக் கண்டதும் பெரும் சீற்றம் கொண்டாள். தனது மடியிலிருந்த கத்தியை கையில் எடுத்துக் கொண்டாள். அதுமட்டுமல்ல அவள் கையில் ஏந்தியது?



* பிருத்விராஜ் முன் எச்சரிக்கையாக எழுதிக்கொடுத்திருந்த ஓலையையும் எடுத்துக் கொண்டாள். 'சக்ரவர்த்தி! உன் பெயர் சரித்திரத்தில் அழிந்துவிடும் இந்த ஓலையால். இன்று நீ அழிந்து போவாய் இந்த கத்தியால்' என்று சீறினாள். அவளைத் தீண்ட அக்பருக்குத் துணிவில்லை. அவளைத் தொடாமல் அனுப்பிவிட்டார். அந்த பதிவிரதையின் கற்பின் நெருப்பு முன்பு சக்கரவர்த்தி நடுங்கினார். ஆகையால்தான் இன்னும் எனக்கு இந்த நாட்டின்மீது நம்பிக்கையிருக்கிறது. இதற்குப் பிறகுதான் நான் புறப்பட்டேன் டில்லியிலிருந்து. மேலுக்கு அரசகாரியமாக; ஆனால் உண்மையில் எனது சொந்த வேலையாக! 'எனக்குத் தேவையான பரிசு ஒன்று இங்கிருக்கிறது' என்று சக்கரவர்த்தியே என்னிடம் சொன்னார். தவிர என் முட்டாள்தனமும் இதில் கலந்திருக்கிறது.'' -இப்படிச் சொல்லி ரவிசந்த் தலையைக் கவிழ்த்துக் கொண்டான்.

அவன் தலையைக் கவிழ்த்துக்கொண்டது நல்லதாகப் போயிற்று. இல்லையேல் எதிரே உட்கார்ந்திருந்த வீரன் முகம் அக்னிப் பிழம்பாக சிவந்து விட்டதைக் கவனித்திருப்பான். அந்த வீரன் அருகே நின்ற பெண்ணின் கண்கள் நெருப்பைக் கக்கியதையும், அவளது அழகிய உதடுகள் சினத்தால் துடித்ததையும் கவனித்திருப்பான். அவன் தலையை நீண்டநேரம் தொங்க போட்டுக்கொண்டேஇருந்தான். வாயை அவன் திறக்கவேயில்லை. அப்பொழுது தான் அந்த வீரன் கேள்வி சவுக்கடிபோல் சுளீர் என்று இறங்கியது. ''எதற்காக நீ வந்தாய் இங்கு? சக்கரவர்த்தி குறிப்பிட்ட பரிசு என்ன?'' என்று கேட்டான் அந்த வீரன்.

---

• இந்த சரித்திர விவரங்களை ''ராணியின் கனவு'' என்ற எனது சிறுகதைத் தொகுப்பில் படியுங்கள். முன் அத்தியாயத்தில் கொடுக்கப்பட்ட Todd's annals ராஜபுதனக் குறிப்புகளிலும் விவரம் பூர்ணமாயிருக்கிறது.

ரவிசந்த் அப்பொழுதும் தலையைத் தூக்கவில்லை. ''வீரரே! சக்கரவர்த்தி என்னை இங்கு அனுப்பியது ஒரு மகாவீரன் மீது வேவுபார்க்க. அதற்கு அவர் பரிசாகக் குறிப்பிட்டது ஒரு பெரிய அழகியை'' என்றான், மார்வார் வாலிபன்.

''நீ வேவு பார்க்க வேண்டியது யாரை?''-அந்தப் பெண் கேட்டாள் சீற்றத்துடன்.

''இன்றுவரை அக்பருக்குப் பணியாத ஒரு மகா வீரனை, இன்று வரை ராஜபுதனத்தின் மானத்தைக்காத்து வரும் ஒரு அவதார புருஷரை...'' என்ற ரவிசந்த்தின் குரலில் உணர்ச்சி புரண்டது.

''பெயரைச் சொல்''-அந்தப் பெண் மீண்டும் கேட்டாள் கடுமையாக.

''அந்தப் பெயர் என்னைப்போன்ற கேவலமான ராஜ புத்ரனால் உச்சரிக்கத் தகாத பெயர், வேண்டுமானால் எழுதிக் காட்டுகிறேன்'' என்று ரவிசந்த் பதில் சொன்ன தோடு மட்டும் நிற்கவில்லை. தனது அங்கிப்பையிலிருந்து ஒரு மாக்கல்லை எடுத்து தனக்கு எதிரே இருந்த ஒரு பாறையில் எழுதினான், தான் சொல்ல மறுத்த பெயரை.

அதைக் கண்ட சம்பக்கின் கண்கள் பிரமிப்பை அடைந்தன. அவள் கண்கள் ஒரு விநாடி பெரிய பாறை யில் அமர்ந்திருந்த வீரனைக் கவனித்தன. வீரன் முகம் கல்லாயிருந்தது. பாறையில் எழுதப்பட்டிருந்த பெயரைக் கண்டும் அசையவில்லை அவன். ஆகவே அந்தப்பெண் கேட்டாள், ''பார்த்தீர்களா இவர் எழுதின பெயரை?'' என்று.

பார்த்தேன் என்பதற்கு அறிகுறியாகத் தலையை மட்டும் அசைத்தான் அந்த வீரன். 'ராணா பிரதாப் சிம்மன்' என்று ரவிசந்த் எழுதிய பெயர் அந்த இரவிலும்



பாறையில் பளபளத்தது. அதை மேலும் உற்றுப்பார்த்த சம்பக் வினவினாள்: ''அவரை எற்கனவே எப்பொழுதாவது பார்த்திருக்கிறாயா?'' என்று.

அவள் குரலில் அடியோடு மரியாதை இல்லாததை ரவிசந்த் கவனித்தான். ஆனாலும் அவன் அதைப் பொருட் படுத்தாமல் சொன்னான்: ''பார்த்ததில்லை,ஆனால் பார்க் கும் விருப்பத்துடன் தான் வந்திருக்கிறேன். டில்லியில் மேவார் ராணாவின் வீரத்தைப் பற்றி, சுதந்திர வேட்கை யைப் பற்றி கதை கதையாகச் சொல்கிறார்கள். அதுவும் என் எசமான் பிருத்விராஜ் அவரைப்பற்றி சதா சர்வகால மும் உணர்ச்சி வசப்பட்டுப் பேசுவார். 'டேய் ரவிசந்த்! ராஜ புதனம் செத்துவிட்டதாக யார் சொன்னது? பிரதாப் இருக் கும் வரை சாகாது' என்று சொல்லுவார். அந்த மகாவீரனைப் பார்க்க வேண்டும் என்ற என் ஆசையைத் தூண்டி விட்டார். நானும் டில்லியை விட்டுக் கிளம்பச் சமயம் பார்த்திருந்தேன். சக்கரவர்த்தி வேவுப்பணியை அளித்ததும் அதை ஒப்புக்கொண்டேன். ஒப்புக்கொள்ளத் தூண்டியவரும் என் எசமான்தான். 'ரவிசந்த், உனக்கு யோக காலம் பிறந்துவிட்டது. மேவார் ராணாவிடம் சேர்ந்துவிடு. உன் வாள் அவருக்குத் துணையாக இருக் கட்டும். பொய்யாக ஏதாவது வேவுச் செய்திகளை இங்கு அனுப்பிவை. ராணாவின் உயிரைக் காப்பது உன் கடமை' என்றார் பிருத்விராஜ். அவர் மேலும் ஒரு ரகசியம் சொன்னார். ஆனால் அதை நான் ராணாபிரதாப் பிடம் தான் சொல்ல முடியும்'' என்ற ரவிசந்த் பாறையி லிருந்து எழுந்தான்.

''உட்கார்'' என்று கட்டளையிட்டான் எதிரே அமர்ந்திருந்த வீரன்.

''உட்காருவதற்கில்லை. நான் போகவேண்டியது உதயபூருக்கு'' என்றான் ரவிசந்த்.

''பிருத்விராஜின் ரகசியத்தைச் சொல்லிவிட்டுப்போ'' என்றான் அந்த வீரன், கடுமையான குரலில்.

''அப்படியா!''-வியப்பு ஒலித்தது ரவிசந்தின் குரலில்.

''ஆம்.''-கடுமை தொடர்ந்தது அந்த வீரன் குரலில்.

''அப்படியானால் ராணாவைக் காட்டு''—இகழ்ச்சியுடன் சொன்னான் ரவிசந்த்.

அடுத்து அந்தப்பெண் பேசினாள்: ''நான் காட்ட முடியும் ராணாவை'' என்றாள்.

''காட்டுங்கள்'' என்றான் ரவிசந்த்.

''இதோ'' என்று அந்த வீரனைக்காட்டினாள் சம்பக்.

''இவர்?......'' அதிர்ச்சியுடன் கேட்டான் மார்வார் வாலிபன்.

''மேவார் ராணா பிரதாப்'' என்று சொல்லி தலை தாழ்த்தினாள் அந்தப் பெண்.

பேசும் சக்தியை இழந்தான் ரவிசந்த். அவன் கால்கள் தாமாக மண்டியிட்டன ராணாவின் முன்பு. ''ராணா! சற்று குனியுங்கள்'' என்று அவன் உதடுகள் முணுமுணுத்தன.

ராணா குனிந்தார். மண்டியிட்டபடி அவர் காதில் ஏதோ முணுமுணுத்தான் ரவிசந்த். அதைக்கேட்ட ராணா எரிமலையானார்.

''கற்பெனும் நெருப்பு'' என்று மீண்டும் சொன்னான் மார்வார் வாலிபன்.

# 5. மூன்றாவது ஒருவன்

மண்டியிட்ட நிலையில் ரவிசந்த், ராணா பிரதாப் சிம்மனின் காதில் முணுமுணுத்தான். ''ராணா, அக்பரின் காமவெறிக்கு இலக்காகாமல் கத்தியைக்காட்டித் தப்பினாளே. அந்த வீரப்பெண் யார் தெரியுமா?'' என்று.

''சொல்'' — ராணாவின் குரல் கடுமையாக இருந்தது.

''அவள் தான் பிருத்விராஜின் மனைவி'' என்றான் ரவிசந்த் மீண்டும்.

''அதைத்தான் ஏற்கனவே சொல்லிவிட்டாயே. புதிதாக ஏதாவதிருந்தால் சொல்.''-ராணா அவசரப்பட்டார்.

''அவள் தங்கள் குடும்பத்தவள். மேவார் அரசகுடும்பத்தைச் சேர்ந்தவள். இதை பிருத்விராஜ் தங்களுக்கு சொல்லச் சொன்னார்'' என்றான் ரவிசந்த், நிதானமாக. சொல்லிவிட்டு மண்டியிட்ட நிலையிலிருந்து எழுந்து நிற்கவும் செய்தான்.

ராணா பிரதாப்பின்முகம்எரிமலையாயிருந்தது. அந்த எரிமலையின் ஜ்வாலையில் ஒரு பெருமிதமும் கலந்திருந்ததைக் கவனித்த சம்பக், ராணாவை ஏறிட்டு நோக்கி ''என் அந்த ரகசியத்தை நான் அறியக்கூடாதா?'' என்று வினவினாள்.

ராணா இதற்கு உடனடியாகப் பதில் சொல்லாமல் தீர்க்க சிந்தனையில் இறங்கினார். கடைசியாக அவர் பேசியபோது அவர் உள்ளத்தில் உவகைமண்டிக்கிடந்ததை

அவர் முகம் நிரூபித்தது. ''சம்பக்! ராஜபுதனம் சித்தூரை இழந்து விட்டது; இப்பொழுது உதயபூரிலும் பாதி போய் விட்டது. ஆனால் மேவார் பெண்கள், மேவார் பெண்களாகவே இருக்கிறார்கள். உன்னைப் போல் ஒருத்தி டில்லியிலும் இருக்கிறாள்'' என்ற ராணா, ''என் ஊகம் சரியானால் அவள் காணாமற் போன உன் சகோதரியாகத்தான் இருக்க வேண்டும்'' என்றார்.

இதைக் கேட்ட ரவிசந்த் பிரமித்தான். ''ராணா அதெப்படியிருக்கமுடியும்?'' பிருத்விராஜின் மனைவியாருக்கு இப்பொழுது முப்பது வயதுக்கு மேலிருக்குமே'' என்றவன், சற்று நிதானித்து சம்பக்கை நோக்கினான். ''அவர்கள் முகஜாடை இவருக்கும் இருக்கிறது. ஆனால்.. '' என்று குழம்பினான்.

''அதைப்பற்றி பிறகு பேசுவோம்'' என்று, அந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்த ராணா பிரதாப், ''சம்பக், நீ இவனை அழைத்துக் கொண்டு உதயபூருக்குப் போ. அங்கு பகவான்தாஸிடம் இவனை ஒப்படைத்து வா. நம்மவன் என்று சொல்லிவை பகவான்தாஸிடம்'' என்று உத்தரவிட்டு ''சைதக்'' என்று அழைக்க, அந்த பெரிய புரவி அவரை நோக்கி வந்தது.

*சரித்திரப் பிரசித்தி பெற்ற அந்தப் புரவியைக் கண்ட ரவிசந்த் பிரமித்தான். அது பார்த்த பார்வையிலிருந்து மனிதர்களுக்குள்ள அறிவைவிட அதன் அறிவு அதிகமென்பதை உணர்ந்து கொண்டான் மார்வார் வீரன். ராணாவுக்குப் பெரும் துணையான சைதக்கைப்பற்றி டில்லியிலும் ஆக்ராவிலுங்கூட கதை கதையாகப் பலர் பேசக் கேட்டிருந்த ரவிசந்த், அந்தக் கதைகள் பொய்யல்லவென்றே தீர்மானித்தான்.

---

*Chytac Saved Pratap by Leaping across a Stream... war of huldighat-col. Todd's Mewar Page. 113.



சைதக் மீது ஏறிக்கொண்ட ராணா, சம்பக்கிடமிருந்த தனது வாளையும் பெரிய ஈட்டியையும் வலது கையில் வாங்கிக் கொண்டார். இடது கையால் சேணத்தைப் பிடித்தவண்ணம் ''சம்பக்! ரா்ஜபுதனத்தின் ஒரு மகா வீரனை உன்னிடம் ஒப்படைக்கிறேன். ஜாக்கிரதையாக அழைத்துப்போ'' என்று உத்தரவிட்டு, சேணத்தை இழுக்க முயன்ற சமயத்தில் ''மகாராணா!ஒரு வார்த்தை'' என்று தடுத்தான் ரவிசந்த்.

''என்ன ரவிசந்த்?'' என்று அன்புடன் வினவினார் ராணா பிரதாப்.

''இந்தப்பெண்...'' தயங்கிவந்தது ரவிசந்தின் பதில்.

அவன் மனத்திலோடிய எண்ணத்தை ராணா புரிந்து கொண்டார். ''இவளைப் பற்றிக் கவலைப்படாதே.இவள் பிசாசுக்கு சமானம். இவளைக் கண்டாலே பலருக்கு நடுக்கம், எனக்கே இவளிடம் ஓரளவு பயம்'' என்று சொல்லிவிட்டு ராணா புரவியைத் தட்டிவிட, அது ஒரே பாய்ச்சலில் எதிரிலிருந்த அருவியைத் தாண்டி அடவிக்குள் மறைந்துவிட்டது.

ராணாவால் தனித்துவிடப்பட்ட சம்பக் அடுத்து ரவிசந்தை எறெடுத்தும் பார்க்கவில்லை. சட்டென்று பக்கத்திலிருந்த அடவிக்குள் சென்று இன்னொரு புரவியை இழுத்து வந்தாள். அதன் மீது அனாயாசமாக தாவி ஏறி, கால்களை ஒருபுறமாகவே போட்டபடி உட்கார்ந்து கொண்டாள். ''புறப்படலாமா?'' என்றும் விசாரித்தாள்.

ரவிசந்த் அவளை உற்றுநோக்கினான். அவளுடைய அழகிய பெரும் கண்கள் அச்சமின்றி அவன் கண்களுடன் கலந்ததால், அவனே சற்று கூச்சப்பட்டு கண்களைத்

தாழ்த்திக் கொண்டான். தாழ்த்திய கண்கள் அவள் திண்மையான தொடைப் பகுதியில் நிலைத்ததாலும், அந்தத் தொடையின் ஒரு சிறு பகுதி கிழிந்த ஆடையின் விளைவாகக் கண்ணுக்குத் தெரிந்ததாலும் சற்றே சங்கடத்தால் திண்டாடினான் ரவிசந்த். அந்தத் தொடைக்குமேலே விரிந்த பருத்த பகுதியும், புரவி மீது அமர்ந்திருந்த பின்னழகின் அகலமும், அளவோடிருந்த பருமனும், மேலே சிறுத்துவிட்ட இடையும், அழகுடன் உறுதியையும் கம்பீரத்தையும் இணைத்துக் கொண்டிருந்ததால் அதிக ஆராய்ச்சியில் இறங்காமல் ரவிசந்தும் தனது நீலப்புரவி மீது தாவி ஏறிக்கொண்டான்.

அவன் புரவியில் ஏறியபிறகு அவள் அவனைக் கவனிக்காமலும் ஏதும் பேச்சுக்கொடுக்காமலும் தனது புரவியை முன்னால் நடத்தி, அவனைத் தொடர்ந்து வரும்படி சைகையும் செய்தாள். ரவிசந்த் அந்த ஆணைக்கு உடன்பட்டு அவளைத் தொடர்ந்தவன், சொர்க்கலோகத்தில் இருந்தான். சிறிது தூரம் அவள் புரவி சென்றதும் ஒரு காலை எடுத்து புரவியின் மறுபுறம் போட்டு தனது ஆடையையும் இழுத்து விட்டுக் கொண்ட அந்தப் பெண்ணின் ராஜதோரணையையும் பின்னழகையும் கண்டு பிரமித்துப்போனான் ரவிசந்த்.

மங்கலான நிலவொளி மரங்களுக்கு இடையிடையே வீசிய போது, அவள்பின்னல்குழலை முடிந்திருந்த அழகும், கழுத்தின் வெளுப்பும் அவள் செங்குத்தாக புரவிமீது உட்கார்ந்திருந்த திடமும், ஏதோ சிற்பமொன்று புரவி மீது ஏறிச்செல்லும் பிரமையை அளித்தது, அந்த வாலிபனுக்கு. அவள் அடர்ந்த காட்டுப்பகுதியிலிருந்து மரமேதுமில்லாத மலைச்சரிவுக்கு வந்தபோது சந்திரன் அவள் மீது வீசிய வெளிச்சத்தில் அவள் அர்த்தராத்திரி மோகினிபோல் தெரிந்தாள். கரடுமுரடான மலைப்பாதையில் அவள் இந்த மாதிரி பயணத்துக்குப் புதிதல்லவென்



பதை உணர்ந்து கொண்டான் ரவிசந்த். புரவியில் அவள் அமர்ந்து சென்றபோது அவள் உடலழகும் அசைவும், அசைவில் தெரிந்த லாவண்யமும் ரவிசந்தை உன்மத்தம் கொள்ளச் செய்தாலும் அவன் தன் எண்ணங்களை வெளிக்குக்காட்டினான் இல்லை. அவளை சிறிதளவும் அணுகாமல் பத்தடி தள்ளியே பயணம் செய்தான்.

பயணம் செய்த சமயத்தில் சம்பக்கும் அவனை எடை போட்டுக் கொண்டுதானிருந்தாள். அவன் தன்னை எந்த விதத்திலும் அணுக முயலவில்லையென்பதையும் பத்தடி தள்ளியே பின்னால் வந்து கொண்டிருந்ததையும் அவன் புரவியின் குளம்பொலியிலிருந்தே ஊகித்து மிகக் கண்ணியமான ஒரு ராஜபுத்ரனுடன் தாம் பயணம் செய்வதை உணர்ந்தாள். அந்த சமயத்தில் அவளுக்கு ரவிசந்தைவிட ராணாபிரதாப் மனிதர்களை எடைபோடும் திறமையே வியப்பை அளித்தது. திடீரென்று ஒரு புது வாலிபனுடன் தன்னை ராணா விட்டுப்போகிறாரே என்று அவள் முதலில் எண்ணினாள். ஆனாலும், ராணாசெய்ததில் தவறில்லையென்பதை முதல் இரண்டு நாழிகைகளிலேயே புரிந்துகொண்டாள் சம்பக்.

நாழிகை இரண்டு ஓடிவிட்டபொழுது சந்திரனும் மறைந்துவிட்டதால் மலைப்பகுதியில் இருள் மூண்டு விட்டது. அப்பொழுது சென்றுகொண்டிருந்த மலைப்பகுதி காடாக இருந்ததால் மேலிருந்த விண்மீன்கள் அளித்த வெளிச்சத்தைத் தவிர வேறு வெளிச்சம் இல்லாததன் காரணமாகவும், இரவில் சூழ்நிலை சில்லிட்டு விட்டதன் காரணமாகவும், இருவர் பயணமும் இன்பமாகவே இருந்தது. அந்த மங்கலான நட்சத்திர ஒளியில் சிறிது தூரம் பயணம் செய்ததும் காட்டுப் பகுதி மீண்டும் துவங்கவே ரவிசந்த் தனதுபுரவியை, அவள் புரவிக்கு அருகில்கொண்டு வந்து ''ராஜபுத்ரி! மீண்டும் அடவி வருகிறது. நான் கள்ளி கொண்டு பந்தம் கொளுத்தட்டுமா?'' என்று கேட்டான்.

''தேவையில்லை'' என்றாள் சம்பக்.

''பயணமார்க்கம்?'' என்றான் ரவிசந்த்.

''இருட்டிலும் எனக்குத் தெரியும்''—அவள் சர்வ சாதாரணமாகச் சொன்னாள்.

''நான் இந்தக் காட்டுக்குப் புதிது''

''பேசாமல் என்னைத் தொடர்ந்து வந்தால் எங்கும் விழமாட்டீர்கள். தவிர...''

''தவிர?''

''உங்களை உதயபூர் கொண்டுபோய்சேர்ப்பது எனது கடமை. ராணாவின் கட்டளை.''

அதற்குமேல் அவள் ஏதும் பேசாமல் புரவியை காட்டுக்குள் செலுத்தினாள். ரவிசந்த் பேசாமல் பின் தொடர்ந்தான். அடுத்து ஒரு நாழிகை எந்தவித நிகழ்ச்சியும் இல்லை. ஆனால் திடீரென்று ரவிசந்த் தனது புரவியை வேகமாகச் செலுத்தி அந்தப் பெண்ணின் புரவியின் கடிவாளத்தைப் பிடித்து நிறுத்தினான்.

''ஏன்? என்ன விசேஷம்?'' என்று அவள் கேட்டாள்

''சற்று உற்றுக் கேளுங்கள்'' என்றான் ரவிசந்த்.

அவள் உற்றுக்கேட்டாள். இன்னும் ஒரு புரவியின் குளம்படிச் சத்தம் சற்று தூரத்தில் மெதுவாகக் கேட்டது. வர வர அதிகமாயிற்று. சட்டென்று அவள் புரவியை காட்டின் உட்புறம் செலுத்தி அடர்ந்த ஒரு பகுதியில் மறைந்து நின்றாள். ரவிச்சந்தையும் தன்னுடன் நிற்க சைகை செய்தாள்.

அருகருகே புரவிகள் உராய நின்ற சமயத்தில் அவள் காலொன்று அவன் காலில் படவே, அவன் தனது



புரவியை சிறிது அகற்றினான், அவள் சமீபத்திலிருந்து. அவள் எதையுமே கவனித்ததாகத் தெரியவில்லை. திடீ ரென கையை இருமுறை தட்டினாள். அதன் காரணம் ரவிசந்துக்கு விளங்கவில்லை. ஆனால் புரவியில் செங்குத்தாக உட்கார்ந்தபடி சிலை போலிருந்தாள் சம்பக்.

அந்த இன்னொரு புரவியின் குளம்பொலி வரவர திடமாகக் கேட்டது. வரும் புரவி தங்களை நோக்கித்தான் வருகிறதென்பதை இருவருமே திட்டமாகத் தெரிந்துகொண்டார்கள். சட்டென்று தன் புரவியின் பக்கத்திலிருந்த தனது வாளை உருவிக்கொண்டாள் சம்பக். அவர்களைத் தொடர்ந்து வந்தவன் புரவியின் குளம்பொலி வேறொரு திசையில் சென்று மீண்டும் அவர்களிருந்த திக்கு நோக்கி வந்தது. மெல்ல அவன் ஒரு சுள்ளியையும் கொளுத்தியதால் தூரத்தில் அதன் ஒளியும் சுடர்விட்டது.

# 6. பகவான்தாஸ்

ஆராவலி மலைத்தொடரின் அடர்த்தியான அந்தக் காட்டுப் பகுதியில் இருள் பெரிதும் மண்டிவிட்ட இரவின் முதல் ஜாமத்தில், துணிந்து மாற்றான் ஒருவன் வரமுடியு மென்பதைக் கனவிலும் நினையாத ராஜபுத்ர அழகியான சம்பக், தூரத்தே தெரிந்த கள்ளியின் தீச்சுடரை நீண்ட நேரம் பார்த்துக்கொண்டே, தனது புரவியில் ஆடாமல் அசையாமல் அமர்ந்திருந்தாள். அவள் புரவியுடன் தனது புரவி இடிக்க, அதன்மீது உட்கார்ந்திருந்த ரவிசந்த், ''அது யாராயிருக்கும்? நண்பனா? விரோதியா?'' என்று மெதுவாக விசாரித்தான்.

''எனக்குத் தெரியவில்லை. இரைந்து பேசவேண் டாம்'' என்று எச்சரித்தாள் சம்பக்.

பதில் சொல்லுமுன்பு ரவிசந்த் சற்று திரும்பி பக்கத்துப் புரவியில் உட்கார்ந்திருந்த யுவதியை நோக் கினான். ''உங்களை நான் கேட்கவில்லை'' என்றும் சொன்னான்.

ராஜபுத்ரி சம்பக்கின் முகத்தில் வியப்பு உதய மானாலும், வெளிச்சமின்மை காரணமாக அது ரவிசந்த் தின் கண்களுக்குத் தெரியவில்லை. ஆனால் அவள் மெது வாகப் பேசியது மட்டும் அவன் காதில் விழுந்தது. ''என்னைக் கேட்கவில்லையா?'' என்று, அவள் வினவி னாள் ரகசியமாக.

''இல்லை''-அவளைத் திரும்பிப் பாராமலே சொன் னான் ரவிசந்த்.



''வேறு யாரைக் கேட்டீர்கள்?'' என்றாள் அவள். இம்முறை அவள் குரலில் வியப்பு லேசாக ஒலித்தது.

''சந்தரைக் கேட்டேன்.''

''சந்தரையா, அப்படி யாரும் இங்கில்லையே!''

''ஏனில்லை? இதோ இருக்கிறானே'' என்று சொல் லிய ரவிசந்த், தன் புரவியின் கழுத்தில் லேசாகத் தட்டி னான்.

சம்பக்கின் இதழ்களில் இளநகை விரிந்தது. ''உங்களுக்கு சந்தேகம் வந்தால் இந்த புரவியைத் தான் கேட்பீர்களா?'' என்று கேட்டாள் சம்பக். அவள் குரலில் சிறிது நகைப்பின் சாயையும் படர்ந்து கிடந்தது.

''ஆம்'' என்றான் ரவிசந்த் உறுதியான குரலில்.

''மனிதர்கள் யாரையும் கேட்க மாட்டீர்களா?'' என் றாள் சம்பக், இகழ்ச்சியுடன்.

''மாட்டேன்.''

''ஏன்?''

''மனிதர்களிடம் எனக்கு நம்பிக்கை கிடையாது. தவிர மனிதன் இங்கிருப்பதை அங்கு சொல்வான். அங் கிருப்பதை இங்கு சொல்வான். சந்தருக்கு அத்தகைய கெட்டபழக்கம் எதுவும் கிடையாது'' என்று சொல்லிவிட்டு, ''ராஜபுத்ரி! அவன் யாரென்பது உங்களுக்குத் தெரியா விட்டால் அதை நான் அறிந்து கொள்ளவேண்டும். அவன் யார்? எதற்காக நம்மைத் தொடர்ந்து வருகிறான்? இந்த விஷயங்களை அறியாமல் நான் இங்கிருந்து ஒரு அடிகூட நகர முடியாது'' என்றும் சொன்னான்.

இப்படிச் சொன்ன பிறகு அவன் விநோத நடவடிக்கை களில் இறங்கினான். முதலில் புரவியை விட்டுக் கீழே

இறங்கி அதன் கழுத்தில் தொங்கிக்கொண்டிருந்த தனது தோல்பைகளை எடுத்துவிட்டுச் சேணத்தையும் கழற்றினான். பிறகு அதன் காதில் ஏதோ முணுமுணுக்க, சந்தர் மிகவும் திருட்டுத்தனமாக தூரத்தில் இருந்த ஒளியை நோக்கி நடக்கலாயிற்று. நேராகச் செல்லாமல் அடிக்கடி அக்கம் பக்கத்திலிருந்த மரங்களுக்கிடையில் மறைந்து மறைந்து நடந்து, சிறிது நேரத்தில் அடியோடு மறைந்துவிட்டது. அதன் காலின் குளம்படி ஓசையோ, அது மரக் கூட்டங்களிடையே நடந்ததால் கிளைகள் தாக்கிய அரவமோ எதுவுமே காதில் விழவில்லை, ராஜபுத்ரிக்கும் ரவிசந்த்துக்கும். அந்த அற்புதப் புரவியை நினைத்துப் பெரிதும் வியந்தாள் ராஜபுத்ரி: ''உங்கள் புரவி மிக விசித்திரமானது'' என்றும் பேச்சுக் கொடுத்தாள், மார்வார் வாலிபனிடம் ரகசியமாக.

ஆனால், அவன் ஏதும் பேசவில்லை; எதிரே தெரிந்த கள்ளி ஒளிமீது கண் வைத்தபடி காத்திருந்தான். அடுத்த விசித்திரம், தொடர்ந்து இன்னொரு கள்ளியும் கொளுத்தப்பட்டு முதல் கள்ளியின் பக்கத்தில் நடப்பட்டது. அடுத்து மற்றொரு கள்ளியும் சுடர்விட மொத்தம் மூன்று சுடர்கள் தூரத்தில் வரிசையாகத் தெரிந்தன. அதைக் கண்டதும் ராஜபுத்ரிக்கு ஏதும் புரியாவிட்டாலும் நடப்பதை ரவிசந்த் ஓரளவுக்கு ஊகித்துக்கொண்டான். ஆதலால் ''ராஜபுத்ரி! நானும் அந்தச் சுடர்கள் இடத்துக்குப் போய் வருகிறேன், கவலைப் படாமல் இந்த இடத்திலேயே இருங்கள்'' என்று கூறிவிட்டு தனது பைகளையும் புரவியின் சேணத்தையும் தரையில் போட்டுவிட்டு, வாளை மட்டும் உருவிய வண்ணம் காட்டின் மறைவிலிருந்து வெளியே நடந்தான்.

அவனை நிறுத்த ஏதோ சொல்ல வாயெடுத்த ராஜபுத்ரியின் சொற்கள் வெளி வருமுன்பே ரவிசந்த் காட்டின் மறைவிலிருந்து செடிகள் மட்டுமிருந்த திறந்தவெளிப்



பகுதியில் நடந்துவிட்டான். சிறிது தூரம் சென்றதும் எதற்கோ ஆகாயத்தை நோக்கினான், இருமுறை. பிறகு பைத்தியம்போல் தானே தலையை ஆட்டிக்கொண்டு கள்ளிச் சுடர்களிருந்த பகுதியை நோக்கி நடந்தான், நிதானமாக. அவன் அந்த இடத்துக்கு அருகாமையில் வந்ததும் சட்டென்று சுடர்களுக்குப் பின்னிருந்த காட்டுப் பகுதியில் மறைந்து கள்ளிகள் சுடர்விட்ட இடத்துக்கு வந்து சேர்ந்தான்

அவனுக்கு முன்னால் மூன்று பேர் உட்கார்ந்திருந்தார்கள். மூவரும் கையிலிருந்த மூட்டைகளை அவிழ்த்து உணவு உண்ண ஆரம்பித்ததும் அவர்கள் முன்பு பக்கவாட்டிலிருந்து சந்தர் தலையை நீட்டியது. அதன் தலையைக் கண்டதும் உணவில் கைவைத்த ஒருவன், சரேலென்று எழுந்து இடையிலிருந்த குறுவாளை எடுத்தான். புரவி அவனிருந்த திசையைவிட்டு வேறு ஒரு புறமாகத் தீச்சுடர்கள் நன்றாக தன்மீது படும்படி நிற்கவே, ''குதிரைக்கு சேணம் எதையும் காணோம்'' என்றான் குறுவாளை எடுத்தவன்.

''ஏதாவது காட்டுக்குதிரையாயிருக்கும்'' என்றான் இன்னொருவன்.

''நீண்டநாளாக உணவைக் காணவில்லை போலிருக்கிறது. உடலைப் பார், மெல்லியதாக எலும்புகள் வயிற்றுக்குமேல் தெரிகின்றன. வயிறும் ஒட்டிக்கிடக்கிறது'' என்றான் இன்னொருவன்.

ஆனால் அம்மூவருக்கும் தலைவனாக பெரிய முண்டாசுடன் உட்கார்ந்திருந்த ஒருவன் மட்டும் அதைப்பற்றி ஏதும் கூறாமல் அதை உற்று நோக்கிக்கொண்டிருந்தான். ''நீங்கள் நினைப்பதுபோல் இது காட்டுக் குதிரையுமல்ல, பசியால் இளைத்ததுமல்ல. இதை நான் ஏற்கெனவே ஒரு முறை பார்த்திருக்கிறேன்'' என்றான். அத்துடன் சொன்னான்: ''இதற்குச் சொந்தக்காரன் இங்கு எங்கோ அருகி

லிருக்கிறான். எந்தக் காரணத்தைக் கொண்டும் அதைத் தீண்டாதீர்கள்'' என்று சொன்னான், நீண்ட நேரம் அதை உற்று நோக்கிய பிறகு.

அவன் சொற்களைக் கேட்ட மற்ற இருவரும் வியப்பின் எல்லையை எய்தினார்கள். ''சுபான்! புரவியைப்பற்றி ஒரு புராணமே சொல்கிறாயே, இதைப் பார்த்திருப்பதாகச் சொல்கிறாயே, எங்கு பார்த்திருக்கிறாய்?'' என்று வினவினான் இன்னொருவன்.

''டில்லியில் பார்த்திருக்கிறேன். இந்தப் புரவிக்குக் காதலன் ஒருவன் இருக்கிறான்'' என்று விளக்க முற்பட்ட சுபானை, சந்தேகப் பார்வையாக மற்ற இருவரும் பார்த்தார்கள்.

''சுபான்!'' என்று ஒருவன் அழைத்தான் அன்புடன்.

''என்ன?''—சுபான் கேள்வி எரிச்சலுடன் வந்தது.

''உனக்கு மூளைக்கோளாறு ஏதுமில்லையே?'' என்று மீண்டும் வினவினான் முதலில் சுபானை பெயர்சொல்லி அழைத்தவன்.

''மூளைக்கோளாறு எனக்கில்லை'' என்றான் சுபான்.

''இந்தப் புரவி ஆணா பெண்ணா''—இன்னொருவன் கேட்டான் சாதாரணமாக.

''ஆண்''—சுபானின் பதில் திட்டமாக வந்தது.

''ஆணை ஆண் காதலிக்க முடியுமா?'' என்று கேட்டான் மற்றொருவன்.

''முடியும். நான் நேரில் பார்த்திருக்கிறேன். இதன் சொந்தக்காரன் இதன் கழுத்தைக் கட்டிக்கொண்டு இதன் கன்னத்தில் முத்தமிடுவான்'' என்ற சுபானை, மற்ற இரு-



வரும் மேற்கொண்டு கேள்விகள் ஏதும் கேட்கவில்லை, பரிதாபமாகப் பார்த்துவிட்டு, உணவருந்த முற்பட்டார்கள். சுபான் தனது உணவுப் பொட்டலத்தை பிரிக்கவும் இல்லை. பிருத்விராஜின் நந்தவனத்தில் தனக்கு ஏற்பட்ட தண்டனையை நினைத்துக் கொண்டே இருந்தான். ''இது இங்கு வருமானால், ரவிசந்த் இங்கு வெகு அருகில் இருக்கிறான்'' என்று சற்று இரைந்தே சொல்லிக் கொண்டான் தனக்குள்.

அவன் சொன்னது மற்ற இருவர் காதிலும் விழவே அவர்கள் கையில் எடுத்த கவளத்தை ''யாரைச் சொன்னாய்? ரவிசந்தா! மார்வார் தளபதியா!'' என்று ஒருவன் வினவினான்.

''அவன்தான்'' என்றான் சுபான்.

அதை ஆமோதிப்பது போல் புரவியும் தலையை ஆட்டி ஒருமுறை கனைத்தது. பிறகு ஓடி மறைந்துவிட்டது காட்டுக்குள். ''சீக்கிரம் உணவை முடித்துக் கொள்ளுங்கள். நாமும் துரிதமாக இங்கிருந்து சென்றுவிடுவதுதான் நல்லது'' என்ற சுபானின் குரலில் நடுக்கம் தெரிந்தது.

''இங்கு வரும் வணிகரை நாம் எப்படி சந்திப்பது?'' என்று ஒருவன் கேட்டான்.

''இதை இன்னொருநாள் வைத்துக் கொள்வோம்'' என்றான் சுபான்.

''இன்று வருவதே பிரும்மப் பிரயத்தனமாகிவிட்டது சுபான். எங்கும் ராஜபுத்ரர் கண்காணிப்பு இருக்கிறது, இன்னொரு முறை வந்தால் நாம் உயிருடன் திரும்ப முடியாது'' என்றான் ஒருவன், சற்று நடுங்கிய குரலில்.

அஹமத் சுபான் அவர்கள் இருவரையும் வெறுப்புடன் நோக்கினான். ''உயிருக்கு அஞ்சுபவன் இத்தகைய

வணிக வேலைக்கு வரக்கூடாது. தவிர, இங்கு நானிருக்கும் வரை உங்களை ராணாவின் வீரர்கள் யாரும் தொட மாட்டார்கள்'' என்று சொன்ன சுபானின் குரலிலும் வெறுப்பு ஒலித்தது.

அந்தச் சமயத்தில் ஏதோ ஒரு வண்டியின் சக்கரங்கள் உருளுவது அவர்கள் காதில் விழுந்தது. ''வந்துவிட்டார் நான் சொன்னவர்'' என்று உற்சாகத்துடன் எழுந்தான் சுபான்.

அவன் எழுந்து நிற்பதற்கும் ஒரு மூடுவண்டி கற்களில் எழுந்தும் தாழ்ந்தும் மன்றாடி வந்து அங்கு நிற்பதற்கும் சரியாயிருந்தது. அதிலிருந்து மிகவும் பருமனான ஒரு மனிதன் இறங்கினான். பருமனோடு அதிக உயரமும் இருந்ததால் பெரிய ராட்சஸன் போல் காட்சியளித்த அந்த மனிதனிடம் கையை நீட்டி ''வரவேண்டும், வர வேண்டும்'' என்று முகமன் கூறி அவரை வரவேற்ற சுபான், ''வீரர்களே! இவர்தான் நான் சொன்ன பெரு வணிகர், உதயபூரைச் சேர்ந்தவர். ராணாவின் மதிப்புக்குப் பாத்திரமானவர். பெயர்...'' என்று சொல்லிக் கொண்டே போனவன் சட்டென்று பெயரைச் சொல்லாமல் நின்றான்.

''ஏன் நிறுத்திவிட்டாய் சுபான்! பெயரைச் சொல்'' என்று ஊக்கினான் அந்த மனிதன்.

பெயரை சுபான் உச்சரித்ததும் பெரும்பிரமை கொண்டான் வாளை உருவிக்கொண்டு மறைவில் நின்றிருந்த ரவிசந்த். சுபான் உச்சரித்த பெயர் பகவான்தாஸ்!

# 7. வினோத வாணிபம்

பகவான்தாஸ்! தன்னை யாரிடம் ஒப்படைக்கச் சொல்லி ராணா பிரதாப், சம்பக்குக்கு உத்தரவிட்டாரோ அதே பெயர்! இப்படி நினைத்த ரவிசந்துக்கு உதயபூரில் பகவான்தாஸ் என்ற பெயருடைய ஒருவர்தான் இருக்க வேண்டுமா? ஏன் அந்தப் பெயருடன் இன்னொருவர் இருக்கக் கூடாதா? என்ற சந்தேகங்களும் எழுந்தாலும் அதை புதிதாக வந்த அந்த ராட்சஸ மனிதன் வெகு விரைவில் தீர்த்துவைத்தான். ''சுபான்! நான் விடியும் வரை இங்கு காத்திருக்க முடியாது. சூரியோதயத்திற்கு முன்பாகவே உதயபூரில் இருக்கவேண்டும்.'' என்று கூறினான்.

''ஏன்? என்ன அத்தனை அவசரம்?'' என்று விசாரித்தான் சுபான்.

''நாளைக் காலையில் ராணாவின் நண்பர் ஒருவர் எனது இல்லத்துக்கு வருகிறார். அப்பொழுது நான் அங்கு இல்லாவிட்டால் என்மீதும் சந்தேகம் ஏற்படும்'' என்று சொன்னான் வணிகரான பகவான்தாஸ்.

''யாரவர்?''-சுபானின் குரலில் சந்தேகம் ஒலித்தது.

''திட்டமாகத் தெரியவில்லை'' என்ற பகவான்தாஸ், ''ராணாவைப் பற்றி இப்பொழுது எதற்கு பேச்சு. முதலில் வந்த வேலையை கவனிப்போம்'' என்று கூறி மூன்று சுடர்கள் எரிந்து கொண்டிருந்த இடத்தை விட்டு சற்று தள்ளி உட்கார்ந்தான் பகவான்தாஸ். மற்றவர்கள் அமர்ந்ததும் கேட்டான், ''இம்முறை என்ன கொண்டு வந்திருக்கிறீர்கள்?'' என்று.

மற்ற இருவரும் பதில் கூறாததால், சுபானே பேச முற்பட்டு ,''மூவாயிரம் மாட்ச்லாக் துப்பாக்கிகள்'' என்று பேசியவனைக் குறுக்கே மறித்த பகவான்தாஸ் ''பூ, மூவாயிரம்!'' என்று தனது அசிரத்தையையும் காட்டினான், கண்டனத்தையும் வெளியிட்டான்.

''ஐயாயிரம் வாட்கள்'' என்றான் சுபான்.

''பூ ஐயாயிரம்!'' என்றான் பகவான்தாஸ் மீண்டும்.

''குறுவாட்கள்...''—இம்முறை தொகையைச் சொல்லவில்லை சுபான்.

''அரே ராம்! அதையும் சொல்லித் தொலை'' என்றான் பகவான்தாஸ். அவன் குரலில் பெரும் ஏமாற்றம் தெரிந்தது.

''பத்தாயிரம்!'' இதை சுபான் சொல்லவில்லை. மற்றொருவன் சொன்னான்.

இம்முறை பகவான்தாஸ் முகத்தில் எந்தவித உணர்ச்சியும் காணோம். ''சுபான்!'' என்றழைத்த பகவான்தாஸ், ''உனக்குக் கணக்குத் தெரியுமா'' என்று விசாரித்தான்.

''கணக்கு எதற்காகத் தெரியவேண்டும்?''—சுபான் எரிச்சலுடன் கேட்டான்.

''நான் உன்னை என்ன கேட்டேன்?'' என்று வினவினான் பகவான்தாஸ்.

''முப்பதாயிரம் வீரர்களுக்கு தளவாடங்கள் கேட்டீர்களா?''

''பத்தாயிரம் பிச்சுவாக்களை முப்பதாயிரம் பேருக்கு எப்படிக் கொடுப்பது? மூவாயிரம் மாட்ச்லாக்குகளையும், ஐயாயிரம் வாட்களையும் எப்படிப் பங்கு போடுவது?''



''சேட்!''

''உம்''

''இத்துடன் தளவாடங்கள் கொண்டு வருவது நிற்காது.''

''இன்னும் வரும்?''

''கண்டிப்பாக''

பகவான்தாஸின் புடைத்த கன்னங்கள்,சிறிது அகன்று உதடுகளை விரித்து புன்னகைக்கு இடங்கொடுத்தன. ''சரி சீக்கிரம் கொண்டு வா. ஆனால் அடுத்த தடவைக்கு அப்புறம் வருவது கஷ்டம். ராணா இந்தக் காட்டுப்பகுதிகளில் பந்தோபஸ்தை கடுமையாக்கப் போகிறார். ஆகவே அடுத்த ஒரு நடையுடன் சாமான்கள் முழுதும் வர வேண்டும்.'' இதை மிகக் கண்டிப்பாகச் சொன்னான் பகவான்தாஸ்.

''சரி சேட்! எப்படியும் இன்னும் பத்து நாட்களில் பூர்த்தி செய்கிறேன்'' என்று ஒப்புக்கொண்டான் சுபான்.

இப்பொழுது கொண்டு வந்திருக்கும் ஆயுதங்களைப் பார்க்கலாமா?'' என்று கேட்டு பகவான்தாஸ் எழுந்திருக்க மற்றவர்களும் எழுந்தார்கள்.

அடுத்து சுபான் அங்கிருந்து எதிரே அடர்த்தியாயிருந்த காட்டுப்பகுதிக்குச் சென்று சுமை தாங்கிய பத்துப் புரவிகளை இழுத்து வந்தான். புரவிகள் இரண்டு இரண்டாகப் பிணைக்கப்பட்டு இடையில் தூளிபோல் கட்டப்பட்டிருந்த நல்ல உறுதியான சாக்கில் ஆயுதங்கள் பத்திரப் படுத்தப்பட்டிருந்தன. புரவிகள் சிரமப்பட்டும் பெருமூச்சு விட்டும் நடந்து வந்தன. அந்தப் பொதிக் குதிரைகள் வந்ததும் கீழிருந்த ஒரு சுள்ளியை எடுத்துக்கொண்டு அதன் வெளிச்சத்தை சாக்குகளின்மீது வீசி, சாக்குகளைப்

பார்த்தான் பகவான்தாஸ். பிறகு சுபானை, சுள்ளிச் சுடரை எந்தச் சொல்லி தளவாடங்களில் அப்படி யொன்றும் இப்படியொன்றுமாகப் பொறுக்கி அவற்றைச் சரி பார்த்தும் குறிபார்த்தும் தலையை ஆட்டிக்கொண்டான். அந்தத் தலையாட்டலிலிருந்து யாரும் எதையும் புரிந்து கொள்ள முடியவில்லை. தளவாடங்களை அவன் ஒப்புக்கொள்கிறானா இல்லையா என்பது தெரியாதிருக்கவே ''என்ன சேட்? உனக்குத் திருப்தியா?'' என்று விசாரித்தான் சுபான்.

''பரவாயில்லை'' என்று அரையும் குறையுமாகத் தனது திருப்தியைத் தெரிவித்த பகவான்தாஸ் ''இந்தச் சரக்குகளை நமது வண்டியில் ஏற்றுங்கள்'' என்று சுபானுக்கும் அவன் சகாக்களுக்கும் உத்தரவிட்டான்.

''பணம்?'' என்று கேட்டான் சுபான்.

''ஆமாம் பணம்?'' என்று மற்ற இருவருங்கூட சுபானுடன் சேர்ந்து கேட்டார்கள்.

''அரே ராம்! பணம்! பணம்!! பணம் எங்கே போகிறது? ஏற்று சரக்கை'' என்றான் பகவான்தாஸ்.

''பணத்தைப் பார்க்காமல் சரக்கைக் கொடுக்கமாட்டோம்'' என்று சுபானின் சகாக்கள் இருவரும் கூறினார்கள்.

''கொடுக்காமல் 'என்ன செய்வீர்கள்?'' என்று பகவான்தாஸ் விசாரித்தான்.

''திருப்பிக்கொண்டு போய்விடுவோம்'' என்றனர்.

''எப்படி?''—பகவான்தாஸ் விசாரித்தான் ஏளனக் குரலில்.

''எப்படிக் கொண்டு வந்தோமோ அப்படி'' என்றான் சுபான்.



பகவான்தாஸ் ஏதோ யோசித்தான். பிறகு தனது பெரிய தொப்பையை ஒரு முறை உலுக்கினான். பிறகு கையை விட்டு கச்சையிலிருந்த ஒரு பையை எடுத்து சுபான் எதிரே நீட்டினான்.

சுபான் அதை வாங்கியதும் எடையைப் பார்த்தான் பையை தூக்கி. பிறகு சந்தேகத்துடன் கேட்டான் ''இதில் எவ்வளவு இருக்கிறது சேட்?'' என்று.

பகவான்தாஸ் தனது கைவிரல்களை விட்டு ஏதோ கணக்குப்பார்த்து இரண்டாயிரம் மோகராக்கள் இருக்கும் என்று சொல்லி, சுபான் முதுகில் தட்டி ''சுபான்! நீயும் உன் நண்பர்களும் அதிர்ஷ்டசாலிகள்'' என்றான்.

சுபான் பிரமை பிடித்து நின்றான். அவன் சகாக்கள் தங்கள் கைகளைக் கச்சையிலிருந்த குறுவாட்களில் வைத்தார்கள். அவர்களில் ஒருவன் சொன்னான், ''அது கொள்ளை'' என்று.

இன்னொருவன் ''உன் புத்தியை காட்டிவிட்டாய்'' என்று கடும் குரலில் கூறினான்.

சுபான் மட்டும் சில விநாடிகள் பேசவில்லை. பின்னர் ''சேட், நமக்குள் பேச்சு ஐயாயிரம் மோகராக்கள்'' என்று சொன்னான்.

''பரவாயில்லை'' என்றான் பகவான்தாஸ்.

''எது பரவாயில்லை'' என்றான் சுபான்.

''இரண்டாயிரம் கிடைத்தது, இதுவே கஷ்டமாய்ப் போய்விட்டது. மேவாரில் இப்பொழுது எது பணம்? எல்லாவற்றையுந்தான் நீங்கள் சாப்பிட்டுவிட்டீர்களே?'' என்று பகவான்தாஸ் சொன்னான்.

''நாங்களா!'' சுபான் குரலில் வியப்பு இருந்தது.

''அரே ராம்! நீங்களில்லாவிட்டால் உங்கள் நவாப்'' என்ற பகவான்தாஸ் இகழ்ச்சியுடன் புன்முறுவல் செய்தான்.

''எங்கள் நவாப் பிறர் பணத்தைத் தொடமாட்டார். மோகராக்களை வாரி இறைப்பார்'' என்றான் சுபான்.

''அரே ராம்! என்ன ராஜபக்தி!!''

''அக்பருக்காக நாங்கள் உயிரை விடுவோம்'' என்று கூறினான் சுபான் வேகமாக.

மற்ற இருவரும் தலைகளை வேகமாக ஆட்டினார்கள், சுபானின் சொற்களை ஆதரிப்பவர்கள் போல.

பகவான்தாஸ், அவர்களை ஒரு வினாடி உற்று நோக்கினான். ''சரி செய்யுங்கள்'' என்றும் கூறினான்.

சுபானின் சீற்றம் எல்லை கடந்தது. ''பகவான்தாஸ்! உன் வணிகக் குணத்தைக் காட்டிவிட்டாய்'' என்றான் சீற்றம் குரலிலும் ஒலிக்க.

''வணிகன் வேறு எந்தக் குணத்தைக் காட்டுவான்?'' என்று கேட்ட பகவான்தாஸின் கண்கள் சுபான் பிடித்திருந்த சுள்ளியின் சுடரில் நக்ஷத்திரங்களைப்போல் பளபளத்தன.

மேலும் சொன்னான் பகவான்தாஸ், உறுதியான குரலில்: ''சுபான்! மேவாரில் இருந்த பணம் அத்தனையும் அக்பர் கஜானாவில் இருக்கிறது. மேலும் போரைத்துவக்க அவர் ஏற்பாடு செய்துவருவதும் ராணாவுக்குத் தெரியும். ஆகவே தளவாடங்களை வாங்குகிறார். இந்த வாணிபத்தில் எனக்கு லாபம் எதுவும் கிடையாது. நீங்களாவது இரண்டாயிரம் மோகராக்களை கண்ணால் பார்க்கிறீர்கள். எனக்கு எதுவும் இல்லை. மீதி மூவாயிரம் மோகராக்களைப் பற்றிக் கவலை வேண்டாம். உங்கள் மூவரையும் யாரும் தொடமாட்டார்கள். இங்கிருந்து எந்தவிதத் தடங்கலும் இல்லாமல் போகலாம்.



அதற்கே நீங்கள் எனக்கு இந்த இரண்டாயிரத்தைக் கொடுக்கலாம்'' என்று.

சுபானின் கோபம் எல்லை மீறியதால், அவன் தனது குறுவாளை எடுத்து பகவான்தாஸின் கழுத்தில் அழுத்தினான். ''பகவான்தாஸ்! நீயும் எங்களுடன் வருகிறாய். எங்கள் மீது யார் கைவைத்தாலும் நீ பிணமாகிவிடுவாய்'' என்று எச்சரித்தான்.

அந்தக் குறுவாளையோ சுபானின் மிரட்டலையோ பகவான்தாஸ் லட்சியம் செய்ததாகத் தெரியவில்லை. ''சுபான்! பகவான்தாஸ் வார்த்தை மாறுபவனல்ல. மீதி மூவாயிரத்துக்குப் பதில் உங்கள் மூவர் உயிரையும் கொடுக்கிறேன். நீங்கள் வந்தபடி திரும்பலாம். உங்களை யாரும் தொடமாட்டார்கள். நீ திரும்ப ஏதாவது உளறினாலோ, இந்த மாதிரி கொலைத் தொழிலில் ஈடுபட முயன்றாலோ உங்கள் உயிர் இந்த இடத்திலேயே போய்விடும். சொல்வதைக் கேளுங்கள். சரக்கை வண்டியில் ஏற்றுங்கள்'' என்றான்.

19413
3492936

''ஏற்றாவிட்டால்?''

''என் ஆட்கள் ஏற்றுவார்கள்.''

''எங்கே உன் ஆட்கள்?''

இதை அவன் கேட்பதற்கும் அந்தப் பெரிய மூடு வண்டியிலிருந்து தொப் தொப்பென்று பத்துப்பேர் குதிப்பதற்கும் சரியாயிருந்தது. வெகுவிரைவில் சுபானையும் அவன் சகாக்களையும் அந்தப் பத்துப்பேர்களும் சூழ்ந்து கொண்டார்கள். ''அவர்களை விட்டு விடுங்கள். சரக்கை ஏற்றுங்கள்'' என்று உத்தரவிட்டான் பகவான்தாஸ்.

பகவான்தாஸின் ஆட்கள் விடுவிடுவென்று தளவாடங்களை கூண்டு வண்டியில் ஏற்றினார்கள். இந்த எதிர்பாராத திருப்பத்தையும் நஷ்டத்தையும் எண்ணித்

திகைத்து நின்ற சுபானை நோக்கி ''அடுத்த சரக்கு இன்றிலிருந்து பத்தாவது நாள் வரவேண்டும்'' என்று உத்தரவிட்ட பகவான்தாஸ் தனது ஆட்களை நோக்கி ''நீங்கள் வண்டியை ஓட்டிச் செல்லுங்கள்'' என்று உத்தரவிட, வண்டி நகர்ந்தது மலைப் பகுதியில். பகவான் தாஸின் பணியாட்களும் மறைந்தார்கள்.

பகவான்தாஸ் மீண்டும் சுபானை நோக்கி ''சுபான்! வருந்தாதே. மேவார் நிலை அப்படியிருக்கிறது. அடுத்த முறை இன்னும் கொஞ்சம் அதிகப் பணம் தருகிறேன்'' என்று கூறித் திரும்பினான், வண்டி சென்ற திக்கை நோக்கி.

அவன் முதுகைக் காட்டியதும் அதை நோக்கி வீச தனது குறுவாளை எடுத்து ஓங்கிப்பிடித்தான் சுபான். ''அங்கேயே நில்'' என்று எச்சரிக்கவும் செய்தான்.

அந்த எச்சரிக்கைக் குரலைக் கேட்டுத் திரும்பிய பகவான்தாஸ் ''இன்னும் என்ன இருக்கிறது? வியாபாரந் தான் முடிந்து விட்டதே'' என்று கேட்டான்.

''நீ உதயபூருக்குப் போகவில்லை'' என்றான் சுபான்.

''வேறெங்கே போகவேண்டும்?''

''எங்களுடன் வரவேண்டும்'' என்ற சுபான், மற்ற இருவரையும் புரவிகளைக் கொண்டு வரச்சொல்லி தானும் புரவியில் ஏறிக்கொண்டு மூன்று புரவிகளுக்கும் இடையில் பகவான்தாஸை மடக்கி ''உம் நட'' என்று உத்தரவிட்டான்.

''எனக்குப் புரவி வேண்டாமா?'' என்று வணிகன் கேட்டான்.

''நடப்பது நல்லது. உன் பருமன் சற்று குறையும்'' என்று சொன்ன சுபான் லேசாக நகைத்து பகவான் தாஸின் முதுகில் தன் காலால் உதைத்தான்.

# 8. அவள் ரகசியம்!

அஹமத் சுபான் ஆயுளில் செய்த பெரும் தவறு அது தான். சுபானின் கால் முதுகில் பட்டதுமே வெகுவேகமாக அவனை நோக்கித் திரும்பிய பகவான்தாஸ் அவன் காலைப்பற்றி வெகு வேகமாக இழுத்து சுபானை புரவியி லிருந்து கீழே தள்ளினான். அதே வேகத்தில் சுபானின் இடையில் தொங்கிய வாளையும் பறித்துக்கொண்டு மற்ற இரு மொகலாய வீரர்களையும் நோக்கிச் சுழற்றி 'வாருங் கள் உங்களையும் இங்கேயே வெட்டிப் புதைத்து விடு கிறேன்' என்று கூறவும் செய்தான். பகவான்தாஸின் உடல் பருமனுக்கு, அவன் காட்டிய வேகமும் வாளைச் சுழற்றியபோது காணப்பட்ட கைலாவகமும் மொகலாய வீரர்களுக்கு வியப்பாய் இருந்ததால் கணநேரம் பிரமித் தார்கள் என்றாலும், அடுத்த விநாடி புரவிகளை திருப்பி வாட்களை உருவிக்கொண்டு பகவான்தாஸ்மீது பாயவே செய்தார்கள். சுபானை தான் இழுத்துத் தள்ளுவதற்கும் அவன் வீரர்கள் போரிட முற்பட்டதற்கும் இடையில் இருந்த சில விநாடிகளை பகவான்தாஸ் நன்றாகப் பயன் படுத்திக்கொண்டான். மற்ற வீரர்களை நோக்கி நீட்டிய வாளை சட்டென்று கீழே விழுந்து விட்ட சுபானின் கழுத் தில் அழுத்தி, 'யாராவது சிறிது நகர்ந்தாலும் சுபான் அவன் வாளிற்கே பலியாகி விடுவான்' என்று எச்சரித்தான் பகவான்தாஸ்.

கழுத்தில் கத்தி ஊன்ற தரையில் கிடந்த சுபான் தனது வீரர்களை நோக்கி சைகை செய்யவே அவர்கள் பகவான்தாஸை விட்டு சற்றுப் பின்னடைந்தார்கள். அந்த சமயத்தில் மறைவில் இருந்த ரவிசந்த் தனது உருவிய வாளுடன் சுள்ளிகளின் வெளிச்சமிருந்த இடத்துக்கு வந்து

'வணிகரே! வாளை எடுத்துவிடும்; சுபான் எழுந்திருக்கட்டும்' என்று கூறினான்.

அவனை யாரென்று அறியாத பகவான்தாஸ் ''நீ யார்? இங்கு எப்படி வந்தாய்?'' என்று விசாரித்து தனது யானைக் கண்களால் ரவிசந்த்தை ஏறெடுத்து நோக்கினான்.

ரவிசந்த் பதில் சொல்லுமுன்பு அவனைக் கண்டதால் சிறிது தைரியம் வரப்பெற்ற சுபான், ''பகவான்தாஸ்! அவர் சொல்கிறபடி கேள். இல்லாவிட்டால் உன் உயிர் அரைக்காசு பெறாது'' என்று சொன்னான்.

பகவான்தாஸ் அறைமத் சுபானின் சொற்களுக்கு மகிழ்ந்ததாகத் தெரியவில்லை. ''நான் என்ன செய்ய வேண்டுமென்று உத்தரவிட நீ யார்?'' என்று மீண்டும் வினவினான், சிறிது சீற்றத்துடன்.

ரவிசந்த் பதிலேதும் சொல்லாமல் பகவான்தாஸை அணுகி அவர் மணிக்கட்டைத் திருகி, அவர் கையை உதற வாள் கீழே விழுந்தது. அத்துடன் சொன்னான், ''சுபான்! உன் வாளை எடுத்துக்கொள்'' என்று.

பகவான்தாஸ் எதும் புரியாததால் விழித்தான். அறைமத் சுபான் கத்தியை எடுத்துக்கொண்டு நின்றதும், ரவிசந்த் சொன்னான்: ''சுபான்! பகவான்தாஸை நீ காலால் உதைத்தது தவறு. ஆகையால் மண்டியிட்டு அவரிடம் மன்னிப்புக்கேள்'' என்று உத்தரவிட்டான்.

சுபான் பெரிதும் சங்கடத்துக்குள்ளானான். ''நவாப் அக்பரின் வீரன் ஒரு ராஜபுத்ரன் முன்பு மண்டியிட மாட்டான்'' என்று பிடிவாதமாகச் சொன்னான்.

''அக்பரின் வீரர்கள் போரிடுவார்கள். எதிரிகளைக் கொல்லுவார்கள். ஆனால் கைதிகளைக்கூட அவமானப் படுத்துவதை அக்பர் பொறுக்க மாட்டார். நீ இன்று ஒரு



பெரிய மனிதரைக் காலால் உதைத்திருக்கிறாய். அவரிடம் மன்னிப்புக் கேள். அல்லது...'' வாசகத்தை முடிக்காமல் விட்ட ரவிசந்த் குரலில் பயங்கரம் ஊடுருவி நின்றது.

சுபான் உடலில் சிறிது நடுக்கம் கண்டது. அதை அதிகப்படுத்த அந்தச் சமயத்தில் ரவிசந்தின் புரவி சந்தர், அவனெதிரே நின்றது. அதனால் தனக்கு ஏற்கெனவே டில்லியில் ஏற்பட்ட அவமானத்தை நினைத்துப் பார்த்த சுபான் தன் உயிரை வாங்க அந்தப் புரவியே போதுமென்று நினைத்தான். போதாக்குறைக்கு அதன் எஜமானனும் வந்து சேர்ந்திருக்கிறான் என்பதை நினைத்ததால் தைரியத்தை அடியோடு இழந்த சுபான், ''தளபதி! இந்த வியாபாரி எங்களை மோசம் செய்திருக்கிறான். இவன் பேசிய பணத்தில் பாதிகூடக் கொடுக்கவில்லை'' என்று புகார் செய்தான்.

அவன் தளபதி என்று அழைத்ததும் பகவான்தாஸ் மீண்டும் ரவிசந்த்தை நோக்கினான். ''நீ மொகலாயர் படையைச் சேர்ந்தவனா?'' என்று வினவவும் செய்தான் கடுப்புடன்.

ரவிசந்த்தின் கண்கள் பகவான்தாஸை அலட்சியமாக நோக்கின. ''ஆம்! அதனாலென்ன'' என்று கேட்டான்.

''நீ இன்னாரென்று தெரிந்தால் இங்குள்ள ராஜபுத்ர வீரர்களால் வெட்டப்படுவாய்'' என்று சுட்டிக்காட்டினான் பகவான்தாஸ்.

''என்னை யாரும் வெட்ட முடியாது, வெட்ட முயல்பவன் நேராக விண்ணை நோக்கிப் பறந்து விடுவான்'' என்ற ரவிசந்த், ''அதிருக்கட்டும் சேட், நீர் ஒப்புக்கொண்ட பணம் ஐயாயிரந்தானே?'' என்று வினவினான்.

''ஆம்'' என்று பகவான்தாஸ் ஒப்புக் கொண்டான்.

''அப்படியானால் பேசியபடி பணத்தைக் கொடுக்க வேண்டியதுதானே நாணயம்?'' என்று விசாரித்தான்.

''இது திருட்டு வியாபாரம். இதில் நாணயம் எங்கிருந்து வருகிறது?'' என்று பகவான்தாஸ் கேட்டான் எரிச்சலுடன்.

''இந்தத் திருட்டு வியாபாரம் அக்பருக்கோ அவர் தளபதிக்கோ தெரிந்தால் இவர்கள் உடனடியாக வெட்டப் படுவார்கள். இந்த வியாபாரத்தில் ஆபத்து இருக்கிறது. மீதிப்பணத்தை கொடுத்து விடுங்கள்'' என்று மத்தியஸ்தம் செய்தான் ரவிசந்த்.

சற்று சிந்தித்தான் பகவான்தாஸ். பிறகு தனது மடியில் தடவி இன்னொரு சிறு பையை எடுத்தான். அதை கையில் வாங்கிக்கொண்ட ரவிசந்த், ''பகவான்தாஸ், மீதி பணம் இதில் இருக்கிறதா?'' என்று வினவினான்.

''இருக்கிறது'' என்று பகவான்தாஸ் சலிப்புடன் கூறினான்.

''நல்லது'' என்று அறிவித்த ரவிசந்த், அஹமத் சுபானையும் மற்றவர்களையும் பார்த்து, ''நீங்கள் போக லாம்'' என்றான்.

அஹமத் சுபான் விழிகளில் வியப்பும் ஏமாற்றமும் கலந்து தெரிந்தது. ''பணம்?'' என்று கையை நீட்டி னான்.

''என்னிடம் பத்திரமாயிருக்கும். அடுத்த முறை இன் னும் அதிகத் தளவாடங்களைக் கொண்டு வா. பணத்துக்கு நான் பொறுப்பாளி'' என்று ரவிசந்த் உத்தரவிட்டான்.

அஹமத் சுபான் வாயைப் பிளந்தான். ''நீங்களும் இந்த வியாபாரத்தில் கலந்து கொள்கிறீர்களா?'' என்று விசாரித்தான், எதையும் நம்பமுடியாமல்.

''ஆம்! ராணாவுக்கு தளவாடங்கள் வேண்டும். அடுத்து போர் வரும், சீக்கிரத்தில்'' என்று ரவிசந்த் சொன்னான்.



இதைக் கேட்டதும் மற்றவர்கள் பிரமிக்காவிட்டாலும் பகவான்தாஸ் பிரமித்தான். அவன் ஏதோ பேச முயன்றதை தடுத்த ரவிசந்த் சுபானுக்கும் மற்றவர் களுக்கும் போக விடையளிக்கவே மொகலாய வீரர்கள் காட்டுக்குள் சென்று மறைந்தனர்.

அவர்கள் புரவிகளின் குளம்படி ஒலிகள் மறையும் வரை பேசாமல் நின்ற பகவான்தாஸ் ''மொகலாய தளபதி யாகிய நீர் ஏன் இங்கு வந்தீர்? இங்கு இந்த வியாபாரம் நடக்கப்போவது உமக்கு முன்கூட்டித்தெரியுமா?'' என்று வினவினான்.

ரவிசந்த் சிறிது சிந்தித்தான். ''வாருங்கள்! சம்பக்கை கேட்போம். உமது சந்தேகங்களுக்கு விடை கிடைக்கும்', என்றான்.

சம்பக்கின் பெயரைக் கேட்டதும் பிரமிப்பின் எல்லையை அடைந்த பகவான்தாஸ், ''யார்? ராஜ புத்ரியா! இந்நாட்டு மண்மலரா?'' என்று வினவினான்.

அந்தச் சமயத்தில் சம்பக்கே புரவிமீது அமர்ந்து அங்கே தோன்றினாள். ''பகவான்தாஸ், எனது ரகசி யத்தை உடைத்து விட்டீர்களே!'' என்று கூறி மகிழ்ச்சி யுடன் நகைத்தாள்.

# 9. திராவிடச் சித்தர்

அந்த அடர்ந்த காட்டில் மூன்று சுள்ளிகள் அளித்த சிறு வெளிச்சத்தில் வியப்படைந்தவர் இருவர். சம்பக்கின் பெயரை தான் முன்பின் அறியாத மொகலாயர் படைத் தலைவன் ஒருவன் சொன்னதால் பகவான்தாஸும், மண் மலர் என்று பகவான்தாஸ் கூறியதால் ரவிசந்தும் இருவருமே வியப்படைந்தார்கள். ஆதலால், இருவருமே மேற்கொண்டு எதும் பேசாமல் மௌனமாய் வாயடைத்து நின்றனர். அந்த இருவரில் ரவிசந்தே பேச்சைத் துவக்கி ''சம்பக்குக்கு மண்மலர் என்ற பெயரும் இருக்கிறதா?' என்று வினவினான்.

பகவான்தாஸ் உடனடியாகப் பதில் சொல்லவில்லை. ''இவரை நம்பி நாம் பேசலாமா?'' என்று வினவினான் சம்பக்கை நோக்கி.

சம்பக் பகவான்தாஸை நோக்கிப் புன்முறுவல் செய்தாள். ''பேசுவதைத் தவிர வேறு வழியில்லை'' என்றாள் புன்முறுவலின் ஊடே.

பகவான்தாஸுக்கு அப்பொழுதும் நம்பிக்கை வராததால் ''அப்படியென்ன பெரியவர் இவர்?'' என்று வினவினான்.

சம்பக் புரவியிலிருந்து இறங்கிக் கீழே நின்றுகொண்டு ''பகவான்தாஸ்! இவரை ராணா நம்புகிறார். இவரை உங்களிடம் கொண்டு சேர்க்க உத்தரவிட்டிருக்கிறார்'' என்று கூறினாள்.

பகவான்தாஸின் முகம் பிரமிப்புக்கு இலக்கணமாகத் திகழ்ந்தது.



''ராணாவா! இவரை எப்பொழுது பார்த்தார்? எங்கு?'' என்று வினவினான் உதயபூர் வணிகன்.

''சில நாழிகைகளுக்கு முன்பு. மலையடிவார அருவிக்கு அருகில் ராணாவை இவர் சந்தித்தார்'' என்றாள் சம்பக்.

''ராணாவுக்கு இவரை முன்பே தெரியுமா?'' வணிகன் குரலில் அப்பொழுதும் சந்தேகம் இருந்தது.

சம்பக் வணிகனை நோக்கி நகைத்தாள். ''தெரியாது பகவான்தாஸ். இவரை ராணா முதன் முறையாக இன்று தான் சந்தித்தார். பிறரை எடைபோட ராணாவுக்கு நிமிடங்கள் போதாதா?'' என்று நகைப்பின் ஊடே கேட்ட சம்பக், ''பகவான்தாஸ்! இவரை ராணா இன்று தழுவிக் கொண்டார், அருவிக்கரையில்'' என்றும் சொன்னாள்.

''ராணா தழுவிக் கொண்டாரா! இவரையா? இவர் என்ன அப்பேர்ப்பட்ட அழகு?'' என்று வியப்புடனும் வெறுப்புடனும் வினவினான் வணிகன்.

''இவர் ஒரு சிறு செயல் புரிந்தார்....'' என்று மெல்ல செய்தியை சம்பாஷணையில் புகவிட்டாள் சம்பக்.

''என்னவோ?''

''நான்கு மொகலாய வீரர்கள் இவரைப் பிடிக்க வந்தார்கள். அவர்களில் இருவரை இவர் வெட்டிப் போட்டார். இருவர் தப்பியோடிவிட்டார்கள். இல்லாவிட்டால் அவர்களும் மேல் உலக யாத்திரை செய்திருப்பார்கள்.''

சம்பக் சொன்ன இந்தச் செய்தியைக் கேட்டதும் வணிகன் திகைத்தான். ''வீரரே மன்னிக்கவேண்டும். விஷயமறியாமல் ஏதேதோ உளறிவிட்டேன்'' என்ற பகவான்தாஸ் ரவிசந்தை வணங்கப் போனான்.

ரவிசந்த் அவனைத் தடுத்து ''பகவான்தாஸ், நீங்கள் என்னைச் சந்தேகித்ததில் தவறு எதுமில்லை, முன்பின் அறியாதவர். சுபானே என்னை அறிந்திருப்பதை உங்கள் செவியால் கேட்டிருக்கிறீர்கள். இந்த சந்தர்ப்பத்தில் யாரும் நீங்கள் கொண்டுள்ள முடிவுக்குத்தான் வரமுடியும். அது கிடக்கட்டும். இந்த ராஜபுத்ரியை 'மண்மலர்' என்று ஏன் அழைத்தீர்கள்?'' என்று கேட்டான்.

பகவான்தாஸின் முகத்தில் மகிழ்ச்சி படர்ந்தது. ''அது பெரிய கதை'' என்று ஆரம்பித்து, ''ராஜகுமாரிக்கு அந்தப் பெயர் வைத்தவர் ஒரு சித்தர்'' என்றான்.

''சித்தரா?''-எதும் புரியவில்லை ரவிசந்த்துக்கு.

''திராவிட தேசத்திலிருந்து வந்த ஒரு துறவி இவளைப் பார்த்ததும் ''அம்மா! நீ ஒரு மண்மலர். இது தான் இனி உன் பெயர்'' என்றார். ''இனி சிலகாலம் நீ மண்ணில் படுத்திருக்க வேண்டும். பஞ்சணை, பாய், எதுவும் உனக்கு உதவாது'' என்றார். அத்துடன் கையை உயர்த்தி ஆகாயத்தைத் துழாவினார். அதில் ஒரு சம்பக மலர் வந்தது. அது பொன்னால் செய்யப்பட்டிருந்தது. இதை பத்திரமாக வைத்துக்கொள். இது உன்னிடமிருக்கும்வரை எந்த சக்தியும் உன்னை எதுவும் செய்ய முடியாது. உன் இஷ்டத்திற்கு விரோதமாக எந்த ஆண் மகனும் உன்னைத் தொட்டுவிட முடியாது என்று கூறி அந்த மலரையும் கொடுத்தார்'' என்று பகவான்தாஸ் சொன்னான்.

''அவர் இப்பொழுது எங்கிருக்கிறார்?'' என்று வினவினான் ரவிசந்த்.

''தெரியாது. மலரைக் கொடுத்துவிட்டுப் போய் விட்டார். இவள் திருமணத் தேதியன்று வருவதாகச் சொல்லியிருக்கிறார்.''

''திருமணத்துக்கு உறவில் பிள்ளை இருக்கிறானா?''



''கிடையாது. யாரோ ஒருத்தன் வலுவில் வருவான் என்று சொல்லியிருக்கிறார்.''

''இது நிஜமா? கட்டுக்கதையா?''

''ராணாவையே கேளுங்கள். அவர் முன்னிலையில் தான் இத்தனையும் நடந்தது.''

இப்படிச் சொன்ன பகவான்தாஸ் மண்மலரை உற்று நோக்கினான். அவள் முகம் உணர்ச்சியற்ற கல்லாயிருந்தது.

ரவிசந்த் அவளை நோக்கி ''ராஜபுத்ரி! மிக விசித்திரமான கதை. ஏதோ பெரிய காரியத்துக்காக நீங்கள் பிறந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் எங்கிருந்தோ வந்த ஒரு சித்தர் அனுக்கிரகம் உங்களுக்குக் கிடைத்திருக்காது'' என்று கூறி, ''நான், உங்களை எப்படி அழைப்பது ராஜபுத்ரி என்றா, சம்பக் என்றா, அல்லது மண்மலர் என்றா?'' என்று வினவினான்.

''எப்படி வேண்டுமானாலும் அழையுங்கள். எப்படி அழைத்தாலும் எனக்கு சம்மதம்'' என்றாள் சம்பக்.

இதைக் கேட்டதும் பகவான்தாஸ் அதிர்ச்சியடைந்தான். ''சம்பக்! நீ ராணா பிரதாப்பின் அந்தரங்க மந்திரி என்பதை மறந்து விட்டாயா? என்னைப் போன்ற வயதான, மிகவும் பழக்கமுள்ளவர்களே உன்னைப் பெயர் சொல்லி அழைக்க அஞ்சும்போது, இந்தப் புது வாலிபன் உன்னைப் பெயர் சொல்லி அழைத்தால் ராஜபுத்ரர்கள் என்ன நினைப்பார்கள்'' என்று கேட்டான்.

சம்பக், அவர் சொற்களுக்கு மசியவில்லை. ''எது வேண்டுமானாலும் நினைக்கட்டுமே'' என்று சொன்னாள். ''என்னை யார் எப்படி கூப்பிடலாமென்பது எனது சொந்த விஷயம். இதில் மூன்றாமவர் கருத்துக்கு இடமில்லை'' என்றாள். அத்துடன் பேச்சை நிறுத்தி, 'தளபதி! கிளம்புங்கள்!' என்றும் உத்தரவிட்டாள்.

ரவிசந்த் சிறிது நிதானித்தான். ''பகவான்தாஸ் எப்படி வருவார்? அவர் வண்டியும் போய்விட்டதே'' என்று வினவினான்.

அந்த சமயத்தில் சம்பக் சிறிது பின்னால் நோக்க, இரு ராஜபுத்ர வீரர்கள் இருபுரவிகளில் வந்தார்கள். ஒருவன் தனது புரவியை பகவான்தாஸுக்குக் கொடுத்துவிட்டு மீண்டும் காட்டுக்குள் மறைந்தான். மற்றுமொருவன் ''ராஜபுத்ரி! நான் துணை வரட்டுமா?'' என்று வினவினான்.

''வேண்டாம். நாங்கள் மூவர் இருக்கிறோம் போதும்'' என்று கூற அவனும் காட்டுக்குள் மறைந்தான்.

சம்பக் அதற்குமேல் பேசவில்லை. தனது புரவியைக் காலால் உதைத்துச் சேணத்தைச் சற்று இழுத்து நடக்க விட்டாள். ரவிசந்த், சந்தர்மீது அனாயாசமாகத் தாவ சந்தர் ராஜபுத்ரியின் புரவியின் பக்கத்தில் சென்றது. பகவான்தாஸ் தனது பருமனான சரீரத்தை ஆட்டி கஷ்டப் பட்டு புரவிமீது ஏற, புரவியின் முதுகு சிறிது வளைய, மெதுவாக புரவிகள் ஊர்ந்தன அந்த மலைப்பகுதியில்.

சில விநாடிகள் பேசாமலேயே பயணம் செய்த ராஜ புத்ரி மெல்லப் பேசத் தொடங்கி ''வீரரே! நீங்கள் ராணா வின் பக்கம் சேவை செய்யப் போவதால் இந்தக் காட்டுப் பகுதிகளைப் புரிந்து கொள்வது நல்லது'' என்றாள்.

ரவிசந்த் பதில் சொல்லவில்லை, அவளுக்கு; பதில் சொல்லும் நிலையிலும் அவன் இல்லை. அத்தனை இருட் டிலும் விண்மீன்கள் அளித்த சிறுவெளிச்சத்தில் புரவி மீதமர்ந்த அவள் தோரணையும், உடலின் வாளிப்பும் மிக ரம்மியமாயிருந்ததை ரவிசந்த் கவனித்தான். புரவி நடந்த தால் ஏற்பட்ட அசைவில் அவள் உடலின் எழிலம்சங்கள் அசைந்த அழகும், காற்றில் அலைந்த ஓரிரு குழலை



அவள் ஒதுக்கியபோது ஒருபுறத்தில் சேலைக்குள் எழுந்த மார்பின் கூர்மையும் அவனை உன்மத்தம் கொள்ளச் செய் தன. ''இத்தனை அழகை, இந்த மலரை அனுபவிக்க யார் வரப்போகிறானோ?'' என்று நினைத்து சோகப் பெருமூச்சும் விட்டான். பிறகு தான் அவளை அப்படிப் பார்ப்பதும் பண்பாட்டுக் குறைவு என்ற காரணத்தால் தலையைக் குனிந்து கொண்டான், தனது புரவியின் கழுத்தை நோக்கி.

தலைதான் குனிந்ததே தவிர அவன் மனம் அவளையே சுற்றிக்கொண்டிருந்தது. அதனால் அவன் வேதனையும் அதிகமாயிற்று. ''இப்படியே திரும்பி டில்லிக்கு ஓடி விட்டால் என்ன?'' என்றுகூட ஒருவிநாடி நினைத்தான்.

இத்தகைய நினைப்புகளில் திளைத்திருந்த ரவிசந்தை ''வீரரே!'' என்று அழைத்த சம்பக், ''நாம் தங்கும் இடம் வந்துவிட்டது'' என்றாள்.

தலைநிமிர்ந்து அவளை நோக்கினான் ரவிசந்த். ''நாம் தங்கும் இடமா?'' என்று வினவினான்.

''ஆம், சிறிது இளைப்பாறிவிட்டு விடியற்காலையில் புறப்படுவோம். மூன்றாம் ஜாமம் தாண்டிவிட்டது'' என்ற ராஜபுத்ரி, தனது புரவியிலிருந்து கீழே குதித்து எதிரே யிருந்த ஒரு மரத்தடியை நாடிச் சென்றாள். ரவிசந்த்தும் சந்தரிலிருந்து இறங்கி அவளைத் தொடர்ந்தான். இதை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் பகவான்தாஸ்.

# 10. இன்பக் கதை

ராஜகுமாரி (ராஜபுத்ரி) சம்பக்கும், மொகலாய தளபதியான ரவிசந்த்தும் எதிரே சற்று எட்ட இருந்த மரத்தடியை நோக்கிச் சென்றதை நீண்ட நேரம் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த பகவான்தாஸ் கடைசியில் புரவி மீதிருந்து இறங்கித் தானும் ஒரு மரத்தை நாடிச் சென்று, மரத்தில் குதிரையின் கடிவாளத்தைப் பிணைத்துவிட்டு தரையில் உட்கார்ந்துகொண்டு, எதிரே ராஜகுமாரியிருந்த மரத்தடியை நோக்கலானான். அங்கு ஏற்பட்ட நிகழ்ச்சி அவனுக்கு பெரும் பிரமையை அளித்தது.

மரத்தை அடைந்த ராஜகுமாரி தனது புரவியை மரத்தில் பிணைக்கப்போனதைக் கண்ட ரவிசந்த், ''ராஜகுமாரி! அதைப் பிணைக்க வேண்டாம். எங்கும் போகாது'' என்றான்.

சம்பக் ரவிசந்தை நோக்கி ''உங்களுக்குத் தெரியாது இதன் சுபாவம். மிகவும் துடுக்குள்ள குதிரை'' என்று சொன்னாள்.

''எத்தனை துடுக்கானாலும் பாதகமில்லை. இந்த இடத்தைவிட்டு அசையாமல் சந்தர் பார்த்துக் கொள்வான்'' என்று கூறிவிட்டு, அவன் புரவியை நோக்கி சந்தருக்கு ஏதோ சைகை செய்தான். சந்தரும் அந்தப் புரவியை நெருங்கி அதனுடன் உராய்ந்து நின்றது. இருமுறை ராஜகுமாரியின் புரவி துள்ளியோட முயன்றபோது சந்தர் அதற்குக் குறுக்கே நின்று ஏதோ முட்டுவதுபோல் அதை முட்டவே, அந்தப் புரவி தலைகுனிந்து கீழேயிருந்த



புற்களை மேய ஆரம்பித்தது. அதன் காலடியில் சந்தரும் படுத்தது.

இந்த விசித்திரத்தைக் கண்ட சம்பக் பிரமித்தாள்; புன்முறுவல் செய்தாள். ''புரவியை நன்றாகப் பழக்கியிருக்கிறீர்கள்; ராணாபிரதாப் சிம்மரின் புரவி சைதக்கும் இப்படித்தான் அவர் எண்ணத்தை அறிந்து நடக்கும்'' என்று பாராட்டினாள்.

ரவிசந்தின் முகத்தில் பெருமையின் சாயை விரிந்தது. ''ராஜகுமாரி! சந்தரை நீங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் நம்பலாம், அவனிருக்கும்போது என் துணைகூட உங்களுக்கு வேண்டியதில்லை'' என்றான் பெருமை குரலிலும் ஒலிக்க.

''எனக்கு யார் துணையும் வேண்டாம்'' என்று கூறிய ராஜகுமாரி கீழே உட்கார்ந்து கொண்டாள். அவள் எதிரே நான்கடி தள்ளி ரவிசந்தும் உட்கார்ந்து கொண்டு, ''நீங்கள் படுத்துக் கொள்ளுங்கள் ராஜகுமாரி'' என்றான்.

''நீங்கள்?'' என்று ராஜகுமாரி கேட்டாள், ''எனக்கு உறக்கம் வரவில்லை. உதயபூருக்கு போனதும் உறங்குகிறேன்'' என்றான்.

அதற்குமேல் ஏதும் பேசாத ராஜகுமாரி மரத்தடியிலிருந்து கிளம்பியிருந்த ஒரு தடித்த வேரின்மீது தலையை வைத்துக் கொண்டு கூனிக் குறுகிப்படுத்தாள். சேலையின் மேல்புறத்தை இழுத்துவிட்டுத் தலையில் முக்காடும் போட்டுக் கொண்டாள்.

அந்தச் சயன கோலத்தில் சம்பக் அசாத்திய அழகுடன் விளங்குவதை ரவிசந்த் கண்டான். முக்காடு இடப்பட்ட தலையிலிருந்து வெளியே வந்த இரண்டு மூன்று குழல் பிரிவுகள் அவள் சந்திரவனத்தில் படுத்து சந்திரனில் தெரியும் கலைமானைப்போல் காட்சியளித்தன. முடி

யிருந்த கண்மலர்கள் முத்துச்சிப்பிகளைத் தோற்கடித்தன. அந்த முத்துச் சிப்பிகளில் சின்னஞ்சிறு கரிய விசிறிகளைப் போல் காணப்பட்ட இரப்பை நுனிகள் மூடிய கண்களிலும் மயில் ஆடுவதைப் போன்ற பிரமையை ஏற்படுத்தின. அவள் வளைந்து ஒருக்களித்துப் படுத்திருந்ததால் இடதுகரமும் மணித்தோளும், தாமரை இதழ்கள்போல் பின்னழகின் எழுச்சியின்மீது விரிந்திருந்த அழகிய விரல்களும் அவள் எழிலின் சிறப்பை நன்றாகவே எடுத்துக் காட்டின.

குறுகிப் படுத்து மார்புக்குக் குறுக்கே வலது கையைப் பாய்ச்சி மார்பகத்தை மறைக்க அவள் முயன்றாலும், அதில் ஒன்று அவள் கையையும் மீறி தனது விளிம்பை வெளியிட்டு, தனது திண்மையை நிரூபித்துக் கொண்டிருந்தது. இன்னொன்று தரையில் அழுந்திக் கிடந்ததால் கண்ணுக்கு புலனாகவில்லையென்றாலும் ரவிசந்தின் ஊகத்துக்குப் புலனாகவே செய்தது. தரையிலிருக்கும் கற்கள் அந்த எழிலை உறுத்துமே என்று வருந்தினான், பிருத்விராஜின் உபசேனாதிபதி. அவள் கழுத்தைச் சுற்றியிருந்த சேலை, படுத்ததன் விளைவாக சிறிது பிரிந்து சங்குக் கழுத்தை நன்றாகவே காட்டியதாலும், அந்தக் கழுத்துக்குக் கீழே இறங்கிய இடத்தில் இரு மார்புகளுக்கு அழைத்துச் செல்லும் பள்ளமான வழியும் சிறிதே புலனானதாலும் ரவிசந்தின் மனம் தத்தளிக்கவே செய்தது.

சம்பக், கால்களை முடக்கியே படுத்திருந்ததால் மிகவும் சிறுத்த இடை அதிகம் சிறுத்துக் கிடந்தது. அதன் விளைவாக ஒரு புறத்துப் பின்னெழில் பெரிதாகத் தெரிந்ததன்றி, அதன் மீது படுத்திருந்த பூவிரல்கள் அடிக்கடி அகன்றும் குறுகியும் விஷமம் செய்து கொண்டிருந்ததே மிக அழகாகத் தெரிந்தது, அந்த ராஜபுத்ர வாலிபனுக்கு. கால்களை அவள் குறுக்கிப் படுத்திருந்ததால் பெரிதாகத் தெரிந்த தொடைகள் இரண்டுக்குள்ளும் அவள் சேலை



பாய்ந்து கிடந்தது இன்ப ஊகங்களுக்கு அதிகமாக இடங்கொடுத்தது. அவள் கணுக்கால்களில் ஆபரணமும் எதுவும் இல்லை. இல்லாதிருந்ததே அவள் கால்களின் அழகை அதிகப்படுத்திக் காட்டியது.

இந்த அழகையெல்லாம் பருகிக்கொண்டு உட்கார்ந்திருந்த ரவிசந்த் உணர்ச்சி மிகுதியால் பெருமூச்சு விட்டான். மண்ணில் கிடந்த அந்த மலரின் லாவண்யத்துக்கு மொகலாய அரண்மனைப் பஞ்சணையில் கிடக்கும் பெண்களின் லாவண்யம் இம்மிகூட ஈடாகாது என்று நினைத்தான் ரவிசந்த். ''இந்த அழகுப் பிம்பத்தை மண்ணில் படுக்க உத்தரவிட்ட திராவிடச்சித்தர் யார்? எதற்காக உத்தரவிட்டார்? சித்தருக்குச் சிறிதும் புத்தி கிடையாது போலிருக்கிறது?'' என்று சித்தரைச் சபிக்கவும் செய்தான்.

அந்த சமயத்தில் அவள் செம்பருத்தி அதரங்களில் சிறிது புன்சிரிப்பும் படர்ந்தது. ''தூக்கத்தில் இவள் ஏதோ கனவு காண்கிறாள். அதன் பயன்தான் இந்தப் புன்சிரிப்பு'' என்று தனக்குள் சொல்லிக்கொண்ட ராஜபுத்ர வாலிபன், ''அது என்ன கனவாயிருக்க முடியும்? இவள் யாரையாவது காதலிக்கிறாளா?'' என்று எண்ணமிட்டான். ''அவன் எவனாயிருந்தாலும் பாக்கியசாலி'' என்று சொல்லிக் கொண்டான்.

மரத்தடியில் விண்மீன்கள் அளித்த லேசான வெளிச்சத்தில், அவள் கட்டியிருந்த வெண்புடவை அத்தனை உயர்ந்ததல்ல வென்பதையும், பருத்தி நூலைக் கொண்டு நெய்யப்பட்ட சாதாரண சேலைதானென்பதையும் உணர்ந்துகொண்ட ரவிசந்த், அந்தச் சேலையே அவளை ஒரு காவிய மலராக ஆக்கியிருந்ததைக் கவனித்தான். ''சேலையா இவளுக்கு அழகு செய்யவேண்டும். இந்த சித்தினியல்லவா சேலைக்கு அழகைக் கொடுக்

கிறாள்'' என்று சேலையை இழித்தும். அவளைச் சிறப்பித்தும் சொற்களை முணுமுணுத்தான் ரவிசந்த்.

இப்படி அவன் தனக்குத்தானே பேசிக் கொண்டிருந்த சமயத்தில் சம்பக் லேசாக நகைத்தாள். ''தூக்கத்தில் நகைப்பு வேறு வருகிறதா?'' என்று கேட்டான் ரவிசந்த்.

அவள் லேசாக முணுமுணுத்தாள் ''ஏன் வராது?'' என்று.

அப்பொழுதுதான் புரிந்துகொண்டான் ரவிசந்த், அவள் உண்மையில் உறங்கவில்லையென்பதை. ''நீங்கள் தூங்கவில்லையா சம்பக்?'' என்று கேட்டான் ரவிசந்த்.

''இல்லை'' -அவள் உதடுகள் லேசாகத் திறந்து அந்த ஒரு சொல்லை உதிர்த்தன.

''ஏன்?''

''உறக்கம் வரவில்லை.''

''இளைப்பாறுவதற்காகத் தானே தங்குகிறோம் இங்கே?''

''இளைப்பாறுவதென்றால் உறங்கத்தான் வேண்டுமென்பதில்லை. உங்களைப்போல் ஒருவர்....''

''சொல்லுங்கள்.''

''பக்கத்தில் உட்கார்ந்திருக்கும்போது எப்படி உறங்க முடியும்?''

''ஏன் முடியாது?''

''கழுகு போல் நீங்கள் என்னை ஆராயும்போது ..''

''சம்பக்! இது உண்மையல்ல. நீ தான் கண்களை மூடிக் கொண்டிருந்தாயே!''



''கண்கள்தான் மூடிக் கிடந்தன. உணர்ச்சிகள் உறங்கவில்லை.

''உணர்ச்சிகள் பார்க்குமா?''

''பார்க்கும். கண்களை விட நன்றாகப் பார்க்கும்'' என்ற சம்பக் கண்களை நன்றாகத் திறந்தாள்.

''சம்பக்!''

''சொல்லுங்கள்.''

''உங்களை சில விவரங்கள் கேட்கவேண்டும்.''

''கேளுங்கள். ஆனால் அடிக்கடி மாற்றிப் பேச வேண்டாம்.''

''என்ன மாற்றிப் பேசினேன்?''

''சற்று முன்பு என்னை 'நீ' என்றழைத்தீர்கள், பிறகு நீங்கள் என்கிறீர்கள். ஏதாவது ஒருவிதமாக வைத்துக் கொண்டால் நல்லது.''

''எந்த விதம் வைத்துக் கொள்ளட்டும்?''

''நீ என்றே கூப்பிடுங்கள். என்னை ராணாவின் வட்டாரங்களில் எல்லாருமே அப்படித்தான் அழைக்கிறார்கள்'' என்ற சம்பக் புன்முறுவல் செய்தாள்.

ரவிசந்த் சொர்க்கத்துக்குப் போய்க்கொண்டிருந்தான். ''சம்பக்! சம்பக்!'' என்று இருமுறை செல்லமாக அழைத்தான்.

அவள் இன்பமாக நகைத்தாள். ''ஒரு கதை சொல்கிறேன் கேளுங்கள்'' என்று கதையையும் தொடங்கினாள். மிக இன்பமான கதை அது.

# 11. விண்ணும் மண்ணுக்கு வரும்!

வலிமை மிக்க ராஜபுத்ரர்களுக்கு அடைக்கலமாய் விளங்கியதால் ஆராவலி என்றழைக்கப்பட்ட ராஜபுதன மலைத் தொடரின் நடுப்பகுதியில் எழுந்த செங்குத்தின் சரிவில், அந்த அடர்ந்த காட்டில் இரவில் மண்மேல் படுத்துக்கிடந்த அந்த மலர் சொல்லத் தொடங்கிய இன்பக் கதையைக் கேட்கக் காதுகளை நீட்டிக்கொண்டு, முழந்தாள்களை கையில் சுற்றிய வண்ணம் உட்கார்ந்தான் பிருத்விராஜின் உபதளபதி. அந்த சூழ்நிலையில் இரவு அளித்த பயங்கரத்தை சிறிதும் லட்சியம் செய்யாத சம்பக் சொன்னாள்: ''வீரரே! நான் சொல்லப்போகும் கதை உங்களுக்கு அதிசயமாயிருக்கலாம். ஆனால் முற்றிலும் உண்மை. இதுவரை வரலாறு காணாத விந்தை. அதுதான் மகாராணா பிரதாப்பின் கதை'' என்று.

மேலும் தொடர்ந்தாள்: ''நான் இதோ மரத்தின் வேர் மீது தலைவைத்து மண்ணில் கிடக்கிறேன். இது எனக்கு திராவிடச் சித்தர் விதித்த கட்டளை. ஆனால் ராணாபிரதாப் சிம்மருக்கு யாரும் கட்டளையிடவில்லை. அவரும் மண தரையில் தான் படுக்கிறார். காரணம் அவர் தாய் விதவை. விதவை என்றதும் ராணா உதயசிம்மன் இறந்துவிட்டதால் அவருடைய ராணியை குறிப்பிடுகிறேனென்று நினைக்காதீர்கள். ராணாபிரதாப், அவர் தாயாரை பற்றி நினைப்பதில்லை. தாய் நாட்டைப் பற்றி, தாய் மண்ணைப் பற்றித்தான் சதா நினைத்துக் கொண்டிருக்கிறார். 'ராணா ஸங்கனுக்கும் எனக்கும்



இடையே உதயசிங் ஏன் பிறந்தார்?' என்று பல சமயங்களில் ஆத்திரத்துடன் கூறுகிறார். 'எனக்கும் ராணா ஸங்கனுக்கும் இடையே உதயசிங் பிறந்திராவிட்டால் ராஜஸ்தானுக்கு எந்த துருக்கரும் சட்டங்களை விதித்திருக்க முடியாது என்று கூச்சலிடுவதை அவர் தளபதிகள் பலமுறை கேட்டிருக்கிறார்கள். ராணா ஸங்கன் நிறுவிய பலமான சாம்ராஜ்யத்தை அவரது மகன் தனது பலவீனத்தால் அக்பரிடம் பலி கொடுத்தார். மேவார் தலைநகரான சித்தூரை இழந்து உதயபூர் வந்து கடைசி காலத்தில் அங்கு தமது பெயரால் உதயசாகரம் என்றொரு ஏரியையும் கட்டினார். ஆனால் ராணா பிரதாப் அந்த ஏரியைக் கண்ணாலும் பார்ப்பதில்லை. ஜெயமல், பட்டி என்னும் இரு மகாவீரர்கள் ரத்தம் சிந்திய மேவார் தலைநகரமான சித்தூர் எதிரிகள் வசப்பட்டதால் மேவார் ஆபரணமிழந்த விதவை என்று பிரதாப் நம்பினார். அப்படியே தலைநகரை அழைக்கவும் செய்தார்...''

இங்கு சிறிது நேரம் கதையை நிறுத்திய சம்பக் உணர்ச்சி வசப்பட்டு மேலும் பேசலானாள். ''சித்தூரை இழந்ததால் மேவார் தாலிபாக்யமிழந்த விதவையாகி விட்டது. ஆகையால் மேவாரைப் போலத்தான் தாமும் தம்முடன் சேர்ந்தோரும் இருக்கவேண்டுமென்று ராணா பிரதாப் விரும்பினார். சித்தூர் திரும்ப தமது கைவசப்பட்டு, மேவார் விடுதலையானால் ஒழிய யாரும் பொற்கலங்களை உபயோகப்படுத்தக் கூடாதென உத்தரவு பிறப்பித்தார். வெள்ளித்தட்டுகளில் சாப்பிடக்கூடாதென்றும் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. பொன், வெள்ளி இவற்றால் செய்தது எதுவுமே கூடாதென்று பிரதாப் உத்தர

---

* Had only Oody Sing never been no Toork should ever have given laws to Rajasthan, Todd's Annals—Chapter XI-Page 108.

விட்டார். ஆகையால் பொன்னும் வெள்ளியும் மறைந்தன. *வெள்ளித்தட்டுகள் பலாசபத்ரங்களால் (ஒருவித சருகு) தைக்கப்பட்ட இலைகளுக்கு இடங்கொடுத்தன. ராணா பஞ்சணையைத் துறந்தார். கடுமையான வாழ்க்கையை ராணா மேற்கொண்டார். அவரை மந்திரியொருவர் ஒரு நாள் கேட்டார் 'ராணா! தரையில் வைக்கோலில் படுக்கிறீர்களே. உங்களுக்கு உறுத்தவில்லையா? கற்கள் குத்த வில்லையா', என்று. ராணா சிரித்தார். 'மந்திரி! என்னை உறுத்துவது ஒன்றுதான். மேவாரின் இன்றைய விபரீத நிலை. என்னைக் குத்துவது ராஜபுத்ரர்களின் மானங் கெட்ட நடத்தை. மந்திரிப்பதவிகளுக்காக அக்பரிடம் மானத்தை விற்றுவிட்டார்கள்'என்று சொன்னார், துன்பச் சிரிப்பின் ஊடே. இப்போது புரிகிறதா உங்களுக்கு ராஜ புதனத்தின் மானத்தைக் காக்க ஒரு மகாவீரன் பிறந்து விட்டான்; அதற்காகச் சுகங்களைத் துறக்க, மண்ணில் படுக்க, ஒரு மாணிக்கம் தோன்றியிருக்கிறது என்று?'' என்று பேசிய மண்மலர் நிறுத்தினாள் கதையை. சோகப் பெருமூச்சு ஒன்றும் விட்டாள்.

சிறிது நேரம் மௌனமாயிருந்த சம்பக் ரவிசந்தை உற்று நோக்கினாள். அவன் முகம் சோக பிம்பமாயிருப்பதைக் கவனித்தாள். அதனால் அவனிடம் அனுதாபத்துடன் பேசத் துவங்கி ''வீரரே! நீர் வருந்த அவசியமில்லை. ராஜபுதனத்தின் பெரும் சிங்கங்களை அக்பர், ராணா பிரதாப்சிம்மனுக்கு எதிராக நிறுத்தியிருக்கிறார். மார்வார் அம்பர், பிகானிர், இந்த ராஜ்யாதிபதிகள், எந்த சமயத்திலும் மேவாருக்கு எதிராக வாளைத் தூக்காத பூந்திவம்ச மகாவீரர்கள்- இவர்கள் அனைவரையும் மொகலாயசக்கரவர்த்தி விலைக்கு வாங்கி விட்டார். பிரதாப்பின்

* The gold and silver dieshes were laid aside for Patiera of leaves, their beds henceforth of straw-Tods Annals—Ch.XI—Page 108.



சொந்த சகோதரர் *ஸாகர்ஜியும் எதிரியுடன் சேர்ந்தார். அதற்குப் பலனும் கிடைத்தது. இப்படி ராணா பிரதாப்புக்கெதிரே ராஜஸ்தானத்தின் பிரபல அரசுகளை நிற்க வைத்தார் அக்பர். ஆனால் பிரதாப் அசையவில்லை. ராஜஸ்தானத்திலிருந்த தமது மூதாதையர்களின் வீரக் கதைகளையெல்லாம் படித்து அவற்றிலிருந்து உரம் கொண்ட பிரதாப் அத்தனை அரசுகளையும் எதிர்த்து நிற்கிறார். எந்தெந்த அரசுகள், வம்சங்கள் நாட்டுக்குத் துரோகம் செய்தனவோ, அந்த வம்சங்களுடன் யாரும் சம்பந்தம் செய்யக்கூடாதென கட்டளையும் பிறப்பித்திருக்கிறார். ராணா கஷ்ட ஜீவனம் செய்கிறார். ஆனால் கொள்கையைத் தியாகம் செய்து அடையும் சுகஜீவனத்தை அவர் விரும்பவில்லை. பிரதாப்பின் இந்த வீரவாழ்வு வெகு சீக்கிரம் ராஜபுதனத்தின் மகாவீரர்களை அவரிடம் இழுத்தது. சித்தூரைக் காத்துப் போரில் மடிந்து விழுந்த ஜெய்மல், பட்டா, இருவர் வம்சங்களும் ராணாவின் கொடியின்கீழ் திரண்டார்கள். சலூம்ப்ரா வம்சமும் சேர்ந்தது. தைல்வராவின் வீரத்தலைவர் ராணாவின் வலது புறம் நிற்கும் பெருமையைப் பெற்றிருக்கிறார். இப்பொழுது ராஜபுதனம் விழித்து நிற்கிறது. அக்பரின் பெரும் படை பலத்தை அது லட்சியம் செய்யவில்லை. ராஜபுதனத்தின் மாசு ராணா பிரதாப்பின் தியாக அக்னியால் பரிசுத்தப்படுத்தப்பட்டிருக்கிறது'' என்று கூறினாள்.

ரவிசந்த் இந்த வீரக்கதையை ஏதோ சொப்பனத்தில் கேட்பதுபோல் கேட்டுவிட்டு, ''சம்பக்'' என்று மெதுவாக அழைத்தான்.

''ரவிசந்த்''—இம்முறை அவள் அவன் பெயரைச் சொல்லி அழைத்தாள். அவள் பவள இதழ்களிலிருந்து

* ஸாகர்ஜி கண்டஹார் கோட்டையையும் பெற்றார். அவர் வம்சத்தார் பிற்காலத்தில் ஸாகர்வத் என்றழைக்கப் பட்டார்கள்.

தன் பெயர் உதிர்ந்ததை கேட்டதும் விவரிக்க இயலாத உணர்ச்சிகள் ரவிசந்த்தின் உடலை ஊடுருவிச் சென்றன.

''சம்பக்! உன்னை ராணாவுக்கு எத்தனை நாளாகத் தெரியும்?'' என்று கேட்டான்.

''குழந்தை முதல் தெரியும்.''

''அப்படியா?''

''ஆம். நான் ஒரு அனாதை; என்னை வளர்த்தவரே ராணாதான்.''

''நீ அனாதையா?''

''ஆம், என் தந்தை போரில் இறந்தார், என் தாய் * ஜோஹர் செய்து கொண்டாள்.''

ரவிசந்த் சிறிது சிந்தித்தான். பிறகு சொன்னான். ''நீ அனாதையல்ல. தாயும் தந்தையுமாக ராஜபுதனத்தின் மகாவீரனைப் பெற்றிருக்கும் நீ எப்படி அனாதையாக முடியும்?'' என்று கூறிவிட்டு, அவனும் அப்படியே தரையில் மல்லாந்து படுத்தான். ''சம்பக்'' என்று அழைத்தான் மெதுவாக.

''என்ன ரவிசந்த்'' என்று மெதுவாகக் கேட்டாள் அவள்.

''இந்தத் தரை''

''உம்.''

''குத்தவில்லை?''

''உம்.''

''பஞ்சணையைவிட நன்றாயிருக்கிறது.''

---

* தீக்குளித்தல்



''அப்படியா!''

''ஆம். இத்தனை நாள் பஞ்சணைகளில் படுத்துக் காலத்தை வீணாக்கிவிட்டேன்.''

இதற்கு சம்பக் பதில் சொல்லவில்லை. ரவிசந்த் பேசினான்.

''சம்பக்! இன்றுடன் ராணாவின் வாழ்க்கைதான் என் வாழ்க்கை. ராஜபுதனத்தின் புனிதத் தரைதான் என் படுக்கை. ஒருவேளை இந்தத்தரையில் ராணாவுக்காக என் ரத்தம் சிந்தினால் அதைவிட சொர்க்கம் எனக்குத் கிடையாது.'' இதைச் சொன்னதும் சொல்லாததுமாக ஒரு விந்தை நடந்தது. அதுதான் சொர்க்கம் என்பதை புரிந்து கொண்டான் ரவிசந்த். ''விண்ணும் மண்ணுக்கு வரும்'' என்று மனத்துள் சொல்லிக் கொண்டான். தூரத்தே இருந்து ராஜகுமாரியையும் ரவிசந்த்தையும் கவனித்துக்கொண்டிருந்த பகவான்தாஸ் துள்ளியெழுந்தான். ரவிசந்தைக் கொன்றுவிடத் தனது இடையிலிருந்து குறுவாளை வீசுவதற்கு குறியும் வைத்தான்.

# 12. மலரும் மல்லரும்

ரவிசந்த்தின் உணர்ச்சிமிகுந்த சொற்களால் மனம் நெகிழ்ந்த சம்பக் படுத்த நிலையிலிருந்து எழுந்து ரவிசந்தை நோக்கி வந்தாள். சிற்றிடை அசைய, உடலின் சிங்காரப்பகுதிகள் நெளிய நடந்து வந்த சித்தினியின் நடை அழகிலேயே சித்தத்தைப் பறிகொடுத்த ரவிசந்த், ஆடாமல் அசையாமல் படுத்த இடத்திலேயே சிலைபோல் கிடந்தான். ராஜகுமாரி அவன் படுத்திருந்த இடத்தை அணுகியதும் அவனருகில் உட்கார்ந்தாள். இம்முறை முழந்தாள்களை அவள் கட்டிக்கொண்டு முன்னும் பின்னும் அசைந்தாள். பிறகு மெதுவாக ''வீரரே!'' என்று அழைத்தாள்.

அவன் கண்கள் அத்தனை இருட்டிலும் அவள் அழகின் சிறப்பைக் கண்டன. மெல்லிய அதிக புஷ்டியில்லாத கழுத்தும், புஷ்டியான இதர எழில்களும் அவன் சித்தத்தை உலுக்கின என்றாலும், அவன் உணர்ச்சிகளைப் பெரிதும் அடக்கிக்கொண்டான். மேலும் அவளைக் கவனிக்கச் சக்தியில்லாததால் கண்களை இறுக மூடிக்கொண்டான். புறக்கண்களை அவன் மூடியதும் அகக்கண்கள் திறந்தன. அந்தக் கண்ணில் அவள் லாவண்யப் பகுதிகள் நன்றாகவே தெரிந்ததால் 'ஒரு அழகியின் லாவண்யங்களை கண் திறந்து தான் பார்க்க வேண்டும் என்ற அவசியமில்லை' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். அகக் கண்களில் அவள் கூரிய மார்புகளிரண்டும் நன்றாகவே தெரிந்தன. சேலை மறைத்த அவள் பருத்த தொடைகளும் அகக்கண்களுக்குப் புலனாயின. அவளைத் தனது கண்கள் நிர்வாணமாக்கி விடுமோ என்ற அச்சத்தால் அவன் கண்களைத் திறந்ததால் சம்பக் அவனை நோக்கி மெதுவாக நகைத்தாள்.



''ஏன் நகைக்கிறாய் சம்பக்?'' என்று ரவிசந்த் கேட்டான்.

''நான் அழைத்தேன் உங்களை. நீங்கள் பதில் சொல்லவில்லை. கண்ணை மூடுகிறீர்கள், திறக்கிறீர்கள். காரணம் புரியவில்லை'' என்றாள் சம்பக்.

''எப்பொழுது அழைத்தாய்?'' என்று அவன் கேட்டான்.

''சற்று முன்பு வீரரே என்று அழைக்கவில்லை?''

''அழைத்தாய். அது என்னையா ?''

''வேறு யார் இருக்கிறார்கள் இங்கே?''

''பகவான்தாஸ் இருக்கிறார்.''

''அவர் வீரரா?''

''இருக்கலாம்.''

''வேண்டுமென்றே ஏதோ பேசுகிறீர்கள்.''

சிறிது சிந்தித்தான் ரவிசந்த். பிறகு சொன்னான்: ''இது வரை ரவிசந்த் என்று அழைத்து வந்தாய். திடீரென வீரன் பட்டம் அளித்தால் எனக்கு எப்படிப் புரியும்?'' என்று.

சம்பக் அவனை நெருங்கி உட்கார்ந்தாள். ''உங்களைப் பெயர் சொல்லி அழைக்க எனக்குக் கூச்சமாயிருக்கிறது'' என்றாள்.

ரவிசந்த் முகத்தில் போலிக் கடுமையைக் காட்டினான். ''மீண்டும் தவறு செய்கிறாய்'' என்றான்.

''தவறா!''-அவள் குரலில் வியப்பு இருந்தது.

''ஆம். என்னை 'உங்களை' என்று அழைத்தாய்'' என்று சுட்டிக் காட்டினான் ரவிசந்த்.

''பின் எப்படி அழைப்பதாம்?'' - சம்பக்கின் பவள அதரங்கள் குவிந்தன.

''எப்படி அழைத்தால் எனக்கு இன்பமாயிருக்குமோ அப்படி அழைக்க வேண்டும்.''

''எப்படி அழைக்கவேண்டும்?'' - சம்பக் கேட்டாள். புன்முறுவலும் கொண்டாள்.

''நீ என்று அழைக்கவேண்டும்.''

''மரியாதை கூடாதாக்கும்?''

''கூடவே கூடாது.

''ஏனாம்?''

''அன்பு மேவிடும்போது மரியாதை மறைந்து விடுகிறது.''

''அப்படியானால் அடியோடு மரியாதை இன்றி.''

''மரியாதை இன்றி?''

''அடா என்றும் அழைக்கலாமா?''

''அப்படித்தான் அழைக்க வேண்டும்.''

தனது பூவுடலின் உட்கார்ந்த பகுதி அந்த ஆண் மகன் மீது நன்றாகப் படும்படி சம்பக் உட்கார்ந்தாள். அவன் கையொன்று அருகில் கிடந்ததால், அதற்கும் அவள் பின்னழகின் திண்மைக்கும் சம்பந்தம் ஏற்படவே ரவிசந்த் மிகுந்த அச்சத்தின் வசப்பட்டான். கையை எடுத்துக் கொள்ள நினைத்தான். எண்ணம் இடங்கொடுக்காததால் கையை அதே நிலையில் இருக்கவிட்டான்.

அவன் உடலில் ஓடிய உணர்ச்சிகளை அவளும் புரிந்து கொண்டிருக்கவேண்டும். அவளது உணர்ச்சிகளும் மின்னலைப் போல் அவன் உடலில் பாய்ந்து சென்ற



காரணத்தால், அந்த உணர்ச்சி அலைகளிலிருந்து விடுபட அவன் பேச்சைத் தொடர்ந்தான். ''நீங்கள் பேசுவது விசித்திரமாயிருக்கிறது'' என்றான்.

''என்ன விசித்திரம் அதில்?'' என்று ரவிசந்த் கேட்டான்.

''உங்களை அடா என்று அழைத்தால் மற்றவர்கள் என்ன நினைப்பார்கள்?'' என்று சம்பக் வினவினாள்.

''மற்றவர்களைப்பற்றி நமக்கென்ன?'' என்றான் ரவிசந்த்.

''நமக்கென்னவா?''

''ஆம்.''

''உங்களுடன் என்னையும் சேர்த்துக் கொண்டுவிட்டீர்களா?''

''உம்...'' என்று உறுமிய ரவிசந்த், ''உன்னுடன் என்று சொல்'' என்று கூறினான்.

''சரி உன்னுடன் '' - மேலே பேசத் தயங்கினாள் சம்பக்.

''சொல் மேலே.''

''என்னையும் சேர்த்துக் கொண்டுவிட்டாயா?''

''சேர்த்துக் கொள்ள இஷ்டந்தான்.'' என்று இழுத்த ரவிசந்த், உரையாடல் முறை தவறிப் போவதை எண்ணி மௌனம் சாதித்தான். பிறகு அவளது கையொன்றை எடுத்து தன் கையுடன் வைத்துக்கொண்டான். அதனால் தனது உடல் எத்தனை வேதனைப்படுகிறது என்பதை எண்ணி வியப்படைத்தாள் சம்பக். எத்தனையோ அபாயங் களில் எத்தனையோ பேர்களிடமிருந்து தப்ப வாள் கொண்டும், சில சமயங்களில் கைகளாலும் வீழ்த்தி

விருக்கும் தனக்கு அன்று, அந்த புருஷன் கை மட்டும் ஏன் இத்தனை அவஸ்தையை விளைவிக்கிறது என்று தன்னைத் தானே கேட்டுக்கொண்டாள் சம்பக்.

அவள் யோசனையில் ஆழ்ந்து விட்டதைக் கவனித்த ரவிசந்த் ''சம்பக்!'' என்று மெதுவாக அழைத்தான்.

''என்ன ரவிசந்த்?'' என்று அவள் கேட்டாள்.

''என்ன அத்தனை யோசனை?''

''அநேக விஷயங்கள் புரியவில்லை எனக்கு.''

''என்னிடம் சொல்.''

''சொல்ல முடியவில்லை.''

''சரி. இரைந்து சொல்ல வேண்டாம். காதுக்கருகில் சொல்.''

அவள் அதைக் கேட்டும் சிறிது சிந்தித்தாள். பிறகு அவனை நோக்கி நன்றாகத் திரும்பி குனிந்தாள். அவள் காதில் சேதி சொல்ல, சொர்க்கத்துக்குச் சென்ற ரவிசந்த், அவள் கழுத்தின் சுகந்தம் அவனை எங்கோ கொண்டு சென்றது. அவள் நன்றாக குனிந்து காதிடம் உதடுகளை கொண்டுபோனாள். ஆனால் உதடுகள் பேச வில்லை, உணர்ச்சிகள் பேசின.

அந்தச் சமயத்தில் சம்பக்கை ஒரு கையால் தூக்கிய வண்ணம் எழுந்து உட்கார்ந்தான் ரவிசந்த். அதே விநாடி யில் பகவான்தாஸின் குறுவாள் அவனை நோக்கி சீறி வந்தது. அந்த குறுவாள் வீச்சிலிருந்து சாதாரண வீரன் எவனும் தப்பியிருக்க முடியாது. ஆனால் அவன் வாளைச் சந்தித்த இன்னொரு குறுவாள் தனது வேகத்தால் அந்தக் குறுவாளை மலைச்சரிவில் உருட்டிவிட்டது. இதையடுத்து சம்பக்கை தனது இடது கையால் அணைத்தவண்ணம் வேகமாக எழுந்து விட்ட ரவிசந்த் ''பகவான்தாஸ்!



அதைப்போல் இன்னொரு குறுவாளும் என்னிடமிருக் கிறது'' என்று தனது இடையைத் தொட்டுக் காட்டினான்.

''அட துரோகி! உன் குறுவாளைக் கண்டு நான் அஞ்சவில்லை. இதோ உன்னை என் கைகளால் நெருக்கி பிண்டமாக அடித்துவிடுகிறேன்'' என்று சீறிக் கொண்டு தனது பூதாகாரமான உடலுடன் வெகுவேகமாக வந்தான்.

''சம்பக்! சிறிது விலகி நில்'' என்று அவளைத் தன் பிடியிலிருந்து அகற்றிய ரவிசந்த், பகவான்தாஸை எதிர் கொள்ளத் தயாராக நின்றான்.

''ரவிசந்த்!'' - அச்சத்துடன் அழைத்தாள் சம்பக்.

''என்ன சம்பக்?''

''பகவான்தாஸ் ராஜபுதனத்தின் மிகச் சிறந்த மல்லர் களில் ஒருவர்'' என்றாள்.

''அவர் மற்போர் திறனை அறிய எனக்கும் ஆவலா யிருக்கிறது'' என்று கூறிய ரவிசந்த், தனது கைகளை மறைத்த அங்கியின் முகப்புகளைச் சுருட்டிக் கொண்டான். ''வா! பகவான்தாஸ்'' என்று அழைக்கவும் செய்தான்.

# 13. சொல் நின்றது, செயல் தொடர்ந்தது!

உயரமும் பருமனுமாக பெரிய ராட்சஸன் போல் ரவிசந்தை நோக்கி வந்த பகவான்தாஸ் திடீரென நின்று தனது அங்கியைக் கழற்றிவிட்டெறிந்து, இருமுறை தனது புயங்களை வளைத்து அவை எழுப்பிய தசைப் பிண்டங்களைப் பார்த்து மகிழ்ந்தான். பிறகு கைகளிரண்டையும் நீட்டிய வண்ணம் ரவிசந்தை அணுகினான். பகவான்தாஸ் அங்கியைக் கழற்றிவிட்டதால் தனது அங்கியையும் கழற்றி ''இந்தா பிடித்துக்கொள்'' என்று அதை சம்பக்கிடம் வீசிய ரவிசந்த் தனது மிக ஒல்லியான உடலை எதிரி நன்றாகப் பார்க்கும்படி காட்டினான். அவன் உடலில் எங்கும் அதிக சதைப் பிடிப்பைக் காணாததையும், மார்பு எலும்புகள், விலா எலும்புகள் நன்றாகத் தெரிந்ததையும் கண்ட சம்பக் ''இவரை பகவான்தாஸ் நொறுக்கி எறிந்துவிடுவானே''என்ற பயத்தால் சிறிது நடுங்கவும் செய்தாள்.

இத்தனைக்கும் ரவிசந்த் பகவான்தாஸை அடியோடு லட்சியம் செய்யாமல் எதிர்கொண்டான். பகவான்தாஸ் தன்னை வளைக்க நீட்டிய உலக்கைக் கைகளுக்குள் தானாகவே புகுந்தான். அப்படி ரவிசந்த் புகுந்ததால் பயங்கரமாக நகைத்த பகவான்தாஸ் தனது கைகளால் எதிரியின் மெல்லிய தேகத்தை வளைத்து இறுக்கினான். இறுக்கிய வேகத்தில் ரவிசந்தின் எலும்புகள் மளமளவென முறிந்துவிடும் என்ற எண்ணத்தில் அந்த ஒல்லியான தேகத்தை இருபுறமும் ஆட்டவும் செய்தான். ஆனால் அவன் முகத்தில் திடீரென வியப்பு தோன்றியது. தனது அத்தனை இறுக்கலும் பயனற்றுப் போனதை உணர்ந்



தான். 'இவன் உடலில் தெரிவது எலும்புகளல்ல, அத்தனையும் எஃகுப் பாளங்கள், இரும்பினும் கடினமானவை' என்று தெரிந்து கொண்டதால், சிறிது எச்சரிக்கையும் அடைந்து தனது போர் முறையை மாற்ற எண்ணினான். ஆனால் போர் முறையை மாற்றியது அவனல்ல, ரவிசந்தே மாற்றினான்

பகவான்தாஸின் உலக்கை கைகளுக்குள் தானாகவே வலியப் புகுந்த ரவிசந்த் தனது கைகளை முஷ்டிபிடித்து எதிரியின் பெரிய தொந்தியிலும் இரு விலாக்களிலும் குத்தினான். ஏதோ இரும்பு உருண்டைகள் பாய்வது போலிருந்த அந்தக் குத்துக்களால் ''அப்பா!'' என்று வேதனைக்குரல் எழுப்பினான் பகவான்தாஸ். அடுத்து ரவிசந்த், பகவான்தாஸின் ஒரு கையை தனது இருகைகளாலும் குறுக்கே இணைத்து விசிறவே தள்ளாடித்தள்ளாடி பின்னடைந்த பகவான்தாஸ் தடாலென்று தரையில் விழுந்தான். இருப்பினும் விழுந்த வேகத்தில் எழுந்து ரவிசந்தின்மீது பாய்ந்து அவன் கழுத்தைப் பிடித்து நெரித்தான். ரவிசந்துக்கு மூச்சு நின்றுவிடும் போலிருந்தது. பகவான்தாஸ் வெறும் மாமிசப் பிண்டமல்ல வென்பதையும், பலத்த அவன் தசைகளுக்குப் பதில் சொல்வதும் அத்தனை எளிதல்லவென்பதையும் புரிந்து கொண்ட ரவிசந்த் மற்போரில் புதுமுறைகளைக் கையாள முற்பட்டான்.

தனது கழுத்தை பகவான்தாஸ் நெரித்த அதே சமயத்தில் தனது கையொன்றை மேலே எழுப்பி எதிரியின் வலது கண்ணில் பலமாகக் குத்தினான். பிறகு மூக்கிலும் முட்டியால் அடித்தான். பகவான்தாசுக்கு ஒரு கண் தெரியாததாலும், உள் மூக்கு உடைந்து ரத்தம் கொட்டியதாலும் ரவிசந்தின் கழுத்தை நெறித்த கைகளை லேசாக தளர்த்தினான். அந்தசமயத்தை ரவிசந்த் பயன்படுத்திக்கொண்டு கைகளால் பகவான்தாஸின் வயிற்றுக்குச் சிறிது கீழே

இடையில், அதாவது சிறுகுடல் பிரதேசத்தில் படபட வென்று நான்குமுறை குத்தினான். சிறுகுடல் பகுதியில் பாய்ந்த இரும்பு முஷ்டிகளால் ஏற்பட்ட வலி கண்களைச் சுழற்றின. அடுத்து பகவான்தாஸின் கைகளின் பிடிகளை அனாயாசமாக அகற்றிய ரவிசந்த் எதிரியின் கால்களுக் கிடையில் தனது ஒரு காலைக்கொடுத்துத் திருகவே ஒரு முறை சுழன்று தரையில் மீண்டும் விழுந்தான் பகவான் தாஸ்.

இம்முறை அவன் நீண்ட நேரம் எழுந்திருக்கவே யில்லை. விழுந்த நிலையில் கிடந்தான். அவனது ஒரு கண் கறுத்து மூடியிருந்தது மூக்கின் ரத்தப்பிரவாகம் நிற்கவில்லை. தவிர அவன் பருமனான கால்களும் உதறின. இவற்றையெல்லாம் தூரத்திலிருந்து பார்த்த சம்பக் பகவான்தாஸை அணுகி, அவன் பக்கத்தில் உட் கார்ந்து ''பகவான்தாஸ்! பகவான்தாஸ்!'' என்று இரு முறை அழைத்தாள். பகவான்தாஸ் ஒற்றைக் கண்ணை திறந்து அவளை நோக்கினான். உதடுகளை அசைத் தான். ஆனால் பேசமுடியவில்லை அவனால் என்பதை உணர்ந்து கொண்ட சம்பக், அச்சம் ததும்பும் கண்களுடன் ரவிசந்தை நோக்கினாள்.

''கவலைப் படாதே சம்பக். இவரை சில விநாடிகளில் எழுப்பி விடுகிறேன்'' என்று கூறிய ரவிசந்தும், அவள் பக்கத்தில் உட்கார்ந்து பகவான்தாஸின் காலில் இரண்டு மூன்று இடங்களில் வருடினான்; சிறிது லேசாக அழுத்தினான். இந்த சைத்தியோபசாரத்தால் பகவான் தாஸின் கால்களின் உதறல் நின்றது. ஆசுவாசப் பெரு மூச்சுவிட்டான் பகவான்தாஸ். ''சம்பக்! இன்னும் எனக்கு உயிர் இருந்தால், அதற்கு நீதான் காரணம்'' என்றும் சொன்னான்.

''நானா!'' வியப்புடன் வினவினாள் சம்பக்.



''ஆம். உன் மீதுள்ள அன்பினால் தான் இவன் என்னைக் கொல்லாமல் விட்டான்'' என்று விளக்கினான் பகவான்தாஸ்.

''நீங்களல்லவா அவரைக் கழுத்தை முறித்துக் கொல்லப் பார்த்தீர்கள்?'' என்று கேட்டாள் சம்பக்.

''கொல்ல முயன்றேன். ஆனால் முடியவில்லை. இவன் விஷயம் அப்படியல்ல. இஷ்டப்பட்டால் இவன் என்னைக் கொன்றிருக்கலாம். இவன் மற்போர் முறை எனக்குப் புரியவில்லை. நானறிந்த மற்போர் சாஸ்திரத்துக்கு முற்றிலும் மாறாயிருந்தது. எங்கோ தட்டுகிறான். மின்னல்போல் ஒரு நடுக்கம் என் உடலில் பாய்ந்து செல் கிறது. பிறகு சிறுகுடலைக் குத்தினான். பிராணன் போகிறது. இவன் ஒல்லியாயிருக்கிறானே என்று பார்க் காதே. இவன் உடல் இரும்பு.'' - உடல் என்று மேலும் பேசப்போன பகவான்தாஸை அடக்கினான் ரவிசந்த்.

''பகவான்தாஸ்! மற்போர் முறையைப் பற்றிப் பிறகு விவாதிப்போம். முன்னால் உங்கள் கண்களையும் மூக்கை யும் கவனிப்போம்'' என்று கூறிவிட்டு, ''சம்பக்! பக்கத்தில் இருக்கும் சிறு அருவியில் ஒரு துணியை நனைத்து எடுத்து வா'' என்றான்.

அவன் சொற்படியே ஒரு துணியை நனைத்து எடுத்துக் கொண்டு சம்பக் வந்தாள். ''இவர் மூக்கிலும் காயமுற்று மூடியிருக்கும் கண்ணிலும் நீரைப்பிழி'' என்று ரவிசந்த் கூற அப்படியே செய்தாள் சம்பக்.

நீரினால் கழுவப்பட்ட மூக்கை சிறிது அழுத்திவிட்டு ரத்த நாடிகளைத் தேக்கி, கண்களைத் திறந்து வாயால் இருமுறை ஊதினான். ''இவ்வளவுதான் இப்பொழுது முடியும். மீதியை உதயபூரில்தான் கவனிக்க வேண்டும்'' என்ற ரவிசந்த் ''எழுந்திரு பகவான்தாஸ்'' என்றான்.

தானும் உட்கார்ந்த நிலையிலிருந்து எழுந்து சம்பக்கையும் எழுந்திருக்கச் செய்தான்.

எழுந்து நின்ற பின்பும் பகவான்தாஸின் கால்கள் ஒரு நிலைக்குள் அடங்கவில்லை. ''சற்று தூரம் நடந்துவிட்டு வாருங்கள். கால் திடப்பட்டு விடும்'' என்று யோசனை சொன்னான் ரவிசந்த்.

அவன் சொற்படியே சிரமப்பட்டு நாலடி நடந்த பகவான்தாஸ் பிறகு சாதாரணமாக நடக்கத் துவங்கினான். அவன் கால்களில் ரத்தம் சுழன்றதால் கால்கள் திடப்பட்டன. அதனால் துணிவடைந்த பகவான்தாஸ் எட்ட இருந்த மரங்களை நோக்கி சிறிது வேகமாகவே நடந்தான்.

அப்படி அவன் நடந்து மறைந்ததும் முன்பு தான் படுத்திருந்த மரத்தடிக்குச் சென்று மரத்தின் மீது நன்றாகச் சாய்ந்து கொண்ட சம்பக் ''ரவிசந்த்! ரவிசந்த்!'' என்று அழைத்தாள்.

ரவிசந்த் இருந்த இடத்திலிருந்து திரும்பி சம்பக்கை நோக்கி ''என்ன சம்பக்?'' என்று வினவினான்.

''இப்படி வா'' என்று அழைத்தாள் சம்பக்.

''எதற்கு?'' என்று கேட்டான் ரவிசந்த்.

''சொல்கிறேன் வா'' என்றாள் அவள்.

''பகவான்தாஸின் மூக்கிலிருந்து வடிந்த ரத்தம் என் மார்பை நனைத்திருக்கிறது. அதை அருவியில் அலம்பி விட்டு வருகிறேன்'' என்றான் அவன்.

''வேண்டாம் அப்படியே வா'' -அவள் குரலில் கண்டிப்பு இருந்தது.



மேற்கொண்டும் பேசாமல் அவள் இருந்த இடத்தை ரவிசந்த் அணுகியதும் சம்பக், ரவிசந்தின் கழுத்தில் தனது இருகைகளையும் போட்டு இழுத்து அவன் மார்புடன் தனது மார்பை இணைத்துக்கொண்டாள்.

''சம்பக்! பைத்தியமே. உன் உடை ரத்தமாகிவிடும்.''

''ஆகட்டும்.''

''ஏன்?''

''அது காவியம் காட்டிய வழி.''

''என்ன சொல்கிறாய்?''

''ராமன் காயத்தோடு உடம்பெல்லாம் ரத்தம் பெருகப் போர்க்களத்திலிருந்து வந்ததும் சீதை அந்த ரத்தத்துடன் ராமனை அணைத்துக்கொண்டாள். இது பாரத வீரமாதரின் பழக்கம். சிறந்த பரம்பரைச் செல்வம்'' என்று சொன்ன சம்பக் அவனை மேலும் இறுக்கினாள். தனது கஞ்சுகத்தையும் சிறிது தளர்த்தினாள்.

''இதுவும் ராமாயணமா?'' என்று கேட்ட ரவிசந்த் அவள் இதழ்களுக்கு முத்திரை பொறிக்கக் குனிந்தான்.

இதழ்கள் கூடுமுன்பு சொன்னாள் சம்பக், ''ஆம். இதுவும் அந்த மகாகாவியந்தான். காவியத்தலைவனை காவியத்தலைவி வரவேற்ற முறை இதுதான்'' என்று சொல்லி, வடமொழிக் கவிதை யொன்றையும் சொன்னாள். பிறகு இதழ்கள் கூடியதால் இருவரும் சொல் இழந்தார்கள். செயல் இழக்கவில்லை.

# 14. அவன் கதை

பகவான்தாஸை மற்போரில் வீழ்த்தி, பிறகு அவனுக்கு உதவி செய்து எழுந்து நடக்கவிட்ட ரவிசந்தை அழைத்த சம்பக் அவனை மார்புறத் தழுவிக்கொண்டு அதற்கு ராமாயணத்தையும் உவகையாகக் கூறியது அதிக விசித்திரமாயிருந்தாலும், தாங்கள் இருவரும் சந்தித்த ஒன்றரை நாட்களுக்குள் அத்தகைய நெருக்கம் ஏற்பட்டது அதைவிட விசித்திரமாயிருந்தாலும், அவற்றை யெல்லாம் யோசிக்கும் நிலையில் இல்லை ரவிசந்த். அந்த அழகி தானாகவே வலிய அளித்த அழகிய உடலை ஆர்வத்துடன் இறுக்கிய அந்த ராஜபுத்ர வாலிபன், அவள் செம்பருத்தி இதழ்களும் தன் உதடுகளுடன் இணைந்துவிடவே, சொல்லை இழந்தான், சுய நினைப்பை இழந்தான், சூழ்நிலையையும் மறந்தான். அவன் உணர்ச்சிகள், தன் மீது இழைந்த அந்த பூவுடலின் இழைப்பில், அது அளித்த இன்ப லாகிரியில் உழன்று கொண்டிருந்தன.

மரத்தடியில் சாய்ந்து நின்ற அந்த மங்கையின் மென்மையும் திண்மையும் வாய்ந்த அழகுகள் அவனை பெரிய இம்சைக்குள்ளாக்கவே, தன்னை சமாளித்துக் கொள்ள அந்த வாலிப வீரன், அவள் இதழ்களுக்கு விடுதலையளித்து தனது முரட்டு உதடுகளை அவள் நெற்றியில் புதைத்தான். இதைக்கண்ட சம்பக் லேசாக நகைத்தாள். ''இது சரியல்ல'' என்று முணுமுணுக்கவும் செய்தாள்.

''எது சரியில்லை?'' என்று ஏதோ கேட்க வேண்டுமென்பதற்காகக் கேட்ட ரவிசந்த், அவள் இடையில் தனது



இரு கைகளையும் தவழவிட்டு தன்னை நோக்கி நன்றாக இழுத்துக்கொண்டான்.

இந்த அவன் செய்கையால் நிலைமை தீவிரப்பட்டதே தவிர எந்த விதத்திலும் குறையவில்லையென்பதை உணர்ந்த சம்பக், ''இதுதான் சரியல்ல'' என்று முணுமுணுத்தாள், அவன் மார்பில் சாய்ந்தவண்ணம்.

''எது?''

''நீங்கள் நெற்றியில் முத்தமிடுவது.''

''ஏன்''

''நெற்றியில் தகப்பனார் சகோதரர்தான் முத்தமிடுவார்கள்.''

''அப்படியா?''

''ஆம்''

''தவறுதான்'' என்ற ரவிசந்த் தனது இதழ்களை அவள் நெற்றியிலிருந்து கழுத்துக்கு மாற்றினான்.

சொர்க்கத்துக்குச் சென்றுகொண்டிருந்தாள் சம்பக். ''சரிசரி! அத்துமீறிப் போகவேண்டாம்'' என்று அவனை எச்சரித்துவிட்டு, மரத்தின் அடியில் உட்கார்ந்து விட்டாள்.

இதனால் அவன் லேசாக சுயநிலை அடைந்தான். ஆகவே, அவளுக்கு எதிரில் சற்று தள்ளி உட்கார்ந்தான். சம்பக்கின் கண்கள் அப்பொழுது அவனை நோக்கவில்லை; தரையை நோக்கிக்கொண்டிருந்தன. உணர்ச்சிகளை அவள் ஓரளவு கட்டுப்படுத்திக் கொண்டதால் தரையை நோக்கியே பேசலானாள். ''இந்த திடீர் மாறுதல்

உங்களுக்கு விசித்திரமாயிருக்கும்'' என்று மெதுவாகச் சொன்னாள்.

''ஆம்'' என்று ரவிசந்தும் ஒப்புக்கொண்டான். அவள் பேச்சில் சகஜத்தன்மை மறைந்து மரியாதை துளிர்த்து விட்டதையும் அவன் கவனிக்கத் தவறவில்லை.

''இதை, இந்த மாறுதலை, நான்கூட எதிர்பார்க்க வில்லை. ஆனால் சித்தர் வார்த்தை எப்படிப் பொய்யாகும்'' என்று சொன்னாள்.

''சித்தரா?'' என்று வியப்புடன் வினவினான் ரவிசந்த்.

''எனக்குப் பெயர் வைத்தாரே அந்த சித்தர்''

''அவர் என்ன சொன்னார்?''

''உன்னையும் மயக்க ஒருவன் வருவான். அவன் வரும் போது உன் உணர்ச்சிகள் அசுர வேகத்தில் உந்தப்படும். அவன்தான் உன் கணவன் என்பது உனக்கே தெரியும் என்று சொன்னார்; அது இன்று உண்மையாயிற்று. யாரும் நெருங்க அஞ்சும் சம்பக் தானாக உங்களிடம் வலிய வந்தாள்...''- இதற்கு மேல் அவள் பேசவில்லை.

ரவிசந்த் தீவிர சிந்தனையில் இறங்கினான். பிறகு தனது இடையிலிருந்து குறுவாளொன்றை எடுத்து முத்த மிட்டான். அதை சம்பக்கிடம் நீட்டி ''இதை வைத்துக் கொள். நானில்லாத சமயத்தில் இது உன்னைப் பாது காக்கும். இதற்கு ஒரு சரித்திரம் இருக்கிறது'' என்று கூறினான்.

சம்பக் அதை வாங்கிப் புரட்டிப் புரட்டிப் பார்த் தாள். பிறகு அதில் ஒரு பெண்ணின் பெயர் பொறிக் கப்பட்டிருந்ததையும் கவனித்தாள். ''ராஜி ராஜி'' என்று இருமுறை மெல்லச் சொன்னாள்.

''அந்தப் பெயர் எனது தாயின் பெயர்'' என்று சுட்டிக் காட்டினான் ரவிசந்த்.



''அப்படியா!'' என்றாள் சம்பக்.

''அவள் இறக்கும் தருவாயில் ஒரு சபதம் செய்யச் சொன்னாள். 'ரவிசந்த்! என்னைப்போல் தன்னை தியாகம் செய்து கொள்ளக்கூடிய ஒரு ராஜபுத்ரப் பெண்ணிடம் இதைக் கொடு. அவளை திருமணம் செய்துகொள்' என்று உத்தரவிட்டாள் என்று விளக்கிய ரவிசந்த், ''சம்பக்! இதை அவள் சொன்ன சமயத்தில் அவள் ஆவி பிரிந்து கொண்டிருந்தது. இந்த கத்தியால் அவள் இரு ராஜபுத்ர வீரர்களை குத்திப்போட்டாள்'' என்றான்; இந்த இடத்தில் சிறிது நிதானித்தான்.

''ராஜபுத்ர வீரர்களையா!'' என்று வியப்புடன் அவள் வினவினாள்.

''ஆம். அவர்கள் மொகலாயப் படையில் இருந்த தாலும் ராஜபுதனத்தில் புகுந்து அட்டூழியங்களை விளைவித்ததாலும் குறுவாளால் அவர்களைக்கொன்றாள். அவர்களில் ஒரு வீரன் ' எறிந்த ஒரு குறுவாள் அவள் குருதியை, ஆவியைக் குடித்தது. ஆவி துடித்த அந்த சமயத்தில் இந்த சத்தியத்தை என்னிடம் வாங்கிக்கொண் டாள். 'ரவிசந்த்! உனக்கு மனைவியாக வாய்ப்பவள் ராஜ புதனத்திற்கு உயிர்விடக்கூடியவளாக இருக்கட்டும் என்றாள் என் தாய். அதுதான் அவள் கடைசி வார்த்தை'' என்ற ரவிசந்த் உணர்ச்சிப் பெருக்கால் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டான். பெருமூச்சு ஒன்றையும் வெளியிட்டான்.

சம்பக் அவன் கொடுத்த குறுவாளைத் தனது இடையில் செருகிக்கொண்டாள். மரத்தடியிலிருந்து மெல்ல நகர்ந்து அவனிருப்பிடம் வந்து அவன் தலையை இழுத்துத் தனது மார்புடன் அணைத்துக்கொண்டாள். ''ரவிசந்த்! கலங்காதே! ராஜபுத்ரர்கள் துக்கங்களைப் பெறுவதற்கும் தாங்குவதற்குமே பிறந்தவர்கள். ஆனால் ஒன்று புரியவில்லை எனக்கு. அப்பேர்ப்பட்ட தாயின்

வயிற்றில் பிறந்த நீ எப்படி மொகலாயர் படையில் சேர்ந்தாய்?'' என்று வினவினாள்.

''அங்குதான் விதி விளையாடிவிட்டது. ராஜபுத்ரர்களுக்கும் அக்பருக்கும் நடந்த போரில் நான் குற்றுயிராகக் கிடந்தேன். என்னைத் தீர்த்துவிட இரு மொகலாய வீரர்கள் வாட்களை ஓங்கினார்கள். தற்செயலாக ரணகளத்தை பார்வையிட்ட அக்பர் அவர்களைத் தடை செய்தார். தமது யானை மீதே என்னையும் ஏற்றிக்கொண்டு சென்றார். அரண்மனையிலேயே எனக்குச் சிகிச்சியையும் செய்தார். எனக்கு சிறிது வலு வந்ததும் அக்பர் நான் படுத்திருந்த அறைக்கு வந்தார். கட்டிலில் என் பக்கத்தில் உட்கார்ந்தார். ''வீரனே இப்பொழுது எப்படியிருக்கிறது?'' என்று விசாரித்தார்! 'குணமாகிவிட்டது' என்று சொல்லி போக விடைகேட்டேன். விடை கொடுத்தார். 'உனக்கு வழிச் செலவுக்கு உனக்கு மருத்துவம் செய்தவர் பணம் கொடுப்பார்' என்றும் சொன்னார். அவர் கருணை என் வாயைக் கட்டிவிட்டது. என் கண்களில் நீர் திரண்டது. 'வீரனான உன் கண்களில் நீர் வரக்கூடாது' என்று புன்சிரிப்புடன் சொன்னார் அக்பர். நான் அவர் கைகளைப் பிடித்துக் கொண்டேன். அவர் என் நெற்றியை ஆதரவுடன் தடவிக் கொடுத்தார். 'இங்கு பணிபுரிய இஷ்டமிருந்தால் பிருத்விராஜிடம் செல்லலாம்' என்று கூறிச் சென்றுவிட்டார். பிறகு நான் அவரைப் பார்க்கவில்லை. பிருத்விராஜிடம் வேலைக்கமர்ந்தேன். பலபோர்களில் ஈடுபட்டேன். புதுப் புதுப்போர் முறைகள் பழகினேன். மற்போரும் நான் மொகலாயரிடம் பழகியதுதான். இத்தனையும் கற்றேன். ஆனால் மனநிம்மதியில்லை. பிறகு அக்பரின் நவரோஜாவைப் பற்றி கேள்விப்பட்டேன். அக்பரை வெறுக்க முற்பட்டேன். மகாவீரனும் கருணைவள்ளலுமானஅக்பர் கேவலம் சிற்றின்ப ஆசையால் எத்தனை இழிநிலைக்கு வந்துவிட்டார் என்று நினைக்க நினைக்க என் நெஞ்சம் குமுறிக் கொண்டிருந்தது. சமயம் அகப்பட்டதும் டில்லியிலிருந்து



இங்கு வந்தேன்.'' என்று தனது கதையைச் சொன்ன ரவிசந்த் சட்டென்று உட்கார்ந்த நிலையிலிருந்து எழுந்தான்.

பிறகு ஆகாயத்தை நோக்கினான். ''வெள்ளி முளைத்து விட்டது. சம்பக், கிளம்பு நாம் புறப்படுவோம்'' என்று கூறி சரசரவென்று நடந்து, எட்ட புல்லை மேய்ந்து கொண்டிருந்த அவள் புரவியை இழுத்து வந்தான். அவள் இடுப்பைப் பிடித்து குழந்தையைத் தூக்குவதுபோல் தூக்கி புரவிமீது அவளை உட்கார வைத்து சேணத்தையும் அவள் கைகளில் திணித்தான். ''சந்தர்! சந்தர்! சந்தர்!'' என்று கூறி, அது வந்ததும் அதன்மீது தாவி ஏறினான். அடுத்து 'பகவான்தாஸ்! பகவான்தாஸ்!' என்று குரல் கொடுத்தான்.

இவர்களுக்கு முன்பே தனது புரவியில் ஏறிக்கொண்டிருந்த பகவான்தாஸ் மலைக்கூட்டத்தின் மறைவிலிருந்து வெளியேவர மூன்று புரவிகளும் மலை உச்சியை நோக்கி ஏறமுற்பட்டன.

நீண்ட நேரம் மௌனமாயிருந்த பகவான்தாஸ் ''இந்த மலைமீதுஏறி மறுபுறம் இறங்கினால் உதயபூர் சமவெளி வரும். உச்சியிலிருந்தே உதயபூர் தெரியும்'' என்று கூறினான். அத்துடன் சொன்னான்: ''அங்கு சென்றதும் உங்களுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இருக்காது. ராணாவிடம் நீங்களே சகலத்தையும் சொல்லுங்கள்'' என்று.

அவன் குரலிலிருந்த வெறுப்பையும் சினத்தையும் ரவிசந்த், சம்பக் இருவருமே கவனித்தார்கள். இருவரும் ஒருவரையொருவர் பார்த்துப் புன்முறுவலும் செய்து கொண்டார்கள்.

# 15. ராணா கொடுத்த கடிதம்

அந்த மலைக்காட்டிலிருந்து கிளம்பிய மூவரும் எதும் பேசாமல் நீண்ட நேரம் மௌனமாகவே பயணம் செய்தார்கள் என்றாலும் அவர்கள் மூவர் மனங்களிலும் மூன்று விதமான எண்ணங்கள் உலவிக் கொண்டிருந்தன. அங்கிருந்து மலை உச்சிக்குச் செல்லும் பாதை மிகக்கடினமாயிருந்ததாலும், சில சமயங்களில் ஒருவர் பின் ஒருவராய் பயணம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் இருந்ததாலும், அந்த கஷ்டங்களை அவர்கள் உள்ளத்தில் ஓடிய உணர்ச்சிகளும் எண்ணங்களும் அடியோடு அகற்றியே விட்டதால், சர்வ சகஜமாகவே பயணம் நடந்தது.

பயணிகள் மூவரில் பகவான்தாஸின் மனமே பெரிய எரிமலையாயிருந்தது. அன்றிரவு தனது கண்ணெதிரில் நடந்த சம்பவங்களை நினைத்து நினைத்து அவன் துன்பத்தில் ஆழ்ந்திருந்தான். மிக ஒல்லியாய் குச்சியைப் போலிருந்த ரவிசந்த் குண்டோதரனான தன்னை அனாயாசமாக மற்போரில் வீழ்த்தியதை நினைத்து ''இது எப்படி சாத்தியம்?'' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். அவனை ஒரே பிடியில் இறுக்கி அவன் எலும்புகளை நொறுக்கிப் போடலாமென்று தான் நினைத்தது போக, அவனிடமிருந்து பிழைத்தால் போதுமென்ற நிலை ஏற்பட்டதை நினைக்க அவன் பெரும் பிரமிப்பை அடைந்தான். அந்த ஒல்லிக்கட்டை தன் வயிற்றில் குத்திய இடங்களில் அப்பொழுதும் மரணவலி இருந்ததை எண்ணி ரவிசந்தின் கைகள் இரும்பினால்தான் செய்யப்பட்டிருக்க வேண்டுமெனத் தீர்மானித்தான். தான் தோல்வியுற்ற பின்பு மற்ற இருவரையும் தனியாக விட்டுத் தோப்பின் மறைவில் படுத்திருந்தபோது அவர்கள் கொஞ்சிக் குலாவி



யதையும், ரவிசந்த் அவளிடம் ஏதோ ஒரு குறுவாளைக் கொடுத்ததையும் நினைத்துப் பார்த்த பகவான்தாஸ், அந்தக் குறுவாள் அப்பொழுதும் ராஜகுமாரியின் இடையில் செருகப்பட்டிருந்ததையும் கவனித்து, இருவருக்கும் சிநேகம் அத்துமீறி விட்டதை உணர்ந்ததால் பெருமூச்சு விட்டான். அப்பொழுது மலை உச்சிப்பாதை செங்குத்தாகச் சென்றதாலும், பகவான்தாஸின் உடல் பளுவைத் தாங்கமுடியாததாலும் அவன் புரவியும் புஸ்புஸ் என்று பெருமூச்சு விட்டது. புரவியின் சிரமத்தை கவனிக்காத பகவான்தாஸ், ''ராணாவிடம் சென்றதும் இந்த ரவிசந்தின் சாயம் வெளுத்துவிடும்'' என்று தனக்குள் சொல்லி சந்தோஷப்பட்டுக்கொண்டான்.

பகவான்தாஸின் எண்ணங்களுக்கு முற்றும் மாறாக இருந்தது, ரவிசந்தின் எண்ணங்கள். யாருக்கும் கிட்டாத ஒரு ரத்தினம் தனக்குக் கிடைத்திருப்பதை எண்ணி குதூகலப்பட்ட ரவிசந்த், தான் அவளை அடைய எந்த விதத்தாலும் தகுதியற்றவன் என்பதையும் உணர்ந்திருந்தான். 'ராஜபுத்ரர்கள் மானத்தைக் காக்க தலைநகர் இழந்து, நாடிழந்து, சுகமிழந்து அலைந்துவரும் ராணா பிரதாப்பின் மகளெங்கே, அக்பருக்கு அடிமையாக- இஸ்லாத்தின் கையாளாக, சர்வ போகத்தில் டில்லியில் வாழ்ந்த நானெங்கே?' என்று தன்னைத்தானே கடிந்து கொண்டான். தனது தகுதியை மறந்து சம்பக்கை தான் அணைக்க முற்பட்டதும், துணிந்ததும் எத்தனை ஈனமான செய்கை என்பதையும் நினைத்துப் பார்த்தான். அவளை மனையாளாக மனத்தில் வரித்துதனது தாயின் குறுவாளையும் அவளிடம் கொடுத்த தனது மடமைக்கு இணையாக எதை உலகத்தில் சொல்லமுடியும் என்று உள்ளூரக் கேட்டுக்கொண்டு மனமும் நொந்தான். இதுவரை செய்த தவறுகளை இனி செய்யக்கூடாதென்றும், உதயபூர் சென்றதும் ராணாவிடம் !சொல்லிக்கொண்டு திரும்பவும் டில்லிக்கு ஓடிவிட வேண்டுமென்றும் தீர்மானமும் செய்து

கொண்டான். அந்த தீர்மானம் அவனுக்கு ஓரளவு மனச் சாந்தியையும் அளித்தது. தான் கடக்க முயல்வது, ஓட எண்ணுவது கடினமான பாதை என்றும் சொல்லிக் கொண்டான். அவன் புரவியும் உச்சியை எட்டிக்கொண்டிருந்ததால் கடினப் பாதையால் பெரிதாக மூச்சும் விட்டது.

சம்பக்கின் மனத்தைப் பற்றி என்ன சொல்ல? அவள் இன்பத்தின் மடியில் கிடந்தாள். திராவிடச் சித்தர் சொன்னது எத்தனை சரியாகப் போய்விட்டது' என்று எண்ணினாள். 'என்னைத் தேடித்தான் இவர் வந்திருக்க வேண்டும். விதிதான் இவரை டில்லியிலிருந்து கொணர்ந்திருக்கிறது. இல்லாவிட்டால் யாரிடமும் பாயாத என் மனம் இவரிடம் பாயுமா' என்று நினைத்தாள். நினைப்பினால் பூரித்தாள். 'இத்தனை ஒல்லியாயிருப்பவர் பகவான்தாஸை மற்போரில் மல்லாத்தி விட்டாரே, அது எப்படி? இரும்புக் கைகளோ இவருக்கு? அல்லது மந்திரம் தெரியுமா? மந்திரமாகத் தானிருக்க வேண்டும். இல்லாவிட்டால் என்னை இத்தனை சீக்கிரம் வசீகரித்து இழுக்க முடியுமா? இவரிடம் தோற்றது பகவான்தாஸ் மட்டுமா? நானும் தானே?'என்றெல்லாம் எண்ணினாள். 'அத்துடன் மானத்தைக் காத்துக்கொள்ள அவர் அன்னை உபயோகித்த குறுவாளை என்னிடம் கொடுத்தார். உனக்குத் துணையாளாக வாய்ப்பவள் ராஜபுதனத்துக்கு உயிரை விடக்கூடியவளாக இருக்கட்டும் என்று அன்னை சொன்னதாகச் சொன்னாரே, அப்படியானால் என்னை மனைவியாக வரித்து விட்டார். இதில் என்ன விசித்திரம்? நானுந்தான் அவரைக் கணவராக வரித்துக்கொண்டேன்' என்று நடந்த சம்பவங்களை எண்ணி மகிழ்ந்தாள். அவள் புரவியும் மலைஉச்சிப் பாதையை லட்சியம் செய்யாமல் அனாயசமாகத் தாவிச் சென்றது.

இப்படி பற்பல எண்ணங்களுடன் பயணம் செய்த வரூரும் மலைஉச்சியை அடைந்தபோது, பொழுது



நன்றாகவே விடிந்து விட்டதால், மலை இறக்கத்தில் தூரத்தெரிந்த சமவெளியில் உதயபூர் பார்வைக்கு மிக அழகாக இருந்தது. சித்தூரைக் கோட்டைவிட்ட ராணா உதயசிம்மன் வீரத்தில் முன்பின்னிருந்தாலும் நகர அமைப்பில் வல்லவனென்பதை நிரூபித்தான். உதயபூருக்கு அருகே அவன் கட்டியிருந்த உதயசாகரம் என்ற பெரிய ஏரியின் நீர் பரப்பும் அலைகளும் கண்ணைக்கவரும்படியாக அமைந்திருந்தது. உதயபூரும் பற்பல வீடுகளுடனும் வீதிகளுடனும் அரண்போலக் காட்சியளித்தாலும், பழைய ராணாவுக்கிருந்த பலவீனம் அந்த நகரத்துக்கும் இருந்ததை ரவிசந்த் கவனித்தான்.

அவன் பார்வையை சம்பக், பகவான்தாஸ் இருவருமே கவனித்தார்கள். ''என்ன பார்க்கிறீர்கள்?'' என்று பகவான்தாஸ் விசாரித்தான்.

''உதயபூரைப் பார்க்கிறேன்'' என்றான் ரவிசந்த்.

''என்ன கண்டீர் அதில்?'' -பகவான்தாஸின் இரண்டாவது கேள்வி முரட்டுத்தனமாக இருந்தது.

''பழைய ராணாவின் பலவீனத்தைக் கண்டேன்.''-எரிச்சலுடன் பதில் சொன்னான் ரவிசந்த்.

''என்ன பலவீனம் அது?''

''இந்த நகரம்''

''சொல்லுங்கள்''

''உல்லாசத்துக்கு நல்லது, போருக்கு உதவாது'' என்று திட்டவட்டமாகச் சொன்னான்.

இதைக் கேட்ட சம்பக் பிரமித்தாள். ராணாபிரதாப்பின் கருத்தும் அப்படியே இருந்தது அவளுக்குத் தெரியும். ஆதலால் பகவான்தாஸை நோக்கினாள் அவள். பகவான்தாஸும் அவளை நோக்கினான். அடுத்து யாரும் பேசவில்லை. உதயபூரை நோக்கிப் புரவிகள் நகர்ந்தன. உதய

பூரை கதிரவன் அழகு செய்யத் தொடங்கினான். அதன் அழகிய மாளிகை மருடங்கள் சூரிய வெளிச்சத்தில் பளபளத் தன. இத்தனை பளபளப்பும் அந்த நகரின் பாதுகாப்பை பளபளக்கச் செய்யமுடியாது என்ற நினைப்புடன் அந்த நகரில் பிரவேசித்தான், ரவிசந்த். அவன் இதயத்தை ராஜ புதனத்தின் அவலநிலை சம்மட்டிகொண்டு அடித்துக் கொண்டிருந்தது. உதயபூரில் தரித்திரம் குடிகொண்டிருந் தது. மக்களிடம் செல்வம் குறைந்திருந்ததை அவன் கண்டான். ஆனால் அதன் வீதிகளில் சென்ற ராஜபுத்ர வீரர்கள் மட்டும் தலைநிமிர்ந்து சென்றதை கவனித்த ரவிசந்த் 'ராணாபிரதாப்பை அதிர்ஷ்டக் கட்டை என்று சொல்ல முடியாது' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

இப்படி நினைத்து நகருக்குள் வந்ததும் அதுவரை உடன் வந்த சம்பக் திடீரென பக்கத்து வீதியொன்றில் மறைந்துவிட்டாள். அதனால் அவளைத் தேட முயன்ற ரவிசந்தை ''சம்பக்கை பிறகு சந்திக்கலாம். தற்சமயம் என் இல்லத்தில்தான் தாங்கள் தங்கவேண்டும்'' என்று கூறி தனது இல்லத்துக்கு அழைத்துச்சென்றான் பகவான்தாஸ்.

அங்கு ரவிசந்துக்குத் தனி அறை ஒதுக்கிவிடப் பட்டது. சகல சௌகர்யங்களும் செய்து கொடுக்கப் பட்டன. அவன் நீராடி உணவு அருந்திய பிறகு ராணா விடமிருந்து அவனுக்கு அழைப்பு வந்தது. அந்த அழைப்பை பகவான்தாஸே கொணர்ந்தான். ராணா பிரதாப் ரவிசந்தை உதயசாகரத்தின் கரையிலிருந்த சிறு தோப்பில் சந்தித்தார். அவர் கையில் ஒரு கடிதம் இருந் தது. ''இதைப்படி'' என்று ரவிசந்திடம் கடிதத்தைக் கொடுத்தார்.

ரவிசந்த் படித்தான்; பிரமித்தான். ''இது நமக்கு நல்லது'' என்று ஒரு திட்டத்தையும் ராணாவிடம் சொன்னான். இம்முறை ராணா பிரமித்தார். ''நீ ராஜ புத்ரன்தானா?'' என்று குழைவுடன் கேட்கவும் செய்தார்.

# 16. திட்டமும் திண்டாட்டமும்!

உதயசாகரத்தின் கரையிலிருந்த சிறு தோப்பில் ராணா பிரதாப் சிம்மனை ரவிசந்த் சந்தித்தபோது, அந்த இடத்தில் அவ்விருவரைத் தவிர வேறு யாருமே இல்லை. ராணா மட்டும் தன்னந்தனியே ஒரு மரத்தடியில் சாய்ந்து நின்று கொண்டிருந்தார். அவர் உடை சாதாரண உடை யாயிருந்தது. அதில் ராஜரீகத்தை குறிக்கும் படாடோபம் எதுவுமே இல்லை. உடை ஒவ்வோர் இடங்களில் சிறிது கிழிந்து தைக்கப்பட்டும் இருந்தது. அவர் நிலையைக் கண்டு மனம் குழம்பிய ரவிசந்த் ராணாவை அணுகி அவர் முன்பு மண்டியிட்டு அவரது வீரப்பாதங்களை கண்களில் ஒற்றிக்கொண்டான். ''உத்தரவிட்டிருந்தால் நான் நோசோகிக்கே வந்திருப்பேனே'' என்று கூறினான் உணர்ச்சி மிகுதியால்.

ராணா சிறிது சிந்தித்துவிட்டு துன்பப் புன்முறுவல் செய்தார். ''ரவிசந்த்! நான் அந்த அரண்மனையில் உறங்குவதில்லை'' என்று குரலில் துன்பம் துலங்கச் சொன்னார்.

''ஏன் ராணா?'' என்று வினவினான் ரவிசந்த், அவர் துன்பத்துக்குக் காரணம் புரியாமல்.

''நோசோகி என்ற அரண்மனை எனது தந்தை உதய சிம்மரால் கட்டப்பட்டது.*'' - ராணா வாசகத்தை முடிக்க வில்லை.

---

* NOCHOKI was a small palace constructed by Pratap's father when the latter ran away from Chittoor, Todd's Annals. Chapter X. Page 106

''அப்படியானால் அது தங்களுக்குச் சொந்தந் தானே?'' என்று ரவிசந்த் கேட்டான்.

''இப்பொழுது எதுவும் யாருக்கும் சொந்தமில்லை. தவிர உதயசிம்மர் அந்த அரண்மனையில் உறங்கினார். ஆனால் அவருக்காகவும் மேவாருக்காகவும் அக்பருடன் செய்த போரில் மடிந்த ஜெய்மல், பட்டா இவர்களும் இவர்களைப் போன்ற மகாவீரர்களும் இப்பொழுது மண்ணுக்கடியில் உறங்குகிறார்கள். ஆகவே நான் அவர்கள் தூங்கும் மண்ணிலேயே வசிக்கிறேன். தூங்குகிறேன். மேவார் விடுதலையாகி, சித்தூர் நமது வசப்படும்வரை, நமது அவமானச் சின்னங்கள் அழியும்வரை எனக்கு தரை தான் இருப்பிடம். சிறு குடிசைதான் அரசமாளிகை'' என்று ஆவேசத்துடன் பேசிய ராணா பெரிதும் உணர்ச்சி வசப்பட்டார். பிறகு சரேலென்று தமது உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு, ''ரவிசந்த்! என் மகளும் மண்ணில் தானே படுக்கிறாள்'' என்று வினவினார்.

''தங்கள் மகளா?'' - எதும் புரியாததுபோல் வினவினான் ரவிசந்த்.

''ஆம்! சம்பக்'' என்றார் ராணா.

''அவளைச் சொல்கிறீர்களா?'' என்றான் ரவிசந்த்.

''அவள்'' என்று சம்பக்கை ரவிசந்த் அழைத்ததை ராணா கவனிக்கவே செய்ததால் புன்முறுவல் செய்தார். 'அந்த அடங்காப் பிடாரியையும் அடக்க ஒரு வீரன் வந்து சேர்ந்தான்' என்று தனக்குள் சொல்லிக்கொண்டார். பிறகு வெளிப்படையாகக் கேட்டார்: ''சம்பக், வழியில் உனக்கு தொந்தரவு ஏதும் கொடுக்கவில்லையே?''என்று.

''இல்லை மகாராஜா.''

''ஏதோ மற்போர் நடந்ததாகக் கேள்விப்பட்டேன்.''

''ஓ அதுவா? அது சிறு விஷயம்.''



''சிறு விஷயமாகத் தெரியவில்லை. இன்று பகவான் தாஸ் என்னிடம் வந்தபோது வயிற்றைப் பிடித்துக் கொண்டு வந்தான். காரணத்தையும் சொன்னான்''என்ற ராணா, ''ரவிசந்த்! இந்த ராஜபுதனத்தில் மற்போரில் பகவான்தாஸை இதுவரை யாரும் வென்றது கிடையாது. நீ எப்படி அவனிடமிருந்து தப்பினாய் என்பதே விந்தை. அவனை முறியடிக்கவும் செய்தது பெரிய ஜாலவித்தை'' என்று பாராட்டினார்.

ரவிசந்த் பேசவில்லை. தலைகுனிந்து நின்றான். ''இத்தனை புகழ்ச்சிக்கு நான் தகுதியல்ல'' என்றும் கூறினான்.

ராணா அவனை ஏறெடுத்து நோக்கி ''ரவிசந்த்! இதைப்பார்'' என்று மடியிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து கொடுத்தார். அந்தக் கடிதத்திலிருந்த முத்திரைகளைப் பார்த்தான் ரவிசந்த். ''நான் முத்திரைகளை உடைத்து விட்டேன். கடிதத்தைப் படி'' என்றார் ராணா.

கடிதத்தை ஒருமுறைக்கு இருமுறையாகப் படித்த ரவிசந்த் தீவிர சிந்தனையில் இறங்கினான். பிறகு கேட்டான், ''இந்தக் கடிதத்தை நம்பமுடியுமாராணா?''என்று.

''முற்றும் நம்பமுடியும்'' என்று பிரதாப் உறுதியாகச் சொன்னார்.

''அப்படியானால், நாம்செய்யக் கூடியது ஒன்று தான்.'' என்றான் ரவிசந்த் திட்டமாக.

''என்ன ரவிசந்த்?''

''இந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள கப்பல்,சூரத்துக்கு எப்பொழுது வரும்?''

''இன்னும் பத்து நாளில் வரும்.''

19413
3492936

''அப்படியானால் அதில் வரும் வணிகப் பொருள்கள் டில்லிக்கு, அடுத்த இருபதாவது நாள் போய்ச் சேரும்.''

''ஆம்''

''அந்த பொருள்களைக் கொண்டு செல்லும் வணிகக் கும்பலை தாக்கிப் பொருள்களை அபகரித்துவிட வேண்டும்.'' - இதைச் சொன்ன ரவிசந்த் ராணாவை நோக்கினான்.

ராணா பிரமித்தார். அவர் முகத்தில் பிரமிப்புடன் சினத்தின் சாயையும் படர்ந்தது. ''நீ ராஜபுத்ரன் தானா?'' என்றும் வினவினார், சினம் துளிர்த்த குரலில்.

''அதில் தங்களுக்கு சந்தேகமா ராணா?''-ரவிசந்தின் குரலிலும் சினம் தெரிந்தது.

''என்னைக் கொள்ளையடிக்கச் சொல்கிறாய்?''என்று ராணா சொன்னார் கடுமையாக.

''தங்களை அடிக்கச் சொல்லவில்லை'' என்றான் ரவிசந்த்.

''வேறு யாருக்கு இந்தப் பணியை இடுவது? என்னை அரியணையில் ஏற்றிய ராவுத் கிருஷ்ணனுக்கா அல்லது வீரமரணமடைந்த ஜெய்மல், பட்டா இவர்களின் மக்களுக்கா?'' என்று சீறினார் ராணா.

''இல்லை. அந்த மாதிரி மகாவீரர்களை இந்தப் பணிக்கு பயன்படுத்தக்கூடாது'' என்று மெதுவாகச் சொன்னான் ரவிசந்த்.

''வேறு யார் இதற்கு ஒப்புவார்கள்?'' என்று இகழ்ச்சியுடன் ராணா வினவினார்.

''இதோ இந்த அடிமை இருக்கிறேன்'' என்று தன்னைச் சுட்டிக்காட்டி தலைவணங்கிய ரவிசந்த், ''மகா



ராணா! வேறு யாருக்கும் இந்த வேலை தேவையில்லை. தவிர இது கொள்ளையுமில்லை. நம்மைக் கொல்ல மேற்கத்தி வெளிநாடுகளிலிருந்து கப்பல்கள் மூலம் சூரத்துக்கும் இதர துறைமுகங்களுக்கும் வரும் பொருள்கள் வணிகப் பொருள்களல்ல. நவீன தளவாடங்கள். அதை எதிரி வசம் போகாமல் தடுப்பது நமது கடமை. நம்மைச் சுட்டுத் தள்ளும் கருவிகளை எதிரியிடம் சிக்காமல் செய்வது தர்மமுங்கூட, இதில் தர்ம விரோதம் எதுவும் இல்லை,'' என்று விளக்கவும் செய்தான்.

ராணா பிரதாப் அசந்து நின்றுவிட்டார். கொள்ளைக்குத் தர்மம் கற்பிக்கும் ரவிச்ந்தை விநோதமாகப் பார்த்தார். ரவிசந்த் அவர் பார்வையைத் தைரியமாகச் சந்தித்தான். ''மகாராணா! தாங்கள் இதுவரை செய்து வந்த போர் முறைகளால் மேவாரைப் பாலைவனமாக்கி விட்டீர்கள். பயிர்களைச் சுட்டெரித்து விட்டீர்கள். மேவாரை மொகலாயர்கள் பிடித்தால் எந்தப் பயனுமில்லாதபடி செய்துவிட்டீர்கள். அதனால் சளைத்துவிடுவாரென்று நினைக்க வேண்டாம். சுதந்திரமாக ஒரு ராஜபுத்ரன் தலையெடுத்து அவருக்கு எதிராக நிற்கும்வரை மொகலாய சக்ரவர்த்தி வாளை உறையில் போடமாட்டார்'' என்று சொன்னான். ''நமது சொத்துக்களை அழிப்பதைவிட எதிரியின் சொத்துக்களை அழிப்பதும், கைப்பற்றுவதும் தவறல்ல'' என்றும் கூறினான்.

இந்த சமயத்தில் மரக்கூட்டங்களின் மறைவிலிருந்து ஒரு பெரியவர் வந்து ராணாவுக்குத் தலைவணங்கினார். அவர் வயது அறுபதை தாண்டியிருக்குமென்பதை அவரது வெளுத்த தாடியும், சுருங்கிய முகமும் நிரூபித்தன. ஆனால் அந்த வயோதிக நிலையிலும் அவரிடம் யாரும் விளையாட முடியாதென்பதை அவர் இடையில் தொங்கிய பெரிய வாள் எச்சரித்தது. அவரைக் கண்டதும் ராணா மௌனத்தின் வசப்பட்டார் ஒரு வினாடி. அடுத்தவினாடி ''ரவிசந்த்!

இவர்தான் ராவுத் கிருஷ்ணன். எனக்கு மேவாரின் பட்டத்தைக் கொடுத்தவர். உன்னை அவருக்கு எற்கனவே தெரியும்'' என்று அறிமுகம் செய்வித்தார்.

ரவிசந்த் ராஜபுதனத்தின் அந்த மகாவீரனுக்குத் தலைவணங்கினான். அவரும் லேசாகத் தலை சாய்த்து, ராணாவை நோக்கி, ''மகாராணா! இந்த வாலிபன் சொல்வதில் பொருளிருக்கிறது'' என்று கூறினார்.

''கொள்ளையடிப்பதை நீங்களும் ஒப்புக்கொள்கிறீர்களா?'' என்று ராணா வினவினார் வியப்புடன்.

''அது கொள்ளையல்ல. ஒருவிதத் தற்காப்புப்போர்'', என்றார் ராவுத் கிருஷ்ணன்.

அந்த சமயத்தில் பகவான்தாஸும் சம்பக்கும் அங்கு தோன்றினார்கள். பகவான்தாஸ் சொன்னான். ''ராணா! இவனை நம்பாதீர்கள். இவன் யாரையும் மயக்கிவிடுவான்'' என்று.

சம்பக்கை கவனித்தார் மகாராணா. அவள் விழிகளில் வெட்கத்தின் சாயை படர்ந்து கிடந்தது. ராணா உடனடியாக ஒரு முடிவுக்கு வந்து, ''ரவிசந்த்! நீ எவ்வளவு சீக்கிரம் சூரத்துக்குப் புறப்பட முடியும்'' என்று கேட்டார்.

''இன்றே புறப்படுகிறேன்'' - ரவிசந்த் உறுதியுடன் கூறினான்.

''எத்தனை வீரர் வேண்டும்?''

''பத்துப் பேர்''

''சரி. பத்துபேரை அழைத்துச் செல்!'' என்று உத்தரவிட்ட ராணா, வேறு எதும் பேசாமல் ராவுத் கிருஷ்ணன் பின் தொடர அந்த இடத்தைவிட்டு அகன்றார்.



அன்று மாலையே ரவிசந்த் பத்துவீரர்களுடன் சூரத்துக்கு புறப்பட்டான். தான் மேற்கொண்டது மிக அபாயமான அலுவல் என்று அவனுக்குத் தெரிந்தே இருந்தது. ஆனால் அபாயத்தைவிட அவனுக்கு திருப்தியளிப்பது எதுவுமில்லையாகையால் அவன் மிகுந்த உற்சாகத்துடனேயே புறப்பட்டான். எங்கும் தங்காமல் துரிதமாகப் பயணம் செய்து மூன்றே நாளில் சூரத்தை அடைந்தான். சூரத் அவன் எதிர்பார்த்தது போலில்லை.வழக்கத்துக்கு மாறாக முழு ராணுவக் காவலுடன் காட்சியளித்தது. பெரும் திண்டாட்டத்தில் தான் சிக்கிக்கொண்டதை ரவிசந்த் உணர்ந்து கொண்டான்.

# 17. இதயதுல்லா

சூரத் பட்டணம் அன்று ஏதோ பெரும் தாக்குதலை எதிர்பார்க்கும் ராணுவ முகாம்போல் காட்சியளித்தது. அந்த நகரத்துக்குள் செல்லும் எல்லாப் பாதைகளிலும் காவலிருந்ததன்றி, நகரத்துக்குள் செல்ல விரும்பிய ஒவ்வொருவரும் நன்றாக சோதனை செய்யப்பட்ட பிறகே பட்டணத்துக்குள் அனுமதிக்கப்பட்டனர். மொகலாயத் தலைநகருக்குச் செல்லும் எதுவும் சூரத்திலிருந்து கிளம்பினால் எப்படியும் ஆராவலி மலைத்தொடரை ஒட்டிய வழியிலேயே செல்ல வேண்டுமாகையால், அந்த வழியில் மலைப்பாதையிலிருந்து தனது பத்து வீரர்களுடன் இறங்கிய ரவிசந்த் சற்று எட்ட இருந்த காவல் சாவடியை தூரத்திலிருந்தே பார்த்து விட்டான். ஆகையால், வீரர்களை மலைக்காட்டுக்குள் மீண்டும் திரும்பி சென்று மறைந்து நிற்க ஏற்பாடு செய்தான். அப்பொழுது அந்த பத்து வீரரில் ஒருவனான பகவான்தாஸ் லேசாக நகைக்கவே வெகுண்ட ரவிசந்த் ''எதற்காக நகைக்கிறாய்?'' என்று வினவினான், தீப்பொறிகளெனத் தெறித்த சொற்களால்.

பகவான்தாஸ் தனது குண்டோதர உடலை ஒருமுறை அசைத்தான், தனது இகழ்ச்சியைக் காட்ட. ''நீ எதிர்பார்த்ததுபோல் எதிரிகள் சூரத்தை நமக்குத் திறந்து வைக்கவில்லை'' என்று சுட்டிக்காட்டினான், இகழ்ச்சி குரலிலும் தொனிக்க.

ரவிசந்தும் தனது இதழ்களை மடித்து இகழ்ச்சியைக் காட்டினான். ''நீ வேறுவிதமாக எதிர்பார்த்தாய் போலிருக்கிறது?'' என்று வினவவும் செய்தான், உதயபூர் வணிகனை நோக்கி.



''நான் எதையும் எதிர்பார்க்க வேண்டிய அவசியமில்லை'' என்றான் பகவான்தாஸ்.

''ஏன்?''-ரவிசந்த் கடுமையான குரலில் வினவினான்.

''இந்தப் படைக்கு நான் தலைவனல்ல''

''தலைவனாயிருந்தால் அபாரமான சாதனைகளைப் புரிந்து விடுவாய்?''

''புரிகிறேனோ இல்லையோ, பத்துப்பேரைக்கொண்டு மொகலாய வணிகப் பொருள் வண்டிகளை மடக்கிவிடலாமென்று நினைத்திருக்க மாட்டேன்.''

''ஆம் ஆம்'' என்றான் ரவிசந்த்.

''என்ன ஆம்?''—பகவான்தாஸ் கேட்டான் குறும்புடன்.

''நீ நினைத்திருக்க முடியாது.''

''உணர்ந்து கொண்டாயா?''

''உணர்ந்து கொண்டேன்''

''எதை?''

''உன் தலையில் நினைப்பதற்கு வேண்டிய சத்து இல்லை என்பதை.''

''ரவிசந்த்!'' என்று சிறிது கோபத்தைக் காட்டினான் பகவான்தாஸ்.

''என்ன வணிகரே?'' என்று விசாரித்தான் ரவிசந்த், இகழ்ச்சி ததும்பிய குரலில்.

''என்னை அவமதிக்கிறீர்'' என்று குற்றம் சாட்டினான் பகவான்தாஸ்.

''இல்லை வணிகரே! அதனால்தான் உம்மை இந்தப் பணியில் ஈடுபடுத்த விரும்புகிறேன். நீர் முதலில் தனியாகச் சூரத்துக்குள் செல்லப் போகிறீர்'' என்றான்.

அந்த உத்தரவைக் கேட்ட பகவான்தாஸ் மலைத்தான். ரவிசந்தின் சொற்களில் திடீரெனக் காட்டப்பட்ட மரியாதை தனக்கு மரண சாஸனம் என்பதைப் புரிந்து கொண்டதால் பீதிக்கும் உள்ளானான்வணிகன். ''நானா? தனியாகவா?'' என்று உளறினான் பகவான்தாஸ்.

''ஆம் பகவான்தாஸ்! சொல்வதை நிதானமாகக் கேள். சூரத் போர்க்கோலம் பூண்டு நிற்கிறது. அதில் நாம் வீரர்களாக நுழைய முடியாது. ஆனால் வணிகர்களாக நுழையலாம். நீர் வணிகர். சூரத்தின் வணிக வீதியில் உமக்குப் பழக்கமும் இருக்க வேண்டும். அந்தப் பெயரில் ஏதாவது ஒன்றைச் சொல்லி சூரத்துக்குள் நுழைந்துவிடும். இன்று மாலைக்குள் எங்களுக்கு வேண்டிய மாற்றுடைகளுடன் இங்கு வாரும். நாம் எல்லாருமே வணிகர்களாக சூரத்துக்குள் நுழைந்துவிடுவோம். நீர் வரும்வரை நாங்கள் இங்கேயே இருக்கிறோம்'' என்று தனது திட்டத்தை விளக்கினான், ரவிசந்த்.

பகவான்தாஸ் சிறிது , சிந்தனையில் இறங்கினான். ''இது நடக்கக் கூடியதுதான். ஆனால் நான் அகப்பட்டுக் கொண்டால் உயிர் போய்விடும்'' என்றான் சிறிது சிந்தனைக்குப் பிறகு.

ரவிசந்த் புரவியிலிருந்து இறங்கி மற்றவர்களையும் இறங்கச் சொன்னான். அவர்களை மலைக்காட்டின் மறைவுக்குள்ளேயே, தங்கும்படி உத்தரவிட்டு, தனது கச்சையிலிருந்த சிறு முடிப்பிலிருந்து நான்கைந்து தங்க நாணயங்களை எடுத்து பகவான்தாஸிடம் கொடுத்து, ''இவற்றைக்கொண்டு ஆயிரம் பேருக்கு ஆடைகள் வாங்க



லாம். ஆனால் பத்துப் பேருக்கு வாங்கினால் போதும். தவிர இவை மொகலாய மோகராக்கள். ஆகையால் செலாவணியும் சுலபம்'' என்று கூறினான்.

பகவான்தாஸ் புரிந்து கொண்டான், ரவிசந்தின் மனத்திலோடிய எண்ணங்களை. அந்த நாணயங்களை மடியில் பத்திரப்படுத்திக்கொண்டு, தனது புரவியின் பையிலிருந்த துப்பட்டியை எடுத்து பெரிய முண்டாசாகக் கட்டிக்கொண்டு சூரத் பாதையில் இறங்கி நடந்தான். அந்தப் பாதையில் இரண்டு மூன்று இடங்களில் சோதனை சாதாரணமாயிருந்தாலும் பட்டணத்தின் கிழக்குப் பிரவேச வாயிலில் சோதனை மிகக் கடுமையாயிருந்தது. அங்கிருந்த பத்து புரவிக் காவலரில் இருவர் அவனை நோக்கி வந்து தடுத்தனர். அப்படித் தடுத்ததால் அவனுக்குப் பின்னும் முன்னும் இருந்த வண்டிகளும் தேக்கப்பட்டன. காவலரில் ஒருவன் கேட்டான். ''நீ யார்? உன் பெயர் என்ன? எங்கு போகிறாய்?'' என்று.

''நான் ஒரு வணிகன். பெயர் கவான். கடைவீதிக்குப் போகிறேன் சரக்கு வாங்க'' என்றான் பகவான்தாஸ், தனது முதல் 'ப'வையும் கடைசி 'தாஸை'யும் விலக்கி விட்டு.

''கவானா?'' என்று கேட்டான் காவலன்.

''ஆம்''

''அப்படியானால் நீ முஸ்லீமா?''

''ஆம்''

''பார்த்தால் அப்படித் தெரியவில்லையே?''

''ஜெய்பூரில் வியாபாரம் செய்கிறேன். அங்குள்ள ஹிந்துக்களோடு பழகி அந்த உடைகளை அணிகிறேன்.

வாணிபம் நடக்க எந்த வேடம் போட்டால் என்ன?'' என்று அசட்டையாக பதில் சொன்னான் பகவான்தாஸ்.

இதைக் கேட்ட காவலன் பெரிதா" நகைத்து, ''சரி சரி, உனக்கு இந்த ஊரில் யார் கடையில் வியாபாரம்?'' என்று வினவினான்.

''இதயதுல்லாவின் பெரும் கடை'' என்றான்,பகவான் தாஸ் சிறிதும் சிந்திக்காமல்.

அடுத்து காவலன் எந்தவித ஆட்சேபணையும் செய்யாமல் வழிவிட்டான். இதயதுல்லாவின் பெயரைக் கேட்டதும் சலாமும் செய்தான். அதற்கப்புறம் எந்தவிதத் தடையுமின்றி நகருக்குள் பிரவேசித்துவிட்ட பகவான்தாஸ் அங்குள்ள ஒரு சிறிய சத்திரத்தில் தங்கி நீராடி உணவருந்திவிட்டு கடை வீதிக்குச் சென்றான். உண்மையில் அவனுக்கு இதயதுல்லாவின் கடை தெரியாது. சூரத்தின் பெருவணிகர்களில் ஒருவரான இதயதுல்லா இரண்டு மூன்று கப்பல்களை வைத்திருப்பதாகவும், அக்பருக்கு வேண்டிய முக்கிய துணிமணி வகையறாக்களை அவரே அனுப்புவதாகவும் பகவான்தாஸ் கேள்விப்பட்டிருந்தானே யொழிய, அவரையோ அவர் கடையையோ பார்த்திராத காரணத்தால் இரண்டொருவரை விசாரித்துக்கொண்டு அவர் கடையை அடைந்தான்.

அந்தக்கடை பெரிய அரண்மனை போலிருந்தது. முகப்பு மண்டபங்களிலேயே துணிகள் குவிந்து கிடந்தன. வியாபாரம் பலமாக நடந்துகொண்டிருந்தது. அந்த மண்டபங்களுக்கிடையே ஓடிப் பெரிய கமான் வளைத்த பாதையில் இரண்டு மூன்று ஒட்டகங்கள் பொதிகளுடன் சென்று கொண்டிருந்தன. எதிரே கோவேறு கழுதைகள் பூட்டிய வண்டிகளிலும் சரக்குகள் வந்து கொண்டிருந்தன.

அந்த வணிக அரண்மனையை பிரமிப்புடன் பார்த்த பகவான்தாஸ் கமான் வழியாக உள்ளே புகுந்து



சென்றான். எதிரே பெரிய மாளிகையொன்று தோன்றியது. பக்கத்தில் சிறு தோட்டம் ஒன்றிருந்தது. அங்கு நீண்ட தாடியுடன் கூடிய ஒரு கிழவர் செடிகளைக் கொத்திக் கொண்டிருந்தார். ''ஐயா!'' என்று அவரை அழைத்தான் பகவான்தாஸ்.

அவர் திரும்பி பகவான்தாஸை ஏறிட்டு நோக்கினார். அவர் நீண்டதாடியும் மீசையும் முகத்தின் பெரும்பகுதியை மறைத்திருந்தன. வழுக்கையான தலைக்குக் கீழே சற்று சுருக்கம் விழுந்த முகத்தில் இரண்டு கண்கள் பளிச்சிட்டன.

பகவான்தாஸை ஒரு விநாடியே நோக்கிய அந்த கிழவர், ''உங்களுக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டார்.

''இதயதுல்லாவைப் பார்க்க வேண்டும்'' என்றான் பகவான்தாஸ்.

''எதற்காக?'' என்று அவர் வினவினார்.

''துணிமணிகள் வாங்க வேண்டும்...'' -இழுத்தான் பகவான்தாஸ்.

''முகப்புக் கடைகளில்.கிடைக்குமே'' என்றார் அவர்.

''நானும் ஒரு வணிகன். இதயதுல்லாவைப் பார்த்தால் சிறிது மலிவாக வாங்குவேன்'' என்றான் பகவான் தாஸ்.

அந்த மனிதர் சிறிது சிந்தித்தார். ''சரி வாருங்கள்'' என்று அவரை அழைத்துப்போய் மாளிகை முகப்புத் தாழ்வாரத்தில் உட்காரவைத்துவிட்டு, உள்ளே சென்றார். சிறிது நேரத்திற்கெல்லாம் வந்த ஒரு அரபு அடிமை பகவான்தாஸை உள்ளே அழைத்துச் சென்று ஒரு பெரிய

அறையைக் காட்டி ''உள்ளே இருக்கிறார் எசமான்'' என்று கூறினான்.

பகவான்தாஸ் உள்ளே சென்றதும் மலைத்து நின்றான். அங்கு தோட்டத்தில் தான் பார்த்த பெரியவர் தான் பெரிய பட்டுப் படுக்கையில் கூனி உட்கார்ந்திருந்தார். அவருக்குப் பின்னால் உருண்டு காட்சியளித்த பெரும் தலையணையில் செய்யப்பட்டிருந்த ஜிகினாவேலையைக் கொண்டே ஒரு அரசை வாங்கலாம் என்று மதிப்புப் போட்ட பகவான்தாஸ், பெரியவரை நோக்கி ''தாங்கள் தான் முதலாளி என்று தெரியவில்லை '' என்று குழறினான்.

''அதனால் பாதகமில்லை. இப்படி வந்து உட்காருங்கள்'' என்று பகவான்தாஸுக்கு தமது பக்கத்தில் இடம் காட்டிய இதயதுல்லா ''தயங்காதீர்கள். இஸ்லாத்தில் எல்லோரும் சகோதரர். பணக்காரன் - ஏழை கிடையாது. தவிர மாலை நெருங்குகிறது. நாம் இருவரும் சேர்ந்தே நமாஸ் செய்யலாம்'' என்றும் அன்புடன் கூறினார்.

சொப்பனத்தில் நடப்பதுபோல் நடந்த பகவான்தாஸ் இதயதுல்லாவின் பக்கத்தில் அமர்ந்தான். அமர்ந்ததும் ''நான் வாங்க வேண்டிய...'' என்று ஆரம்பித்தான்.

இதயதுல்லா கையைத்தட்ட ஒரு அடிமை ஓடி வந்தான். ''இவனிடம் சொல்லுங்கள் வேண்டியதை'' என்று இதயதுல்லா உத்தரவிட பத்து மூட்டைகள் ஜவுளி வேண்டும். அத்தனையும் தைத்த உடைகளாயிருந்தால் விசேஷம்'' என்று கூறிய பகவான்தாஸ், தமது கச்சையிலிருந்த மோகராக்களை எடுத்தான்.

''வைத்துக் கொள்ளுங்கள். பிறகு கொடுக்கலாம்'' என்று கூறிய இதயதுல்லா, ''இவர் சொன்ன துணிகளை



ஒரு வண்டியில் ஏற்று'' என்று உத்தரவிட்டதும் அடிமை பறந்தான்.

அப்பொழுது கதிரவன் மலை வாயிலில் விழும் சமயம் வந்துவிட்டதால் அந்தப் படுக்கையிலே சிறு துண்டு ஒன்றை விரித்து இதயதுல்லா நமாஸ் செய்ய முற்பட்டார். அவருடன் பகவான்தாஸும் மண்டியிட முற்பட்டபோது ''வேண்டாம்'' என்று தடுத்த இதயதுல்லா ''பகவான் தாஸ்! இந்துக்கள் நமாஸ் செய்யும் பழக்கமில்லை. போலி நமாஸை சர்வ வல்லமையுள்ள அல்லாஹும் (சல்) அங்கீகரிக்க மாட்டார்'' என்று சர்வ சகஜமாகச் சொல்லி தமது தலையை படுக்கையில் தாழ்த்தி வணங்கினார்.

பகவான்தாஸின் திகில் மரணத்தை ஒத்ததாயிருந்தது. எழுந்து ஓடிவிடலாமா என்று பார்த்தான். ஓடினால் உடனடியாகப் பிடித்து வெட்டிவிடுவார்களென்ற பீதியால், திருட்டுவிழி விழித்துக்கொண்டு அதிர்ச்சியுடன் உட்கார்ந்து விட்டான்.

# 18. வெளிப்பட்ட வேஷம்!

சூரத்தின் பெரு வணிகரான இதயதுல்லா தன்னைப் பெயர் சொல்லி அழைத்ததால் தனது சூட்டு வெளிப்பட்டு விட்டதென்ற உணர்வில் இடிந்து உட்கார்ந்துவிட்ட பகவான்தாஸ், இதயதுல்லாவை இமைகொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான். இதயதுல்லா பகவான்தாஸ் இருப்பதை அடியோடு அறியாதவர் போலவே மிகுந்த பயபக்தியுடன் மாலை நமாஸை செய்தார். படுக்கையில் விரித்த துண்டில் மண்டியிட்டு தலையைத் தரையில் தொட்டுத் தொட்டு வணங்கி நமாஸை நீண்டநேரம் நடத்திய இதயதுல்லா, நமாஸ் முடிந்ததும் படுக்கையில் வழக்கம்போல அமர்ந்து ''யாரங்கே?'' என்றழைக்க, அடிமை ஓடிவந்து தலைவணங்கி, ''ஐயாவுக்கு வேண்டிய ஜவுளிகளை வண்டியில் ஏற்றியாகிவிட்டது'' என்று அறிவித்தான். இதயதுல்லா வாய்திறக்கும் முன்பாக காரியங்கள் முடியும் துரிதத்தைக் கண்ட பகவான்தாஸ் பிரமித்துப்போய் ''நான் எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும்?'' என்று கேட்டு மடியிலிருந்த மோகராக்களை எடுத்தான்.

''இரண்டு நாணயங்கள் அவனிடம் கொடுங்கள். வண்டிக்கு வாடகை இல்லை, ஊர் போனதும் திருப்பி அனுப்பிவிடுங்கள்'' என்று இதயதுல்லா சொல்ல, இரண்டு பொன் நாணயங்களை அடிமையிடம் கொடுத்த பகவான் தாஸ் தாம் செல்ல விடை கேட்டான்.

விடைகொடுத்த இதயதுல்லா புன்முறுவல் செய்து, ''பகவான்தாஸ்! உம்மைப்பற்றி நான் ஏற்கனவே



கேள்விப்பட்டிருக்கிறேன். ராணாவுக்கு எனது வணக்கங்களைச் சொல்லுங்கள், உதயபூர் சென்றதும் வண்டியைத் திருப்பி அனுப்பி விடுங்கள்'' என்று சொன்னார்.

இதயதுல்லாவின் சொற்களைக் கேட்ட பகவான் தாஸின் பிரமிப்பும் அச்சமும் அதிகமாகவே, கேள்விக் கண்களால் சூரத் வணிகரை உற்றுநோக்கினான். அவன் பார்வையையும் பயத்தையும் கவனிக்கவே செய்த இதயதுல்லா லேசாகப் புன்முறுவல் செய்தார். ''பகவான் தாஸ்! நீர் சூரத்தின் கோட்டை வாசல் காவலரிடம் என்னைப்பற்றி சொன்ன அரை நாழிகைக்குள் எனக்குச் செய்தி வந்துவிட்டது. நான் உம்மை எதிர் பார்க்கவில்லை. கவான் என்ற முஸ்லீமை எதிர்பார்த்தேன். நீர் வந்ததும் விஷயத்தைப் புரிந்துகொண்டேன். என் பெயரைச் சொல்லிச் சூரத்தில் யார் நுழைந்தாலும் எனக்கு உடனடியாகச் செய்தி வந்து விடும். என்னை ஏமாற்றி எதும் சூரத்தில் நடைபெற முடியாது. சென்று வாரும். உம்மை யாரும் தடை செய்யமாட்டார்கள். எனது வண்டியில் நீர் சரக்கேற்றிச் செல்வதே உமக்குப் பாதுகாப்பை அளிக்கும். உமது ராணா மிகவும் நன்மானமுள்ளவர். நாட்டுக்காகப் போராடுகிறார். அவரிடம் ஒவ்வொரு முஸ்லீமும் மரியாதை வைத்திருக்கிறார்கள். ராணாவுக்கு எனது வணக்கத்தைச் சொல்லுங்கள். போய் வாருங்கள்'' என்றும் இதயதுல்லா விளக்கி விடை கொடுத்தார்.

பகவான்தாஸ் இதயதுல்லாவுக்கு சலாம் செய்து விடை பெற்று மாளிகைக்கு வெளியே உள்ள கடைக்கு வந்தான். அங்கு ஒரு வண்டியில் ஜவுளி மூட்டைகள் கட்டி வைக்கப்பட்டிருந்தன. பகவான்தாஸ் வந்ததும், கோவேறு கழுதையின் சேணத்தை அங்கிருந்த அடிமை அவன் கையில் கொடுக்க வண்டியின் முகப்பில் ஏறி ஓட்டலானான், உதயபூர் வணிகன். அந்த வண்டியை யாரும்

தடுக்காததிலிருந்தே இதயதுல்லாவின் செல்வாக்கை உணர்ந்த பகவான்தாஸ் அதைப்பற்றி வியந்துகொண்டும் மேற்கொண்டு இதயதுல்லா என்ன செய்வாரோ என்ற அச்சத்துடனும், வண்டியை ஓட்டிக்கொண்டு ரவிசந்த் மறைந்திருந்த மலைப்பகுதிக்கு வந்து சேர்ந்தான். அங்கிருந்த ரவிசந்திடம் நடந்த அனைத்தையும் சொன்னான்.

பகவான்தாஸ் சொன்ன விவரங்களைக் கேட்ட ரவிசந்த் ஆழ்ந்த சிந்தனையில் இறங்கினான். ''இதயதுல்லாவின் பெயரை உம்மை யார் சொல்லச் சொன்னது? சூரத்தில் வேறு யார் பெயரும் தெரியாதா உமக்கு?'' என்று எரிந்துவிழுந்தான்.

''சூரத்தில் எனக்கு வியாபாரம் எப்பொழுதும் இருந்ததில்லை. ஆகவே பிரபலமாகத் தெரிந்த பெயரைச் சொன்னேன்'' என்றான் உதயபூர் வணிகன்.

அதற்குமேல் அவனை எதுவும் கேட்காத ரவிசந்த் ''சரி சரி. வண்டியை இந்த மரங்களின் மறைவுக்குக் கொண்டு வாரும். அதிலுள்ள மூட்டைகளை இறக்கும்'' என்று கூற பகவான்தாஸ் வண்டியை மரக்கூட்டத்தின் மறைவுக்குக் கொண்டுவந்தான். ஜவுளி மூட்டைகளை மற்ற வீரர்களின் துணைகொண்டு இறக்கவும் செய்தான்.

ஜவுளி மூட்டைகளைப் பிரிக்கச் சொல்லிப் பார்த்தான் ரவிசந்த். அதில் தாங்கள் வணிகர்களாக மாறுவதற்கு வேண்டிய உடைகள் கனகச்சிதமாயிருந்ததைக் கவனித்த ரவிசந்த், உதயபூர் வணிகரை நோக்கி, ''பகவான்தாஸ்! உடைகள் நாம் எதிர்பார்த்தபடி இருக்கின்றன'' என்றான்.

''பகவான்தாஸ் போனால் வேறு எப்படி வாங்குவான் சரக்கை?'' என்று பகவான்தாஸ் கேட்டான்.

''மிகக் கச்சிதமாக வாங்கியிருக்கிறீர்'' என்று ரவிசந்த் பாராட்டினான்.



''நமது வீரர்களுக்கும் உமக்கும் பொருத்தமாயிருக்கும்'' என்று பகவான்தாஸ் உற்சாகத்துடன் சொன்னான்.

''ஆனால்...'' — இழுத்தான் ரவிசந்த், அந்த இழுப்பில் வெறுப்பு இருந்தது.

அதைக் கவனிக்கவே செய்த பகவான் தாஸ் ''என்ன ஆனால்...'' என்றான்.

''இவை உடைகளல்ல'' -ரவிசந்தின் குரலில் உஷ்ணம் இருந்தது.

''வேறென்ன?'' என்று பகவான்தாஸ் கேட்டான்.

''நமது கழுத்துக்கு வந்திருக்கும் சுருக்கு'' என்ற ரவிசந்த், ''பகவான்தாஸ்! நீர் கிளம்பிய மறுநிமிடம் எந்த மாதிரி, உடைகள் அனுப்பப்பட்டிருக்கின்றன என்பது இதயதுல்லாவிடம் அறிவிக்கப்பட்டிருக்கும். அந்த மாதிரி உடையணிந்து வருபவர்களை உடனடியாகச் சிறைசெய்ய இதயதுல்லா கோட்டை காவலருக்கு உத்தரவிட்டிருப்பார். புரிகிறதா?'' என்று வினவினான் ரவிசந்த்.

புரிந்துகொண்டதற்கு அறிகுறியாகத் தலையசைத்தான் பகவான்தாஸ். ''இப்பொழுது என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்?'' என்று வினவவும் செய்தான்.

''இனி நீர் செய்யக் கூடியது எதுவுமில்லை'' என்ற ரவிசந்த், மீண்டும் சிந்தனையில் இறங்கினான். பிறகு தனது வீரர்களை நோக்கிக் கூறினான் ''நீங்களும் பகவான்தாஸும் இந்த இடத்திலிருக்க வேண்டாம். இன்னும் சிறிது வடக்கே சென்று ஆரவலியை ஒட்டிய பாதைக்கருகில் மறைந்திருங்கள். தளவாட வண்டிகள் வரும்போது நான் செய்யும் சைகையை எதிர்

பார்த்திருங்கள். வாளை நான் ஆட்டியதும் வண்டிகளைச் சூழ்ந்து கொள்ளுங்கள்'' என்று.

''நீர் என்ன செய்வதாக உத்தேசம்?'' என்று வினவினான் பகவான்தாஸ்.

''இதயதுல்லாவிடம் வண்டியை ஒப்படைக்கப் போகிறேன்'' என்று கூறிவிட்டு, ஜவுளிகளிலிருந்த ஒரு வணிக உடையைத் தனது உடைமீது போட்டுக்கொண்டு, தலையிலும் ஒரு பெரிய முண்டாசைக் கட்டிக்கொண்டு வணிகனானான். பிறகு தனது புரவியை வண்டிக்குப் பின்னால் கட்டிவிட்டு, வண்டியின்மீது ஏறி உட்கார்ந்து, கோவேறு கழுதையைத் தூண்டி வண்டியை ஓட்டினான்.

வண்டி சிறிது தூரம் சென்றதும், அதை நேர்ப்பாதையிலிருந்து கிளைப்பாதைக்குத் திருப்பி பெரிய கோட்டை வாசலுக்குப் போகாமல், சுற்றி வளைத்து வடக்குப் புறத்தில் கிராமவாசிகள் உணவுப் பொருள்களை சூரத் கடை வீதிக்குக் கொண்டுபோகும் வாயிலில் நுழைந்தான். அங்கு அதிகக் காவலில்லாமல் போனாலும், காவலிருந்த நால்வரில் இருவர் மட்டும் ரவிசந்தைத் தடுத்து, ''நீ யார்? எங்கே போகிறாய்?'' என்று வினவினார்கள்.

ரவிசந்த் தனது விழிகளைச் சினத்துடன் உயர்த்தி, ''பார்த்தால் தெரியவில்லை'' என்று வினவினான்.

''என்ன தெரிய வேண்டும்?'' என்று ஒரு காவலன் வினவினான்.

''வண்டி என் எஜமானுடையது! வெளியூருக்கு சரக்கு கொண்டு போய் போட்டுவிட்டு வருகிறது. இந்த வண்டியை நிறுத்த உனக்கு அதிக துணிச்சல் வேண்டும்'' என்று சீறினான் ரவிசந்த்.



ரவிசந்தின் போக்கைக் கண்டு சிறிது சந்தேகப்பட்ட காவலன், வண்டியிலிருந்த சிறுபட்டயத்தை நோக்கியதும் பெரும் பீதிக்கு உள்ளாகி ''மன்னிக்க வேண்டும். வண்டி இதயதுல்லாசாகிப்புடையது என்பதை கவனிக்கவில்லை. செல்லுங்கள்'' என்று கூறி, தலைவணங்கி வழியும் விட்டான்.

பிறகு எந்த தடங்கலுமின்றி வண்டியை சூரத் நகருக்குள் கொண்டுவந்த ரவிசந்த் அடுத்தபடி மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொண்டான். வண்டியை ஒரு சந்து முனையில் அவிழ்த்துவிட்டு கோவேறு கழுதையை அதிலேயே பிணைத்தான். பிறகு தனது புரவிமீது ஏறி சூரத் துறைமுகத்தை நோக்கிச் சென்றான்.

இரவான அந்த நேரத்திலும் சூரத் துறைமுகம் மிகவும் சுறுசுறுப்பாக இருந்ததையும், அப்பொழுதும் கப்பல்களிலிருந்த சரக்குகளை ஏற்றிய படகுகள் தொடர்ந்து வந்து கொண்டிருந்ததையும் கவனித்தான். வெளிநாட்டிலிருந்து வரும் தளவாடங்கள் எங்கு இறக்கப்படுகின்றன என்பதை அறிய புரவியிலிருந்து இறங்கி, புரவியை நோக்கி, ''சந்தர்! இங்கேயே நில். விரைவில் வந்து விடுகிறேன்'' என்று கூறிவிட்டு, வணிகர்களும் அவர்கள் அடிமைகளும் கும்பல் கும்பலாக நின்று கொண்டிருந்த இடத்தை அடைந்து, அவர்கள் கும்பலில் தானும் ஒருவனாக நின்றான்.

''இங்கு என் நிற்கிறீர்கள்? துறைமுக முகப்புக்குப் போக வேண்டாமா?'' என்று ஒரு வணிகனை விசாரித்தான் ரவிசந்த்.

அந்த வணிகன் அவனைத் திரும்பிப் பார்க்காமலே சொன்னான்: ''நீங்கள் வெளியூர் போலிருக்கிறது. இதயதுல்லா சரக்கு இறக்கும்போது, துறைமுக முகப்புக்கு யாரும் போகக் கூடாது'' என்று.

அந்த சமயத்தில் துறைமுகத்தில் பெரும் சலசலப்பு ஏற்பட்டது. வணிகரும் மற்றோரும் விலகி வழிவிட்டார்கள். வெள்ளை வெளேரென்று வெளுத்த தாடியுடனும் வெளுத்த உடையுடனும் வெளுத்த புரவியொன்றில் ஒரு வயோதிகர் துறைமுக முகப்புக்கு வந்து இறங்கினார். அவர்தான் இதயதுல்லாவாயிருக்க வேண்டும் என்று நினைத்த ரவிசந்த், அடுத்து நடப்பதைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

துறைமுக முகப்பில் இழுக்கப்பட்டு பிணைக்கப்பட்டிருந்த பத்துப் படகுகளை இதயதுல்லா ஒவ்வொன்றாகப் பார்வையிட்டார். பிறகு பக்கத்தில் நின்றிருந்த உயரமான மொகலாயவீரனிடம் ஏதோ சொல்லிவிட்டுத் திரும்பி தமது புரவியில் ஏறிச் சென்றுவிட்டார் இதயதுல்லா.

அவர் சென்றதும் கோவேறு கழுதைகளால் இழுக்கப்பட்ட எட்டு வண்டிகளில் படகுகளிலிருந்த சரக்குகள் ஏற்றப்பட்டன. அவையனைத்தும் வாட்கள், குறுவாட்கள், கேடயங்கள் முதலிய போர்த் தளவாடங்களென்பதைக் கண்ட ரவிசந்த் மகிழ்ச்சி எய்தினான்.

அந்த வண்டிகளில் தளவாடங்கள் ஏற்றப்பட்டதும். பெரும் கெட்டித் துப்பட்டிகளால் அவை மூடப்பட்டன பிறகு ஒவ்வொரு வண்டூயிலும் ஒவ்வொரு வணிகன் ஏறிக்கொள்ள, ஒரு வண்டிக்கு மட்டும் ஆளில்லாது போகவே, ''இவன் எங்கே?'' என்று மொகலாய வீரன் கூச்சலிட்டான். அந்த சமயத்தில் ரவிசந்த் ஓட்டமாக ஓடி அவனுக்கு சலாம் செய்து ''தாமதத்திற்கு மன்னிக்கவும். படா சாகிபிடம் விடைபெற்று வந்தேன்'' என்றான்.

படா சாகிப் என்ற அவன் மரியாதைச் சொல்லால் சினம் தவிர்த்த மொகலாய வீரன், ''ஏறு வண்டியில்''



என்று உத்தரவிட, அவன் வண்டியில் ஏறிக்கொண்டான். அடுத்து மொகலாய வீரன் சைகையைத் தொடர்ந்து வண்டிகள் நகர்ந்தன. முகப்பு வண்டியை ஓட்டிய ரவிசந்துக்கு வண்டி போகவேண்டிய வழி எதுவென்று தெரியாது. ஆகையால், கோவேறு கழுதை போனவழியில் அதைப் போகவிட்டான். இம்மாதிரி தளவாடங்களை ஏற்றிச் சென்று பழக்கமுள்ள அந்த கோவேறு கழுதையும் சூரத்தின் துறைமுகத்திலிருந்து வடக்கே செல்லும் பெரும் பாதையில் நடந்தது. ஒரே ஒரு முறை மட்டும் திரும்பி சந்தரைப் பார்த்த ரவிசந்த், தனது சாட்டையால் ஏதோ சைகை செய்துவிட்டு எதும் அறியாததுபோல் வண்டியை ஓட்டினான்.

சந்தர் சிறிது நேரம் அப்புறமும் இப்புறமும் விழித்தது. பிறகு வண்டிகளைச் சுற்றி தூரத்தே தொடர்ந்தது. பிறகு நகரத்துத் தோப்புகளில் மறைந்தது. வண்டிகள் வடக்குப்புற வாசலைக் கடந்த பின்பும் தூரத்தே ஒரு புரவி தொடர்ந்து வருவதைக் கண்ட ஒரு மொகலாய வீரன் தளவாடவண்டிகளை இருபுறங்களிலும் காவல் செய்து வந்த தனதுவீரர்களை விளித்து ''அந்தப் புரவியை விரட்டுங்கள்.எங்கோ லாயத்திலிருந்து அறுத்துக்கொண்டு வந்திருக்கிறது'' என்றான்.

தளவாட வண்டிக் காவலர் இருவர் அதைப் பிடிக்க நகர்ந்தார்கள். அப்பொழுது ஒரு வீரன் சொன்னான், ''தனது தலைவனை நோக்கி செல்கிறது ஸர்தார்! அதைப் பிடிக்கமுடியாது'' என்று.

''ஏன்?'' என்று வினவினான் காவலர் தலைவன்.

''அதன் பெயர் சந்தர். அது சாதாரணப் புரவியல்ல'' என்றான் வீரன்.

''என்ன தனிப் பெருமை அதற்கு?'' என்று ஸர்தார் வினவினான்.

''அது ஒரு ராட்சஸப் புரவி. தந்திரசாலி. அதன் எசமான் இங்கு எங்கோ இருக்கிறான்'' என்றும் சொன்னான்.

சொன்னவன் அஹமத் சுபான் என்பதைக் குரலிலிருந்தே புரிந்து கொண்ட ரவிசந்த், தனது தலையை நன்றாகக் குனிந்து கொண்டு வண்டியை வேகமாகச் செலுத்த கோவேறு கழுதையைத் தூண்டினான்.

''எல்லா வண்டிகளும் நிற்கட்டும்'' என்று இரைந்து உத்தரவிட்ட மொகலாய ஸர்தார், ஒவ்வொரு வண்டியாகச் சோதித்துக் கொண்டு வந்தான். முகப்பு வண்டிக்கு வந்ததும் அந்த வண்டியோட்டி முண்டாசை முக்காடாக்கிக் கொண்டு உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும், தனது வாளை உருவி முக்காட்டைத் தூக்கி ''நீ யார்?'' என்று வினவினான்.

அதற்குமேல் பேசவில்லை அவன். அவன் கழுத்தில் கூரிய வாளின் முனை தடவிக்கொண்டிருந்தது. ''ஏதும் பேசாதே. எந்தச்சைகையும் செய்யாதே'' என்று மிக ரகசியமாகச் சொன்னான் ரவிசந்த். அடுத்து மின்னல் வேகத்தில் நிகழ்ச்சிகள் தொடர்ந்தன.

# 19. அக்பரின் சந்தேகம்!

முற்றும் எதிர்பாராதவிதமாக தனது கழுத்தில் வண்டியோட்டியின் கத்தி ஊன்றியதாலும், அவன் சொன்ன எச்சரிக்கைச் சொற்களாலும் திக்பிரமை அடைந்துவிட்ட காவலர் தலைவன், என்ன செய்வதென்று அறியாமல் திகைத்த சமயத்தில், ரவிசந் மேலும் ரகசியமாகச் சொன்னான்: ''நாமிருவரும் இடங்களை மாற்றிக் கொள்ளப் போகிறோம்'' என்று. இரவின் இருட்டும் அவனுக்குத் துணை செய்ததால் ரவிசந்த் தலையை மூடிய போர்வைக்குள்ளேயே வாளை மறைத்துக் கொண்டு வண்டியின் முகப்பில் எழுந்து நின்று காவலர்தலைவனைப் புரவியிலிருந்து வண்டிக்கு வருமாறு சொன்னான். வண்டியை நிறுத்தாமலேயே இத்தனையும் நடந்ததால் பின்னால் வந்த வண்டிகளிலிருந்தவர்கள் அந்த நிகழ்ச்சிகளைச் சாதாரணமாகவே நினைத்தார்கள். வண்டியோட்டிகளும் வீரர்களானதால், இம்மாதிரித் தங்கள் பணிகளை மாற்றிக்கொள்வது வழக்கம்தான் என்று நினைத்தார்கள். ரவிசந்த்துக்குப்பதில் காவலர் தலைவன் வண்டியிலேறி வண்டியோட்டத் துவங்கியதும், ரவிசந்த் அவன் புரவிமீது ஏறி மற்ற வண்டிகளுக்கு வழிகாட்டிச்சென்றதும் அவர்கள் யாருக்கும் புதுமையாயில்லை. மேலும் பயணத்தில் எந்த விதச் சிக்கலுமில்லாததால் அவர்கள் அதைப்பற்றிச் சிந்திக்கவுமில்லை. ரவிசந்த் மட்டும் காவலர் தலைவன் புரவியில் ஏறியதும் ''தலைவரே! எந்தவித சைகையும் செய்ய வேண்டாம். என் இடையில் மூன்று குறுவாள்கள் இருக்கின்றன. இந்தக் குறுவாள்கள் மூன்று விநாடிகளுக்குள் மூன்று வீரர்களின் உயிரைக் குடிக்க முடியும். உம்மைத் தவிர அடுத்த இரண்டு வண்டிகளை ஓட்டுபவர்கள்

பிணமாக விழுந்தால் எனக்குத் தப்ப அதிக நேரமாகாது. தவிர சந்தர் வெகு துரிதமாகப் போக வல்லவன்'' என்று சுட்டிக்காட்டினான்.

ரவிசந்தின் சொற்களில் உள்ள உண்மையைப் புரிந்து கொண்ட காவலர் தலைவன், உலகத்தில் எல்லாவற்றையும்விட உயிர் சிறந்தது என்ற தத்துவத்தை உணர்ந்து வண்டியை ஓட்டலானான். இப்படிச் சென்ற வண்டிகள் அடுத்த ஒரு ஜாமம் எந்தவித நிகழ்ச்சியுமில்லாமல் நகர்ந்தன. சந்தரும் அதற்குப் பிறகு எங்கும் தலைகாட்டாததால், அஹமத் சுபானும் தன்னை அதிகக் கவலைக்கு உள்ளாக்கிக் கொள்ளாமல், வண்டிகளின் பின்புறத்தில் காவல் செய்து வந்தான்.

இப்படி பயம் ஓரளவு நீங்கிவிட்டதாலும், தூக்கம் கண்ணைச் சுற்றியதாலும் வண்டிக்காரரில் ஒருவன் பெரிதாகப் பாட ஆரம்பித்தான். அந்தப் பாட்டு ராஜஸ்தானத்துக் கவிகள் சிலர் அக்பரைப்பற்றி எழுதிய பாட்டாதலால், அது பெரிதும் மக்களிடையே பரவியிருந்தது. ஆகவே மற்ற வண்டிக்காரர்களும் அவனை அடுத்து சப்தம் வைத்துப் பாடலானார்கள். இப்படி உற்சாகத்துடன் வண்டிகள் நகர்ந்த காரணத்தாலும், சூரத்திலிருந்து நீண்ட தூரம் வந்துவிட்ட காரணத்தாலும், பாதையின் இருபுறங்களிலும் மரங்கள் அடர்த்தியாயிருந்ததாலும் வண்டிக்காரர்களும் காவலரும் சிறிது அசிரத்தையுடனேயே வண்டிகளைச் செலுத்தினார்கள்.

அப்படி சிறிது தூரம் கடந்ததும் வண்டிகள் வேகமாக முடுக்கப்பட்டு ஆராவலியின் முகப்பில் வந்ததும், திடீரென வண்டிகளின் கோடியில் காவல்புரிந்து வந்த சுபான் பெரிதாக அலறினான். அது என்னவென்று ஆராய ஒரு காவலன் சென்றபோது அங்கிருந்த நிலைகண்டு பெரிதாக நகைத்தான். மெல்லிய வெண்புரவி ஒன்று அஹமத்



சுபான் உடையைப் பிடித்துக் கீழே தள்ளி அவன்மீது தனது குளம்புகளை வைக்க முயன்றது. அந்த குளம்புகளிலிருந்து தப்ப அஹமத் சுபான் முயன்று கொண்டிருந்தான். இன்னொரு காவலன் தன்னைப் பார்த்து நகைத்ததும் வெகுண்ட அஹமத் சுபான் ''சிரிப்பது அப்புறமிருக்கட்டும். முதலில் இதனிடமிருந்து என்னை விடுவியுங்கள்'' என்று சீறினான்.

இந்த நிகழ்ச்சியின் விளைவாக மற்ற வண்டிகளும் நின்று மீதிக் காவலரும் அந்த இடத்துக்கு வரவே புரவி திடீரென பக்கவாட்டில் வாயுவேகமாகப் பாய்ந்து ஆராவலியின் இருளில் மறைந்து விட்டது. அதே சமயத்தில் ரவிசந்தும் தனது புரவியை வேகமாக முடுக்கி ஆராவலியின் மலைச்சாரல் காட்டில் மறைந்து விட்டான். அதனால் விடுபட்ட காவலர் தலைவன் தனது வண்டியோட்டும் வேலையிலிருந்து விலகி, கோவேறு கழுதையின் கடிவாளங்களை இழுத்து வண்டியை நிறுத்தி, வண்டியிலிருந்து கீழே குதித்து ''மடையார்களா! அங்கே என்ன செய்கிறீர்கள்?'' என்று இரைந்து கூவினான். அதனால் அச்சமுற்ற காவலர், அவனிருந்த இடத்திற்கு விரைந்து வரவே ''எசமான்! என்ன இது? உங்கள் புரவி எங்கே?'' என்று விசாரிக்கத் தொடங்கினார்கள்.

''புரவியா! உங்கள் தலையிலிருக்கிறது. நான் வண்டியோட்டுவதைக்கூட பார்க்காமல் காவல் புரிகிறீர்கள்!'' என்று எரிந்து விழுந்தான் காவலர் தலைவன்.

''நீங்கள் வண்டியோட்ட விரும்பினால் நாங்கள் அதைத் தடுக்க முடியுமா?'' என்று வினவினான் ஒரு காவலன், தனது பணிவைக் காட்டி.

''நான் வண்டியோட்ட விரும்பியதாக யார் உனக்கு சொன்னது?'' என்று சீறிய காவலர் தலைவன் ''சரி சரி!

எனக்கொரு புரவியைக் கொடுங்கள். என்னை ஏமாற்றியவனைப் பிடித்து வருகிறேன்'' என்று கூறினான்.

''வேண்டாம் ஸர்தார். போகாதீர்கள். ரவிசந்த் ஏதோ தந்திரம் செய்கிறான்'' என்று கூறிக்கொண்டே காவலர் தலைவனை சூழ்ந்து கொண்ட காவலர்களை இடித்து வழி செய்துகொண்டு, முன்னுக்கு வந்து சொன்னான் சுபான்.

''யாரவன் ரவிசந்த்?'' என்று கேட்டான் காவலர் தலைவன்.

''பிருத்விராஜனிடம் உபதளபதியாயிருந்தவன். இப்பொழுது மொகலாயர் விரோதி'' என்றான் அஹமத் சுபான்.

இதைக் கேட்டு பிரமித்த காவலர் தலைவன், ''அப்படியானால் அவன்தான் இந்த வண்டியை ஓட்டிக்கொண்டு வந்திருக்க வேண்டும்'' என்றான்.

''வேறு யாருக்கும் அத்தனை நுணிவிருக்காது''என்று சுட்டிக்காட்டினான் சுபான்.

''இதை என் முன்னமே சொல்லவில்லை?'' என்று சீறினான் காவலர் தலைவன்.

''சொன்னேன். யாரும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.'' -சுபானின் பதிலில் சினம் தெரிந்தது.

''எங்கு சொன்னாய்? நீ ஏதோ புரவியைப் பற்றித் தானே சொன்னாய்?''—காவலரில் ஒருவன் சுபானை மடக்கினான்.

''புரவி அவனுடையது. புரவி, ரவிசந்த் இருவரும் இரண்டு இணைபிரியா ராட்சதர்கள். புரவியிருக்குமிடத்தில் அவனிருப்பான் என்று அலறினேன். யாரும் காதில்



வாங்கிக் கொள்ளவில்லை'' என்று குற்றம் சாட்டினான் சுபான்.

அத்துடன் விவாதத்துக்கு முடிவு கட்டிய காவலர் தலைவன் ''சரி, இனி எச்சரிக்கையுடன் போவோம். வண்டிகள் புறப்படட்டும்'' என்று கூற வண்டிகள் நகர்ந்தன. இம்முறை காவலர் தலைவன் வண்டிகளைச் சுற்றி தனது வீரர்களைக் காவல் புரிந்துவர நியமித்தான். யார் இடையே வந்தாலும் விசாரிக்காமல் கொன்றுவிட உத்தரவும் போட்டான். காவலர் சூழ்ந்த பெரும் அரணுக்குள் வண்டிகள் சென்றன. பொழுது புலர்ந்த பின்பும் எந்தவித எதிர்ப்பும் இல்லாமல் ஆயுத வண்டிகள் பயணம் செய்தன. அன்று நடுப்பகல் வரையில் வண்டிகள் எந்த எதிர்ப்புமில்லாமல் பயணம் செய்து ஆராவலியின் முதல் வளைவை தாண்டிய பிறகும் எந்த நிகழ்ச்சியுமில்லை. ஆராவலியின் சுற்றுப்பாதையில் நடுப்பகல் தாண்டியும் வெயிலின் உக்கிரம் அதிகமாயிருந்தபடியாலும், வண்டிகளை இழுத்த கோவேறு கழுதைகளின் வாய்களில் சுணைப்பின் காரணமாக நுரை தள்ளியதாலும் காட்டு முகப்பிலிருந்த தோப்பில் வண்டிகளைச் செலுத்தி நிற்க வைக்குமாறும், வண்டியிழுக்கும் விலங்குகளுக்கு புல்போட்டு தண்ணீர் காட்டுமாறும் உத்தரவிட்டான் காவலர் தலைவன்.

கோவேறு கழுதைகள் புல்லைத் தின்று நீரைக் குடித்து தலைநிமிர்ந்த சமயத்தில்தான் அந்த எதிர்பாரா நிகழ்ச்சி ஏற்பட்டது. வண்டிகள் சிறிதும் சத்தம் செய்யாமல் வந்த பத்து வீரர்களால் திடீரென சூழப்பட்டன. வண்டிகளைச் சூழ்ந்த வீரர்கள், தாங்கள் தோன்றுமுன்பாகவே தோன்றச் செய்த குறுவாள்கள் இரண்டு மூன்று வீரர்களைக் காயப்படுத்தின. வேகமாகச் சூழ்ந்த அந்த வீரர்களைக் கண்ட காவலர் தலைவன் தனது வாளை உருவினான். ''தலைவரே ! வேண்டாம். இனி எது நடந்தாலும் அது போராகாது. வீண் கொலையாகும். எனது வீரர்கள்

தோப்பின் மறைவிலிருந்தே உங்கள் அனைவரையும் குறுவாளெறிந்து கொன்றிருக்க முடியும். எங்களுக்கு வேண்டியது உங்கள் உயிர்களல்ல. இந்த வெளிநாட்டுத் தளவாடங்கள். ஆகவே யாரும் வாளை உருவவேண்டாம். ஆயுதங்களைக் கீழே போட்டு விடுங்கள்'' என்று கூறிக் கொண்டே சந்தரின்மீது ஆரோகணித்து வெளிப்போந்தான் ரவிசந்த்.

அவனை வியப்புடன் நோக்கிய காவலர் தலைவன், ''நீங்கள்தான் ரவிசந்தா?'' என்று வினவினான்.

''என் பெயரைச் சுபான் சொன்னானா?'' என்று வினவினான்.

''ஆம்''

''வேறென்ன சொன்னான்?''

''மொகலாயத் துரோகியென்று சொன்னான்.''

''அதைவிட தேசபக்தன் என்று சொல்லியிருக்கலாம்'' என்ற ரவிசந்த், கோடியில் நின்றிருந்த அஹமத் சுபானை நோக்கி, ''சுபான்! இவர்கள் ஆயுதங்களை கீழே போடச் சொல். அனாவசியமாக ரத்தம் சிந்துவதைத் தவிர்க்கலாம்'' என்றான்.

அஹமத் சுபான் பேசுவதற்குள், காவலர் தலைவன் தனது வாளை ரவிசந்தின்மீது பாய்ச்ச முயலவே, காவலரும் ரவிசந்தின் வீரர்களும் போரில் கலந்தனர். போர் சில நிமிடங்களே நடந்தன. போருக்குத் தயாராயிருந்த ராஜபுத்ர வீரர்களின் குறுவாட்கள் காவலரில் ஏழெட்டுப் பேரைக் காயப்படுத்தி வீழ்த்திவிட்டதாலும், காவலர் தலைவன் வாள், ரவிசந்தின் வாளினால் அவன்



கையிலிருந்து பறந்துவிட்டதாலும், சண்டை ஆரம்பித்த வேகத்தில் நின்றுவிட்டது. மொகலாய வீரர் யாரும் இறக்கவில்லையென்பதை உணர்ந்த ரவிசந்த், ''காவலர் தலைவரே! உங்கள் வீரர் யாரும் இறக்கவில்லை. அவர்கள் ஆயுதங்களை மட்டும் அகற்றி அவர்களை இந்த வண்டியிலேயே ஏற்றி மலைக்காட்டுக்குள் சென்று சிகிச்சை செய்கிறோம்'' என்று கூறிக்காவலனையே ஒரு வண்டியை ஓட்டச்சொல்லி அழைத்துச் சென்றான்.

மூன்று நாட்கள் கழித்து இந்தச் சம்பவத்தைப்பற்றி அறிந்த ஆஜ்மீரிலிருந்த அக்பர், தன் எதிரே நின்ற காவலர் தலைவனை நோக்கி, ''இந்த விஷயம் வெளியில் தெரிய வேண்டாம். மற்ற வீரர்களிடம் சொல்லிவிடு'' என்று கூறி அனுப்பினார்.

அடுத்து தன்னைப் பார்க்க வந்த பிருத்விராஜனிடம் அதைப்பற்றி விவரித்து ''இதைப்பற்றி உமக்கேதாவது தெரியுமா?'' என்று கேட்டார். அவர் கேள்வியில் சந்தேகம் ஒலித்தது.

# 20. குடிசையில் ஒரு சொர்க்கம்!

பிருத்விராஜனுக்கு அக்பரின் சந்தேகம் நன்றாகவே தெரிந்ததால், அவன் வெளிப்படையாகவே பேசினான். ''சக்கரவர்த்திக்குத் தெரியாததை நான் எதுவும் சொல்ல முடியாது. ஆனால் இந்த துணிகரச் செயலை நமது ரவிசந்தைத் தவிர வேறு யாரும் செய்திருக்க முடியாது'' என்று.

அக்பரின் இமைகள் சற்றே உயர்ந்தன. தமது ஆசனத்தில் சற்று அசைந்தார் மொகலாய சக்கரவர்த்தி, ''எந்த ரவிசந்த்? உன்னிடம் உபதளபதியாக இருந்தானே, அவனா?'' என்று வினவினார்.

அக்பரின் கேள்வியிலிருந்த சாமர்த்தியத்தையும் விஷமத்தையும் உணர்ந்துகொண்ட பிருத்விராஜன் ''தங்களால் போர்க் களத்திலிருந்து குற்றுயிரும் குலையுயிருமாக எடுத்து வரப்பட்டு தங்கள் நேர்பார்வையில் சிகிச்சை செய்யப்பட்டு பிழைத்தானே அதே ரவிச் சந்த் தான்'' என்று விளக்கினான்.

அக்பர் இகழ்ச்சி கலந்த புன்முறுவலொன்றை பிருத்விராஜன்மீது விசினார். ''நீ கவியல்லவா? பழியை என்மீதே திருப்புகிறாய்'' என்றார், புன்முறுவலின் ஊடே'

''கவிகள் தங்கள் ஆதரவில் இருக்கிறார்கள். ஆகவே தங்களைப் புரிந்து கொள்கிறார்கள்'' என்றான் பிருத்விராஜன்.



''இந்த ரவிசந்தின் விஷயத்தில் நீ என்ன புரிந்து கொண்டிருக்கிறாய்?'' என்று அக்பர் கேட்டார்.

''தங்களுடைய ஒற்றனாக ராணாவிடம் ரவிசந்த் சென்றிருக்கிறான் என்பதையும் புரிந்து கொண்டேன்.'' பிருத்விராஜன் குரலில் உணர்ச்சி எதுமின்றிப் பேசினான்.

அக்பர் சிந்தனையில் இறங்கினார் சிறிது நேரம். பிருத்விராஜன் உண்மையைத் தலைகீழாகத் திருப்பப் பார்க்கிறானென்பதை உணர்ந்து கொள்ள அதிக நேரம் பிடிக்கவில்லை, அவரது கூரிய அறிவுக்கு. ''நான் அனுப்பவில்லை அவனை'' என்றார் சக்கரவர்த்தி முடிவில்.

அக்பர் மேற்கொண்டு சிந்திக்கப் பிருத்விராஜன் இடம் கொடுக்கவில்லை. ''நான்தான் அனுப்பினேன்'' என்ற பிருத்விராஜன், ''சக்கரவர்த்தியிடம் ஊதியம் பெறும் தளபதி செய்ய வேண்டிய கடமையைச் செய்தேன்'' என்று அறிவித்தான்.

விருத்விராஜனின் பட்டவர்த்தனப் பேச்சையும் பொய்யையும் உணர்ந்தாலும் உணராதது போலவே நடித்த அக்பர், ''தளபதி! உம் கடமையுணர்ச்சி நம்மை பரவசப்படுத்துகிறது. ஆனால் நமது ஒற்றன் நமது வீரர்களை வெட்டிப் போடுகிறான். நமது தளவாடங்களைக் கொள்ளையடிக்கிறான். இது விசித்திரமாயில்லையா?'' என்று வினவினார்.

பிருத்விராஜன் எந்தவித வியப்பையும் முகத்தில் காட்டவில்லை. ''நான் அவனை மேவாருக்கு அனுப்பிய போதும் அவனை யாரென்று புரிந்துகொள்ளாமல் நமது வீரர்கள் தாக்கினார்களாம். அவர்களில் இருவரை அவன் வெட்டிப் போட்டானாம். சற்று முன்கோபி, அவனை எச்சரித்து எழுதுகிறேன்'' என்று சமாதானம் சொன்னான்.

''இப்பொழுது தளவாடங்களை எதிரியிடம் கொண்டு சென்றது நமக்கு சேவை செய்யத்தானாக்கும்!''-அக்பரின் சொற்களில் கேலியின் ஒலி இருந்தது.

பதிலுக்கு பிருத்விராஜன் சொன்னான், ''ராணா பிரதாப் யாரையும் எளிதில் நம்புபவரல்ல. அவர் நம்பிக்கைக்கு பாத்திரமானால்தான், அங்கு ரவிசந்த் ஜீவிக்க முடியும். ஜீவித்தால்தான் இங்கு அவ்வப்பொழுது செய்தி அனுப்ப முடியும்'' என்று.

புரிந்து கொண்டதற்கு அறிகுறியாக அக்பர் தலையசைத்து ''இன்னும் எவ்வளவு பேரைப் பலி கொடுத்து, எத்தனை தளவாடங்களை பறிகொடுத்து, ரவிசந்த் ராணாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக வேண்டும்?'' என்று வினவினார்.

''இதற்கு ரவிசந்த் தான் பதில் சொல்ல முடியும். வேண்டுமானால் அவனை இங்கு வரவழைக்கிறேன். சக்கரவர்த்தி அவர்களே விசாரிக்கலாம். ஆனால் ஒன்று நிச்சயமாக சொல்லுவேன். ரவிசந்த் இஷ்டப்பட்டிருந்தால் மறைவிலிருந்து தனது வீரர்களைக் குறுவாள்களை எறியச் சொல்லி நமது வீரர்களை மாய்த்திருக்கலாம். தளவாட வண்டியைக் காவல் புரிந்தவரில் சிலர் காயமடைந்தார்களே தவிர ஒருவர்கூட இறக்கவில்லை. இதையும் சக்கரவர்த்தியவர்கள் கவனிக்க வேண்டும். ரவிசந்த் நம்பிக்கைத் துரோகியல்ல'' என்றான் பிருத்விராஜன்.

இதே சொற்களை அன்று காலை அதே வேளையில் உதயபூரில் ராணா பிரதாப்பும் சொல்லிக்கொண்டிருந்தார். ''ரவிசந்த்! நம்பிக்கைத் துரோகியல்ல. உண்மையான ராஜபுத்ரன்'' என்று.

அந்தக் காலை நேரத்தில் கதிரவனின் கிரஹணங்களின் செந்நிறத்தில் குளிர் காய்ந்த வண்ணம் ஆயுத



வண்டிகளை ஓட்டிக்கொண்டு வந்து சேர்ந்தான் ரவிசந்த். அவன் தனது புரவியிலிருந்து குதித்தவுடன் ராணா அவனைப் பாராட்டினார். ''உன்னிடம் நான் சிறிது தவறான எண்ணம் கொண்டேன். அதற்குப் பரிகாரமும் செய்ய என்னால் முடியும். போ; அந்த விடுதிக்குள் போய் நீராட்டத்தை முடித்துக் கொள்'' என்று ஒரு ஓலைக் கொட்டகையைக் காட்டினார்.

புரவியை ஒருபுறத்தில் கட்டிவிட்டு குடிசைக்குள் நுழைந்த ரவிசந்தை, சம்பக் தனது இரு கைகளாலும் அணைத்துக் கொண்டாள். அவன் அகன்ற மார்பில் முகத்தையும் புதைத்துக்கொண்டாள். அவள் உடல் லேசாக நடுங்கிக்கொண்டிருந்ததால் அவள் தலையிலிருந்த செண்பக மலர் கொத்தும் அசைந்தது. குடிசையிலும் சொர்க்கமிருக்க முடியுமென்பதை அந்த வாலிப வீரன் உணர்ந்து கொண்டான், அந்தச் சில விநாடிகளில்

அவள் தலையில் விகசித்திருந்த மலர்களின் சுகந்தம் அவன் நாசியில் புகுந்து மயக்கத்தை அளித்தது. அணைத்த அவள் கைகளின் இறுக்கலால் மார்பில் இழைந்த அவள் திண்ணிய பங்கய மொட்டுகள் அவனுக்கு உன்மத்தத்தை ஊட்டின. அடுத்து, அவன் இடது கை அவளைச் சுற்றிச் சென்றது. வலது கையால் அவள் முகவாய்க் கட்டையைப் பிடித்து அவள் முகத்தை தூக்கியபோது செம்பருத்தி இதழ்களிரண்டும் லேசாக விரிந்தன. அவள் கண்கள் பாதி திறந்தன, அவனை நோக்கி- ''இன்று காலை என்ன சாப்பிடப் போகிறீர்கள்? சொன்னால், தயார் செய்கிறேன்'' என்று அவள் முணுமுணுத்தாள்.

பதிலுக்கு அவன் முகம் அவள் முகத்தை நோக்கிக் குனிந்தது, ''இன்று காலைக்கு அமுதம் இருக்கிறது. அது போதும்'' என்று, அவன் தனது இதழ்களை அவள் காதுக்

கருகில் கொண்டுபோய் மெதுவாகச் சொல்லி, அதே உதடுகளை அவள் கன்னத்தில் தேய்த்த வண்ணம், அவள் இதழ்களோடு இணைத்தான். அவளிடமிருந்து அமைதிக்கு அடையாளமாக பெருமூச்சொன்று வெளிவந்தது. உஷ்ணமான மூச்சு அவள் கன்னமொன்றில் விசிறியது. இருவர் உணர்ச்சிகளும் உச்சகட்டத்துக்குச் சென்று கொண்டிருந்தன.

## 21. காலம் நேரம் மறந்தனர்!

காலை நேரத்தில் ஓலைக்குடிசையில் கட்டழகி சம்பக்கைக் கட்டிப்பிடித்து அவள் கனிவாய் இதழ்களுடன் தனது இதழ்களையும் புதைத்துவிட்ட ரவிசந்த், இந்த உலகை மறந்தான். பகலை மறந்தான். நேரத்தையும் அறவே மறந்தான். மறக்கும் நிலைதான் அது. காமம் கண்ணை மாத்திரமா கட்டுகிறது! மனங்களையும் கட்டிப் போடுகிறதல்லவா?

அப்படி இருவரும் சூழ்நிலை மறந்து கண்களை மூடி இதயத்தோடு இதயம் மட்டும் பேசும் சொர்க்கத்தில் திளைத்திருந்த நேரத்தில், அவன் வலது கை அவளது முதுகைத் தடவிக் கீழே இறங்கி இடைக்குக் கீழே பருவத்தின் காரணமாக பருத்துக் கிடந்த அழகு மேட்டில் பதிந்ததால் அவள் உணர்ச்சிப் பெருமூச்சுவிட்டாள். அதன் விளைவாக அவன் கை அந்த இடத்தைவிட்டு அகன்று முன்புறம் தவழ முற்பட்டதால், அதற்கு இடமளிக்காதிருக்க அவள் அவன் உடலுடன் நெருங்கிக் கையைத் தடுத்தாள்.

''உம்'' என்ற எச்சரிக்கை ஒலி ஒன்றும் அவளிடமிருந்து வெளிவந்தது. அதனால் சற்று சுய உணர்வு வரப்பெற்ற ரவிசந்த், தனது வலது கையை உயர்த்தி அவளது தோளின்மேல் பதியவைத்து, தோளை இறுகப் பிடித்தான். ''என் சம்பா! வலிக்கிறதா?'' என்றும் வினவினான்.

அந்த ஆண்மகனின் அசட்டுக் கேள்விக்கு பதில் சொல்லவில்லை அவள். 'பெண் வலையில் சிக்கும் எந்த

ஆண் மகனும் அசடாகிவிடுகிறான்' என்று தனக்குள் சொல்லிக்கொண்டு லேசாக புன்முறுவல் செய்தாள். அந்த முறுவலின் விளைவாக லேசாகத் தனது உதடுகளிடமிருந்து விலகிவிட்ட அவள் இதழ்களை மீண்டும் தனது உதடுகளால் அவன் பற்ற முயன்றபோது அவள் இடம் கொடுக்கவில்லை. முகத்தை அவனிடமிருந்து மீட்டு, உடலையும் விடுவித்துக்கொள்ள முயன்றாள். ''ஏன் சம்பக்? அவசரமா?'' என்று அவன் வினவினான்.

''ஆம் அவசரந்தான்'' என்று முனகிய அவள், ''காலை நேரம்'' என்று எச்சரிக்கவும் செய்தாள்.

அவன் மெல்லப் புன்முறுவல் செய்து ''சம்பக்!'' என்று மெதுவாக அழைத்தான்.

''உம்?'' அவள் ''உம்'' மட்டும் கொட்டினாள்.

அவன் கையொன்று மீண்டும் அவள்மீது தவழ்ந்தது. சற்று எட்டிப்போக முயன்ற அவள் பூவுடலை மெதுவாகத் தன்னை நோக்கி இழுக்க முயன்றது. அவள் இடங் கொடுக்கவில்லை. அவன் காரணம் காட்ட முயன்று, ''காதலுக்கு நேரமும் வேளையும் உண்டா சம்பக்?'' என்று வினவினான்.

அவள் தனது உடலை இழுக்கச் சற்றே அனுமதித்து ''மற்றவர்களுக்கு உண்டு'' என்றாள் மிக ரகசியமாக, அவன் காதுக்கருகில். காதுக்கருகில் இதழ்கள் சென்றபோது அவன் கன்னத்துடன் தனது கன்னத்தையும் இழைத்தாள்.

அவன் கேட்டான் ''சம்பக்! மற்றவர்களைப்பற்றி நமக்கென்ன?'' என்று.

''உங்களுக்கு இல்லாதிருக்கலாம். நான் பெண்...'' என்று சுட்டிக் காட்டினாள் அவள்.



''அதனால் தானே உன்னை நான் விட மறுக்கிறேன்...'' என்று ரவிசந்த் சாமர்த்தியமாகப் பேசினான்.

''அப்படியா?'' - அவள் கேள்வியில் கேலி இருந்தது. அதில் ஆவலும் கலந்திருந்தது.

''ஆம் சம்பக்.''

''இதுவரை 'நீங்கள் பெண்களையே பார்த்ததில்லையா?''

''ஆயிரக்கணக்கான பெண்களைப் பார்த்திருக்கிறேன் டில்லியில். ஆனால்....''

''உம் சொல்லுங்கள்''

''பெண்களைப் பார்ப்பது வேறு, மனத்தைவிடுவது வேறு.''

''இப்பொழுது மனத்தை விட்டுவிட்டீர்கள்?''-இதைக் கேட்ட அவள் மெதுவாக நகைத்தாள்.

''இப்பொழுது விடவில்லை...'' என்று அவனும் கூறினான். ஆனால் அவன் சொற்களில் கேலியில்லை, சொற்களில் உஷ்ணமிருந்தது.

அவள் தனது முகத்தை அவனிடமிருந்து நீக்கி அவனை நோக்கினாள். ''எப்பொழுது...?'' மேற்கொண்டு கேட்கவில்லை அவள்.

விடப்பட்ட சொல்லை புரிந்துகொண்ட ரவிசந்த் ''இந்த என் மனம் என்னைவிட்டு அகன்று சில நாட்களாகின்றன. மலைக்காட்டின் மரத்தடியிலிருந்தே அது என்னை விட்டு விலகிவிட்டது. சில வேளைகளில் வருகிறது என்னிடம். ஆனால் தனித்து வரவில்லை. வேறொரு அழகு முகத்தை அள்ளிக்கொண்டு வருகிறது. என்னைச் சித்திக்க விடுவதில்லை அது. மனம் பொல்லாதது சம்பக்'' என்றான்.

அவன் சொற்கள் அவள் உணர்ச்சிகளைக் கொந்தளிக்கச் செய்தன, மீண்டும் அவள் அவனுடன் இழைந்தாள். ''மனத்துக்கு உடையவர் எப்படி?'' என்று கேட்டாள். ''அவரும் பொல்லாதவர்தானே?'' என்றும் வினவினாள்.

அவன் பதில் சொல்லவில்லை. பொல்லாத்தனத்தை செய்கையால் காட்டினான். அவன் இடது கை மீண்டும் அவளை வளைத்தது. வலது கை அழகை ஆராய்வதில் முனைந்தது. அவள் கோபத்தைக் காட்டி ''சும்மா இருக்கிறீர்களா இல்லையா?'' என்று பொய்ச் சீற்றத்தைக் காட்டினாள்.

''பொல்லாதவன் சும்மா இருப்பானா'' என்று வினவிய ரவிசந்த், அவளை தனது இருகைகளிலும் தூக்கிக் கொண்டான். அவன் உடலுக்குக் குறுக்கே அவள் பூவுடல் கிடந்தது. ஓலைக் கூரையின் உட்புகுந்த இருசூர்யாச்மிகள் அவள் மார்புமீது பட்டு அதன் கூர்மையையும் திண்மையையும் அளவையும் எடுத்துக் காட்டவே உன்மத்தம் கொண்ட ரவிசந்த் அவற்றை நோக்கிக் குனிந்தான். அவன் பிடியிலிருந்து விடுபடத் திமிறினாள் சம்பக். அதனால் நிமிர்ந்த கூரிய மொட்டொன்று அவன் முகத்தில் தாக்கவே ரவிசந்த் பிரமை பிடித்து நின்றான். அந்த சில வினாடிகளில் அவள் அவன் மடியிலிருந்து நழுவி விட்டாள். அதற்குமேல் அவனுக்கு இடங்கொடுப்பது ஆபத்தில் முடியும் என்ற காரணத்தால், ''நீங்கள் நீராடத்தானே இங்கு வந்தீர்கள்?'' என்று வினவினாள்.

''ஆம். அப்படித்தான் ராணா சொன்னார்'' என்றான் ரவிசந்த்.

''ஆனால் உங்களுக்கு நீராட இஷ்டமில்லையா?''

''உண்டு.''

''அப்படியானால் அதற்கு ஏற்பாடு செய்கிறேன்.''



''ஒரு ஏற்பாடும் வேண்டாம்.''

''ஏன்?''

''நான் உதயசாகரத்தில் நீராடப் போகிறேன்.''

''அதற்கு இங்கு வருவானேன்?''

''ராணா உத்தரவிட்டார், அதை மீறமுடியுமா?''

இதைக் கேட்டதும் சம்பக் அவனை அணுகிவந்து அவன் கழுத்தில் தனது இருகைகளையும் கோத்துக் கொண்டு ''ரவிசந்த்! உன்னைப்போல ஒரு அயோக்கியனை நான் இதுவரை பார்த்ததில்லை'' என்றாள்.

பதிலுக்கு ரவிசந்த் நகைத்தான். ''என் நகைக்கிறாய் ரவிசந்த்?'' என்று அவள் கேட்டாள்.

''உன்னைப்போல ஒரு பெண்ணை நானும் பார்த்ததில்லை'' என்றான்.

''நான் என்ன அவ்வளவு கெட்டவளா?'' என்றாள் சம்பக், அவள் குரலில் சினம் தெரிந்தது.

''கெட்டவள் என்று நான் சொன்னேனா,'' என்று அவன் வினவினான்.

''அப்படியானால் உங்கள் சொற்களுக்கு என்ன பொருள்?'' என்று கேட்டாள் அவள்.

''உன்னைப்போன்ற அழகியை நான் பார்த்ததில்லை. உன்னைப்போல் துணிவுள்ளவளை நான் பார்த்ததில்லை'' என்று அவன் விளக்கினான். அத்துடன் ''அதனால் '' என்ற சொல்லையும் கூட்டி வாசகத்தை முடிக்காமல் விட்டான்.

''அதனால்?''-கேள்வி எழுப்பினாள் சம்பக்.

''உன்னைத் திருமணம் செய்துகொள்ள முடிவுசெய்து விட்டேன்'' என்றான் ரவிசந்த்.

''அதற்கு என் சம்மதம் வேண்டாம் போலிருக்கிறது?'' என்று அவள் கேட்டாள்.

''வேண்டாம்.''-திட்டமாயிருந்தது அவன் பதில்.

''ஏன்?''

''ராணாவின் சம்மதம் இருக்கிறது. அது போதும்.''

''நான் என்ன ராணாவின் விற்பனைப் பொருளா?''

''இல்லை. ஆனால் உனக்கு எது நல்லது? யார் தகுந்த புருஷன் என்பது அவருக்குத்தான் தெரியும்.''

''அதை நீங்கள் எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?''

''அவர் என்னை இந்தக் குடிசைக்கு அனுப்பியதிலிருந்து'' என்ற ரவிசந்த், தனது கழுத்தில் சுற்றிக் கிடந்த அவள் கைகளைப் பிரித்து அவளைத் தன்னெதிரே நிற்கவைத்துப் பிடித்துக்கொண்டான். அவன் கண்கள் அவளது அழகு அம்சங்களிலெல்லாம் ஓடலாயின. அதைக் கண்ட அவள் கண்கள் நிலத்தை நோக்கின. அவனும் அந்த தரையை நோக்கினான். தரை கரடுமுரடாகத்தான் இருந்தது. ''இருப்பினும் என்ன?'' என்று அவன் நினைத்தான்.

அவன் நினைப்பை அவளும் புரிந்து கொண்டிருக்க வேண்டும். ஆகவே திரும்பி வெளியே செல்ல முயன்றாள். அவன் அவளை நெருங்கி மீண்டும் குடிசைக்குள் இழுக்க நினைத்தான். அப்பொழுது ஒலித்தது, பகவான்தாஸின் குரல் வெளியிலிருந்து ''ரவிசந்த், ரவிசந்த்!'' என்று.

அந்த அழைப்பு அந்த இருவர் வேகத்தையும் துண்டிக்கவே, சம்பக் வெளியே சென்று விட்டாள். போகு முன்பு ''பிறகு சந்திப்போம்'' என்று சொல்வது போல ஒரு பார்வையை வீசிவிட்டும் சென்றாள்.



அவள் சென்றதும், பகவான்தாஸ் உள்ளே நுழைந்தான். குடிசைக்கோடியில் அண்டாவிலிருந்த ஜலத்தைப் பார்த்தான். இன்னும் ''நீராடவில்லையா?'' என்று வினவினான் சினத்துடன்.

''இல்லை.''

''ஏன்?''

''ஏரியில் நீராடப்போகிறேன்''

''அதற்கு அவகாசமில்லை. உன்னை நீராடியதும் உடனடியாக அழைத்துவரச் சொல்லியிருக்கிறார் ராணா.''

''ஏன்?''

''எனக்கெப்படித் தெரியும்?''

''சரிசரி, வருகிறேனென்று ராணாவிடம் தெரிவி. அரை வினாடியில் நீராட்டத்தை முடித்துக் கொள்கிறேன்'' என்ற ரவிசந்த் தனது ஆடைகளைக் களைந்து அங்கிருந்த ஒரு கயிற்றுக் கட்டிலில் வைத்தான். பிறகு அண்டாவிலிருந்த குளிர்நீரில் நீராடினான். அங்கு நீராட்டத்துக்கு வேண்டிய சகல வசதிகளும் இருந்தன. ஒரு மூலையில் சிறு மஞ்சத்தில் வாசனைப் பொடி இருந்தது. நீராட்டத்துக்குப் பின்பு நெற்றியில் தீட்டிக்கொள்ளக் கோபி, சந்தனமும் இருந்தன. ஆனால் புத்தாடை எதுமில்லை. 'போயும் போயும் நீராடி விட்டு இந்த பழைய உடைகளையா அணிந்து கொள்வது?' என்று எண்ணமிட்டவாறே நீராடித் தலை துவட்டி உடலையும் துடைத்துக் கொண்டான் அந்த சமயத்தில் குடிசைக் கதவு லேசாகத் திறந்து நீண்ட வாளொன்று உள்ளே நுழைந்தது. அதன் நுனியில் புதுச் சராயொன்றும் காட்சியளித்தது. அதை அவன் எடுத்துக் கொண்டதும் வாள் வெளியே சென்று மீண்டும் மேலங்கியுடன் உள்ளே நுழைந்தது. இப்படி படிப்படியாக அவனுக்கு புத்துடை வழங்கப்பட்டதும் வாள் சென்று

மறைந்தது. ரவிசந்த் புத்துடை புனைந்து வெளியே வந்தான். சற்று எட்டத் தெரிந்த இன்னொரு குடிசையின் கூரையில் கையில் வாளொன்றை ஏந்தி சம்பக் நின்றிருந்தாள். அவனைக் கண்டதும் திரும்பி வேகமாக நடந்து சென்றாள். ரவிசந்த் அவளைத் தொடர்ந்தான் வேகமாக. அவள் நாலைந்து குடிசைகளைத் தாண்டிப் பெரிதாகக் காணப்பட்ட குடிசையொன்றில் நுழைந்தாள். அவனும் வேகமாக நுழைந்து சட்டென்று அவளைக் கட்டிப் பிடிக்க முயன்றான். கைகளில் அவள் எட்டவில்லை. காற்றைத் தான் பிடிக்க முடிந்தது அவன் கைகளால். அதைக் கண்டு யாரோ நகைத்தார்கள். பெண்வெறி அகன்று சுய அறிவு வரப்பெற்ற ரவிசந்த் நகைப்பது யாரென்று பார்த்தான். அத்தக் குடிசையின் ஓரத்தில் ஒரு சிறு மஞ்சத்தில் ராணா பிரதாப சிம்மன் அமர்ந்திருந்தார். அவர் பக்கத்தில் கம்பீரமாக அரசியைப்போல் நின்றிருந்தாள் சம்பக். அவள் அவனைக் கண்டதும் அரசியைப்போல் தலை தாழ்த்தி வரவேற்றாள். ''ரவிசந்த்! அரசர் உங்களுக்கு புதுப்பணியை அளிக்கப்போகிறார். அதற்கு இன்று மாலையே நீங்கள் புறப்படவேண்டும்'' என்று உத்தரவிட்டாள்.

''சம்பக்!'' என்று ஏதோ சொல்ல முற்பட்டான் ரவிசந்த்.

''ராணாவின் மந்திரியைப் பெயர்சொல்லி அழைக்க ராஜசமஸ்தானத்தில் அனுமதிக்கப் படுவதில்லை'' என்றாள் சம்பக். அவள் குரலில் கம்பீரம் இருந்தது. ஆணையிடும் தோரணையும் இருந்தது.

அந்தத் தோரணையையும் மிடுக்கையும் கண்ட ரவிசந்த் பிரமிப்பின் எல்லையை அடைந்தான். பெண்களுக்கு அதிகாரம் கொடுப்பது எத்தனை ஆபத்து என்பதை உணர்ந்தான். அதைப்பற்றிய சுலோகத்தையும் சொன்னான். ''பாலநாயகம், படுநாயகம், ஸ்திரீ நாயகம், அநாயகம் (சிறுவன் ஆட்சி, பலபேர் ஆட்சி, பெண் ஆட்சி இவை அராஜகத்தை விளைவிக்கும்)'' என்று.



இதைக் கேட்ட ராணா மெல்ல நகைத்தார், ''சம்பக் பெண் அல்ல'' என்றும் சொன்னார். அத்துடன் நிற்கவில்லை அவர். அவள் பத்து ஆண்களுக்கு சமம். இன்று மாலை நீ புறப்படும்போது அவளும் வருவாள். பிறகு நீயே புரிந்து கொள்வாய்'' என்றும் சொன்னார்.

''இன்று மாலையா?''

''ஆம்,''

''எங்கே போகவேண்டும்?''

''சம்பக் சொல்லுவாள்''

இதைத் திட்டமாகச் சொன்ன ராணா, அவன் போகலாமென்பதற்கு அறிகுறியாகக் கையை அசைத்தார்.

ரவிசந்த் குழப்பத்துடன் வெளியே வந்தான். குடிசை வாயிலில் நின்ற பகவான்தாஸ் பல்லை இளித்தான். அந்தப் பற்களை உடைத்துவிடவேண்டும் போலிருந்தது. ரவிசந்துக்கு. ஆனால் கோபத்துக்கோ வேறு விவகாரத்துக்கோ அது சமயமில்லை என்று நினைத்து தூரத்தே தெரிந்த ஆயுத வண்டிகளை நோக்கி நடந்தான். அன்று மாலை அவன் உதயபூரைவிட்டு மீண்டும் கிளம்பினான். இம்முறை அவனுடன் சம்பக் மட்டுமே சென்றாள். பயணம் எத்தனை அபாயமானது என்பதை ஆரம்பத்தில் உணரவில்லை ரவிசந்த். உணர்ந்தபோது ராணாவைச் சபித்தான். ''இங்கு காதலைப் போல்தான் நிகழ்ச்சிகளும். காலம் நேரம் கிடையாது'' என்று உள்ளூர கறுவிக் கொண்டான்.

## 22. அருவிக்கரை கூடாரம்!

அன்று மாலை நேரத்தில் உதயபூர் அதன் வறுமையிலும் அற்புதமாகக் காட்சியளித்தது. மீண்டும் மீண்டும் ஏற்பட்ட மொகலாயர் படையெடுப்புகளால் பாழ்பட்டு இடிந்து நின்ற மாளிகைகளில் அதிக விளக்குகள் எரியாவிட்டாலும் ராணா வேண்டுமென்றே நிர்மாணித்திருந்த குடிசைகளில் உள்ளும் புறமும் ஏற்றப்பட்ட சின்னஞ்சிறு விளக்குகள் பெரிதாகப் பளிச்சிட்டு, கெட்டாலும் மேன் மக்கள் மேன் மக்களே என்ற முதுரைக்கு அத்தாட்சியாக விளங்கியது உதயபூர். எத்தனை ஏழ்மையிலும் உதயபூர் ராஜபுத்ரர்களின் உக்கிரமோ வீரமோ குறையவில்லை என்பதை அறிவுறுத்தும் வகையில் தூரத்தே இருந்த உதயசாகரத்தின் அலைகள் மாலையில் பெரிதாக வந்த காற்றினால் உந்தப்பட்டு பேரிரைச்சலைக் கிளப்பின. அந்த இரைச்சலுடன் போட்டி போடும் நோக்கத்துடன் ஆராவலி மலைத்தொடரின் அந்தப் பகுதியின் பெரிய மரங்கள் உஸ் உஸ்ஸென்று பெரிதாகக் காற்றைக் கிளப்பி ஊவென்று பயங்கரமாக ஊதவும் முற்பட்டன. இப்படி பெருங்காற்று அடித்த விந்தையையும் குடிசை விளக்குகள் காட்டிய கண் சிமிட்டலையும், பாழடைந்தும் பாழடையாமலுமிருந்த மாளிகைகள் பேய்களைப் போல் நின்றிருந்த கடும் தோரணையையும் பார்த்துக்கொண்டே அந்த ராஜவீதியின் ஓரத்துக்கு நடந்த ரவிசந்த் மலையின் பாறையொன்றில் ஏறிச் சில வினாடிகள் நின்றான். சற்று எட்ட இருந்த ஆயுத வண்டிகளையும் கவனித்தான். அவற்றிலிருந்த எல்லா ஆயுதங்களுமே அகற்றப்பட்டிருந்ததையும் வண்டிகள் இழுத்துவந்த கோவேறு கழுதைகள் சிறிது தூரத்தில்



சேர்த்து நிறுத்தி வைக்கப்பட்டு, அவற்றுக்கு ராணாவின் பணியாட்கள் தீனி வைத்து உடல்களையும் கால்களையும் வருடிக் கொண்டிருந்ததையும் பார்த்து, ராணா பார்ப்பதற்குத்தான் முரடரே தவிர அவருடைய இதயத்தில் ஜீவகாருண்யம் பூர்ணமாக இருப்பதையும் புரிந்துகொண்டான். மெல்ல மாலை மறைந்து இருளும் கவியத் தொடங்கிய நேரத்தில், இரு புரவிகளுடன் வந்த சம்பக் "இதோ தங்கள் சந்தரையும் கொண்டு வந்திருக்கிறேன்..." என்று சொல்ல முற்பட்டவள், சட்டென்று பேச்சை மாற்றி "என்ன அத்தனை உன்னிப்பாக ராஜ வீதியைக் கவனிக்கிறீர்கள்?" என்று வினவினாள் ரவிசந்தை நோக்கி.

ரவிசந்த் உடனடியாக பதில் சொல்லவில்லை. அவன் கண்கள் உதயபூரின் வீதிகளையும் கோவேறு கழுதைகளையும் நோக்கிக்கொண்டேயிருந்தன. அவன் பதில் சொன்னபோது அவன் சொற்களில் துயரம் ஒலித்தது. "சம்பக்! நான் ராஜவீதியை மட்டும் கவனிக்கவில்லை. இந்தப் பாறையில் ஏறிப்பார். உதயபூர் முழுவதுமே தெரிகிறது" என்றான்.

சம்பக் அவனையும் நோக்கி உயரமாயிருந்த பாறையையும் நோக்கினாள். பிறகு தனது கையிலிருந்த புரவிகளின் கடிவாளக் கயிறுகளை புரவிகளின் முதுகுகள்மீது எறிந்துவிட்டு அந்தப் பாறை மீது ஏறி அவனுடன் சேர்ந்து நின்றாள். அவன் கையொன்று அவள் தோளை வளைத்துத் தன்னுடன் இணைத்துக் கொண்டது. "சம்பக்! உதயபூரின் நிலையைப் பார். ஒரு காலத்தில் மிகப் பிரசித்திப் பெற்ற நகர் இது. ராணா பிரதாப்பின் தந்தை ராணா உதயசிம்மனால் சிறப்பாக திரும்பவும் நிர்மாணிக்கப்பட்டது. சற்று தூரத்தில் உதய சாகர ஏரி பெரிய சமுத்திரம் போல் தெரிகிறது. ஆனால் இத்தனையிருந்தும் இதன் ராஜவீதி பழுதுபட்டிருக்கிறது.

அதை அடுத்து அடுத்து இருக்கும் மற்ற வீதிகளின் நிலையும் சீரழிந்து கிடக்கின்றன. ஆனால் ராணா பிரதாப் அந்த ராஜவீதி மாளிகைகள், வணிகத் தெரு, வணிகக் கிடங்குகள் ஆகிய எதையுமே சீர்படுத்தவில்லை. அவற்றை அடுத்து குடிசைகளை கட்டியிருக்கிறார். பழைய மாளிகைகளில் விளக்குகள் இல்லை. இந்தக் குடிசைகளில் விளக்குகள் மின்னுகின்றன. இதற்குக் காரணம் புரியவில்லை எனக்கு'' என்றான்.

சம்பக்கின் மலர்ந்த தாமரை வதனம் துன்பத்தால் சுருங்கி மீண்டும் மொட்டாயிற்று. அதைப் பார்த்து வினவினான் ரவிசந்த். ''சம்பக் தாமரை குவிந்துவிட்டதே?'' என்று.

''இயற்கை'' என்றாள் சம்பக்.

''எது இயற்கை?''-ரவிசந்த் வியப்புடன் வினவினான்.

''மாலை நேரத்தில் தாமரை குவிந்து மொட்டாவது'' என்ற அவள், பெருமூச்சு விட்டாள்.

''உன் துன்பத்திற்குக் காரணம்?'' என்று வினவினான் ரவிசந்த்.

''உங்கள் சொற்கள். இப்பொழுது இந்த மாநகரைப் பார்க்கும்போது எனக்கு வேதனையாயிருக்கிறது. இந்த ராஜவீதி மாளிகைகளும் அதோ எட்டத் தெரியும் அரண்மனையும் ஒரு காலத்தில் சிற்பத்தின் இலட்சியமாக இருந்ததாகக் கேள்வி. வணிகவீதி மாளிகைகளில் முத்தும் ரத்தினமும் கொழிக்கும் என்று சொல்வார்கள். ஆனால் உங்களுக்கு முன்பே சொல்லியிருக்கிறேனென்று நினைக்கிறேன். 'இந்த ராஜபுதனம் செயலிழந்தது படாடோபத்தாலும் சுகத்தாலும்' என்று ராணாபிரதாப் நினைக்கிறார். பட்டாக்கத்தியைப் பிடிக்க லாயக்கில்லை என்று நினைக்கிறார். சுகவாழ்வை நினைப்பவனிடமிருந்து சுதந்திரம் பறி போவது சுலபம் என்று நினைக்கிறார். கஷ்டத்திலும் அதனால் உண்டாகும் தியாகத்திலுந்தான் சுதந்திரம் பெறப்படுகிறது, நிலைத்து நிற்கிறது என்பது ராணா பிரதாப்பின் சித்தாந்தம். ஆகையால் இந்த நகரிலுள்ள யாரும் மாளிகைகளை உபயோகப்படுத்தக் கூடாது என்று உத்தரவிட்டிருக்கிறார். குடிசைகளைக் கட்டி வாழ வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார். பொன், வைரம் எதுவும் கூடாதென்று திட்டமான உத்தரவிருக்கிறது. இரவும் பகலும் வீரர்கள் சண்டைப்பயிற்சி செய்கிறார்கள். குடிசைத் தரையில் படுக்கிறார்கள். உணவுக்கும் விதி இருக்கிறது. சத்தான உரம் அளிக்கக் கூடிய உணவை உண்ண உத்தரவிருக்கிறது. சதைபோடும் படாடோப உணவு அனுமதிக்கப்படுவதில்லை. உதயபூரை ஒரு ராணுவ முகாமாக ஆக்கியிருக்கிறார் ராணா'' என்று விளக்கினாள் சம்பக்.



ரவிசந்த் தொடர்ந்து அந்த நகரை நோக்கினான். ''சம்பக்! இதிலும் ஒரு அழகு இருக்கிறது. குடிசை விளக்குகளே அலங்காரமாகத் தானிருக்கிறது. எதிரி வண்டிகளை இழுத்துவந்த கோவேறு கழுதைகளுக்கும் உபசாரம் பலமாக நடக்கிறது'' என்று அவற்றுக்குத் தீனி வைத்துக் கொண்டிருந்த வீரர்களைக் காட்டினான்.

''வண்டிகளும், அதை இழுக்கும் மிருகங்களும் நமக்கு எதிரிகளல்ல, நம்மிடம் சிக்கிய பின்பு அவை நம்மைச் சேர்ந்தவை. இது ராணாவின் கருத்து'' என்றாள் சம்பக்.

''சிறை பிடிக்கப்படும் எதிரி வீரர்கள்?''— ரவிசந்த் விஷமமாகக் கேட்டான்.

''அவர்கள் எதிரிகள். ஏனென்றால் அவர்கள் மனிதன்கள். மனிதன் சிந்திக்கிறான். அவன் சிந்தனையில்

எப்பொழுதும் கெடுதலிருக்கும். நம்மிடம் சிக்கும் விலங்குகள் சிந்திப்பதில்லை'' என்று ராணாவின் சித்தாந்தத்தை எடுத்துச் சொன்னாள் சம்பக்.

''ரவிசந்த் லேசாக நகைத்தான். ''தவறு சம்பக். எனது சந்தர் இருக்கிறதே, அது மனிதர்களைவிட சிந்திக்க வல்லது. ஆனால் ஒருவனிடந்தான் அடங்கும்'' என்று சுட்டிக்காட்டினான் ரவிசந்த்.

''நீங்களும் உங்கள் சந்தரும் சகலத்துக்கும் விலக்கு'' என்றாள் சம்பக்.

''எப்படி?''

''உங்கள் சம்பக்கை நீங்கள் நம்புகிறீர்கள். ராணா உங்களை நம்புகிறார். இல்லாவிட்டால் என்னை உங்களுடன் தனியாக அனுப்புவாரா?''

''உன்னை என்னுடன் அனுப்புவது எனக்கு அனுகூலமென்று ராணா நினைக்கிறாரா?''

''ஆம்''

''எப்படி?''

''உங்களுக்கு சமயத்தில் கை கொடுப்பேன்''

''அது திருமணத்தின்போது.''

''இப்பொழுது நாம் செல்லுமிடம் திருமண மண்டபமல்ல.''

''வேறு எது?''

அவள் சிறிது நிதானித்துவிட்டுப் பதில் சொன்னாள். அதைக் கேட்ட ரவிசந்த் அதிர்ச்சியடைந்தான். ''நாம் முதலில் சந்தித்தோமே அந்த இடம் நினைவிருக்கிறதா?'' என்று வினவினாள் சம்பக்.



''அதை எப்படி மறக்க முடியும்! உன்னையும் பிரதாப் ராணாவையும் சந்தித்த இடமல்லவா அது?'' என்று பதிலைக் கேள்வியாகக் கொடுத்தான் ரவிசந்த்.

''ஆமாம், அது ராணாவுக்கு மிகவும் பிடித்த இடம். அதுதான் ஆராவலி மலைத்தொடரில் ஏறும் இடங்களில் சிறந்தது. அந்த அருவியில் நீராடுவதும் அவருக்குப் பேரானந்தம். அங்கிருந்து ராஜபுதன பாலைவனத்தில் வரும் மொகலாயப்படைகளை வேவு பார்ப்பதும் சுலபம் என்றும் ராணா நினைக்கிறார்'' என்றாள் சம்பக்.

இதைக்கேட்ட ரவிசந்த் நகைத்தான். ''நல்ல இடம்! நல்ல இடம்!'' என்று கூறவும் செய்தான், நகைப்பினூடே.

''அதற்கு நகைப்பானேன்?'' -சீறினாள் சம்பக்.

''மொகலாயருக்கும் இப்பொழுது அந்த இடம் தெரியும். என்னைத் துரத்திவந்த மொகலாய வீரர்களில் ஒருவனைக் கொன்றதும் மற்றவரைத் துரத்தியதும், இப்பொழுது மொகலாய வட்டாரங்களில் அக்பர் உட்பட சகலருக்கும் தெரிந்திருக்கும். அங்கு நாம் சென்றால் எதிரிகளின் பார்வையில் நிச்சயம் படுவோம்'' என்று விளக்கினான் ரவிசந்த். ''சரி, அதுபற்றிச்சிந்தித்துப்பயனில்லை; ராணாவின் உத்தரவு அதுவானால் புறப்படுவோம்''என்று சொல்லி, அவள் தோளை வளைத்திருந்த தனது கையை எடுத்துவிட்டு, பாறையிலிருந்து குதித்து, சந்தரை நோக்கி நடந்து, அதன் முதுகிலிருந்த கடிவாளத்தைக் கையில் எடுத்துக்கொண்டு அதன்மீது தாவி உட்கார்ந்தான்.

அவனைத் தொடர்ந்து சம்பக்கும் தனது புரவியில் ஏறிக்கொள்ளவே, இரு புரவிகளும் மலையின் உயர்ந்த பகுதியை நோக்கி ஏறத் தொடங்கின. சிறிது தூரம் சென்றதும் நன்றாக அடர்ந்துவிட்ட காட்டுமரங்களின்

ஊடே விரைந்தன. நீண்ட நேரம் இருவரும் மௌன மாகவே பயணம் செய்தனர். சுமார் நான்கு நாழிகை பயணத்துக்குப் பிறகு சற்று திசைமாற்றி சம்பக் தனது புரவியைச் செலுத்தவே சுயநினைவு வரப்பெற்ற ரவிசந்த், ''இதல்லவே அருவிக்குச் செல்லும் வழி'' என்றான்.

சம்பக் அவனைத் திரும்பிப் பார்க்காமல் முன்னால் தனது புரவியைச் செலுத்தியவண்ணம் சொன்னாள். ''பழைய வழி அல்ல; ஆனால் இது குறுக்கு வழி'' என்று.

''இதனால் என்ன அனுகூலம்?'' என்று வினவிய ரவி சந்த் தனது புரவியை அவளுடைய புரவியின் பக்கத்தில் செலுத்தினான்.

''இது சாதாரணமாக எல்லாரும் வரும் வணிகர் வழி அல்ல. இங்கு ராஜபுத்ர வீரர் கண்காணிப்புக்கூடக் கிடையாது'' என்று சுட்டிக்காட்டினாள் சம்பக்.

''இந்த வழி அத்தனை ரகசியமானதா?''

''ஆம். கடுமையானது. ஆகையால் யாரும் வருவது கிடையாது.''

''அப்படியா?''

''ஆம். தவிர, பழைய வழியில் போனால் அருவியை அடைய ஒரு நாளாகும். இடையில் முன்புபோல் இளைப் பாற வேண்டியிருக்கும். இந்த வழி இந்த இரவிற்குள் அருவிக்கரைக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும்'' என்ற சம்பக் தனக்குள் நகைத்துக் கொண்டாள்.

''இரவில் தங்கினால் என்ன?'' என்று கேட்டான் ரவிசந்த். அவன் குரலில் ஆவல் ஒலித்தது.



19413
3492936

''இப்பொழுது உங்களுடன் தனியாயிருக்கிறேன்...'' -வாசகத்தை முடிக்கவில்லை அவள்.

''முன்புந்தான் அப்படி இருந்தாய்'' என்று சொன் னான் ரவிசந்த்.

''இல்லை, அப்பொழுது பகவான்தாஸும் இருந் தார். உங்கள் மீது குறுவாளை வீச இப்போது யாரும் இல்லையே'' என்று சொன்ன சம்பக், தனது சொற்களில் போலி வருத்தத்தைக் காட்டினாள்.

ரவிசந்த் சீற்றம் கொண்டான். ''உன்னைக் காத்துக் கொள்ள உன்னால் முடியாதா? காப்பாற்ற அந்த தடியன் வேண்டுமா?'' என்று கேட்டான் சீற்றம் குரலிலும் ஒலிக்க.

''என்னைக் காப்பாற்றிக் கொள்ள என்னால் முடியும். உடன் வருவது வேறுயாராகவாவது இருந்தால். உங்களிட மிருந்து நான் மீள்வது கடினம்'' என்று கூறிவிட்டு, திடீரென தனது புரவியின் கடிவாளத்தை இழுத்து அதன் வயிற்றில் தனது கால்களால் உதைத்து அதைப் பறக்க விட்டாள். ரவிசந்தும் தனது புரவியை முடுக்க இரு புரவிகளும் ஒன்றன்பின் ஒன்றாக வேகமாகப் பாய்ந்து சென்றன.

மலையின் குறுக்குவழி மிக இடைஞ்சலாக இருந்தது. நெருங்கிய மரங்களின் தாழ்ந்த கிளைகள் தலையில் இடித்து விடும்போலிருந்தன. பாதையில் காட்டுப் பாறை யின் கற்கள் குத்து குத்தாக இருந்தன. சம்பக்குக்கு அந்த பாதை பழக்கமானதால் அவள் குனிந்து புரவிமேல் படுத்து புரவியை கற்களைத் தாண்டவைத்து, வேகமாகப் பயணம் செய்தாள். ரவிசந்துக்கு அந்த ஏற்பாடு எதுவும் தேவை

யில்லாதிருந்தது. சந்தர் தானே வேண்டிய இடங்களில் வளைந்தும் தாண்டியும் அதிவேகத்துடன் சென்றது. இப்படி அடுத்த நான்கு நாழிகை பயணத்துக்குப் பிறகு இருவரும் அருவிக்கரையை அடைந்தனர். அடைந்ததும் அதிர்ச்சியுற்று நின்றனர்.

முதல்நாள் ராணாவை ரவிசந்த் சந்தித்த இடத்தில் ஒரு கூடாரம் இருந்தது. சுற்றிலும் மொகலாய வீரர்கள் காவல் புரிந்து கொண்டிருந்தனர். கூடார வாயிலில் ஒரு பெரிய பந்தம் எரிந்துகொண்டிருந்தது. அருவிக்கரையின் மீது இருவரும் நின்ற சமயத்தில் சம்பக்கை பின்னால் வரும்படி சைகைசெய்த ரவிசந்த் தனது புரவியையும் பின்னுக்கு நகர்த்தி மரக்கூட்டத்தின் இருளில் நின்று மொகலாயர் முகாமை உற்று நோக்கினான். அந்தச் சமயத்தில் கூடாரத்திலிருந்து ஒரு வாலிபன் வெளியே வந்தான். அவன் முகத்தின்மீது கூடாரவாயில் பந்தம் விழவே மூச்சை இழுத்துப் பிடித்துக்கொண்டான் ரவிசந்த். அவன் அச்சத்துக்கும் எச்சரிக்கைக்கும் காரணம் தெரியாத சம்பக் ''அவர் யார்?'' என்று விசாரித்தாள்.

''ஸலீம். அக்பரின் மகன். மொகலாய இளவரசன். மகா அறிவுடையவன், ரசிகன்'' என்று அடைமொழிகளை அடுக்கினான் ரவிசந்த். அதே சமயத்தில் அருவிக்கரை ஓரமாக மலையில் ஏறி சம்பக்கும் ரவிசந்தும் மறைந்து நின்ற இடத்தை நோக்கி இளைய நவாப் ஸலீம் வந்தான்.

# 23 காமவெறியும் கொலைவெறியும்!

மொகலாய இளவரசனான ஸலீம் அலட்சியமாக அந்த மலையில் ஏறி, தானும் சம்பக்கும் இருந்த இடத்தை நோக்கிவந்ததைக் கண்ட ரவிசந்த், தனது புரவியை நன்றாகப் பின்னடையச் செய்து, சம்பக்கின் தோளைப் பிடித்து அவள் புரவியையும் பின்னுக்கு வருமாறு சைகை செய்தான். அவன் இஷ்டப்படி சம்பக் தனது புரவியை பின்னுக்கு நகர்த்திய சமயத்தில், அதன் கால் சற்று இடறவே மலையின் பெரிய கல்லொன்று பெயர்ந்து குதித்தெழுந்து அருவிமீது பாய்ந்து செல்லவே, மலையில் ஏறி வந்த இளைய நவாப்ஸலீம் தனது நடையை ஒரு வினாடி நிறுத்தி சிறிது சிந்தித்துவிட்டு மேலும் நடந்து அருவியின் மேல்பாகத்துக்கு வந்தவன், வந்ததும் சில வினாடிகள் அருவி கீழே பாய்ந்தோடும் அழகைப் பார்த்துக்கொண்டு ஒரு மரத்தின்மீது சாய்ந்து நின்றான். பிறகு மெல்ல அழைத்தான் ''ரவிசந்த்! ரவிசந்த்'' என்று.

இளைய நவாப் இப்படித் தன்பெயரை அழைப்பதைக் கேட்டதும் மேலும் அதிர்ச்சிக்குள்ளான ரவிசந்த் முதலில் பதில் சொல்லவேண்டாமென்றுதான் நினைத்தான். பிறகு தான் இருப்பது ஸலீமுக்கு தெரிந்துவிட்டதால் மறைந்திருப்பதில் பயனில்லை என்பதை உணர்ந்து, மெல்ல புரவியிலிருந்து இறங்கி இளைய நவாப் இருந்த இடத்தை நோக்கி மெதுவாக நடந்து வந்து, ''நவாப் ஸலாம்! நானிருப்பதை எப்படிக் கண்டுபிடித்தீர்கள்'' என்று வினவினான் மெதுவாக.

ஸலீம் உடனடியாக பதில் சொல்லவில்லை. தான் சாய்ந்து கொண்டிருந்த மரத்தின் அடியில் உட்கார்ந்து, அருகே பாய்ந்துகொண்டிருந்த அருவிநீரின் அருகே லேசாகக் காலொன்றை நீட்டினான். காலின் மீது பாய்ந்த அருவிநீர் அவன் காலை இழுக்க முயன்றாலும், அவன் உட்கார்ந்திருந்த உறுதியின் காரணமாக இழுக்கமுடியாத தால் அந்த இரவு நேரத்தின் அமைதியை உஸ்ஸென்ற தனது சப்தத்தால் கலைக்கத் தொடங்கியது. அப்படி அருவியில் காலை விட்ட இளைய நவாப், சந்தர் இருந்த மறைவிடத்தை நோக்கிக் கண்களை ஓட்டினான். பிறகு சொன்னான்: ''நீ வரக்கூடிய இடம் இதுதானென்று நினைத்தேன்'' என்று.

''ஏன் நவாப்? இங்கு நான் அடிக்கடி வருவதில்லையே'' என்று வினவிக்கொண்டே இளைய நவாப் இருந்த இடத்தை அணுகிய ரவிசந்த், நவாபுக்கு நன்றாகக் குனிந்து இன்னொரு முறை ஸலாம் செய்தான்.

ஸலீம் அந்த வணக்கத்தை தனது தலையசைப்பினால் ஏற்றுக் கொண்டு ''இப்படி உட்கார் ரவிசந்த்'' என்று தான் உட்கார்ந்திருந்த இடத்துக்குப் பக்கத்தில் உட்கார கையால் சைகை செய்தான்.

''இளைய நவாபுக்குப் பக்கத்தில் அடிமை எப்படி உட்கார முடியும்?'' என்று கேட்டரவிசந்த், நவாப் அருகில் நின்று கொண்டே இருந்தான்.

இளைய நவாப் அவனை உட்காரக் கட்டாயப்படுத்த வில்லை. முதல் கேள்விக்குப் பதில் சொல்லாமல் இரண்டா வது கேள்வியைத் தொடுத்து ''ரவிசந்த்! அவளும் உன்னுடன் வந்திருக்கிறாளா?'' என்று இன்னொரு குண்டை தூக்கிப்போட்டான்.



''யாரைச் சொல்கிறீர்கள் நவாப்?'' என்று வினவி னான் ரவிசந்த்.

''வேறு யாரை? சம்பக்கைதான்'' என்று அவளை நீண்ட நாளாகத் தெரிந்தவன்போல் சொன்னான் ஸலீம்.

இப்படி அதிர்ச்சியின்மேல் அதிர்ச்சியை விளைவித்த ஸலீமை உற்று நோக்கிய ரவிசந்த், ''நவாப்! இத்தனை விவரங்களை எப்படி அறிந்துகொண்டீர்கள்?'' என்று வினவினான்.

இளைய நவாப் ஸலீம் அத்தனை இருட்டிலும் புன்ன கையைப் படியவிட்டுக் கொண்டான். ''நீ அனுப்பிய செய்தியின் மூலந்தான். வேறெப்படித்தெரியும் எனக்கு?'' என்று மெதுவாக பேசினான்.

''உன் கடிதத்தில் நீ அவளைக் காதலிப்பதாகவும், அவளையும் ராணாவை வேவுபார்க்க உபயோகித்துக் கொள்வதாகவும் என் தந்தைக்கு அனுப்பிய கடிதத்தை தந்தை என்னிடம் கொடுத்தார். நமது தளவாடங்களைக் கொள்ளையடித்த விஷயத்தைக் கேட்டபோதுகூட ரவிசந்த் இதையும் நமக்காகத்தான் செய்திருக்கிறான், அவன்மீது ராணாவுக்கு நம்பிக்கை விழுந்தால்தான் அவன் வேவு பார்க்க முடியும். வேவு பார்த்தால்தான் நமக்குச் செய்தி யனுப்ப முடியும் என்று உனக்காக பரிந்து பேசினார் தந்தை'' என்ற ஸலீம், லேசாக நகைத்தான்.

ரவிசந்த் அதிர்ச்சியின் எல்லையை அடைந்தான். ஸலீம் சொல்லிக்கொண்டிருந்த இந்தப் பொய்யைச் சற்று எட்ட இருக்கும் சம்பக் கேட்டுக் கொண்டிருக்கிறாளென்பதும், தன்மீது அவளுக்கு வெறுப்பும் ராணாவிற்கு அவநம்பிக் கையும் உண்டாக்க வேறு எதுவும் தேவையில்லையென்ப

தும் புரிந்ததால், ஸலீம் மிக சாமர்த்தியமாக தன்மீது வஞ்சகவலை வீசுகிறானென்பதையும் புரிந்துகொண்டதால் தனது முகத்தில் லேசாக சினத்தின் சாயையைப் படர விட்டுக்கொண்டான். அத்துடன் சொன்னான்: ''நான் எதும் செய்தியோ கடிதமோ அனுப்பவில்லையே நவாப்'' என்ற அவன் குரலில் ஆத்திரம் நன்றாக ஒலித்தது.

ஸலீம் தனது இன்னொரு காலையும் நன்றாக அருவி நீரில் நீட்டிக்கொண்டான். ''நீ மறந்துவிட்டாய் போலிருக்கிறது. உன் கடிதம் என் கூடாரத்தில் இருக்கிறது. வேண்டுமானால் இப்பொழுதுகூட நீ பார்க்கலாம். சம்பக்கையும் அழைத்து வா. அவளும் பார்க்கட்டும். உன்னிடம் காதலிருந்தால் உன்னைப் பற்றிய எதையும் அவள் தவறாக எடுத்துக்கொள்ள மாட்டாள். பரஸ்பர நம்பிக்கையில்தான் காதல் பிறக்கிறது. காதலுக்குக் கண் கிடையாது. ஆகவே கடிதத்தில் எது இருந்தாலும் அவள் கண்ணில் படாது.'' என்ற இளைய நவாப், ''ரவிசந்த்! இந்த அருவிக்கரை காதலுக்குச் சிறந்த இடம். ராணா பிரதாப் சிம்மனுக்கும் நமக்கும் சமாதானம் ஒரு நாள் எற்படும். அன்று முதல் நான் இங்கு வரத் தவற மாட்டேன்'' என்றும் அந்த அருவி ஸ்தலத்தைப் பாராட்டினான்.

ஸலீம் சரியான காமுகன் என்பதை உணர்ந்திருந்த ரவிசந்த் கவலையடைந்தான். ஸலீம் தனது வீரர்களைக் கொண்டு சம்பக்கை வளைக்க முயன்றால் என்ன செய்வது என்று சிந்தித்தான். இந்த இளைய நவாப்பை இங்கிருந்தே அருவியில் உருட்டிவிட்டால் வேலை ஒரு விதமாக முடிந்துவிடுமே என்றும் எண்ணினான்.

அவன் எண்ணங்களை ஊகித்துக்கொண்ட இளைய நவாப் ''ரவிசந்த்! நீ இஷ்டப்பட்டால், இப்படியே அருவி



யில் என்னை உருட்டிவிட்டுச் செல்லலாம். ஆனால் வீரர்கள் கொலையில் ஈடுபடுவது கிடையாது. தவிர, சம்பக் எனது கூடாரத்துக்குச் சென்றுகொண்டிருக்கும் சமயத்தில் உன் நினைப்பு உசிதமானதும் அல்ல'' என்று சொல்லி எழுந்து நின்றான்.

அப்படி அவன் எழுந்து நின்ற சமயத்தில் ரவிசந்த் இடையிலிருந்த வாள் இரண்டு பலமான கைகளால் அகற்றப்பட்டது. அவன் கைகளிரண்டும் அவனுக்குப் பின்னால் வந்த இரு மொகலாய வீரர்களால் இழுத்துப் பிடிக்கப்பட்டன. அதேசமயத்தில் சம்பக்கின் புரவி மிக வேகமாக அருவிக்கரையில் இறங்கி கூடாரப் பாதையை நோக்கிச் செல்வது காதில் விழுந்தது ரவிசந்துக்கு.

அதற்குப் பிறகு ஸலீம் ஏதோ சைகை செய்யவே அந்த மலைப்பகுதியில் பந்தங்கள் பல திடீரெனப் பளிச்சிட்டன. அந்தக் காடெங்கும் தனக்குப் பின்னால் மொகலாய வீரர்களால் நிரம்பியிருந்ததைக் கண்ட ரவிசந்த், ஸலீம் நல்ல முன்னேற்பாட்டுடனேயே அருவிக்கரைக்கு வந்திருக்கிறானென்பதைப் புரிந்துகொண்டான். தவிர ராணாவின் வட்டாரத்தில் தன்னைக் காட்டிக் கொடுக்கும் மொகலாய ஒற்றன் இருக்கிறானென்பதையும் உணர்ந்து கொண்டதால், அப்பொழுது வெறும் வீராப்பு பயனளிக்காது என்று தீர்மானித்து, கீழே இறங்கத் தொடங்கிய ஸலீமைப் பின்தொடர்ந்தான்.

ஸலீம் தனது கூடாரத்தை அடைந்ததும், அதன் வாயிலில் புரவியில் உட்கார்ந்திருந்த சம்பக்கின் வடிவழகை தனது கண்களால் பருகினான். பிறகு ரவிசந்தை தன்னுடன் கூடாரத்துக்குள் வரும்படி சைகை காட்டி உள்ளே சென்றான். பிறகு ஒரு காவலனை விளித்து, ''வாயிலிலிருக்கும் அழகியையும் அழைத்து வாருங்கள்'' என்றும் உத்தரவு இட்டான்.

ஸலீம் கூடாரத்தின் உட்புறம் வழக்கம்போல் மிக அழகாகவும் அவன் இச்சைக்குத் தகுந்தபடியும் இருந்தது. கூடாரத்தின் ஒரு மூலை இரு பட்டுத் திரைச்சேலைகளால் மறைக்கப்பட்டிருந்ததைக் கண்ட ரவிசந்த், அதற்கு அப்புறம் இளைய நவாபின் உல்லாசப் பஞ்சணை இருக்கு மென்பதை ஊகித்துக்கொண்டான். அந்த இரு திரைச் சேலைகளிலும் லைலா மஜ்னு மற்றும் உமர்கயூபின் உல் லாச லீலைகள் பட்டு நூலால் நெய்யப்பட்டிருந்ததைக் கண்ட ரவிசந்த், ஸலீமின் காமப்பித்தை நன்றாகப் புரிந்து கொண்டான். நவாப் உட்காரும் மஞ்சத்தின் முன்பு வைக் கப்பட்டிருந்த பீங்கான் ஜாடியில் சிறந்த மது இருக்கு மென்பதும், அதை அருந்துதல் இன்ப லோகத்துக்கு செல்லும் முதற்படியென்பதையும் அறிந்து கொண்டான்.

நவாப் தனது ஆசனத்தில் அமர்ந்து எட்ட இருந்த இரு மஞ்சங்களொன்றில் ரவிசந்தை உட்காரச் சொன் னான். அடுத்து உள்ளே அழைத்து வரப்பட்ட சம்பக்கிற்கு எழுந்து தலைவணங்கி, ''நீயும் அப்படி உட்காரலாம்'' என்று ரவிசந்துக்குப் பக்கத்திலிருந்த மஞ்சத்தைச் சுட்டிக் காட்டினான்.

''உட்கார அவசியமில்லை. சொல்ல வேண்டியதைச் சொல்லுங்கள்'' என்று சீறினாள் சம்பக்.

''சொல்ல வேண்டியது ஏதுமில்லை. காண வேண்டியது தானிருக்கிறது. எனது அருமை நண்பர் எழுதின இந்தக் கடிதத்தை படியுங்கள்'' என்று கூறி, தனது கச்சையி லிருந்த ஒரு கடிதத்தை எடுத்து சம்பக்கிடம் நீட்டினான் ஸலீம்.

அந்தக் கடிதத்தை கையில் வாங்கி விளக்கொளியில் படித்த சம்பக்கின் முகம் சீற்றத்தால் குங்குமச் சிவப்பாக



மாறியது. வரிகளில் ஓடிய கண்கள் கனலைக் கக்கின. உணர்ச்சிப் பெருக்கால் அவள் பெருமூச்சு விட்டதன் விளைவாக அவள் மார்பகங்கள் எழுந்து எழுந்து தாழ்ந்து கொண்டிருந்தன. அந்த எழுச்சியையும் தாழ்ச்சி யையும் இளைய நவாப்பின் கண்கள் பருகின. இளைய நவாப் தனது உணர்ச்சிகளை அடக்கிக்கொள்ள தனது எதிரிலிருந்த மதுக்கிண்ணத்தில் சிறிது மது ஊற்றி உறிஞ்சினான். உதடுகளை நாவால் தடவியும் விட்டுக் கொண்டான். பிறகு சம்பக்கின் துடிக்கும் உதடுகளை நோக்கிதமது கண்களை நாட்டினான். அவன் முகத்தில் காமவெறி ஏறிக்கொண்டிருந்தது. ரவிசந்தின் இதயத்தில் கொலை வெறி துளிர்த்துக்கொண்டிருந்தது.

# 24. ஸலீமின் எண்ணமும் அதிர்ச்சியும்!

ஸலீம் வெகு திறமையுடன் தன்மீது சம்பக்குக்கு அவநம்பிக்கையை உண்டாக்கிவிட்டதை உணர்ந்த ரவிசந்த், இளைய நவாப்மீது தனது கச்சையில் சதா மறைந்திருக்கும் நுண்ணிய குறுவாளை எடுத்து வீச அந்த ஒரு காரணமே போதுமென்றாலும் நவாப்பின் கண்கள் சம்பக்கின் அழகைப் பருக முற்பட்டதும், கொலையைத் தவிர அந்த இக்கட்டான நிலையிலிருந்து மீள வேறு வழியில்லையென்று நினைத்து சம்பக்கை நோக்கினான். சம்பக்கின் அழகிய உடலுக்கு நவாப் கூடாரத்தின் பட்டுச் சேலையொன்று பின்னால் நெளிந்து அவள் அழகைப் பன் மடங்கு அதிகமாகக் கூடார விளக்கில் காட்டியது. விளக்கு வீச்சு நேராக சம்பக்கின்மீது விழும்படி திருப்பப் பட்டிருந்ததால் பெருமூச்சில் எழுந்து தாழ்ந்த மார்பகங்களின் உறுதியான பரிமாணத்தை அது எடுத்துக் காட்டிற்று. இது நவாப் கண்களில் காமவெறி ஏற்று வதை ரவிசந்த் கவனிக்கத் தவறவில்லை. அடுத்து நவாப்பின் கண்கள் சம்பக்கின் செவ்விய உதடுகளின் துடிப்பை ஊன்றிப் பார்த்ததால் நிலைகுலைந்த ரவிசந்த் ''நவாப்! நான் அந்த கடிதத்தைப் பார்க்கலாமா?'' என்று கேட்டான்.

நவாப்பின் கண்கள் சம்பக்கின் செவ்விய உதடுகளில் பதிந்திருந்ததால் அவன் உடனடியாகப் பதில் சொல்ல வில்லை. பிறகு பதில் சொன்னபோது அதில் அலட்சியம் இருந்தது. ''தாராளமாகப் பார்க்கலாம்...நீ எழுதியது



தானே?'' என்று சர்வ சாதாரணமாகச் சொன்னான். ''சம்பக்! அதை ரவிசந்திடம் கொடு'' என்று சிபாரிசும் செய்தான்.

கடிதத்தைப் படித்ததால் சினம் ஏறியிருந்த சம்பக்கின் கண்கள் திரும்பி ஒருமுறை ரவிசந்தை கவனித்தன. இடது கையால் அலட்சியமாக அவனிடம் கடிதத்தை நீட்டிய சம்பக் ''உங்கள் அவமானச் சின்னத்தை நன்றாகப் பாருங்கள்'' என்றாள்.

கடிதத்தை கையில் வாங்கிக்கொண்ட ரவிசந்த், அதை விளக்கொளியில் படிக்க முயன்றான். வெளிச்சம் அங்கு சரியாகத் தெரியாததாலோ என்னவோ கூடாரத்தின் நடுவே வந்து கடிதத்தை ஊன்றிக் கவனித்தான். அந்த கையெழுத்து அவன் கையெழுத்துத்தான்;சந்தேகமில்லை. அதில் கண்ட விஷயமும் அவன் எழுதியதுதான். ஆனால் அதை அவன் நவாபுக்கு எழுதவில்லை. நவாபுக்கு வணக்கம் செய்யாமல் மொட்டையாக யாரும் கடிதம் எழுத முடியாது. அதை அவன் எழுதியது பிருத்விராஜ னுக்கு; அது எப்படியோ ஸலீமின் கைகளில் சிக்கியிருக் கிறது என்பதைப் புரிந்து கொண்டதால் சிறிது நிதானத் துக்கு வந்தான். அந்த நிதானத்துடன் ஸலீமை நோக்கி, ''நவாப் தாங்கள் அவசர முடிவுக்கு வந்துவிட்டீர்கள்'' என்றான். வாசகத்தை முடிக்காமலும் விட்டான்.

ஸலீமின் கண்கள் சம்பக்கின் முகத்தைவிட்டு ரவிசந்தின் முகத்தை நோக்கின. ''இதில் முடிவுக்கு வர என்ன இருக்கிறது?'' என்று வினவினான் இளையநவாப்.

''நவாப்புக்கு இப்படி கடிதம் எழுதமுடியாது. முதலில் சர்வ வல்லமையுள்ள அல்லா (ஜல்)ஹுக்கு வணக்கம் தெரிவித்து, அடுத்தபடி சக்கரவர்த்தியின் விருதுகளைக் கூறி கடிதம் துவங்க வேண்டும்'' என்றான் ரவிசந்த்.

ஸலீம் மெதுவாக நகைத்தரன். ''ரவிசந்த்! சாதாரண ராஜாங்க கடிதங்களுக்கு அந்த முறை சரி. ஒற்றன் அப்படி சாங்கோபாங்கமாக எழுதுவது வழக்கமில்லை. ஒற்றனான உனக்கு இதை நான் சொல்ல அவசியமில்லை'' என்றும் சொன்னான் நகைப்பின் ஊடே.

''இதை நான் எழுதவில்லை. இந்தக் கையெழுத்தும் என்னுடையதல்ல'' என்றான் ரவிசந்த்.

''உன் கையெழுத்து உனக்குப் புரியாதிருக்கலாம். ஆனால் சம்பக்கைக் கேட்போமே, இது யார் கையெழுத்து என்று. இதில் சொல்லியுள்ள விஷயங்கள், அதாவது ராணா தற்சமயம் உறையும் மறைவிடம், உள்ள தளவாடங்களின் எண்ணிக்கை, அடுத்து ராணா என்ன செய்யலாம் என்ற ஊகம் ஆகியவை சரிதானா என்பதையும் சம்பக் சொல்லட்டும். சம்பக் எதைச் சொன்னாலும் நான் ஒப்புக்கொள்ளத் தயார்'' என்ற ஸலீமின் காமக் கண்கள் மீண்டும் சம்பக்கை நோக்கிச் சென்றன.

இளைய நவாப் தன்னை சரியான இக்கட்டில் மாட்டி வைத்து விட்டதையும், சம்பக்கின் மனநிலையைப் பேதலிக்கச் செய்துவிட்டதையும் உணர்ந்தான் ரவிசந்த். ஆகவே சம்பக்கை நோக்கி ''இளைய நவாபின் வார்த்தைகளை நீ நம்புகிறாயா?'' என்று வினவினான்.

சம்பக்கின் கண்கள் கனலைக் கக்கின. ''வேறு யார் வார்த்தையை நம்புவது? உங்கள் வார்த்தையையா? நாட்டின் துரோகியை நம்புவதைவிட எதிரியை நம்பலாமே'' என்று கசப்பு நன்றாகக் கலந்த சொற்களை ஆத்திரத்துடன் கொட்டினாள் சம்பக்.

இனிமேல் சொற்களால் பலனில்லையென்பதை உணர்ந்து கொண்ட ரவிசந்த் ''சரி நவாப்! இது நான் எழுதியதாகவே இருக்கட்டும். இதனால்உங்களுக்கு என்ன



பயன்? உங்களுக்கு ஏற்கனவே தெரியாதது எதையும் நான் சொல்லவில்லையே'' என்றான்.

''ஆம்'' என்று ஒப்புக்கொண்ட ஸலீம் ''நீ சக்கரவர்த்திக்குப் புரிந்துவரும் சேவைகளுக்குப் பரிசு உண்டு. உனக்கு ராஜபுதனத்தின் முக்கிய பகுதியைக்கூட கொடுக்கலாம். ஏன் மேவார் ராணா முறியடிக்கப்பட்ட பின்பு மேவாரே உனக்குக் கிடைக்கலாம்'' என்று தூபம் போட்ட ஸலீம், ''இன்று நீ இங்கு வந்ததற்கு, இந்த அழகியை என்னிடம் கொண்டுவந்து விட்டதற்கு ஏதாவது ஒரு பரிசைக்கேள்'' என்றான்.

''நிச்சயமாகத் தருவீர்களா?''—ரவிசந்தின் குரலில் பணிவும் ஆவலும் இருந்தது.

அதைக் கவனித்த சம்பக் அவனைப்பூராவுமாக வெறுத்தாள். 'இத்தகைய ஒரு அற்பனிடமா நான் என் மனத்தைப் பறிகொடுத்தேன்' என்று எண்ணி ஏங்கினாள்.

அந்தச் சமயத்தில் ரவிசந்த் சம்பக்கைத் திரும்பி நோக்கினான். அவன் கண்களில் ஏதோ செய்தி இருந்தது. ஓரளவு புரிந்தது அவளுக்கு. சாதாரண சமயமாயிருந்தால் அதைப் புரிந்து கொண்டு செயல்பட்டிருப்பாள். அன்று உள்ளம் எரிமலையாயிருந்ததால் அவன் கண்களைச் சரியாக சந்திக்கவில்லை அவள். ஆகவே ரவிசந்த் கையில் கடிதத்துடன் ஸலீமை நோக்கி நடந்தபோது, இருந்த இடத்தை விட்டு நகரவில்லை அவள்.

ரவிசந்த் அவள் மனநிலையைப் புரிந்து கொண்டிருந்தாலும் அதைப்பற்றி கவலைப்படவில்லை. அவளைஎப்படியாவது இந்த கூடாரத்திலிருந்து தப்பவைத்து விட வேண்டும் என்ற உறுதியுடன் இளைய நவாப்பிடம் சென்று அவரை நோக்கிக் குனிந்து ''நவாப்! நான் ஒற்றன்

என்பதை இவ்வளவு பகிரங்கமாக அவளிடம் தெரிவித்திருக்க அவசியமில்லை'' என்று முணுமுணுத்தான்.

''வேறு வழியில்லை''- ஸலீமும் முணுமுணுத்து''அவள் என்னிடம் வசப்பட்டதும் உன்னை விடுதலை செய்து அனுப்பி விடுகிறேன்'' என்றான், சம்பக்கின் காதில் சொற்கள் தெளிவாக விழ.

ரவிசந்த் இளைய நவாபை நன்றாக நெருங்கி''நவாப்! எனக்கு ஒரு பரிசு தருவதாகச் சொன்னீர்களே?'' என்றான்.

''ஆமாம்.''

''அப்படியானால் அதன் பெயரைச் சொல்லுங்கள்''

ஸலீம் ஏதோ சொல்ல வாயெடுக்குமுன்பு ரவிசந்தின் இடையிலிருந்த மெல்லிய குறுவாள் இளைய நவாபின் மார்பின் சதையை ருசி பார்க்கத் தொடங்கியது. ''நவாப் அசைய வேண்டாம். சிறிது அசைந்தாலும் உங்களை மேலுலகத்திற்கு அனுப்பி விடுவேன்'' என்றுகூறி, திடீரென ஸலீமை ஆசனத்திலிருந்து தரையில் மெதுவாகத் தள்ளினான். அவன் கையிலிருந்த மெல்லிய குறுவாள் மேலும் இளையநவாபின் மார்பில் புதைந்தது. அந்த நிலையிலும் ஸலீமின் கண்களில் பீதியெதுவுமில்லை. லேசாக நகைக்கவும் செய்தான். ''சற்று திரும்பிப்பார் ரவிசந்த்'' என்று சொன்னான்.

அழுத்திய கத்தியை எடுக்காமலே பாதிப் பார்வையை ஸலீமின்மீது இருத்தி மீதிப் பார்வையை சம்பக் இருந்த இடத்தில் செலுத்தினான்.

சம்பக் இரு மொகலாய வீரர்களுக்கிடையே தத்தளித்துக் கொண்டிருந்தாள். ரவிசந்தின் பார்வை சற்று திரும்பி



யதும் படுத்த நிலையில் தனது கால்களை ரவிசந்தின் வயிற்றில் உதைத்த ஸலீம் சரேலென எழுந்து நின்றான். நின்றவன் காவலரை அழைக்கவில்லை. அழைக்க அவசியமில்லை. ரவிசந்தின் குறுவாள் ஸலீமின் கைகளுக்கு மாறி இருந்தது. ஸலீம் சொன்னான் தனது வீரர்களை நோக்கி, ''அவளை அருவிக்கரையில் செண்பக மரத்தடியில் படுக்க வையுங்கள்; சிறிது நேரத்தில் நான் வருகிறேன்'' என்று.

காவலர்கள் சம்பக்கை இழுத்துச் சென்றனர். ஸலீம் மீண்டும் மஞ்சத்தில் கம்பீரமாக அமர்ந்துகொண்டான். 'இப்பொழுது சொல்கிறேன் அது என்னவென்பதை' என்று துவங்கிய ஸலீமின் சொற்கள் வாயில் உறைந்து போயின. அவன் கண்கள் கூடார வாயிலைப் பிரமையுடனும் அச்சத்துடனும் நோக்கின.

# 25. ராஜா மான்சிங்!

அச்சமென்பதை அறவே அறியாதவனும் மகா வீரனும் போர்களில் அக்பருக்குத் துணைநின்றிருப்பவனுமான இளைய நவாப் ஸலீமின் உடல் திடீரெனச் சிலையாகிவிட்டதையும், கண்கள் பிரமையையும் அச்சத்தையும் கக்கியதையும், அதுவரை இளைய நவாப்பின் இதழ்களிலிருந்த புன்முறுவலும் உறைந்துவிட்டதையும் கவனித்த ரவிசந்த், திடீரென ஏற்பட்ட அந்த மாற்றத்துக்குக் காரணத்தை அறிய தானும் சிறிது திரும்பினான். திரும்பியவன் ஸலீமின் நிலையையே அடைந்தான். கூடார வாயிலில் நல்ல உயரத்துடனும், செக்கச்செவேலென்ற மேனியுடனும், நன்றாக வளர்ந்ததால் அழகாக கத்தரித்து விடப்பட்ட மீசையுடனும், தலையில் ராஜசின்னங் கொண்ட சரிகைத் தலைப்பாகையுடனும் உள்ளே இருந்த இருவர் மீதும் தனது கூரிய கண்களை நாட்டிய வண்ணம் அக்பர் சமஸ்தானாதிபதி ராஜா மான்சிங் நின்றிருந்தார். அவருடைய நீண்ட மேல்சட்டையில் இருந்த சரிகை வேலைப்பாடும், காலை மறைத்த அரபுச் சராயும், காலிலிருந்த மிருதுவான ரத்தச் சிவப்புக் காலணிகளும் அவருடைய செல்வத்துக்கும் அந்தஸ்த்துக்கும் சான்று கூறின. இடையிலிருந்த பெருவாள் அவர் வீரத்துக்கு அத்தாட்சியாக கச்சையிலிருந்து தொங்கிக்கொண்டிருந்தது.

''ஸலீம்!'' என்று இளைய நவாபை பெயர் சொல்லி அழைத்த மான்சிங். ''இங்கு என்ன நடக்கிறது?'' என்று அதிகார தோரணையில் விசாரித்தார்.



வேறு யாராவது அந்தத் தோரணையில் இளைய நவாபை அழைத்திருந்தால், அவர் தலை அந்த வினாடியே சீவப்பட்டு தரையில் உருண்டிருக்கும். ஆனால், அக்பருக்கு முதன் முதலாக தனது சகோதரியைக் கொடுத்து அதன் விளைவாக அக்பரிடம் மந்திரி பதவியையும், யாருக்கும் கிட்டாத அதிகாரங்களையும் பெற்ற ராஜா மான்சிங், அக்பருக்கு அடுத்தபடியாகக் கருதப்பட்டதால், ஸலீம் சிறிது சங்கடத்தால் தனது மஞ்சத்தில் ஒரு வினாடி அசைந்தான். பிறகு எழுந்தான். ''தவறாக எதுவும் நடைபெறவில்லை'' என்று சிறிது குழப்பமாகவும் பேசினான்.

மான்சிங் அவனை அணுகி வந்து, அவன் தோளின் மீது அன்புடனும் ஆதரவுடனும் கையை வைத்தார். ''ஸலீம்! நீ சாதாரண மனிதன் போல் நடப்பது தவறு. உன் அந்தஸ்து அதற்கு இடம் தராது. காமத்திற்கும் பொருள் எவல் உண்டு'' என்று சற்றுக் கடிந்து பேசினார்.

இளமைத் துடுக்கினால் ஸலீம் துவங்கினான், ''என் தந்தை மட்டும்...'' என்று.

''சக்ரவர்த்தியைப்பற்றி எதும் பேசாதே. இன்று இந்த நாடு ஓரளவு அமைதி பெற்றிருக்கிறதென்றால் அதற்கு அவர்தான் காரணம். எந்த மகாவீரனைப்பற்றியும் அவதூறுகள் கிளம்புவது சகஜம். அதற்கு நீயும் நானுமாவது தூபம் போடாதிருக்கலாம்'' என்று கூறிய ராஜாமான்சிங், ''வெளியே இழுத்துச் செல்லப்பட்ட அந்தப் பெண் யார் தெரியுமா உனக்கு?'' என்றும் வினவினார்.

''தெரியும். சம்பக்''- நவாப் தரையை நோக்கிப் பேசினான்.

''சம்பக் யார்?''-அடுத்த கேள்வியைத் தொடுத்தார் மான்சிங்.

''ராணா பிரதாப சிம்மனின் வளர்ப்புப் புதல்வி.''

''தெரிந்துமா இந்த விபரீத மார்க்கத்தில் நுழைந்தாய் ஸலீம்? இந்த ஒரு பெண்ணுக்காக பிரதாப் வாங்கும் பழி எப்படியிருக்கும் தெரியுமா? டில்லிவரை பற்றி எரியும். மொகலாய நகரங்கள் சூறையாடப்படும். கற்பழிக்கப்படும் ஒவ்வொரு ராஜபுத்ரிக்கும் ஒரு பட்டணம் சாம்பலாகும்'' என்று சிறிது சினத்துடன் பேசிய ராஜா மான்சிங், ஸலீமின் முதுகை ஆதரவாகத் தடவிக்கொடுத்தார். பிறகு ரவிசந்தை நோக்கி, ''நீதானே பிருத்விராஜனிடம் மெய்க்காவலனாய் இருந்தாய்?'' என்று வினவினார்.

''ஆம்'' என்று தலையசைத்தான் ரவிசந்த்.

''பிறகு உபதளபதியானான்'' என்றான் ஸலீம் கடுப்புடன்.

''இங்கு என்ன செய்கிறான்?'' என்று ராஜாமான்சிங் வினவினார்.

''நம்மை வேவு பார்க்க வந்தான்''—இதைக்கேட்ட ராஜாமான்சிங் புன்முறுவல் கொண்டார். ''வேவு பார்க்க ஒரு பெண்ணை அழைத்து வருவானேன்?'' என்று வினவினார்.

ஸலீம் விஷமமாகப் பேசினான். ''இருவரும் இணை பிரிவதில்லை. இவன் போகுமிடங்களிலெல்லாம் அவளும் போகிறாள் என்று கேள்வி'' என்றான்.

''அப்பொழுது அவளும் வேவு பார்ப்பாள்'' என்ற மான்சிங், ''ரவிசந்த்! நீ சக்கரவர்த்திக்காக வேவு பார்ப்ப



தாகக் கேள்வி. புதிய செய்தி ஏதாவது வைத்திருக்கிறாயா?'' என்று வினவினார்.

உடனடியாகப் பதில் சொல்லவில்லை ரவிசந்த். தனது கையிலிருந்த கடிதத்தை ராஜாமான்சிங்கிடம் கொடுத்தான். மான்சிங் அதைப் படித்துவிட்டுச் சற்றே சந்தேகம் கலந்த பார்வையொன்றை ரவிசந்த் மீது வீசினார். ''இது யார் கையெழுத்து?'' என்றும் விசாரித்தார்.

''என் கையெழுத்து என்று இளைய நவாப் சாதிக்கிறார்.''-ரவிசந்த், ஒவ்வொரு சொல்லும் ராஜாமான்சிங்கின் மன திில் உறையும்படி உச்சரித்தான்.

''இந்தக் கடிதத்தை எழுதியது நீயானால், இதை நேரில் எடுத்துக்கொண்டு இங்கு வருவானேன்?'' என்று சீறினார்.

''நான் எடுத்துக்கொண்டு வரவில்லை. இதை நவாப் தான் கொண்டு வந்திருந்தார். மடியிலிருந்து எடுத்துச் சம்பக்கிடமும் காட்டினார்'' என்று மிகப் பணிவுடன் கூறினான் ரவிசந்த்.

ராஜா மான்சிங் முகத்தில் கனல் பரவியதால், முகம் குங்குமச் சிவப்பாக சிவந்தது. ''இந்தக் கடிதத்தை யாரும் பார்க்க வேண்டாமென்று உத்தரவிட்டிருந்தேன். இதை யார் கொடுத்தது உனக்கு?'' என்று ஸலீமைப் பார்த்து சீற்றம் நிரம்பிய குரலில் வினவினார்.

இளைய நவாப் மஞ்சத்திலிருந்து எழுந்து மிகுந்த கர்வத்துடன் நின்றான். ''அதைக் கேட்க உங்களுக்கு அதிகாரமில்லை'' என்று பதிலுக்கு சீறினான்.

மான்சிங்கும் எழுந்து நின்றார். மகாவீரனான அவர் கை மெல்ல இடையிலிருந்த வாளைத் தடவியது. பிறகு சட்டென்று நின்று எதையோ உற்றுக்கேட்டார். அடுத்து

ரவிசந்தை நோக்கி வினவினார். ''உன்னுடன் எத்தனை பேர் வந்திருக்கிறார்கள்?'' என்று.

''நானும் சம்பக்குந்தான்.''

''வேறு யாருமில்லை?''

''இளைய நவாபுடன்?''

''ஐநூறு வீரர்கள் வந்திருக்கிறார்கள். சிலர்தான் கண்ணுக்குத் தெரிகிறார்கள். மற்றவர்கள் மறைந்து நிற்கிறார்கள்.''

ரவிசந்தின் சொற்களைக் கேட்ட ஸலீம் பெரும் வியப்படைந்து, ''என்னுடன் வந்திருக்கும் வீரர்கள் எத்தனை பேரென்பது உனக்கு எப்படித் தெரியும்?'' என்று வினவினான்.

''ஊகந்தான்'' என்றான் ரவிசந்த்.

''இன்னும் என்ன ஊகித்திருக்கிறாய்?''

''தாங்கள் இங்கு வந்த காரணம்.''

''அதென்ன?''

''ராணா இங்கு அடிக்கடி வருவது தங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். அவரைப் பிடித்துச் செல்ல வந்திருக்கிறீர்கள். என்ன இருந்தாலும் தாங்கள் இளங்கன்று.''

''என்ன!''

''இளங்கன்று பயமறியாது என்று பழமொழி இருக்கிறது நவாப். அதற்கு இலக்கணம் நீங்கள். உங்களையோ ராஜாவையோ நான் மடக்க நினைத்தால் இதைவிட



சிறந்த சமயம் கிடையாது'' என்று ரவிசந்த் இளமுறுவல் காண்டான்.

அவன் முகத்தில் அதுவரை இருந்த அதிர்ச்சி, கவலை அனைத்தும் மறைந்து வினவினான்.

''ராஜாவைக் கேளுங்கள். அல்லது நீங்களே செவிகளைத் தீட்டிக்கொண்டு கேளுங்கள்'' என்றான் ரவிசந்த்.

ஸலீம் உற்றுக் கேட்டான். வெளியே பல இடங்களில் மலைச்சருகுகள் மிதிபடும் அரவம் கேட்டது. அதே சமயத்தில் சம்பக்கைப் பிடித்திருந்த காவலர் இருவர் அலறும் மரண ஒலி அந்த இரவின் அமைதியைக் கிழித்தது. ராஜா மான்சிங் தமது நீண்ட வாளை கச்சையிலிருந்து உருவ முற்பட்டார்.

''வேண்டாம் மகாராஜா.'' நான் விரும்பினாலொழிய இந்த முகாமுக்கு எந்தவித ஆபத்துமில்லை. சம்பக்கை மொகலாய வீரர்கள் பிடித்திருந்ததால், அவர்களை மட்டுந்தான் ராணாவின் வீரர்கள் கொன்றிருப்பார்கள். தாங்களும் இளைய நவாபும் எந்தவிதப் பயமுமில்லாமல் கிளம்பலாம். நான் சைகை செய்தாலொழிய மறைவிலிருக்கும் வீரர்கள் வெளியே தலைகாட்டமாட்டார்கள். சம்பக்குக்கு எந்தக் கெடுதலும் வராது என்று தாங்கள் வாக்குறுதி கொடுத்தால் ராணாவின் வீரர்களைத் திரும்ப அனுப்பி விடுகிறேன்'' என்றான் ரவிசந்த்.

''ராணாவின் வீரர்கள் எத்தனைபேர் வந்திருப்பார்கள்?'' என்று மான்சிங் வினவினார்.

''ஆயிரம் பேர்'' என்றான் ரவிசந்த்.

ஆயிரம் பேரைக் கண்டு அம்பர் ராஜபுத்ரனான மான்சிங் என்றுமே பயந்ததில்லையென்றாலும், இளைய நவாபின் கதி என்ன ஆகுமோ என்ற அச்சத்தால், ''நல்லது ரவிசந்த்!'' என்று ஏதோ சொல்லத் துவங்கிய

மான்சிங், ''ராணாவின் வீரர்கள் போகவேண்டாம். நானும் ஸலீமும் போகிறோம்'' என்றார். கைகளைத் தட்டி வெளியே நின்ற காவலனை அழைத்து, ''கூடாரத்தைக் கழற்றுங்கள். நாம் தலைநகர் நோக்கிச்செல்கிறோம்'' என்றும் உத்தரவிட்டார். ரவிசந்த், ஸலீம் தொடர அவர் வெளியிலும் வந்தார். அங்கு கோபாவேசத்துடன் வந்த சம்பக்கை நோக்கி ''ராஜகுமாரி! ஸலீம் சிறு பிள்ளை, மன்னித்துவிடு'' என்று இளைய நவாபுக்காக மன்னிப்பும் கேட்டார்.

சம்பக்கின் இதழ்கள் இகழ்ச்சியால் விரிந்தன. ''தாங்கள் எங்கு வந்தீர்கள்?'' என்று வினவினாள்.

''ராணாவைப் பார்க்க வந்தேன். சகுனம் சரியாயில்லை. இன்னொரு சமயம் பார்க்கிறேன்'' என்றார்.

அந்த சமயத்தில் சம்பக் தனது இருவிரல்களை வாயில் வைத்தாள். ரவிசந்த் அவளிருக்குமிடத்தை நோக்கித்தாவி அவள் விரல்களை வாயிலிருந்து பலவந்தமாக நீக்கினான். அவள் உடலை அசையாதபடி இறுக்கமாகவும் பிடித்தான்.

''இப்பொழுது புரிகிறது எனக்கு. உன் எஜமானர்கள் அழிந்து விடுவார்களென்ற அச்சமா? விடு என்னை'' என்று சீறினாள். அவள் கைகளிலிருந்து விடுவித்துக் கொண்டு, அருவியின் மேல்பகுதியை நோக்கி ஓடினாள். அடுத்த சில நிமிடங்களில் அவள் புரவி பறக்கும் குளம்படி ஒலிகள் அந்தக் காட்டுப் பகுதியில் பெரிதாக ஒலித்தன.

ஸலீம் நகைத்தான். ராஜா மான்சிங் ரவிசந்தை பரிதாபத்துடன் நோக்கினார். கீழே எதிரிகள் குறுவாள்களால் மாண்டு கிடந்த இரு மொகலாய வீரர்களின் பிணக் கண்கள் ஸலீமை நெட்டுக்குத்தாக நோக்கின, பயங்கரமாக.

# 26. தொடர்ந்த உருவம்!

மிக நெருக்கடியான நேரங்களில் குழப்பத்திற்கோ துன்பத்திற்கோ பலியாவது சாதாரண மனித இயல்பு. இத்தகைய சாதாரண இயல்பிலிருந்து விடுபட்டு நிற்பவர்கள் மகாவீரர்கள், மகாமேதைகள், அல்லது முற்றும் துறந்த துறவிகள். சம்பக் தன்னைத் தவறாக அர்த்தம் புரிந்துகொண்டு துரோகி என ஏசிப்பறந்துவிட்டதையும், அவள் ராணாவிடம் சொல்லும் எதுவும் ராஜபுத்ர வட்டாரங்களில் தன் பெயரை, கௌரவத்தை, அந்தஸ்தை அழித்துவிடுமென்பதையும் உணர்ந்து ரவிசந்த் மனங் கலங்காமல் நின்ற இடத்திலேயே நின்றான் சில நிமிடங்கள். சம்பக்கின் புரவி மலைப்பாதையில் எழுப்பிய குளம் பொலிகளைக் கேட்டவண்ணம். அந்தச் சில நிமிஷங்களில் ஸலீமின் நகைப்பையோ இகழ்ச்சி கலந்த பார்வையையோ அவன் பொருட்படுத்தவில்லை. ''இந்த நிகழ்ச்சிக்கு நான்தான் பொறுப்பாளி, வருகிறேன் ரவிசந்த்'' என்று உண்மையிலேயே அனுதாபக் குரலில் பேசிய ராஜா மான்சிங்கின் சொற்களையும் காதில் வாங்கவில்லை.

சில நிமிடங்களுக்குப் பிறகு அவன் ஸலீமையும் ராஜா மான்சிங்கையும் நோக்கித் திரும்பியபோது. அவன் கண்களில் சிறிதளவும் அச்சமில்லை,வெறுப்பின் சாயையே விளையாடிக்கொண்டிருந்தது. அவன் ஸலீமை ஒரு வினாடிக்குமேல் பார்க்கவில்லையென்றாலும் மான்சிங்கை நன்றாகவே நோக்கினான். ''மகாராஜா! ராணாவின் ஆயிரம் வீரர்கள் இந்தக் கூடாரத்தை சூழ்ந்துகொள்வதிலிருந்து இளவரசரை காப்பாற்றிவிட்டேன். ஆனால் நான் ராணாவின் இருப்பிடத்திற்குத் திரும்புவதில் பயனில்லை

யென்பது தங்களுக்குத் தெரியும். இது சக்கரவர்த்திக்கு எத்தகைய நஷ்டத்தை விளைவித்திருக்கிறதென்பதும் தங்களுக்குப் புரியும்'' என்று துன்பம் தோய்ந்த குரலில் பேசினான்.

இந்த சொற்களைக் கேட்ட மான்சிங் முகத்தில் எந்த வித உணர்ச்சியும் தென்படவில்லையென்றாலும், ஸலீமின் முகத்தில் வியப்புக்குறி படரவே, இளைய நவாப் வினவினான். ''சக்கரவர்த்திக்கு நஷ்டமா? எந்த சக்கரவர்த்திக்கு'' என்று.

ரவிசந்த் ஸலீமை மிகவும் பரிதாபமாக நோக்கினான். ''இளவரசருக்குஇதுகூட விளங்கவில்லை போலிருக்கிறது? பாரதத்தில் எத்தனை சக்கரவர்த்திகள் இருக்கிறார்கள்?'' என்று வினவவும் செய்தான், பரிதாபம் சொற்களிலும் ஒலிக்க

அதுவரை வாளாவிருந்த ராஜா மான்சிங் இடை புகுந்து ''ரவிசந்த்! இளைய நவாப் சரியான மனநிலையில் இல்லை'' என்று தொடர்ந்தவரை, ரவிசந்த் இடைமறித்து ''பெண் பித்தினால் மனம் குழம்பியிருக்கிறார்'' என்று முடித்தான்.

ஸலீம் சினத்தின் வசப்பட்டு ''யாருக்கு பெண்பித்து' என்று வினவினான்.

''சற்று முன்பு கூடாரத்துக்குள் நடந்த நிகழ்ச்சிக்கு நான் பதில் சொல்லவேண்டும். நிகழ்ச்சி பேசாது. நீங்கள் பேசலாம்; அல்லது சம்பக்கைப் பிடித்து நின்ற இவர்கள் பேசலாம்'' என்று மாண்டுகிடந்த வீரர்களைக் கைவிரலால் சுட்டிக்காட்டிய ரவிசந்த், ''இவர்கள் பேசமுடியாது. இந்த உலகத்தை வெறுத்து வேறு உலகத்துக்கு ஓடிவிட்டபடியால்'' என்று முடித்தான்.



பெரிய பதவியிலுள்ளவர்கள் சில வேளைகளில் காட்டக் கூடிய மதியீனத்தைக்காட்டிய ஸலீம் ''எந்த உலகத்துக்கு?'' என்று உளற ஆரம்பித்தான்.

''அதை நான் திட்டவட்டமாகச் சொல்லமுடியாது.''

''ஏன்?''

''நீங்கள் நம்புகிற மேல் உலகம் வேறு; நானும் ராஜாவும் நம்பும் மேல் உலகம் வேறு. ஆனால்...''

''என்ன ஆனால்?''

''ராஜாவைப்பற்றி நான் குறிப்பிட்டது தவறு.''

இதுவரை உணர்ச்சிகளை அடக்கி வைத்திருந்த மான்சிங் மெல்ல உணர்ச்சிகளை முகத்தில் காட்டலானார். அக்பருக்கு தனது சகோதரி வாழ்க்கைப்பட்டதிலிருந்து ராஜபுதனத்தில் தம்மைப்பற்றி மட்டமான அபிப்பிராயமே இருந்துவருவதை அவர் உணர்ந்திருந்தார். தம்மையும் மொகலாயராக நினைக்கும் ராஜபுதன மக்கள் தம்மைப்பற்றிக் கிளப்பும் அவதூறுகளும் அவர் காதில் விழுந்திருந்தன. ஆகவே தம்மையும் மொகலாயரில் ஒருவராக ரவிசந்த் மறைமுகமாகக் குறிப்பிட்டதால் சிறிது சினமும் அடைந்தார். இருப்பினும், இரும்பு மனத்தின் காரணமாக தமது உணர்ச்சிகளை ஒரே வினாடியில் மறைத்துக்கொண்ட மான்சிங் ''ஸலீம் நீ இங்கு வந்தது அருவிக்கரை விவாதத்துக்கு அல்லவே?'' என்று விசாரித்தார்.

இளைய நவாப் மிகுந்த கோபத்துடன் நோக்கினான் மான்சிங்கை. ''தாங்கள் மந்திரி. நான் இளவரசன் என்பதை நினைவில் வைத்துப் பேசுங்கள்'' என்றும் சொன்னான், கோபம் நன்றாகத் துலங்கிய குரலில்.

மான்சிங் தமது அழகிய வதனத்தில் இகழ்ச்சியைப் படரவிட்டுக் கொண்டார். ''மன்னர் குலத்தார் மதியிழக்கும் போது யோசனை சொல்வதும், அவர்களைத் திருப்புவதும் மந்திரியின் பொறுப்பு, அதை நினைப்பில் வைத்துக் கொண்டிருக்கிறேன். நீ என்னை மந்திரியென்று மட்டும் வைத்துக் கொள்வதைவிட உன் தந்தையின் மதிப்புக்குப் பாத்திரமானவன் என்பதை நினைப்பில் வைத்துக்கொள்வது நல்லது'' என்று இகழ்ச்சிக் குரலில் பேசிய மான்சிங், ''ரவிசந்த்! இன்று நீ செய்த உதவியை மறக்க மாட்டேன். இளைய நவாபும் மறக்க மாட்டார். இனி நீ புறப்படலாம்'' என்றார்.

ரவிசந்த் சொன்னான்: ''நான் திரும்பி ராணாவின் இருப்பிடம் செல்ல முடியாது. தங்களுடன் வருவதைத் தவிர வேறு வழியில்லை'' என்றான்.

''சரி வா! உன் ஆணைக்காகக் காத்திருக்கும் ராணாவின் ஆயிரம் வீரர்களை என்ன செய்யப்போகிறாய்?''

''திருப்பி அனுப்பிவிடுகிறேன்.''

''திரும்பிச் செல்வார்களா? நாங்களிருவரும் சிறு படையுடன் சிக்கியிருக்கும்போது, எங்களை உன்னுடன் விட்டுச் சென்றால் ராணா என்ன நினைப்பார்?''

''என் கட்டளை சரியோ தப்போ மீற வீரர்களுக்கு உத்தரவில்லை. என்மீது கோபப்பட்டு விரைந்து சென்ற சம்பக்கும் என்னைக் காட்டிக் கொடுக்கமாட்டாள். வீரர்களை அனுப்பிவிட்டு வருகிறேன்'' என்ற ரவிசந்த், அருவியின் மேல் பாகத்துக்கு மலைப்பாதையில் ஏறிச்சென்றான்.

அடுத்த சில நிமிடங்களில் புரவிகள் பல நடக்கும் சத்தம் கேட்டது. சில நிமிடங்களில் ரவிசந்த் திரும்பி வந்து, ''ராஜா! கூடாரத்தை எடுத்துக்கொள்ளுங்கள். நாம் செல்வோம்'' என்றான்.



ராஜா மான்சிங் கையை அசைத்ததும், ஸலீமின் கூடாரத்தின் மூலைகள் பிடுங்கப்பட்டு கூடாரம் சுருட்டப்பட்டது. அதன் பகுதிகள் நாலைந்தாகப் பிரிக்கப்பட்டு நாலைந்து புரவிகள் மீது கட்டப்பட்டன. பிறகு எங்கெங்கோ மறைந்திருந்த வீரர்கள் வெளியே வந்தார்கள். ராஜா மான்சிங்குடன் காவலர் யாரும் வராததைக் கவனித்த ரவிசந்த் ''மகாராஜா! தங்கள் மெய்க்காவலர்'' என்று இழுத்தான்.

லேசாக நகைத்தார் மான்சிங் ''யாருமில்லை; தேவையுமில்லை. ராணா பிரதாபுக்கு யாரையும் கொலைசெய்யும் வழக்கம் கிடையாது. மெய்க்காவலருடன் அவரைப் பார்க்கப் போவது மரியாதையும் ஆகாது'' என்றார் மான்சிங்.

இதைக்கேட்ட ஸலீம் கோபத்தின் வசப்பட்டான் மீண்டும். ''எதிரிக்கு எதற்கு மரியாதை?'' என்று விசாரித்தான் சினத்துடன்.

''இந்தக் கேள்வியை உன் தந்தையிடம் கேள் ஸலீம். ராணா பிரதாப்பிடம் அவர் வைத்துள்ள மரியாதையை வேறு யாரிடமும் வைக்கவில்லை. அது மகாவீரர்களின் பண்பாடு'' என்றார் ராஜாமான்சிங்.

ஸலீம் மேற்கொண்டு எதும் பேசவில்லை. தனக்கு அருகில் கொண்டுவந்து நிறுத்தப்பட்ட புரவியில் ஏறிக் கொண்டான். ராஜா மான்சிங்கும் தமது புரவியில் ஏறிக் கொண்டதும், ''யாரடா! ரவிசந்துக்கு ஒரு புரவியைக் கொண்டு வா'' என்றார்.

''வேண்டாம் மகாராஜா, சந்தர் தானே வருவான்'' என்று கையைத் தட்ட, சந்தர் எங்கோ மறைவிலிருந்து

ஓடிவந்தது. அதன்மீது ரவிசந்த் தாவி ஏறியதும், முன்னே இரு மொகலாய வீரர்கள் வழிகாட்டிச் செல்ல, பின்னே ஸலீமின் சிறுபடை சீராக நடைபோட்டு வர, ஸலீம், மான்சிங், ரவிசந்த் மூவரும் பயணப்பட்டார்கள்.

சில வினாடிகள் அருவிக்கரையில் அமைதி நிலவியது. தரையில் மாண்டு கிடந்த இரு மொகலாய வீரர்களைத் தவிர வேறு யாரும் இல்லாத நிலையில் ஒரு சிறுத்தைப் புலி அந்த வீரர்களை பட்சணம் செய்ய, மரங்களின் மறைவிலிருந்து உறுமிக்கொண்டு வந்தது. அதைத் தொடர்ந்தும், அதை அறவே லட்சியம் செய்யாமலும் இன்னொரு உருவமும் புரவிமீது ஆரோகணித்து வந்தது. சில வினாடிகள் சிறுத்தை அந்தச் சடலங்களை உண்பதை உற்று நோக்கிவிட்டு, அந்த உருவம் சற்று முன்பு சென்ற வீரர் கூட்டத்தைத் தொடர்ந்து சென்றது. ஸலீமின் படை ஆஜ்மீர் சாலையில் திரும்பியதும், அந்த உருவம் சற்று நிதானித்துவிட்டு, அவ்வப்பொழுது சாலைப் பக்கங்களில் மறைந்து மறைந்து எட்டவே தனது புரவியைச் செலுத்தலாயிற்று.

# 27. ராஜாவின் ரகசியம்!

ஆராவலியின் அருவிக்கரையிலிருந்து இளையநவாப் ஸலீமுடனும் ரவிசந்துடன் நவாபின் ஐநூறு வீரர்கள் பின் தொடரப் புறப்பட்ட ராஜா மான்சிங், அன்றிரவு முழுவதும் நிற்காமல் பயணம் செய்து விடியற்காலையில் ஆஜ்மீர் சாலையில் தென்பட்ட ஒரு கிராமச் சோலையில் இறங்கி, அங்கு ஸலீமின் கூடாரத்தை அமைக்குமாறு வீரர்களுக்கு உத்தரவிட்டார். ''இங்கு தங்க அவசியமென்ன?'' என்று ஸலீம் ஆட்சேபித்தும் அதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை, சக்கரவர்த்தியின் மைத்துனரும் பிரதான மந்திரியுமான மான்சிங். சிறிதுநேரம் கழித்து ''அவசியம் பிறகு தெரியும்'' என்று பதில் சொன்னபோது அவர் குரலில் அலட்சியமும் கண்டிப்பும் இருந்தது. அவர் சொல்லுக்கு மாறாக எதும் செய்ய இயலாமல் புரவியை விட்டு இறங்கவே செய்தான்.

இதைக் கவனித்துக் கொண்டிருந்த ரவிசந்துக்கு, அவர் ஒரு இரவு பயணத்துக்குப் பிறகு தங்க முடிவு செய்து கொண்டிருந்ததற்கு ஏதோ காரணமிருக்கிறதென்று புரிந்துகொண்டதாலும் அது எதுவாயிருக்கும் என்பது புரியாததாலும் சிறிது குழப்பத்துடனேயே சந்தர் முதுகிலிருந்து கீழே குதித்தான். ''நாள் கணக்கில் இரவு பகல் பார்க்காமல் படைகளை நடத்திச் செல்லும் திறனுடைய ராஜா மான்சிங் இந்த சோலையில் தங்க தீர்மானித்தது களைப்பினாலோ இளைப்பாறும் நோக்கத்துடனோ அல்ல. இதில் ஏதோ மர்மமிருக்கிறது'' என்று தனக்குள் சொல்லியும் கொண்டான் ரவிசந்த்.

இளைய நவாபின் வீரர்கள் வெகு துரிதமாக கூடாரத்தை அமைத்ததும், ஸலீமை நோக்கி, ''ஸலீம்! நீ சற்று இளைப்பாறு. உன் நீராட்டம் முதலியவற்றுக்கு வேண்டிய ஏற்பாடுகள் சீக்கிரம் செய்யப்படும். நான் சற்று இந்தப் பாலைவன மணலில் புரவிக்குப் பயிற்சி அளித்து விட்டு வருகிறேன்'' என்றார். ஸலீமின் பதிலுக்குக் காத்திராமல் தமது புரவிமீது ஏறி அதை மணலில் பறக்க விட்டார். அந்த அரபு சாதிப் புரவி பாலைவன மணலைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் அம்புபோல் பாய்ந்து சென்றது.

அவர் சென்றதைப் பார்த்துக்கொண்டு நின்ற ஸலீம் அருகிலிருந்த ரவிசந்தை நோக்கி, ''ரவிசந்த்! நீயும் உன் புரவிக்குப் பயிற்சி அளிக்கலாமே'' என்றான் இகழ்ச்சியுடன்.

ரவிசந்த் இளைய நவாபை மேலுக்கு மரியாதையுடன் நோக்கினாலும், அவன் பதிலிலும் மிதமிஞ்சிய இகழ்ச்சி ஒலித்தது. ''என் புரவிமீது தங்களுக்குள்ள பாசத்திற்கு நன்றி! இளைய நவாப் எப்பொழுதும் தனது பணியாளர்களின் நலனில் அக்கறை காட்டுவார் என்பது உலகப் பிரசித்தம்'' என்றான் ரவிசந்த்.

ஸலீம் மிக இகழ்ச்சியுடன் தொடர்ந்தான்: ''அக்கறை உண்டு. ஆனால் இப்பொழுது அதைக் காட்டவில்லை. நீயும் பயிற்சியென்ற காரணத்தை முன்னிட்டுச்சென்றால், ராஜாவுடன் தனியே பேச வாய்ப்பு இருக்குமென்பதற்காக சொன்னேன்'' என்று.

அவன் சொற்களில் தொனித்த விஷமத்தை கவனிக்கவே செய்தான் ரவிசந்த். மான்சிங்கின் இதய சுத்தத்தில் ஸலீமுக்கு நம்பிக்கை இல்லையென்பது நன்றாகப் புரிந்தது ரவிசந்துக்கு. இருப்பினும், ஸலீமின்



உள்ளத்தை வெளிக்குக் கொணர ''நானும் அவரும் பேச என்ன இருக்கிறது?'' என்று வினவினான்.

''எனக்கெப்படித் தெரியும்?'' என்ற ஸலீம், ''இனம் இனத்தோடு சேரும். ஒரு இனத்தின் மனம் அந்த இனத்தைச் சார்ந்தவருக்குத்தான் புரியும்'' என்றான்.

''இல்லை நவாப்! இப்பொழுது நடைமுறை வேறு. இனங்கள் கலக்கின்றன. அவற்றிலிருந்து புது இனம் உண்டாகின்றது. இந்த நாட்டில் இப்பொழுது எல்லாமே குழப்பத்திலிருக்கிறது'' என்ற ரவிசந்த் புன்முறுவலொன்றை இதழ்களில் படரவிட்டுக் கொண்டான்.

ஸலீமின் முகத்தில் கோபத்தின் சாயை தெரிதாகப் படர்ந்தது. இந்துக்களுக்கும் மொகலாயருக்கும் தனது தந்தை ஏற்படுத்திய சம்பந்தங்களைப் பற்றி ரவிசந்த் பிரஸ்தாபிக்கிறானென்பதைப் புரிந்து கொண்டான் இளைய நவாப். அந்த சம்பந்தத்தின் விளைவாகத் தன்னையும் குத்திக்காட்டுகிறானென்பதும் தெளிவாகத் தெரிந்தது இளைய நவாபுக்கு. ராஜா மான்சிங் மட்டும் உடன் வராதிருந்தால் அதே சோலை மரமொன்றில் ரவிசந்தை தொங்கவிட்டிருக்கலாம் என்றும் எண்ணினான் நவாப். அது இயலாததால் மேற்கொண்டு சர்ச்சையில் இறங்காமல் சரேலென்று திரும்பி கூடாரத்துக்குள் நுழைந்து விட்டான்.

ரவிசந்த், நவாப் போவதை சிறிதுநேரம் உற்று நோக்கிக் கொண்டிருந்தான். அவன் கூடாரத்துக்குள் நுழைந்ததும் சந்தரை அழைத்துக்கொண்டு அந்தச் சோலையில் ஒரு மூலைக்குச் சென்று அங்கிருந்த வீரர்களை நோக்கி ''இங்கு நீராட வசதி இருக்கிறதா?'' என்று வினவினான்.

''ஒரு பெரிய கிணறு இருக்கிறது'' என்ற வீரரில் ஒருவன் தூர இருந்த ஒரு கிணற்றை சுட்டிக்காட்டினான்.

அதனருகே சென்று தனது உடைகளைக் கழற்றி விட்டு சந்தரின் மீதிருந்த தோல்பையிலிருந்து ஒரு சிறு துணியை எடுத்து இடுப்பில் சுற்றிக்கொண்டு அந்தப் பெரிய கிணற்றில் இறங்கி நீராடிவிட்டு, வெளியே வந்து அங்கு வைக்கப்பட்டிருந்த தோண்டியால் நீரை மொண்டு சந்தரையும் குளிப்பாட்டினான். பிறகு அதன் சேணத்தை கையில் பிடித்துக்கொண்டு அதன் முதுகில் தட்ட அது சற்று எட்ட இருந்த புல்லை மேயத்தொடங்கியது. அடுத்து தனது ஆடைகளை அணிந்து தோல்பைகளையும் புரவி சேணத்தையும் ஒரு மரத்தடியில் வைத்துவிட்டு, அந்த சோலையைச் சுற்றிப்பார்க்கத் தொடங்கினான்.

அந்தப் பாலைவனச்சோலை மிகப் பெரிதாயிருந்தது. அதில் அவன் எத்தனையோ முறை தங்கியிருந்ததால் அதன் பரப்பளவையும் நன்றாக உணர்ந்தேயிருந்தான். அவனுக்குத் தான் நீராடிய கிணறும் ஏற்கனவே தெரிந் திருந்தும், பலமுறை தான் அதில் நீராடியிருந்தும் ஏது மறியாததுபோல் நடித்ததற்கு, மற்ற வீரர்களின் கண் களில் மண்ணைத் தூவத்தான்! அவன் எண்ணமும் பலிக்கவே செய்தது. வீரர்கள் அவன் சோலையைச் சுற்றிப் பார்த்ததை மிகச் சாதாரணமாகவே எடுத்துக் கொண்டதால் அவர்கள் அவனை அறவேபுறக்கணித்தனர்.

இதன் விளைவாக மெதுவாகவும் அலட்சியமாகவும் அந்தப் பெரும் சோலையில் சஞ்சரித்த ரவிசந்த், சோலை யில் வீரர்கள் யாருமில்லாத ஒரு கோடிக்கு வந்ததும் அங்கிருந்த பெரிய மரமொன்றில் ஏறி ராஜாமான்சிங் சென்ற திசையை உற்றுநோக்கினான். அப்பொழுதும் ராஜாமான்சிங் தமது புரவிக்குப் பயிற்சி அளித்துக் கொண்டிருந்தார். சில சமயங்களில் அதை வேகமாக



செலுத்தினார். பிறகு அது சுழன்று சுழன்று திரும்புமாறு வேகமாக நடத்தினார். தாம் கீழே குதித்துப் புரவியை மணலில் புரளவைத்து எழுப்பினார். இப்படிப் பல முறை பயிற்சி செய்த மான்சிங் கடைசியாக சிறிது நேரம் நின்று ஸலீம் தங்கிய பெரிய சோலையில் சிறிதுதூரத்தில்தெரிந்த இன்னொரு சிறிய சோலையின்மீது பார்வையைச் செலுத் தினார். சோலை சிறிதானாலும் மரங்கள் நாலைந்தே இருந்தபோதிலும் சோலை அடர்த்தியாகவே இருந்தது. அதிலிருந்து ஒரு புகை கிளம்பியதையும், அந்தப் புகையை நோக்கிய ராஜாமான்சிங் அந்தச் சோலையை நோக்கி தமது புரவியில் ஏறிச்சென்றதையும் ரவிசந்த்கவனித்தான். ஸலீமுக்கும் தெரியாத ஏதோ ரகசிய நடவடிக்கையில் ராஜா மான்சிங் இறங்குவது ரவிசந்துக்குச் சந்தேகமறத் தெரிந்தாலும் தான் அப்பொழுது செய்யக் கூடியது ஏதுமில்லையென்பதைப் புரிந்துகொண்டான். தான்பெரிய சோலையிலிருந்து நகர்ந்தால் தன்னை மொகலாய வீரர் கள் தொடருவார்களென்பதும், அதனால் ராஜாவின் ரகசியம் அம்பலப்படுமென்பதையும் உணர்ந்து கொண்ட தால், மரத்திலிருந்து இறங்கி அதன் அடியில் சாய்ந்து கொண்டான்.

அதே சமயத்தில் எட்ட இருந்த சிறு சோலையில் புகுந்த ராஜா மான்சிங் தமது புரவியைத் தோப்புக்கு வெளியில் நிறுத்திவிட்டு கால்நடையாகவே தோப்புக்குள் நுழைந்தார். அந்த தோப்பின் நடுவில் சிறு கற்களைச் சேர்த்துச் சுள்ளிகளைக் கொண்டு அடுப்பை மூட்டி சிறு பாத்திரத்தில் உலைவைத்திருந்த உருவத்தைக் கண்டு, ஓசைப் படாமல் நடந்து, அது உட்கார்ந்திருந்த இடத்தை அடைந்து அதன் பின்புறம் நின்று கொண்டிருந்தார். அவர் வருவதை அறியாத அந்த உருவம் தனது வேலை யில் முனைந்திருந்தது. அந்தச் சமயத்தில் ராஜா மான் சிங், ''சம்பக்!'' என்று மிக மெதுவாக அழைத்தார்.

சராயும் மேல்சட்டையும் போட்டுக்கொண்டு, விரிந்த குழலுடன் உலையைக் கவனித்துக் கொண்டிருந்த சம்பக் சரேலென்று திரும்பினாள். அவள் கையில் பிச்சுவா ளொன்று பயங்கரமாகக் காட்சியளித்தது.

ராஜா மான்சிங்கைக் கண்டதும் அவள் பிச்சுவாளை இடைக் கச்சையில் செருகிக் கொண்டாள். ''ராஜா! தாங்களா?'' என்று வியப்புடன் வினவினாள் சம்பக்.

''ஆம் சம்பக்.''—ராஜாவின் பதிலில் அன்பு சொட்டியது.

''நான் இங்கிருப்பது தங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று அவள் வினவினாள்.

''படைப்பிரிவைத் தொடருபவர்கள் சமையல் செய்யக்கூடாது. அதுவும் புகை எழும்பும்படி அடுப்பு மூட்டக்கூடாது'' என்றார் மான்சிங். ''ஆனால், உன் இயல்பு உன்னை விடவில்லை. நீ பெண்தானே. அடுப்பு ஊதுவது உன் இயற்கையல்லவா?'' என்றும் கூறி முறுவல் கொண்டார்.

சம்பக் அதற்குப் பதில் சொல்லவில்லை. ''புகை எழும்பலாம். ஆனால் வந்திருப்பது நான்தான் என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டாள்.

''நேற்றிரவு முதலே நீ எங்களைத் தொடர்ந்து வந்திருப்பது எனக்குத்தெரியும்.எப்படியென்று கேட்காதே. மான்சிங்கின் செவி பாம்புச் செவி என்று அக்பரே சொல்லுவார். எத்தனை தூரத்தில் யார் தொடர்ந்தாலும் சிறு ஒலியும் என் காதில் விழும். தவிர நீ ரவிசந்தை விட்டுப் போகமாட்டாய். வருவாயென்பதும் எனக்குத் தெரியும்'' என்றார்.



சம்பக் சிறிது நேரம் பிரமித்து நின்றாள். ''ரவிசந்த் துரோகி'' என்றாள் சினத்துடன்.

''இல்லை.''

''நான் கடிதத்தைப் பார்த்தேன்.''

''ஆனால் நம்பவில்லை.''

''புதிர் போடுகிறீர்கள்.''

''நம்பினால் தொடர்ந்திருக்க மாட்டாய் எங்களை. எனக்கு அவனையும் தெரியும். உன்னையும் தெரியும்'' என்ற மான்சிங்கின் குரலில் ஏதோ விவரிக்க இயலாத உணர்ச்சி இருந்தது.

''என்னைப்பற்றி எல்லாம் தெரியுமா?'' என்று கேட்டாள்.

''தெரியும்.''

''நான் அனாதையென்பது தெரியுமா?''

''அனாதை இல்லையென்பது எனக்குத் தெரியும்.''

''அப்படியானால் நான் யார்?''

இதைக் கேட்டதும் மான்சிங் சிறிது சிந்தித்தார். பிறகு பெரிய இடியை எடுத்து வீசினார். அதைக் கேட்ட சம்பக் சிலையானாள். ''என் மகள்'' என்று, மிக நிதானமாக ராஜாமான்சிங் சொற்களை உதிர்த்தார்.

# 28. சாலைவழிச் சத்திரம்

ராஜா மான்சிங் தன்னை தமது மகளென்று குறிப்பிட்டதும் சிலையென பல வினாடிகள் நின்றுவிட்ட சம்பக், சிறிது சுரணையை வரவழைத்துக்கொண்டு, ராஜாவை ஏறிட்டு நோக்கி, ''நீங்கள் சொல்வது உண்மைதானா?'' என்று வினவினாள்.

ராஜா லேசாகப் புன்முறுவல் கொண்டார். அந்தப் புன்முறுவலில் சிறிது துன்பச் சாயையும் கலந்திருந்தது. ''ராஜா மான்சிங் சத்தியம் தவறாதவரென்பதும், அசப்பில் கூட அவர் வாயில் பொய்வராதென்பதும், அவர் எதிரிகளுக்குக்கூடத் தெரியும்'' என்றும் சொன்னார் சிறிது வருத்தத்துடன்.

''அப்படியானால் என்னை மேவாருக்கு எப்படி அனுப்பினீர்கள்? என் அனுப்பினீர்கள்?'' என்று சம்பக் விசாரித்தாள்.

''காரணங்களை நான் இப்பொழுது சொல்வதற்கில்லை. மேவாருக்கு நீ எனது அந்தரங்க வேலைக்காரன் ஒருவனால் எடுத்துச் செல்லப்பட்டாய். அங்கு நீ எப்படி வளர்ந்து வருகிறாய் என்பதைப்பற்றி அவன் அடிக்கடி எனக்குக் கடிதங்கள் எழுதிவந்தான். நீ ராணா பிரதாப்பின் வளர்ப்பு மகளானதும், ஆண்களின் உடையில் திரிய ஆரம்பித்ததும் சகலமும் எனக்குத் தெரியும். உன்னைப் பார்க்க எத்தனையோ நாள் ஆசைப்பட்டேன். ஆனால் உன்னைத் தேடிவரத் துணிவில்லை எனக்கு. நான் வந்திருந்தால் உன்னைப் பற்றி அனாவசியமான கேள்வி



கள் எழும். எழுந்தால் பதில் சொல்ல வேண்டிவரும். பதில் சொன்னால் நான் விரும்பாத பல சங்கடங்கள் ஏற்படும்'' என்றார் ராஜா மான்சிங்.

சம்பக் மீண்டும் அவரைக் கூர்ந்து நோக்கினாள். பிறகு கேட்டாள், ''இங்கு எதற்காக வந்தீர்கள்?'' என்று.

ராஜா சிறிது சிந்தித்துவிட்டுப் பேசினார்: ''உன்னைத் திருப்பி அனுப்ப வந்தேன். இன்னும் சிறிது தூரத்தில் ஒரு கிராமமிருக்கிறது. அதில் நீ நுழைந்துவிட்டால் தப்பமுடியாது. நீ எழுப்பிய புகையை மற்றவர்களும் பார்த்திருக்கலாம். பார்த்திருந்தால் ஸலீமுக்குத் தெரியும். ஸலீமின் கைகளில் நீ சிக்குவதை நான் விரும்பவில்லை. உடனடியாக நீ இங்கிருந்து கிளம்பிவிட வேண்டும்'' என்று சொன்னார்.

முடியாது என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தாள் சம்பக். ராஜா மேலும் சொன்னார்: ''வீணாக பிடிவாதம் செய்யாதே. நீ எங்களைத் தொடர்ந்தால் விபரீத விளைவுகள் ஏற்படும். ஸலீமின் கையில் நீ சிக்கினால் உன்னைக் காக்க ஒரே வழிதான் இருக்கிறது. நீ யாரென்பதைச் சொல்ல வேண்டும். அப்படிச் சொல்லி ஸலீமுக்கு அக்பர் உன்னைக் கேட்டால் நான் மறுத்துச் சொல்ல முடியாது. அப்பொழுது என் பாதுகாப்பையும் மீறி காரியங்கள் நடக்கும். இனி தாமதிக்காதே. இந்தச் சோலையிலிருப்பது அந்தப் பெரிய சோலையிலிருப்பவர்களுக்கு சாதாரணமாகத் தெரியாது. யாராவது பெரிய மரத்தில் ஏறிப் பார்த்தால்தான் தெரியும். அப்படித் தற்செயலாக எந்த வீரனாவது பார்க்குமுன்பு கிளம்பிவிடு. உன் புரவியின் வேகத்திற்கு ஈடுகொடுத்து இந்தப் பாலைவனத்தில் உன்னை யாரும் பிடிக்க முடியாது'' என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டு திரும்ப முயன்றார். பிறகு சிறிது

தின்று மகளை நோக்கி ''அவர்?'' என்றொரு கேள்வியைத் தொடுத்தார்.

''ராணா பிரதாப்பை வேவு பார்ப்பவர்'' — என்று இழுத்தாள் சம்பக்.

''ரவிசந்தா?''

''ஆம்.''

''அந்தத் துரோகியா?''

''துரோகியல்லவென்று சற்று முன்பு நீங்களே சொன்னீர்கள்.''

இதைக்கேட்ட ராஜா நகைத்தார். ''நான் சொல்வதில் உனக்கு இஷ்டமானதை மட்டும் நீ நம்புகிறாய்'' என்று நகைப்பின் ஊடே சொல்லிவிட்டு, ''ரவிசந்த் இன்றிரவு இங்கிருந்து ஒரு காத தூரத்திலிருக்கும் சாலை வழிச் சத்திரத்தில் சந்திப்பான்'' என்றும் அறிவித்தார். அதற்குமேல் காத்திராமல் கிளம்ப முயன்றார்.

அவர் முற்றும் எதிர்பாராத ஒரு சம்பவம் அப்பொழுது நிகழ்ந்தது. சம்பக் திடீரென தனக்கும் அவருக்கும் இடையில் இருந்த இடத்தை ஒரு எட்டில் கடந்து அவரை இறுகக் கட்டிக்கொண்டாள். ''அப்பா! அப்பா!'' என்று இருமுறை அழைக்கவும் செய்தாள். அவள் உள்ளத் துடிப்பு அவள் குரலில் பரிபூர்ணமாக இருந்தது.

ராஜா மான்சிங்கின் முகம் உணர்ச்சிப் பிழம்பாக இருந்தது. மகளை அணைத்த அவர் கைகள் லேசாக நடுங்கின. சிறிது குனிந்து தனது மார்பில் கிடந்த அவள் தலையைக் கோதிவிட்டார். ''பெண்ணே - என்னை அதிகமாக சோதிக்காதே. உன்னை நான் பிரிந்து இருப்



பதே எனக்குப் போதிய தண்டனை. காலம் நம்மைக் கூட்டி வைக்கலாம், இல்லை பிரித்தேவும் வைக்கலாம். ஏதாவது ஒரு முடிவு ஏற்படும்வரை நமது பரஸ்பர உறவை உலகம் அறியாதிருப்பதே மேல்'' என்று சொல்லிவிட்டு, சம்பக்கின் கைகளைப் பிரித்து தன்னை விடுவித்துக் கொண்டு, சோலையை விட்டுப் பாலைக்குச் சென்றார்.

அங்கு மீண்டும் நீண்ட நேரம் புரவியை மணலில் பழக்கினார். பிறகு அதன்மீது ஏறிப் பழைய பெரிய தோப்பை அடைந்தார். தோப்பை அடைந்ததும் நேராகக் கூடாரம் இருக்கும் இடத்துக்குச் செல்லவில்லை அவர். சோலையில் தோப்பு அடர்த்தியாயிருந்த இடத்தில் நுழைந்தார். அங்கு ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருந்த ரவிசந்தை சந்தேகக் கண்களுடன் நோக்கினார். ''வீரர்கள் இருக்குமிடத்தை விட்டு இங்கு ஏன் வந்தாய்?'' என்று வினவினார்.

''இந்த மரம் நல்ல உயரம்'' என்றான் ரவிசந்த் சர்வ சாதாரணமாக.

''அதனால்?''

''அதனால், ஏறிப்பார்த்தேன்.''

''எதற்காக?''

''தாங்கள் புரவியை எப்படிப் பழக்குகிறீர்கள் என்பதைப் பார்ப்பதற்காக.''

இதைக் கேட்ட ராஜா மான்சிங் சிறிது திகைத்தார். ''புரவியை பழக்கியதைப் பார்த்தாயா?'' என்று கேட்டார் கவலை, குரலில் தெரிய.

''அதையும் பார்த்தேன்''—ரவிசந்தின் குரலில் விஷமம் இருந்தது.

''வேறு எதைப் பார்த்தாய்?'' என்று கேட்டார் மான்சிங்.

''அந்தச் சிறிய தோப்பு இதைவிடச் சிறப்பாயிருக்க வேண்டும்.''

''உம்.''

''நீங்கள் அங்கு நுழைந்தது வேடிக்கை பார்க்க அல்ல.''

ராஜா மான்சிங் இதற்கு உடனடியாகப் பதில் சொல்ல வில்லை. சில வினாடிகள் கழித்து கேட்டார்: ''நான் அங்கு சென்றதை வேறு யாராவது பார்த்தார்களா?'' என்று.

''இல்லை.''

''எப்படித் தெரியும் உனக்கு?''

''இந்தத் தோப்பில் இதுதான் பெரிய மரம். இதில் ஏறினால்தான் தொலைதூரம் பார்க்கலாம். வேறு எந்த மரத்தில் ஏறினாலும் அந்தச் சிறிய தோப்பு தெரியாது.''

''அப்படியானால் இந்தத் தோப்புக்கு நீ ஏற்கனவே வந்திருக்க வேண்டும்'' என்றார்.

''வந்திருக்கிறேன்'' என்றான் ரவிசந்த்.

ராஜா அதிக நேரம் அங்கு நிற்கவில்லை. ''இன்றிரவு ஸலீம் இங்கிருந்து கிளம்புவான். அப்பொழுது நீ என் பின்னால் கடைசிப் பகுதியில் வருவாய். மெல்ல மெல்லப் பின் தங்கி விடுவாய். பிறகு புரவியைத் திருப்பி ஆஜ்மீர் சாலைவழிச் சத்திரத்துக்குப் போவாய். அங்கு உனக்கு வேண்டிய ஒருவரைச் சந்திப்பாய். இதற்குமேல் நான் உனக்கு உதவ முடியாது'' என்று சொல்லிவிட்டு, விரைந்து சென்றுவிட்டார்.

ராஜா சென்ற பிறகு சிறிது நேரம் கழித்து ரவிசந்த் தனது சந்தரை அழைத்துக்கொண்டு பழையபடி வீரர்கள் இருந்த இடத்தை அடைந்தான். அங்கிருந்த வீரர்களுடன்



உணவு அருந்தினான். அன்று பகல் பாதி உறக்கத்திலும் பாதி சிந்தனையிலும் கழித்தான்.

அன்று மாலை விளக்கு வைத்ததும் ராஜாவின் உத்திரவுப்படி ஸலீமின் கூடாரம் சுருட்டப்பட்டு அந்தச் சிறுபடை நகர்ந்தது. வீரர்களுடன் ராஜா மான்சிங்கும் ஸலீமும் சென்றார்கள். ராஜாவுக்குப் பின்னால் சென்ற ரவிசந்த் மெல்ல மெல்லப் பின்தங்கினான். ஒரு முறை புரவியை விட்டிறங்கிச் சந்தரின் ஒரு காலைப் பரிசோதித்தான். சந்தர் நொண்ட ஆரம்பித்தது. ''சந்தர் நீயும் நடிக்கப் பழகிவிட்டாய்'' என்று மெதுவாகச் சொன்ன ரவிசந்த், அதன்மீது மீண்டும் ஏறினான்.

பாலைவனத்தில் மெல்ல இருளின் ஆட்சி துவங்கியது. மேலே தெரிந்த நட்சத்திரங்கள் கண்களைச் சிமிட்டின. சந்தர் நன்றாக நொண்ட ஆரம்பித்தது. அதனால் மற்ற வீரர்கள் முன் சென்று விடவே சிறிது தங்கிவிட்ட ரவிசந்த், படை நன்றாக நகர்ந்து மறைந்ததும் சந்தரைத் திருப்பி ஆஜ்மீர் சாலை வழியை நோக்கிச் செலுத்தினான்.

அவன் ஆஜ்மீர் சாலைச் சத்திரத்தை அடையும்போது நள்ளிரவு வந்துவிட்டது. இருப்பினும் சத்திரக்காரனும் பணியாளரும் விழித்துக்கொண்டிருந்ததையும் உள்ளே ஏதோ அரவம் கேட்டதையும் உற்றுக்கேட்ட ரவிசந்த், சந்தரை வாயிலில் நிற்க வைத்துவிட்டுத் தனது வாளை உருவிய வண்ணம் உள்ளே நுழைந்தான்.

அங்கு சம்பக்கை இரு மொகலாய வீரர்கள் பிடித்துக் கொண்டிருந்ததைக் கண்டதும், சீற்றம் மிகுந்து தனது வாளை உயர்த்தினான். ''வாளை கீழே போடு. இல்லையேல் உன் காதலி இப்பொழுதே உன் கண்முன் கொல்லப் படுவாள்'' என்று பின்னாலிருந்து எச்சரிக்கை வந்தது. திரும்ப முயன்றான் ரவிசந்த். ''திரும்பாதே, திரும்புமுன் பிணமாகி விடுவாய்'' என்ற எச்சரிக்கையும் முதல் உத்திரவைத் தொடர்ந்து வந்தது.

# 29. வழியில் வந்த வயோதிகர்!

சாலைவழிச் சத்திரத்தில் சம்பக்கை இரு மொகலாய வீரர்கள் பிடித்து நின்றதைக் கண்டதும் சீற்றம் மிகுந்து வாளை உயர்த்திய தன்னை வாளைக் கீழே போடும்படி எச்சரித்தவன் குரல் ரவிசந்துக்குப் பழக்கமாகவே இருந்ததால், 'இவன் எங்கே வந்து சேர்ந்தான்?' என்றுதன்னைத் தானே வினவிக் கொண்டான். இருப்பினும், தனது முதுகில் வாளொன்று அழுந்திக் கிடந்ததால் பின்னாலிருந்து கிடைத்த உத்திரவுப்படி வாளைக் கீழே தாழ்த்தி சிறிதும் திரும்பாமலே, ''சுபான், நீயும் இந்த மடையர்களும் இளைய நவாப் ஸலீமின் சீற்றத்துக்கு ஆளாக வேண்டாமென்றால் இவர்களைச் சம்பக்கை விடச்சொல். இல்லையேல் நீ உட்பட இவர்களும் ஆஜ்மீர் வெட்டுப் பாறைக்குச் செல்வீர்கள்'' என்று கூறினான், கடுமை நிரம்பிய குரலில்.

அந்தக் குரலில் உண்மை ஒலித்ததாலும், சாதாரணமாக பொய் சொல்லும் பழக்கம் ரவிசந்துக்கு கிடையாதென்பதை அஹமத் சுபான் உணர்ந்திருந்ததாலும், எதிரியின் முதுகில் அழுத்திய தனது வாளை எடுக்காமலே ஒரு வினாடி சிந்தனையில் இறங்கினான். ரவிசந்த் நடவடிக்கை எடுக்க சுபானின் அந்த ஒரு வினாடி அஜாக்கிரதைதான் தேவையாயிருந்தது. சுபானின் வாளின் முனை அழுத்தம் குறைந்ததாக தெரிந்ததும், மின்னல் வேகத்தில் திரும்பிய ரவிசந்தின் வாள் சுபானின் வாளை அசுரவேகத்தில் தட்ட அது மேல்நோக்கி எழுந்துவிடவே, ரவிசந்தின் வாளின் நுனி சுபானின் கழுத்தைத் தடவியது. திரும்பியதும் சுபானுடன் வேறு



வீரர்கள் வரவில்லையென்பதை உணர்ந்தவுடன் ''சுபான்! உனது வாளை இப்படிக் கொடு'' என்று தனது இடது கையை நீட்டினான் ரவிசந்த்.

சுபான் இதற்கு உடனடியாக இணங்காது போகவே, சுபானை ஒரு எட்டில் அணுகி அவன் வாள் பிடித்தகையின் மணிக்கட்டை ரவிசந்த் திருகினான். வாள்கீழேவிழுந்ததும் அதைக் காலால் மிதித்துக்கொண்ட ரவிசந்த் ''சுபான்! இவர்களை சம்பக்கை விட்டு விலகி நிற்கச்சொல்'' என்று கூறி சுபானின் கழுத்தைத் தடவிய தனது வாளின் நுனியைச் சிறிது அழுத்தவும் செய்தான். ரவிசந்திடம் அதிகமாக வம்பு வைத்துக்கொள்வது ஆபத்தைத் தரும் என்பதை உணர்ந்திருந்த சுபான், இரு மொகலாய வீரர்களையும் வாட்களைக் கீழே போடும்படி உத்தரவிட, அவர்கள் சம்பக்கை விட்டு விலகி நின்றார்கள். அவர்கள் கத்திகளை வாங்கிக்கொள்ள சம்பக்குக்கு உத்தரவிட்ட ரவிசந்த் சுபானின் வாளையும் எடுத்துச் சம்பக்கிடம் நீட்டினான்.

இப்படி எதிரிகளின் மூன்று வாட்களும் கிடைத்ததும், ''சுபான்! நீயும் உனது இரு வீரர்களும் எங்களுடன் வருகிறீர்கள்'' என்று கூறிவிட்டு, அந்த நிகழ்ச்சியை வேடிக்கை பார்க்கக் கூடியிருந்த மற்ற பயணிகளை நோக்கி, ''உள்ளே செல்லுங்கள். இங்கு வேடிக்கை எதுவும் நடக்கவில்லை'' என்று கடுமையாக கூற, பயணிகள் அடுத்த வினாடி சத்திரத்து அறைகளில் பதுங்கினார்கள். அடுத்துச் சம்பக்கை அவளது புரவிக்குச் செல்லும்படி பணித்து, சுபானையும் அவனது வீரர்களையும் அவர்கள் புரவியில் ஏறச்சொல்லி தானும் சந்தர்மீது ஆரோகணித்து பயணத்தைத் துவங்கினான் ரவிசந்த். அப்பொழுதும் எதிரிகளின் ஆபத்து தன்னையோ சம்பக்கையோ விடவில்லை என்பதை உணர்ந்திருந்ததால், சத்திரமிருந்த சாலை வழியில் மேற்கு நோக்கி மிகுந்த எச்சரிக்கையுடன் பயணம் செய்தான். சில வேளைகளில் செப்பனிடப்பட்டிருந்த சாலையைவிட்டு, பக்கத்துப் பாதையில் இறங்கிச் சிறு

தோட்டங்கள் வழியே மலைப்பாதை நிறைந்த பகுதிகளிலும் இறங்கி எட்டவே பயணம் செய்து, அதிக மனித நடமாட்டம் இல்லாத இடங்களில் மட்டும் சாலை மீது புரவியைச் செலுத்தினான்.

அப்படி இரவு பூராவும் பயணம் செய்த ரவிசந்த், விடிவதற்கு சற்று முன்னர் ஒரு தோப்பு முன்பாக வந்து சேர்ந்ததும் சட்டென்று தனது புரவியை நிறுத்தினான். அந்தத் தோப்பில் ஒரே ஒரு விளக்குத் தெரிந்ததாலும் பல புரவிகளின் ஒலியும் கேட்டதாலும் ஏதோ ஒரு சிறு படை அங்கிருக்கிறதென்பதை புரிந்து கொண்டான். அதனால் சுபானைப் பார்த்து, ''சுபான்! உன் வீரர்களில் ஒருவனை விட்டு அந்தத் தோப்பில் யார் இருக்கிறார்கள் என்று பார்த்துவரச் சொல்'' என்றான்.

சுபான் முகத்தில் வெறுப்பைக் காட்டினான். ''உங்களுக்கு வேவு பார்க்க நானோ எனது வீரர்களோவரவில்லை'' என்று கூறினான், சொற்களிலும் வெறுப்பு ஒலிக்க.

''இப்பொழுது வேவு பார்ப்பது நல்லது'' என்று சுட்டிக் காட்டினான் ரவிசந்த்.

''அப்படி என்ன கட்டாயம்?'' என்று சுபான் வினவினான்.

''உன் உயிர் உடலிலேயே இருக்க வேண்டும் என்ற கட்டாயம்'' என்ற ரவிசந்தின் சொற்கள் அச்சத்தை ஊட்டும் வகையில் ஒலித்தன. ''சுபான்! நீ ரகசியமாக எதிரிக்குத் தளவாடங்களை விற்றிருக்கிறாய். அவை அக்பருக்குச் சேர வேண்டியவை. இந்தக் கள்ள வியாபாரத்தில் உனக்கு யார் துணை என்று தெரியவில்லை. ஆனால் நீ என் சொல்லைக் கேட்காவிட்டாலோ, அல்லது என்னைக் காட்டிக் கொடுத்தாலோ உன் திருட்டுத்தனம் சக்கரவர்த்திக்குத் தெரிவிக்கப்படும். அதற்கு நான் ஏற்பாடு செய்துவிட்டேன்'' என்றான்.



இதை கேட்ட சுபான் நடுங்கினான். சக்கரவர்த்தியின் சிறைகளில் செய்யப்படும் உபசாரத்தை அவன் சந்தேகமற உணர்ந்திருந்தான். ஓரிரு சமயங்களில் தானே அந்த உபசாரங்களைப் பிறருக்கு நடத்தியிருக்கிறான். சிறையில் நடக்கும் சித்திரவதையைவிட திடீரென ஏற்படும் சாவு எத்தனையோ சிறந்ததென்பதை உணர்ந்ததால், ''என்ன ஏற்பாடு? யார் சக்கரவர்த்தியை நெருங்கிப் பேசமுடியும்?'' என்று வினவினான் சுபான், திகில் ஒலித்த குரலில்.

''இவள் தந்தை'' என்று ரவிசந்தும் பல்லைக் காட்டினான்.

''இவள் தந்தையா?''

''ஆம்.''

''எங்கிருக்கிறார்?''

''சாதாரணமாக அக்பருக்கு வெகு அருகில். தற்சமயம் ஸலீமுக்கு வெகு அருகில்.''

''நீங்கள் சொல்வது விசித்திரமாயிருக்கிறது.''

''அதைவிட விசித்திரமும் இருக்கிறது'' என்ற ரவிசந்த், ''இப்பொழுது நாங்களிருவரும் ஸலீமின் படைப்பிரிவிலிருந்துதான் வருகிறோம்'' என்று ஒரு வெடியையும் எடுத்து வீசினான்.

இதனால் திக்பிரமை அடைந்த சுபான் மேற்கொண்டு விவாதத்தில் இறங்காமல் எதிரேயிருந்த தோப்புக்குள் நுழைந்து சில வினாடிகளில் திரும்பி வந்தான். இன்னொருவர் பின்தொடர. வந்தவர் எந்தவித அச்சத்தையும் காட்டாமல் மிகுந்த அலட்சியத்துடன் நடந்து வந்தார். கையிலொரு விளக்கையும் ஏந்தி வந்தார். அந்த விளக்கிலேயே அவர் முகம் நன்றாகத் தெரிந்தது ரவிசந்துக்கு. தான் அதுவரை அந்த மனிதரைப் பார்த்ததில்லையென்பதை அவர் கைவிளக்கு அவர் முகத்தில் வீசியதிலிருந்தே

புரிந்துகொண்ட ரவிசந்த் அவர் யாரென்பதை அறியும் ஆசையுடன் காத்திருந்தான்.

வந்த மனிதர் நல்ல வயோதிகர். அவர் வழுக்கைத் தலையும், நீண்ட தாடியும் அவர் முகத்திற்கு தனிமெருகைக் கொடுத்திருந்தது. நல்ல வயதாகியும்அந்த மனிதரின் நடையில் ஒரு சுறுசுறுப்பும் வேகமும் இருந்தது. விளக்கைப் பிடித்த கை உறுதியுடனும் திடத்துடனும் காணப்பட்டது. ரவிசந்தும் சம்பக்கும் இருந்த இடத்தை அணுகியதும் அந்த மனிதர் கையிலிருந்த விளக்கைத் தூக்கிப் பிடித்து ''ஓ ராணாவின் தளபதியா?'' என்று வினவினார், நீண்ட நாள் பழகியவரைப்போல்.

இதனால் சற்று வியப்படைந்த ரவிசந்த், ''தவறு பெரியவரே! நான் சக்கரவர்த்தி அக்பரின் தளபதிகளில் ஒருவரான பிருத்விராஜனின் உபதலைவன்'' என்று கூறினான்.

''அப்படித்தான் இருந்தீர்கள்.'' என்றார் வயோதிகர்.

''இப்பொழுது?''

''ராணா பிரதாப்புக்கு உதவுகிறீர்கள். ஒற்றன் என்று சொன்னால் நன்றாயிருக்காது...'' என்ற வயோதிகர் மெல்லச் சொற்களை இழுத்து, தனது தலையையும் தாழ்த்தி வணங்கினார்.

ஒற்றனுக்கு தலைவணங்குவது பழக்கமில்லையாதலால் வியப்புடன் நோக்கினான் ரவிசந்த், அந்த வயோதிகரை. அந்த வியப்பின் காரணத்தை உணர்ந்த வயோதிகர் சொன்னார் ''ஒற்றன் என்பதற்காக வணங்கவில்லை; ராஜபுதனத்தின் பெரிய வீரன் என்பதற்காக வணங்குகிறேன்'' என்று. அத்துடன் ''வீரனே! தோப்பில் என்னுடன் ஐம்பது வீரர்கள் இருக்கிறார்கள். இங்கிருந்து ஒரு குரல் கொடுத்தாலும் நீ தப்ப முடியாது. நீ ஒரு உதவி செய்தால் உன்னை நானே தப்ப வைக்கிறேன்'' என்றார்.



இப்படி ஒரு வாணிபம் அங்கு நடக்குமென்பதைச் சொப்பனத்திலும் நினைக்காத ரவிசந்த், ''என்ன உபகாரம்?'' என்று கேட்டான்.

வயோதிகர் நிதானமாகச் சொன்னார், ''நீ என்னிடமிருந்து திருடிய பொருள்களைத் திரும்பச் சேர்க்க வேண்டும்'' என்று.

''நானா? உங்கள் பொருள்களைக் களவாடினேனா?'' என்று ஏதும் புரியாமல் வினவினான் ரவிசந்த்.

''ஆம்.''

''எப்பொழுது? என்ன பொருள்?''

''தளவாடங்கள்!''

''தளவாடங்களா?''

''ஆம்; சூரத் துறைமுகத்திலிருந்து நான் அனுப்பியவை.''

இதைக் கேட்ட ரவிசந்தின் வியப்பு உச்ச நிலைக்குச் சென்றது. அந்த வயோதிகர், ''எது? ஏது என்று நாம் பேசிக்கொண்டிருப்பதைவிட நான் யாரென்று உங்களுக்குத் தெரியப்படுத்துவது நல்லது என்று நினைக்கிறேன்'' என்றார்.

வயோதிகர் பேச்சினால் வியப்பின் உச்சியை அடைந்த ரவிசந்த், ''ஆம் நீங்கள் யார்?'' என்று வினவினான் சற்று மரியாதையுடன்.

ரவிசந்தின் சொற்களிலிருந்த மரியாதை வயோதிகரிடம் ஒரு புன்முறுவலை வரவழைத்தது. ''என் பெயர் இதயதுல்லா'' என்றார் வயோதிகர்.

ரவிசந்த் பேச நா எழாமலும், கைகால் ஆடாமலும் புரவியில் அமர்ந்து விட்டான். இதயதுல்லா லேசாக நகைத்துவிட்டு, ரவிசந்த், சம்பக் இருவர் விடுதலைக்கு நிபந்தனைகளையும் விளக்கலானார்.

# 30. வணிக விசித்திரம்!

சூரத் துறைமுகத்தின் பிரபல வணிகரும், அக்பரின் நம்பிக்கைக்கு பெரிதும் பாத்திரமானவருமான இதயதுல்லா தன்னந்தனியே சபானுடன் தோப்பிலிருந்து வெளியே வந்து, நிர்ப்பயமாக தன்னுடன் உரையாடத் தொடங்கியதையும் தான் சூரத்துக்கருகில் அக்பருக்குச் சேரவேண்டிய தளவாடங்களை கவர்ந்து சென்றதைக் குறிப்பிட்டதையும் கண்டு, வியப்பின் எல்லையை எய்திய ரவிசந்த், இதயதுல்லாவை உற்று நோக்கினான். இதயதுல்லாவின் முகத்தில் எந்தவித பயமும் இல்லாததைக் கண்டு, ''மொகலாய வணிகரே! உம்மை நான் இப்பொழுதே கொன்று போடுவதை யார் தடுக்க முடியும்?'' என்று வினவினான்.

''உன் இதயம் தடுத்துவிடும்'' என்றார் இதயதுல்லா

''என் இதயமா?'' வியப்புடன் வினவினான் ரவிசந்த்.

''ஆம் ரவிசந்த்! நீ பெரிய வீரன். தவிர ராஜபுத்தர்களுக்கு உள்ள அவசியமான கண்ணியத்தையும் உடையவன். கிழவர்களையும், பெண்களையும் நிராயுதபாணிகளையும் ராஜபுத்ரர் கொல்வது கிடையாது. அந்த உரிமை மொகலாயருக்குத்தான் உண்டு'' என்று விளக்கிய இதயதுல்லா, ''ரவிசந்த் நீயும் இந்த மாசிலா மாணிக்கம் சம்பக்கும் தப்பவேண்டுமானால், என்னிடமிருந்து நீ கைப்பற்றிய தளவாடங்களை என்னிடம் திரும்பவும் சேர்க்க வேண்டும். வணிகன் எதை வேண்டுமானாலும் பொறுப்பான். நஷ்டத்தைப் பொறுக்க மாட்டான்'' என்றும் சொன்னார்.



ரவிசந்த் சிறிது சிந்தனையில் இறங்கினான். ''ராணாவிடமிருந்து தளவாடங்களை நான் எப்படித் திரும்பப் பெறுவது?'' என்று வினவினான், சில வினாடிகளுக்குப் பிறகு.

''அதில் கஷ்டமொன்றுமில்லை. தளவாடங்களைத் திருப்பிக் கொடுத்தால்தான் அவர் வளர்ப்பு மகள் திருப்பி அனுப்பப்படுவாள் என்று ராணாவுக்குச் சொன்னால், ராணா தயங்கமாட்டார்'' என்ற இதயதுல்லா புன்முறுவல் செய்தார்.

ரவிசந்த் சிறிது நிகைத்தான். ''அதுவரையில் சம்பக்...?'' என்று தயக்கமுடன் கேட்டான்.

''என் மகளாக இருப்பாள்.''

''அதாவது சிறையில் இருப்பாள்?''

''என் மகளைச் சிறை வைக்கக் கூடியவன் இனிமேல் தான் பிறக்க வேண்டும். அவள் ராணிபோல் நடத்தப்படுவாள், எனது இல்லத்தில்.''

''சூரத்திலா?''

''வேறெங்கு இருக்கிறது எனக்கு வீடு?''

இதயதுல்லாவின் வார்த்தையை நூற்றுக்கு நூறு நம்பலாமென்பது ரவிசந்துக்குத் தெரிந்தே இருந்தது. ஆனால் எந்தக் காரணத்தை முன்னிட்டும் சம்பக்கை எதிரி வட்டாரங்களுக்கு அனுப்ப முடியாதென்பதையும், 'சம்பக்கை கோட்டை விட்டான்' என்ற அபவாதம், தன்னை ராஜபுதனத்தில் தலைகாட்டாமல் அடித்துவிடும் என்பதையும் நினைத்துப் பார்த்ததால், ''தனியே இருக்கும் இந்தக் கிழவனை சிறைபிடித்துப் போனால் என்ன? இவன் ஐம்பது வீரர்கள் தோப்பிலிருந்து வருமுன்பு சந்தர்ப்பம் பறந்துவிடுமே'' என்று சிந்தித்தான்.

அவன் மனதிலோடிய எண்ணங்கள் இதயதுல்லாவுக்கும் தெரிந்திருக்க வேண்டும். இருப்பினும் எந்தவித படபடப்பையும் காட்டாமல் சர்வ சாதாரணமாகவே இதயதுல்லா பேசினார். ''ரவிசந்த் இதயதுல்லாவை சிறை செய்ய யாராலும் முடியாது. உன்னைவிடப் பெரியவர்கள் எல்லாம் அந்தப் பயனற்ற வேலையில் இறங்கி மாண்டு போயிருக்கிறார்கள். உனக்கும் எனக்கும் பத்தடி தூரம் இடைவெளியிருக்கிறது. உன்னை நோக்கி தோப்பின் முகப்பில் நீண்ட மெல்லிய பீரங்கியொன்று குறிவைக்கப் பட்டிருக்கிறது. நான் சிறிது நகர்ந்தால் நீயும் சம்பக்கும் பீரங்கிக் குண்டுக்கு இரையாவீர்கள். உங்கள் உடல்கள் சுக்கு நூறாக சிதறிவிடும்'' என்று சுட்டிக் காட்டினார். அவர் பேசிக்கொண்டிருந்த அதே சமயத்தில், தோப்பின் முகப்பில் ஒரு பீரங்கியின் நீண்ட குழாயும் வாயும் தெரிந்தது. வேண்டுமென்றே அந்தப் பீரங்கி தன்னை நோக்கி நகர்த்தப்பட்டிருப்பதை ரவிசந்த் உணர்ந்து கொண்டான். இதயதுல்லாவைத் தான் ஒன்றும் செய்ய முடியாதென்பதையும் புரிந்து கொண்டதால், ''இதயதுல்லா, எங்களை நீங்கள் எதுவேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் நான் ராணாவிடம் போய் தளவாடங்களைக் கேட்கமாட்டேன். அவை மேவாரின் பாதுகாப்புக்குத் தேவைப்படுகின்றன. மேவாரின் பாதுகாப்புக்காக என்னையும் அவர் பெண்ணையும் கூடத் தியாகம் செய்ய ராணா தயங்கமாட்டார்'' என்று முடிவாகக் கூறினான் ரவிசந்த்.

இதயதுல்லாவின் நரைத்த புருவங்கள் சிந்தனைக்கு அறிகுறியாக குவிந்து மீண்டன. ''ரவிசந்த்! வீரனான உன்னிடம் இந்தப் பதிலைத் தவிர வேறு எதையும் நான் எதிர்பார்க்கவில்லை. நீயும் நாலைந்து நாட்கள் என் விருந்தாளியாயிரு. தளவாடங்களை நானே வரவழைத்துக் கொள்கிறேன்'' என்று முடிவாகச் சொன்ன இதயதுல்லா, ''வா ரவிசந்த்! வா மகளே!'' என்று இருவரையும் அழைத்துவிட்டு, தோப்பை நோக்கித் திரும்பிச் சென்றார்.



அவர் முதுகைக் காட்டியதுமே, ''உபதளபதி! குறுவாளை அவர் முதுகில் எறிந்து கொன்று விடுங்கள்'' என்று யோசனை சொன்னான் சுபான்.

இதைக் கேட்ட ரவிசந்த், அறமைத் சுபானை மிக உஷ்ணத்துடன் நோக்கினான். ''அந்தப் பெரியவருக்கு இருக்கும் துணிவோ நேர்மையோ உனக்கு சிறிதேனும் இருக்குமானால், நீ எப்பொழுதோ உயர்ந்த பதவிக்கு வந்திருப்பாய். தவிர முதுகில் குறுவாளை எறியும் பேடிப் பழக்கம் எனக்குக் கிடையாது. வா, அவர் சொற்படி கேட்போம்'' என்று கூறிவிட்டு, தனது புரவியை தோப்பை நோக்கி செலுத்தினான். சம்பக்கும் மௌனமாக அவனைத் தொடர்ந்தாள். சுபான் சிறிது சிந்தித்துவிட்டு, ''உம்'' என்று பெருமூச்சுவிட்டு அவர்களைத் தொடர்ந்து தனது புரவியையும் நடத்தினான்.

சிறிது நேரத்தில் தோப்பை அடைந்த ரவிசந்த், அங்கு செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளைக் கண்டு பெருமியப் படைந்தான். தோப்பின் முகப்பில் தன்னை எதிர்கொண்ட பீரங்கியைப்போல் மற்றும் மூன்று பீரங்கிகள் தோப்பின் மற்ற மூன்று மூலைகளில் வைக்கப்பட்டிருந்ததையும், ஒவ்வொரு பீரங்கிக்கும் பின்னால் இரண்டு வீரர்கள் அவற்றை இயக்கத் தயாராயிருந்ததையும் கவனித்தான். மற்ற வீரர்களில் சிலர் தோப்பின் பல இடங்களில் படுத்துக் கொண்டிருந்தாலும், தோப்பின் நடுவில் இருந்த பெரிய கூடாரத்துக்கு முன்பு உருவிய வாட்களை ஏந்திய இரு வீரர்கள் காவல் செய்து நிற்பதையும் கண்ட ரவிசந்த், ''இதயதுல்லா பெரும்படைகளை நடத்த வல்லவர்'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். இதயதுல்லா கையைத் தட்டினாலே உறங்கும் வீரர்கள் சண்டைக்குத் துடித்தெழுவார்களென்பதையும் புரிந்து கொண்டான் ராணாவின் தளபதி. தனது பாராட்டுதலை வெளியிட்டும் சொன்னான்.

19413
3492936

''பெரியவரே! நீங்கள் வாணிபத்தைவிட்டால் பெரிய படைத்தலைவராகலாம்'' என்று.

இதயதுல்லா லேசாகச் சிரித்து, ''அதனால் லாபமென்ன?'' என்று கேட்டார்.

''பெரும் பெயர் சம்பாதிக்கலாம்'' என்றான் ரவிசந்த்.

''பெயர் வருவதால் பணம் கிடைக்குமா?'' என்று இதயதுல்லா கேட்டார்.

''பணந்தானா பிரதானம்?''

''சந்தேகமென்ன? பணமில்லாதவன் பிணமல்லவா? பணமிருப்பதால்தான் அரசர்களும் என்னை மதிக்கிறார்கள். ராஜபுதனச் சிறிய அரசுகள் பல என்னிடம் கடன் வாங்கியிருக்கின்றன. அக்பருக்குக்கூட அவ்வப்பொழுது முடை ஏற்படுகிறது. போர்களில் பணத்தை வாரி இறைத்து கஜானா காலியானால் பணம் கேட்டு அனுப்புகிறார். இது மிகவும் ரகசியம்'' என்றார் இதயதுல்லா.

இப்படிப் பேசிக்கொண்டே தனது கூடாரத்துக்குள் ரவிசந்தையும் சம்பக்கையும் அழைத்துப்போன சூரத் பெருவணிகர், சுபானைக் கவனிக்கும்படி தனது கூடார வாயிலில் இருந்த காவலருக்குக் கட்டளையிட்டு, கூடாரத்துக்குள் நுழைந்தார்.

கூடாரத்தின் உட்புறத்தைக் கண்ட ரவிசந்த் பிரமித்தான். அது கூடாரமா அரண்மனையின் உல்லாச அறையா என்று சந்தேகிக்கும்படி இருந்தது உட்புறம். நாலா பக்கங்களிலும் சரிகை வேலைப்பாடுகள் செய்த பட்டுப் படுதாக்கள் தொங்கிக்கொண்டிருந்தன. அங்கிருந்த ஒரு பஞ்சணையும் திண்டு திவாசுகளும் மற்றுமிரு மஞ்சங்களும் மொகலாய அந்தப்புரங்களையும் தோற்கடிக்கும்படியாக இருந்தன. பஞ்சணைக்கு எதிரேயிருந்த சிறு மேஜை



யில் விலை உயர்ந்த நால்வகை மதுவகையறாக்களும் கண்ணாடிக் குவளைகளும் காட்சியளித்தன.

அந்தக் கூடாரத்துக்குள் நுழைந்ததும் பஞ்சணையில் உட்கார்ந்து கொண்ட இதயதுல்லா, எதிரேயிருந்த மஞ்சங்களில் அமரும்படி ரவிசந்துக்கும், சம்பக்குக்கும் சைகை செய்தார். அவர்கள் அமர்ந்ததும் மதுவகையறாக் குப்பியொன்றிலிருந்த மதுவை மூன்று குவளைகளில் ஊற்றி, தான் ஒன்றை எடுத்துக்கொண்டு மற்ற இருவரையும் நோக்கி ''இது போதைதரும் பானமல்ல! பிரான்ஸ் நாட்டு திராட்சை ரசம், நீங்கள் அருந்தலாம்'' என்று உபசாரம் செய்தார்.

ரவிசந்த் அவருடன் மதுவை அருந்தினான். ஆனால் சம்பக் அதை தொடவில்லை. மது அருந்தி முடித்ததும் அவர்களிருவரும் படுத்துக்கொள்ள இரண்டு பட்டுப் படுதாக்களை தரையில் தாமே விரித்தார், இதயதுல்லா. ''நேரமாகிறது, படுப்போம். மேற்கொண்டு பேசுவதை நாளைக் காலையில் வைத்துக்கொள்வோம்'' என்று கூறித் தமது பஞ்சணையில் படுத்துக்கொண்டார்.

இரவு ஓடிக்கொண்டிருந்தது. தோப்பில் ஒலித்த இரண்டொரு வீரர்களின் எச்சரிக்கை கோஷத்தையும், பட்சிகளின் மென்மையான சப்தங்களையும் தவிர எந்த அரவமும் இல்லை. இப்படி நீண்ட நேரம் சென்று நடுநிசி வந்ததும் இதயதுல்லா பஞ்சணையிலிருந்து எழுந்து அடிமேலடி வைத்து கூடார வாயிலுக்குச் சென்றார். அங்கு யாருடனோ மெல்ல உரையாடிவிட்டுத் திரும்பினார். திரும்பியதும், ரவிசந்தின் பக்கத்தில் உட்கார்ந்து அவன் கச்சையிலிருந்த குறுவாளை எடுத்துக்கொண்டு, அவனை நோக்கிக் குனிந்தார்.

# 31. கூடார நாடகம்!

ரவிசந்தின் இடையிலிருந்த குறுவாளை எடுத்துக் கொண்டு அவனை நோக்கிக் குனிந்த இதயதுல்லா குறுவாளை அவன்மீது இறக்கினாரில்லை. சற்று கூடார வாயிலை ஒருமுறை திரும்பிப் பார்த்துவிட்டு திருப்திக்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார். அடுத்து ரவிசந்தை குறுவாளால் லேசாகத் தட்டினார். அதனால் சிறிதும் பதறிக்கொண்டு எழுந்திராத ரவிசந்த் தனது கண்களை மட்டும் அகலவிழித்து, தன் முகத்தை நோக்கிக் குனிந்து கொண்டிருந்த இதயதுல்லாவை நோக்கினான். ஏதும் பேச வேண்டாம் என்பதற்கு அறிகுறியாகக் கண்ணாலேயே சைகை செய்த இதயதுல்லா ''ரவிசந்த் இப்படியே படுத்திரு, வருகிறேன்'' என்று மிக ரகசியமாக அவன் காதில் ஓதிவிட்டு, எழுந்து சென்று விளக்கை ஊதிவிட்டுத் திரும்பி வந்து அவன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டார். ''நான் சொல்வதை கவனமாகக் கேள். நான் அழைத்து வந்திருக்கும் வீரர்களில் சரிபாதி ஸலீமின் படையைச் சேர்ந்தவர்கள். அவர்களிடம் நீயோ இந்தப் பெண்ணோ சிக்கினால் நேராக ஆஜ்மீர் கொண்டு போகப்படுவீர்கள். அப்புறம் உன் கதியும் இந்தப் பெண்ணின் கதியும் என்ன ஆகுமென்பதை நான் சொல்லத் தேவையில்லை. நீ அடித்திருக்கும் ஆயுதக் கொள்ளைகள், உன் துணிகரச் செயல்கள், அனைத்தும் அக்பர் காதில் விழுந்திருக்கின்றன. உன்னை ப்பிடிக்க இளைய நவாப் ஆராவலியின் அடிவாரமொன்றுக்குப் போயிருப்பதாகவும் கேள்வி. நல்ல வேளையாக நீ என்னிடம் வந்தது உன் அதிர்ஷ்டம்'' என்றார் இதயதுல்லா.



இதயதுல்லாவின் பேச்சிலிருந்து ஸலீம் தன்னையும் சம்பக்கையும் சிறைசெய்து சென்ற தகவல்கள் இதயதுல்லாவுக்குத் தெரியாதென்பதைப் புரிந்துகொண்ட ரவிசந்த், அவற்றைப் பற்றி விவரிக்காமல், ''இதில் அதிர்ஷ்டமென்ன இருக்கிறது? புலி வாயில் விழுவதற்கு பதில் சிங்கத்தின் வாயில் விழுந்திருக்கிறோம்'' என்று பதில் சொன்னான், மிகவும் ரகசியமாக.

தன்னைச் சிங்கமென்று ரவிசந்த் குறிப்பிட்டது இதயதுல்லாவுக்கு மகிழ்ச்சியாயிருந்தாலும், அதை ஒப்புக்கொள்ளாமல் ''சிங்கமென்று சொல்வதைவிட என்னை நரியென்று சொல்வது பொருந்தும்'' என்றார்.

''நரியா!''

''ஆமாம்.''

''அப்படிக் கூட ஒருவர் நம்மை அழைத்துக்கொள்வாரா?''

''அழைத்துக்கொண்டலென்ன? நரிக்கு சூட்சமபுத்தி அதிகம். தந்திரத்தில் இணையற்றது அது. ஒரு சிங்கத்தையே அது தன் தந்திரத்தால் பாழுங்கிணற்றில் தள்ளிவிட்டதாக பஞ்சாரிக்கதை இருக்கிறது.''

இந்த விவரத்தைக் கேட்ட ரவிசந்த், அந்த இருளிலும் புன்முறுவல் செய்தான். ''பெரியவரே! இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறீர்?'' என்றும் வினவினான்.

''உங்களிருவரையும் விடுதலை செய்வதற்காக'' என்ற இதயதுல்லாவின் சொற்களைக் கேட்ட ரவிசந்த், அதிர்ச்சியினால் மூச்சை இழுத்துப் பிடித்துக்கொண்டான். அவனை மேற்கொண்டு பேசவிடாத இதயதுல்லா, ''ரவிசந்த்! கவனமாகக் கேள். உங்களை நான் என்னுடன் அழைத்துச்

சென்றால் ஸலீமிடம் ஒப்படைக்கும்படியாயிருக்கும். ஒப் படைத்தால் ஏற்படக்கூடிய விபரீத நிகழ்ச்சிகளை நான் சொல்லத் தேவையில்லை. ஆகையால் உங்களை நான் தப்ப விடுவதைத் தவிர வேறுவழியில்லை. எழுந்து என்னைக் கூடார மூலையிலிருக்கும் கயிற்றால் கட்டிப் போடு. பிறகு ஓசைப்படாமல் கூடாரத்தின் பின்புற வழியாக சம்பக்கை அழைத்துச் செல். பின்புறத்தில் பத்தடி சென்றால் ஒரு மரத்தடியில் உங்கள் புரவிகள் இருக்கின்றன. அவற்றை அவிழ்த்துக் கொண்டு வெகுவேகமாகத் தோப்பைக் கடந்துவிடுங்கள். இங்கிருந்து ராணா பிரதாப சிம்மன் வழக்கமாக வரும் அருவிக்கரை சரியாக இரண்டு நாழிகைப் பயணந்தான்'' என்றார்.

ரவிசந்துக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. ''எங்களை இப்படித் தப்பவிடும் காரணமென்ன?'' என்று கேட்டான்.

''ராணாவுக்கு உதவுவதற்காக''—இதை திட்டமாகச் சொன்னார் இதயதுல்லா.

ரவிசந்தின் வியப்பு உச்சியை அடைந்தது. ''பெரியவரே! உமது போக்கு எனக்குப் புரியவில்லை'' என்றான்.

''புரியாததற்கு என்ன இருக்கிறது?'' என்று இதயதுல்லா வினவினார்.

''நீங்கள் எதற்காக ராணாவுக்கு உதவவேண்டும்?'' என்று சந்தேகத்துடன் வினவினான் ரவிசந்த்.

அவன் குரலிலிருந்த சந்தேகத்தை இதயதுல்லா கவனிக்கவே செய்ததால் லேசாக நகைத்தார். ''ராணா மகா



வீரன். ராஜபுத்ரர்கள் மானத்தை விற்றுவிட்ட இந்த யுகத்தில், மானத்துக்காகவும் நாட்டு சுதந்திரத்திற்காகவும் தனித்து நின்று போரிடும் மகாபுருஷன். அவருக்கு உதவுவது எனது கடமை'' என்றார், நகைப்பைவிட்டு துயரம் நிரம்பிய குரலில்.

ரவிசந்த் அசந்துபோனான். ''இஸ்லாத்திலும் இப்படிப்பட்ட பெரியவர்கள் இருக்கிறார்களா?''என்று மெதுவாகப் பேசினான்.

''எந்த மதத்திலும் நல்லவர்கள் இருக்கிறார்கள். எந்த மதமும் உயர்ந்த கொள்கைகளைத் தான் போதிக்கிறது. சுயநலம் மதத்தைத் தனக்கு அனுகூலமாகத் திருப்பி லாபத்தை அடையப் பார்க்கிறது'' என்ற இதயதுல்லா, ''சீக்கிரம் என்னைக் கட்டிப்போடு. வாயில் காவலரைக் காவலுக்கு அவசியமில்லையென்றும் உன்னை நான் கொன்று விடப்போவதாகவும் கூறி அனுப்பிவிட்டேன். அவர்கள் நம்புவதற்காக உன்குறுவாளை எடுத்து உன்னைக் கொல்வதுபோல் பாசாங்கும் செய்தேன். இனித் தாமதிக்காதே புறப்படு'' என்றார்.

அவர் சொற்படி கயிற்றை எடுத்துவர எழுந்த ரவிசந்த் ''பெரியவரே! ராணாவை யுகபுருஷன் என்று சொன்னீர்கள். நீங்களும் யுகபுருஷர்தான்'' என்று கூறிவிட்டு, அறை மூலைக்குச் சென்று கயிற்றை எடுத்து வந்து அவரைப் படுக்கவைத்து கைகளிலும் கால்களிலும் லேசாகச் சுற்றினான். ''வருகிறேன் பெரியவரே! இந்த உமது உதவியை ராஜபுதனம் மறக்காது'' என்றும் கூறினான்.

அதுவரை இந்த நிகழ்ச்சிகளை எழுந்துநின்று பார்த்துக் கொண்டிருந்த சம்பக், சட்டென்று தரையில் உட்கார்ந்து உணர்ச்சி மேலிட்டதால் மெல்ல விம்மினாள். ''பெரியவரே! இந்தச் செய்கையால் உங்களுக்குத் தீங்கு

எதுவும் நேரிடாதே?'' என்றும் வினவினாள் விம்மலின் ஊடே.

''சற்று குனி'' என்றார் இதயதுல்லா.

சம்பக் நன்றாகக் குனிந்தாள். அவள் நெற்றியில் அன்புடன் முத்தமிட்ட இதயதுல்லா, ''மகளே! எனக்குப் பெண் கிடையாது. ஆகையால் உனக்கு சீதனம் தருகிறேன்'' என்றார். மேலும் சொன்னார், ''மகளே! இன்றிலிருந்து மூன்றாவதுநாள் நான் ஆஜ்மீர் பெரும் சாலையில் ராஜபுதனப் பாலைவனத்தில் ஆராவலி மலைச் சாரலை அடுத்து முகாம் செய்திருப்பேன். அங்கு வந்து சேர்'' என்று.

''எதற்காகப் பெரியவரே?''—வியப்புடன் வினவினாள் சம்பக்.

''சீதனத்தை அபகரிப்பதற்காக.''

''சீதனத்தை அபகரிப்பதா?''

''ஆம். இந்தத் தோப்பிலிருக்கும் நான்கு பீரங்கிகளும் தனிப்பட இருக்கும் இரண்டு தளவாட வண்டிகளும் உனக்கு சீதனம்'' என்றார்.

அவர் சொல்வது விளங்காததால் ''தந்தையே! என்ன சொல்கிறீர்கள்?'' என்று குழப்பத்துடன் வினவினாள் சம்பக்.

'தந்தையே' என்று அவள் அழைத்ததால் புளகாங்கித மடைந்தார், இதயதுல்லா, ''மகளே! தந்தையே என்ற ஒரு சொல்லுக்கு என் சொத்தையே கொடுக்கலாம். இந்த தளவாடங்கள் எம்மாத்திரம். நான் முகாம் செய்திருக்கும்



இடத்தில் காவல் அதிகமிருக்காது. என்னுடன் வந்திருக்கும் ஐம்பது வீரர்களுக்கும் மதுவைக் கொடுத்து நிதான மற்ற நிலையில் வைத்திருக்கிறேன். நீயும் ரவிசந்தும் பதினைந்து வீரர்களுடன் வந்து முகாமைத் தாக்கினால் உங்களை எதிர்க்க ஆளிருக்காது. பீரங்கிகளையும் தளவாடங்களையும் இழுத்துச் செல்ல உன் பதினைந்து வீரர்கள் உபயோகப்படுவார்கள்'' என்று விளக்கிய இதயதுல்லா ''தாமதிக்காதீர்கள், போய்விடுங்கள்'' என்று துரிதப்படுத்தினார்.

ரவிசந்த் அதற்கு மேல் அங்கு நிற்கவில்லை. சம்பக்கைக் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு கூடாரத்தின் பின் புறச் சேலையை விலக்கிக்கொண்டு வெளியே சென்றான். தோப்பில் அமைதி நிலவிக்கிடந்தது. தோப்பின் விளிம்பில் நின்ற நாலைந்து காவல்வீரர்களைத் தவிர மற்றவர்கள் ஆங்காங்கு மரத்தடிகளில் படுத்து உறங்கிக்கொண்டிருந்தார்கள். ஒவ்வொரிடத்தில் ஒவ்வொரு பந்தம் எரிந்து கொண்டிருந்தது.

அந்த பந்த வெளிச்சத்தில் படாமல் நிழலடித்த இருள் மிகுந்த இடங்களில் பதுங்கிச்சென்று சந்தரையும் சம்பக்கின் புரவியையும் அவிழ்த்துக்கொண்ட ரவிசந்த் மெல்லப் புரவிகளை நடத்திச் சென்றான், தோப்பின் விளிம்புக்கு. விளிம்பு வந்ததும் சம்பக்கை புரவியில் ஏறச்சொல்லி தானும் சந்தரில் ஏறிக்கொண்டு அதிகம் அரவம் எழுப்பாமல் புரவியை நடத்தினான். தோப்பின் முகப்பிலிருந்த காவலன் ஒருவன் அவனைக் கவனித்துக் கூவ வாயெடுத்ததும், அவன் மார்பில் வேகமாகப் பாய்ந்துவிட்ட குறுவாள் அவன் சத்தத்தை அடியோடு நிறுத்திவிட்டாலும், அவன் தொப்பென்று விழுந்தஒலி மற்ற வீரர்களை எழுப்பி விடவே, தோப்பில் சுறுசுறுப்புக் காணப்பட்டது. அதே சமயத்தில் தனது புரவியைத் தூண்டிச் சம்பக் புரவியையும்

தனது காலால் ரவிசந்த் உதைக்க இரு புரவிகளும் காற்றெனப் பறந்து சென்றன.

தொலைதூரம் சென்றதும் திரும்பிப்பார்த்த ரவிசந்த், தன்னை நான்கு வீரர்கள் துரத்தி வந்ததையும், அவர்களும் திடீரென்று புரவிகளை திருப்பிக்கொண்டு சென்று விட்டதையும் கவனித்தான். மேற்கொண்டு தாமதிக்காமல் ஆராவலியை நோக்கித் தனது புரவியைப் பறக்க விட்டான். அப்படி அவன் புரவி பறந்த சமயத்திலும் அவன் எண்ணமெல்லாம் இதயதுல்லாவையே வட்டமிட்டுக் கொண்டிருந்தது. அவன் நினைத்த அதே சமயத்தில் இதயதுல்லா தனது வீரர்கள் மீது எரிந்து விழுந்து கொண்டிருந்தார். ''இங்கு காவல் புரிய வந்தீர்களா? தூங்க வந்தீர்களா?'' என்று சீறிக் கொண்டிருந்தார், தமக்கு முன் நின்ற வீரர்களை நோக்கி.

''இப்படித் தங்களை...'' என்று ஒரு காவலன் துவங்கினான்.

''கட்டிப் போடுவார்களென்று எதிர்பார்க்கவில்லை'' என்று அவன் வாசகத்தைப் பூர்த்திசெய்த இதயதுல்லா, ''கட்டிப்போடுபவன் உன்னிடம் சொல்லி உத்தரவு பெற்றுக் கொண்டு தான் கட்டிப்போடுவானா'' என்று சீறினார். ''சரி சரி தொலையுங்கள்'' என்று வெறுப்புடன் அவர்களை விரட்டவும் செய்தார்.

# 32. வேவுக்காரனா? கொள்ளைக்காரனா?

இதயதுல்லாவின் கூடாரத்திலிருந்து அவர் உத்தரவுப்படி தப்பிச் சென்ற ரவிசந்த், சம்பக் இருவர் சித்தங்களும் பற்பல யோசனைகளில் ஆழ்ந்து கிடந்ததால், இருவரும் மௌனமாகவே பயணம் செய்தனர். இதயதுல்லாவைப் போன்ற பெரிய மனிதர்களும் லட்சியவாதிகளுங்கூட அக்பரின் ஆட்சியிலிருப்பதால் தான் அக்பரை அசைக்கமுடியவில்லை என்று நினைத்தான் ரவிசந்த். ராணாவின் மகளையும் தன்னையும் அவர் சிறைபிடித்ததுங்கூட, அவருடன் வந்திருந்த ஸலீமின் வீரர்கள் கண்களில் மண்ணைத் தூவுவதற்கே என்பதையும் எண்ணி, ''இதயதுல்லா சாமான்யப்பட்டவரல்ல'' என்றும் தீர்மானித்தான் ராணாவின் உபதளபதி. அவர் தன்னிடமிருந்த பீரங்கிகளையும் இதர தளவாடங்களையும் கொள்ளையடிக்க வழிசொல்லிக் கொடுத்ததும், ரவிசந்தின் மனத்தில் சொல்லுக்கும் அப்பாற்பட்ட நன்றி உணர்வை ஏற்படுத்தியிருந்ததால் அவன் இதயதுல்லாவை வாழ்த்திக்கொண்டே பயணம் செய்தான்.

சம்பக்கின் மனமும் ஆழ்ந்த சிந்தனையில் திளைத்துத் தானிருந்தது. தான் அருவிக்கரையிலிருந்தஸலீமிடமிருந்து தப்பி, மீண்டும் ரவிசந்தை உத்தேசித்து ஸலீமின் சிறு படையைத் தொடர்ந்து சென்றதும் அங்கு சிறு தோப்பில் ராஜா மான்சிங் தன்னைச் சந்தித்துத் தன்னை அவர் மகளென்று உரிமை கொண்டாடியதும், அடுத்துத் தன்னையும் ரவிசந்தையும் தப்ப வைத்ததையும் நினைத்து, ''நான் எப்படி அவர் மகள் என்பதை விளக்கவில்லையே?'' என்று

தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள். பிறகு இதய துல்லாவும் தன்னை மகளாகப் பாவித்ததை எண்ணி மனதில் மகிழ்வடைந்தாள். ராணாவுக்கு தான் ஏற்கனவே வளர்ப்புப் பெண்ணாயிருப்பதையும் நினைத்து, ''பகை கொண்டு போருக்கு நிற்கும் இருதரப்பிலும் எனக்குத் தந்தைகளிருக்கிறார்கள். எனக்கென்ன குறைச்சல்?'' என்று மகிழ்ச்சியும் அடைந்தாள். அந்த மகிழ்ச்சியிலும் பூர்த்தியில்லை அவளுக்கு. ராஜபுதனத்தின் பெரும்பகுதி மொகலாயருக்கு அடிமைப்பட்டுக் கிடப்பதும், ராணா தன்னந்தனியாகப் போரிட்டுப் பெரும் கஷ்டங்களுக்கு இலக்காவதும் அவள் மகிழ்ச்சியில் துயரத்தையும் கலக்கவே அவள் துன்பப் பெருமூச்சு விட்டாள்.

இப்படி வெவ்வேறு சிந்தனைகளில் ஆழ்ந்த இருவரும் ஆராவலியின் அடிவாரத்தை அடைந்து, மலைக்காட்டு வழியாக உதயபூரை நோக்கிப் பயணம் செய்தபோது, இருள் கவிந்துவிட்டதால் கிட்டத்தட்ட நடு நிசியின் போதே உதயபூரை அடைந்தார்கள். அந்த நடுநிசியிலும் உதயபூர் நகரத்தை தள்ளியிருந்த ராணாவின் குடிசையில் தீபம் எரிந்து கொண்டுதானிருந்தது. அதை நோக்கிச் சென்ற இருவரும் ராணாவின் குடிசையில் நுழையும்போது ராணா தமது மஞ்சத்தில் உட்கார்ந்தபடி மடியில் ஒரு பல கையை வைத்துக்கொண்டு ராஜபுதனப் படத்தை சுண்ணாம்புக்கட்டியொன்றால் வரைந்து கொண்டிருந்ததையும், அதில் ஆங்காங்கு ஏதோ புள்ளிகளை வைத்துப் பார்த்து தலையை அசைத்ததையும் பார்த்ததும், இருவரும் வாயிலிலேயே நின்றனர்.

ராஜபுதனத்துக்கே. தலையான அரசு என்று பிரசித்தி பெற்றதும், பாபா ராவுல் காலத்திலிருந்து பல வீரர்களை சிருஷ்டித்திருப்பதுமான மேவாரின் ராணா அன்று தன்னந் தனியே உட்கார்ந்து பலகையில் ஏதோ வரைந்து கொண்டும் சிந்தனை வசப்பட்டுமிருப்பதைப் பார்த்த ரவிசந்த் ''தன்னந்தனியே செயல்களைப்புரிய இவர் தலை



யில் விதி எழுதியிருக்கிறது போலும்!''என்று மனத்துள் எண்ணினான். ''இவரை யுகபுருஷர் என்று இதயதுல்லா சொன்னது எத்தனை உண்மை?'' என்று நினைத்து ஓரளவு பெருமையும் அடைந்தான். இருப்பினும் ராணா வின் தீர்க்காலோசனையைக் கலைக்க இஷ்டப்படாமல் அவன் நின்றபோதுதான் ராணாவின் அழைப்பு வந்தது, ''உள்ளே வரலாம்'' என்று.

ரவிசந்தும் சம்பக்கும் அந்த அழைப்புக்கு இணங்கி உள்ளே நுழைந்ததும், அவர்களை ஏறெடுத்து நோக்கிய ராணா பிரதாப்பின் இதழ்களில் புன்முறுவல் அரும்பியது. ஆனால் ராணா ஏதும் பேசவில்லை. ரவிசந்தே துவங்கி னான், ''நாங்கள் இருவரும் இதயதுல்லாவிடமிருந்து வருகிறோம்'' என்று.

ராணாவின் புன்முறுவல் சிறிது அதிகமாக விரிந்தது. ''ஸலீமிடமிருந்து எப்படித் தப்பினீர்கள்?'' என்று விசாரித்தார், ராணா புன்முறுவலின் ஊடே.

அப்பொழுதுதான் சம்பக் மெதுவாகப் பேசினாள்; ''ராஜா மான்சிங் உதவினார்'' என்று.

ராணா பிரதாபசிம்மன் கண்களில் ஏதோ ஒரு சிந்தனை தோன்றி நொடிப் பொழுதில் மறைந்தது. ''ஓகோ!'' என்று மட்டும் ராணா சொன்னார்.

மேற்கொண்டு சம்பக்கே பேசினாள். ''அவர் சொற் படி நடந்து நாங்கள் இருவரும் தப்பினோம்'' என்று விளக்கமும் தந்தாள்.

ராணா புரிந்து கொண்டதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார். அவர் தலையசைப்பின் காரணத்தை உண ராத சம்பக், ''அவர் என்னை...'' என்று தொடர்ந்தாள்.

''தன் மகளென்று சொன்னார்'' என்று வாசகத்தை முடித்தார் ராணா.

ராணா அதை சர்வசகஜமாகச் சொன்னாலும், ராணாவுச்கு அந்த ரகசியம் தெரிந்திருப்பதை எண்ணி, அதிர்ச்சியடைந்து நின்றாள் சம்பக்.

அந்த அதிர்ச்சியை நீக்க ராணா சொன்னார். ''மகளே! அது பழைய கதை. அதைப்பற்றிச் சிந்திக்காதே. நீ என் வளர்ப்பு மகள் என்பதை மட்டும் நினைப்பில் வைத்துக்கொள்'' என்று.

அதுவரை மௌனமாக நின்ற ரவிசந்த் உரையாடலில் குறுக்கிட்டு, ''இதயதுல்லாவும் இவளை தன் மகளென்று சொல்கிறார்'' என்று மெதுவாகச் சொன்னான்.

ராணா தனது சிங்கக் கண்களை ரவிசந்த் மீது நிலைக்கவிட்டு, ''அதில் வியப்பென்ன இருக்கிறது! சம்பக் போன்ற ஒரு உத்தமியை; வீரமகளை தன் மகளென்று உறவு கொண்டாட யாருக்குத்தான் ஆசையிருக்காது?'' என்று வினவினார்.

''அது மட்டுமல்ல ராணா!'' என்று தொடர்ந்தான் ரவிசந்த்.

''வேறென்ன?'' என்று வினவினார் ராணா.

''இதயதுல்லா மகளுக்கு சீதனம்கொடுத்திருக்கிறார்'' என்றான் ரவிசந்த்.

''என்ன சீதனம்?'' — ராணாவின் குரலில் வியப்பு ஒலித்தது.

''நான்கு பெரும் பீரங்கிகள் மற்றும் தளவாடங்கள்.'' என்று ரவிசந்த் சொன்னதும், ராணா தனது மடியிலிருந்த பலகையுடன் மஞ்சத்தைவிட்டு எழுந்து, ''என்ன சொன்னாய் ரவிசந்த்? பீரங்கிகளா? தளவாடங்களா?'' என்று வினவினார் ஆவலுடன்.

''ஆம் ராணா''



''எங்கே அவை?''

''இன்றிலிருந்து மூன்றாவது நாள் நான் அதைக் கொள்ளையடிக்க வேண்டும்.''

''சீதனத்தைக் கொள்ளையடிக்க வேண்டுமா?''

''ஆம் ராணா'' என்ற ரவிசந்த், இதயதுல்லாவின் திட்டத்தை விளக்கினான்.

ராணா நின்ற இடத்திலேயே சிந்தனையில் இறங்கினார். பிறகு, ''மொகலாயர்களில் சில பெரியவர்கள் பிறர் சுதந்திரத்தை மதிப்பவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்'' என்று கூறிப் பெருமூச்செறிந்தார். அத்துடன் ''ரவிசந்த், இதயதுல்லா நமக்குச் செய்யும் இந்த உதவி மகத்தானது! இன்னும் சில மாதங்களில் ஏற்படவிருக்கும் போருக்கு இதயதுல்லாவின் இந்த உதவி சமயசஞ்சீவி'' என்றும் கூறினார். அத்துடன் தனது கையிலிருந்த மரப் பலகையையும் காட்டி ''இப்படி வா, என் அருகில் உட்கார். சம்பக், நீயும் உட்கார்'' என்று கூறி, தான் மறுபடியும் மஞ்சத்தில் அமர்ந்து தனது இருபக்கங்களிலும் அவர்கள் இருவரையும் உட்கார வைத்துக்கொண்டார். பிறகு பலகையைக் காட்டி சுண்ணாம்புக் கட்டியால் சில குறுக்குக் கோடுகளின் மத்தியில் புள்ளிகளை வைத்து, ''இதுதான் உதயபூர், இது சீக்கிரம் தாக்கப்படும். இங்கிருந்து நாம் இப்போருக்குச் செல்வோம். இது இங்கிருக்கிறது. மலையில் நெருக்கடியான இடம். கணவாய்களும் மிகக் குறுகல். இதற்குள் யாரும் நுழைய முடியாது. இதோ இதற்குள் இருக்கும் மலை சமவெளி நிலம் உறல்திகாட். இங்கு ராஜபுதனத்தின் தலைவிதி தீர்மானிக்கப்படும்'' என்று பின்னால் வரப்போகும் நிகழ்ச்சிகளை முன்கூட்டியே விளக்கினார் ராணா.

ரவிசந்தும் சம்பக்கும் பலகையைப் பிரமிப்புடன் பார்த்தனர். பிறகு இரவிலும் உறங்காமல் ராஜபுதன

சுதந்திரத்தின் வழிகளை எண்ணித் திட்டமிடும் அந்த மகா புருஷனைப் பார்த்தனர். ''தந்தையே, உங்களுக்குத் தூக்கமே இல்லையா?'' என்று அனுதாபத்துடன் விசாரித்தாள் சம்பக்.

''மகளே! ஒரு நாள் தூங்குவேன் நிம்மதியாக. அது ராஜபுதனம் மொகலாயரிடமிருந்து மானத்துடன் வாழ முற்படும் நாள். அதில்லையேல் கடைசி தூக்கம் ஒன்றிருக்கிறது. அது எல்லாருக்கும் இருக்கிறது. அது அரசனையும் வீரனையும், கோழையையும் சமப்படுத்தும் நாள்'' என்ற ராணா நகைத்தார்.

அத்தனை சோதனையிலும், கஷ்டத்திலும், ஆபத்திலும் நகைக்கும் திறன் வாய்ந்த ராணாவைப் பயபக்தியுடன் இருவரும் நோக்கினார்கள். ரவிசந்த் சொன்னான் : ''ராணா! உங்கள் உறக்கமின்மை என் கண்களையும் விழிப்படைய வைத்துவிட்டது. இன்றிலிருந்து நான்காவது நாள் இவள் சீதனத்தைக் கொண்டு வருகிறேன். பிறகு அடிக்கடி தளவாடங்களைக் கொண்டு வருவேன்'' என்று.

அன்றிலிருந்து மூன்றாவது நாள் இதயதுல்லாவின் சிறுபடையை முறியடித்து பீரங்கிகளையும் தளவாடங்களையும் கொணர்ந்தான். அத்துடன் நிற்கவில்லை அவன். மொகலாயருக்குச் செல்லும் தளவாடங்களையெல்லாம் ஆங்காங்கு மறித்துக் கொள்ளையிட ஆரம்பித்தான். இந்தக் கொள்ளையின் துணிகரமும் அதனால் ஏற்பட்ட நஷ்டமும் அக்பரையும் சிந்திக்கச் செய்தது. ராஜா மான்சிங்கை அழைத்து, அவரிடம் இதுபற்றிக் கலந்தும் யோசித்தார். ''மான்சிங், இந்த ரவிசந்த் நமது வேவுக்காரனா? கொள்ளைக்காரனா?'' என்று விசாரித்தார்.

# 33. அக்பர்

ஆஜ்மீரின் பலமான கோட்டையின் மதிலில் இருந்த தமது பெரிய அரண்மனையில் தமது பள்ளியறைக்கே ராஜா மான்சிங்கை வரவழைத்த மொகலாய சக்கரவர்த்தி தமது மனைவியை அழைத்து, ''பீபி, உன் சகோதரனுக்கும் எனக்கும் சிறிது மது கொண்டு வா'' என்று கட்டளையிட்டார். அத்துடன் மான்சிங்கைத் தமது பஞ்சணையில் தமது பக்கத்திலேயே உட்கார வைத்துக்கொண்டார். ராஜாமான்சிங் முதலில் உட்காரத்தயங்கினாலும், அக்பரின் உபசாரம் அவரை உட்கார வைத்துவிட்டது. ''மான்சிங்! நீ இங்கு உட்காரத் தடையென்ன இருக்கிறது. இது உன் சகோதரி படுக்கும் பஞ்சணை. தவிர இங்கு நான் சக்கரவர்த்தியுமல்ல; நீ மந்திரியுமல்ல. நான் உன் பூபா (அத்திம் பேர்); நீ என் மைத்துனன். உட்கார்'' என்று சொந்தம் கொண்டாடினார்.

சக்கரவர்த்தியின் சொற்கள் ராஜா மான்சிங்குக்கு உள்ளூரப் பிடிக்கவில்லையென்றாலும், மேலுக்கு புன்முறுவல் செய்துவிட்டு உட்காரவும் செய்தார். அடுத்து சகோதரி ஒரு தங்கத் தட்டில் இரு தங்கக் குவளைகளில் ஏந்தி வந்த மதுவை அக்பருடன் அருந்தவும் செய்தார். சக்கரவர்த்தி ராஜாவைப்போல் துரிதமாக மதுவை அருந்தவில்லை. நிதானமாகச் சிறிது சிறிதாக உறிஞ்சிக்கொண்டு இடையிடையே நாக்கை வெளியில் விட்டுக்கொண்டு பேசினார். ''மான்சிங், இந்த ரவிசந்தை எனக்குத் தெரியும். நல்ல வீரன். நமது ஒற்றனாக ராணா பிரதாப்பிடம் சென்றதாக பிருத்விராஜன் சொன்னான். ஆனால் அவன் நமது தளவாடங்களைக் கொள்ளையடிக்கிறான். அவன்

வேவுக்காரனா? கொள்ளைக்காரனா?'' என்று வினவினார். அந்த வினாவை முடித்துச் சிறிது மதுவை உறிஞ்சி, 'ச்சோ' என்று சொட்டையும் விட்டார்.

ராஜா மான்சிங் சிறிது சிந்தித்தார். ''நீங்களே அவனை வீரனென்று ஒப்புக்கொள்கிறீர்கள். வீரன் கொள்ளைக்காரனாக முடியுமா?'' என்று பதில் கேள்வியை கேட்டார்.

''ச்சோ'' என்று இன்னொருமுறை சிறிது மதுவை உறிஞ்சி தமது ரசனையைக் காட்டிய அக்பர் ''இந்த மது மிகச் சிறந்தது'' என்று பேச்சை வேறு திசையில் மாற்றினார்.

''வேறு எப்படியிருக்க முடியும்? மது, மாது இரண்டிலும் சிறந்ததைத் தவிர வேறு எதையும் சக்கரவர்த்தியால் ரசிக்க முடியாதென்று மக்களிடையே பேச்சு இருக்கிறது'' என்று சுட்டிக்காட்டினார் மான்சிங்.

''அப்படியா?''-அக்பர் கண்கள் மலர்ந்தன, திருப்திக்கு அறிகுறியாக.

''நவ்ரோஸாவில் தாங்கள் தேர்ந்தெடுக்கும் சரக்கு உயர்ந்ததாக இருப்பதாகவும் வதந்தி இருக்கிறது...'' -இதை மிக நாசுக்காக ராஜா சொன்னார்.

''அது பெண்கள் சந்தையல்லவா?'' - அக்பர் தமக்கும் அதற்கும் சம்பந்தமில்லாததுபோல் பேசினார்.

''அது அக்பரின் சுயம்வர மண்டபமாக அரண்மனை வட்டாரங்களில் பேச்சு அடிபடுகிறது...''-ராஜா மான்சிங் வாழைப்பழத்தில் ஊசியை ஏற்றுவதுபோல் பேசினார்.

சம்பாஷணை தமக்கு மிகவும் பிரதிஅனுகூலமாகப் -போவதை உணர்ந்த அக்பர், ''மான்சிங்! உலகம் பொல்



லாதது. யாரைப் பற்றியும் அவதூறு சொல்லும். அதுவும் பெரிய இடத்து மனிதர்களென்றால் வம்பு பேசத் தயங்காது'' என்று போலித் துன்பப் பெருமூச்சுவிட்டு, ''அது கிடக்கட்டும், நாம் ரவிசந்தைப்பற்றியல்லவா பேசிக்கொண்டிருந்தோம்?'' என்று மறுபடியும் பழைய விஷயத்துக்கு வந்தார்.

மிகவும் அறிவாளியும் தந்திரசாலியுமான அக்பர், இப்படி அடிக்கடி பேச்சை மாற்றி எதையும் குழப்பும் ஆற்றல் படைத்தவர் என்பதை மான்சிங் உணர்ந்தே இருந்ததால் ''ஆம்! ரவிசந்தைப்பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தோம்'' என்றார்.

''இதுவரை நமது தளவாட வண்டிகளை நான்கு முறை தடுத்திருக்கிறான்'' என்றார் அக்பர். ராஜாமான்சிங் அதற்குப் பதிலேதும் சொல்லாது போகவே, அக்பரே தொடர்ந்தார். ''இதுவரை பன்னிரண்டு பீரங்கிகள், எட்டாயிரம் வாட்கள், ஆயிரம் கேடயங்கள், ஆயிரம் ஈட்டிகள் பறிபோயிருக்கின்றன. இனிமேல் நாம் இதை அனுமதித்தால் ராணா பிரதாப்பை அடக்குவது குதிரைக் கொம்பாகிவிடும். இந்தக் கொள்ளையை உடனடியாக நிறுத்த வேண்டும்'' என்று வலியுறுத்தினார் சக்கரவர்த்தி.

ராஜா மான்சிங்கின் இதழ்களில் புன்முறுவலொன்று விரிந்தது. ''இந்தக் கொள்ளையை நிறுத்தினால் ராணா பிரதாப் படிந்து விடுவாரென்று நினைக்கிறீர்களா சக்கரவர்த்தி?'' என்று சம்பிரதாயத்துடன் கேட்டார்; விஷமத்துடன் புன்முறுவலும் செய்தார்.

''ராஜ்யமின்றி, பின்பற்றுவாரின்றி, துணையின்றி, ஆயுத பலமின்றி ராணா எப்படிப் போரிட முடியும்?''என்று அக்பர் விசாரித்தார். ''மொகலாயரின் பெரும் சக்தியை அவர் எப்படி எதிர்த்து நிற்க முடியும்?'' என்றும் கேட்டார் அக்பர்.

''சக்கரவர்த்தி, தங்கள் தந்தை ஹுமாயூன் நிலையும் இப்படித்தானிருந்தது ஆரம்பத்தில். உங்கள் சிறுவயதில் நீங்களும் இதே நிலையில் தானிருந்தீர்கள். இருந்தும் இந்தப் பேராசை எப்படி நிறுவினீர்கள். மனோபலத்தால், வீரத்தால், உறுதியால் சாம்ராஜ்யத்தை நிறுவினீர்கள். உங்கள் வசதி ராணாவுக்கு இல்லாதிருக்கலாம். உங்களுக்கு பைராம்கான் துணை நின்றதுபோல் ராணாவுக்கு பலமான துணை இல்லாதிருக்கலாம். ஆனால் உங்களுக்குள்ள மனோபலம், வீரம் இரண்டும் அவருக்கு இருக்கிறது இவை எல்லாவற்றையும்விட தன்மானம் இருக்கிறது. நாட்டுப்பற்று இருக்கிறது. மொகலாயருக்குப் படிவதில்லையென்ற தீர்மானமிருக்கிறது. இவைபோதும் ஒரு வீரன் தலைவணங்காதிருப்பதற்கு'' என்ற மான்சிங்கின் பதிலில் பெருமை இருந்தது.

அக்பரின் கண்களில் விஷமச் சாயை படர்ந்தது. இகழ்ச்சி நகையொன்றை அவரது அழகிய கண்கள் உதிர்த்தன. ''ஆம் மான்சிங், தன்மானம் எதையும் சாதிக்கும், எந்த சக்தியையும் கொடுக்கும். அது கோடியில் ஒருவருக்குத்தான் இருக்கிறது'' என்றார் அக்பர்.

சக்கரவர்த்தி தன்னைப்பார்த்து நகைக்கிறாரென்பதை மான்சிங் உணர்ந்து கொண்டாலும், அப்பொழுது செய்யக்கூடியது ஏதுமில்லையென்பது அவருக்குப் புரிந்தே இருந்தது. அப்பொழுது அக்பர் இன்னொரு வெடிகுண்டை எடுத்து வீசினார். ''மான்சிங், இந்த ராணாவின் இம்சைகளை நான் நீண்டகாலம் பொறுத்துவிட்டேன். இனிப் பொறுக்க முடியாது'' என்றார் சற்று கடுமை ஒலித்த குரலில்.

''பொறுக்காமல் என்ன செய்வதாக உத்தேசம்?', என்று மான்சிங் விசாரித்தார்.



''நீ பெரும்படையுடன் சென்று ராணாவை முறியடிக்க வேண்டும். அல்லது நான் செல்ல வேண்டும். யார் போவது?'' என்று வினவினார் சக்கரவர்த்தி. சக்கரவர்த்தியின் குரலில் உறுதியிருந்தது.

தாம் ஏதாவது துரிதமாக செய்யாவிட்டால் ராணா மீது மொகலாயரின் பெரும்படை இறங்கும் என்பதை ராஜா மான்சிங் புரிந்துகொண்டார். அக்பர் ஒருமுறை முடிவு எடுத்துவிட்டால் அவரைத் திருப்புவது நடவாத காரியமென்று ராஜா மான்சிங் நன்றாக உணர்ந்தே இருந்தார். ஆகவே சிறிது சிந்தனைக்குப் பிறகு கேட்டார். ''ராணாவை மெல்லச் சமாதானத்துக்கு இழுத்தால்?'' என்று.

அக்பரின் கண்களில் வியப்பு விரிந்தது. ''அது சாத்தியமா?'' என்று ஆவலுடன் வினவினார்.

''நான் முயன்று பார்க்கிறேன்'' என்றார் மான்சிங் நிதானமான குரலில்.

''நீயா மான்சிங்''- அக்பர் மீண்டும் உறவு முறையில் பேச்சுக்கு வந்தார்.

''ஆம். நானே சந்தித்துப் பேசுகிறேன் ராணாவை.''

''ராணா உன்னை சந்திக்க இஷ்டப்படாவிட்டால்?''

''இஷ்டப்படாமலிருக்க முடியாது.''

''என்?''

''அவருக்கு ஒரு வளர்ப்பு மகள் இருக்கிறாள்.''

''ஆம்! கேள்விப்பட்டிருக்கிறேன். சம்பக் என்ற ராட்சசி இருக்கிறாள்.''—இதை அக்பர் ஆவேசத்துடன் சொன்னார்.

ராஜா மான்சிங்கின் முகத்தில் சிறிது சினம் உதய மாயிற்று. ''பூபா'' என்று ஆத்திரத்துடன் அழைத்தார் அக்பரை நோக்கி.

''என்ன மைத்துனரே''-பதிலில் இனிமையைக் காட்டி னார், அக்பர்.

''சம்பக் ராட்சசியல்ல. ராஜபுதனத்தின் சிறந்த மலர். அசாத்திய அழகி'' என்று மான்சிங் குறிப்பிட்டார்.

''அழகியா? அழகியா?'' என்று இருமுறை ஆவலுடன் கேட்ட அக்பர், மீண்டும் சிறிது மதுவை உறிஞ்சினார். தமது வலிய உதடுகளை இருமுறை நாவால் துழாவிக் கொண்டார்.

''பூபா!'' - இம்முறை ராஜா மான்சிங்கின் குரலில் கடுமையிருந்தது.

''என்ன மைத்துனரே!''

''சம்பக்கைப்பற்றித் தவறான ஆசையிருந்தால் அதை விட்டுவிடுங்கள்''

''ஏன்?''

''அவள் நெருப்பு. மொகலாய அரசைச் சுட்டெரித்து விடுவாள்.''

''உனக்கேன் இவ்வளவு கோபம் வருகிறது மான்சிங்?''

ராஜா மான்சிங் பஞ்சணையிலிருந்து எழுந்தார். அதிகார தோரணையில் சக்கரவர்த்தியை நோக்கி நீண்ட நேரம் நின்று கொண்டிருந்தார். பிறகு கேட்டார்: ''அவள் எப்படி ஸலீமின் வீரர்களிடமிருந்து தப்பினாள்?'' என்று.



''எப்படி?''-அக்பர் கேள்வியில் சந்தேகம் ஒலித்தது.

''நான் தப்ப வைத்தேன்''—ராஜாமான்சிங் சற்றும் தயக்கமின்றித் திடமாகச் சொன்னார்.

''ஏன் மான்சிங்? ஏன்?''—அக்பர் ஆத்திரத்துடன் வினவினார்.

''அவள் என் மகள்!''—இதை பொறுமையுடன் சொன் னார் மான்சிங்.

அக்பரின் அதிர்ச்சி விவரிக்க இயலாதிருந்தது. அவரும் கையிலிருந்த மதுக்குப்பியை பக்கத்திலிருந்த தட்டில் வைத்துவிட்டு, பஞ்சணையிலிருந்து இறங்கி, மான்சிங்கை கூர்ந்து நோக்கினார். ''இப்பொழுது புரிகிறது. இப் பொழுது புரிகிறது மான்சிங்; என் மைத்துனன்! அவனே எனக்கு விரோதி'' என்று கூவி, வலது காலால் தரையிலும் உதைத்தார். அப்பொழுது உள்ளே நுழைந்த மான்சிங்கின் சகோதரி இருவரையும் மாறி மாறிப் பார்த்து ஏதுமறி யாமல் திகைத்து நின்றாள்.

# 34. ராணாவுக்குத் தலைவலி!

கணவனும் சகோதரனும் ஒருவரையொருவர் நோக்கிச் சீறி நின்றதைக் கவனித்துச் சிலையென நின்று விட்ட மான்சிங்கின் சகோதரி, சில வினாடிகளிலேயே தன்னை சமாளித்துக் கொண்டு, ''உள்நாட்டுக் கலகம் கிளம்பி விட்டதுபோல் தெரிகிறதே'' என்று கூறி, மோகனப் புன்முறுவலும் செய்தாள். அந்தப் புன்முறுவலுக்கு பல ஆண்டுகளாக அடிமைப்பட்டுக் கிடந்த அக்பரின் கோபம் வினாடியில் அகன்றது. ''பீபி! அப்படியொன்றும் பிரமாத சண்டையல்ல எங்களுக்குள்'' என்று சமாதானமும் சொன்னார், அந்த ராஜபுத்ரியை நோக்கி.

''பிரமாதமாயிருந்தாலும் இல்லாவிட்டாலும் சண்டை சண்டைதானே? ராஜபுத்ர பிரதிநிதியும் மொகலாய சிம்மாசனாதிபதியும் சண்டை போட்டுக் கொண்டால் இந்த சாம்ராஜ்யம் பிளந்துவிடுமே'' என்று கவலையுடன் பேசினாள் அக்பரின் ராஜபுத்ர மனைவி.

''அந்த அளவுக்கு சண்டைபோடமாட்டோம்'' என்ற ராஜா மான்சிங், ''என்ன பூபா; அப்படித்தானே?'' என்றொரு கேள்வியையும் வீசினார்.

ஆமென்பதற்கு அறிகுறியாக அக்பர் தலையை அசைத்தார். ஆனால் அந்த தலையசைப்பிலோ சகோதரனின் சாகசப் பேச்சிலோ ராஜபுத்ரி ஏமாந்தாளில்லை. ''எதைப் பற்றிச் சச்சரவு?'' என்று விசாரித்தாள் சகோதரனை நோக்கி.



''ஒரு சிறு விஷயம்'' என்று சமாளிக்கப் பார்த்தார் அக்பர்.

''அது என்னவென்பது நான் அறியலாமா?'' என்று கேட்டாள் சக்கரவர்த்தியின் மனைவி.

அக்பர் பதில் சொல்லவில்லை. ராஜா மான்சிங்கே பதில் சொன்னார், ''எனக்கொரு மகளிருக்கிறாள்!'' என்று.

''உங்களுக்கு மகளா!'' —சக்கரவர்த்தினி வியப்பைக் காட்டினாள்.

''ஆம்'' என்றார் மான்சிங். அதைச் சொன்ன அவர் குரலில் பெருமை ஒலித்தது.

''அப்படியொரு மருமகள் இருப்பது எனக்குத் தெரியாதே...''-சக்கரவர்த்தினியின் குரலில் வியப்பு ஒலித்தது.

''உனக்கென்ன? உலகத்துக்கே தெரியாது!''

''ரகசிய மகளா?''

''ஆம்.''

''எங்கிருக்கிறாள் அவள்?''

''ராணா பிரதாபசிம்மனிடம்.''

சக்கரவர்த்தினியின் முகத்தில் அவநம்பிக்கை சுடர் விட்டது. ''என்ன உங்கள் விரோதியிடத்திலா?'' என்று வினவினாள்.

ராஜா மான்சிங் சகோதரியை நோக்கினார் கூர்ந்து. ''ஆம் என் விரோதிதான். ஆனால் ராஜபுத்ரர்களின் விரோதியல்ல. மானத்துடன் வாழும் ஒரு மகாத்மா ராணா

பிரதாப்'' என்று சந்தேகத்துக்கு இடமின்றிப் பேசினார் ராஜா மான்சிங். ''இருப்பினும், அந்த மகாத்மாவை சக்கரவர்த்தியின் நண்பனாக்க முயற்சிப்பது என்று தீர்மானித்திருக்கிறேன்'' என்றும் கூறினார்.

''எப்படி? எப்பொழுது?'' என்று கேட்டாள் சக்கரவர்த்தினி.

''வெகுசீக்கிரம். காபூலில் கலவரம் ஏற்பட்டிருக்கிறது. அதை அடக்கப் போகிறேன் சிலநாட்களில். திரும்பி வரும் போது ஷோலாப்பூர் வழியாக மேவார் செல்கிறேன். ராணாவை சமாதானத்துக்கு இழுக்கிறேன், இதனால் ராணாவின் துன்பங்கள் தீரும். மொகலாய சாம்ராஜ்யத் தின்மீது சதா குத்தும் ஒரு முள்ளும் எடுக்கப்படும்'' என்று ராஜா மான்சிங் நம்பிக்கையுடன் பேசினார். ''சகோதரி! பூபா எப்படி வேண்டுமானாலும் நினைக்கட்டும். உன்னைச் சக்கரவர்த்திக்கு மணமுடித்த பின்பு உன் நலன், சாம்ராஜ்ய நலன் இரண்டும் அக்பர் சமஸ்தானத்தின் நலனுடன் கலந்துவிட்டது. ஆகவே எப்படியும் ராணாவைச் சந்திக் கிறேன்'' என்று திட்டவட்டமாகச் சொன்ன மான்சிங், அறையின்வாயிற்படியை நோக்கித் திரும்பினார்,வெளியே செல்ல.

''அண்ணா!''—சக்கரவர்த்தினியின் அழைப்பு அவர் கால்களைத் தேக்கியது.

''என்ன சகோதரி?''—திரும்பிப் பார்த்துக் கேட்டார் ராஜா மான்சிங்.

''ராணா உங்களைச் சந்திக்க..............................''
.......—...... ....................................... ''மாட்டார்?''

''என்ன அப்படி நிச்சயமாகச் சொல்கிறீர்கள்?''



''முதலில் நான் ராணாவைச் சந்திக்கப்போகவில்லை, என் மகளைப் பார்க்கும் சாக்கில் போகிறேன். அப்படி நான் வலுவில் போகும்போது, என்னை வரவேற்பதும் உபசரிப்ப தும் ராணாவின் கடமை. அவர் கடமை மீற முடியாது. ஒரு ராஜபுத்ரனை இன்னொரு ராஜபுத்ரன் சந்திக்க மறுத்தால் அது விருந்தாளியை அவமானப்படுத்தியதுபோல் ஆகும். பிறகு அந்த அவமானம் இரண்டிலொருவர் மரணத்தில் தான் முடியும். அதை ராணாகூட விரும்பமாட்டார். ஏற்கனவே உள்ள தொல்லையில் மான்சிங்கின் விரோதத்தையும் சம்பாதித்துக்கொள்ள அவர் விரும்பமாட்டார்.''—இதை மான்சிங் உறுதியுடன் சொன்னார்.

அந்த உறுதியுடன் வெளியேறவும் செய்தார். அவர் அறையைவிட்டு அகன்றதும், அறைக்கதவு வெளியிலிருந்த காவலரால் சாத்தப்பட்டதும் அக்பர் தமது மனைவியை நோக்கினார் மிகுந்த அன்புடன். தமது வலிய உதடுகளில் புன்முறுவலும் கொண்டார். அவள் கையிலிருந்த தட்டைப் பிடுங்கிச் சற்று எட்ட இருந்த மஞ்சத்தில் எறிந்துவிட்டு அவளை இழுத்து கட்டிலில் தள்ளினார். இறுகத் தழுவி இதழ்களையும் கவ்வினார்.

ராஜபுத்ரி தன்னை விடுவித்துக்கொள்ள முயன்று ''இது நேரமல்ல'' என்றாள்.

''எதுவும் நேரந்தான் இந்த அக்பருக்கு. அதுவும் நீ இந்த சாம்ராஜ்யத்துக்கு இன்று செய்திருக்கும் உதவிக்கு தான் கொடுக்கக்கூடிய பரிசு என்னைவிட வேறு எதுவு மில்லை.'' என்று கூறிப் பஞ்சணையில் கிடந்த அந்த ராஜ புத்ரியை நோக்கிக் குனிந்தார்.

அவள் அதற்குமேல் அடம்பிடிக்கவில்லை. அக்பரின் சாசத்துக்கு இடங்கொடுத்தவண்ணம் கேட்டாள், ''அப்படி என்ன உதவி செய்துவிட்டேன்?'' என்று.

''ராஜா மான்சிங் இனிப் பிரதாப்பை ஒழிப்பது நிச்சயம்'' என்றார் அக்பர்.

''எப்படி?''

''ராஜா மான்சிங் மேவார் போனால், அவரை ராணா பிரதாப் சந்திக்கமாட்டார், என்னுடன் சம்பந்தம் செய்த தற்காக. அப்படிச் சந்திக்காவிட்டால் அவர்கள் இரு வருக்கும் ஜன்மப் பகை ஏற்படும். அடுத்து மான்சிங் மேவார்மீது படையெடுப்பார். எந்த வசதியுமற்ற ராணா மீது மொகலாயர் பெரும்படை இறங்கினால் விளைவை நான் சொல்லத் தேவையில்லை'' என்று அக்பர், அவளது இதழ்களிலிருந்து மார்புக்கு உதடுகளை மாற்றினார்.

ராஜபுத்ரி நகைத்தாள் இகழ்ச்சியுடன். அக்பரின் கண்கள் சந்தேகத்துடன் பார்த்தன சக்கரவர்த்தினியை. ''ஏன் நகைக்கிறாய் பீபி?'' என்று கேட்டார் மார்பிலிருந்த இதழ்களை அகற்றாமலே.

''ராணாவை நீங்களும் என் சகோதரனும் அடக்கி விடுவதாக மனக்கோட்டை கட்டுகிறீர்களே. அதற்காக'' என்றாள் சக்கரவர்த்தினி.

''எங்கள் பலம் தெரியுமா உனக்கு?'' என்று கேட்ட அக்பர், அவள்மீது முகத்தைப் புரட்டினார்.

''இத்தனை நாள் அந்தப் பலம் எங்கே போயிற்று? ராணாவை அடக்குவதுதானே?'' என்று வினவினாள் அந்த ராஜபுத்ரி.

''எதற்கும் காலம் வரவேண்டும்'' என்றார் அக்பர்.

''சக்கரவர்த்தி! ராணாவை நீங்கள் புரிந்து கொள்ள வில்லை. உங்களிடம் எங்களைப்போல் மானமிழந்த ராஜ



புத்ரர் பலர் இருக்கலாம். ஆனால் எந்தச் சமுதாயத்திலும் மானமுள்ள ஏதாவது ஒரு வீரன் மிஞ்சுகிறான். அவனைப் படைபலம் அடக்குவதில்லை, பணபலம் அடக்குவதில்லை, வறுமை அடக்குவதில்லை, எதிர்நோக்கும் ஆபத்தும் பணியவைப்பதில்லை'' என்றாள் சக்கரவர்த்தினி.

அக்பரின் சினம் அதிகமாயிற்று. சக்கரவர்த்தினியைத் தண்டிக்கத் தீர்மானித்தார். ''பீபி! இந்த முயற்சியில் ராஜா மான்சிங் தோல்வியடைந்தால் உன் அழகிய கழுத்தை நானே முறித்துவிடுகிறேன்'' என்றார் சீற்றத் துடன். அந்த சீற்றத்துடன் அவள் அழகிய கழுத்துக்கு கைகளைக் கொண்டு போனார். ஆனால் காமம் சீற்றத் தைத் தணித்தது. காமத்தை சக்கரவர்த்தினி தணித்தாள். கடைசியில் நகைத்தாள். அந்த நகைப்பில் ஏளனமேயிருந் தது. அதை அக்பர் கவனிக்கவில்லை. மகிழ்ச்சியின் நகைப்பு என்று நினைத்தார். இரண்டாம் முறையாகச் சக்கரவர்த்தினியை அணுகினார்.

அக்பரின் சந்நிதானத்திலிருந்து வெளியே சென்ற மான்சிங், தீர்க்க சிந்தனையுடன் தமது மாளிகையை அடைந்தார். அடைந்ததும் ''நாம் உடனடியாக காபூலுக்கு பயணமாகிறோம். ஆயிரம் பேர் கொண்ட புரவிப்படை மட்டும் என்னுடன் வரும்'' என்று படைப் பிரிவிற்குஉத்தரவிட்டார்.

காலதாமதம் செய்யாமல் காபூலுக்குப் பயணமானார் ராஜா மான்சிங். அக்பரின் படைத்தலைவர்களில் மிகச் சிறந்தவரும் வீரருமான மான்சிங் காபூலில் தமது அலு வலை மிகவும் சுலபமாக முடித்தார். அந்தச் சிறு கலகத்தை அடக்குவது பல போர்களில் வெற்றிவாகை சூடியிருக்கும் மான்சிங்குக்கு ஒரு பிரமாதமான அலுவலாக இல்லை. அந்தக் கலகத்தை அடக்க யாராவது உபதளபதியை அனுப்பியிருக்கலாம் அக்பரின் அமைச்சர். ஆனால் அவரது

நோக்கம் வேறாயிருந்ததால் இந்த அற்ப காரியத்தை தாமே மேற்கொண்டார். காபூல் கலவரத்தை அடக்கிய பின்பு இருபது வீரர்களைத் தவிர மீதிப்படையை ஆஜ்மீருக்கு திருப்பி அனுப்பிவிட்டு, ஷோலாப்பூர் வழியாக மேவாரை நோக்கிப் பயணம் செய்தார் ராஜா. தாம் வருவதை உதயபூரில் இருந்த ராணாவுக்கு முன்கூட்டி அறிவிக்க ஒரு தூதனையும் அனுப்பியிருந்தார்.

ராஜா மான்சிங்கை வரவேற்கவும் உபசரிக்கவும் ரவிசந்தையும் தனது மகளையுமே நியமித்திருந்தார் ராணா. ராஜா மான்சிங் வந்ததும், அவருக்கு உதயசாகர் ஏரிக்கரை மீது பெரிய விருந்தளிக்கவும் ஏற்பாடு செய்ய உத்தரவிட்டார்.

ராஜா மான்சிங் தமது இருபது வீரர்களையும் உதயபூர் எல்லையிலேயே நிற்கச் செய்து, தாம் மட்டும் தன்னந் தனியே உதயபூருக்குள் நுழைந்தார். அவரை ரவிசந்தும் சம்பக்கும் மற்ற ராஜபுத்ரத் தலைவர்களுடன் எதிர் கொண்டு விருந்துக்கு அழைத்துச் சென்றனர். அந்தப் பெரிய விருந்தைக் கண்ட ராஜா மான்சிங் மகிழ்ச்சி கொண்டார். நடுவில் போடப்பட்டிருந்த பெரிய ஆசனத்தில் அமரவும் செய்தார். அவர் மகிழ்ச்சி எல்லை கடந்தது. ஆனால்,அந்த மகிழ்ச்சி எத்தனை அர்த்தமற்றது என்பதை விருந்து பரிமாறப்பட்ட சில வினாடிகளில் புரிந்து கொண்டார். விருந்தில் அவரது அக்கம் பக்கத்தில் மேவாரின் பெரும் படைத்தலைவர்கள் உட்கார்ந்து கொண்டனர். ஆனால் ராணா பிரதாப்பைக் காணோம். ''ராணா எங்கே?'' என்று கேட்டார் மான்சிங்.

''அவருக்குத் தலைவலி'' என்று ரவிசந்த் பதில் சொன்னான்.

ராணா வராததற்குக் காரணம் ராஜா மான்சிங்குக்குப் புரிந்து விட்டதால், விருந்தைத் தொடாமல் சரேலென்று



எழுந்தார். ''தலைவலிக்குக் காரணம் எனக்குத் தெரியும்'' என்று சீறினார். மகளை நோக்கி, ''மகளே! தலைவலி ராணாவுக்கல்ல, மேவாருக்கு என்று சொல் ராணாவிடம்'' என்று கூறிக்கொண்டே, தமது ஆசனத்தைப் பின்னால் தள்ளி விட்டு, உணவில் ஒரு கவளத்தை எடுத்து ஆகாயத்தை நோக்கி உண்தேவுக்கு(உணவுக்கடவுளுக்கு) ராஜபுத்ரர் வழக்கப்படி இறைத்தார். பிறகு கிளம்பித் தமது புரவியை நோக்கி நடந்தார். அவர் புரவிமீது ஏறிய சமயத்தில், ராணா பிரதாப் தலையைக் காட்டினார். சிங்கம் போல் நடந்துவந்தார், மான்சிங்கை நோக்கி.

# 35. மான்சிங்கின் சபதம்!

ராஜா மான்சிங் தமக்குச் செய்யப்பட்ட அவமானத்தால் மனம் வெதும்பி, எட்ட நின்ற தமது மகளையோ, ரவிசந்தையோ கூடக் கவனிக்காமல், சீற்றத்துடன் புரவி மீது எறிய சமயத்தில், மெல்லத் தலையைக் காட்டிய ராணாவை புரவியிலிருந்தபடியே உற்று நோக்கினார். ''ராணாபிரதாப்! உமது தலைவலிக்குக் காரணம் எனக்குத் தெரியும். அது என்னுடன் உணவருந்தாதிருக்க ஏற்பட்ட போலித் தலைவலி என்பதும் நான் உணராததல்ல. ஆனால், உமக்கு இனிமேல் போலித் தலைவலி அவசியமில்லை. இன்றுமுதல் உண்மைத் தலைவலியைச் சம்பாதித்துக் கொண்டுவிட்டீர்கள்''என்று உஷ்ணத்துடன் சொற்களையும் கொட்டினார்.

சிங்கநடை நடந்து வந்த மேவார் சிங்கமும் ராஜா மான்சிங்கை உற்று நோக்கியது. அந்த நோக்கில் பரிகாசமில்லை, பரிதாபம் நிரம்பி நின்றது. ''மான்சிங்! உங்கள் மனத்தைப் புண்படுத்த இஷ்டமில்லாததால்தான் நான் வரவில்லை விருந்துக்கு. துருக்கர்களுடன் சம்பந்தம் செய்தவர்களுடன் நான் சமபந்தி போஜனம் செய்வதில்லையென்பது உங்களுக்கே தெரியும்'' என்றார் ராணா பிரதாப் துன்பம் நிரம்பிய குரலில்.

சுமார் இருபது ஆண்டு காலமாக மொகலாய சாம்ராஜ்யத்தை தன்னந்தனியாக எதிர்த்து நின்ற ராஜபுத்ரர்களின் மானத்துக்கு ஒரு அத்தாட்சியாய் வறுமையிலும் அஞ்சா நெஞ்சராய் தலைநிமிர்ந்து நின்ற ராணா பிரதாப்பின் சொற்களை மிகுந்த அமைதியுடன் கேட்டார் ராஜா மான்சிங். ஆனால் அந்த அமைதி புயலுக்குமுன் ஏற்படும் அமைதியாயிருந்தது. ராஜா மான்சிங் மேவார் சிங்கத்தை



நோக்கிச் சொன்னார். ''ராணா! உங்களையும் உங்களைச் சேர்ந்தவர்களுடைய மானத்தையும் பாதுகாக்கத்தான் நாங்கள் எங்கள் மானத்தை இழந்தோம். எங்கள் சகோதரிகளையும் பெண்களையும் *துருக்கருக்குக் கொடுத்தோம். வேண்டுமானால் நீ அபாயத்திலேயே ஜீவித்துக்கொண்டிரு ஆனால் இந்த நிலம் இனி உன்னை வாழவிடாது. உன் கர்வத்தை அடக்காவிடில் என்பெயர் மான்சிங்கல்ல'' என்று. அத்துடன் புரவியையும் நடத்தினார்.

அப்பொழுது ராணா பிரதாப் ''தங்களை எங்கு வேண்டுமானாலும் சந்திக்கத் தயாராயிருக்கிறேன்''என்று கூறினார்.

ஆனால் அந்த விருந்துக் கூட்டத்திலிருந்த ஒருவர் ''நீ வரும்போது உன் பூபாவை அழைத்துவர மறக்காதே'' என்று மரியாதையின்றிக் கூவினார். ராஜா மான்சிங் திரும்பிப் பாராமல் தனது புரவியை வேகமாகச் செல்லவிட்டார்

அவர் சென்றதும் விருந்து பரிமாறிய இடத்திலிருந்த உணவையெல்லாம் பணிமக்கள்எடுத்துக் கொட்டினார்கள். அந்த இடத்தில் கங்கையின் நீர் தெளிக்கப்பட்டது.

அவருடன் விருந்துண்ண உட்கார்ந்தவர்களெல்லாம் நீராடித் தங்களைப் புனிதப்படுத்திக் கொண்டு வேறு புது உடை அணிந்து கொண்டார்கள். ஆனால் ராஜா மான்சிங்குக்கு அன்று அவர்கள் செய்த அவமானம் எத்தகைய விபரீதத்தில் கொண்டுவிடப் போகிறது என்பதை அவர்கள் உணரவில்லை.

ரவிசந்த் மட்டும் அதை உணர்ந்தே இருந்தான். அன்றிரவு ஏரிக்கரையில் உட்கார்ந்திருந்த அவன் தீவிர

---

* Raja Mansingh observed as he withdrew it was for the preservation of your honour that we sacrified our sisters and daughters to the ''Toork''—Tod's Annuals Part-I Page. II.

மான சிந்தனையிலிருந்தான். அப்பொழுதுதான் சம்பக் ஏரியில் நீராடிக் கரைக்கு வந்துகொண்டிருந்தாள். ''சம்பக் இப்படி வா'' என்று அழைத்தான் ரவிசந்த்.

நனைந்த உடையில் வானவீதியில் வெண்மதி வீசிய கிரணங்களில் சம்பக் மோகனாகரமாகக் காட்சியளித்தாள். ஆங்காங்கு ஈரத்துடன் ஒட்டிய உடை அவள் அழகுகளை நன்கு புலப்படுத்திக் கொண்டிருந்தது. சாதாரணமான நிலையில் இருந்திருந்தால் ரவிசந்த் அந்த ஈர உடையுடன் அவளை அணைத்திருப்பான். ஆனால் அன்றிருந்த மனோ நிலை ராணா பிரதாப்பைப் பற்றிய கவலை, அவன் கண்களைப் பூராவாக மறைத்திருந்ததால், அவன் அவளைச் சரியாகப் பார்க்கக்கூட இல்லை. அவன் தீர்க்க சிந்தனைக்கும் கவலைக்கும் காரணம் சம்பக்குக்கும் தெரிந்திருந்ததால், அவள் பெருமூச்சு விட்டாள். பிறகு ஒரு மரத்தின் மறைவுக்குச் சென்று, உலர்ந்த ஆடை உடுத்தி வந்து அவன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

அவள் மேலாக ஆடையைச் சுற்றியிருந்ததால், அவள் சரீரம் அவன்மீது பட்டபோது ஆடை அணிந்த உணர்ச்சியே இல்லை அவளுக்கு. அவளை அவன் கையொன்று சுற்றி மார்புப் புறம் வந்தபோது சிறிது உணர்ச்சிவசப்படவே செய்தாள் சம்பக். ஆனால் அவன் கையில் உணர்ச்சி ஏது மில்லாததைக் கவனித்ததால் துன்பப்பெருமூச்சு விட்டாள். ''சம்பக்!'' என்று அவன் அவள் பெயரை உச்சரித்த போதும் அதில் சுரணை எதுமில்லாததை அவள் கவனித் தாள். ''ஏன்?'' என்று சம்பிரதாயமாகவே கேட்டாள்.

ரவிசந்தின் கை அவளை நன்றாகத் தன்னை நோக்கி இழுத்து வலுவுடன் அணைத்தது. ''உன் தந்தை இன்று எத்தனை கோபத்துடன் சென்றார் கவனித்தாயா?'' என்று கேட்டான் ரவிசந்த்.

சம்பக் தான் பெண் என்பதைக்காட்டினாள். அப்படியே. அவன் மடியில் தலைசாய்த்துக்கொண்டு ஏறெடுத்து



அவனை நோக்கினாள். ''வேறு எப்படிச் செல்வாரென்று எதிர்பார்த்தீர்கள்?'' என்று வினவினாள்.

''அவரால் வேறுவிதமாக நடந்துகொள்ள முடியாது'' என்று ரவிசந்தும் ஒப்புக்கொண்டான்.

அதனால் சம்பக் சந்தோஷமடைந்தாள். ''ராணா செய்தது சரியா?'' என்று வினவினாள் சம்பக்.

மடியில் கிடந்த அவள் உடலை இருகைகளாலும் வாரி எடுத்து மார்பில் சார்த்திக்கொண்டு, அவள் கண்களுடன் தனது கண்களைக் கலந்தான் ரவிசந்த். ''ராணா வேறு என்ன செய்ய முடியும் சம்பக். அவர் அழைக்கவில்லை ராஜா மான்சிங்கை. மான்சிங் தாமாக வருவதாகச் சொன்ன பிறகு மறுக்க ராஜபுத்ரர்களின் பண்பாடு, விருந்தோம்பல் இடம் கொடுக்காது. ராஜா மான்சிங் விஷயத்தைப் புரிந்துகொண்டு விருந்துக்கு பிறகு ராணாவைச் சந்தித்து உரையாடியிருக்கலாம். ராணாவின் தலைவலிச் சாக்கை உண்மையென்று நம்புவது போல் பாசாங்கு செய்திருக்கலாம். ஆனால் மான்சிங் அவரது சுயமரியாதையை எண்ணினார். எவ்வளவோ அல்லல்பட்டு ராஜபுதன மானத்தைக் காத்துவரும் பிரதாப் இந்த ஒரு மனிதருக்காக கொள்கைகளை, ஆசார முறைகளை விடமுடியாது. இதில் யார் மீதும் குற்றம் சொல்லிப் பயனில்லை. ராஜபுதனத்தின் விதியைத்தான் சொல்ல வேண்டும்'' என்று கூறி, அவள் கண்களை முத்தமிட்டான்.

அந்த அழகியின் நெருக்கத்தால், அவள் எழில்கள் அசைந்த அழகால், அவள் உடல் காட்டிய உணர்ச்சித் துடிப்பால், வீரனான அவன் துன்பமும் ஓரளவு அகலவே, ''சம்பக்! எந்தக் கவலையையும் உன் அழகு அழித்துவிடும். எந்த இரும்பு மனத்தையும் உருக்கிவிடும்'' என்று கூறிக் கொண்டு, அவள் மார்பில் தன் முகத்தைப் புதைத்தான்.

சம்பக் உணர்ச்சி மிகுதியால் நெளிந்தாள். தன்னைத் தாங்கி நின்ற அவன் கைகளில் இடது கைமட்டும் தன்

உடலைத் தாங்கியதையும், வலது கை ஆராய்ச்சியில் ஈடுபட்டதையும் நினைத்து, அந்தக் கையிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள, அவனை நோக்கிப் புரண்டாள். அப்படி புரண்டதால் அவன் கை அவள் உடலுக்கு அடியில் சிக்கிக் கொண்டது.

சிக்கிய கை சிக்காத கையைவிட இம்சை விளைவிக்க வல்லதென்பதைப் புரிந்து கொண்டாள் சம்பக். ஆகவே அவன் அடுத்து தன்னைத் தூக்கிக்கொண்டு எட்ட இருந்த மரத்தோப்பை நோக்கி நடந்தபோது இன்பமாக நகைக்கவே செய்தாள். தோப்புக்குள் அவளைத் தூக்கிச் சென்ற ரவிசந்த், அங்கிருந்த மரமொன்றின் அடியில் அவளைக் கிடத்தினான். ஆனால் சரசமெதிலும் ஈடுபடாமல், அவள் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு ''சம்பக்!'' என்று மெதுவாக அழைத்தான்.

''உம்.''- ஒரு ஒலிதான் அவளிடமிருந்து வந்தது.

அந்த ஒலியில் ஆயிரம் அர்த்தங்கள் இருந்தன. இருப்பினும் அவற்றை கவனிக்கவில்லை ரவிசந்த். ''இந்த நிலை இப்படியே நீடிக்க முடியாது'' என்று மெதுவாகச் சொன்னான்.

''எந்த நிலை?'' - அவள் கண்களை மூடிய வண்ணம் கேட்டாள்.

''இப்படி நாம் தனியாகத் திரியும் நிலை'' என்றான் ரவிசந்த்.

''ஏன்?''

''நாமிருவரும் சதிபதிகளாகவில்லை. அதனால் தனித்து வருவதும் பிறகு பிரிந்து போவதும் சரியல்ல''

''வேறு என்ன செய்ய வேண்டும்?''

''மணக்க வேண்டும். அதற்கு நாளை ராணாவை அனுமதி கேட்கப் போகிறேன்.''



''இத்தனை நாள் ஏன் கேட்கவில்லை?''

''இத்தனை நாள் ஆபத்து நெருங்கவில்லை.''

''இப்பொழுது?''

''வெகு சீக்கிரம் மான்சிங் மொகலாயப் படைகளுடன் வருவார். மொகலாயர் படைபலம் அதிகம். அதில் ஏற்படக் கூடிய நாசத்துக்கு நானும் பலியாகலாம்; அதற்கு முன்பு உன்னை மணந்துவிடத் தீர்மானித்திருக்கிறேன்.''

இதைக் கேட்ட சம்பக் சிந்தனையில் இறங்கினாள். ''எத்தனை சீக்கிரம் படையெடுப்பை எதிர்பார்க்கிறீர்கள்?'' என்று வினவினாள், சிறிது சிந்தனைக்குப் பிறகு.

''இப்பொழுது முதல் அடுத்த இரண்டு மாதங்களுக்குள் எந்த நேரத்திலும் எதிர்பார்க்கிறேன். ராஜா மான்சிங் அடியுண்ட வேங்கை. ராணா அலட்சியமாக எதையும் எதிர்நோக்கும் சிங்கம். இந்த இருவீரர்களின் மோதலில் ராஜபுதனம் பெரிதும் நாசப்படும்'' என்ற ரவிசந்த், ''நாளை நமக்குத் திருமணம்'' என்றான்.

சம்பக் நன்றாக மல்லாந்து படுத்தாள். அவன் கையொன்றை எடுத்து தனது பூவுடலுக்கு குறுக்கே போட்டுக் கொண்டாள். ''நாளைவரை காத்திருக்க வேண்டியதில்லை'' என்று முணுமுணுத்தாள்.

''ராணாவின் அனுமதி '' என்று இழுத்தான் ரவிசந்த்.

''தேவையில்லை. ராஜபுத்ரர்களுக்கு காந்தருவம் சாஸ்திர சம்மதம்'' என்றாள் சம்பக்.

ஏதும் பேசவில்லை ரவிசந்த். அவளை நோக்கித் தனது வீர உடலைத் தாழ்த்தினான். சம்பக் திருப்திக்கு அறிகுறியாகப் பெருமூச்செறிந்தாள்.

# 36. ராணாவின் சஞ்சலம்!

அன்றிரவு உதய சாகரக் கரையில் காந்தருவத்தால் பிணைக்கப்பட்ட இரு காதலர்களும் மறுநாள் விடியற் காலையில் அதே உதயசாகரத்தின் குளிர்ந்த அலைகளில் நீராடி, ஈர உடைகளை அதன் கரையிலேயே உலர்த்தி உடுத்திக்கொண்டார்கள். பிறகு சேர்ந்தே ராணா பிரதாப் இருந்த சிறு குடிசையை நாடிச் சென்றார்கள். என்ன காரணத்தாலோ ராணா பிரதாப் அன்று குடிசை வாயிலிலேயே ஒரு மஞ்சத்தைப் போட்டுக்கொண்டு, தன்னந் தனியாக உட்கார்ந்திருந்தார். தன்னை நோக்கி வந்து கொண்டிருந்த சம்பக்கையும் ரவிசந்தையும் அவர்கள் தூரத்தில் வரும்போதே கவனித்துவிட்ட ராணா, தனது ஆழ்ந்த சிந்தனையின் ஊடே சிறிது புன்முறுவலையும் இதழ்களில் தவழவிட்டுக் கொண்டார். அவ்விருவரும் வந்து ஏதும் சொல்லாமல் அவரை வணங்கியபோது ''இருவரும் ஆயுள் முழுவதும் பிரியாமல் மங்களமாயிருங்கள்'' என்று வாழ்த்தவும் செய்தார்.

அந்த ஆசி இருவருக்குமே வியப்பாயிருந்தது. தாங்கள் வந்ததிலிருந்தே தாங்கள் சதிபதிகளாகிவிட்டதை ராணா உணர்ந்திருப்பார் என்பதை அவர்கள் ஊகித்திருந்தாலும், அவர் ஆசியின் முறை புதியதாயிருந்தபடியால் வியப்பின் வசப்பட்டதன் விளைவாக ரவிசந்த் கேட்டான், ''ராணா! இந்த ஆசி புது மாதிரி இருக்கிறதே!'' என்று.

''ஆம்! சற்றுப் புதுமைதான். ஆசியில் என் இஷ்டத்தையும் கலந்து கொண்டேன்'' என்று ராணா சொல்லிவிட்டு, சம்பக்கை நோக்கி ''மகளே! இப்படி வா'' என்று அழைத்து அவளைத் தனது பக்கத்தில் நிற்கவைத்து, அவள் தலைக் குழலை கோதிவிட்டார், பிறகு ரவிசந்தை



நோக்கி ''ரவிசந்த்! மேவாருக்காக நீ எத்தனையோ துணிகரமான செயல்களைப் புரிந்திருக்கிறாய். அவற்றுக்கு ஏற்ற பரிசும் உனக்குக் கிடைத்திருக்கிறது. சம்பக்கைவிடச் சிறந்த பரிசு ஏது?'' என்று கேட்டார்.

ரவிசந்த் பதில் சொல்லவில்லை. ஏதோ சொல்வதற்கு ராணா பூர்வ பீடிகை போடுகிறார் என்பதை உணர்ந்து கொண்டதால் மௌனமாகவே நின்றான். ராணாவே சொன்னார் சிறிது சிந்தனைக்குப் பிறகு, ''இந்தப்பரிசுக்கு களங்கம் வரக்கூடாது'' என்று.

அப்பொழுதும் ரவிசந்த் பேசவில்லை. ராணாவின் நோக்கம் எந்தத் திக்கில் போகிறது என்பதைப் புரிந்து கொண்டான். ராணா மீண்டும் மெதுவாகப் பேசத் தொடங்கி ''சம்பக் என் வளர்ப்பு மகள்'' என்றார். மேலும் சொன்னார்: ''என் வளர்ப்பு மகள் மட்டுமல்ல, ராஜா மான்சிங்கின் சொந்த மகள். ராஜா மான்சிங்கின் மனைவிகளில் ஒருத்தி தனது கணவன் மொகலாயர் அடிமையாகி விட்டதால் மனம் பொறுக்காமல் இங்கு வந்து அடைக்கலம் புகுந்தாள், பூர்ண கர்ப்பவதியாக. இங்கு ஒரு மகவையும் ஈன்றாள். அந்தக் குழந்தைதான் சம்பக். ஈன்றதும் மான்சிங்கின் மனைவி இறந்தாள். அந்த சிசுவுக்கு நானே செவிலித்தாய் ஆனேன். வீரர்கள் மத்தியில் வீரமகளாக வளர்ந்தாள் சம்பக். கஷ்டத்திலும் மலர்ந்தமுகத்துடன் விளையாடிய சம்பக் இந்த ராஜபுத்ர முகாமையே கவர்ந்தாள். பிறகு அவளுக்குப் போர் முறைகளைக் கற்பித்துப் பிள்ளையாகவே வளர்த்தேன். இன்று ராஜபுதனத்தின் சிறந்த வாள் வீரர்கள் பட்டியலில் சம்பக்கும் சேர்ந்தவள். இருப்பினும் பெண்; உன்னிடம் மனத்தைப் பறி கொடுத்தாள்'' என்று.

இங்கு ராணா சிறிது நிதானித்தார். பிறகு ஏதோ தலையை ஆட்டிவிட்டு ''இயற்கையின் நியதி அது. நேற்று நீங்களிருவரும் ஊருக்குள் வராததைக் கவனித்ததுமே

நான் ஒரு முடிவுக்கு வந்தேன்'' என்றார். ''என்ன முடிவென்று சொல்ல முடியுமா?'' என்று வினவினார், ரவிசந்தை நோக்கி.

ரவிசந்த் சிறிதும் சிந்திக்காமலேசொன்னான்: ''சொல்ல முடியும் ராணா. ஆனால் உங்கள் இஷ்டத்துக்குப் பணிய முடியாது'' என்ற ரவிசந்த், ''பணிவதை சம்பக்கும் விரும்ப மாட்டாள்'' என்றும் தொடர்ந்து தெரிவித்தான்.

ராணாவின் முகத்தில் கவலை படர்ந்தது. ''ஊகித்தது என்ன? தெளிவாகத்தான் சொல்லேன்'' என்றார் ராணா.

''அடுத்துவரும் போரில் என்னைச் சம்பந்தப்படுத்தக் கூடாது என்று சொல்கிறீர்கள். நீங்கள் மங்களவாசகம் சொல்லி எங்களுக்கு ஆசி கூறியதிலிருந்தே அதைப்புரிந்து கொண்டேன்'' என்று கூறினான் ரவிசந்த்.

ரவிசந்தை ராணாவின் கண்கள் கூர்ந்து நோக்கின. ''ரவிசந்த்! மொகலாயர் ஒற்றன் என் பக்கத்தில் போரிட அவசியமில்லை'' என்றார்.

''நான் ஒற்றனாயிருந்தால், என்னை நீங்கள் தூக்கி விடவேண்டும். வீரனாயிருந்தால் போருக்கு அனுமதிக்க வேண்டும். இரண்டுக்கும் நடுவில் எதுவும் செய்ய முடியாது'' என்று சுட்டிக்காட்டினான் ரவிசந்த்.

''உன்னை ஒற்றனென்று கருதி மன்னித்து அனுப்பி விட்டால்?''-ராணா வினவினார்.

''மொகலாயர் என்னை உங்கள் ஒற்றனென்று நினைக்கிறார்கள். நான் அங்கு சென்றதும் வெட்டப் படுவேன்'' என்று சுட்டிக்காட்டினான் ரவிசந்த்.

''உன்னை வெட்டமாட்டார்கள்'' என்று ராணா திட்டமாக அறிவித்தார்.

''ஏன்?:



''மான்சிங்கின் மருமகனை வெட்ட அக்பரும் துணிய மாட்டார்.''

''மான்சிங்கின் மருமகனென்று மான்சிங்குக்கே தெரியாது.''

''தனது மகளின் காதலன் என்பது தெரியும். அது போதும் மான்சிங் உன்னைக் காப்பாற்ற.''

ராணா எப்படியும் தன்னைக் காப்பாற்றவும் அதன் மூலம் தனது மகளின் மங்கலத்தை நிலைநிறுத்தவும் தீர்மானித்திருக்கிறாரென்பதை உணர்ந்ததால், ரவிசந்த் துன்பப் பெருமூச்சுவிட்டு, ''ராணா! நீங்கள் மகாவீரர், வீரன் மனம் நீங்கள் அறியாததல்ல. உங்கள் வளர்ப்பு மகளின் கணவன் ஏதோ காரணம் சொல்லிப் போரிலிருந்து தப்பியோடி விட்டான் என்ற அபவாதம் ஏற்படுவதை நீங்கள் விரும்புகிறீர்களா?'' என்று வினவினான்.

ராணா தர்மசங்கடத்திலிருந்தார். அதுவரை பேசாதிருந்த சம்பக் ''அப்பா!'' என்று மெதுவாக அழைத்தாள், அவர் பக்கத்தில் சாய்ந்து நின்ற நிலையில்.

''என்ன சம்பக்?''—ராணாவின் குரல் அன்புடன் ஒலித்தது.

''என் கணவர் போருக்குப் போகத்தான் வேண்டும்'' என்றாள் மெதுவான குரலில்.

''அதுதான் உன் இஷ்டமா மகளே?'' என வினவினார் ராணா.

''அதுதான் ராஜபுத்ர மரபு தந்தையே! போருக்குப் போகிறவர்களெல்லாம் இறப்பதில்லை'' என்றும் கூறினாள் சம்பக்.

''இறக்கமாட்டார்களென்றும் உறுதியாகச் சொல்ல முடியாது'' என்றார் ராணா.

''ஆமாம் தந்தையே! போருக்குப் போகாதவர்களும் இறக்கிறார்கள். போரில் இறப்பது பயனுள்ள இறப்பு'' என்ற சம்பக், ''போர் மூள இன்னும் இரண்டு மாதங்களாவது ஆகும். அதற்குள் இந்த வீண் யோசனை எதற்கு?'' என்றும் வினவினாள்.

சம்பக், ரவிசந்த் இருவர் பிடிவாதமும் ராணாவுக்குப் புரிந்தே இருந்ததாலும், அவர்கள் சொன்னதெல்லாம் ராஜபுத்ர தர்மத்துக்குப் புறம்பே இல்லாததாலும் ராணா மறுப்பு எதும் சொல்ல முடியவில்லை. இருப்பினும் சம்பக்கை வளர்த்த பாசம் அவரை விடாததால், ''பொறுத்துப் பார்ப்போம். உடனே மொகலாயர் படையெடுப்பு இருக்குமென்பது நிச்சயமல்ல'' என்று சமாதானம் சொன்னார்.

''கண்டிப்பாய் இருக்கும் ராணா'' என்று, ரவிசந்த் அந்தப் போலி சமாதானத்தையும் உடைத்தான்.

''உனக்கெப்படித் தெரியும்?'' என்றார் ராணா.

''நான் மொகலாயர் ஒற்றனல்லவா?எனக்குத்தெரியாமல் வேறு யாருக்குத் தெரியும்'' என்று கூறி நகைத்தான் ரவிசந்த். அத்துடன் ''ராணா! மான்சிங்கை தாங்கள் அவமானப்படுத்தியது அக்பரை அவமானப்படுத்தியது போலத்தான். ராஜா மான்சிங் தமது மகளை உத்தேசித்து அவமதிப்பை சகித்துக் கொள்ளலாம். ஆனால் அக்பர் சகிக்க வேண்டிய அவசியமில்லை. தவிர மேவாரின்மீது படையெடுக்க இதையே ஒரு சாக்காகவும் வைத்துக் கொள்ளலாம். இன்னும் இரண்டு மாதங்களில் நாம் தாக்கப்படுவோம்'' என்றான்.

அவன் சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை என்பதை ராணா உணர்ந்தேயிருந்தார். ராஜா மான்சிங் ஆஜ்மீரை அடைந்ததும் என்ன நடக்கும் என்பதையும் உணர்ந்திருந்தார். அவர் ஊகம் சரியாயிற்று. ராஜா



மான்சிங் ஆஜ்மீரை அடைவதற்கு முன்பே உதயசாகர ஏரிக்கரை நிகழ்ச்சி மொகலாய சக்கரவர்த்திக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆகவே மான்சிங் ஆஜ்மீரை அடைந்ததும், அவரைக் காண விரும்புவதாக அக்பர் சொல்லியனுப்பினார்.

அன்றும் தமது பள்ளியறையிலேயே மான்சிங்கைச் சந்தித்தார் அக்பர். ''என்ன மான்சிங்! உதயசாகரத்தில் உனக்கு ஏக உபசாரம் போலிருக்கிறதே?'' என்று வினவினார். இகழ்ச்சியாக நகைக்கவும் செய்தார்.

அக்பருக்கு விஷயம் எட்டிவிட்டதை மான்சிங் உணர்ந்து கொண்டார். இருப்பினும் சொன்னார்:''நான் வருமுன்பு சக்கரவர்த்திக்கு தகவல்வந்திருக்கிறது''என்று.

''ஆம். ராணாவிடம் தமது ஒற்றன் ஒருவன் இருக்கிறான்'' என்றார் அக்பர்.

''யார் ரவிசந்தா?'' என்று வினவினார் மான்சிங்.

''அவன் ராணாவின் ஒற்றன், நிஜ ஒற்றனும் ஒருவன் இருக்கிறான்'' என்ற அக்பர், ''அடுத்து நாம் செய்ய வேண்டியது என்ன?'' என்று கேட்டார்.

''செய்யவேண்டியது ஒன்றுதான்'' என்றார் மான்சிங்.

''அது?''-அக்பரின் கேள்வியுடன் புருவங்களும் உயர்ந்தன.

''போர்!'' என்ற ஒற்றைச் சொல் கடுமையுடன் உதிர்ந்தது மான்சிங்கின் உதடுகளிலிருந்து.

# 37. போர் ஆலோசனை!

ராஜா மான்சிங் ராணாபிரதாப் மீது போர் தொடுக்கத் தீர்மானித்துவிட்டது அக்பருக்கு உள்ளூர மகிழ்ச்சியை விளைவித்தாலும், அதை வெளிக்குக் காட்ட வில்லை அவர். ''போர் தொடுக்க வேண்டிய அத்தகைய நிலை இப்பொழுது என்ன ஏற்பட்டுவிட்டது?'' என்று வினவினார் அசிரத்தை ஒலித்த குரலில்.

ராஜா மான்சிங்கிற்கு அக்பரின் சுபாவம் நன்றாகத் தெரிந்திருந்தாலும், தன் மனத்தைச் சோதிக்கவும் போருக்குத் தன்னை மும்முரமாகத் தூண்டவுமே, சக்கர வர்த்தி சகிப்பு வேஷம் போடுகிறாரென்பதை அவர் உணர்ந்திருந்ததாலும், அம்பர் மன்னனான மான்சிங்கும் தமது சாமர்த்தியத்தைக் காட்டி ''சக்கரவர்த்திக்கு போர் இஷ்டமில்லையேல் வேண்டாம்!'' என்றார்.

அக்பரின் முகத்தில் விசனம் படர்ந்தது. ''போரில் நாசந்தான் ஏற்படுகிறது, போர் விரும்பத்தக்கதல்ல. இருப் பினும் உன் மானம் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறதே?'' என்றார் குரலில் விசனம் தெரிய.

ராஜா மான்சிங் சொன்னார், ''சக்கரவர்த்தி! என் மானம் சொந்த விஷயம். தனி மனிதனுக்காக அரசைப் போரில் இறக்குவது விரும்பத்தக்கதல்ல'' என்று

அக்பர் அர்த்த புஷ்டி துலங்கிய புன்முறுவலொன்றை இதழ்களில் படரவிட்டார். இதுவரை நடந்திருக்கும் போர்களெல்லாம் தனிநபர் பெருமையை மிகைப்படுத்த வும் ஆசையை திருப்திப்படுத்துவதற்குமே ஏற்பட்டிருக்



கின்றன. மண்ணாசை இல்லாவிட்டால் என் பாட்டனார் பாபர் பரத கண்டத்தின்மீது படையெடுப்பானேன்? என் வம்புக்கே வராத ராஜபுத்ரர்களையெல்லாம் நான் ஏன் வெற்றிகொண்டேன்? எல்லாம் ராஜ்ய விஸ்தரிப்பு ஆசை. வேறெதுவுமில்லை'' என்று சொன்னார் அக்பர், புன்முறு வலின் ஊடே.

ராஜா மான்சிங் கேட்டார் ''அந்த ஆசை தவறென்று நினைக்கிறீர்களா பூபா?'' என்று.

''தவறா தவறல்லவா என்பதல்ல கேள்வி. நடந்ததற் குக் காரணம் சொன்னேன். என் ஆசையைப் பூசி மறைக்க வில்லை நான். எல்லா ராஜபுத்ரர்களும் பணிந்தும் மேவார் மட்டும் பணியாதது என் மனத்தை உறுத்திக்கொண்டு தானிருக்கிறது. ராணாவைப் பணியவைப்பது என் வாழ்க்கையின் குறிக்கோள். அதற்குச் சமயத்தை சர்வ வல்லமை பொருந்திய அல்லாஹ் (ஜல்) அளித்துவிட்டார்'' என்ற அக்பர். ''மைத்துனா! நீ வரும்வழியில் ராணாவைப் பார்த்ததும், அவரால் அவமானப் படுத்தப்பட்டதும் ஆண்டவன் அல்லாஹின் (ஜல்) ஆணையால் ஏற்பட்டது. எந்த ராஜபுத்ரனும் அவமானத்தை சகித்துக்கொள்ள மாட்டானென்பது உலகறிந்த விஷயம். படையெடுப்புக்கு உனக்கு வேண்டிய சகல வசதிகளும் செய்து கொடுக்கப் படும்'' என்றும் கூறினார்.

''என்ன வசதிகள் வேண்டும் எனக்கு? படைகளை நடத்த எனக்குத் தெரியாதா? இல்லை அம்பர் சமஸ்தானம் பிச்சைக்கார சமஸ்தானமா?''என்று வினவினார் மான்சிங்.

அக்பர் சிறிது சிந்தித்தார். ''மான்சிங்! உன் போர்த் திறமையையோ, அம்பர் சமஸ்தான செல்வச் சிறப் பையோ நான் குறைத்து மதிப்பிடவில்லை. ஆனால், இப்பொழுது நாம் போர் செய்ய முயலும் விரோதி, மற்றவர்களைப் போலல்ல. மிகவும் உறுதியும் தேசபக்தியும்

இனச்செறுக்கும் உள்ள ஒரு மகாவீரனுடன் போர் தொடுக்கப் போகிறோம். ஆகையால் இந்தப் போரைச் சாதாரணமாகக் கருதுவது பிசகு. இதற்கான மந்திராலோசனையை இன்று பிற்பகல் நமது அந்தரங்க அறையில் வைத்துக் கொள்வோம்'' என்று கூறி, மான்சிங் போக விடை கொடுத்தார்.

அக்பரின் அரண்மனையிலிருந்து தனது மாளிகைக்கு வந்த ராஜா மான்சிங் அன்று முழுவதும் தீவிர சிந்தனையிலிருந்தார். ''இந்தப் போர் மூளுமானால் ரவிசந்த் கண்டிப்பாய் முன்னணியில் நிற்பான். உயிரைக் கொடுக்கவும் தயங்கமாட்டான். அப்புறம் என் மகளின் கதி என்ன?'' என்று தனக்குள் கேட்டுக்கொண்டார். ''ராணா பிரதாப் வராததை பெரிதாக நினைத்து சபதம் செய்யாமலிருந்திருக்கலாமே'' என்றும் எண்ணமிட்டார். ''ராணா வராவிட்டால் என்ன? தனது தலைமகன், மேவாரின் அடுத்த வாரிசு அமர சிம்மனைத்தான் என்னை வரவேற்க நியமித்திருந்தாரே. அது போதாதா?'' என்றும் வினவிக் கொண்டார். ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்ற பழமொழியையும் நினைவுக்குக் கொண்டுவந்தார். ''எனது சுயமரியாதைக்குத்தான் என்ன பங்கம் ஏற்பட்டுவிட்டது? மொகலாயருக்கு அடிமையாக, மொகலாய சக்கரவர்த்தியின் மைத்துனனாக இருப்பதைவிட மானக்கேடு வேறு என்ன இருக்கிறது?'' என்றும் தன்னைக் கேட்டுக் கொண்டார். இத்தகைய எண்ணங்களுடன் அந்தப் பகலைக் கழித்த மான்சிங், அன்று மாலை அக்பரின் அந்தரங்க ஆலோசனைக்கு அரைமனத்துடனேயே சென்றார்

அவர் அந்த அறையை அடையுமுன்பாகவே அங்கு அக்பரும், இளைய நவாப் சலீமும், மற்ற படைத்தலைவர்களும் தயாராகக் காத்திருந்தார்கள். அக்பர் உட்கார்ந்திருந்த சிம்மாசனத்துக்கு எதிரே பெரிய மேஜையில் தேசப்படம் விரிக்கப்பட்டிருந்தது. மற்ற படைத் தலைவர்



கள் மேஜையைச் சுற்றி நின்றிருந்தார்கள். சலீம் மட்டும் சற்று தள்ளி ஒரு சிறு மஞ்சத்தில் அமர்ந்திருந்தான்.

ராஜா மான்சிங் அந்த அறையிலிருந்தவர்களை தமது கண்களால் ஒருமுறை அளவெடுத்தார். பிறகு அக்பருக்கெதிரே மேஜையை அணைத்து நின்று கொண்டார். ''சக்கரவர்த்தி! நான் வரத் தாமதமாகிவிட்டது. மன்னிக்க வேண்டும்'' என்று மன்னிப்பு கேட்டார்.

''அதனால் பாதகமில்லை. இனி போரைப்பற்றி ஆராய்வோம். இந்த ஆராவலி மலைத்தொடரை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்'' என்று ராஜபுதன மலைத்தொடரை தனது குறுவாளொன்றால் தொட்டுக்காட்டினார். ''இதோ இருக்கிறது இதுவரை நமக்குப் பணியாத மேவார் ராஜ்யம். மேவாரின் தலைநகர் சித்தூரைப் பிடித்து விட்டோம் இருப்பினும் பயனில்லை. ராணா இப்பொழுது உதயபூரில் கூட இல்லை '' என்றார் மெதுவாக. இதைச் சொல்லி மான்சிங்கை நோக்கினார்.

ராஜா மான்சிங் முகத்தில் வியப்பின் சாயை விரிந்தது. ''உதயபூரில் இல்லையா'' என்று வினவினார் மான்சிங்.

''இல்லை'' - அக்பர் திட்டமாகக் கூறினார்.

''எனக்கு உதயசாகர ஏரிக்கரையில்தானே விருந்து வைத்தார் ராணா'' என்றார் மான்சிங்.

''உதயபூரின் ஏரி வேறு. உதயபூர் நகரம் வேறு. நகரத்தை சூன்யமாக்கி விட்டார் ராணா. அங்கு இப்பொழுது எதுவுமில்லை. யாருமில்லை'' என்று அக்பர் விளக்கினார்.

''அப்படியானால் ராணா எங்கிருக்கிறார்?'' என்று மான்சிங் வினவினார்.

அக்பர் ஏதோ சொல்ல வாயெடுத்தார். அதற்குள் உரையாடலில் புகுந்த இளைய நவாப் ஸலீம் ''ராணா எங்கிருந்தாலும் ஆராவலியின் அருவிக்கரைக்கு அடிக்கடி வருகிறார். சமயமறிந்து அவரைப் பிடித்துவிடலாம். இதனால் போரைத் தவிர்க்கலாம். உயிர்ச்சேதத்தையும் தவிர்க்கலாம்'' என்று தமதுயோசனையை வெளியிட்டான்

அக்பரின் முகத்தில் வெறுப்பின் சாயை படர்ந்தது. ''தனியாக வரும் எதிரியை மறைந்திருந்து பிடிக்கத்தான் உனக்குத் தெரியுமா ஸலீம்? போரென்றால் பயமாயிருக்கிறதா?'' என்று வினவிய அக்பர், ''மகாவீரனான மேவார் ராணாவை அக்பர் சூதினால் வென்றான் என்ற அவப் பெயர் எனக்கு வேண்டாம். சரியாகப் போர் செய்துதான் மேவாரைப் பிடிக்கவேண்டும். அது மட்டுமல்ல ஸலீம்! ராணா தனியாகச் சிக்கினாலும் பத்து பேரையாவது வெட்டிப் போட்டுத்தான் இறப்பார். அப்பொழுது சரித்திரத்தில் நமது பெயர் அபவாதப் பட்டியலிலும்ராணாவின் பெயர் வீரர்கள் பட்டியலிலும் சேர்த்து எழுதப்படும்'' என்றும் கூறினார்.

இப்படிப்பேசிய அக்பர் சட்டென்று ஆசனத்திலிருந்து எழுந்து, ''ராணாவின் புதுத் தலைநகரம் இதோ இருக்கிறது'' என்று, தமது குறுவாளைத் தேசப்படத்தின் மீது ஊன்றினார்.

குறுவாள் ஊன்றிய இடத்தைக் கவனித்த மான்சிங் பிரமித்தார் ஒரு வினாடி. பிறகு சொன்னார் ''இந்த இடம் கோமுல்மீர்'' என்று.

''ஆம். அதுதான் மேவாரின் தலைநகர் இப்பொழுது.'' என்றார் அக்பர்.

''அதை அணுகும் வழி மிகக் கஷ்டம்'' என்றார் மான்சிங்.



''ஆராவலியின் மேற்குப் புறம் இருக்கிறது. அடர்ந்த காடுகளும் அடர்ந்த மலை உச்சிகளும் உள்ளன. வழிநெடுக அருவிகள் உண்டு. அந்த வழியில் கணவாய்கள் மிகவும் குறுகலானவை. உட்புகும் படையை எதிரிகள் மலையின் உச்சிகளிலிருந்து கீழ்நோக்கி வீசும் வேல்களால் அழிக்க முடியும். அதுமட்டுமல்ல'' என்ற அக்பர் சிறிது நிறுத்தி மற்றவர்களைக் கூர்ந்து நோக்கினார்.

அக்பரின் மனத்தில் ஏதோ ரகசியம் உதயமாயிருப்பதை மான்சிங் புரிந்துகொண்டார். ''அது மட்டுமல்ல என்றால் வேறென்ன?'' என்று வினவவும் செய்தார்.

''ராணாவிடம் இப்பொழுது பீரங்கிகளும் மாட்ச்லாக் துப்பாக்கிகளும் கூட இருக்கின்றன'' என்றார் அக்பர்.

இதைக் கேட்ட மான்சிங்கும் ஸலீமும் திகைத்தனர். ''யார் ராணாவுக்குத் தளவாடங்களைக் கொடுப்பது?'' என்று கேட்டான் ஸலீம்.

பதிலுக்கு இன்னொரு பெரிய அதிர்வெடியை எடுத்து வீசினார் அக்பர். அதே சமயத்தில் பக்கத்து கதவு ஒன்று திறந்தது. அதன் மூலம் ஒரு மனிதன் உள்ளே வந்தான். அறையிலிருந்தவர்களின் அதிர்ச்சி எல்லை கடந்தது.

# 38 அக்பரின் ஒற்றன்!

மொகலாய சக்கரவர்த்தி அக்பரின் போர் ஆலோசனை அறைக்கு பக்கத்து அறையில் கதவைத் திறந்துகொண்டு வந்த மனிதனை நோக்கியதும், அறையிலிருந்த அனைவரும் முக்கியமாக மான்சிங்கும் அதிர்ச்சியடைந்தார்களென்றால் அதற்குக் காரணம் இருக்கவே செய்தது. வந்தவன் ராணாபிரதாப் சிம்மனின் நம்பிக்கைக்கு பெரிதும் பாத்திரமானவனும் ராஜபுதனத்தின் பெருவணிகனுமான பகவான் தாஸ். அவன் பெயரைத்தான் முதலில் அக்பர் சொன்னாரென்றாலும், அதை மான்சிங் அடியோடு நம்பவில்லை. ராணா பிரதாப் சிம்மனின் வலதுகரம் போன்ற பகவான் தாஸ், இத்தகைய ஈனச்செயலில் ஈடுபடுவானென்பதை அவர் சொப்பனத்திலும் நினைக்காததால் அவன் பக்கத்து அறையிலிருந்து வந்ததும் பேரதிர்ச்சிக்கே மான்சிங் ஆளானார். அதனால் அவனைக் கூர்ந்து நோக்கவும் செய்தார்.

ராஜா மான்சிங்கின் சுடுவிழிகளை சந்திக்க முடியாத பகவான்தாஸ், தனது கண்களை அவர் கண்களிலிருந்து வேறு பக்கம் திருப்பிக்கொண்டு, அக்பருக்கு தலைதாழ்த்தி கையால் இருமுறை சலாமும் செய்தான். அக்பர் அந்த சலாத்தை ஏற்றுக்கொள்ளும் முறையில் தலையை லேசாக அசைத்து ''பகவான்தாஸ்! நீ மொகலாய சாம்ராஜ்யத்துக்கு இணையிலா சேவை செய்திருக்கிறாய். ராணா பிரதாபசிம்மனுக்கு தளவாடங்கள் எப்படிக் கிடைக்கின்றன என்பதை உன் வாயாலேயே சொல்'' என்று உத்தரவிட்டார்.



19413
3492936

பகவான்தாஸ் அங்கிருந்த அனைவருக்கும் தலை வணங்கிவிட்டு ''ராணாவுக்குத் தளவாடங்களை வாங்குபவன் நான்தான். அஹமத் சுபான் என்ற படைத் தலைவன் அடிக்கடி திருட்டுத்தனமாகத் தளவாடங்களைக் கொண்டு வருவான். நான் அதை அரைகுறையாக விலை கொடுத்து வாங்குவேன். அதில் எங்களுக்குள் சண்டையும் வந்தது உண்டு. ஆனால் அது பிறருக்காக நாங்கள் இடும் போலிச் சண்டை. ஒரு சமயம் அது உண்மைச் சண்டையாகவும் முடிந்தது. அதற்குக் காரணம் ரவிசந்த் என்ற மொகலாயர் படைத் தலைவன் ஒருவன்தான் '' என்று கூறிய பகவான்தாஸ் சிறிது பேச்சை நிறுத்தினான்.

''மேலே சொல்'' என்றார் அக்பர்.

''நான் வாங்கிய தளவாடங்களெல்லாம் வாட்களும் வேல்களுந்தான். துப்பாக்கிகளையோ பீரங்கிகளையோ வாங்கவில்லை. ராணாவை பலப்படுத்தும் நோக்கம் எனக்கில்லை. சக்கரவர்த்தி எனக்கு நிரம்ப சன்மானம் அளித்திருக்கிறார். அவருக்கு துரோகம் செய்ய எனக்கு இஷ்டமில்லை'' என்றான் பகவான்தாஸ்.

இதைக்கேட்ட ராஜா மான்சிங் முகத்தில் சினம் துளிர்த்தது. ''ராணாவுக்கு நீ செய்யும் துரோகம் சரியென்று நினைக்கிறாயா?'' என்று வினவினார், உள்ளே எழுந்த கோபத்தை குரலில் காட்டாமல்.

பகவான்தாஸ் சிறிது சிந்தித்தான். ''ராணாவிடம் எனக்கு எந்தவிதக் கடமையுமில்லை'' என்றான் திடமாக.

''ஏன்?''-மீண்டும் எழுந்தது ராஜா மான்சிங்கின் கேள்வி.

''ராணா எனது தம்பியைத் தூக்கிலிட்டார். ஆனால் அவன் என் தம்பி என்பது அவருக்குத் தெரியாது.

அவனைத் தூக்கிலிட்டதற்கு பழிவாங்குவது எனது கடமையாயிற்று'' என்றான் பகவான்தாஸ், கடுமை நிறைந்த குரலில்.

''யாரவன், அந்தத் தம்பி?'' என்று வினவினார் மான்சிங்.

பகவான்தாஸின் முகத்தில் சினமும் வெறுப்பும் கலந்து தாண்டவமாடின. ''அது ஒரு பெரிய கதை, சொல்லு கிறேன் கேளுங்கள்'' என்று பூர்வ பீடிகையில் தொடங் கினான். ''இப்பொழுதுதான் கோமுல்மீர் மேவாரின் தலை நகராகி விட்டதென்று நினைக்கிறீர்கள். அது தலைநக ராகி சில வருஷங்களாகின்றன. அங்கு தமது ரகசியப்படை களை ராணா வைத்திருந்தார். உதயபூர் பெயருக்கு தலை நகராக இருந்தது. மற்ற ராஜபுதன அரசர்கள் சக்கரவர்த் திக்கு அடிமையாகியதும் பல கடுமையான உத்தரவுகளை, எந்த மனிதனும் பூரணமாக பின்பற்ற முடியாத உத்தரவு களை ராணா பிறப்பித்தார். கோமுல்மீர், கோகுண்டா முதலிய மலைக்கோட்டைகளுக்கு மக்களைப் போகச் சொல்லிவிட்டு, மேவாரின் விளைநிலங்களை அழித்தார். மொகலாயர் படையெடுப்பு ஏற்பட்டால் அவர்களுக்கு உண்வோ வேறு வசதிகளோ கிடைக்கக் கூடாதென்று அந்தப் பணியைச் செய்தார். ஆராவலி மலைத்தொடரில் மேற்கிலிருந்து கிழக்கு பீடபூமி வரை இரவில் விளக்கு எதுவும் எரியக் கூடாது என்று உத்தரவு பிறப்பித்தார். பூனாஸ், பேரிஸ் ஆறுகளால் பாசனம் செய்யப்பட்ட விளை நிலங்கள் மறைந்து, அந்த இடங்கள் பாலைவனமாயின. பயிர் இருந்த இடத்தை புல் ஆக்கிரமித்துக்கொண்டது. அங்கு மேய்ச்சலும் கூடாதென்று ராணா உத்தரவு பிறப் பித்திருந்தார். யாரும் இரவில் விளக்குகளை எரியவிடக் கூடாதென்றும் உத்தரவு போடப்பட்டது. தனது உத்தரவு கள் சரியாக நிறைவேற்றப்படுகின்றனவா என்பதைப் பார்க்க ராணா சில வீரர்களுடன் மலையிலிருந்து வேக



மாக இறங்கி வருவார். அத்தகைய ஒரு சந்தர்ப்பமொன் றில் எனது தம்பி சிக்கிக் கொண்டான். * இரவில் யார் பார்க்கப் போகிறார்களென்று பூனாஸ் நதிக்கரையில் தனது மாடுகளை மேய்த்துக்கொண்டிருந்தான். ராணா அவனைப் பிடித்து தயை தாட்சண்யமின்றி அந்த இடத்தி லேயே தூக்கில் போட்டார்.'' -இங்கு சிறிது நிறுத்தினான் பகவான்தாஸ், அவன் தொண்டை அடைத்தது.

சிறிது நேரத்திற்குப் பிறகு மேலும் தொடர்ந்தான் பகவான்தாஸ். ''அவன் மரத்தில் தொங்குவதைப் பார்த்தேன். பிறகு ராணாவை வஞ்சம் தீர்த்துக்கொள்வ தென்று தீர்மானித்தேன். மெல்ல ராணாவிடம் சேர்ந் தேன். அவர் நம்பிக்கையை சம்பாதித்தேன். அஹமத் சுபானை சிநேகம் செய்துகொண்டு தளவாடங்களை வாங் கினேன். ராணா தனிமையில் நீராடும் அருவியையும் மொகலாயருக்கு அறிவித்தேன். ஒருமுறை ராணா அகப் பட்டுக்கொண்டிருப்பார். ஆனால் எனக்கு இடையூறாக ஒரு சனியன் வந்து சேர்ந்தான். அவன்தான் ரவிசந்த். ராணாவும் அவர் வளர்ப்பு மகளும் அருவியில் நீராடிய சமயத்தில் அவர்களைச் சூழ்ந்துகொள்ள வந்த மொகலாய வீரர்களில் இருவரைக் கொன்று மற்றவர்களை விரட்டிய வன் அவன்தான். அவனை ஒருமுறை கத்தியைவீசி கொல்லப் பார்த்தேன், முடியவில்லை. ராணாவைவிட இப்பொழுது அபாயமான எதிரி அந்த ஒல்லிக்கட்டை தான்'' என்று எரிச்சலுடன் விவரித்தான் பகவான்தாஸ்.

---

*A single goat had truseing to elude observation pastured his flock in ontalia on the banks of Bunas. After a few duestions he was Killed and hung up in terrorem. By such severity pratap rendered the garden of Rajastean of no value to eonquror''-Col Tod's Annals of Rajasthen-1902 Eqition-Ch.XI. Page. 190.

அக்பர் இந்தக் கதையைக் கேட்டு புன்முறுவல் கொண்டார். ராஜா மான்சிங் முகத்தில் ஈயாடவில்லை. ''இப்பொழுது ராணாவிடம் எந்தவிதத் தளவாடங்கள் இருக்கின்றன'' என்று கேட்டார் வறண்ட குரலில்.

''மாட்ச்லாக் துப்பாக்கிகளும் பீரங்கிகளும் இருக்கின்றன'' என்றான் பகவான்தாஸ்.

''எது?'' என்று கேட்டார் மான்சிங்.

''சூரத்திலிருந்து சக்கரவர்த்திக்கு இதயதுல்லா கொண்டுவரும் தளவாடங்களைக் கொள்ளையடிக்கிறான் ரவிசந்த்.''

அதுவரை வாளாவிருந்த அக்பர், உரையாடலில் புகுந்து ''அது தவறு'' என்றார்.

''எது சக்கரவர்த்தி?'' என்று வினவினான், பகவான் தாஸ் வியப்புடன்.

''இதயதுல்லாவை ரவிசந்த் கொள்ளையடிக்கிறான் என்பது. ரவிசந்த் நிரபராதி'' என்றார், அக்பர் கனிவு நிறைந்த குரலில்.

பகவான்தாஸ் வாயைப் பிளந்தான். நம்பிக்கையற்ற சாயை அவன் முகத்தில் படர்ந்தது. மற்றவர்களும் பிரமித்தார்கள். பகவான்தாஸுக்கும் தெரியாத ஏதோ ஒரு விஷயம் அக்பருக்கு தெரியும் என்பதை ராஜா மான்சிங் ஊகித்துக்கொண்டார். ஆகவே கேட்டார்: ''ரவிசந்த் கொள்ளையடிக்கவில்லையென்றால், வேறு யார் கொள்ளையிடுகிறார்கள்?'' என்று.

''யாரும் கொள்ளையிடவில்லை. கொள்ளை, ஒரு நாடகம். இதயதுல்லா ராணாவின் வீரத்துக்குத் தரும் பரிசு பீரங்கிகளும் மாட்ச்லாக் துப்பாக்கிகளும்'' என்றார் சக்கரவர்த்தி.



''யார், சூரத் பெருவணிகரா! நம்பமுடியவில்லையே?'' என்றார் ராஜா மான்சிங்.

''அவரையே கேளுங்கள்'' என்ற அக்பர் தமது கையை ஒருமுறை தட்டினார். அடுத்த கணம் இன்னொரு புறமிருந்த இன்னொரு அறைக் கதவு திறந்தது. அங்கிருந்த சூரத் பெருவணிகரான இதயதுல்லா சங்கிலியால் பிணைக்கப்பட்டு இரு மொகலாய வீரர்களால் இழுத்து வரப்பட்டார். பலவந்தமாக அக்பரின் முன்னால் நிறுத்தி வைக்கவும் பட்டார்.

வயோதிகரும் இளைத்தசரீரமுடையவரும் வெள்ளைத் தாடி மீசைகளும் பக்கக் கன்ன மயிர்களும் முகத்தில் கீழ்ப் பாகத்தை மறைத்தாலும் நன்றாகப் பளிச்சிட்ட கண்களை உடையவருமான இதயதுல்லா, அக்பருக்கு தலைவணங்காமல் தனது பளிச்சிடும் கூரியகண்களால் சக்கரவர்த்தியை நோக்கினார்.

''இதயதுல்லா! இனி நீர் உண்மையைச் சொல்லலாம்'' என்றார் அக்பர், புன்முறுவல் இதழ்களில் அரும்ப.

''இதயதுல்லா என்றும் பொய் சொன்னதில்லை. உலகத்தில் மிக உன்னதமான இஸ்லாம் பொய் சொல்வதை அனுமதிக்கவில்லை. இதயதுல்லா உண்மையான முஸ்லீம்'' என்று திடமாகவும் அலட்சியமாகவும் பேசினார் இதயதுல்லா.

அடுத்த கேள்வி மான்சிங்கிடமிருந்து எழுந்தது. ''ராணாவுக்கு பீரங்கிகளை கொடுத்தது யார்?'' என்று.

''நான்''-திட்டமாகப் பேசினார் இதயதுல்லா.

''ஏன்?'' - மான்சிங் கடுமையுடன் கேட்டார்.

இதயதுல்லாவின் பதில் ராஜாமான்சிங்கை மட்டுமின்றி மற்றவர்களையும் தூக்கிவாரிப் போட்டது. நிதானமான குரலில் சொன்னார். ''மானமுள்ள ஒரே ராஜபுத்ரன் தனது நாட்டுச் சுதந்திரத்திற்காக மொகலாயப் பேரரசை தன்னந்தனியே எதிர்த்து நிற்கிறான். அதற்காக'' என்று.

ஆலோசனை சபையில் பயங்கர மௌனம் நிலவியது. அடுத்த கணம் அக்பர் கையை அசைக்க இதயதுல்லா காவலரால் இழுத்துச் செல்லப்பட்டார்.

# 39. மண்ணும் பெண்ணும்!

சங்கிலியால் பிணைக்கப்பட்ட நிலையில் மொகலாய வீரர்களால் போர் ஆலோசனை அறையிலிருந்து இழுத்துச் செல்லப்பட்ட சூரத்தின் பெருவணிகரான இதயதுல்லா, அறையின் கதவருகில் சென்றதும், தன்னைப் பிடித்திருந்த வீரர்களையும் மீறி சற்று திரும்பி அக்பரையும் மான்சிங்கையும் நோக்கி அலட்சியமான புன்முறுவலொன்றை வெளியிட்டார். அத்துடன், ''சக்கரவர்த்தி! மான்சிங்கையும் பகவான் தாஸையும் போன்ற சுயஜாதி துரோகிகளை நம்புவதைவிட, உண்மையான எதிரியும் கண்ணியமானவர் என்று வரலாற்றில் வழங்கப்போகிறவருமான ராணா பிரதாபசிம்மனை நம்புவதும் அவர் நட்பை சம்பாதிப்பதும் நலம். இன்றோ நாளையோ சாகப்போகும் உண்மையான முஸ்லீமின் கருத்து இது'' என்று சொல்லியும் விட்டு அறைக்கு வெளியே வீரர்களால் தள்ளப்பட்டு சென்றார்.

அவர் சென்றதும் பயங்கர அமைதி. போர் ஆலோசனை அறையில் நிலவியது. அந்த அமைதியைக் கலைத்தவர் ராஜா மான்சிங். மான்சிங்கின் முகம் மிதமிஞ்சிய சினத்தால் சிவந்து கிடந்தது. அக்பரை நோக்கிய அவர் கண்கள் நெருப்பை உதிர்த்தன. ''சக்கரவர்த்தி! அவன் துணிவைப் பார்த்தீர்களா?'' என்று வினவினார் மான்சிங், சிவந்த அவர் உதடுகள் லேசாகத் துடிக்க.

இதயதுல்லாவின் துரோகத்தால், துணிவு நிரம்பிய சொற்களால் அக்பர் சிறிதளவும் அசைந்ததாகத் தெரியவில்லை. ''இதயதுல்லாவின் துணிவைப் பற்றி எனக்கு

என்றும் சந்தேகம் கிடையாது'' என்றார் சக்கரவர்த்தி சர்வ சாதாரணமான குரலில்.

''அவனை என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று பகவான்தாஸ் வினவினான் அச்சம் நிலவிய குரலில்.

''தகுந்த சன்மானம் தருவேன்'' என்றார் அக்பர்.

''என்ன சன்மானம்?'' என்று ராஜாமான்சிங் கேட்டார்.

''தகுந்த சன்மானம்'' என்று கூறிய அக்பர், அதைப் பற்றி பிறகு பேச மறுத்தாலும் மற்றவர்கள் விடவில்லை.

''அவர் இந்த சபையை துச்சமாக மதித்துப் பேசியிருக்கிறார். தடிப்பான குரலிலும் பேசியிருக்கிறார்'' என்று பகவான்தாஸ் சுட்டிக் காட்டினான்.

''சாகுமுன்பு கழுத்து முறிபடும் கோழியுந்தான் கூவுகிறது'' என்று கூறிய அக்பர் புன்முறுவல் கொண்டார்.

இதனால் எல்லோருக்கும் திருப்தி ஏற்படவே, அக்பர் மீண்டும் போர் யோசனையில் இறங்கினார். ''பகவான் தாஸ்! கோமுல்மீர் பகுதியில் நாம் எந்த இடத்தில் நுழைந்தால் வெற்றி சுலபமாகக் கிடைக்கும்?'' என்றுவினவினார்.

''சக்கரவர்த்தி! கோமுல்மீரும் கோகுண்டாவும் சுலபமாக படைகள் அணுகக்கூடிய இடங்களல்ல. ஆராவலீ மலைத் தொடரின் பெரும் உச்சிகளால் காப்பாற்றப்பட்ட மலைப் பகுதியை ராணா தமது ராணுவ நிலமாக மாற்றியிருக்கிறார். அவரது புதிய தலைநகரான கோமுல்மீரிலிருந்து ரிகும்நாத் வரை வடக்கிலிருந்து தெற்கே பிரிட்டிஷார் கணக்குப்படி எண்பது மைல் தூரம். மீர்பூரிலிருந்து ஸதோல்லாவரை மேற்கு கிழக்காக எண்பது



மைல் தூரம். இந்தச் சதுரம் அபாயமான மலைப்பிரதேசம். எங்கும் ராணுவம் நுழைய முடியாது. இந்த சதுரத்தை ராணா தமது படைகளின் அரணாக்கியிருக்கிறார். இந்த எண்பது மைல் சதுரத்தில் சின்னஞ்சிறு மலை இடைவெளிகள் தான் உண்டு. ஒரு சமயத்தில் இரண்டு ஆயுத வண்டிகள்தான் புகமுடியும். அப்படியுள்ள குறுகலான வழியில் இருபுறமும் எதிரிலும் பெரிய மலை உச்சிகள் இருப்பதால் ஹல்திகாட் பீடபூமியை அணுகுவது மிகவும் கஷ்டம். அந்த பீடபூமியில்தான் ராணா தங்கள் படையை சந்திப்பார். அந்தப் பீடபூமியின் வழிகளில் இருபுறங்களிலும் உள்ள மலைஉச்சிகளிலும் சரிவுகளிலும் ராஜபுத்ர வீரர்கள் காவல் புரிவார்கள். ஒவ்வொரு அடி நிலத்தையும் நீங்கள் பிடிக்க முயலுமுன்பு மலைச்சண்டையில் நிகரற்ற ராணாவின் வீரர்கள் எய்யும் ஈட்டிகளையும் தடதடவென்று மலைச்சரிவுகளில் இறங்கிவரும் புரவி வீரர்களையும் நீங்கள் சமாளிக்க வேண்டியிருக்கும். ராணாவிடமுள்ள ஒவ்வொரு வீரனும் சாவினால் தனக்கு வீரசொர்க்கம் கிடைக்குமென்று நம்புகிறான். இவர்கள் தவிர குறி தவறாமல் எய்யும் பீல் என்ற ராஜபுத்ர ஜாதியார் விற்போரில் வல்லவர்கள். அவர்கள் தொடுக்கும் அம்புகளும் மறைவிலிருந்து மழைபோல் பொழியப்படும். இத்தனைக்கும் தப்பி நமது படை ஹல்திகாட் சமவெளியான பீடபூமியில் நுழைந்தால், ராணா தங்களை வரவேற்கத் தயாராயிருப்பார். ஹல்திகாட் அத்தனை அபாயமான இடம்'' என்று விளக்கினான் பகவான்தாஸ்.

அக்பர் சிறிது சிந்தித்தார். ''பகவான்தாஸ்! அம்புகள், வேல்கள், கத்திகள் இவற்றைப்பற்றி சொன்னாயே தவிர பீரங்கிகளைப்பற்றி சொல்லவில்லையே?'' என்று வினவினார் சிறிது சிந்தனைக்குப் பிறகு.

பகவான்தாஸின் முகத்தில் முதன் முதலாக அச்சம் விரிந்தது. அக்பரை அதுவரையில் பார்த்திருந்தவன்

ராஜா மான்சிங்கை நோக்கி, தனது கண்களைத் திருப்பி னான். ''மகாராஜா! அதையும் சொல்லட்டுமா?'' என்று வினவினான்.

''சொல்'' என்றார் மான்சிங், வெறுப்பு நிரம்பிய குரலில்.

''தங்கள் மருமகன்தான் பீரங்கிகளை எங்கோ மறைத் திருக்கிறான். அவற்றை எப்பொழுது கொண்டுவருவான், இயக்குவான் என்பது தெரியவில்லை. மிக மர்மமாக வைத்திருக்கிறான். பீரங்கிகளை இயக்க ராஜபுத்ரர் பலருக்கு பயிற்சியும் அளித்துவருகிறான்'' என்றான் பகவான்தாஸ்.

''என் மருமகனா?'' என்று விசாரித்தார் மான்சிங் உணர்ச்சியற்ற குரலில்.

''ஆம், ரவிசந்த். உங்கள் மகள் சம்பக்குக்கும் அவனுக் கும் திருமணமாகிவிட்டது'' என்று பகவான்தாஸ் சொன் னான்.

அதற்கு மான்சிங்கும் பதில் சொல்லவில்லை. அக்பரும் அதை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. ''பகவான்தாஸ்! இத்தனையிலும் ஒரு சுப சமாசாரத்தையும் சொல்லியிருக் கிறாய். மகிழ்ச்சி, அது கிடக்கட்டும். இப்படி அருகில் வா'' என்று அழைத்தார்.

அச்சத்துடன் அடிமேலடி வைத்து அக்பரை அணுகி னான் பகவான்தாஸ். அக்பர் தமது கழுத்திலிருந்த விலை உயர்ந்த ஒரு தங்க சங்கிலியை எடுத்து பகவான் தாஸின் கழுத்தில் போட்டார். ''நீ மொகலாய சாம்ராஜ் யத்துக்கு செய்துள்ள சேவைக்கு இது பரிசு. ராணாவை வெற்றிகொண்ட பின் உனக்கு ஜாகீரும் தருவோம். அவ்வப்பொழுது வழக்கமான முறையில் செய்தி அனுப்பிக்



கொண்டிரு'' என்று புன்முறுவலுடன் கூறி, அவன் செல்ல விடையளித்தார். தலையை வணங்கிக் கொண்டே பின்புற மாக நகர்ந்த பகவான்தாஸ் அறைக்கு வெளியே சென்றான்.

அவன் சென்ற பிறகு கதவுகளை மூடச் சொல்லிய அக்பர், மீண்டும் மந்திராலோசனையில் இறங்கி, ''மான்சிங்! ஹல்திகாட் சமவெளியைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?'' என்று கேட்டார்.

மான்சிங் சிறிதும் சிந்திக்கவில்லை. ''ராஜபுதனத்தில் யாரும் நுழைய அஞ்சும் இடம் மலைவழிகள். அவையும் மிகக்குறுகல். இருப்பினும் கஷ்டமில்லாமல் போர்களை ஜெயிக்க முடியாது. வீரனுக்கு எதுவும் கஷ்டமல்ல'' என்றார்.

அக்பரும் அதிகமாகச் சிந்திக்கவில்லை. ''மான்சிங்! ஹல்திகாட் போரின் வெற்றிக்கு உன்னைத்தான் நம்பி யிருக்கிறேன். ஸலீமும், ஸாகர்ஜீயின் முஸ்லீம் மகனும் மகாவீரனுமான மகபத்கானும் உன்னுடன் வரட்டும். வேண்டிய தளவாடங்கள், படைப்பிரிவுகள் அனைத்தையும் அமைத்துக்கொள். இன்னும் ஒரு வாரத்தில் புறப்படு'' என்று உத்தரவு பிறப்பித்து, அத்துடன் போர் ஆலோசனை முடிந்துவிட்டதற்கு அறிகுறியாக தமது ஆசனத்தைவிட்டு எழுந்தார். மற்றவர்கள் எழுந்து சென்ற பின்பு ராஜா மான்சிங் மட்டும் தனித்து நின்றுகொண்டிருந்தார்.

அக்பர் தமது ஆழ்ந்த பார்வையை மான்சிங்மீது திருப்பினார். ''ஏதாவது சந்தேகமிருக்கிறதா மான்சிங்?'' என்றார்.

''இல்லை. ஆனால் ஒன்று கேட்க விரும்புகிறேன். பகவான்தாஸை நீங்கள் நம்புகிறீர்களா?'' என்று மான்சிங் வினவினார்.

அக்பர் லேசாக நகைத்தார். ''முற்றும் நம்புகிறேன். இந்த மாதிரி துரோகிகள் இந்து வர்க்கத்தில் இல்லாவிட்டால் ராஜபுதனத்தை நான் வெற்றி கொண்டிருக்க முடியாது'' என்றார் சக்கரவர்த்தி நகைப்பின் ஊடே.

''இதயதுல்லா துரோகியல்லவா?'' என்று மான்சிங் கடுப்புடன் கேட்டார்.

''ஆம். அவனுக்கு தண்டனை உண்டு'' என்று கூறிய அக்பர், ''பிறகு சந்திப்போம் மைத்துனரே'' என்று கூறிவிட்டு, தமது அந்தப்புரத்தை நோக்கிச் சென்றார். சிறிது நேரம் சிந்தனைவசப்பட்ட மான்சிங், அக்பர் இந்து வர்க்கத்தின் துரோகிகளைப்பற்றி குறிப்பிட்டது பகவான் தாஸையா தன்னையா என்று தனக்குள் கேட்டுக்கொண்டார். திடீரென நாமும் ராணாவுடன் சேர்ந்துவிட்டால் என்ன என்ற எண்ணமும் துளிர்த்தது, அவர் இதயத்தில். ''உம் காலம் கடந்த நினைப்பு'' என்று நினைத்தார். பிறகு ராணா உதயசாக்ர ஏரிக்கரையில் தமக்கு விளைவித்த அவமானத்தையும், தமது சபதத்தையும் நினைத்துப் பார்த்தார். ராணாவை அடக்குவதும், அவமானத்துக்குப் பழி வாங்குவதும் தமது கடமை என்று எண்ணி, பெருமூச்சு விட்டுக்கொண்டு வெளியேறினார்.

அக்பர் அரண்மனையிலிருந்து தமது மாளிகைக்கு சென்றதும், மான்சிங் உணவுகூட அருந்தவில்லை. படுக்கையில் மல்லாந்து விழுந்தார். அவர் கண்முன்பு சம்பக் தோன்றினாள். ''மகளே! உனக்குத் திருமணமாகிவிட்டதாமே! நான் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே'' என்று தன்னை நொந்து கொண்டார்.

அதே சமயத்தில் சம்பக்கும் ரவிசந்தும் ஹல்திகாட் பீடபூமியின் மண்ணில் கட்டிப் புரண்டு கொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்தில் போரை மறந்தார்கள். சூழ்நிலை



மறந்தார்கள். ''இது ஹல்திகாட் அல்ல; சொர்க்கம்'' என்று அவள் காதில் ஓதினான் ரவிசந்த்.

''சொர்க்கத்திலிருப்பவர்கள் இந்த மாதிரி மண்ணிலா கிடப்பார்கள்?'' என்று கேட்டாள் சம்பக்

''பஞ்சணையிலிருந்தா மரம் முளைக்கிறது? மண்ணிலிருந்துதானே மரம் முளைக்கிறது. அதிலிருந்துதானே மலர் அனைத்தும் உண்டாகின்றன. தவிர நீ மண்மலரல்லவா? மண் வாசனையைவிட சிறந்த வாசனை எது?'' என்று கேட்டு, அவள் கழுத்தில், மார்பில் தனது உதடுகளைப் புதைத்தான். பிறகு மீண்டும் சொன்னான்: ''அடி சம்பக்! ரகுவம்சத்தில் திலீபன் என்று ஒரு அரசன் இருந்தான். அவன் ராணி, சுதக்ஷிணை. அவளை அவன் முகர்ந்தான். சிறிது மழைத்துளி விழுந்ததும் காட்டுச் சுனைகளுக்கருகே எழும் மண்வாசனையை முகர்ந்து திருப்தியடையாத யானைகளைப்போல, திலீபனும் திரும்பத் திரும்ப மனைவியின் உடல் வாசனையை முகர்ந்தான் என்று வடமொழியில் கவியிருக்கிறது'' என்றும் கூறி, அவளை மீண்டும் அணைத்தான், வலிய முகரவும் செய்தான் திரும்ப திரும்ப. ''மண்ணும் பெண்ணும் ஒன்றுதான். இரண்டுக்குந்தான் மனிதர்கள் போரிடுகிறார்கள்'' என்றும் சொல்லிக் கொண்டே, அவள் இதழ்களில் தனது இதழ்களைப் புதைத்தான்.

# 40. வினையும் விளைவும்!

ஹல்திகாட் பூமியில் சம்பக்கை அணைத்துப் புரண்டு அவள் இதழ்களையும் சுவைத்த ரவிசந்த் என்ன காரணத்தினாலோ திடீரென அவளை அணைத்த கைகளை நீக்கி விலகிப் படுத்து ஆகாயத்தை நோக்கினான். ஆகாயத்தின் விண்மீன்கள் அவனைப் பார்த்து என்ன காரணத்தாலோ நகைத்தன. எட்டாம்பிறைச் சந்திரனின் குளிர்ந்த பார்வையில்கூட ஏதோ கேள்வி இருந்ததாக தோன்றியது அந்த வீரனுக்கு. திடீரென ஒருக்களித்துத் திரும்பி, பக்கத்தில் மல்லாந்து கிடந்த சம்பக்கை நோக்கினான். சந்திர வெளிச்சத்தில் சம்பக் மோகனாகரமாகத் தோன்றினாள். அவள் உடை சிறிதே விலகிய இரண்டொரு இடங்கள் மதியொளியில் வெண்மையாகத் தெரிந்தன.

ரவிசந்தை நோக்கிய அவள் கண்கள் சந்திர வெளிச்சத்தின் காரணமாக நட்சத்திரங்களைப்போல் பளிச்சிட்டன. நகைத்தன. அவள் செவ்விய இதழ்களிலும் சிறிதளவு இகழ்ச்சி தெரிந்தது. ''என்ன திடீர் சிந்தனை?'' என்ற அவள் கேள்வியில் கேலியும் ஒலித்தது.

''என் சிந்தனை கூடாதா?'' —அவன் கேட்டான் வறண்ட குரலில்.

வறட்சிக்குக் காரணம் அவளுக்குப் புரியாததால், ''சிந்தனை செய்யும் சமயமா இது?'' என்று வினவினாள்.

''சமயத்துக்கென்ன?'' -அவன் கேள்வியில் உஷ்ணம் இருந்தது.



''சிந்திக்கவா இங்கு என்னை அழைத்து வந்தீர்கள்?'' -அவள் கேட்டாள்; நகைத்தாள்.

''வேறெதற்கு அழைத்து வந்தேன்?'' -அவன் கேள்வி அர்த்தமற்று இருந்தது. குழம்பிய மனநிலையையும் காட்டியது.

''நல்ல கேள்வி'' என்ற சம்பக் திடீரென எழுந்தாள்.

''என் எழுந்திருக்கிறாய்?''

''இல்லம் செல்ல''

''இல்லத்தில் என்ன வேலை?''

''இங்கு என்ன வேலை?''

''முக்கியமான வேலை இருக்கிறது.''

சம்பக் முகத்தில் சிந்தனை படரலாயிற்று. ''உங்கள் மனம் வேறு எங்கோ ஓடிவிட்டது?'' என்றாள்.

''ஆம் சம்பக். ஒரு சந்தேகம் எனக்கு?'' என்றான் ரவிசந்த்.

''யார் மீது? என் மீதா?'' என்று அவள் கேட்டாள்.

''உன்மீதா? சந்தேகமா? பைத்தியந்தான் உனக்கு'' என்ற ரவிசந்த், ''சம்பக்! நான்கு நாட்களாக பகவான் தாஸை நீ பார்த்தாயா?'' என்று வினவினான்.

''இல்லை. எதற்குக் கேட்கிறீர்கள்?'' என்று அவள் வினவினாள்.

ரவிசந்த் அவள் இடையில் கையை செலுத்தி தன்னிடம் அவளை இழுத்துக் கொண்டான். ''பகவான்தாஸ்

இப்படி மறைவது இது முதல் தடவை அல்ல...'' என்று மெதுவாக இழுத்தான் சொற்களை.

''அதனாலென்ன? தந்தை எங்காவது அனுப்பியிருப்பார்?'' என்றாள் சம்பக்.

''தந்தை அனுப்பிய இடத்துக்கோ அலுவலகத்துக்கோ பகவான்தாஸ் போகிறான் என்பது என்ன நிச்சயம்?'' என்று கேட்டான் ரவிசந்த்.

''பகவான்தாஸ்மீது நீங்கள் அனாவசியமாகச் சந்தேகப் படுகிறீர்கள். தந்தையின் வலதுகை பகவான்தாஸ். எத்தனை தளவாடங்களை அவர் வாங்கி வந்திருக்கிறார்? முதல்தடவை வாங்கும்போது நீங்களே இருந்தீர்களே. அப்பொழுதுதானே நான்.........'' என்ற சம்பக் வார்த்தைகளை முடிக்காமல் விட்டாள்.

ரவிசந்துக்கு அவள் மனநிலை நன்றாகப் புரிந்தது. அப்பொழுதுதான் அவன் அவளை முதன்முதலாக அணைத்தான். அதனால்தான் குறுவாளை அவன்மீது வீசினான் பகவான்தாஸ். அப்பொழுது அவனுக்குத் தெரிந்த அர்த்தம் வேறு. இப்பொழுது புரிந்த அர்த்தம் வேறு. ஆனால் அதை வெளிக்கு காட்டவில்லை ரவிசந்த். திடீரென மடியிலிருந்து ஒரு சிறு மோதிரத்தை எடுத்து ''சம்பக்! இது என்ன பார்'' என்று வினவினான்.

அதைப் பார்த்த சம்பக் திகில் அடைந்தாள். ''இது ஏது உங்களுக்கு?'' —திகிலின் ஊடே வினவினாள்.

''பகவான்தாஸின் குடிசையில் இருந்தது'' என்றான் ரவிசந்த்.

''இது அக்பரின் முத்திரை மோதிரங்களில் ஒன்று'' என்றாள் சம்பக்.



''இம்மாதிரி மோதிரத்தை நம்பிக்கை உள்ளவர்களிடம் சக்கரவர்த்தி கொடுப்பது உண்டு'' என்றான் ரவிசந்த்.

''உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''நான் மொகலாயர் படையில் இருந்திருக்கிறேன் அலலவா?''

''ஆமாம்.''

''அதனால்தான் தெரியும்.''

''இது ஏன் உங்களிடம் இருந்திருக்கக் கூடாது?''

''இருந்திருந்தால் அது சகஜம். நான் மொகலாயரிடம் செய்த சேவைக்கு பரிசாக இருக்கலாம். ஆனால் பகவான்தாஸ் அப்படி என்ன சேவை செய்திருக்க முடியும்?'' என்று வினவிய ரவிசந்த், ''வா சம்பக்! எதற்கும் பகவான்தாஸின் குடிசையைப் பார்வையிடுவோம்'' என்றான்.

பெரிதும் குழம்பிய மனத்துடன் எழுந்தாள் சம்பக். அவள் கையைத் தன் கையில் கோர்த்துக்கொண்டு எட்ட இருந்த குடிசைகளை நோக்கி நடந்தான் ரவிசந்த். அவர்கள் குடிசைக்கு சிறிது தூரத்தில் இருக்கையிலேயே, புரவி ஒன்று பகவான்தாஸின் குடிசையை நோக்கிச் சென்றது. அதன் மீது இருந்து இறங்கிய பகவான்தாஸ் மெல்ல அப்புறமும் இப்புறமும் பார்த்துவிட்டுக் குடிசைக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தான். சில வினாடிகளுக்கெல்லாம் உள்ளே சிறுதீபம் ஒன்று ஒளிவீசியது. சம்பக்கை அழைத்துக்கொண்டு அடிமேல் அடிவைத்துப் பகவான்தாஸின் இருப்பிடத்தைஅணுகியரவிசந்த், குடிசைக்கதவை மெதுவாகத் திறந்து, சம்பக் பின்தொடர ஓசைப்படாமல் உள்ளே நுழைந்து, கதவைச் சார்த்தி அதன்மீது சாய்ந்து கொண்டான்.

குடிசையின் ஒரு மூலையில் இருந்த மரப்பெட்டியைத் திறந்து உள்ளே நோக்கிக் கொண்டிருந்த பகவான்தாஸ் உள்ளே காலடிச் சப்தம் கேட்டதும் சட்டென்று திரும்பினான். சம்பக்கையும் ரவிசந்த்தையும் கண்டதும் திடீரென முகத்தில் தெரிந்த திகிலை வினாடி நேரத்தில் மறைத்துக் கொண்டான். ''ஓ! புதுத் தம்பதிகளா? இந்த நேரத்தில் இங்கு எங்கு வந்தீர்கள்?'' என்று வினவினான் பகவான் தாஸ், சர்வ சாதாரணமான குரலில்.

''தாங்கள் ஊரில் இல்லை என்று கேள்விப்பட்டோம், உங்கள் குடிசையை உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்று தீர்மானித்தோம்'' என்றான் ரவிசந்த்.

பகவான் தாஸ் சம்பக்கை நோக்கினான். ''அப்படியா மகளே!'' என்று கேட்டான். சம்பக் வெட்கத்தால் தலை குனிந்தாள்.

''ஏன் உங்கள் குடிசை என்ன ஆயிற்று?'' என்று வினவினான் பகவான்தாஸ்.

''நேற்று மலைக்காற்றில் சற்றுச் சேதப்பட்டுவிட்டது'' என்றான் ரவிசந்த்.

அவன் சொன்னது அப்பட்டமான பொய் என்பது பகவான்தாசுக்கு நன்றாகத் தெரிந்தே இருந்தது. அவன் வந்தபோது மலைப்பகுதியில் காற்றுக்கான அறிகுறிகள் எதுவுமே இல்லை. பசுந்தழைகள் உதிரவில்லை. சிறு கிளைகள் கூட முறியவில்லை. ஏதோ காரணமாகத்தான் ரவிசந்த் தனது குடிசையில் இருக்க முயலுவதாக எண்ணினான். அந்தச்சமயத்தில் அவன் முகம் திடீரென விகாரப் பட்டது. சம்பக்கின் கையில் இருந்த அக்பரின் முத்திரை மோதிரம் விளக்கொளியில் பளிச்சிட்டதைக் கண்டான். தன் சுய உருவம் வெளிப்பட்டுவிட்டதென்பதை சந்தேகமற உணர்ந்து கொண்டான். அதனால் சட்டென்று நிலை



மையை மாற்றி, ''ரவிசந்த்! அந்த மோதிரம் ஏது உனக்கு?'' என்று சீறினான்.

ரவிசந்த் அசையவில்லை. ''அக்பர் கொடுத்தார், என் சேவையை மெச்சி'' என்றான் ரவிசந்த்.

''என்ன சேவை? ஒற்றன் வேலையா?'' என்று சீறினான் பகவான்தாஸ்.

இதைக்கேட்ட ரவிசந்த் ''இல்லை பகவான்தாஸ். இது என் ராணுவ சேவைக்காகக் கொடுக்கப்பட்டது'' என்றான் மெதுவாக.

ரவிசந்த் தனக்கு மெதுவாக வலை விரிக்கிறான் என்பதைப் புரிந்துகொள்ளாத பகவான்தாஸ், ''பொய். நீ ராணாவுக்கு செய்யும் துரோகத்தை மறைக்க இல்லாத கதையைக் கட்டுகிறாய்'' என்று கூறினான்.

''அப்படியானால் உண்மையைச்சொல்லிவிடட்டுமா?'' என்று வினவினான் ரவிசந்த்.

''சொல்லிவிடு. ராணா உன்னைத் தூக்கில் போடாதபடி நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்றான் பகவான் தாஸ்.

ரவிசந்த் சம்பக்கை திரும்பி நோக்கினான். ''சம்பக்! உண்மையைச் சொல்லிவிடு'' என்றான்.

சம்பக் பகவான்தாஸை எரித்துவிடுவது போல் பார்த்தாள். ''இது உன் குடிசையில் கிடந்தது'' என்றாள் சுடு குரலில்.

''ரவிசந்த் வேண்டுமென்றே போட்டிருப்பான்'' என்று அலட்சியமாகப் பேசினான் பகவான்தாஸ்.

ரவிசந்த் சிறிது சிந்தித்தான். ''நமக்குள் ஏன் விவாதம்? நம்மில் யார் ஒற்றன்? யார் துரோகி என்ற முடிவை ராணாவுக்கே விட்டுவிடுவோமே'' என்றான், ரவிசந்த்.

''நான் இப்பொழுதுவரமுடியாது'' என்றான்பகவான் தாஸ்.

''அதனால் பாதகமில்லை'' என்ற குரல் கதவின் அருகில் கேட்டது. அங்கு ராணா பிரதாப்சிம்மன் நின்றிருந்தார்.

''இங்கு நடந்தது...'' என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தான் பகவான்தாஸ்.

''முழுவதையும் வெளியிலிருந்தே கேட்டுக் கொண்டிருந்தேன்'' என்றார் ராணா.

''அப்படியானால்...'' என்று ஏதோ துவங்கினான் பகவான்தாஸ்.

ராணாவின் கூர் விழிகள் பகவான்தாஸின் கழுத்தை நோக்கின. ''அந்தச் சங்கிலி உனக்கு ஏது?'' என்ற சொற்கள் மெதுவாக அவர் உதடுகளிலிருந்து உதிர்ந்தன. பகவான்தாஸ் மிரண்டான். ''இது .....'' என்று உளற முயன்றான்.

''அதிலும் மொகலாய முத்திரை இருக்கிறது. அதிலிருக்கும் பதக்கத்தை கவனி'' என்றார் ராணா.

''இது என்னுடையது அல்ல. எல்லாம் ரவிசந்தின் வேலை. அவன்தான் மொகலாய ஒற்றன்'' என்றுகூவிக் கொண்டே ராணாவை அணுகி அவர் காலில் விழ முயன்றான். அவன் கைகள் படாதபடி கால்களை இழுத்துக் கொண்டார் ராணா. ''பகவான்தாஸ்! உன் சகோதரனை



நான் தூக்கில் இட்டது உண்மை. ஆனால் உன்னைத் தூக்கிலிட இஷ்டப்படவில்லை. நாளைக் காலைக்குள் தூல்திகாட் எல்லையை விட்டு ஓடிவிடு. நாளைக்கு நீ யார் கண்ணில் பட்டாலும் உன்னைக் கொன்றுவிட ஏற்கனவே உத்தரவு அனுப்பிவிட்டேன்'' என்ற ராணா, அவனை மேற்கொண்டு பார்க்கவும் மனமின்றி குடிசைக்கு வெளியே சென்றுவிட்டார். சம்பக்கும் ரவிசந்தும் அவரைத் தொடர்ந்து சென்றார்கள்.

அன்றிலிருந்து நான்காவது நாள் பகவான்தாஸ் மீண்டும் ஆஜ்மீருக்குள் நுழைந்தான். அப்பொழுது இரவு நன்றாக ஏறிவிட்ட சமயம். நேராகப் பல வீதிகளைத் தாண்டி அக்பர் அரண்மனைக்கு வந்து கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு தெருவின் திருப்பத்தில் அவன் நுழைந்த போது சட்டென்று விரைத்து நின்றான் ஒரு வினாடி. பிறகு தரையில் தொப்பென்று விழுந்தான். அவன் மார்பிலிருந்து குருதி பீறிட்டு வந்து கொண்டிருந்தது. பிச்சுவா ஒன்று அவன் மார்பில் புதைந்து கிடந்தது. அந்தச் செய்கையைக் கண்ட ராஜா மான்சிங் ''நகர சோதனையில் இது ஒரு வேதனையா?'' என்று வினவினார்.

''வேதனையல்ல. ஒரு துரோகிக்கு நாம் கொடுக்கும் பரிசு'' என்று கூறிய அக்பர், மைத்துனன் மான்சிங் பின் தொடர நடந்து, அரண்மனையை நோக்கி சென்று விட்டார்.

# 41. அக்பரின் நீதி

நகர சோதனையை முன்னிட்டு தலையிலிருந்து கால் வரை போர்வையால் தம்மை மூடிக்கொண்டும், சாதாரண வீரனைப்போல் மாறுவேடம் போட்டுக்கொண்டும் நள்ளிரவில் நகரைச் சுற்றிவந்த சமயத்தில், பகவான் தாஸை எதேச்சையாகப் பார்த்து அவனை எமனுலகுக்கு அனுப்பிய மொகலாய சக்கரவர்த்தி, தமது அரண்மனை வாயிலை அடைந்ததும், உள்ளே புக முயற்சிக்காமல், சட்டென்று நின்றார். ஏதோ சிந்தித்தார். அவர் நின்ற தற்கும் சிந்தனைக்கும் காரணம் புரியாத ராஜா மான்சிங், ''பூபா! என்ன சிந்திக்கிறீர்கள்? இன்னும் யாரையாவது கொல்ல அவசியமிருக்கிறதா? யாரென்று சொன்னால் அந்தப் பணியை நானே முடித்து விடுகிறேன்'' என்றார்.

அக்பர் சிறிது சிந்தித்துவிட்டு, ''மைத்துனரே! ஒரு வேலை பாக்கியிருக்கிறது. அதை நீரே செய்யலாம். இருப்பினும் நான் உடன் வருவது நல்லது'' என்று கூறி விட்டு வாயிலிலிருந்து திரும்ப முயன்றார்.

''எங்கு போகிறோம் சக்கரவர்த்தி? நடுநிசி தாண்டி மூன்றாவது ஜாமம் வந்துவிட்டது. தங்களுக்கு உறங்க சிறிது நேரமாவது வேண்டாமா?'' என்று வினவினார் மான்சிங்.

''மான்சிங்! மனத்துயரத்துடன், கவலையுடன் உறங்குவது கஷ்டம். படுத்தாலும் தூக்கம் வராது. ஆகையால் இன்னொரு பணியையும் முடித்துவிடுகிறேன், வா'' என்று சொல்லிக்கொண்டு அக்பர் நடந்தார்.



அவர் நேராகச் சிறைச்சாலையை நோக்கிச் செல்லும் சாலையில் திரும்பிவிட்டதைக் கண்ட ராஜாமான்சிங், அவர் போகுமிடத்தையும் காரணத்தையும் புரிந்து கொண்டு ''சக்கரவர்த்தி! அந்த இன்னொரு துரோகிக்குப் பரிசு கொடுக்கப் போகிறீர்களா?'' என்று வினவினார்.

''ஆம்''-ஒற்றைச்சொல்லில் பதில் சொன்னார் அக்பர்.

''அவனையும் சனி பிடித்துவிட்டான் போலிருக் கிறது?'' என்று வினவினார் மான்சிங்.

''இஸ்லாம் மதத்தில் நவக்கிரகங்கள் கிடையாது. ஆகையால் சனியும் இல்லை'' என்று அக்பர் அசட்டையாக பதில் சொன்னார்.

அக்பரின் மனத்தில் வேறு ஏதோ சிந்தனை உதித்து விட்டதை அவரது உற்சாகக் குரலிலிருந்தே ஊகித்துக் கொண்ட மான்சிங், அதற்கு மேல் எந்தக் கேள்வியும் கேட் காமல் நடக்கப்போவதைப் பார்க்கும் விருப்பத்துடன் அக்பரைத் தொடர்ந்து நடந்தார். சிறைச்சாலையை அடைந்ததும் தாம் முன்னே சென்று தமது முகத்தைக் காட்டி சிறைச்சாலைக் கதவுகளைத் திறக்கச் செய்தார். அந்தப் பெரிய சிறைச்சாலையின் பல பகுதிகளைக்கடந்து, தூக்குக் கயிறுக்காகக் காத்திருக்கும் கைதிகள் அடைக்கப் பட்டிருந்த கட்டிடத்துக்குள் நுழைந்த மான்சிங், இதய துல்லா அடைக்கப்பட்டிருந்த அறையைக் காட்டுமாறு சிறைக்காவலனுக்கு உத்தரவிட, அவன் தனது பெரும் சாவிக்கொத்துடன் கோடியிலிருந்த ஒரு அறைக்கு வந்து, ''இங்குதான் இருக்கிறான் அவன்'' என்று அறிவித்தான்.

''பூட்டைத் திற'' என்று உத்தரவிட்டார் ராஜா மான்சிங்.

பெரும் சத்தத்துடன் இரும்புக்கதவுகளின் சங்கிலியும் பூட்டும் கழற்றப்பட்டவுடன், காவலனை அப்புறம் இருக்க உத்தரவிட்ட மான்சிங், அக்பரைத் திரும்பி நோக்கினார். மான்சிங் அழைத்து வந்ததாலும் அக்பரின் உடல் பரிபூர்ண மாக மூடப்பட்டிருந்ததாலும் அவரையும் ஒரு பயங்கரக் கைதியெனத் தீர்மானித்த சிறைக்காவலன், ''ராஜா! இவனுக்குத் தனி அறை ஒன்று காலியாயிருக்கிறது. அங்கு அடைத்துவிடலாம்'' என்று யோசனை கூறினான்.

ராஜாமான்சிங் அவன் சொற்களைக் கேட்டு வெகுண் டார். அக்பர் புன்முறுவல் செய்தார். ''அப்பா! நான் கைதி யல்ல. இந்த அறையிலிருப்பவர் என் உறவினர். கடைசி முறையாகப் பார்க்க வந்தேன். ராஜா அருள் புரிந்தார்'' என்று குரலை அடியோடு மாற்றி பேசினார் அக்பர்.

''அதற்கு இரவில் வருவானேன்? காலையில் சிறைக் கைதிகளைப் பார்க்க அவகாசம் கொடுக்கப்படுகிறதே?'' என்று விசாரித்தான் சிறைக்காவலன், அவரை அழைத்து வந்தவர் ராஜா மான்சிங் என்பதை மறந்து.

''அது எனக்குத் தெரியும். அப்புறம் போ'' என்று எரிந்து விழுந்தார் மான்சிங்.

அதற்கு மேல் அங்கு நிற்காத சிறைக்காவலன் அகன் றான் அவ்விடத்தை விட்டு. அவன் சென்றதும் ''மான்சிங்! இதயதுல்லாவை விடுதலை செய்துவிட்டதாகச் சொல்லி அழைத்து வா. அவன் ஏதாவது முரண்டினால் நான் வருகிறேன்'' என்று சொல்லி, அக்பர் சிறை அறையின் வாயிலிலேயே நின்றுவிட, மான்சிங் மட்டும் உள்ளே சென்றார்.

அறைக்குள் இருந்த கல்மேடையில் இதயதுல்லா நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தார். அந்த அறைக்கு



வெளியே இருந்த தீபத்திலிருந்து உள்ளே விழுந்த ஒளி அவர் மன நிம்மதியை நன்றாக எடுத்துக் காட்டியது. அதனால் வியப்படைந்த மான்சிங், அவரைத் தனது கை யால் தட்டி ''இதயதுல்லா! எழுந்திரும்'' என்று எழுப்பி னார்.

இதயதுல்லா ஆழ்ந்த நித்திரையிலிருந்ததால் கொஞ் சத்தில் எழுந்திருக்கவில்லை. சற்று புரண்டு படுத்து ''யார் இந்த அகாலத்தில் என்னை எழுப்புவது?'' என்று வினவி னார் குரலில் அலுப்பைக் காட்டி.

''எழுந்திருங்கள். சக்கரவர்த்தியின் ஆணை'' என்று மான்சிங் சற்று கடுமையாகப் பேசினார்.

''தூங்கவும் எழுந்திருக்கவுங்கூட சக்கரவர்த்தி ஆணை யிடுகிறாரா?'' என்று கேட்டுக்கொண்டே கண்ணைவிழித்த இதயதுல்லா, ராஜா மான்சிங்கைப் பார்த்ததும் வியப்பு நிரம்பிய விழிகளை அவர்மீது நாட்டினார். ''அடடே! தாங்களா? மன்னிக்க வேண்டும்'' என்று கூறிக்கொண்டே எழுந்து மேடையில் உட்கார்ந்து கொண்டார். பிறகு புன் முறுவல் செய்தார். ''ராஜா! வாழ்க்கையின் விசித்திரத் தைப் பார்த்தீர்களா? இந்த மேடைக்கும் மணமேடைக்கும் ஒரு எழுத்துதான் வித்தியாசம். அத்தனை மெல்லிய கயிற் றில் மனித உயிர் ஊசலாடுகிறது. ஆனால் மனிதன் அல்லாஹை (ஜல்) நினைப்பதில்லை. தானே சகலமும் என்று இறுமாந்திருக்கிறான்'' என்று தத்துவம் பேசினார் இதயதுல்லா.

அக்பர் சற்று முன்பு உத்தரவிடும் வரை மரண வாயிலி லிருந்த இதயதுல்லா தத்துவம் பேசுவதையும், சர்வ சாதாரணமாக மரணத்துக்குத் தயாராகிவிட்டதையும் கண்ட ராஜா மான்சிங் வியப்பின் உச்ச கட்டத்துக்குச் சென்றார். அத்துடன் கேட்டார் ''என்ன சொல்கிறீர்கள் இதயதுல்லா?'' என்று.

இதயதுல்லா லேசாக நகைத்தார். ''இப்பொழுது நான் இருப்பது தூங்கு மேடை. போகப்போவது தூக்கு மேடை. இரண்டுக்கும் வித்தியாசம் ஒரே எழுத்துதான். ஆனால் ராஜா தூக்கத்துக்கும் சாவுக்கும் என்ன வித்தியாசம்? நீண்ட தூக்கந்தானே சாவு. ஒரு தூக்கத்திலிருந்து எழுந்திருக்கிறோம். இன்னொரு தூக்கத்திலிருந்து எழுந்திருப்பதில்லை'' என்றார் இதயதுல்லா.

அதற்கு மேல் பொறுமையில்லாத ராஜா மான்சிங் ''இதயதுல்லா! உம்மை விடுதலை செய்துவிட்டேன். நீர் போகலாம்'' என்றார்.

இதயதுல்லாவின் முகத்தில் துன்பம் படர்ந்தது. ''மான்சிங்! அக்பர் எனக்கு மரணதண்டனை விதித்திருக்கிறார். நீர் அதை மாற்ற முடியாது. தவிர நீர் ஏற்கனவே ராணாவுக்குச் செய்திருக்கும் துரோகத்துக்கு இது பரிகாரமல்ல. எனக்கு விடுதலை தேவையில்லை'' என்று கூறிவிட்டு, மீண்டும் மேடையில் படுக்க முயன்றார்.

''இதயதுல்லா!''-மான்சிங்கின் குரல் அதிகாரத்துடன் ஒலித்தது.

''என்ன ராஜா?'' - சாதாரணமாகக் கேட்டார் இதயதுல்லா.

''உமது உபதேசம் எனக்குத் தேவையில்லை'' என்றார் மான்சிங்.

''தாங்கள் ராணாவுக்கு எதிராகப் போரிட ஒப்புக்கொண்ட சமயத்திலிருந்தே உபதேசம் பயன்படாத நிலையை அடைந்துவிட்டீர். சரி இனிமேலாவது என்னைத் தூங்கவிடுங்கள். விடிவதற்குள் சற்று கண்ணை அயர்கிறேன். விடிந்தால் நமாஸ் செய்ய வேண்டும்'' என்ற இதயதுல்லா, மீண்டும் பிடிவாதமாக திண்ணையில் படுத்துக்கொண்டார்.



இவையனைத்தையும் அறைவாயிலிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த அக்பர், அதற்குமேல் தாமதிப்பதில் அர்த்தமில்லையென்பதை உணர்ந்து உள்ளே பிரவேசித்தார். மேடையருகில் நின்று இதயதுல்லாவின் உடலை பலமாக அசக்கினார். இதயதுல்லா மிகுந்த கோபத்துடன் எழுந்து உட்கார்ந்தார். அக்பர் தமது முகத்திரையை நீக்கி முகத்தைக் காட்டினார். அக்பரின் முகத்தைக் கண்டதும் இதயதுல்லா துள்ளி எழுந்து அக்பரின் முன்பு மண்டியிட்டார். ''சக்கரவர்த்தி! உங்கள் அடிமைக்கு ஆணையிடுங்கள்'' என்றும் சொன்னார்.

அக்பர் இதயதுல்லாவை தமது இரண்டு கைகளாலும் தூக்கி நிறுத்தினார். ''இதயதுல்லா! உம்மை என்ன செய்வதென்று எனக்கே புரியவில்லை'' என்று உணர்ச்சி மிகுந்த குரலில் கூறினார்.

''சக்கரவர்த்தி! இந்த மாமிச உடல் தங்கள் ஊழியத்திற்காக ஏற்பட்டது. தாங்கள் என்னை எதுவேண்டுமானாலும் செய்யலாம்'' என்றார் இதயதுல்லா.

''ராஜா மான்சிங் எனது மைத்துனர்'' என்று சுட்டிக் காட்டினார் சக்கரவர்த்தி.

''ஆம் சக்கரவர்த்தி.''

''அவர் ஆணைதான் எனது ஆணை.''

''அப்படியா சக்கரவர்த்தி?''

''ஆம் இதயதுல்லா. அவர் ஆணையை மீறினால் என் ஆணையை மீறியது போலத்தான், அதற்கும் தண்டனை உண்டு.''

''விதியுங்கள் மகாராஜா''

''நாளை காலைக்குள் நீர் ஆஜ்மீரிலிருந்து போய்விட வேண்டும்.''

''ஏன்?''

''நீர் விடுதலை செய்யப்பட்டதை ராஜா அறிவிக்கவில்லை?''

''ஆம் அறிவித்தார்.''

''பின் ஏன் மறுத்தீர்?''

''அது தங்கள் கட்டளைதானா என்று சந்தேகமாயிருந்தது'' என்று தைரியமாகச் சொன்னார் இதயதுல்லா.

அக்பர் இதயதுல்லாவை இறுகத் தழுவிக்கொண்டார். ''இதயதுல்லா! சூரத்தின் பெருவணிகரே! மான்சிங் என் மைத்துனன் மட்டுமல்ல; ராஜபுதனத்தின் மகாவீரன். நமது சாம்ராஜ்யம் நிலைத்து நிற்பதற்கும் விஸ்தரிக்கப்பட்டதற்கும் அவர் பெரும் காரணம். அவர் என் உயிருக்குச் சமானம். அவர் சொல்வதைக் கேட்பது நல்லது. உடனடியாக சூரத்துக்குக் கிளம்பும்'' என்றார் அக்பர், அவரைத் தழுவிய வண்ணம்.

அவர் தழுவலிலிருந்து மீண்ட இதயல்லா ''சக்கரவர்த்தி! எல்லாம் சகலமும் அறிந்த அல்லாஹின் (ஜல்) செயல். இப்பொழுது நீங்கள் ராணா மீது போர்தொடுக்கலாம். தங்களிடமிருப்பதுபோல் அத்தனை ஆயுதபலம் அவரிடமில்லாவிட்டாலும் ஓரளவு நான் கொடுத்திருக்கிறேன். ஆயுதங்களின் குறைவை அவரது சுதந்திர வேட்கை ஈடு செய்கிறது. இனி நீங்கள் அவரை வெற்றி கொண்டால் அது தர்மமான வெற்றியாயிருக்கும்'' என்று கூறிவிட்டு, மேடை மீதிருந்த தமது கம்பளியைச் சுருட்டிக் கொண்டு கிளம்பச் சித்தமானார்.



அக்பர் மீண்டும் தமது முகத்தைத் திரையிட்டு மறைத்துக் கொண்டதும் மூவரும் சிறையை விட்டுக் கிளம்பினார்கள். அவர்கள் செல்வதை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்த சிறைக்காவலனுக்கு மட்டும், அக்பர் தமது முகத்தைச் சிறிது திறந்து காட்டிவிட்டு, வேகமாக நடந்தார். சிறைவாயிலுக்கு வந்ததும், இதயதுல்லாவிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு மான்சிங்குடன் தமது அரண்மனையை நோக்கி நடந்த அக்பரை மான்சிங் கேட்டார்: ''பூபா! இரு துரோகிகளில் ஒருவனைக் கொன்றீர்கள். இன்னொருவனை விடுதலை செய்தீர்கள். இது என்ன நியாயம்?'' என்று.

அக்பர் சொன்னார்: ''மான்சிங்! பகவான்தாஸ் சுயகுலத் துரோகி. இதயதுல்லா அப்படியல்ல. சத்தியம் பேசினான். போர் ஆலோசனை சபையில் எதிர்த்துப் பேசினான். இதயதுல்லாவிடம் நாணயம் இருக்கிறது. ராணாவுக்கு பீரங்கிகளைக் கொடுத்ததை ஒப்புக்கொண்டான். அதற்கு நியாயமும் சொன்னான். பகவான்தாஸை போன்ற ஆயிரம் பேர்களை நம்புவதைவிட இதயதுல்லா போன்ற ஒருவனை நம்பலாம். தவிர ராணாவிடம் தற்சமயம் தளவாட பலமிருக்கிறது. இனி நாம் போர் தொடங்கலாம். ஹல்திகாட்டுக்குச் செல்ல ஏற்பாடு செய்து கொள். ஹல்திகாட் போர் நமக்கும் ராணாவுக்குமுள்ள விரோதத்துக்கு ஒரு முடிவு கட்டும்'' என்ற அக்பர், மனநிம்மதியுடனும் குதூகலத்துடனும் தமது அரண்மனையை நோக்கி நடந்தார். மான்சிங்கும் தமது மாளிகைக்கு விரைந்தார். மறுநாளே படையெடுப்புக்கு ஆயத்தம் செய்யலானார். ராணா உதயசாகர ஏரிக்கரையில் தன்னை அவமானப்படுத்தியது அவர் ஏற்பாடுகளைத் துரிதப்படுத்தியது.

# 42. மான்சிங்கின் சூழ்ச்சி !

ராஜா மான்சிங்கிடம் ஒரு பணியை ஒப்படைத்து விட்டால் அது மிகத் திட்டமாகவும் சீராகவும் நிறைவேற்றப்படும் என்பதை அக்பர் பூர்ணமாக அறிந்திருந்த காரணத்தால், படையெடுப்பு ஏற்பாடுகளில் அவர் தலையிடவில்லை. தமது புத்திரனான சலீமைக்கூட அழைத்து, மேவார் ராணாமீது தொடுக்கப்படும் போருக்கு ராஜா மான்சிங்கே தலைமைவகிப்பார் என்பதையும் அறிவித்தார்.

இதனால் அக்பருக்கு அடுத்தபடி பட்டத்துக்கு வர வேண்டிய சலீம் சிறிது மனத்தாங்கலே அடைந்தான். "என் இந்தப் போருக்கு தளபதியாகச் செல்ல எனக்குத் தகுதியில்லையா?" என்றும் கேட்டான்.

அக்பர் தனது மகனை உற்று நோக்கினார் சிலவினாடிகள். "ஸலீம்! இது சாதாரணப் போரல்ல. மொகலாய சாம்ராஜ்யத்தின் கீர்த்தியையோ அல்லது அபகீர்த்தியையோ நிர்ணயிக்கவல்லது. தவிர ராணா பிரதாபசிம்மன் சாமான்ய எதிரியுமல்ல. போதிய படைபலமில்லாமலே இத்தனை ஆண்டுகளாக மொகலாய சாம்ராஜ்யத்தை எதிர்த்து வருகிறார். அதுமட்டுமல்ல; பாம்பின்கால் பாம்புக்குத்தான் தெரியும். ராஜபுத்ரர் முறைகள் ராஜபுத்ரர்களுக்குத்தான் தெரியும். ஆகையால் நீ இந்தப் போரில் பதவிக்கு ஆசைப்படாதே. ராஜா மான்சிங்கைப் பின்பற்றிச் செல்" என்று திட்டவட்டமாகச் சொல்லி விட்டார்.



இதனால் வெகுண்ட உள்ளத்துடன் அக்பரின் அரண்மனையிலிருந்து புறப்பட்ட ஸலீம், தனது அரண்மனைக்கு போய்ச் சேர்ந்தான். அவன் வருமுன்பே அங்கு அவனைப் பார்க்க ராஜா மான்சிங் தயாராகக் காத்திருந்தார், ஸலீமைக் கண்டதும், "ஸலீம், நாம் நாளைக்கு மறுநாள் புறப்படுகிறோம்" என்று அறிவிக்கவும் செய்தார்.

ஸலீமின் முகத்தில் சிறிது சினம் துளிர்த்தது. "எங்கு?" என்று சினம் மிகுந்த குரலில் கேட்டான்.

"ராணா பிரதாப்பை சந்திக்க" என்றார் மான்சிங், கவலை தொனித்த குரலில்.

அதைக் கவனிக்கவே செய்தான் ஸலீம். "என் ராணாவை சந்திக்கப் பயமாயிருக்கிறதா தங்களுக்கு?" என்று வினவினான்.

ராஜா மான்சிங் நகைத்தார். "ஆம் பயமாகத்தானிருக்கிறது. ஒரு மகாவீரனைச் சந்திக்கப் போகிறோம்" என்றார் நகைப்பின் ஊடே.

ஸலீம் ராஜாவை இகழ்ச்சியுடன் பார்த்தான். "அஞ்சாதீர்! உங்கள் வெற்றிக்கு நான் அல்லாஹை(ஜல்) பிரார்த்திக்கிறேன்" என்றான் குரலிலும் இகழ்ச்சியைக் காட்டி.

"வேண்டாம். வெற்றிக்குப் பிரார்த்தனை செய்ய வேண்டாம்" என்றார் மான்சிங்.

"வேறெதற்கு பிரார்த்தனை செய்ய வேண்டும்?" என்று ஸலீம் கேட்டான்.

"நாமிருவர் உயிருக்கும் பிரார்த்தனை செய்" என்று கூறிவிட்டு, "நாளை மறுநாள் காலையில் நமது படை ஹல்திகாட்டை நோக்கிக் கிளம்பும். சித்தமாயிருங்கள்

இளவரசே'' என்று எச்சரிக்கையும் செய்துவிட்டு கிளம்ப முற்பட்ட ராஜாவை ஸலீம், ''சற்றுப் பொறுங்கள்'' என்று நிறுத்தினான்.

புறப்பட்ட ராஜா திரும்பினார். ''என்ன வேண்டும் ஸலீம்?'' என்று கேட்டார்.

''எத்தனை படைகளை சித்தப்படுத்திமிருக்கிறீர்?'' என்று விசாரித்தான்.

''ஐம்பதாயிரம் படைகள், இவற்றில் பாதிக்குமேல் புரவிப்படை. யானைப் படையும் இருக்கிறது. இரும்புத் திரையிட்ட ஹௌடாவுடன் கூடிய தங்கள் பட்டத்து யானையும் வருகிறது. அதில் தாங்கள் வரலாம்'' என்று விளக்கினார் மான்சிங்.

''இரும்புக் கவச ஹௌடா எதற்கு? புரவிமீது சென்று நான் போரில் ஈடுபட்டால் என்ன?'' - ஸலீம் சீற்றத்துடன் கேட்டான்.

''உயிருடன் தாங்கள் திரும்ப முடியாது. ராஜபுத்ரர்களை நீங்கள் அறிய மாட்டீர்கள். இந்த ஒரு போர் என்னிஷ்டப்படிதான் நடக்கும்'' என்று கூறியவாறு ஸலீமின் அரண்மனையைவிட்டு வெளியேறினார் ராஜா.

அன்று முதல் படைப்பிரிவுகள் ஆஜ்மீருக்கு வெளியிலிருந்த சமவெளியில் கூடலாயின. அன்று பூராவும் மறுநாளும் ராஜா தமது அரண்மனைக்கே செல்லாமல் படைப் பிரிவுகளை அணிவகுப்பதில் காலம் கழித்தார். மூன்றாவது நாள் காலையில் படைகள் ஆராவலிமலைத் தொடரை நோக்கி நகரத் தயாராக நின்றன. பூர்ண கவசத்துடன் மான்சிங் தமது புரவியில் அமர்ந்திருந்தார். இளவரசனான ஸலீம் பட்டத்து யானையில் ஹௌடாவில் அமர்ந்திருந்தான். அந்த யானையைச் சுற்றி சுமார் இருபது யானைகள் மொகலாய வீரர்களைத் தாங்கி நின்றன. அவனுக்குப் பின்னால் பீரங்கி வண்டிகளும், துப்பாக்கிகள் தாங்கிய



வீரர் படையும் இருந்தது. ராஜா மான்சிங்குக்குப் பின்னால் வேல்களையும் வாட்களையும் மாட்ச்லாக் துப்பாக்கிகளையும் தாங்கிய பெரும்புரவிப்படையும் காலாட்படையும் சித்தமாயிருந்தன.

அந்தப் பெரும்படை புறப்படுவதற்கு முன்பாக, தமது பட்டத்துப் புரவியில் இரு காவலர் உடன்வர அங்குவந்து சேர்ந்த சக்கரவர்த்தி படைகளின் அணிவகுப்பை மகிழ்ச்சியுடன் பார்த்தார். தமது மகன் அமர்ந்திருந்த யானையையும் பார்த்துப் புன்முறுவல் கொண்டார். பிறகு மான்சிங்கிடம் வந்து, ''உன் மருமகனைக் காப்பாற்ற ஏற்பாடு செய்து விட்டாய்'' என்று விஷமமாகக் கூறி, ஸலீம் உட்கார்ந்திருந்த இடத்தையும் கடைக் கண்ணால் பார்த்தார்.

ராஜாமான்சிங் சக்கரவர்த்திக்குத் தலைவணங்கினார். ''இளவரசரை காப்பது என் கடமை'' என்று கூறினார். பிறகு ''புறப்பட உத்தரவா சக்கரவர்த்தி'' என்றும் வினவினார்.

சக்கரவர்த்தி அனுமதியளிக்கும் வகையில் தமது புரவியை பின்னுக்கு நகர்த்தினார். ராஜா மான்சிங் தமது வாளை உறையிலிருந்து உருவி முத்தமிட்டார். பிறகு வாளை உயர்த்திப் புறப்படலாமென்பதற்கு அறிகுறியாக இருபுறமும் ஆட்டினார். அதேசமயத்தில் முரசுகள் ஒலித்தன. மொகலாயர்படை இரும்பு அரண்போல ஒரே சீராக நகர்ந்தது கோமுல்மீர் திசையை நோக்கி.

இந்தப் படை ஆஜ்மீரில் புறப்படுவதற்கு முன்பே ராணா பிரதாபசிம்மன் அதைச் சந்திக்கத் தயாராகி விட்டார். ஹல்திகாட் சமவெளியைச் சூழ்ந்திருந்த மலை உச்சிகளில் பில்ஜாதியார் என்ற ராஜபுத்ர வில்வீரர்களை நிறுத்தினார். மாட்ச்லாக் துப்பாக்கிகளைக்கொண்ட சிறு படையை சமவெளிக்கு வரும் குறுகிய கணவாய்களின் மலைச் சரிவுகளில் நிறுத்தினார். ஜாலா ராஜபுத்ரவம்சத்

தலைவனான மானாவுக்கும் ஒரு படைப்பிரிவை அளித்தார்.

மானா அவர் ஆணையை ஏற்க மறுத்தான். ''ராணா! எனக்கு எந்த படைப் பிரிவும் வேண்டாம். நான் தங்கள் பக்கத்தில் நின்று போராடுவேன்'' என்றான் திட்டமாக.

''எதற்கு'' என்று ராணா வினவினார் சிரித்தவாறு.

''தங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் அதைத் தடுக்க. தங்கள் உயிர் போகுமுன்பு என் உயிர் போய்விட வேண்டும்'' என்றான் மகாவீரனான மானா.

ராணா அவன் தோள்மீது கையைப் போட்டுக்கொண்டு, ''உன்னிஷ்டம் மானா. ஆனால் உன் பதவிக்கு தகுந்த வேலையல்ல என் மெய்க்காவலனாக நீ பணியாற்றுவது'' என்று சொன்னார்.

''அதைவிட உயர்ந்த பதவியை நான் விரும்பவில்லை'' என்றான் மானா.

அதற்குமேல் அவனை வலியுறுத்தவில்லை ராணா. அன்றிரவு போர் ஆலோசனைக்குப் படைத் தலைவர்களை வரவழைத்தார். அவர்களில் ரவிசந்தும் சம்பக்கும் கூட இருக்கவே, ராணா அவ்விருவரையும் நோக்கி, ''உங்கள் இருவரையும் எந்த படைப்பிரிவுக்கும் தலைமை வகிக்க நான் நியமித்ததாக நினைப்பில்லையே'' என்றார்.

''இல்லை. தாங்கள் நியமிக்கவில்லை'' என்றாள் சம்பக்.

''வேறு யார் நியமித்தது?'' என்றுவினவினார்ராணா

''நாங்களே நியமித்துக் கொண்டோம்'' என்றாள் சம்பக்.

''எந்தப் படைக்கு?'' ராணா வியப்புடன் வினவினார்.



''பீரங்கிப் படைக்கு இதயதுல்லா மீண்டும் சில பீரங்கிகளை அனுப்பியிருக்கிறார். மேற்கொண்டு அனுப்ப வசதியில்லை என்றும் செய்தியனுப்பியிருக்கிறார். மொத்தம் ஐம்பது பீரங்கிகள் இருக்கின்றன. இருநூறு மாட்ச்லாக் துப்பாக்கிகள் இருக்கின்றன. ராணா அவர்கள் இன்னும் ஐம்பது வீரர்களைக் கொடுத்தால் போதும்'' என்றான் ரவிசந்த்.

பிரமிக்கும் கண்களால் ராணா ரவிசந்தை நோக்கி ''மீதி இருநூறு பேருக்கு என்ன செய்வதாக உத்தேசம்?'' என்று வினவினார்.

''அக்கம் பக்கத்திலிருக்கும் மலைவாசிகளைச் சேர்த்துப் பீரங்கி பயிற்சி அளித்திருக்கிறேன்''என்றான் ரவிசந்த்.

''எத்தனை நாட்களாக இது நடக்கிறது?'' என்று வினவினார் ராணா.

''ராஜா மான்சிங்கை தாங்கள் அவமானப்படுத்திய தினத்திலிருந்து.ராஜா மான்சிங் அடியுண்ட வேங்கை. நம்மை வேட்டையாடாமல் விடாது. ஆகவே முன்னெச்சரிக்கையாக இதைச் செய்துகொண்டேன். ஹல்திகாட் மலைக்கணவாய்களில் எதிரிப்படை நுழையும்போது மலைச் சரிவுகளிலிருந்து பீரங்கிகள் இயங்கி பெருநாசம் விளைவிக்கும்'' என்று விளக்கினான் ரவிசந்த்.

''அப்படியானால் பில்வகுப்பு ராஜபுத்ர வில்லாளிகளை எங்கு நிறுத்துவது?'' என்று ராணா வினவினார்.

''எங்கு வேண்டுமானாலும் நிறுத்துங்கள். அவர்கள் இல்லாத இடத்தில் நாங்கள் இருப்போம்'' என்றான் ரவிசந்த்.

''இதில் சம்பக் என்ன செய்யப்போகிறாள்?'' என்று ராணா வினவினார், கவலையுடன்.

''அவளைத் தகுந்த பாதுகாப்பில் வைக்கிறேன். நானிருக்கும் குகை யாருக்கும் தெரியாது'' என்றான் ரவிசந்த்.

''ஒருக்காலும் முடியாது. குகையில் நானிருக்க மாட்டேன். போரில் என் புருஷன் பக்கத்திலிருப்பேன்'' என்று சம்பக் பிடிவாதமாகச் சொன்னாள்.

ரவிசந்த் நகைத்தான். ''அதை பிறகு பார்த்துக் கொள்வோம்'' என்ற ரவிசந்த், ''ராணா! நான் கேட்ட ஐம்பது வீரர்கள் எப்பொழுது கிடைப்பார்கள்?'' என்று வினவினான்.

''நாளைக் காலையில் அனுப்புகிறேன்''என்ற ராணா மேற்கொண்டு போர் ஆலோசனையைத் துவங்கி,'' நமக்கு இருக்கும் பாதுகாப்பு கணவாய்கள்தான். ஒரு சமயத்தில் ஒரு வண்டிக்கு மேல் அவற்றுக்குள் வரமுடியாது. அப்படி ஒற்றை வரிசையில் வரும் எதிரி ஆயுதவண்டிகளை நாம் அழிப்போம், மலைச்சரிவுகளிலிருந்து. அப்படியும் எதிரிப் படை எண்களின் பலத்தால் ஹல்திகாட் சமவெளியில் புகுந்தால் ராஜபுத்ர வீரத்தைக் காட்டுவோம்'' என்றார் ராணா.

''எதிரிப் படைகளின் எண்ணிக்கை எத்தனை இருக்கும்?'' என்று ஒரு படைத்தலைவன் கேட்டான்.

''ஐம்பதினாயிரம் என்று கேள்வி'' என்று ஜாலா தலைவனான மானா சொன்னான்.

''நமது படைபலம் இருபத்திரண்டாயிரம். நம்மைப் போல் இரண்டு பங்குக்கு மேலுள்ள படையை நாம் சந்திக்கிறோம்'' என்று ராணா விளக்கினார். மேலும் சொன்



னார்: ''எதிரிகள் படையில் பாதியை நாம் கணவாய்களில் அழித்துவிடமுடியும். அப்புறம் நடக்கும்போரில் படைகள் சம பலத்துடனிருக்கும்'' என்று.

ஆனால் ராணா ஒன்றை மறந்துவிட்டார், எதிரிப் படையை அணிவகுத்து நடத்துவது ராஜாமான்சிங் என்பதை. ராணாவின் ஏற்பாட்டைக் குலைக்க மான்சிங் வேறு ஒரு சூழ்ச்சியைச் செய்திருந்தார். ஹல்திகாட் சமவெளிக்கு முன்புள்ள கணவாய்களுக்கு முன்பே படைகளை நிறுத்திப் பாசறை அமைத்தார். இரண்டு நாட்கள் இளைப்பாறவும் அனுமதித்தார். மூன்றாவது நாள் படைகள் இயங்கிய போது அவை கணவாய்கள் மூலம் மட்டும் வரவில்லை.

# 43. இரவில் வந்த பெண்!

மூன்றாவது நாள் மொகலாயர்படைகளை ஹல்திகாட் மீது ஏவுமுன்பு ராஜாமான்சிங் தன்னந்தனியாகதமது புரவியில் புறப்பட்டு ஹல்திகாட்டை அடையக்கூடிய மார்க்கங்களை கவனிக்க மலையோரமாகத் திரிந்தார், ஒரு நாள் முழுவதும். ராஜபுத்ரனான மான்சிங்குக்கு ஹல்திகாட் சமவெளியும் புதிதல்ல. அதற்குச் செல்லும் கணவாய்களும் புதிதல்ல. ஹல்திகாட் ஆராவலியின் அந்தப் பகுதி உச்சியின் கழுத்தில் விரிந்து கிடப்பதையும், அதற்கு மேலும் கீழும் பக்கத்திலும் உள்ள மலை உச்சிகளிலும் கணவாய்களுக்கு மேலுள்ள சரிவுகளிலும் ராஜபுத்ர வீரர்கள் தன்னை எதிர்க்கவும் அழிக்கவும் நிறுத்தப்பட்டிருப்பதையும் கவனித்து நேராகக் கணவாய்கள் மூலம் சென்றால் அழிவு அதிகமாயிருக்குமென்ற தீர்மானத்துக்கு வந்தார். ஆகவே அழிவைக் குறைக்க ஒரு முறையையும் வகுத்துக்கொண்டார். அதை தனக்கும் சலீமுக்கும் அடுத்தபடி படைத் தலைவனான மகபத்கானிடமும் சொன்னார். ''மகபத்கான்! உனக்கு மிகவும் ஆபத்தான பணியைக் கொடுக்கப் போகிறேன்''என்று ராஜா மான்சிங் சொன்னதும், வீரனான மகபத்கான் சிறிதும் அஞ்சினானில்லை.

''ராஜா! கட்டளையிடுங்கள். மகபத்கான் என்றும் ஆபத்தைக் கண்டு அஞ்சியவனல்ல'' என்று கூறி சிறிது நகைக்கவும் செய்தான்.

அஞ்சா நெஞ்சனான மகபத்கானை மொகலாய சாம்ராஜ்ய மந்திரி பெருமையுடன் பார்த்தார். ''மகபத்கான்! உன் துணிவிலோ வீரத்திலோ எனக்குச் சந்தேகம் கிடை



யாது. ஆனால் உன்னை கிட்டத்தட்ட மரணத்துக்கு அனுப்பப்போகிறேன்'' என்றார், அவர் குரலில் கவலை துலங்க.

''போரில் மரணம் எதிர்பார்க்கத்தக்கது ராஜா'' என்றான் மகபத்கான்.

ராஜா மான்சிங் அதற்கு மேல் தமது திட்டத்தை எடுத்துச் சொன்னார். 'மகபத்! ஹல்திகாட்டை அடைய மூன்றே கணவாய்கள் இருக்கின்றன. அவற்றைப் பக்கத்து மலைச்சரிவிலுள்ள அருவிகள் சதா நனைத்துக்கொண்டிருக்கின்றன. கணவாய்கள் அகலமில்லாததால் வண்டிகள் ஒற்றைச் சாரியில்தான் போகமுடியும். அந்த கணவாய்களை மகாவீரர்களான ராஜபுத்ரர்கள்காத்துநிற்கிறார்கள். அந்த மூன்று கணவாய்களில்நடுக்கணவாய்வழியாக நமது வீரர்களைப் பீரங்கி வண்டிகள் மூலம் நீ அழைத்துச் செல்கிறாய். மற்ற இரண்டு கணவாய்களில் நமது புரவி, யானைப் படைகளின் ஒரு சிறு பகுதி வரும். இந்தக் கணவாய்களுக்கு அப்புறமும் ஏற இரண்டு பக்க வழிகள் கஷ்டமான வழிகள் இருக்கின்றன. அந்த வழி ஒன்றில் நானும் இன்னொரு வழியில் இளைய நவாபும் பெரும்படைகளுடன் வருவோம். ஹல்திகாட்டில் திரண்டிருக்கும் ராணாவின் படையைத் தாக்குவோம். அதற்குள் கணவாய் வண்டிகளில் அழிந்தது போக மற்றவை மூன்றுபக்கங்களிலும் ஏறட்டும். பீரங்கிகளைச் சுட்டுக் கொண்டே வரட்டும். இப்படி மூன்று புறமும் தாக்கப்படும் ஹல்திகாட் நம்மால் வெகு சீக்கிரம் வளைக்கப்படும். அப்புறம் போரின் முடிவு அவரவர் பலத்தையும் வீரத்தையும் பொறுத்தது'' என்று விளக்கினார்.

ராஜாமான்சிங் விவரித்த போர்முறையைக் கேட்ட மகபத்கான் பிரமித்தான். ''ராஜா! தாங்களில்லா

விட்டால் இந்தப் போரில் நாங்கள் பிழைக்க முடியாது'' என்று கூறினான்.

''அப்படியானால் படைகளை மூன்று கூறுகளாகப் பிரித்துவிடு. நாளைக் காலையில் நாம் மலை ஏறுகிறோம்'' என்றார் மான்சிங். அத்துடன் மகபத்கான் போனவுடன் தமது கூடார ஆசனத்தில் தலையை இருகைகளாலும் பிடித்துக்கொண்டு உட்கார்ந்து விட்டார். என்றும் நீரை உகுக்காத அவர் கண்கள் அன்று நீரை உகுத்தன. ''நானே என் குலத்தின் கோடாரிக் காம்பாகி விட்டேன். பிரதாப்! இதற்கு நீதான் பொறுப்பாளி. அன்று உதய சாகரத்தின் கரையில் என்னை ஏன் பலர் முன்பு அவமானப் படுத்தினாய்?'' என்றும் சற்று இரைந்தே கேட்டார். அப்பொழுது அந்தக் கூடார மூலையில் ஏதோ ஒரு உருவம் மறைந்து நிற்பதைக் கவனித்து தமது வாளின்மீது கையை வைத்தார்.

கூடார மூலையில் ஒரு உருவம் உடல் பூராவையும் திரையிட்டு நின்றிருந்தது. ''தங்களுக்கு ஆபத்து எதுமில்லை. வாளை எடுக்கவேண்டாம்'' என்ற தீனமான குரலும் கேட்டது.

அந்தக் குரலைக் கேட்ட ராஜாமான்சிங் தமது ஆசனத்திலிருந்து துள்ளி எழுந்து கூடாரத்து வாயில் சேலையை எடுத்து தொங்கவிட்டு, உள்ளே யாரும் பார்க்க முடியாதபடி மறைத்தார். பிறகு தலையை மாத்திரம் வெளியே காட்டி யாரையும் தமது கூடாரத்துக்குள் அனுமதிக்க வேண்டாமென்று காவலருக்கு கண்டிப்பாக உத்தரவிட்டார். பிறகு வேகமாக உள்ளே வந்து மூலையிலிருந்த அந்த உருவத்தை இறுக அணைத்துக்கொண்டு அதன் முக்காட்டையும் விலக்கி முகத்தைப் பார்த்து, நெற்றியில் முத்தமும் இட்டார். ''சம்பக்! இங்கு எதற்காக வந்தாய் இந்த நேரத்தில்? எப்படி வந்தாய்?'' என்று பதட்டத்துடன் வினவினார்.



''எனது தந்தையைக் கடைசி முறையாகப் பார்க்க வந்தேன். அதற்காக மொகலாயப் பெண்களைப்போல் உடல் முழுவதையும் மறைத்து உடையணிந்தேன்'' என்றாள் சம்பக்.

மான்சிங் தமது கண்களில் ததும்பிய நீரைத் துடைத்துக் கொண்டார். ''மகளே! நீ தனித்து வந்தது ராஜபுத்ரிகளின் வீரத்தைக் காட்டுகிறது. கடைசி முறையாகப் பார்க்கவந்தேனென்கிறாயே. இந்தப் போரில்நான் இறந்துவிடுவேனென்று நினைக்கிறாயா?'' என்று வினவினார்.

''இல்லை. நீங்கள் இறக்கமாட்டீர்கள்'' என்றாள் சம்பக்.

''வேறு யார் இறப்பார்கள் சம்பக்?'' என்று மான்சிங் கேட்டார் விவரம் புரியாமல்.

''நான்''-சர்வ சாதாரணமாக இதைச் சொன்னாள் சம்பக்.

''நீயா?''- திகிலுடன் கேட்டார் மான்சிங்.

''ஆம். பீரங்கிப்படைகளின் ஒரு பகுதிக்கு நானும் எனது கணவரும் தலைமை வகிக்கிறோம். ஒன்று இந்தப் போரில் இருவரும் போய்விடுவோம். இருவரும் போனால் உங்கள் மகள் அழிந்து போவாள். அவர் மட்டும் போனால் உங்கள் மகள் விதவையாவாள். ஆனால் ராஜபுதனத்தில் ஜோஹர் என்ற முறை இருக்கிறது...'' என்ற சம்பக் வார்த்தையை முடிக்கவில்லை.

மான்சிங் திகைத்து நின்றார். அவள் சொல்வதில் நூற்றுக்கு நூறு உண்மை என்பது இவருக்குத் தெரிந்தே இருந்தது. ஜோஹர் என்ற தீக்குளிக்கும் முறை மற்ற சாதி

களுக்கு பயங்கரமானது. ஆனால் ராஜபுத்ரிகளுக்கு சகஜமானது, இன்பமானது என்பதை அவர் உணர்ந்திருந்ததால் அவர் ஏதும் சொல்லமுடியாமல் தவித்தார்.

''மகளே! இதிலிருந்து நீ விலக வேறு வழியில்லையா?'' என்று கேட்டார் சோகக் குரலில்.

''இருக்கிறது'' என்றாள் சம்பக்.

''சொல் மகளே''-ஆவலுடன் கேட்டார் மான்சிங்.

''நீங்கள் உங்கள் படையை அழைத்துக்கொண்டு திரும்பிச் செல்வது. அல்லது...''

''அல்லது?''

''ராணா பக்கம் திரும்புவது.''

ராஜா மான்சிங் நகைத்தார். ''மகளே! நீ முதலில் சொன்னது எனது கோழைத்தனத்தைக் காட்டும். இரண்டாவது, அக்பரின் உப்பைத் தின்றதற்கு துரோகத்தைக் காட்டும்'' என்றார் நகைப்பின் ஊடே.

சம்பக்கின் கண்கள் சீறின. ''அப்பா! அக்பரே ராஜபுதனத்தின் உப்பைத் தானே சாப்பிடுகிறார். உங்கள் உப்பும் அதில் சேர்ந்ததுதானே? அது எப்படி ராஜத் துரோகம் ஆகும்?'' என்றாள் சீற்றத்துடன்.

ராஜா மான்சிங் சிறிது சிந்தித்தார். கூடாரத்தில் உலாவினார். பிறகு மகளின் முக்காட்டை எடுத்து, அவள் தலையிலிருந்து கால்வரை மறைத்தார். ''போய் வா மகளே! கடைசியாக என்னைப் பார்க்க வந்ததை நாளை போரில் நான் இறந்தால் நினைத்துக்கொண்டே இறப்பேன். ராஜபுதனத்தின் வீரப்பெண் நீ. ராணாவைப் போல் நீயும் ராஜபுதனத்தின் மானத்தைக் காக்கப் பிறந்த



வள். ஆனால் மான்சிங் அக்பருக்குச் செய்த பிரமாணத்தை மீறமாட்டான்'' என்று கூறிவிட்டு, கூடார வாயில் திரையைத் திறந்துவிட்டார். திறந்த பின்பு வெளியில் வந்து அவளை காவல் வீரர் அனைவரும் பார்க்கும்படி முக்காட்டின் கன்னத்தில் முத்தமிட்டார். அவள் புரவியில் ஏறியதும் கையை ஆட்டினார்.

சம்பக்கின் புரவி நகர்ந்தது. அவளை யாரும் நிறுத்தவில்லை. வீரர்களில் இருவர் மட்டும் பேசிக்கொண்டனர். ''ராஜாவுக்கு இன்னும் பெண்பித்துபோகவில்லை''என்று. எட்ட இருந்த இன்னொரு கூடாரத்திலிருந்த மகபத்கான் மட்டும் சம்பக் புரவி போவதை கவனித்துக்கொண்டு நின்றான். அவன் மனத்தில் பெரும் சந்தேகம் உதயமானதால் மெல்லக் கூடாரத்தின் பின்புறமிருந்த தனது புரவியை அவிழ்த்து அதன்மீது ஏறிக்கொண்டு சம்பக்கை தூரத்திலேயே பின்தொடர்ந்தான். பின்னால் ஒரு புரவி வரும் சத்தம் சம்பக்கின் செவிகளில் நன்றாக விழுந்தது. இருப்பினும் அதை கவனியாதது போலவே அவள் தனது புரவியை நடத்தினாள். முதலில் சலீமின் கூடாரமிருந்த இடத்திற்குச் சென்று, அங்கிருந்த காவலரை ''நவாபை பார்க்கலாமா?''என்று வினவினாள்.

''முடியாது. நவாப் உறங்கிவிட்டார். நாளைக் காலையில் வா'' என்று காவலர் கூறவே, தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு தனது புரவியை நிதானமாகவே நடத்தினாள். ராஜா மான்சிங்கின் கூடாரமும், சலீமின் கூடாரமும் மொகலாய படைகளின் முன்னணியில் இருந்ததால், அதன் எதிரே மலைக்கணவாய்கள் பயங்கரமாகத் தெரிந்தன. அந்த இரவில் கூட மலைச்சரிவுகளில் ஏதோ ஓரிரு இடங்களிலிருந்து விளக்குகள் லேசாக ஆடி ஆடி மறைந்தன. அவற்றை அடையாளம் வைத்துக்கொண்டு நடுக்கணவாயை நோக்கிச் சென்றாள் சம்பக்.

அவன் கணவாயை நெருங்குமுன்பு மகபத்கான் தனது புரவியை வேகமாகச் செலுத்தி அவள் புரவிக்கு முன்வந்து மறித்து, ''நீ யார்? எங்கு போகிறாய்?'' என்று வினவினான்.

''யாராயிருந்தால் உனக்கென்ன?''-சம்பக்கின் குரலில் சீற்றமிருந்தது.

''நான் மகபத்கான்'' என்றான் மகபத்.

''நீ அக்பராயிருந்தாலும் கவலையில்லை'' என்றாள் சம்பக்.

அதைக் கேட்டதும் கோபத்தின் வசப்பட்ட மகபத் தனது வாளை உருவி அவளது முகத்திரையைக் கிழிக்க முற்பட்டான். அவன் வாள் உறையிலிருந்து முக்கால்வாசி கிளம்பு முன்பே அவன் மண்டை பலமான வாளின் பிடியால் தாக்கப்பட்டது. சுரணையற்று கீழே விழுந்தான் மகபத்.

அவன் மண்டையிலடித்த மான்சிங் மகளை நோக்கி 'நீ கணவாயில் நுழைந்துவிடு. தாமதிக்காதே'' என்றார்.

சம்பக் தந்தையை நன்றியும் பாசமும் கலந்த கண்களால் நோக்கினாள். பிறகு வினாடியும் தாமதிக்காமல் கணவாயில் மறைந்தாள்.

இந்த நாடகத்திற்கு மூன்றாவது சாட்சியும் இருந்தது. சம்பக் சலீமின் கூடாரத்தில் காவலரை விசாரித்தபோதே விழித்துக்கொண்ட சலீம், தனது கூடார வாயிலுக்கு வந்து அங்கிருந்தே சகலத்தையும் கவனித்துக் கொண்டிருந்தான்.

# 44. சலீமின் துரோகம்!

சம்பக் தமது கூடாரத்தை விட்டு வெளியேறிய பின்பும் அவள் மலைக் கணவாய்க்குள் எந்தவித ஆபத்துமின்றி ஏறுகிறாளா என்பதை கூடாரவாயிலின் திரைமறைவிலிருந்தே கவனித்துக் கொண்டிருந்தார் ராஜா மான்சிங். சம்பக் சலீமின் கூடாரத்தருகில் சென்று ஏதோ விசாரித்ததையும், பிறகு புரவியை மேலே நடத்திவிட்டதையும் கவனித்து, அவள் தந்திரத்தையும் துணிவையும் மனத்துக்குள் வியந்து கொண்டார். சலீமின் கூடாரக் காவலரை சம்பக் விசாரித்தபிறகு அவன் இளையநவாபுக்கு வேண்டியவனென்றே காவலர்கள் நினைப்பார்களென்றும், ஆகையால் சந்தேகம் எதும் ஏற்படாமல் அவள் போய்விடலாமென்றும் நினைத்து உள்ளூர மகிழ்ச்சி கொண்டார். ஆனால் சலீமின் கூடாரத்திலிருந்து நான்கு கூடாரங்களை அவள் தாண்டிய பிறகு மகபத்கான் அவளைத் தொடர்வதைக் கண்டு தாமும் ஒரு புரவி மீது ஏறிக்கொண்டு அவர்களிருவரையும் தொடர்ந்தார். கணவாய்க்கு முன்பாக மகபத்கான் அவளை மறித்ததும் பின்னால் சென்ற மான்சிங் அவன் மண்டையை வாளின் பிடியாலடித்து வீழ்த்தினார். ''தாமதிக்காதே சம்பக்! கணவாய்க்குள் நுழைந்துவிடு'' என்று துரிதமும் படுத்த, சம்பக் வேகமாகக் கணவாயின் இருட்டில் மறைந்து விட்டாள்.

அவளை இனி யாரும் தொடரமுடியாது என்று தீர்மானித்துக் கொண்ட மான்சிங், தமது புரவியிலிருந்து கீழே குதித்து மகபத்கான் நிலையைப் பரிசோதித்தார். வாள் பிடியை மிகுந்த சாமர்த்தியமாக மண்டையின் பக்கவாட்டில் உபயோகப்படுத்தியிருந்ததால் பெரும் காயம் ஏதும்

ஏற்படவில்லை. மொகலாய உபதளபதி அதிர்ச்சியால் மயக்கம் மட்டுமே அடைந்திருந்ததால் அவனைத் தூக்கி அவனது குதிரையின் முதுகில் குறுக்காகப் படுக்க வைத்தார்.* பிறகு அந்தப் புரவியின் கடிவாளத்தைப் பிடித்து இழுத்துக்கொண்டு கால்நடையாகவே சென்றார். மகபத்கான் கூடாரத்தை நோக்கி அவரது புரவியும் ஒரே சீரான நடையுடன் அவரை பின்தொடர்ந்தது.

மகபத்கான் கூடாரத்தை அடைந்ததும் காவலரிடம் அவனை ஒப்படைத்து ''ஒன்றுமில்லை, மயக்கமாயிருக்கிறார். உள்ளே அவரைப் படுக்கவைத்து சிறிது மது கொடுங்கள், விழித்துக் கொள்வார்'' என்று கூறிவிட்டு, தமது புரவி மீது ஏறி தமது கூடாரத்தை நோக்கி புரவியை நடக்கவிட்டார். இடையே இருந்த கூடாரவாயிலில் நின்றிருந்த இளைய நவாப் சலீம் ''யார் ராஜாவா! எங்கே இந்த இரவில் போய் வருகிறீர்கள்?'' என்று சாதாரணமாக விசாரித்தான்.

ராஜா மான்சிங் முகத்தில் எந்தவிதப் பீதியையோ சலனத்தையோ காட்டாமல் புரவியிலிருந்து கீழே இறங்கி ''ஒரு சிறு கடமையை நிறைவேற்ற வேண்டியிருந்தது; அதை முன்னிட்டுப் போனேன். இப்பொழுது திரும்புகிறேன். இந்த வேளையில் நீங்கள் விழித்திருப்பீர்கள் என்பது தெரியாது'' என்று கூறினார்.

ராஜாவின் தைரியத்தை சலீம் பெரிதும் சிலாகித்தான் மனத்திற்குள். ''அந்த முக்கிய காரியம் என்னவோ?'' என்று சாதாரணமாகக் கேட்பதுபோல் கேட்டான்.

''ஒரு பெண்ணைக் காப்பாற்ற வேண்டியிருந்தது'' என்றார் ராஜா திடமான குரலில்.

சலீமின் இதழ்களில் இளநகை விரிந்தது. ''யாரோ ஒரு பெண் சற்று முன்பு இங்கே வந்து என்னைப்பார்க்க இஷ்டப்பட்டாளாம். காவலன் முட்டாள்தனமாக நான்



உறங்குவதாகக் கூறிவிட்டான். ஒரு வேளை அந்தப் பெண்ணாக இருக்குமோ நீங்கள் கூறும் பெண்'' என்று சலீம் வினவினான்.

ராஜாமான்சிங் சலீமின் புன்னகையைக் கவனித்தார். அவன் சொற்களில் தொனித்த விஷமத்தையும், உள்ளத்தில் உலாவிய கல்மஷத்தையும் கவனித்தார். இருப்பினும் எதுமறியாதவர்போல் பதில் சொன்னார். ''ஆம் அவளே தான்'' என்று.

''அவள் என் என்னை விசாரித்தாள்''என்று வினவினான் சலீம் ஏளனமாக.

''தங்கள் அழகை ஏற்கனவே பார்த்திருக்கிறாள். மீண்டும் ஒருமுறை பார்க்க இஷ்டப்பட்டிருக்கலாம்'' என்று மான்சிங் சொன்னார்.

''அப்படியா!'' சலீமின் கேள்வியில் வியப்புதெரிந்தது.

''ஆம்''

''எங்கு பார்த்திருப்பாள்?''

''ஏதோ அருவிக்கரைப் பக்கத்தில் என்று சொன்னாள்.''

''அருவிக்கரையா?'' என்று கேட்ட சலீமின் குரலில் சினம் தெரிந்தது. ராஜா மான்சிங் பழைய சம்பவத்தைச் சுட்டிக்காட்டி தன்னை கேலி செய்கிறார் என்பதைப்புரிந்து கொண்டதால் ''எந்த அருவிக்கரை?'' என்று விசாரித்தான் கபடத்தனமாக.

''எனக்கெப்படித் தெரியும்?'' என்று ராஜா கேட்டார்.

''அவள் சொல்லவில்லையா?''

''இல்லை. இளைய நவாப்பைப் பற்றிய விவரங்களை நான் விசாரிப்பதும் முறையல்ல.''

''அதிருக்கட்டும். உங்களை எப்பொழுது சந்தித்தான்?''

''சற்று முன்பு எனது கூடாரத்தில்.''

''தங்களைச் சந்திப்பானேன்?''

''உங்கள் கூடாரத்துக்கு வழிகேட்க'' என்று கூறி லேசாக நகைத்தார் மான்சிங்.

இதைக் கேட்டதும் சலீமின் சினம் உச்ச நிலையை அடைந்தது. ''ராஜா! அவன் உங்கள் மகன். நாளைப் போரில் எங்களைக் காட்டிக்கொடுக்க உம்மிடம் மன்றாட வந்தான். இதை நேராக ஒப்புக் கொள்வதுதானே?'' என்ற சலீமின் குரலில் கோபம், அவநம்பிக்கை இரண்டும் கலந்து ஒலித்தன.

ராஜா மேலும்நகைத்தார். ''தங்களுக்குத் தெரிந்ததை ஒப்புக்கொள்ள அவசியமென்ன?'' என்று கேட்டார்.

''அப்படியானால் நீர் எங்கள் துரோகியென்று ஒப்புக் கொள்கிறீர்களா?'' என்று உஷ்ணத்துடன் வினவினான் சலீம்.

ராஜாவின் முகத்தில் சினம் பரிபூர்ணமாகப் பரிமளித்தது. ''சலீம்! நான் உன்னிடம் எதையும் ஒப்புக்கொள்ள அவசியமில்லை. வேண்டுமானால் படையெடுப்பைஇரண்டு நாள் தாமதிப்போம். நீ உன் தந்தைக்கு எழுதி படைத் தலைமைப் பதவியை என்னிடமிருந்து மாற்றிக்கொள்'' என்று பரம உஷ்ணத்துடன் கூறிவிட்டு மீண்டும் புரவியிலேறிக்கொண்டு தமது கூடாரத்தை நோக்கிச் சென்றுவிட்டார். உள்ளே சென்று சிந்தனையுடன் படுக்கையில் விழவும் செய்தார்.

அடுத்தநாள் நடக்கப் போவது அவருக்கு நன்றாகத் தெரிந்தே இருந்தது. மேவார் ராணா முறியடிக்கப்படுவார். மேவார்மீது இனி மொகலாயர் கொடி பறக்கும்.



ஏராளமான ராஜபுத்ரர்கள் கொல்லப்படுவார்கள். ராஜபுத்ர ஸ்திரீகள் அழிந்து போவார்கள். இப்படியெல்லாம் சிந்தித்தார். அவர் மனம் பெரும் போராட்டத்தில் இருந்தது. இத்தனையிலும் ராணா தன்னை அவமானப்படுத்திய நிகழ்ச்சி மட்டும் மேலோங்கி நின்றதால் அடுத்த நாள் போருக்கு, அதனால் விளையும் அழிவுக்கு தமது மனத்தை தயார் செய்து கொண்டார்.

இளைய நவாப் ஸலீமும் சிந்தை நொந்து தனது படுக்கையில் கிடந்தான். தானிருக்க மான்சிங்கை தனது தந்தை படையை நடத்த, போரை நடத்த அனுமதித்தது பெரும் அவமானமாயிருந்தது ஸலீமுக்கு. ''மான்சிங்! இந்தப் போரிலோ பிறகோ உன்னை ஒழித்துக்காட்டுகிறேன்'' என்று தனக்குத்தானே சொல்லியும் கொண்டான். அதன் விளைவாக கைகளைத் தட்டி வாயிலில் இருந்த ஒரு காவலனை வரவழைத்து ''மகபத்கானை அழைத்து வா'' என்று உத்தரவிட்டான். சில விநாடிகளில் மகபத்கானும் வந்து சேரவே, அவனை ஒரு ஆசனத்தில் உட்கார வைத்து, ''மகபத்! உன்னை மண்டையில் அடித்தது யார் தெரியுமா?'' என்று வினவினான்.

''தெரியும். ராஜாமான்சிங், தங்கள் மாமா'' என்றான் மகபத்கான் எரிச்சலுடன்.

''உன்னை அடித்ததற்கு காரணம் தெரியுமா?'' என்று ஸலீம் படுக்கையில் படுத்தபடியே வினவினான்.

''தெரியும். அவர் ஆசைநாயகியைப் பின் தொடர்ந்தேன். தடுக்க முயன்றேன். அதனால் அடித்திருக்க வேண்டும்'' என்றான் மகபத்.

ஸலீம் படுக்கையில் எழுந்து உட்கார்ந்து, ''முட்டாள்! அவள் ராஜாவின் ஆசைநாயகியல்ல. அவரது மகள் சப்பக்'' என்று விளக்கினான்.

இதைக்கேட்டு பிரமித்தான் மகபத்கான். ''அவள் ராணாவின் படையுடனல்லவா இருக்கவேண்டும்?'' என்று குரலில் பிரமிப்பு துலங்க வினவினான்.

''ஆம். அங்குதானிருக்கிறாள். நாளை போர் துவங்கப் போவதால் தந்தையை சந்திக்க வந்திருக்கிறாள்'' என்றான் ஸலீம்.

''நல்ல துணிவுக்காரி'' மகபத்கானின் குரலில் மரியாதை தெரிந்தது.

''தந்திரக்காரியும்கூட'' என்று மகபத்கான் பேச்சுக்கு சுருதி கூட்டினான் ஸலீம்.

''அப்படித்தானிருக்க வேண்டும்'' என்று மகபத்கானும் ஒப்புக்கொண்டான்.

ஸலீம் எழுந்து கூடாரத்தரையில் உலாவினான், குறுக்கும் நெடுக்குமாக. பிறகு சட்டென்று திரும்பி ''ராஜாவிடம் ஏதோ போர் சம்பந்தமாகப் பேசத்தான் வந்திருக்கிறாள்...'' என்று துவங்கினான் ஸலீம்.

இதற்கு பதில் சொல்லவில்லை மகபத்கான். ''ராஜா மான்சிங் ஆயிரம் இருந்தாலும் ராஜபுத்ரர். ராணாவுக்கு விட்டுக் கொடுப்பதில் அவருக்கு ஆர்வமிருந்தால் தவறாகாது. அதை வலியுறுத்த சம்பக் ஒருவேளை வந்திருப்பாளோ?'' என்று ஸலீமே கூறினான்.

மகபத்கான் அதற்கும் பேசாததால் ''ஏன்? என் கருத்தில் உனக்கு ஒப்புதல் இல்லையா?'' என்று வினவினான்.

''நவாப்! என்னை மன்னிக்க வேண்டும். ராஜா மான்சிங் உங்கள் மாமா. நீண்ட நாளாக மொகலாயருக்கு சேவை செய்து வருகிறார். அப்படியிருக்க அவரைப்பற்றி நான் என்ன அபிப்பிராயம் கூறமுடியும்?'' என்று கேட்டான்.



ஸலீம் சிந்தித்தான். மகபத்கான் மிகுந்த நாணயஸ்தன், மகாவீரன் என்பது தெரிந்ததால், ''மகபத்! போர் என்பது யாரை விட்டு வைக்கும், யாரை விழுங்கும் என்பதைத் திட்டமாகச் சொல்ல முடியாது'' என்று தந்திரமாகப் பேசினான்.

''இத்தனை ஆண்டுகளில் பல போர்கள் நடந்திருக்கின்றன. அவை ராஜாவை விட்டுத்தானே வைத்திருக்கின்றன?'' என்று மகபத்கான் கேட்டான்.

''அந்தப் போர்கள் வேறு. இந்தப் போர் ராஜபுதனத்தின் கௌரவத்தைப் பற்றியது. இதில் ஒருவேளை ராஜா சற்று அசிரத்தை காட்டலாம்'' என்றான் ஸலீம் தணிந்த குரலில்.

எதையும் மனம் விட்டுப் பேசும் சுபாவமுள்ள மகபத்கான் ''ராஜா துரோகம் செய்வாரென்று கருதுகிறீர்களா?'' என்று வினவினான் நேரடியாக.

ஸலீமின் கண்கள் மகபத்கானைக் கூர்ந்து நோக்கின. ''துரோகம் செய்வாரென்று நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அப்படி ஏதாவது செய்தால், அவர் பதவியை நாம் பார்க்கக்கூடாது'' என்றான் ஸலீம் உதடுகளை கடினமாக மடித்து, பற்களால் கடித்து.

மகபத்கான் ஸலீமை அச்சமின்றி நோக்கினான். ''தங்கள் கட்டளை என்ன நவாப்? தெளிவாகச் சொல்லுங்கள்'' என்றான்.

இளைய நவாபின் கண்கள் மகபத்கான் கண்களுடன் கலந்தன. ''நாளை போரிலிருந்து ராஜா திரும்பகூடாது'' என்றான் ஸலீம் உஷ்ணமாக.

''அதாவது...?'' என்று இழுத்தான் மகபத்கான்.

''சமயம் பார்த்து ராஜாவைத் தீர்த்துவிடு'' என்றான் ஸலீம்.

19413
3492936

# 45. மான்சிங்கின் போர்த் திட்டம்!

ஸலீமின் விபரீதமான உத்தரவைக் கேட்டு திகைப் படைந்த மகபத்கான் சில விநாடிகள் பேசாமலே ஆசனத் தில் உட்கார்ந்திருந்தான். ''போர்களில் ஆபத்து நேரிடு வதும் மரணமும் சகஜம். ஆனால் மான்சிங் போன்ற பெரிய படைத்தலைவரை நான் கொன்றதாகத்தெரிந்தால் தங்கள் தந்தை என்னை என்ன செய்வாரென்று தங்களுக் குத் தெரியுமா?'' என்று வினவினான் அச்சம் கலந்த குரலில்.

''தெரிய அவசியமென்ன?'' என்று ஸலீம் கேட்டான்.

''நான் அவரை நோக்கிக் குறுவாளையோ வேலையோ எறிந்தாலோ, துப்பாக்கியால் சுட்டாலோ பக்கத்திலிருக்கும் வீரர்கள் பார்க்க மாட்டார்களா?''என்று கேட்டான் மகபத்கான்.

''பார்க்கட்டும். அதனாலென்ன? யாரையோ கொல்ல நினைத்தாய், குறிதவறுவது சகஜம்,அதுவும் போர்mும்முர மாக நெருங்கி நடக்கும் சமயத்தில். வீரர்கள் எதிரிகளைக் கவனிப்பார்களே தவிர உன்னை கவனிக்கமாட்டார்கள்'' என்று இளைய நவாப் சுட்டிக்காட்டி, ''மகபத்கான்!துணி வில் நிகரற்றவனான நீயே இப்படி அச்சப்படுவது விந்தை யாயிருக்கிறது'' என்றும் சொன்னான். ''ஒருவேளை...'' என்று சற்று சொற்களை இழுக்கவும் செய்தான் முடிவில்.

''ஒருவேளை?'' —மகபத்கான் சந்தேகக் குரலில் கேட்டான்.



''உனக்கு இதில் இஷ்டமில்லையோ என்னவோ? நாளைக்கு ராஜாவின் தயவு உனக்குத் தேவையாயிருக் கலாம்.'' என்றான் இளைய நவாப் ஸலீம்.

மகபத்கான் விஷயத்தைப் புரிந்து கொண்டான். இளைய நவாப் பெரிய தந்திரக்காரனென்றும், தேவை யானால் தன்னையும் பலிகொடுக்கத் தயங்கமாட்டானென் றும் புரிந்து கொண்டான். ஆகவே பெருமூச்சுவிட்டு ''சரி நவாப்! உங்கள் கட்டளை நிறைவேறும். ஆனால் அதிலி ருந்து எனக்கு எந்தத் தீங்கும் வராமல் தங்கள் தந்தை யிடமிருந்து தாங்கள்தான் காக்க வேண்டும்'' என்று கூறி விட்டு ஸலீமின் கூடாரத்தைவிட்டு வெளியேறி தனது கூடாரத்துக்கு வந்து சேர்ந்தான். ஆனால் படுக்கவில்லை. மறுநாள் துவங்கவிருக்கும் போருக்கு தன்னைத் தயார் செய்து கொண்டான். தனது மாட்ச்லாக் துப்பாக்கியை எடுத்துச் சரிபார்த்தும் கொண்டான்.

ஆனால் மறுநாளும், அதற்கு மறுநாளுங்கூடப் போர் துவங்கவில்லை. ராஜா மான்சிங் மட்டும் தனது புரவியில் படைகளைப் பார்வையிடுவதிலும், அவற்றைப் பிரித்து போருக்கு சித்தப்படுத்துவதிலும் காலம் கழித்தார். ஒரு நாள் காத்திருந்த ஸலீம் மறுநாள் தானாகவே மான்சிங் கூடாரத்துக்கு அதிகாலையில் வந்து ''ஏன் படைகள் இன்னும் நகரவில்லை?'' என்று வினவினான்.

''நான் உத்தரவிடவில்லை'' என்றுமான்சிங் ஸலீமின் முகத்தைப் பார்க்காமல் தமது வாளைக் கூர்பார்த்துக் கொண்டே சொன்னார்.

''ஏன் உத்தரவிடவில்லை?'' என்று ஸலீம் கோபத் துடன் கேட்டான்.

''உத்தரவிட சமயம் வரவில்லை.'' — அலட்சியமாகப் பேசினார் மான்சிங். ஸலீமின் முகத்தில் சினம் பொங்கி வழிந்தது. ''சமயம் எப்பொழுது வருமோ?'' என்று கேட்டான் குரலில் கோபம் மிதமிஞ்சி ஒலிக்க.

''சக்கரவர்த்தியிடமிருந்து உத்தரவு எப்பொழுது வருமோ அப்பொழுது சமயமும் வரும்.'' என்ற ராஜா அடுத்து தனது துப்பாக்கியை எடுத்து சரிபார்த்தார்.

''நான் நிற்கிறேன்'' என்று சுட்டிக்காட்டினான் ஸலீம் உஷ்ணத்துடன்.

''உட்காருங்கள் இளைய நவாப்'' என்று மருமகனை மரியாதையாக அழைத்து ஒரு ஆசனத்தையும் சுட்டிக் காட்டினார் ராஜா. பிறகு அங்கு ஸலீம் இருப்பதாகவே நினைக்காமல் தமது ஆயுதங்களை ஒவ்வொன்றாக பரிசோதிக்க முற்பட்டார்.

அவர் தன்னிடம் காட்டிய அலட்சியத்தை, அவமானத்தைச் சகிக்க முடியாமல் சட்டென்று அவர் கூடாரத்தை விட்டு வெளியேறினான் ஸலீம். அன்றைக்கு மறுநாள் காலை ஸலீம் கூடாரவாயிலில் நின்று கொண்டிருக்கையில் ராஜா மான்சிங்கின் கூடாரத்தின் முன்பாக ஒரு புரவி வீரன் வந்து இறங்குவதையும் அவசரமாக உள்ளே நுழைந்ததையும் கவனித்தான். சிறிது நேரத்திற்கெல்லாம் அதே வீரன் தனது கூடாரத்துக்கு வர முற்பட்டதையும் கவனித்தான். ஸலீமைக் கண்டதும் தலைவணங்கிய அந்த வீரன் தனது கையிலிருந்த ஒரு ஓலைச்சுருளை ஸலீமிடம் கொடுத்து, ''இதை ராஜா தங்களிடம் கொடுக்கச் சொன்னார்'' என்று கூறினான். அந்தச் சுருளைக் கண்டதும் அது ஆஜ்மீரிலிருந்து வந்திருப்பதை உணர்ந்த ஸலீம் அதை அவசர' அவசரமாகப் பிரித்தான். அதில் கண்களை ஓட்டியவன் பிரமை பிடித்து நின்றான். அந்தக் கடிதத்தை அக்பர் எழுதியிருந்தார். அதில் பின்வருமாறு கண்டிருந்தது.

''ராஜா மான்சிங்! உமது கடிதம் எனக்கு வியப்பை அளிக்கிறது. ராணா பிரதாபசிம்மன் மீது போர் தொடங்க உம்மைத்தான் நியமித்தேன் படைத்தலைவராக. இப்



பொழுது நீர் அந்தப் பதவியிலிருந்து விலகவும், போரில் கத்துக்குட்டியான ஸலீமிடம் படைத்தலைமையை ஒப்படைக்கவும் உத்தரவு கேட்பது விசித்திரமாயிருக்கிறது! ஸலீம் சிறுபிள்ளை. ராஜபுதனப் போர் முறைகளில் அனுபவமில்லாதவன். அடுத்து மொகலாய சாம்ராஜ்யத்தை ஆள வேண்டியவன். அவனுக்கு நீங்கள் போர் முறைகளைப் போதிப்பது தவறாகாது. ஆனால் நமது கௌரவமும் சாம்ராஜ்ய கௌரவமும் நீர்மானிக்கப்படும் இந்தப் போரில் அவனிடம் படைத்தலைமையை ஒப்படைக்கக் கூடாது. தவிர அவனைக் காத்து என்னிடம் ஒப்படைப்பதும் உமது கடமையாகும்.

அக்பர்.''

இதைப் படித்த ஸலீமுக்கு ஆத்திரம் ஆயிரம் மடங்கு அதிகமாகவே, கையில் அந்த ஓலையைப் பிடித்தவண்ணம் மான்சிங் கூடாரத்துக்கு வந்து, ''என் தந்தைக்கு என்ன எழுதினீர்கள்?'' என்று விசாரித்தான்.

''நடந்ததை எழுதினேன்'' —மான்சிங்கின் குரலில் அலட்சியம் மிக அதிகமாயிருந்தது.

''உமது மகள் வேவு பார்க்க வந்ததை எழுதினீரா?''

''பார்க்க வந்ததை எழுதினேன்.''

''அப்படியிருந்தும் எனது தந்தை உம்மை நம்புகிறார்?''

''கடிதத்திலிருந்து அப்படித்தான் தெரிகிறது.''

''என்னை அவமானப்படுத்தியிருக்கிறார். கத்துக்குட்டி என்று அழைத்திருக்கிறார்.''

''எந்த தந்தையின் பலவீனமும் அது. தமது மகனுக்கு பேரன் பிறந்தாலும் மகனை குழந்தையென்று நினைப்பது சர்வ சாதாரணம். அதை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளக்கூடாது''

மான்சிங்கின் கூடாரத்துக்குள் ஸலீம் குறுக்கும் நெடுக்குமாக அடியுண்ட புலிபோல் நடந்தான். பிறகு மான்சிங்குக்கு எதிரில் நின்று ''படைத்தலைவரே! தங்கள் ஆணை என்ன இந்த சிறுவனுக்கு?'' என்று ஏளனமாகக் கேட்டான்.

அவனைக் கூர்ந்து நோக்கிய மான்சிங்கின் கண்களில் ஏளனமில்லை, இகழ்ச்சியில்லை, ஒரு படைத்தலைவரின் அதிகாரம் இருந்தது. ''ஸலீம்! படைகள் நாளைக் காலையில் மலைமீது ஏறும். அதற்கான பூர்வாங்க ஆலோசனை இன்று பிற்பகல் இந்தக் கூடாரத்தில் நடக்கும். படைப் பிரிவுகளின் உபதலைவர்கள் எல்லோரையும் அழைத்துக் கொண்டு இங்கு வந்து சேர்'' என்று உத்தரவிட்டார். அவன்போகலாமென்பதற்கு கையையும் அசைத்தார் கம்பீரமாக. குமுறிய உள்ளத்துடன் வெளியேறினான் ஸலீம்.

அன்று பகல் போஜனம் முடிந்து இரண்டு நாழிகைகளுக்குப் பிறகு ஆறு உபதலைவர்களுடன் ஸலீம் ராஜாவின் கூடாரத்துக்குள் நுழைந்தான். அவர்கள் உட்கார ஏற்கனவே ஆசனங்கள் போடப்பட்டிருந்தன. அங்கிருந்த கூடாரச் சேலையில் இன்னொரு சேலையை தொங்கவிட்டிருந்த மான்சிங் அதன் முன்பு பாடம் சொல்லும் ஆசிரியர் போல் நின்றுகொண்டிருந்தார். அவர் கையில் உறையிலிருந்து உருவப்பட்ட வாளிருந்தது. அந்த சேலையில் தீட்டப்பட்டிருந்த சித்திரத்தை வாளின் நுனியால் சுட்டிக் காட்டி போர் முறையை விளக்கலானார் ராஜா.

''இதோ சேலையில் ஆராவலி மலைத் தொடரின்குறிப்பிட்ட பகுதியின் படம் வரையப்பட்டிருக்கிறது. இதன்மேலே



தெரிவது பெரிய மலைச்சிகரம், கீழே தெரிவது அடிவாரம். இந்த அடிவாரத்தின் மேலும் மலைச்சிகரத்தின்கீழ் அதன் கழுத்து இருக்கும் இடத்திலும் விரிந்து கிடக்கிறது ஹல்திகாட் சமவெளி. இந்த மலை அடிவாரத்திலிருந்து மேலே ஏற மூன்று கணவாய்கள், மிகக் குறுகியவை இருக்கின்றன இங்கே. இவை மூன்றிலும் நமது பீரங்கிப் படையின் ஒவ்வொரு பகுதியும் காலாட்படையின் சிறு பகுதியும் செல்லும். கணவாய்களுக்குப் பக்கச்சரிவுகளில் மகாவீரர்களான ராஜ புத்ரர்கள் வேல்களையும் வில்களையும் கொண்டு நிற்கிறார்கள். கணவாய்களில் புகுந்ததும் அவர்கள் உங்கள் மீது வேல்களையும் அம்புகளையும் எய்துவார்கள். நீங்கள் பதிலுக்கு பீரங்கிகளை வண்டிகளிலிருந்து உயர்த்திக் குண்டுகளை வீசிக்கொண்டே முன்னேறுங்கள். ஒவ்வொரு பீரங்கி வண்டியிலும் மூன்றுபேர் இருக்கட்டும். ஒருவர் வண்டியை இழுக்கும் கோவேறு கழுதைகளை ஓட்டட்டும். இன்னும் இருவர் பீரங்கிகளை இயக்கட்டும். எதிரிகள் வேலையோ, அம்புகளையோ எய்யு முன்பு பீரங்கி குண்டுகள் அவர்கள்மீது பாயட்டும். மகபத்கான்! நீ இந்த மூன்று பிரிவுகளையும் அழைத்துக்கொண்டு மலைமீது ஏறிவிடு. இதைவிட அபாயமான பணி இந்தப் போரில் கிடையாது...''—என்று விளக்கி மகபத்கானை நோக்கினார்.

மகபத்கான் எழுந்து தலைவணங்கினான். ''அபாயத்தைக் கண்டு மகபத்கான் அஞ்சுவதில்லை'' என்றான்.

''உபதலைவர்களில் இரண்டுபேரை நீ அழைத்துக் கொள்'' என்றார் மான்சிங். வந்திருந்த ஆறு உபதலைவர்களில் இருவரை சுட்டிக்காட்டினான் மகபத்கான்.

''நல்லது மகபத்கான். மீதி நான்கு உபதலைவர்களில் மூவர் இளைய நவாபுடன் செல்வார்கள். இளையநவாப் எஃகுகவசத்தால் மூடப்பட்ட ஹௌடா கொண்ட யானை

மீது வருவார். அவரைத் தொடர்ந்து யானைப் படையும் புரவிப்படையின் ஒரு பகுதியும் வரட்டும்'' என்று உத்தர விட்டார்.

''எனக்கு மட்டும் எஃகுத் திரையின் பாதுகாப்பு எதற்கு! நான் கோழையா?'' என்று வினவினான் சலீம்.

''உன்னைக் காக்கும்படி உத்தரவிட்டிருக்கிறார் சக்கர வர்த்தி. தவிர பட்டத்து யானையில் வேறு யாரும் ஏறக் கூடாது'' என்று திட்டவட்டமாக அறிவித்த மான்சிங், ''என்னுடன் புரவிப்படையின் ஒரு பகுதியும், காலாட் படையும் வரும். எட்டு பீரங்கி வண்டிகள் மட்டும் எனக்கு முன் செல்லும்'' என்றார். ''சலீம்! நீயும்நானும் கணவாய் களில் நுழையப் போவதில்லை. கணவாய்களிடமிருந்து பெரிதும் தள்ளியுள்ள மலைச்சரிவுகளில் தெற்குவடக்காக இருபுறங்களிலும்ஏறி ஹல்திகாட் சமவெளிக்கு வருவோம். கணவாய்களை ராணாவின் படைகள் நோக்கிக் கொண் டிருக்கும் சமயத்தில் நாம் இருவரும் தெற்கிலிருந்தும் வடக்கிலிருந்தும் அவரது படைகளின் இடையில் புகுந்து விடுவோம். அங்கு படைகள் கைகலக்கும். பிறகு ஆண்ட வன் செயல்'' என்று தமது போர்த்திட்டத்தை விளக்கிய மான்சிங், மீதியிருந்த ஒரு உபதலைவனை நோக்கி, ''நீ என்னுடன் வருகிறாய். நாளைக்காலையில் பொழுது புலரு முன்பாக அதாவது காரிருள் மூளும் கடைசி நாழிகைகளில் நமது படைகள் நகரட்டும்'' என்று உத்தரவிட்டார். எல்லாரும் போகலாம் என்பதற்கு அறிகுறியாக கையை யும் அசைத்தார்.

மற்றவர்கள் போனபின்பு சலீம் மாத்திரம் நின்று கொண்டிருந்தான். ''என்ன சலீம்! இன்னும் ஏதாவது சந்தேகமிருக்கிறதா?'' என்று வினவினார் ராஜா.

''இல்லை. இந்தமாதிரி போர்த் திட்டத்தை தங்களை தவிர யாராலும் வகுக்கமுடியாது. நான் பிழை ஏதாவது



செய்திருந்தால் மன்னித்துவிடுங்கள்'' என்றான் சலீம். ராஜா அவனை அணுகி அவன் முதுகில் தட்டிக்கொடுத் தார். ''சலீம்! எதுவும் அனுபவத்தால் வருகிறது. தவிர நீ பிழை செய்தால்தானென்ன? என் மருமகனல்லவா?'' என்றார்.

அவர் பெருந்தன்மை சலீமை பிரமிக்கச் செய்தது. தலை குனிந்து வெளியேறினான் சலீம். அதற்குப் பிறகு ராஜாவை அவன் பார்க்கவில்லை. அன்று மாலை படைகள் பிரிக்கப்பட்டன, ராஜாவின் போர்த்திட்டப்படி.

மறுநாள் விடியற்காலையில் மொகலாயர் படை ஐந்தாகப் பிரிந்து மூன்று கணவாய்க்குள்ளும், இரண்டு தெற்கிலும் வடக்கிலுமிருந்த மலைச் சரிவுகளின் பாதை களிலும் ஏறத் தொடங்கின. அன்று பகல், சரித்திரத்தில் மிகப் பிரசித்தி பெற்ற ஹல்திகாட் சமவெளிப்போர் தொடங்கியது.

ராஜபுதனப் படைகளின் முன்னணியில் ராணாபிரதாப் சிம்மன் தமது சரித்திரப் பிரசித்திபெற்ற புரவி சைதக்கின் மீது அமர்ந்திருந்தார். அவர் இடது கையில் பெரிய ஈட்டி இருந்தது. வலது கையில் பெரும் வாளிருந்தது. தலையில் இரும்புக் கிரீடம் இருந்தது. அவர் உதடுகளில் புன்முறுவல் ஒன்று தவழ்ந்து கொண்டிருந்தது.

# 46. ரத்தம் பேசியது!

மேவாரின் அரச சின்னமான தங்கநிற சூரியன் கொடியை ராணாவுக்குப் பின்னால் ஒரு புரவி வீரன் பிடித்துக்கொண்டு நின்றான். ஹல்திகாட்போர் ராஜபுதன சுதந்திரத்தின் தலைவிதியை நிர்ணயிக்குமென்பதை அறிந்திருந்த ராணா எதிரிகளின் வரவை எதிர்நோக்கி இடது கையில் சைதக்கின் கடிவாளத்துடனும் பெரிய ஈட்டியுடனும் வலது கையில் பெரிய வாளுடனும் தயாராகக் காத்திருந்தார். அருணோதய காலத்தில் எதிரிகள் கணவாய்களில் ஏறிவரும் ஒலிகள் கேட்க முற்பட்டதும், தனக்கு இருபக்கங்களிலும் நின்ற புரவிப்படையையும், காலாட்படைகளையும், ஹல்திகாட்டுக்கு மேல் சிகரப்பகுதிகளிலும் கீழ் மலைச்சரிவுப்பகுதிகளிலும் நின்ற படைகளையும், இயங்குமாறு வாளை தலைக்குமேல் உயர்த்தி ஆட்டினார். முரசுகள் முழங்கின. படைகள் நகரத் துவங்கின. சிகரத்தை அடுத்த சரிவில் தனது சிறு பீரங்கிப்படையுடனும் வில்லாளிகளான பில் ஜாதியாருடனும் நின்றிருந்த ரவிசந்த் ராணாவை நோக்கி தலைதாழ்த்தினான். பிறகு பக்கத்திலிருந்த ஒரு பில் வீரனுக்கு சைகை காட்ட அவன் எரியம்பு ஒன்றை ஆகாயத்தை நோக்கி எய்தான். அடுத்த வினாடி கணவாய்ச் சரிவுகளில் பெரும் போர் மூண்டது. மலைச்சரிவுகளிலிருந்த ராஜபுத்ர வில்லாளிகளின்விஷ அம்புகளுக்கு இலக்கான மொகலாயப் பீரங்கி வண்டியோட்டுவோரும் பீரங்கி இயக்குவோரும் திரும்பச் சுட்ட ஒலிகள் மிகப் பயங்கரத்தை விளைவித்தன.

விஷ அம்பினால் தாக்கப்பட்ட கோவேறு கழுதைகள் சில, அம்பு பட்டும் வீரர்களால் உந்தப்பட்டதால் சிரமப்



பட்டு முக்கி முனகி ஏறின. ஒவ்வொரு வண்டியிலுள்ள வீரர்கள் இறந்தாலும், பின்னால் வந்த வீரர்கள் முன் வண்டிகளில் ஏறிக்குதித்து பீரங்கிகளை இயக்கினார்கள். எங்கும் ராஜபுத்ரர்களின் போர்க்கோஷமான ''ஹர ஹர மகாதேவ்'' என்ற கூச்சல் மலைச்சரிவுகளில் பயங்கரமான எதிரொலிகளைக் கிளப்பின. அவற்றுடன் பீரங்கி வண்டிகளின் உருளைகள் மலைக்கற்களில் ஏறிய ஒலிகளும், மரணக்கூச்சலிட்டு விழுந்த மொகலாய வீரர்களின் விபரீத சப்தங்களும், பீரங்கிகள் இயக்கப்பட்டுக் குண்டுகள் விழுந்ததால் சாரி சாரியாக உருண்டுவிட்ட ராஜபுத்ரர்கள் மரண சமயத்திலும் போட்ட வீரக்கூச்சலும் பயங்கரமான நிலையை சிருஷ்டித்தன.

ராணா பிரதாப் கணவாய்களைக் காத்து நிற்க மிகச் சிறந்த ராஜபுத்ர வீரர்களை நிறுத்தியிருந்தாலும், எதிரிகளின் பீரங்கிகளுக்கு முன்பாக அவர்கள் பாதுகாப்பு அதிக பலனை அளிக்காததால் அதிகமாக எதிரிகளைத் தடை செய்ய முடியவில்லை. எனவே அவர்கள் படை முன்னேறவே செய்தது. இருப்பினும் கணவாய்களில் ஏறி ஹல்திகாட் சமவெளியில் தலைகாட்டியபீரங்கிப்படைகளை நோக்கி சிகரத்திலிருந்து இயங்கிய ரவிசந்தின் சிறு பீரங்கிப்படை பெரும் நாசத்தையே விளைவித்தது. போதாக்குறைக்கு ராணாவின் பக்கத்தில் நின்றிருந்த ஜாலா வம்சத்தலைவன் மானாசிங், புரவிப்படைகளுடன் ஏறிவந்த மொகலாயர்களை எதிர்கொண்டு ஈட்டிகளை வீசினான்.

இந்தக் கணவாய்களில் போர் நடந்துகொண்டிருந்த சமயத்தில் வடக்கிலும் தெற்கிலும் மான்சிங்கும் இளைய நவாப் சலீமும் தங்களது பெரும் படைகளுடன் தலைகாட்டவே, ராணா தமது படைகளை மூன்றாகப் பிரித்து ஒன்றை கணவாய்களின் முகப்பிலும் மீதி இரண்டை ராஜாமான்சிங் மீதும் இளையநவாபின் மீதும் ஏவினார்.

படைகள் கை கலந்தன. ராஜபுத்ரர்களின் படைபலம் இருபத்திரண்டாயிரம். மொகலாயர் படைபலம் அதைப் போல் இரட்டிப்பு. ராஜபுத்ர வீரர்களிடம் பெரும்பாலும் ஈட்டி, வாள் முதலிய பழைய ஆயுதங்கள். ராஜாவிடமும் சலீமிடமும் பீரங்கி முதலிய நவீன நாச வசதிகள் அதிகம். இருப்பினும் ராஜபுத்ரர் வீரமும், சுதந்திரத்தைக் காக்கும் ஆர்வமும், அவற்றால் ஏற்பட்ட வேகமும் எதிரிகளைச் சற்று திணறவே அடித்தன.

ராஜபுத்ரர் புரவிப்படையின் மூன்று பிரிவுகளும் கணவாய்களையும், ராஜா மான்சிங்கையும், சலீமையும் நோக்கி ஏககாலத்தில் மோதின. அந்தப் புரவிகளின் வேகத்தாலும் மேலிருந்து வீசப்பட்ட ரவிசந்தின் பீரங்கி குண்டுகளாலும், பில் ஜாதியாரின் அம்புகளாலும் தாக்கப்பட்ட மான்சிங்கின் படைப்பிரிவு சலீமின்படைப் பிரிவு இரண்டும்சில நிமிடங்கள் திகைத்தன; தேங்கின. ஆனால் அந்தத் தேக்கம் அதிக நாழி நீடிக்கவில்லை. ராஜா மான்சிங் தமது துப்பாக்கியை ஆகாயத்தை நோக்கி சுட்டதால், வடக்கிலும் தெற்கிலும் சமவெளியிலிருந்த மொகலாயப்படைகள் ஏதோ இரும்புச் சுவர்கள் போல் முன்னேறின. ராஜபுதன புரவிப்படைகள் அந்த இரும்புச் சுவர்களையும் தகர்த்து உள்ளே நுழைந்துவிட்டன.

ராணா வடபுறப் படைகளின் பக்கம் தமது புரவியான சைதக்கைத் திருப்பி மான்சிங்கை அடைய முயன்றார். எதிரில் வந்த வீரர்களை வெட்டித் தள்ளிக்கொண்டே சென்றாலும் புற்றீசல்கள்போல் மீண்டும் மீண்டும் வந்த மொகலாயப் படைகள் ராஜாமான்சிங்கை அணுக வொட்டாமல் அவரைதடை செய்தன. ராஜா மான்சிங் ராணாவைப் பார்த்தார் பிரமிப்புடன். தம்மை எங்கு வேண்டுமானாலும் சந்திக்கத் தயார் என்று உதயசாகர ஏரிக்கரையில் செய்த பிரமாணத்தை நிறைவேற்ற ராணா முயலுகிறார் என்பதை அறிந்தும் அவர் முன்னேறவில்லை.



தம்மை காத்து நின்ற பெரும்படையை அவர்மீது ஏவினார். துப்பாக்கிகளின் ரவைகளும், வேல்களும் ராணாவை நோக்கி சீறி வந்தன. இரண்டு மூன்று காயங்களும் அவர் உடலில் ஏற்பட்டாலும் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் ராணா வெறியுடன் போராடினார். அவர் பல திக்குகளில் மான்சிங்கை அடைய முயன்றதால் பின்னால் ஒரு புரவி வீரன் தாங்கிவந்த அவரது தங்கநிற சூரியக் கொடி ஹல்திகாட்டின் பல இடங்களில் மாறி மாறித் தெரிந்தது. சூரியனும் கிளம்பி ஹல்திகாட் பூமியை தகித்ததால் போர் மிக உக்கிரமாயிற்று.

வாட்களின் மோதலாலும், ஈட்டிகளோடு ஈட்டிகள் உராய்ந்ததாலும் தடுக்கப்பட்டும் எதிரிகளால் தட்டிவிடப் பட்டும் வீழ்ந்த வாட்கள் ஈட்டிகள் இவற்றால் ஏற்பட்ட ஒலிகளும் ஹல்திகாட் களத்தை நிகரற்ற போர்க்களமாகச் செய்தன. பீரங்கிகளின் சப்தம் வானைப் பிளந்தது. அந்த சமயத்தில் சிகரச்சரிவிலிருந்த ரவிசந்த் தனது பீரங்கிப் படைகளைத் தொடர்ந்து இயங்கும்படி கூறிவிட்டு, ராணாவின் பக்கத்தில் வரத் தனது சிறுபுரவிப்படையை வேகமாக சரிவுகளில் இறக்கி வந்தான். ராணாவைச் சூழ்ந்து பின்புறம் நெருங்க முயன்ற வீரர்கள் சிலரை தனது வாளால் வெட்டி வீழ்த்தினான். பிறகு சிகரச் சரிவிலிருந்து தனது மாட்ச்லாக் துப்பாக்கிப் படையையும் இயங்கச் சைகை செய்தான்.

மொகலாயர் படை பெரிதாயினும் நாலாபக்கங்களிலும் திடீர் திடீரென வந்த பலவித தாக்குதல்களினால் சிறிது சளைக்கவே செய்தது. அந்தச் சமயத்தில் தென்புறமிருந்து வந்த இளைய நவாபின் யானைப்படையும் புரவிப் படையும் பக்கவாட்டில் ராஜபுத்ரர்களைத் தாக்கவே மூண்டுவிட்ட கடும் போராலும், அடியுண்ட யானைகளின் பிளிறல்களினாலும் சற்று திரும்பிப்பார்த்த ராணாபிரதாப், இளையநவாப் ஸ்லீம்,யானையின் எஃகு தகடுகளால் பாது

காக்கப்பட்ட ஹௌடாவின்மீது அமர்ந்து நான்கு பக்கங்களிலும் வேல்களை வீசுவதையும் கண்டார். பிறகு மான்சிங் வெகுதூரத்திலிருப்பதைப் பார்த்தார். அவர் முன்பு பெரும்படை இருந்ததையும் கண்டு அவரை அணுகுவது கஷ்டமென்பதை உணர்ந்த ராணா பிரதாப் மொகலாய இளவரசனை நோக்கித் தமது புரவியைத் திருப்பினார்.

சுற்றிலும் ராணாவின் படைகள் எதிரிகளின் பீரங்கிகளால் பெரும் சேதமடைந்து கொண்டிருந்தன. அவ்வப்பொழுது வியூகங்களை மிக சாமர்த்தியமாக ராணா திருப்பியதால் திடீர் திடீரென்று பிரிந்து கூடிய ராஜபுத்ரர்களின் காலாட்படைகளிலும் மொகலாயர் படையிலும் சேதம் அதிகமாயிற்று. போர் துவங்கி பல நாழிகைகள் ஓடிவிட்டாலும் வெற்றி தோல்வி யார் பக்கமென்று திட்டமாகத் தெரியவில்லை. ஒருபுறம் நவீன வசதிகளுடன் கூடிய மொகலாயர் பெரும் சைன்னியம், இன்னொருபுறம் சுதந்திரத்துடன் இருப்பதா அல்லது இறப்பதா என்ற கொள்கையுடன் போராடிய ராஜபுத்ர வீரர்களின் படை, இவ்விரண்டின் மோதல் பலமாகவே இருந்தாலும், சேதம் ராஜபுத்ரர்களிடையே அதிகமாகவே இருந்தது.

உச்சி தாண்டி ஏழு நாழிகைகள் கடந்துவிட்ட சமயத்தில் இளைய நவாப் சலீம் துணிவுடன் யானையில் வருவதைக்கண்ட பிரதாப், அவனை நோக்கி தமது புரவியைத் திருப்பினார். அவருக்கு அதுவரை ஆறுகாயங்கள் ஏற்பட்டிருந்தும், அவர் கைகளிலும் தொடைகளிலும் ரத்தம் பிரவாகித்துக் கொண்டிருந்தும், சைதக்கும் பல காயங்களுக்கு உள்ளாகியிருந்தும் ராணா ஸலீமை நோக்கிச் சென்றார். பக்கத்தில் வந்த வீரனிடமிருந்த ஈட்டிகளிலிருந்து நாலைந்து ஈட்டிகளை இளைய நவாபின் அருகில் வந்த இரண்டு யானைகள்மீது வீச அவை திரும்பி ஓட்டம் பிடித்து மொகலாயர்களை நசுக்க முற்பட்டன. ஆனால்



ஸலீமைக் காத்து நின்றன பெரும் புரவிப்படையும் காலாட்படையும். அதை லட்சியம் செய்யாமல் ராணா தமது சைதக்கை சலீமின் யானையை நோக்கிச் செலுத்தினார். இடையில் வந்த மொகலாய வீரர்களையும் ராஜபுத்ர வீரர்களையும் வெட்டி வீழ்த்தினார். அவரது புரவியும் அவரது வேகத்தையும் ஆத்திரத்தையும் உணர்ந்ததுபோல் எதிரில் வந்தவர்களை இடித்துக்கொண்டு தன் உடலில் பாய்ந்த ஈட்டிகளை உடலை உலுப்பி உதறிவிட்டு அம்புபோல் பாய்ந்து சென்றது. ராணா தமது வெறியில் தமது காயங்களை அலட்சியம் செய்தார். வீரர்களை அலட்சியம் செய்தார். முன்னேறினார் ராட்சஸ வேகத்தில். ஸலீமின் யானையையும் அடைந்து அதன்மீது சைதக்கை ஏவினார். யானையின் நீண்ட துதிக்கையைக் கடித்து தனது இரு முன்னங்கால்களையும் எழுப்பி அதன்மீது ஊன்றியது. அந்தத் தருணத்தில் ராணா தமது இடது கையிலிருந்த பெரு ஈட்டியை ஸலீமின்மீது வீசினார். ஸலீம் சட்டென்று குனிந்திராவிடில், ஹௌத் திரை அவனைக் காத்திராவிடில் மொகலாய சாம்ராஜ்யம் தனது இளவரசனை அந்த வினாடியில் இழந்திருக்கும்.

ஆனால் மொகலாயர் படை ஸலீமை காக்கச்சென்று பிரதாப்பை சூழ்ந்து கொண்டது. அந்த கும்பலை வேறிடத்துக்கு இழுக்க ஜாலா வம்சத் தலைவனான மானா ராஜபுதன தங்க நிற சூரியக் கொடியை வாங்கிக்கொண்டு வேறிடத்துக்கு விரைந்தான். கொடியை அடையாளமாக நினைத்த மொகலாய வீரரில் பலர் அந்த இடத்துக்குச் சென்றனர்.

---

• இந்த நிகழ்ச்சி ராஜபுதன சித்திரங்களிலெல்லாம் காணப்படுகின்றன. மொகலாய யானைமீது சைதக் இருகால்களை ஊன்றி நிற்பதுபோல் பலவண்ண ஓவியங்கள் இன்றும் இருக்கின்றன.

பிற்பகல் சாய்ந்து கொண்டிருந்தது. ஸலீம் யானை மீது வேலை ராணா வீசிய சமயத்தில் அவரது உடலில் துப்பாக்கி ரவையொன்று பாய்ந்ததாலும், ஏற்கனவே இழந்த குருதியாலும் ராணா மயக்கமுற்றுப் புரவியின் மீது சாய்ந்தார். சைதக் தனது தலைவன் நிலையை உணர்ந்து கொண்டிருக்க வேண்டும். அவரைச் சுமந்து போர்க்களத்திலிருந்து வேகமாகப் பாய்ந்து பக்கத்து மலைச்சரிவில் இறங்கியது. அவரை மொகலாயப்புரவி வீரர்கள் தொடர்ந்தனர். அவர்களைத் தொடர்ந்து மற்றொரு புரவி வீரனும் காற்று வேகத்தில் சென்றான்.

படைகள் பெருநாசத்தாலும், கைகலந்து சண்டையிட்டதாலும் ராஜபுத்ரர்களின் இருபத்திரண்டாயிரம் படைகளின் எண்ணிக்கை கிட்டத்தட்ட எட்டாயிரமாகச் சுருங்கிவிட்டதாலும், ராணாவை யாரும் கவனிக்கவில்லை. போர் நிறுத்த முரசுகளை மான்சிங் முழங்கச் செய்தார். சூரியாஸ்தமனத்தால் போர் முடிந்தது. மீதி ராஜபுதனப் படைகள் மலைக் காடுகளில் மறைந்தன.

ராஜா மான்சிங் தமது புரவியை போர்க்களத்தின் நடுவில் நிறுத்தி போர்க்களத்தின் நாசத்தை கவனித்தார். சுற்றிலும் சுதந்திரத்துக்காகவும் சுயமரியாதைக்காகவும் மாண்டு கிடந்த ராஜபுத்ரர்களைப் பார்த்தார். அவர் மனத்தில் சந்தோஷமில்லை, வெற்றி மகிழ்ச்சியில்லை. அவர் பழிவாங்கி விட்டார். ''ஆம் பழிவாங்கி விட்டேன். ஆனால் யார் மீது?'' என்று தம்மைத் தாமே கேட்டுக் கொண்டு பெருமூச்செறிந்தார்.

சுற்றிலுமிருப்போரை நோக்கி ''ராணா என்ன ஆனார்'' என்று கேட்டார்.

''போர்க்களத்திலிருந்து ஓடிவிட்டார்'' என்றான் ஒரு வீரன்.



அவனை உற்று நோக்கிய மான்சிங் ''என்ன சொன்னாய்?'' என்று கேட்டார்.

''ராணா ஓடிவிட்டார்'' என்றான்.

அடுத்த வினாடி மான்சிங்கின் குறுவாள் அவன் மார்பில் புதைந்தது. ''என்ன துணிவு இவனுக்கு?'' என்றும் வெறுத்து அவனை நோக்கினார். அன்று ஹல்திகாட் சமவெளியிலேயே பாசறை அமைத்தார். ராணாவைப் பற்றியோ, தமது மகளைப் பற்றியோ, ரவிசந்தைப் பற்றியோ ஏதும் தகவல் கிடைக்காததால் சிந்தனையுடன் ஸலீம் இருந்த இடத்துக்குச் சென்றார். ஸலீமுடன் ஒரு ராஜபுத்ரன் பேசிக்கொண்டிருந்தான். அவன் சொன்னதை ஸலீம் நம்பவில்லை. ''உண்மையைச் சொல்'' என்று சீறினான். ''ராணா என்ன ஆனார்?'' என்றும் கேட்டான் சலீம் ஆத்திரத்துடன்.

அவன் உண்மையைச் சொன்னான். மெய்சிலிர்க்கும் உண்மை அது. பேசியது ராஜபுத்ரனல்ல: அவன் ரத்தம் பேசியது.

# 47. சலீமின் பொன்மனம் !

பலமான ஏழு காயங்களால் மயக்கமுற்று புரவிமீது சாய்ந்துவிட்ட ராணா பிரதாபசிம்மன், அதன் கழுத்தைக் கட்டிக்கொண்டு படுத்துவிட்டதால், எஜமான் நிலையை அறிந்த சைதக் போர்க்களத்திலிருந்து பறந்துவிட்டதைக் கண்ட சில மொகலாய வீரர்கள் சைதக்கைத் தொடர்ந்தனர். அதைக்கண்ட ஒரு ராஜபுத்ர வீரனும் அதைத் தொடர்ந்தான். மேவாரின் செந்நிறச் சூரியக்கொடியை தாங்கி, மொகலாய வீரர்களை வேறு பக்கம் இழுத்துச் சென்ற ஜாலா வம்சத் தலைவனான மானா போர்க்களத்தில் எதிரிகளால் வெட்டப்பட்டு சாய்ந்தாலும், ராணா தப்பிவிட்டதால், தனது உதட்டில் ஒரு புன்முறுவலுடன் இறந்தான். ஆனால் சாயுமுன்பாக ராணாவின் புரவியைத் துரத்திக்கொண்டு ஒரு ராஜபுத்ர புரவி வீரனும் செல்வதைக் கண்டு, ''அட துரோகி'' என்று கூவினான். அந்தக் கடைசி சொற்களுடன் ரணகளத்தில் வீழ்ந்தான்.

ஆனால் ராணாவை மொகலாய வீரர்களுக்குப் பின்னால் துரத்திச் சென்றவனும், மொகலாய உபதளபதிகளில் ஒருவனுமான ராஜபுத்ர வீரன் மட்டும் மிக வேகமாக மொகலாய வீரர்களுக்குப் பின்னால் தனது புரவியைச் செலுத்தினான். ராணாவின் புரவியான சைதக் அத்தனை பேரையும் ஏமாற்றி எட்ட இருந்த மலைக்காட்டுக்குள் நுழைந்து, ஒரு அருவியைத் தாண்டி தள்ளாடி நடந்தது. ராணாவுக்கு ஏழு காயங்கள் ஏற்பட்டதென்றால் சைதக்கிற்குப் பல காயங்கள் ஏற்பட்டுக் குருதியும் அதிகமாக சேதமாயிருந்ததால், அதுவும் கீழே சாயும் நிலைக்கு



வந்தது. மொகலாய வீரர்கள் ராணாபிரதாப்பை அணுகிக் கொண்டிருந்தனர். அவர்களுக்குப் பின்னால் வந்த மொகலாய உபதளபதியும், ராஜபுத்ரனுமான சக்தா ''ஹோ நீலா கோரா ரா அஸ்வார்'' (ஓ! நீல நிற புரவி வீரனே) என்று பெரிதாகக் கூவினான். அந்தக் கூவலைக் கேட்ட மொகலாய வீரர்கள் திரும்பிப் பார்த்ததும் அவர்களிடை புகுந்து அவர்கள் நால்வரையும் தனது வாளால் வெட்டிப்போட்டான். பிறகு கீழே கிடந்த ராணாவின் நிலையை பரிசோதித்தான். ராணா மெல்ல கண்களைத் திறந்தார் ''யார்? தம்பி நீயா?'' என்று வியப்புடன் முணுமுணுத்தார்.

ராணாபிரதாப்பின் சகோதரனும், பிரதாப்பிடம் இருந்த விரோதத்தால் மேவாருக்கு துரோகியாகி மொகலாயருடன் சேர்ந்துவிட்டவனுமான சக்தாவின் கண்களில் நீர் ததும்பியது. ''ஆம் அண்ணா! உங்கள் தம்பிதான். மேவாரின் துரோகி'' என்று சொற்களை துன்பத்தால் உதிர்த்தான்.

ராணா தனது சகோதரனைத் தழுவ கைகளை உயர்த்த முயன்றார். முடியாததால் புன்முறுவல்கொண்டு ''மற்ற வீரர்கள் எங்கே?'' என்று கேட்டார்.

''அவர்களைக் கொன்றுவிட்டேன். இனி உங்களுக்கு ஆபத்து ஏதுமில்லை'' என்றான் சக்தா.

ராணாவின் முறுவல் அதிகமாக விரிந்தது. ''ரத்த பாசம் விடாது தம்பி'' என்றார் புன்முறுவலுடன்.

தான் அதிக நேரம் அங்கு தாமதிக்கமுடியாதென்பதை சக்தா புரிந்துகொண்டான். நேரம் கழித்து பாசறைக்குத் திரும்பினால் தன்மீது சந்தேகம் வரும் என்ற காரணத்தால் ராணாவின் பக்கத்திலிருந்து எழுந்தான். ''நான் போக

வேண்டும். ஆனால் உங்களை யார் கவனிப்பார்கள்?'' என்று வினவினான் சக்தா.

''யாராவது வருவார்கள். முதலில் நீ சைதக்கைப் பார். அதன் நிலைமை எப்படியிருக்கிறது?'' என்று கேட்டார் ராணா.

சக்தா சைதக்கை கவனித்தான். ராணாவைவிட அதிகக் காயங்களால் அது பெருமூச்சுவிட்டுக் கொண்டிருந்தது. இன்னும் சில நிமிடங்களில் அதன் உயிர் பிரிந்து விடும் என்பதை உணர்ந்த சக்தா ராணாவிடம் அதை சொல்லத் தயங்கினான்.

ஆனால் ராணா புரிந்துகொண்டார். ''சக்தா!என்னை மெல்ல தூக்கி சைதக்கின் அருகில் கொண்டுபோ'' என்றார்.

சக்தா பதில் பேசவில்லை. குனிந்து தனது இரு கைகளால் மிகுந்த சிரமப்பட்டு ராணாவின் வலிய உடலை சைதக்குக்கு அருகில் இழுத்துவிட்டான். ராணா அதன் கன்னத்தோடு தமது கன்னத்தை வைத்துக்கொண்டார். என்றும் கண்ணீர் விடாத அவர் கண்களில் நீர் சுரந்தது. சைதக்கின் மூச்சும் நின்றது. ''சைதக்கின் அன்பும் கடமை உணர்ச்சியும் ராஜபுத்ரர்களுக்கு இருந்தால் ராஜபுதனம் மொகலாயருக்கு அடிமைப்பட்டிருக்காது'' என்று முணு முணுத்தார் ராணா. பிறகு ராணாவும் மூர்ச்சையானார். அவர் காயங்களைக் கழுவ அருவியிலிருந்து கைகளில்நீரை மொண்டு திரும்பிய சக்தா ,ராணாவின் காயங்களைத்தனது முந்தானையால் சம்பக் துடைத்துக் கொண்டிருப்பதைக் கண்டான். அதனால் கையிலிருந்த நீரை அவளிடம் நீட்டினான். சம்பக் தனது முந்தானையை அந்த நீரில் நனைத்து ராணாவின் காயங்களைத் துடைக்கலானாள்.



அதற்குப் பிறகு சக்தா அங்கு நிற்கவில்லை. ''சம்பக்! ராணாவை கவனித்துக்கொள். ராஜாபுதனத்துக்கு இன்றும் மானம் இருப்பதற்கு இவர்தான் காரணம்''என்று கூறிவிட்டு, தனது புரவிமீது ஏறிக்கொண்டு போர்க் களத்தை நோக்கிச் சென்றுவிட்டான். அவன் ஹல்திகாட் போர்க்களத்துக்கு வந்தபோது இரவு நன்றாக ஏறி இருந்தது. எங்கும் பந்தங்கள் எரிந்துகொண்டிருந்தன. அங்கிருந்த ராஜபுத்ரப் படை நாசத்தைப் பார்த்து மனம் புழுங்கிய சக்தா சலீமின் கூடாரத்துக்குள் நுழைந்தான். அப்பொழுதுதான் சலீம் அவனைக்கேட்டான். ''ராணா என்ன ஆனார்?'' என்று.

சக்தாவின் ராஜபுத்ர ரத்தம் பழைய தாயாதிக் காய்ச்சலாகிய தணலை அணைத்துவிட்டதால் சலீமை லட்சியம் செய்யாமலே கேட்டான் ''என்னை ஏன் கேட்கிறீர்கள்?'' என்று.

''நீ ராணாவின் புரவியைத் துரத்திச் சென்றதைப் பார்த்தேன்'' என்றான் சலீம்.

அந்த சமயத்தில் மான்சிங்கும் உள்ளே நுழைந்து சக்தாவை வெறுப்புடன் நோக்கினார். ''காயமடைந்து மயக்கமடைந்து ஓடும் ராணாவைத் துரத்தியது ராஜபுத்ர வீரத்துக்கு சான்று'' என்று இளக்காரமாகப் பேசினார்.

சக்தா அவரைப் பார்த்து ஏளனப் புன்முறுவல் காட்டினான். ''நாமெல்லாம் வீரத்தையும் மானத்தையும் விட்டுப் பல ஆண்டுகள் ஓடிவிட்டன மான்சிங்'' என்றான் சக்தா.

கேவலம் ஒரு உபதலைவன் தன்னைப் பார்த்து ஏளனமாகப் பேசியதால் சிறிது சினமடைந்தாலும் அதை அந்த சமயத்தில் காட்டவில்லை அவர். காட்ட அவகாசமும்

இல்லை. ''ராணா என்ன ஆனார்?'' என்று இரண்டாம் முறை கேள்வியை சலீம் வீசினான்.

''ஒன்றும் ஆகவில்லை'' என்று சக்தா அலட்சியமாகப் பதில் சொன்னான்.

''இறக்கவில்லையா?''

''இல்லை.''

''அவரைத் துரத்திச் சென்ற மொகலாய வீரர்கள் ?''

''இறந்து விட்டார்கள்.''

''எப்படி?''

''வெட்டுக் காயங்களால்''

''யார் வெட்டினார்கள்?''

அதிர்ச்சி தரும்படியான பதிலைச் சொன்னான் சக்தா! ''நான்தான்'' என்று சர்வ சாதாரணமாக பதில் அளித்தான்.

''என்ன?'' என்று அதிர்ச்சியுடன் கேட்டுக் கொண்டு எழுந்த சலீம் மான்சிங்கை நோக்கினான்.

மான்சிங்கின் முகம் கல்லாயிருந்தது. சலீம் மீண்டும் சக்தாவை நோக்கித் திரும்பினான். ''அப்படியானால் நீ மொகலாயருக்கு துரோகம் செய்திருக்கிறாய்?'' என்று கேட்கவும் செய்தான்.

''ஆம்'' என்றான் சக்தா.

''ஏன் துரோகம் செய்தாய்?'' என்று சலீம் வினவினான்.

''துரோகம் என் ரத்தத்தில் ஓடுகிறது. முதலில் உங்களிடம் சேர்ந்து சகோதரனுக்கு துரோகியானேன்.



இப்பொழுது சகோதரனைக் காக்க உங்கள் துரோகியானேன். கணக்கு சரியாயிருக்கிறது'' என்றான் சக்தா.

சலீமின் கண்களில் சினம் பொங்கி நின்றது. ''இதன் விளைவு '' என்று இழுத்தான்.

''தெரியும், எனக்கு மரணதண்டனை''

''தெரிந்துமா இதைச் செய்தாய்?''-சலீமின் குரலில் சினம் மாறி ஏதோ ஒரு ஒலி தெரிந்தது.

''ஆம். ஆனால் நவாப் ஒரு வேண்டுகோள் ..'' என்றான் சக்தா.

''எதை வேண்டுமானாலும் கேள்'' என்றான் சலீம்.

சக்தா, ராஜா மான்சிங்கைப் பார்த்தான். ''இவர் கத்தியால் நான் சாகவேண்டும்'' என்ற தனது வேண்டுகோளை விடுத்தான்.

அதுவரை வாளாவிருந்த ராஜா கேட்டார் ''அதிலென்ன ..'' என்று.

சக்தா சொன்னான்: ''ராஜா! நாம் இருவருமே ராஜபுதனத்தின் துரோகிகள். ஒரு துரோகியின் கையால் இன்னொரு துரோகி இறப்பதுதான் நியாயம்'' என்று.

சக்தா தன்னை திரும்பத் திரும்ப அவமானப்படுத்துவதைத் தாங்கமுடியாத ராஜா தனது வாளின்மீது கையை வைத்தார். ''அதுதான் சரி'' என்று கூறிய சக்தா நகைத்தான்.

சலீம் தனது கையின் அசைப்பால் சக்தாவின் சிரிப்பை அடக்கினான். பிறகு மெதுவாகச் சொன்னான்: ''சக்தா, நீ உன் கடமையிலிருந்து தவறிவிட்டாய். இனி உனக்கு இங்கு இடமில்லை'' என்று.

சக்தா தலைவணங்கினான். சலீம் அவனருகில் வந்து அவன் தோள்மீது கையை வைத்து ''சக்தா! நீ உன் சகோதரனிடம் சென்றுவிடு'' என்று கூறி, ''உன் ரத்த பாசத்தை நான் மதிக்கிறேன். ராணாவை மதிக்கிறேன். அவர் இன்று காட்டிய வீரம் மகத்தானது. அதற்குப் பரிசாக உன்னை அவருக்குத் தருகிறேன். போய் வா'' என்றும் சொன்னான்.

இந்த சமயம் அதிர்ச்சியடைந்த சக்தா இளைய நவாபின் முன்பு மண்டியிட்டான். இளைய நவாப் அவனை தமது இரு கைகளாலும் தூக்கினான். ''சக்தா! போய் வா'' என்று கூறிவிட்டுத் திரும்பினான்.

''நவாப்! உங்கள் பெருந்தன்மை என்னை மீண்டும் அடிமையாக்குகிறது'' என்று குரல் தழுதழுக்கப் பேசினான் சக்தா.

சலீம் அதற்கு பதில் சொல்லவில்லை. அவனை நோக்கி முதுகைக் காட்டியவன் திரும்பவும்இல்லை. அவன் போகலாம் என்பதற்கு அறிகுறியாக தலையை மட்டும் அசைத்தான். சலீமின் பொன்மனத்தைக்கண்டு சக்தா மட்டுமல்ல மான்சிங்கும் பிரமித்தார்.

## 48. அடிமைப் பதவி !

ஹல்திகாட் வெற்றிக்குப் பிறகு சலீம் அந்த பயங்கரப் போர்க்களத்தில் நிற்கவில்லை. அதைச் சுற்றிய பிராந்தியங்களைக் காக்க தனது படையின் சிறு பகுதியை மட்டும் அங்கு நிறுத்திவிட்டு மலையடிவாரத்துக்குச்சென்றுவிட்டான். ரணகாயங்களினால் மிகவும் பலவீனப்பட்டிருந்த ராணாவும் போரைத் துவக்கவில்லை. ஹல்திகாட்டில் நிறுத்தப்பட்ட இருபத்திரண்டாயிரம் ராஜபுத்ரர்களில் எட்டாயிரம் பேர்களே உயிருடன் மீண்டார்களென்பதைக் கேட்டு, போரை சிறிது நாட்கள் நிறுத்தினார். ஆனால் அவர் கோமுல்மீர் கோட்டைக்குள் செல்ல மறுத்தார். ''இனி துருக்கர் விரட்டப்படும் வரையில் காடு தான் எனக்கு வீடு'' என்று சொல்லி, அங்கேயே பெரிய குடிசை ஒன்றை அமைத்துக் கொண்டு தங்கினார். மற்ற ராஜபுத்ர படைத் தலைவர்களும் குடிசைகளில் வாழ வேண்டுமென்று உத்தரவுபோட்டார். போர்க்களக் காயங்களைக் கழுவி சம்பக் பச்சிலை மருந்துகளைப்போட்டபின்பு கண்விழித்த ராணா, முதலில் சைதக்கைப் புதைக்கவும் அதற்கு ஒரு சமாதி கட்டவும் உத்தரவிட்டு, மெல்ல எழுந்து ஒரு மரத்தடியில் உட்கார்ந்தார். அந்த வீரப்புரவி புதைக்கப்பட்ட பிறகே தமக்கு ஒரு குடிசையை அமைத்துக் கொண்டார். அதில் கட்டிலில்லை; மெத்தையில்லை; திண்டு திவாசு எதுவுமே கிடையாது. மரச்சருகுகளைப் பரப்பி ராணா மண்ணில் படுத்தார்.

அப்படியிருந்த சமயத்தில்தான் அவரது சகோதரன் சக்தசிம்மன் வந்து சேர்ந்தான். ராணாவின் பரிதாப நிலை கண்டு சோகத்துடன் நின்றான். ராணா பலவீனத்தால் லேசாகப் புன்முறுவல் செய்து, ''என்ன சக்தா! எப்படி

இன்னும் உயிருடனிருக்கிறாய்? சலீமிடமிருந்து எப்படித் தப்பினாய்?'' என்று விசாரித்தார்.

சக்தா அண்ணனுக்கு அருகில் உட்கார்ந்துகொண்டு அவர் கால்களை மெதுவாகப் பிடித்தான். ''அண்ணா! சலீமிடமிருந்து தப்ப அவசியமில்லை'' என்றான் மெதுவாக.

''ஏன்''-ராணா கவலையுடன் கேட்டார்.

''அவரே உங்களிடம் வர அனுமதி கொடுத்தார்'' என்றான் சக்தா.

பிரதாப்பின் கண்களில் சந்தேகச் சாயை படர்ந்தது. ''உன் உயிருக்கு பதில் நீ எதை விற்றாய் சக்தா?'' என்று ராணா வினவினார்.

''விற்க எதுவும் என்னிடமில்லை. ஏற்கனவே மானத்தை விற்றுவிட்டேன். அடிமையாக வாழ்ந்தேன்'' என்றான் சக்தா.

''அதைப் பெருவாரியான ராஜபுத்ரர்கள் செய்து பதவிகளைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் நீ ஏன் திரும்பி வந்தாய்?'' என்று ராணா மீண்டும் கேட்டார்.

''பழைய பாவங்களுக்கு பிராயச்சித்தம் செய்து கொள்ள, உங்கள் அடிமையாக எதிரிகளுடன் போரிட'' என்று உணர்ச்சியுடன் பேசினான் சக்தா.

''அதற்கு சலீம் ஒப்புக்கொண்டானா?''

''ஒப்புக்கொண்டார் இளைய நவாப். அவரேதான் என்னை அனுப்பிவைத்தார்.''

''என்ன மந்திரம் செய்தாய் நீ? சலீமின் மனத்தைத் திருப்ப?''



''சத்தியத்தைச் சொன்னேன், நடந்ததை உள்ளபடி கூறினேன். உங்களைத் துரத்திய மொகலாய வீரர்களை நானே வெட்டிப் போட்டதையும் கூறினேன்.''

''இத்தனையும் கேட்டார் இளைய நவாப்?''

''ஆம்.''

''அதனால் கோபமடையவில்லை?''

''இல்லை. என் பாசத்தைப் பாராட்டினார். உங்களிடம் சேரும்படி அனுமதியளித்தார்.''

இதைக்கேட்ட ராணாபிரதாப்பின் மனம் நெகிழ்ந்தது. ''சக்தா!'' என்றழைத்தார் மெதுவாக.

''என்ன அண்ணா?''

''ஒரு பெரிய சாம்ராஜ்யம் சிருஷ்டிக்கப்படுகிறதென்றால் அதற்கு நீதியின் அஸ்திவாரம் இருக்கிறது. அந்த அஸ்திவாரம் சலீம். அக்பரால் சாதிக்க முடியாததை இவன் சாதிப்பான். மேவாரின் உண்மை எதிரி இவன் தான்'' என்று பெருமூச்செறிந்தார்; சக்தா எதும் பேசாமல் நின்றான். ''சரி சக்தா! நீ போய் மீதிப் படைகளைக் கவனி, சீர்திருத்து. மழைக் காலம் வரப்போகிறது. உடனடியாக போர் இருக்காது. போர் வரும்போது நாம் தயாராயிருப்போம்'' என்று ராணா உத்தரவிட்டார்.

அந்தச் சமயத்தில் உள்ளே நுழைந்த சம்பக் ''அப்பா! நீங்கள் அதிகமாகப் பேசாதீர்கள். காயங்கள் ஆறும்வரை சும்மா இருங்கள்'' என்று கூறிக்கொண்டு கையிலிருந்த கிண்ணத்தைக் கீழேவைத்து ராணாவின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான். கிண்ணத்திலிருந்த கூழை எடுத்து ராணாவின் வாயில் ஊட்ட முற்பட்டான். அங்கேயே நின்றிருந்த சக்தா ''சம்பக்! ராணாவுக்கு நான் ஊட்டுகிறேன் உணவை'' என்றான்.

சம்பக்கின் முகத்தில் சந்தேகம் விரிந்தது. ''வேண்டாம், இது என் வேலை'' என்று மறுத்தாள் சம்பக்.

சம்பக்கின் முகத்தில் விரிந்த சந்தேகச் சாயையைப் பார்க்க சக்தா தவறவில்லை. ராணாவும் அதைக் கவனிக்கவே செய்தார். அதனால் லேசாக நகைத்தார்.

''என்ன நகைக்கிறீர்கள் அப்பா?'' என்று சம்பக் வினவினாள்.

''ஒன்றுமில்லை. வரவர என் சந்தேகத்தைவிட உன் சந்தேகம் அதிகமாயிருக்கிறது. மொகலாயரைச் சேர்ந்த எந்த ராஜபுத்ரனும் எனக்கு விஷம் வைத்துவிடுவானோ என்று அஞ்சுகிறாய். ஆனால் உன் சித்தப்பன் அப்படியில்லை. அவனில்லாவிட்டால் இத்தனை நேரம் நான் பிணமாயிருப்பேன். மேவார் தனது மன்னனை இழந்திருக்கும்'' என்றார்.

''சித்தப்பாவா!''-வியப்புடன் வினவினாள் சம்பக்.

''ஆம் சம்பக். இவன் எனது சகோதரன். மொகலாயரிடமிருந்து பிரிந்து நமது விடுதலைப் போரில் ஈடுபட வந்திருக்கிறான்'' என்ற ராணா, சக்தாவை அருகில் அழைத்து, ''சம்பக் என் உயிர். என் மகள். அவளுக்கு நிகர் யாருமில்லை. என் மெய்க் காவலாளி'' என்றார்.

''இவளைப்பற்றி மொகலாய வட்டாரங்களில் மிகச் சிறப்பாகப் பேசுகிறார்கள்'' என்று சக்தா சொன்னான்.

''இவள்...''

''சொல்லுங்கள் அண்ணா?''

''மான்சிங்கின் மகள்'' என்ற ராணா நகைத்து, ''மேவாரின் துரோகி ஒரு மாணிக்கத்தை நமக்கு அர்ப்பணித்துவிட்டான்'' என்றார் நகைப்பின் ஊடே.

தீவிர சிந்தனையுடன் வெளியே சென்றான் சக்தா. வெளியே பல குடிசைகள் நிர்மாணமாவதைப் பார்த்தான்.



அவற்றைக் கட்டுவதை மேற்பார்வையிட்டுக்கொண்டிருந்த ரவிசந்தையும் கவனித்தான். அரண்மனையில் வாழ்ந்திருந்த ராணா மண்ணில் படுக்கும் நிலையை எண்ணி மனம் கொதித்தான். பிறகு ரவிசந்தை அணுகி, ''எனக்கும் ஒரு குடிசை கட்டு'' என்று உத்தரவிட்டான்.

அவனைச் சந்தேகத்துடன் திரும்பிப் பார்த்த ரவிசந்த், ''நீ யார்?'' என்று வினவினான்.

''உங்கள் படைத்தலைவன்'' என்று சக்தா சொன்னான்.

அதனால பிரமிப்படைந்த ரவிசந்த், ''உங்களை யார் நியமித்தது?'' என்று சந்தேகத்துடன் வினவினான்.

''என் அண்ணன் பிரதாப்'' என்ற சக்தா, அதற்கு மேல் அங்கு நிற்காமல் ''குடிசை தயாராகட்டும் எனக்கு தனிப்பட'' என்று உத்தரவிட்டுச் சென்று காட்டில் அடர்ந்த பகுதிக்குள் நுழைந்துவிட்டான்.

சக்தா போவதைப் பார்த்துக்கொண்டு நின்ற ரவிசந்த் பிறகு தனது வீரர்களிடம் குடிசைகளை எங்கெங்கு கட்ட வேண்டும் என்பதை அறிவுறுத்திவிட்டு, ''இவற்றையெல்லாம் தள்ளித் தூரத்தில் ஒரு தனிக்குடிசை அமைத்துவிடுங்கள்'' என்று உத்தரவிட்டுச் சென்றான்.

இரண்டு நாட்களில் குடிசைகள் தயாராகின. தனக்கு மற்ற குடிசைகளையெல்லாம் தாண்டி எட்ட ஒரு குடிசை அமைக்கப்பட்டிருப்பதைக் கண்ட சக்தா வருத்தமடைந்தாலும், சினம் கொள்ளவில்லை. ''மொகலாயரிடமிருந்த ராஜபுத்ரர்களை ராணாவைச் சேர்ந்தவர்கள் நம்பாதிருப்பதற்கு காரணங்கள் இருக்கின்றன'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். பிறகு தனது குடிசைக்குள் நுழைந்தான். அங்கு ஒரு சிறு கயிற்றுக் கட்டிலும் படுக்கையும் இருப்பதைக் கண்டு வியப்புற்று, எட்ட நின்று

ஆட்களை வேலை வாங்கிக் கொண்டிருந்த ரவிசந்தை அழைத்தான்.

ரவிசந்த் அவன் அழைப்புக்கு இணங்கி வந்ததும், ''இங்கு மொகலாய கூடாரங்களில் இருக்கும் சௌகர்யம் கிடையாது. ஆனால் முடிந்ததைச் செய்திருக்கிறேன்'' என்றான், ஏளனம் நிறைந்த குரலில்.

அந்த ஏளனத்தை சட்டை செய்யாத சக்தா, ''எல்லாக் குடிசைகளிலும் இதே கயிற்றுக் கட்டிலும் படுக்கையுந்தானா?'' என்று விசாரித்தான்.

''ஆம், இருவர் குடிசையைத் தவிர'' என்றான் ரவிசந்த்.

''யார் குடிசைகள் அவை?''—சக்தாவின் குரலில் கவலை இருந்தது.

''ஒன்று ராணாவின் குடிசை; இன்னொன்று சம்பக்குக்கு உடையது.''

''அவர்களுக்கு மட்டும் ஏன் இந்த விலக்கு?''

''ராணா தரையில்தான் படுப்பார். சம்பக்கும் அப்படித்தான். ராணாவாவது சருகுகளைப் பரப்பிப் படுப்பார். சம்பக்குக்கு அதுவும் கிடையாது, மண்ணில்தான் படுப்பாள்.''

''ஏன்?''

''மேவார் விடுதலையடையும்வரை படுக்கை தரைதான் என்று சபதம் செய்திருக்கிறாள்.''

இந்த விசித்திரத்தைக் கேட்ட சக்தா ''ரவிசந்த்!'' என்று அழைத்தான் அதிகாரத்துடன்.

''படைத்தலைவரே உத்தரவிடுங்கள்'' என்றான் ரவிசந்த்.



சிறிது நேரம் சிந்தித்த சக்தா, குடிசைக்குள் சென்று கட்டிலையும் படுக்கையையும் தூக்கிவந்து வெளியில் போட்டான். ''இவற்றை வேறு யாருக்காவது கொடுத்து விடு'' என்று உத்தரவிட்டான்.

''ஏன் படைத்தலைவரே?''

''இன்று முதல் ராணாவைப்போல் அல்லாவிட்டாலும் அந்த வீரப் பெண்மணியைப்போல் வாழப்போகிறேன். கட்டிலில்லாத குடிசைகளில், இரண்டோடு இதையும் சேர்த்துக்கொள்.''

ரவிசந்த் வியப்பை முகத்தில் காட்டினான். ''படைத் தலைவரே...'' என்று ஏதோ சொல்லத் துவங்கினான்.

அவனை இடைமறித்த சக்தா, ''நான் படைத்தலைவனல்ல'' என்று கூறினான்.

''வேறு யார் நீங்கள்?'' என்று வினவினான் ரவிசந்த்.

''அடிமை'' என்றான் சக்தா.

''அடிமையா?''

''ஆம். இதுவரை மொகலாயருக்கு அடிமையாயிருந்தேன். இனி ராணாவுக்கு அடிமை. நான் யாருக்காவது அடிமையாயிருக்கப் பிறந்தவன். இப்பொழுது மேவாரின் அடிமை. அடிமை உணர்ச்சி என் ரத்தத்தில் ஓடுகிறது'' என்ற சக்தா குடிசைக்குள் நுழைந்துவிட்டான்.

அவன் உள்ளே நுழைந்து குடிசைக் கதவை மூடும் வரையில் வெளியே நின்றிருந்த ரவிசந்தின் முகத்தில் பெருமிதம் நிலவியது. அந்த உணர்ச்சியுடன் தனது குடிசைக்குள் சென்றான் ரவிசந்த். அவன் உற்சாகத்தைக் கவனித்த சம்பக் 'என்ன உற்சாகத்துடன் வருகிறீர்கள்?'' என்று வினவினாள்.

''ஒரு மகாவீரன் நம்மிடை வந்திருக்கிறான்'' என்ற ரவிசந்த், சம்பக்கை நெருங்கி அவளை அணைத்துக் கொண்டான்.

''யாரவன்?'' என்று விசாரித்தாள் சம்பக், அவன் சக்தாவைக் குறிப்பிடுகிறான் என்பதை அறியாமல்.

''ஒரு அடிமை'' என்ற ரவிசந்த், ''உன்னைப்போல் ஒரு அடிமை'' என்று விளக்கினான்.

''என்னைப் போலா?''

''நம்மைப் போல்''

''நம்மைப் போலா?''

''ஆம்''

''நாம் அடிமைகளா?''

''ராணாவுக்கு அடிமைகளல்லவா?''

''ஆம்.''

''அப்படித்தான் அவரும்''

''யார், எனது சித்தப்பாவைச் சொல்கிறீர்களா?''

''ஆம்'' என்றான் ரவிசந்த்.

''சித்தப்பா மகாவீரர்; தியாகத்தின் சிகரம்'' என்றாள் சம்பக்.

இதை வெளியிலிருந்த சக்தா கேட்டுக்கொண்டிருந்தது இருவருக்குமே தெரியாது. ஆனால் அதைக் கேட்டுக் கொண்டிருந்த சக்தாவின் இதயத்தில் பெருமை குடி கொண்டது ''இந்த அடிமைப் பதவி எத்தனை சிறந்தது! எத்தனை மகிமை வாய்ந்தது! இத்தனைநாள் வாழ்நாளை வீணாக அடித்துவிட்டேனே!'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

# 49. வணிகரா ? வைத்தியரா ?

சம்பக்கும் ரவிசந்தும் தன்னைப்பற்றிக் கொண்டிருந்த அபிப்பிராயத்தை ஒட்டுக் கேட்டதால் மனத்தில் பூர்ண திருப்தியுடன் தனது குடிசைக்கு வந்த சக்தா, குடிசைக் கதவைச் சாத்திவிட்டு தரையில் தனது தலைப்பாகைத் துணியை விரித்து படுத்துக்கொண்டான். கீழேயிருந்த கரடுமுரடான தரை அவன் முதுகை மிகவும் நோகச் செய்தாலும் அந்த நோவும் அவனுக்கு இன்பமாயிருந்தது. ''மொகலாயர் கொடுக்கும் பஞ்சணையில் படுக்கலாம், மானத்தை இழந்தால். ஆனால் இந்தத் தரையின் கடுமை உடலைத்தான் வருத்துகிறது, மானத்தை அழிக்கவில்லை. என் அண்ணன் இத்தனை ஆண்டுகள் இப்படி வருந்தித் தானே ராஜபுத்ரர்களின் மானத்தைக் காத்திருக்கிறான்?'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். மொகலாயரிடம் கிடைத்த வாழ்க்கைக்கும் இந்தப் புதிய சுதந்திர வாழ்க்கைக்கும் உள்ள வித்தியாசத்தை எண்ணிப் பார்த்தான். ''யாரோ ஒருவன் தியாகத்தில்தான் இந்து மதம் எப்பொழுதும் பிழைத்திருக்கிறது'' என்ற உண்மையையும் மனத்துக்குள் சொல்லிக் கொண்டான். ''நல்லவேளை, அண்ணனிடம் வந்து சேர்ந்தேன். இனிச் செத்தாலும் மானத்துடன் சாகலாம்'' என்று திருப்தியும் பட்டுக் கொண்டு கண்களை மூடினான்.

ஆனால் சம்பக்கின் குடிசையில் சம்பக்கும் உறங்கவில்லை, ரவிசந்தும் உறங்கவில்லை. ஹல்திகாட் போரின் நாசத்தை நினைத்துக்கொண்டே படுத்துக்கொண்டிருந்த அவ்விருவரில் சம்பக்கே முதலில் பேச முற்பட்டு. ''உங்களைத்தான்...'' என்று ரவிசந்தை அழைத்தாள்.

''என்ன?'' என்று வினவிய ரவிசந்த், பக்கவாட்டில் திரும்பி மல்லாந்து கிடந்த அவள் பூவுடலுக்குக் குறுக்கே தனது வலது கையைப் போட்டான்.

அவன் கைபட்டாலே உணர்ச்சிகள் கொந்தளிக்கும் சம்பக்கின் உடல் அன்று சுரணையற்று இருந்தது. ''ஹல்திகாட் தோல்வியின் விளைவு என்ன ஆகும்?'' என்று கேட்டாள், சம்பக்.

''ஹல்திகாட்டில் நாம் தோற்றதாக யார் சொன்னது?'' என்று வினவினான் ரவிசந்த்.

''பதினான்காயிரம் ராஜபுத்ரர்கள் மடிந்துவிட்டதாகப் படைத்தலைவர்கள் கணக்குச் சொன்னார்களே?''

''உண்மைதான்.''

''அது தோல்வி தானே?''

''வீரர்கள் தன்மானத்துக்காகப் போரிட்டு மடிந்ததைத் தோல்வியென்று சொல்ல முடியாது. ராணா சரணடைந்தாலொழிய ராஜபுதனம் தோல்வியடையாது.''

சம்பக் சிறிது சிந்தித்தாள். ''நாம் ஏன் கோமுல்மீருக்குள் போகவில்லை? இங்கேயே ஏன் குடிசைகளைக் கட்டிக் கொண்டு வாழ்கிறோம்?'' என்று வினவினாள் சம்பக், சிறிது சிந்தனைக்குப் பிறகு.

''எதிரிகள் இந்த மலைக்காட்டுக்குள் வரமுடியாது. நமது தற்சமயத் தலைநகரான கோமுல்மீருக்கு போனால் அந்தக் கோட்டையை சலீம் முற்றுகையிடலாம். ஆகவே பத்து நாட்கள் கழித்து தலைநகருக்குள் நுழைவோம்'' என்றான் ரவிசந்த்.

''பத்து நாட்கள் என்ன கணக்கு?'' என்று கேட்டாள் சம்பக்.



''பத்து என்ற எண் விசேஷமானது'' என்ற ரவிசந்த், அவளை இழுத்து தன்னை நோக்கித் திருப்பி இறுக அணைத்தான் வலது கையால்.

முன்னைவிடச் சற்றே பருத்திருந்த அவள் மார்பு அவன் மார்பில் புதைந்து ''பத்தில் என்ன விசேஷத்தைக் கண்டீர்கள்?'' என்று அவள் கேட்டாள், குனிந்த அவன் தலைக்கு தனது கழுத்தில் இடமளித்து.

''இன்னும் பத்து நாட்களில் பெருமழை வரும். அதற்குப் பிறகு எதிரியும் ஹல்திகாட்டில் தங்கமுடியாது. நாமும் இந்தக் காட்டில் தங்க முடியாது. நல்ல மழையில் கோமுல்மீரை முற்றுகையிடும் திறன் மொகலாயருக்குக் கிடையாது. பத்து என்ற எண்ணுக்கு இது ஒரு விசேஷம். இன்னொரு விசேஷமும் இருக்கிறது'' என்றான் ரவிசந்த்.

''சற்று சும்மா இருங்கள். கழுத்தைக் கடிக்காதீர்கள்'' என்ற சம்பக் சற்றே புரண்டாள். ''இன்னொரு விசேஷம் என்ன?'' என்றும் கேட்டாள்.

அவள் புரண்டதால் மீண்டும் அரைகுறையாக மல்லாந்த அவள் உடலில் பெருத்த தாமரைகள் இரண்டும் பெருத்தும் தடித்தும் தெரிந்தன, அவள் கழுத்தைவிட்டு மீண்ட அவன் கண்களுக்கு. அவற்றை நீண்ட நேரம் பார்த்துக்கொண்டிருந்த ரவிசந்த் ''சம்பக்! பெண்கள் குழந்தையைத் தாங்கும் மாதமும் பத்து'' என்றான்.

சம்பக்கின் முகத்தில் வெட்கரேகை ஓடியது. ''இந்தக் கணக்கை புதிதாகக் கண்டுபிடித்துவிட்டீர்களாக்கும்?'' என்றாள் அவள், அவன் கண்களுடன் தனது கண்களைக் கலந்து.

''கண்டுபிடிக்கவில்லை, அதன் விசேஷத்தைத் தெரியப் படுத்தினேன்'' என்றான் ரவிசந்த்.

''என் விஷயத்தில் அது தவறு'' என்றாள் சம்பக், மெல்ல நகைத்தவாறு.

''எது தவறு?''

''பத்து மாதம் என்பது.''

''ஏனாம்?''

''மீதி ஏழு மாதங்கள்தான் இருக்கின்றன'' என்ற சம்பக் தனது முகத்தை அவன் மார்பில் புதைத்தாள்.

ரவிசந்த் பெரிதும் சங்கடத்துக்குள்ளானான். அவளைச் சற்று தள்ளிப்பிடித்து பருத்த மார்பகத்தை கவனித்தான். இடைக்குக் கீழே லேசாக இருந்த எழுச்சியையும் கவனித்தான். அந்த இடத்தில் கையை வைத்து மெதுவாகத் தடவினான், மிகப் புனிதமான பூஜா மலரைத் தொடுத்தது போல. பிறகு ''என்னிடம் இத்தனை நாள் ஏன் சொல்லவில்லை?'' என்றும் கேட்டான் சினத்துடன்.

''புருஷர்களுக்கு கண்ணுமில்லை, கணக்குமில்லை'' என்றாள் சம்பக், அவன் முகத்தைப் பார்க்காமலே.

''யார் சொன்னது?''

''நான் சொல்கிறேன்.''

''என்ன சொல்கிறாய்?''

''மூன்று மாதங்களாக நான் வீட்டிலேயே இருக்கிறேன், விலகவில்லை. ஆகையால் கணக்கைப் பார்க்கவில்லை நீங்கள். பெண்கள் நடை மாறுதலைப் பார்த்தாலே தெரியும் ரகசியம். அதையும் பார்க்கவில்லை நீங்கள். ஆகையால் கண்ணும் குருடு, கணக்கும் பூஜ்யம்'' என்ற சம்பக், மிகுந்த வெட்கத்தால் கண்களை மூடிக் கொண்டாள்.



எழுந்து அவள் பக்கத்தில் உட்கார்ந்து அவளை நோக்கினான் ரவிசந்த். அவள் முகத்தில் புதுப்பொலிவு இருந்தது. மார்பகத்தில் புது விஸ்தரிப்பு இருந்தது. வயிறு பெரிதில்லை. ஆகையால் இடையிலிருந்த முடிச்சை லேசாகத் தளர்த்தினான். ஆலிலை வயிறு வெள்ளி கலந்த தங்கக் கவசம் போல் லேசாக எழுந்திருந்தது. ஏதோ பெரிய பொக்கிஷத்தை அவள் வைத்திருந்ததுபோல் நினைத்தான் *முத்து, மாணிக்கம் இவை போன்ற பொக்கிஷத்தை உள்ளே வைத்திருக்கும் சமுத்திரம் போலவும், நெருப்பை உள்ளே அடக்கியிருக்கும் வன்னிமரம் போலவும், யார் கண்ணுக்கும் தெரியாமல் அந்தர்வாஹினியாக ஓடும் சரஸ்வதி நதியைப் போலும் அவள் மணிவயிறு காட்சியளிப்பதைப் புரிந்து கொண்டான் ரவிசந்த். ஏதோ புண்ணிய பூமியைப் பார்ப்பதுபோல் அவள் வயிற்றைப் பார்த்த அவன் அதை மெதுவாகத் தொட்டான்.

''பயப்படாதீர்கள்'' என்றாள் சம்பக். அவன் அச்சத்தைக் கண்டு நகைக்கவும் செய்தாள்.

ஆனால் ரவிசந்த் அதை புஷ்பத்தைத் தொடுவதுபோல் தொட்டான். அவள் அவன் முகத்தைப் பிடித்து அங்கு படுக்கவைத்தாள். அவன் கைகளிலொன்று அவள் மார்பின் மீது கிடந்தது. உணர்ச்சிகள் அதிகமாகப் புரண்டும் அவன் மார்பகத்தைத் தொடவும் அஞ்சினான். அவன் கையை அவளே தனது கையால் எடுத்து மார்பின் மீது வைத்துக்கொண்டாள். பிறகு திரும்பி அவனை அணைத்தாள்.

அந்த அரவணைப்புக்குள் சிக்கிய ரவிசந்த் திகிலுடன் அதில் இணைந்துகிடந்தான். அவள் தனது உதடுகளை

*சுதக்ஷிணையின் கர்ப்பத்தைப்பற்றிய காளிதாஸன் உவமைகள்- 'ரகு வம்சம்' மூன்றாவது சர்க்கம்.

அவன் காதுக்கருகில் கொண்டுவந்து, ''ஏன் இப்படி நடுங்குகிறீர்கள்?'' என்றாள் மிக ரகசியமாக.

ரவிசந்த் அவள் காதிடம் தனது உதடுகளைக்கொண்டு போனான். ''ஏதாவது நேர்ந்து விட்டால் ?'' என்று உளறினான்.

எல்லைமீறிய அவன் அச்சத்தையும் நடுங்கும் குரலையும் கவனித்த அவள் புன்முறுவல் கொண்டாள். ''எதுவும் நேராது. இப்பொழுதுதானே ஆரம்பம்'' என்று சுட்டிக் காட்டினாள்.

''எனக்கு இதெல்லாம் சரியாகத் தெரியாது சம்பக். யாரையாவது விசாரிக்கலாம்'' என்றான்.

அவள் பெரிதாகவே நகைத்தாள். ''விசாரிக்கவா போகிறீர்கள்?'' என்று வினவினாள்.

''நமக்கு தெரியாததைப்பற்றி விசாரித்தாலென்ன?'' —அவன் கேட்டான்.

''நமக்கு என்று சொல்லாதீர்கள். எனக்குத் தெரியும்''

''உனக்கு யார் சொல்லிக் கொடுக்கிறார்கள்.''

''என்னைக் காதலிக்க உங்களுக்கு யார் சொல்லிக் கொடுத்தார்கள்?''

''அது இயற்கை.''

''இதுவும் அப்படித்தான். இயற்கை அன்னை தனது பெண்களுக்கு எது, எந்தக் காலத்தில், எப்படி என்பதை அறிவுறுத்துகிறாள்'' என்ற சம்பக், தனது கால்களுடன் அவன் கால்களைப் பிணைத்தாள், நெருங்கினாள்.

பொழுது விடிந்து அரை ஜாமத்திற்குப் பிறகும் சம்பக்கின் குடிசைக் கதவு மூடிக் கிடந்ததை தூரத்தில் தனது



குடிசை வாயிலில் நின்ற சக்தசிம்மன் கவனித்தான். எதையோ நினைத்துப் புன்முறுவல் கொண்டான், பிறகு ராணாவின் குடிசையை நோக்கி நடக்க முற்பட்டான். கதவைத் திறந்து உள்ளே நுழைந்தான். ராணா அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தார். கதவை மெதுவாக மூடிக் கொண்டு வெளியே வந்தான். அதே சமயத்தில் மலையின் மீது ஒரு புரவியில் ஏறி வந்துகொண்டிருந்த ஒரு வயோதிகனைக் கண்டு அசந்துநின்றான். ''இவன் இங்கே எதற்கு வந்தான்?'' என்றும் தன்னைக் கேட்டுக்கொண்டான்.

வந்தவரே அதற்கு விடையளித்தார். ''சக்தா! ராணாவின் குடிசை எது?'' என்று கேட்டார்.

அப்படிக் கேட்ட இதயதுல்லாவை வியப்புடன் பார்த்த சக்தசிம்மன், ''நீர் எதற்காக இங்கு வந்தீர்?'' என்று வினவினான்.

''ராணாவைப் பார்க்க'' என்றார் இதயதுல்லா.

''எதற்கு?''

''சிகிச்சை செய்ய''

''நீர் என்ன வணிகரா? வைத்தியரா?''

''இரண்டுந்தான்'' என்று இதயதுல்லா கூறிக்கொண்டிருக்கையிலேயே, தனது குடிசைக்கு வெளியே வந்த சம்பக்கை நோக்கி, ''மகளே! உனக்கும் மருந்து கொண்டு வந்திருக்கிறேன்'' என்று கூவினார் உரக்க.

''சம்பக்குக்கு காயம் எதுவுமில்லை'' என்றான் சக்தா.

''உட்காயம் இருக்கிறது'' என்ற இதயதுல்லா சம்பக்கை நோக்கி நடந்தார்.

# 50. யுக புருஷன் !

கி.பி. 1576-வது ஆண்டு ஜுலை மாதம் 7-ந் தேதியன்று ஹல்திகாட் சமவெளியிலும் கணவாய்களிலும் ராஜபுத்ரர்கள் ரத்தம் ஆறாக ஓடிய பின்பு, இளைய நவாப் ஸலீம் தனது படைகளை மீண்டும் மலைப்பகுதியிலிருந்து கீழே சமநிலத்துக்குக்கொண்டு சென்றான். அந்த யோசனையை மான்சிங்கே சொன்னார். ''சலீம்! இன்னும் பத்து நாட்களில் மழைகாலம் வரும். அப்பொழுது இங்கு முகாம் செய்திருப்பது நமது படைகளுக்கு ஆபத்து'' என்று அவர் சொன்னபடி ஸலீம் படைகளைக் கீழே இறக்க கட்டளையிட்டு மலையடிவாரத்தில் பழையபடி முகாமும் செய்தான். மொகலாயப் படைகள் இறங்கிய இரண்டு நாட்களுக்குள் ஏதோ சோதிடம் தெரிந்தவர்போல் இதயதுல்லாவும் கோமுல்மீரை அணைத்திருந்த பெரும் காட்டுக்கு வந்து சேர்ந்தார். அங்கு சம்பக்கைப் பார்த்து அவள் நிலையை முகத்தோற்றத்திலிருந்தே கண்டுபிடித்த இதயதுல்லா, ரவிசந்தை குடிசைக்கு வெளியே இருக்கச் சொல்லிவிட்டு, சம்பக்கை மட்டும் அழைத்துக்கொண்டு அவள் குடிசைக்குள் நுழைந்து அவளை நோக்கி ''மகளே! உனக்கு எத்தனை மாதம்?'' என்று வினவினார். சம்பக் தனது கண்களை நிலத்தில் ஓட்டி, ''மூன்று'' என்று முணுமுணுத்தாள்.

''மகளே! வைத்தியனிடம் வெட்கப்பட்டுப்பயனில்லை. நான் கேட்கிற கேள்விகளுக்கு பதில் சொல்'' என்ற இதயதுல்லா, ''உனக்கு வாந்தி நின்றுவிட்டதா?'' என்று வினவினார்.



''இல்லை. அவ்வப்பொழுது வருகிறது.''

''மயக்கம்?''

''எப்பொழுதாவது லேசாக இருக்கிறது''

''பாதகமில்லை. இருப்பினும் இன்னும் ஒரு மாத காலத்துக்கு நீ தனியாயிருப்பது சரியல்ல.''

''நான் தனியாயில்லை. அவர் துணைக்கு இருக்கிறார்'' என்றாள் சம்பக் மிக மெதுவாக.

''அவர் துணை இன்னும் இரண்டு மாதங்களுக்குக் கூடாது'' என்றார் இதயதுல்லா.

''ஏன்?'' என்று மெல்லக் கேட்டாள் சம்பக்.

இதயதுல்லா உடனடியாகப் பதில் சொல்லவில்லை, சங்கடத்தில் சிறிது அசைந்து நின்ற நிலையில். பிறகு மெதுவாகச் சொன்னார்: ''அவர் உறவு சில அசந்தர்ப்பங்களை விளைவிக்கும். யாராவது பெண்பிள்ளைகளைத் துணைக்கு வைத்துக்கொள்'' என்று.

அவர் சொன்னதன் பொருள் அவளுக்கு நன்றாகத் தெரிந்ததால் மெதுவாக நகைக்கவும் செய்தாள் சம்பக். ''இந்தப் படை முகாமில் பெண்கள் யாரும் கிடையாது. எல்லாரும் கோமுல்மீர் கோட்டைக்குள் இருக்கிறார்கள்'' என்று விளக்கவும் செய்தாள் நகைப்பின் ஊடே.

''அப்படியானால் நீயும் கோட்டைக்குள் போய்விடு'' என்று கூறிவிட்டு, வெளியே சென்று தமது புரவியின் இரு பக்கங்களிலும் தொங்கிய பைகளில் ஒன்றை எடுத்துவந்து பலாச இலையில் கட்டப்பட்ட ஒரு பொட்டலத்தை சம்பக்கிடம் கொடுத்து, ''இதிலிருக்கும் சூர்ணத்தை தினம் ஒரு

டம்ளர் பாலில் கலந்து குடித்துவிடு. உடம்பிலும் தெம்பு ஏறும், பிரசவமும் சுகமாயிருக்கும்'' என்று கூறினார்.

சம்பக் பெரிதாக நகைத்தாள். ''இங்கு பால் ஏது?'' என்றும் வினவினாள்.

நிலைமையை நன்றாகப் புரிந்துகொண்ட இதயதுல்லாவின் முகத்தில் அனுதாபம் உதயமாயிற்று. ''ராணாவுக்குக்கூடப் பால் கிடையாதா?'' என்று வினவினார்.

''அவர் குழந்தைகளுக்குக்கூட கிடையாது'' என்றாள் சம்பக்.

ராணாவின் ஏழ்மையையும் தியாகத்தையும், இரண்டும் கலந்த வீரச் செல்வத்தையும் எண்ணி பிரமித்த இதயதுல்லா, ''சம்பக்! வா ராணாவைப் பார்ப்போம்'' என்று கூறி குடிசைக்கு வெளியே சம்பக் பின் தொடர நடந்தார். வெளியில் சங்கடப்பட்டு நின்று கொண்டிருந்த ரவிசந்தை நோக்கி, ''ரவிசந்த்! என் புரவியிலிருக்கும் அந்த இன்னொரு தோல்பையையும் கொண்டு வா'' என்று கூறிவிட்டு, சம்பக் வழிகாட்ட ராணாவின் குடிசையை நோக்கிச் சென்றார்.

குடிசைக்குள் மேவார் ராணா பிரதாபசிம்மன் பரதேசி போல் தரையில் படுத்துக்கிடந்தார். பல போர்களைக் கண்ட அவரது வாள் ஒரு பக்கத்திலும், நீண்ட ஈட்டி இன்னொரு பக்கத்திலும் கிடந்தன. அந்தச் சூழ்நிலை மீது ஒருமுறை தமது கண்களை ஓட்டிய இதயதுல்லா, ''மகளே ராணாவை சிறிது எழுப்பு'' என்றார்.

''எதற்கு?'' என்று குறுக்கே புகுந்தான் ரவிசந்த்.



''ஹல்திகாட் போரில் அவர் உடலில் பல காயங்கள் பட்டதாக மொகலாய வீரர்கள் பேசிக்கொண்டார்கள். அவற்றைப் பார்க்க வந்தேன்'' என்றார் இதயதுல்லா.

அதற்குமேல் ரவிசந்தைப் பேசவிடாத சம்பக் ராணாவின் பக்கத்தில் அமர்ந்து, ''அப்பா! அப்பா!'' என்று இருமுறை அழைத்து, அவர் உடல்மீது தனது கையையும் வைக்கவே ராணா சற்று புரண்டு மெல்ல கண்களைத் திறந்தார். கண்கள் ஜுரத்தால் செக்கச்செவேலென்றிருந்தன. பார்வையில் பழைய தீட்சண்யமில்லை. ஒருமுறை கண்விழித்த ராணா மீண்டும் கண்களை மூடி, ''சைதக்! சைதக்! நீ எப்படியிருக்கிறாய்?'' என்று கேட்டார்.

அத்தனை ஜுரத்திலும் இறந்துபோன தமது புரவியைப் பற்றி அவர் அரற்றுவதைக் கண்ட சம்பக்கின் கண்களில் நீர் சுரந்தது. ராணாவின் தலையை எடுத்து தனது மடியில் வைத்துக்கொண்டாள். ''அப்பா! வைத்தியர் வந்திருக்கிறார்'' என்று கூறியும் ராணா கண்விழிக்கவில்லை.

இதயதுல்லா தமது பையிலிருந்த ஒரு குப்பியை எடுத்து அதிலிருந்த திராவகத்தை ராணாவின் நாக்கில் பலவந்தமாகத் தடவினார். சிறிது நேரத்தில் ராணா மீண்டும் கண்விழித்தார். அருகில் உட்கார்ந்திருந்த நிலையில் இதயதுல்லா அந்த மகாவீரனுக்கு தலை வணங்கி, ''ராணா! நான்தான் இதயதுல்லா'' என்றார்.

ராணாவுக்கு முழுச்சுரணை வந்துவிடவே சம்பக்கையும் ரவிசந்தையும் நோக்கினார். ''நமக்கு பீரங்கிகளையும் துப்பாக்கிகளையும் கொடுத்தவர்'' என்று ரவிசந்த் விளக்கினான்.

புரிந்ததற்கு அறிகுறியாக ராணா தலையசைத்தார். ''தங்களுக்கு வைத்தியம் செய்ய வந்திருக்கிறேன்'' என்றார் இதயதுல்லா.

''எனக்கா! வைத்தியமா?'' என்று வினவிய ராணா சட்டென்று எழுந்து உட்கார்ந்தார். அவர் உட்கார்ந்தது இயற்கையாக மனத்தில் உள்ள வீரத்தினால் மட்டுமே என்று உணர்ந்த இதயதுல்லா, ''ராணா! ராஜபுத்ரர்களின் மானத்தைக் காக்கும் ஒரே வீரர் தாங்கள். இன்னும் போர் முடியவில்லை. ஸலீம் மீண்டும் வருவார். அதற்குள் உங்கள் காயங்கள் ஆற வேண்டும்'' என்று சுட்டிக்காட்டினார்.

ராணா புன்முறுவல் கொண்டார். ''என் புண்களுக்கு வைத்தியம் தேவையில்லை. அவை தாமாக ஆறிவிடும்'' என்றார்.

''மற்ற புண்கள் ஆறிவிடும். ஆனால் உங்கள் உடலில் துப்பாக்கி ரவை புகுந்திருப்பதால் அது ஆறாது. ஏற்கனவே ரத்தசேதம் உங்களுக்கு பெரிதும் ஏற்பட்டிருக்கிறது'' என்ற இதயதுல்லா, யார் அனுமதியையும் கேட்காமல், ராணாவின் அங்கியைக் கழற்றி ரண காயங்களை பரிசோதித்தார். பிறகு துப்பாக்கி ரவை பாய்ந்த இடத்தையும் நோக்கினார். ''இதை முதலில் அகற்ற வேண்டும். இதை இங்கேயே செய்யட்டுமா? அல்லது கோமுல்மீர் கோட்டைக்கு வருகிறீர்களா'' என்று வினவினார்.

''அங்கு என்ன வேலை இப்பொழுது?'' என்று ராணா கேட்டார்.

''மழை வந்தால் நீங்கள் இங்கு தங்க முடியாது. தங்கள் தலைநகரக் கோட்டையில் தங்குவது தங்களுக்கும்



நல்லது. படைகளுக்கும் நல்லது'' என்று இதயதுல்லா சுட்டிக்காட்டினார்.

ராணா புரிந்ததற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார். ''நீங்கள் இங்கேயே சிகிச்சையை செய்துவிடுங்கள். பிறகு கோமுல்மீர் போகிறேன்'' என்று ராணா சொல்லி விட்டு, ''ரவிசந்த்! சக்தசிம்மனை அழைத்து வா'' என்று உத்தரவிட்டார்.

சக்தசிம்மன் வந்ததும் இதயதுல்லாவைக்கண்டு மகிழ்ச்சியடைந்தான். ''அண்ணா! இதயதுல்லா ஒரு மாணிக்கம்'' என்றான்.

ஒப்புக்கொண்டதற்கு அறிகுறியாக ராணா தலையை அசைத்தார். பிறகு சொன்னார்''இவர் எனக்கு வைத்தியம் செய்வதாகச் சொல்கிறார்'' என்று.

''இதயதுல்லா பெரிய வணிகர். பெரிய வைத்தியர். அவர் வந்தது நமது பாக்கியம்'' என்றான் சக்தா.

''வைத்தியத்தை இங்கு வைத்துக் கொள்வதா, கோமுல்மீரில் வைத்துக்கொள்வதா என்று கேட்கிறார் இவர்'' என்று ராணா சொன்னார்.

''அவரே தீர்மானிக்கட்டும்'' என்றான் சக்தா.

இதயதுல்லா சிறிது சிந்தித்தார். ''சரி இங்கேயே வைத்தியம் செய்துவிடுகிறேன்'' என்றுகூறி தமது பைகளிலிருந்து இரண்டு மூன்று கத்திகள், ஒரு இடுக்கி, மருந்துகள் இவற்றைப் பரப்பினார். ஒரு துணியை விரித்து பிறகு சுள்ளிகளைக் கொணரச் சொல்லி மெதுவாகக் கொழுந்து விட்ட நெருப்பை உண்டாக்கினார். அதில் கத்திகளையும் இடுக்கியையும் காயவைத்தார். அடுத்து அகலமான

பாத்திரத்தில் நீர் கொண்டுவரச் சொல்லி அதையும் காய்ச்சினார். ''சம்பக்! நீ உன் குடிசைக்குப் போய்விடு. சிகிச்சை முடிந்ததும் வரலாம்'' என்றார்.

''நான் இங்கேயே இருக்கிறேன்.''

''இது ஆயுத சிகிச்சை!'' என்றார் இதயதுல்லா.

''எதுவாயிருந்தாலும் பாதகமில்லை'' என்று சம்பக் பிடிவாதம் பிடித்தாள். சிகிச்சையைத் தொடங்கினார் இதயதுல்லா. முதலில் கத்தி, வேல் காயங்களைக் கழுவி மருந்து போட்டார். பிறகு துப்பாக்கி ரவை காயத்தைப் பார்த்தார். ''ரவிசந்த்! ராணாவின் கையை இறுகப் பிடித்துக்கொள்'' என்று கூறினார்.

''தேவையில்லை'' என்றார் ராணா.

''ரவை ஆழத்திலிருக்கிறது'' என்றார் இதயதுல்லா.

''இருக்கட்டும்''

''கத்தியால் தோண்டவேண்டும்''

''தோண்டுங்கள்''

''அதிகமாக வலிக்கும்''

''வலிக்கட்டும்'

அதற்கு மேல் எதும் பேசாத இதயதுல்லா நெருப்பி லிருந்த கத்திகளில் ஒன்றை எடுத்து காயத்தில் வைத்தார். ராணா முகத்தைக்கூட சுளிக்கவில்லை. ரவையின் ஆழத் திற்கு கத்தியைப் பாய்ச்சி கிளறினார். ராணாவின் முகம் சாந்தமாயிருந்தது. பிறகு இடுக்கியை எடுத்து காயத்தின் உள்ளே செலுத்தி ரவையைப் பிடித்து இழுத்தார். மெது வாக ரவை வெளியே வந்தது. குருதியும் பொங்கியது.



அந்த குருதியை அடக்க இன்னொரு காய்ச்சின கத்தியை காயத்தில் வைத்து அழுத்தி சதையை தீய்த்தார். ராணா அதற்கும் அசையவில்லை. மருந்தை வைத்துக் கட்டியதும் இதயதுல்லா பிரமை தட்டிய கண்களால் ராணாவைப் பார்த்து ''ராணா! வேறு யாராயிருந்தாலும் இந்த சிகிச்சைக்கு அலறியிருப்பார்கள்'' என்று சொன்னார். குரலிலும் பிரமை ஊடுருவ.

ராணா நகைத்தார். ''இதயதுல்லா! புறக்காயங்கள் என்னை அசைப்பதில்லை. இந்தக் கையை நீங்கள் வெட்டி யிருந்தாலும் கத்தியிருக்க மாட்டேன். இன்னொரு கையால் என்னால் போரிட முடியும். ஆனால் ராஜபுத்ரர் மானமிழந்து அடிமைப்பட்டிருப்பதால் ஏற்பட்டுள்ள உட்காயம் இருக்கிறதே, அது தான் எனக்கு வேதனை தருகிறது'' என்று கூறினார்.

இதயதுல்லா ராணாவின் வீரத்தை நினைத்து பெருமிதம் கொண்டார். ''ராணா நீங்கள் நீடூழி வாழ வேண்டும்'' என்று கூறி எழுந்தார். ''இனி இந்த காயங் கள் தானாக ஆறிவிடும். எனக்கு உத்தரவு கொடுங்கள்'' என்றார்.

''இதயதுல்லா! உமக்குப் பரிசளிக்க என்னிடம் எதுமில்லை'' என்றார் ராணா.

''ஒரு பரிசு கொடுக்கலாம்'' என்றார் இதயதுல்லா.

''கேளுங்கள்''

''கொடுப்பீர்களா?''

''என் வாளின் மேல் ஆணை''

''அப்படியானால் உடனடியாக கோமுல்மீருக்குள் செல்லுங்கள்'' என்ற இதயதுல்லா ''ராணா!ஒரு யுகபுருஷ

னுக்கு வைத்தியம் செய்ய முடிந்ததே எனக்குபோதியபரிசு. நீங்கள் என் சொல்லைக் கேட்டால் அதுதான் அந்த ஒரு பரிசு''என்று கூறிவிட்டு''அடுத்து சலீம்வரும்போதுநீங்கள் போரிடவும் என் யோசனையை கேட்பதுநல்லது''என்றார்.

ராணா மெதுவாக எழுந்து நின்றார். சம்பக்மீது ஒரு கையைப்போட்டு அவளை ஊன்று கோலாகக்கொண்டார். ''ரவிசந்த்! நமது படைகள் நாளையே கோமுல்மீருக்குள் நுழையட்டும்'' என்று உத்தரவும் இட்டார்.

இதயதுல்லா ராணாவின் முன்பு மண்டியிட்டு ''மகா வீரனே! உன்னைப் பெற்ற இந்த மண் பாக்கியம் செய்தது. உனக்கு மருத்துவம் புரிந்து என் ஜன்மமும் சாபல்ய மானது'' என்றார்.

ராணா தமது முன்பு மண்டியிட்ட இதயதுல்லாவின் தலைமீது தமது கையைவைத்தார். ''இதயதுல்லா! மகா புருஷர்கள் முஸ்லீம்களிலும் இருக்கிறார்கள் என்பது எனக்குப் புரிகிறது'' என்றார்.

இதயதுல்லா எழுந்து,ராணாவிடமும் மற்றவர்களிடமும் விடைபெற்றுச் சென்றார். அடுத்த இரண்டாவது நாள் ராணா தமது புதிய தலைநகரான கோமுல்மீருக்குள் நுழைந்தார். மழையும் வந்தது.

## 51. நோகுன் கிணறு!

மழைக்காலம் போய் வசந்த காலமும் வந்தது. வந்தது வசந்தம் மட்டுமல்ல; இளைய நவாப் சலீமும் வந்து கோமுல்மீருக்குப் புறம்பேயிருந்த ராணாவின் சிறு படையைத் தோற்கடித்தார். ஆனால் கோமுல்மீருக் குள்ளிருந்த ராணாவையோ அவரின் மீதிப் படையையோ வெற்றிகொள்ளச் சலீமால் முடியாததால் அந்தக் கோட் டையை முற்றுகையிடும்படி கோகா, ஷாபாஸ்கான் ஆகிய இரு படைத்தலைவர்களுக்கும் ஆணையிட்டுச் சென்றான். முற்றுகை கோட்டைக்குள் உணவுப் பஞ்சத்தை விளைவித் தது. இருப்பினும் ராணா அசையவில்லை. தமது படை களுக்கு, உள்ள உணவைப் பகிர்ந்து அளித்தார். தமது உணவையும் குறைத்துக்கொண்டார். இடையிடையே ரவிசந்த் கோட்டைச் சுரங்க வழியாக வெளியே சென்று ரகசியமாகக் கொணர்ந்த உணவு கோட்டையிலிருந்த வீரர்களைப் போஷித்து வந்தது. அப்படி உணவு கொண்டு வந்த ஒரு நாள் மாலை அவன் தனக்கென ஒழித்துவிடப் பட்டிருந்த இல்லத்துக்கு வந்தபோது சம்பக் உணவை எதிரில் வைத்துக்கொண்டு சாப்பிடாமல் உட்கார்ந்திருந்த தைக் கவனித்தான். ''ஏன் சம்பக்! உணவு செல்ல வில்லையா?'' என்று அன்புடன் விசாரித்தான். ஐந்தாவது மாதம் நெருங்கி விட்டதால் ஓரளவு அதிகரித்த கர்ப்பத் துடனிருந்த சம்பக் அவனை நோக்கி, ''உணவு செல்லாம லில்லை. ஆனால் உட்கொள்ள மனம் இடம் கொடுக்க வில்லை'' என்றாள்.

''என்? மனத்தில் என்ன விசாரம் உனக்கு?'' என்று வினவினான் ரவிசந்த் கவலையுடன்.

''ராணா இன்று சாப்பிடவில்லை'' என்றாள் சம்பக்'

''ஏன்?'' என்று வினவினான் ரவிசந்த்.

''அவர் குழந்தைகள் அழுதன. அதனால் தமது உணவை அவர்களுக்கு பங்கிட்டுக் கொடுத்துவிட்டார்'' என்று சம்பக் விளக்கினாள்.

இதைக் கேட்ட ரவிசந்த் பிரமித்தான். ''சம்பக்! ராணாவுக்கு வேறு உணவு இல்லையா?'' என்று விசாரித்தான் பிரமிப்பின் ஊடே.

''இருக்கிறது. ஆனால் கோட்டை முற்றுகையிடப்பட்டிருப்பதால் ஒருவருக்கு இவ்வளவுதான் ஆகாரம் என்று ராணா நிர்ணயித்திருக்கிறார். அதற்குமேல் யாரும் சாப்பிடக் கூடாது என்று திட்டமான உத்தரவிருக்கிறது. அதற்கு ராணா முதலில் கீழ்ப்படிகிறார்'' என்று சம்பக் சொன்னாள்.

ரவிசந்த் வியப்பின் எல்லையை அடைந்தான். ஏதோ சிறிது நேரம் சிந்தித்துவிட்டு ''இந்த உணவு உன் பங்கு தானே?'' என்று கேட்டான்.

''ஆம்''

''அப்படியானால் நீ ஏன் சாப்பிடவில்லை?''

''காரணம் முன்பே சொன்னேன்''

''காரணம் சரியல்ல. நீ பட்டினி கிடப்பதற்கும் ராணா பட்டினி கிடப்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது.''

''என்ன வித்தியாசம்?''

''ராணா பட்டினி கிடந்தால் அவர் மட்டும் கிடக்கிறார் ...''



19413
3492936

''உம்...?''

''நீ பட்டினி கிடந்தால் உன் மகனையும் பட்டினி போடுகிறாய்''

''என் மகனா?''

''ஆம்'' என்ற ரவிசந்த் அவள் வயிற்றை நோக்கினான்.

''அங்கிருப்பவன் மகன் என்பது எப்படித் தெரியும் உங்களுக்கு?'' என்று கேட்ட சம்பக் நகைத்தாள்.

''தெரியும்'' என்றான் ரவிசந்த்.

''எப்படி?'' என்று அவள் மீண்டும் கேட்டாள்.

''இரவு நீ உறங்கியபோது...''

''உம்...''

''உன் வயிற்றின்மேல் கையை வைத்தேன்''

''உம்''

''அங்கு உள்ளிருப்பவன் என் கையை காலால் விண்விண்ணென்று உதைத்தான். பெரிய போக்கிரி''

சம்பக் கணவனை அன்புக் கண்களால் நோக்கினாள். ''இருக்கும்'' என்றாள் மெதுவாக.

''என்ன இருக்கும்?''

''உதைத்திருக்கும்''

''இருக்குமென்ன? உதைத்தான் என்றுதான் சொன்னேனே.''

''போக்கிரியென்றும் சொன்னீர்கள்''

''ஆம்''

''அப்பனைப் போலிருக்கிறான்'' என்ற சம்பக் எதிரே உட்கார்ந்துவிட்ட ரவிசந்தின் மடிமீது தலையைசாய்த்துக் கொண்டாள். ரவிசந்த் அவள் தலையைத் தடவிக் கொடுத்தான். குழல்களைக் கோதிவிட்டான். பிறகு இலையிலிருந்த கோதுமைச் சப்பாத்தியொன்றை சிறிது விண்டு அவள் வாயில் ஊட்டினான்.

அவள் அதை மென்றுகொண்டே ''ராணா ...'' என்று ஏதோ சொல்ல முயன்றாள்.

''அவருக்கு பிறகு ஊட்டுகிறேன்''என்றான் ரவிசந்த்.

''ஏனாம்?'' என்று அவள் கெஞ்சினாள்.

''அவருக்கும் வயிறு பெரிதாகத்தானிருக்கிறது. ஆனால் அவர் கர்ப்பமில்லை''என்ற ரவிசந்த்,சப்பாத்தியை தட்டு ஓரத்திலிருந்த கீரையில் தொட்டுத்தொட்டு ஊட்டினான். மெதுவாக அவளுக்கு உணவு அளித்து முடிந்ததும் ''உனக்கு படுக்கை போடட்டுமா?'' என்று கேட்டான்.

அவள் பதிலேதும் சொல்லவில்லை. பெருமிதமும் வெட்கமும் கலந்த பார்வையொன்றை அவன் மீது செலுத்தினாள். அவன் அவளுக்கு படுக்கையை விரித்து அவளைப் படுக்கவைத்துவிட்டு தட்டை எடுத்து தானே கழுவினான். ''இனி ராணாவைக் கவனித்துவிட்டு வருகிறேன்'' என்று கூறி வெளியே சென்றான்.

ராணாவின் மாளிகையை அவன் அணுகியபொழுது ராணா வாயிலிலேயே நின்றிருந்தார். ராணாவை வணங்கிய ரவிசந்த் ''ராணா! நீங்கள் உணவருந்தவில்லையென்று கேள்விப்பட்டேன்'' என்றான்.

''சம்பக் கோள் சொன்னாளா?''என்று ராணா கேட்டு நகைத்தார்.

''ராணா!'' சற்று உறுதியான குரலில் அழைத்தான் ரவிசந்த்.



''என்ன ரவிசந்த்?''—ராணா சர்வ சாதாரணமாகக் கேட்டார்.

''தங்கள் உடல் நலந்தான் எங்கள் பலம்'' என்றான் ரவிசந்த் உஷ்ணத்துடன்.

''அப்படியா?''—ராணாவின் கேள்வியில் கேலி இருந்தது.

''ஆம் ராணா'' என்றான் ரவிசந்த்.

''நான் பலிஷ்டனாயிருந்து நீங்களெல்லாம் வீரர்களாகாவிட்டால் நான் யாரை வைத்துக்கொண்டு போரிடுவது?'' என்று ராணா வினவினார்.

இதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் திகைத்த ரவிசந்த் ''ராணா! இந்த சாக்கையெல்லாம் சம்பக் நம்ப மறுக்கிறாள். உங்கள் உணவை நீங்கள் அரச குமாரர்களுக்குப் போட்டுவிட்டீர்களாம்'' என்றான்.

''அதனாலென்ன?'' என்றார் ராணா.

''சம்பக் ஆட்சேபிக்கிறாள்''

''எதற்கு?''

''நீங்கள் பட்டினி கிடப்பதற்கு''

''அவள் என்ன செய்தாள்?''

''சாப்பிட வைத்தேன்''

''ஏன்?''

''அவள் வயிற்றில் குழந்தையொன்று இருக்கிறதே-அதைப் பட்டினி போடலாமா?''

ராணா நகைத்தார்.''அவள் செய்ததைத்தான் நானும் செய்தேன். அவள் வயிற்றுக்குள் ஒரு குழந்தை. எனக்கோ

வெளியே உணவுக்குக் கை நீட்டும் பல குழந்தைகள்'' என்று நகைப்பின் ஊடே கூறிய ராணா, அந்த விவகாரத்தை அத்துடன் முடித்துக்கொண்டு ''முற்றுகை எத்தனை நாள் நீடிக்கும் என்று எதிர்பார்க்கிறாய்?''என்று வினவினார்.

''எத்தனை நாள் முற்றுகையிட்டாலும் கோமுல்மீரைப் பிடிக்க முடியாது'' என்றான் ரவிசந்த்.

''அப்படி சொல்லமுடியாது. இந்தக் கோட்டைக்குள் நமக்குக் குடிநீர் தரும் நோகுன் கிணறு சரியாயிருக்கும் வரை இந்தக் கோட்டை சரணடையாது'' என்ற ராணா, ''அதைப் பாதுகாக்க சரியான ஏற்பாட்டைச் செய்'' என்று உத்தரவிட்டு மாளிகைக்குள் சென்றுவிட்டார்.

ரவிசந்த் ராணாவின் மாளிகை வாயிலிலேயே நீண்ட நேரம் நின்றான். பிறகு கோட்டையைச் சுற்றிலுமிருந்த தற்காப்பு ஏற்பாடுகளைப் பார்வையிட்டான். கடைசியாக நோகுன் கிணறு'' இருந்த இடத்தை நாடிச்சென்று அதற்குள்ளே நோக்கினான்.

நோகுன் கிணற்றில் ஊற்று கொப்பளித்துக்கொண்டிருந்தது. கோட்டை மக்களுக்கும் வீரர்களுக்கும் வேண்டி எடுக்கப்பட்ட நீரை கிணற்று ஊற்றுகள் வேகமாக நிரப்பிக் கொண்டிருந்தன. அதன் அருமை அப்பொழுது தான் தெரிந்தது ரவிசந்துக்கு. ராணாவின் உத்தரவுப்படி இரு வீரர்களை கிணற்றுக்குக் காவல் வைத்து''வீரர்களே! இந்தக் கிணறு கோமுல்மீர் கோட்டையின் உயிர். இதை உங்கள் உயிரைப்போல் பாதுகாத்து வாருங்கள்'' என்று கட்டளையிட்டு தனது இல்லம் சேர்ந்தான்.

சம்பக் கண்களை மூடிப்படுத்திருந்தாள். அவ்வப்பொழுது சங்கடத்தால் சிறிது அசைந்தாள். ரவிசந்த் அவள் பக்கத்தில் உட்கார்ந்து அவள் வயிற்றின் மீது இறுகக்கட்டப்பட்டிருந்த முடிச்சை சிறிது தளர்த்தினான்.



பிறகு முகத்தை அவள் வயிற்றில் புதைத்துக்கொண்டவன் அசதியால் அப்படியே உறங்கிவிட்டான்.

விடியற்காலையில் அவன் எழுந்திருந்தபோது வெளியே கோட்டைக்குள் அதிக பரபரப்பு இருந்தது. ரவிசந்த் முகம் கழுவி பல் துலக்கி வெளியே ஓடினான். தூரத்தில் ராணா 'நோகுன்' கிணற்றுக்கருகில் நின்றிருந்தார். அந்த இடத்தை நோக்கி விரைந்த ரவிசந்த் அங்கிருந்த கோரக் காட்சியைக் கண்டு சிலையென நின்றான். அவன் காவல் வைத்துப்போன இரு காவலரும் கத்தியால் குத்தப்பட்டு குருதி ஆறாக ஓடி, கிணற்றடி நனைய மரணமடைந்து கிடந்தனர்.

ராணா கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தார். பிறகு திரும்பிய அவர் முகத்தில் கோபாக்கினி ஜொலித்துக் கொண்டிருந்தது. ''நோகுன் கிணற்றில் பூச்சிகள் ஏராளமாக செத்துக்கிடக்கின்றன'' என்ற ராணா, ரவிசந்தின் தோள் மீது கையைப் போட்டு அவனை அழைத்துக்கொண்டு நடந்தார். ''ரவிசந்த்! இனி நமக்கு குடிநீர் இல்லை'' என்றார் ஓரிடத்தில் நின்று.

பதில் சொல்லத் தெரியாமல் நின்றான் ரவிசந்த். ''இது வெளியிலிருப்பவர் செய்ததல்ல. கோட்டைக்குள் ஒரு துரோகி இருக்கிறான்'' என்ற ராணா, ''அவனை சீக்கிரம் கண்டுபிடிக்க வேண்டும்'' என்று ரவிசந்துக்கு ஆணையும் இட்டார்.

அதே சமயத்தில் வெளியிலிருந்த எதிரிகள் படை கோட்டை மதில்மீது பீரங்கிப் பிரயோகமும் செய்யத் தொடங்கியது.

## 52. கவிதைக் கடிதம்

**ஹி**ந்துக்களின் மானத்தைக் காக்க அவ்வப்பொழுது ஒரு மகாவீரன் தோன்றுகிறான். ஆனால் ஹிந்து சமுதாயத்தை காட்டிக்கொடுக்கும் துரோகிகள் பலர் தோன்றுகிறார்கள். அதனால்தான் ஹிந்து சமுதாயம் பல நூற்றாண்டுகள் பிற சமுதாயங்களின் அடிமையாக வாழ்ந்து வந்தது. அந்த துரோகிகளின் பட்டியலில் அக்பரின் கையாளாக இருந்து நோகுன் கிணற்று நீரைப் புழுக்களால் நிரப்ப யோசனை சொன்ன தேவ்ரா குலத் தலைவனையும் சேர்க்க வேண்டும். ''நோகுன் கிணறு பாழாக அடிக்கப்பட்டால் கோமுல்மீர் வீழ்ந்தது'' என்று யோசனை சொன்னதன்றி, அதைப் பாழாக அடிக்க தனது கையாள் ஒருவனையும் கோமுல்மீருக்குள் நுழைத்தான் தேவ்ரா தலைவன். குடிநீர் இல்லாது போகவே ராணா தமது படைகளுடன் வெளிவந்து போரிடத் தயாரானார். அதற்கு முன்பாக வீரர்களான பில்ஜாதியாரிடம் தமது மனைவிகளையும் குழந்தைகளையும் கர்ப்பவதியான சம்பக்கையும் ஒப்படைத்தார். அன்றிரவு சுரங்க வழியாக பெண்களும் குழந்தைகளும் அழைத்துப்போகப்பட்ட பிறகு ராணா கோட்டைக் கதவுகளைத் திறந்து தமது வீரர்களுடன் வெளியே வந்தார். ஏதோ பெரும் புயல்போல் வெளியே வந்த ராணாவின் படையால் முற்றுகைப் படையின் முன் வரிசைகள் பாதிக்கப்பட்டாலும் பின் வரிசைகள் நெருங்கித் தாக்க கோமுல்மீர் மொகலாயர் கைகளில் வீழ்ந்தது. ஆனால் ராணாவோ, ரவிசந்தோ மற்றும் பிரதான படைத் தலைவர்களோ யாரும் பிடிபடவில்லை. இனி கோட்டையைக் காக்க முடியாதென்று உணர்ந்த ராணா தமது படையுடன் எதிரிப் படைகளை அம்புபோல் ஊடுருவினார்.



எதிர்ப்பட்டவர்களைக் கொன்றுகொண்டே போனார். இந்த பயங்கரப்போரில் மேவாரின் ஆஸ்தான கவியும் மாண்டான். அதனால் மனமுடைந்த ராணா, தமது மீதிப் படையுடன் மேவாரின் தென்கிழக்குப் பகுதியிலிருந்த மலைக்காட்டுக் குடியிருப்பான சப்புன் என்ற இடத்துக்குச் சென்றார். அங்கு சோந்த் என்ற நகரத்தில் தங்கினார்.

ஆனால் லக்ஷக்கணக்கில் அடுத்தடுத்து ஈசல்கள்போல் குவிந்த மொகலாயரும், மான்சிங்கின் ராஜபுத்ரரும் ராணாவுக்கு இருக்க இடமில்லாமல் அடித்தனர். கோமுல்மீரைத் தொடர்ந்து, துர்மேதி, கோகுண்டா கோட்டைகள் வீழ்ந்தன. இந்தக் கோட்டைகளை ராஜா மான்சிங்கே நேரில் முற்றுகையிட்டுப் பிடித்தார். முதலில் உதயசாகரத்தில் செய்த சபதப்படி ராணாவை மேவாரில் நிற்க இடமில்லாமல் அடித்தார் மான்சிங். மகபத்கான் உதயபூரைப் பிடித்தான். அதே சமயத்தில் தான் பெரிட் என்ற மொகலாய படைத் தலைவன் ராணா தங்கியிருந்த சோந்தையும் தாக்கினான். இதற்கும் ஒரு ராஜபுத்ரன் உதவினான்.

ஆனால் இத்தனை துரோகிகளுக்குமிடையில், ராஜ பக்தியும் நாட்டு பக்தியும் மிகுந்த வீரர்கள் ராணாவின் பக்கத்தில் உறுதியாக நின்றபடியால் ராணாவை அண்ட யாராலும் முடியவில்லை. மனைவிமார்களுக்கும் குழந்தைகளுக்கும் உணவுவசதிகூட இல்லாதசமயங்களிலும் ராணா திடீர் திடீரென்று பல இடங்களில் தோன்றி மொகலாய படைப்பிரிவுகளை வெட்டிச் சாய்த்துக் கொண்டிருந்தார். இப்படித் தொல்லை கொடுத்த ராணாவை எப்படியும் பிடித்துக்கொண்டு வருகிறேன் என்று சந்த் நகரத்தைப் பிடித்த பெரிட் மார்தட்டினான். அப்படி சபதம் செய்ததன்றி அதை நிறைவேற்றத் தனது படைகளுடன் காடுகளிலும் உலவலானான். அந்த பெரிட் இப்படி ஆர்ப்பாட்டமாகத் திரிந்த சமயத்தில் ஒரு நாளிரவு ஒரு மலைப்பள்ளத்தில் ராணா பிரதாப்பால் மடக்கப்பட்டான். அந்த இடத்திலேயே ராணாவின் சிறுபடை மொகலாயரின் பெரும்

படையை அழித்து பெரிட்டையும் கொன்று விடவே, மொகலாயர்கள் மலைக்காடுகளுக்குள் திரிவதை நிறுத்திக் கொண்டாலும் ராஜாமான்சிங் மட்டும் ராணாவை அழிக்கும் முயற்சியைத் தளர்த்தவில்லை.

இதற்கிடையில் ராணாவின் வீரமும், மொகலாயப் படைகளின் கையாலாகாத செயல்களும் ராஜபுதனக் கவிகளால் மட்டுமின்றி மொகலாயக் கவிகளாலும் பாடப்பட்டன. ராணாவின் வீ ரச் செயல்கள் அக்பரின் இதயத்தையும் தொட்டன. அவருடைய சபையில் இருந்த தில்லி நகரப்படைத் தலைவனான கான்கானான், அக்பரின் முன்னாலேயே பிரதாப்பைப் பற்றிப் பின்வரும் கருத்துள்ள கவிதையைப் பாடினான்.

''இந்த உலகில் எதுவும் நிலையற்றது. நிலமும் பணமும் மறையும். ஆனால் ஒரு மகாவீரனின் கண்ணியமான பெயர் என்றும் நிலைத்திருக்கும். போஷியோ (பிரதாப்) பணத்தைத் துறந்தான். நிலபுலன்களைத் துறந்தான், ஆனால் தன் தலையை யாருக்கும் வணங்கினானில்லை. ஹிந்து மன்னர்கள் அனைவரிலும் அவன் ஒருவனே தனது இனத்தின் மானத்தைக் காத்து நின்றான்.''

இந்தக் கருத்துக் கவிதை மொகலாய சாம்ராஜ்யத்தில் எங்கும் பரவலாயிற்று. ஆண்டுகள் ஓடின. பிரதாப் பணியவில்லை. அன்ன ஆகாரமின்றி, குழந்தைகள் வாட, பெண்கள் துன்புற, சிறுபடையுடன் போராடிக்கொண்டேயிருந்தார். நாடில்லை, இருக்க வீடில்லை. இந்த நிலையில் அவ்வப்பொழுது இடம் மாறினார் பிரதாப். ராஜ பக்தர்களான பில்ஜாதியர் ராணாவின் குழந்தைகளைக் கூடைகளில் வைத்துத் தூக்கிக்கொண்டு மலைக்காடுகளில் நடந்தனர். இரவுகளில் அந்தக் கூடைகள் மரக்கிளைகளில் தொங்கவிடப்பட்டு குழந்தைகளின் தொட்டில்களாயின. அந்தத் தொட்டில்கள் ஒன்றில் ரவிசந்தின் மூன்று வயதுள்ள குழந்தையும் சீராடினான். சம்பக் அந்தக்



கஷ்டங்களை லட்சியம் செய்யவில்லை. ரவிசந்த் சதா ராணாவுடனேயே இருந்தான். ராணாவின் பக்கத்திலேயே படுத்தான். அதைப்பற்றி சம்பக் ஒருநாள் ரவிசந்துடன் தனிமையிலிருக்கையில் கேட்டாள். ''உங்களுடன் பேசக் கூட அவகாசம் கிடைக்கவில்லையே'' என்று.

''ராணாவுக்கு மூச்சுவிடக்கூட அவகாசமில்லையே சம்பக்'' என்றான் ரவிசந்த்.

''ராணாவுடன் தினம் படுப்பதானால் நீங்கள் ராணாவையே விவாகம் செய்து கொண்டிருக்கலாமே'' என்று வேடிக்கையாகப் பேசினாள் சம்பக்.

''செய்து கொள்ளலாம். ஆனால் ...''— இழுத்தான் ரவிசந்த்.

''ஆனால்?'' என்று கண்களை அவனை நோக்கி உயர்த்தினாள் சம்பக்.

''மொகலாயரின் கையாளாக இருந்த என்னை மணந்து கொள்ள அவர் சம்மதிக்க வேண்டுமே'' என்றான் ரவிசந்த்.

இதைக் கேட்ட சம்பக் இனிமையாக நகைத்தாள். அவள் இடையில் தனது இடது கையைச் செலுத்தி தன்னை நோக்கி இழுத்து அணைக்க முயன்றான் ரவிசந்த். அப்பொழுது பின்னாலிருந்து ரவிசந்தை யாரோ உதைத்தார்கள். ரவிசந்த் திரும்பினான். அவன் மூன்று வயதுக் குழந்தை அவனை உதைத்தது. கையால் அடிக்கவும் செய்தது. ரவிசந்தின் முகத்தருகே வந்த சம்பக்கின் முகத்தையும் பிடித்துத் தள்ளியது. இந்த இம்சைகளால் ரவிசந்த் நகைத்தான். 'பார்த்தாயா? உன் பிள்ளையை'' என்று சம்பக்கிடம் கூறினான்.

''இவன் ராணாவின் ஒற்றன்'' என்றாள் சம்பக்.

''ஆம். நாம் என்ன செய்கிறோம் என்பதை வேவு பார்க்க ராணாதான் தூண்டியிருப்பார்'' என்று ரவிசந்த் ஒத்துப்பாடினான்.

இப்படி நடந்து கொண்டிருந்த ராணாவின் முகாம் அவ்வப்பொழுது இடம் பெயரலாயிற்று. உணவு கிடைப்பதும் அரிதாயிற்று. ஒருநாளிரவு ராணா சாப்பிட உட்கார்ந்த சமயத்தில் அவர் குழந்தைகள் கைநீட்டின. இருந்த உணவை அவற்றின் கைகளில் போட்டார் ராணா. இருப்பினும் உணவு போதாததால் குழந்தைகள் அழுதன. ராணி கண்ணீர் உகுத்தாள்.

ராணா மறுநாள் முதல் தீவிர சிந்தனையிலிருந்தார். திடீரென ஒருநாள் ஒரு தூதனிடம் ரகசியகடிதமொன்றைக் கொடுத்து ஏதோ சொன்னார். கடிதத்தை ஏந்திய வீரன் ஆஜ்மீருக்கு விரைந்தான். அடுத்த மூன்றாவது நாள் அக்பர் சபையைக் கூட்டினார். ராணா தமக்குக் கடிதம் எழுதியதைக் கூறினார். கடிதத்தை தமது விகிதனைவிட்டு படிக்கவும் சொன்னார். அதில் பிரதாப் எழுதியிருந்தார்: ''என்னை சுற்றிலும் எனது வீரர்கள் மடிந்து விழுவதைக் கண்டேன். ஆனால் அதற்கு மசியவில்லை. ராஜபுத்ரன் அதைக் காணவே பிறக்கிறான். ஆனால் குழந்தைகள் பசிக்கு அழுவதை எத்தத் தந்தை பார்ப்பான்? அதற்கு பரிகாரம் வேண்டாமா? எனது கஷ்டங்களுக்கு விடிமோட்சமில்லையா? இதுதானா ராஜரீகம்?'' என்று கிட்டத்தட்ட சரணாகதிக்கு சமானமான அந்தக் கடிதத்தைப் படிக்கக் கேட்டதும், அக்பர் வெற்றிப் புன்முறுவல் செய்தார். இதன் விளைவாக பொதுக் கொண்டாட்டங்கள் நடக்கட்டும் என்றும் உத்தரவிட்டார்.

''சற்றுப் பொறுங்கள் சக்கரவர்த்தி'' என்றான் பிகானீர் மகாராஜாவின் தம்பியான பிருத்விராஜ்.

''ஏன் பிருத்விராஜ்?'' என்று சக்கரவர்த்தி கேட்டார்.



''அந்தக் கடிதத்தை நான் பார்க்கிறேன்'' என்றான் பிருத்விராஜ்.

பிருத்விராஜிடம் கடிதத்தைக் காட்டுமாறு சக்கரவர்த்தி உத்தரவிட, கடிதம் பிரு விராஜிடம் கொடுக்கப்பட்டது. சபையில் எழுந்து நின்ற பிருத்விராஜ் ஒருமுறைக்கு இருமுறையாக கடிதத்தைப் பார்த்தான். முடிவில் ''சக்கரவர்த்தி! நல்லவேளை இந்தக் கடிதத்தை நான் பார்த்தேன்'' என்றான்.

''என்ன பிருத்விராஜ்?'' என்று சக்கரவர்த்தி வினவினார்.

''கொண்டாட்டத்தை நடத்தியிருந்தால் நம்மைக் கண்டு உலகம் நகைத்திருக்கும்'' என்றான் பிருத்விராஜ்.

''ஏன்?'' - அக்பர் உஷ்ணத்துடன் கேட்டார்.

பிருத்விராஜ் அரச சபையை ஒருமுறை சுற்றுமுற்றும் நோக்கினான். ''இது ராணா பிரதாபசிம்மரின் கையெழுத்தல்ல'' என்ற ஒரு வெடியை வீசினான்.

சபையில் முதலிலிருந்த உற்சாகம் மறைந்து நிசப்தம் குடிகொண்டது. பிருத்விராஜ் தொடர்ந்து சொன்னான், ''சக்கரவர்த்தி உத்தரவிட்டால் ராணாவுக்கு நானேகடிதம் எழுதிக் கேட்கிறேன்'' என்றான்.

அக்பர் சிந்தித்தார். ''அப்படியே செய். அனுப்புமுன்பு கடிதத்தின் வாசகத்தைப் படித்துக் காட்டு'' என்றார். தலைவணங்கினான் பிருத்விராஜ்.

அன்றிரவு கடிதத்துடன் சக்கரவர்த்தியின் அந்தப்புரத்துக்கே சென்ற பிருத்விராஜ் அந்தப்புரமுன்அறையில் நின்று தான் வந்திருப்பதை சக்கரவர்த்திக்கு தெரிவிக்குமாறு கூறினான். சிலநிமிடங்களில் சக்கரவர்த்தியே அங்கு வந்து பிருத்விராஜை கடிதத்தைப் படிக்கும்படி உத்தரவிட்டார். பிருத்விராஜ் படித்தான்.

''வணக்கத்துக்குரிய ராணாபிரதாப்புக்கு பிருத்விராஜ் எழுதுவது. தாங்கள் சக்கரவர்த்தியிடம் சரணடைவது குறித்து எங்களுக்கெல்லாம் மிகவும் திருப்தி. வீரான பிரதாப் எங்களுடன் சேருவதால் சக்கரவர்த்திக்கு எங்களிடமுள்ள மதிப்பும் அதிகமாகும். சீக்கிரம் விடையனுப்பினால் நானே நேரில் வந்து தங்களை அழைத்து வருகிறேன்'' என்ற வாசகத்தைப் படித்தான் பிருத்விராஜ். அக்பர் பிருத்விராஜின் முதுகைத் தட்டிக்கொடுத்து ''கடிதத்தை அனுப்பிவிடு'' என்றார்.

தலைவணங்கி வெளியே வந்த பிருத்விராஜ் அந்தக் கடிதத்தை மடியில் சொருகிக்கொண்டு, மடியிலிருந்த வேறொரு கடிதத்தை மடித்து ராஜமுத்திரைகளை வைத்தான். ''இதைக் கொண்டுபோய் ராணாவிடம் கொடு'' என்று உரக்கக் கூறவும் செய்தான்.

அன்றிலிருந்து மூன்றாவது நாள் தமது காட்டு முகாமில் ராணா பிரதாப் பிருத்விராஜின் கடிதத்தைப் படித்தார்.

''ஹிந்துவின் நம்பிக்கை ஹிந்துவின் கைகளில்தான் இருக்கிறது. ஆனால் ராணாவே எங்களைக் கைவிடுகிறார். ராணா ஒருவர் இல்லாவிட்டால் எல்லா ஹிந்துக்களையும் அக்பர் ஒரே தட்டில் வைத்துவிடுவார். நமது மன்னர்கள் அடிமைகளாகிவிட்டார்கள். நமது மாதர்கள் கற்பிழந்தார்கள். அக்பர் நமது இனச்சந்தையில் ஒரு தரகர். ராணாவைத் தவிர எல்லோரையும் விலை பேசிவிட்டார். சித்தூரும் இந்தச் சந்தைக்கு வரப் போகிறதா? ஹமீரின் சந்ததியும் எங்களைக் கைவிட்டுவிடுமா? இந்தத் தரகன் சிரஞ்சீவியல்ல. மரணம் ஒருநாள் இந்தத் தரகனையும் அழைத்துச் செல்லும். அன்று ராஜபுத்ரர்கள் ராணாவிடம் வருவார்கள், தங்கள் விதைகளை ராஜ புதனப் புனிதபூமியில் விதைக்க, மீண்டும் தூய்மையான ராஜபுதன ரத்தத்



தைப் பெற. இன்று ராஜபுதனம் ராணாவைத்தான் எதிர்பார்க்கிறது, அந்த நிலை வந்தால் ராஜபுதன இனத் தூய்மையைக் காக்க.''

இதைப் படித்ததும் ராணாபிரதாப் எழுந்தார் சிங்கம் போல. ''ரவிசந்த்! சக்தா! நமது படைகளைத் திரட்டுங்கள்'' என்று கூவினார்.

இருவரும் வியப்பின் வசப்பட்டு எழுந்து ''என்ன ராணா?'' என்று ஏககாலத்தில் வினவினர்.

''என் ரத்தம் வேகமாக ஓடுகிறது. வெற்றி அருகில் தெரிகிறது'' என்ற ராணா கடிதத்தை சக்தாவிடம் கொடுத்து மரத்தில் தொங்கிக் கொண்டிருந்த தமது வாளை சட்டென்று உறையுடன் எடுத்து, உறையிலிருந்து வாளை உருவி வேகமாக இருமுறை வீசினார்.

சோர்வுற்ற ராணாவின் இதயத்துக்கு பிருத்விராஜின் கடிதம் உரமேற்றியது. கவிஞனான பிருத்விராஜ் கடிதத்தை கவிதையாக வடித்திருந்தான். அந்தக் கவிதை மேவாரின் கதையை அடியோடு மாற்றியது. அடுத்தடுத்து ராணா பல இடங்களில் சென்று மொகலாயப் படைகளை அழித்தார். கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் நெருப்பு வைத்தார். மேவாரின் சுதந்திர சுவாலை மீண்டும் பெரிதாக எரிந்தது.

அக்பரின் காதுகளில் ராணாவின் செயல்கள் விழுந்தன. பிருத்விராஜைக் கேட்டார் அக்பர் ''ராணாவின் வெறிக்குக் காரணம் என்ன?'' என்று.

''என் கடிதத்துக்கு பதில் சொல்கிறார் ராணா'' என்று வெறுப்புடன் பேசிய பிருத்விராஜ், உள்ளூர நகைத்துக் கொண்டான்.

# 53. மந்திரி அளித்த பொக்கிஷம் !

ராணா பிரதாபசிம்மன் தனது கடிதத்துக்குப் பதில் சொல்வதாக பிருத்விராஜ் பதில் சொன்னதும் அக்பர் அதை தவறாக புரிந்துகொண்டார். பிருத்விராஜ் கடிதங்களை மாற்றிவிட்டதை அறியாத அக்பர், ராணா பிரதாப் மிதமிஞ்சிய திமிரினால்தான் சுற்றுமுள்ள நிலபுலன்களைக் கொளுத்துவதாக நினைத்து, அதற்குத் தக்க பதிலைக் கொடுக்கவும் எற்பாடு செய்து, ராணாவை மேலும் நெருக்க அதிகப் படைகளை ஆராவலிக்கு அனுப்பி வைத்தார். அந்த நெருக்கடியால் உணவு வரும் பாதைகள் துண்டிக்கப்பட்டதாலும் பணம் அடியோடு இல்லாததால் படைவீரர்களுக்கு சம்பளம் கொடுக்க வசதியில்லாததாலும் மேவாரைத் துறந்து செல்லத் தீர்மானித்த ராணா அதைப் பற்றி சக்தசிம்மனிடமும் ரவிசந்திடமும் கலந்து ஆலோசித்தார் ''சக்தா! படைகளை பட்டினி போட்டு போர்களை நடத்தமுடியாது. ரத்தம் சுண்டிய வீரர்கள் போரிடுவது மிகவும் கஷ்டம். ஆகவே மேவாரை விட்டு சிந்துநதிப் பகுதியுள்ள ஸோக்கி நகரத்தில் முகாம் அமைக்கத் திட்டமிட்டிருக்கிறேன். இதனால் நமக்கும் அக்பருக்கும் இடையில் ராஜபுதனப் பாலைவனம் இருக்கும். அதைத் தாண்டி வந்து அக்பர் போர் துவங்குவது நடவாத காரியம்'' என்று ராணா சொன்னார்.

அதற்கு சக்தசிம்மன் பதிலேதும் சொல்லாததால் ரவிசந்தை நோக்கினார். ரவிசந்தும் தலையைக் குனிந்து விட்டதால் ராணா பெருமூச்செறிந்து தாமிருந்த குடிசை



யின் வாயிலை நோக்கினார். அங்கு சம்பக் தனது மூன்று வயதுக் குழந்தையுடன் நின்றிருந்தாள். சம்பக்கைப் பார்த்ததும் ரவிசந்தை நோக்கிய ராணா ''ரவிசந்த்! மேவாரை விட்டு இவர்களுக்காகவாவது நாம் போக வேண்டாமா? நாம்தான் அவதிப்படுகிறோமென்றால் பெண்களும் குழந்தைகளும் அவதிப்படவேண்டியது அவசியந்தானா?'' என்று கேட்டார்.

ரவிசந்த் அப்பொழுதும் பதில் சொல்லவில்லை. சம்பக் மட்டும் கேட்டாள். ''அப்பா! மேவாரை விட்டுப் போய் விடப் போகிறீர்களா?'' என்று.

''ஆம் சம்பக்! என் மூர்க்கத்தனத்திற்காக மற்றவர் இம்சைப்படுவதை நான் விரும்பவில்லை'' என்றார் ராணா.

''மற்றவர் என்று பிரித்துப்பேசும்படி இங்கு யாராவது இருக்கிறார்களா?'' என்று கேட்டாள் சம்பக்.

''அதல்ல சம்பக்! என் வீம்புக்காக எல்லோரையும் சாக வைப்பது எனக்கிஷ்டமில்லை'' என்று ராணா திட்டமாகச் சொன்னார்.

''இந்த யோசனை முன்பே வந்திருந்தால் எத்தனையோ பேர் செத்திருக்கமாட்டார்களே ராணா'' என்று குத்திக்காட்டிய சம்பக், ''அப்பா!'' என்று மெதுவாக அழைத்தாள்.

''என்ன சம்பக்?''—ராணாவின் குரலில் கனிவு இருந்தது.

''எங்கு போனாலும் இவனையும் உடன் அழைத்துப் போங்கள்'' என்று தன் மூன்று வயது மகனைச் சுட்டிக் காட்டிய சம்பக், அவனை ராணாவை நோக்கித் தள்ளவும் செய்தாள்.

அந்த மூன்று வயது வீரன் ராணாவைப் பார்த்து முறைத்தான். அவர் நீட்டிய கைகளை தனது கைகளால் விலக்க முயன்றான். திரும்பித் தாயிடம் ஓடிவந்து அவள் கால்களை இறுகக் கட்டிக் கொண்டான்.

சம்பக் நகைத்தாள் துன்பத்துடன். ''என் நகைக்கிறாய் சம்பக்?'' என்று ராணா வினவினார்.

சம்பக்கின் கண்களில் இரண்டு நீர் முத்துக்கள் தேங்கின. ''ராணா! இந்தக் குழந்தை தாயைவிட்டுப் பிரிய மறுக்கிறான். தாங்கள் தாயைத் துறக்க முடிவு செய்துவிட்டீர்கள்'' என்றாள் உதடுகள் லேசாகத் துடிக்க.

ராணா அவளை கூர்ந்து நோக்கினார். ''தாயா!'' என்றும் கேட்டார்.

''மேவார் உங்கள் தாயல்லவா?'' என்று வினவினாள் சம்பக்.

ராணா தலையைக் குனிந்து கொண்டார். சில விநாடிகள் சிந்தனையில் இறங்கினார். பிறகு ''சக்தா! ஆராவலியை விட்டு பாலைவனத்தில் இறங்க ஏற்பாடு செய்யுங்கள். இன்று பகலே புறப்படுகிறோம்'' என்று கூறிவிட்டு குடிசை வாயிலில் நின்ற சம்பக்கையும் ஒதுக்கிவிட்டு, வெளியே சென்று தூரத்தே இருந்த ஒரு பாறைமீதுநின்று கொண்டு மேவார்ப் பகுதிகளை நோக்கினார். ''தாயே! உன்னைவிட்டுப் போக மனமில்லை. ஆனால் உன் மானத்தைக் காக்க வேறு வழியில்லை. சீக்கிரம் திரும்பி வருகிறேன், படைதிரட்டப் பணம் திரட்டிக் கொண்டு. அதுவரை என்னை மன்னித்துவிடு'' என்று கூறினார். அன்றுபகலே ஆராவலியிலிருந்து தமது சிறு படையுடனும் பெண்களுடனும் இறங்க முற்பட்டார்.



இரண்டே நாட்களில் மலையிலிருந்து இறங்கி பாலைவனத்தில் நின்றுகொண்ட ராணாபிரதாப் தமது புரவியிலிருந்து திரும்பிப் பின்னால் வந்து கொண்டிருந்த சிறு படையையும் மனைவி மக்களையும் சுற்றத்தாரையும் நோக்கினார். அவர்கள் நிலை ராணாவுக்கு மேலும் தமது முடிவில் உறுதியூட்டவே, புரவியின் கடிவாளத்தை இழுத்து அதை நடக்கவிட்டார். பத்தடி தூரம் சென்றதும் சட்டென்று நின்று ஒரு கையை புருவங்களுக்கு மேல்வைத்து எட்ட நோக்கினார். தூரத்தே ஒரு புரவியும் ஒரு ஒட்டகமும் வந்து கொண்டிருந்ததைக் கவனித்ததும் ரவிசந்தை அருகில் அழைத்து ''ரவிசந்த்! அது யாராயிருக்கும்?'' என்று வினவினார்.

ரவிசந்த் கூர்ந்து நோக்கினான், தூரத்தே வந்த புரவி மீது இருந்தவனை. ''ராணா! விசித்திரமாயிருக்கிறது'' என்றான்.

''என்ன ரவிசந்த்?'' -ராணா வியப்புடன் வினவினார்.

''வருவது தங்கள் மந்திரி.''

''மந்திரியா?''

''ஆம் ராணா''

''எந்த மந்திரி?''

இந்த முறை சக்தசிம்மன் பதில் சொன்னான், ''பாமாஷா'' என்று.

இதைக் கேட்ட பிரதாப் பிரமை பிடித்து புரவியில் அமர்ந்துவிட்டார் சிறிதும் அசையாமல். ''பாமாஷாவா?'' என்ற அவர் கேள்வியிலும் மரியாதை பலமாயிருந்தது.

''ஆம் அண்ணா'' என்று சக்தசிம்மன் சொன்னதும், பிரதாபசிம்மன் தனது புரவியிலிருந்து கீழே குதித்தார்.

* பாமாஷா என்ற பெயர் ராஜபுதன சரித்திரத்தில் பிரசித்தி வாய்ந்தது. மேவாரின் மந்திரிகளில் இணையற்றவர் என்று பெயர் வாங்கியவர். மேவாரைக் காப்பாற்றிய மகான் என்று இன்றும் சரித்திரம் சொல்லுகிறது. அத்தகைய பாமாஷா ராணாவின் அருகில் வந்ததும், புரவியிலிருந்து இறங்கினார். ராணாவுக்குத் தலைவணங்கிவிட்டு, ரவிசந்தையும் சக்தாவையும் நோக்கி ''எனது ஒட்டகத்திலிருக்கும் அந்த சாக்குகளை எடுங்கள்'' என்று உத்தரவிட்டு, ''ஹ்ஹா! ஹ்ஹா!'' என்று கூச்சலிட, ஒட்டகம் மண்டியிட்டு மணலில் படுத்தது. ரவிசந்தும், சக்தாவும் அதன் முதுகிலும் பக்கங்களிலும் காணப்பட்ட மூன்று சாக்குப் பொதியை இறக்கினார்கள்.

பொதி மிகவும் கனமாயிருந்ததால் இன்னும் இரண்டு மூன்று வீரர்களைத் துணைக்கு அழைத்துக்கொண்டு பொதிகளை இறக்கினார்கள். இறக்கி முடிந்ததும் பாமாஷா ராணாவின் வீரர்களை நோக்கி, ''ஒரு மூட்டையைஅவிழ்த்து ராணாவின் பாதங்களில் கொட்டுங்கள்'' என்று உத்தரவிட்டார்.

அடுத்த சில விநாடிகளில் சாக்கு அவிழ்க்கப்பட்டு ராணாவின் காலுக்கருகில் உள்ளிருப்புகள் கொட்டப்பட்டதும் பிரமித்து நின்றார் ராணா. அவர் கால்களை தங்க நகைகளும், கோமேதகம் கெம்பு முதலிய வைரங்களும் மறைத்தன, முழங்கால்வரை. அடுத்த சாக்கிலிருந்தும் இப்படியே தங்கமும் வைரங்களும் கொட்டப்பட்டதால் ராணா கேட்டார்: ''பாமாஷா! என்னை எதற்கு தங்கத்தில் புதைக்கப் பார்க்கிறீர்?'' என்று.

பாமாஷா பதில் சொல்லவில்லை, உடனடியாக. மூன்றாவது கோணியையும் கொட்டிய பிறகு ''ராணா!

* The name of Bamasha is preserved as the savior of Mewar Tod's Annals. Vol. I, Page 118.



இந்த சொத்தைக் கொண்டு எத்தனை படைகளைத் திரட்டலாம்? எத்தனை நாட்கள் வீரர்களுக்கு ஊதியம் கொடுக்கலாம்?'' என்று பாமாஷா வினவினார்.

''இது...'' என்று ராணா இழுத்தார்.

''மேவாரின் தலைமுறை தலைமுறையாக மந்திரி உத்தியோகம் செய்த எனது மூதாதையர் சேர்த்தசொத்து. இன்று மேவார் மானத்தைக்காக்க, படை திரட்ட தங்களிடம் ஒப்படைக்கப்படுகிறது'' என்றார் பாமாஷா.

ராணா மட்டுமின்றி ரவிசந்தும் சக்தாவும் மற்றோரும் அந்தக் குலதனத்தைக் கண்டு அசைவற்று நின்றனர். ''பாமாஷா!'' -ராணாவின் குரல் தீனமாக வந்தது.

''ராணா!'' என்றார் பாமாஷா.

''தியாகத்துக்கும் ஒரு எல்லை இருக்க வேண்டும்'' என்றார் ராணா.

''நீங்கள் எந்த எல்லையை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று பாமாஷா வினவினார். ''ராணா! நீங்கள் அனாதையாகத் திரிவதைப் பார்க்க என் மூதாதைகள் மந்திரி பதவி வகிக்கவில்லை'' என்றும் சொன்னார்.

தனது கால்களைப் புதைத்துக் கிடந்த அந்தப் பெரும் புதையலை உற்றுப் பார்த்தார் ராணா. அந்தப் புதையலைக்கொண்டு இருபத்து ஐயாயிரம் வீரர்களைப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு வைத்து நிர்வகிக்கலாம் என்பதைப் புரிந்து கொண்டதால், புதையலிலிருந்து கால்களை இழுத்துக்கொண்டு பாமாஷாவை அணுகி அவரை இறுகத் தழுவிக் கொண்டார். ''மந்திரிக்கு அழகு வரும்பொருள் உரைத்தல் என்றுதான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் பொருளுடன் மந்திரி வருவதை இன்றுதான் பார்க்

கிறேன்'' என்ற ராணா, தனது வீரர்களை நோக்கி, ''என் நிற்கிறீர்கள்? இந்தப் பொக்கிஷத்தை திரும்ப சாக்குகளில் திணித்து ஒட்டகத்தில் ஏற்றுங்கள். திரும்புங்கள் மேவாருக்கு'' என்று கூவினார் பெரிதாக. அந்தக் கூவலுடன் புரவியில் தாவியும் ஏறினார். அடுத்த வினாடி புரவி பறந்தது ஆராவலியை நோக்கி.

அந்த நிதியைக்கொண்டு பெரும் படையைத் திரட்டிய ராணா சில தினங்களில் மேவாரின் விடுதலைப் போரைத் துவக்கினார். ரவிசந்த், சக்தசிம்மன் இவர்களை ஒவ்வொரு படைப்பிரிவுக்கு தலைவராக்கியதன்றி தாமும் ஒரு பெரும் படைப்பிரிவுடன் எதிரிகளின் தேவீர் முகாமைத் தாக்கி அங்கிருந்த ஷாபாஸ் என்ற மொகலாயத் தலைவனையும் மற்ற மொகலாய வீரர்களையும் தீர்த்துக் கட்டினார். ராணா பாலைவனத்துக்கு ஓடிவிட்டதாக நினைத்த மொகலாயப் பிரிவுகள் திடீரெனத் தாக்கப்பட்டதால் நிலை குலைந்தன. வெகு சீக்கிரம் கோமுல்மீர் திரும்பவும் பிடிபட்டது. நோகுன் கிணற்றைப் பாழாக்கிய அப்துல்லாவும் அவன் படைப்பிரிவும் நிர்மூலம் செய்யப்பட்டன. இப்படி சுமார் முப்பத்திரண்டு படைத்தளங்களை ராணா மின்னல் வேகப் போரில் பிடித்தார். அங்கிருந்த மொகலாயப்படைகளைத் தயைதாட்சண்யமின்றி வாளுக்கு பலி கொடுத்தார். தன் அவதிக்கெல்லாம் காரணமான ராஜா மான்சிங்கின் அம்பரையும் தாக்கி, அங்கிருந்த பிரதான வணிகத் தளமான மால்பூராவையும் தீக்கு இரையாக்கினார்.

இந்த செய்தி ஆஜ்மீருக்குப் பறந்தது. அக்பர், மான்சிங்கைக் கேட்டார். ''மான்சிங்! நீ நினைத்ததுபோல் பிரதாப்பை நசுக்கி விடவில்லையே; உனக்கு தீம்பு வந்து விட்டதே'' என்று.

மான்சிங் தலைகுனிந்தார். தன்னைப் பிரதாப் பழி வாங்கி விட்டதை உணர்ந்தார். அப்பொழுது அவரை



அணுகி பிருத்விராஜ் சொன்னான். ''ராஜா! எப்பொழுதும் சுதந்திர வாழ்க்கைக்குச் சூறாவளி வேகமும், அடிமை வாழ்க்கைக்கு ஆமை வேகமும் உண்டு'' என்று.

ராஜா மான்சிங் அவனைச் சுட்டுவிடுவதைப்போல் பார்த்தார். ''ராணா பிரதாப் அவர் ஊரையுந்தான் கொளுத்துகிறார்'' என்றார்.

''அதற்குக் காரணம் வேறு'' என்றான் பிருத்விராஜ்.

''என்னவோ?''

''நாம் அங்கு சென்றால் சோறு தண்ணீரில்லாமல் திண்டாட ஏற்பாடு செய்கிறார் ராணா.''

இதைக் கேட்ட அக்பர் நகைத்தார். ''ராஜா! அடுத்து என்ன யோசனை?'' என்றும் வினவினார் நகைப்பின் ஊடே. அந்தக் கேள்வியில் ஏளனம் நிரம்பிக் கிடந்தது.

''முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்'' என்று பிருத்விராஜ் வேதாந்தம் பேசினான்.

ராஜா மிருந்த வேகத்துடன் அரண்மனை நந்தவனம் சென்று, அங்கிருந்த குளத்தில் கற்களை எடுத்து ஒவ்வொன்றாக எறிந்தார். அவர் பேரனும் ஆராவலியில் அதையே செய்து கொண்டிருந்தான். அவன் பின்னால் நின்று கொண்டிருந்த சம்பக் தனது மகனின் செயலைக் கண்டு பெருமிதப் புன்னகை பூத்தான்.

# 54. ஒரு நாள் உண்டு விடுதலை!

பெஷோலா ஏரியின் கரையில் நின்று கொண்டு ஏரியின் பெரிய நீர்ப்பரப்பின்மீது கற்களை வீசிக் கொண்டிருந்த மகனைப் பெருமையுடன் பார்த்துப் பேருவகை கொண்ட சம்பக் கேட்டாள் ''என்னடா விளையாட்டு இது?'' என்று.

நான்காவது வயது முடிய இருந்த அந்த இளஞ்சிங்கம் ''அம்மா! சண்டை'' என்றான்.

''யாருடன்?'' என்று கேட்டாள் சம்பக்.

அவள் மகன் பெஷோலா ஏரியின் அலைகளைக் காட்டினான். ''அலைகள் உன் விரோதிகளா?'' என்று வினவினாள் சம்பக். ''கொடு இப்படிக் கற்களை'' என்று அவன் கையிலிருந்த கற்களையும் பிடுங்கப்போனாள். அவள் கைகளிடமிருந்து தப்பி அவன் ஓடினான், ''டேய்! இங்கே வா'' என்று கூறிய வண்ணம் அவனைப் பிடிக்க ஓடிய சம்பக் எதிரே வந்து கொண்டிருந்த ராணாவின் மீது மோதவே, அவளை இறுகப் பிடித்துக் கொண்ட ராணா, ''என்னம்மா இது?'' என்று வினவினார் தமது வளர்ப்புப் பெண்ணை நோக்கி, அன்பு பிரவாகித்த குரலில்.

சம்பக் தந்தையை ஏறெடுத்து நோக்கி அவருக்குப் பின்னால் ஒளிந்து கொண்ட மகனையும் நோக்கினாள். ''எல்லாம் நீங்கள் கொடுக்கிற செல்லம்'' என்று போலி அலுப்புடன் சொன்னாள். ''நானா! செல்லம் கொடுக்கிறேனா? யாருக்கு?'' என்று வியப்புடன் கேட்டார் ராணா.

''உங்கள் பின்னாலிருக்கும் தடியனுக்குத்தான்'' என்று தனது பிள்ளையை சுட்டிக் காட்டினாள் சம்பக்.



ராணா பெருமூச்செறிந்தார். ''அம்மா! எனக்கு அத்தனை யோக்கியதை இருந்துவிட்டால் நான் இப்படியா இருப்பேன்'' என்று ராணா பெருமூச்சின் ஊடே சொற்களையும் தடுமாற்றத்துடன் உதிர்த்தார்.

''உங்கள் யோக்கியதைக்கு என்ன குறைச்சல்?'' என்றாள் சம்பக். ''சம்பக்...''—ராணாவின் குரல் குழைந்தது.

''என்ன அப்பா''—சம்பக்கின் குரலில் கவலை இருந்தது.

''உன் குழந்தையிடம் விளையாட, அவனுக்கு செல்லம் கொடுக்க எனக்கு நேரம் ஏதம்மா?'' என்று கேட்ட ராணா பெஷோலா ஏரிக்கரையில் கட்டப்பட்டிருந்த குடிசைகள் மீது கண்களை ஓட்டினார். பிறகு அந்தக் குடிசைகளுக்கு அப்பால் புறப்படத் தயாராயிருந்த புரவி வீரர்களையும் பார்த்தார். பிறகு சொன்னார் ''சம்பக்! அரண்மனையில் வசிக்க வேண்டிய நீ குடிசையில் வசிக்கிறாய். மாணிக்கக் கற்களை வைத்து விளையாட வேண்டிய உன் மகன் சின்னஞ்சிறு மலைக்கற்களை வைத்துக்கொண்டு விளையாடுகிறான்'' என்ற ராணா, பின்னால் தமது கால்களைக் கட்டிக் கொண்டிருந்த சிறுவனைப் பிடித்து முன்புறமாகக் கொண்டு வந்து தமது கையில் தூக்கிக்கொண்டார். பிறகு ஏரி அலைகளை கவனித்ததால், மெல்ல நகைத்தார். சம்பக்கை நோக்கி ''சம்பக்! இந்த அலைகளைப் போல் தொடர்ச்சியாகத்தான் மொகலாயர் வருகிறார்கள். அதனால்தான் உன் மகன் அந்த அலைகள்மீது கற்களை வீசுகிறான். சூரன் மகனல்லவா?'' என்றார் நகைப்பின் ஊடே.

அந்த நகைப்பைத் தொடர்ந்து ராணா இருமுறை இருமினார். சம்பக் அவரைக் கவலையுடன் நோக்கினாள். ''அப்பா! வரவர உங்கள் உடல்நிலை சீர்குலைந்து

வருகிறது. சில நாட்கள் இளைப்பாறினால் என்ன?'' என்றும் வினவினாள்.

''ராஜபுத்ரர்கள் அடிமைப்பட்டுக் கிடக்கும் வரை இளைப்பாற அவகாசமேது சம்பக்? ஒரு நாள் இளைப்பாறு வேன். பிறகு எனக்கு எந்த அலுவலும் இருக்காது''என்று கூறி நகைத்தார்.

அவர் சொல்வது என்னவென்பது நன்றாகப் புரிந்தது சம்பக்குக்கு. ராணாவின் தேகநிலை நாளுக்குநாள்கேவலப் பட்டு வருவதை அவள் பார்த்துக் கொண்டுதானிருந்தாள். ஆனால் ராணா இல்லாவிட்டால் ராஜபுதனம் இல்லை என்று அவள் தீர்மானித்தாள். மேவாரை விடுதலையாக்கி விட்டார் ராணா, பாமாஷாவின் பணத்தாலும், சில ராஜ புத்ர குடும்பங்களின் பக்தியாலும் என்பதை அவள் உணர்ந்திருந்தாலும் சித்தூர் கைவசமாகாதது அவர் மனத்தில் பெரிய சுமையை ஏற்றியிருந்ததை அவள் புரிந்து கொண்டிருந்தாள். பெஷோலாவில் எத்தனையோ முறை ராணா சித்தூரை நோக்கிப் பெருமூச்செறிந்ததை அவள் பார்த்திருந்தாள். இருந்தாலும் அந்த சுதந்திர ஆதங்கம் ராணாவை வீழ்த்திவிட்டால் மேவார் மீண்டும் தலையெடுப் பது முடியாத காரியமென்றும் அவள் அறிந்திருந்ததால் ''அப்பா! ராஜபுதன சுதந்திரத்தின் ஆணிவேர், ராஜபுதன மானத்தின் ஒரே புகலிடம் நீங்கள்தான். ஆகவே உங்கள் உடல் நிலையை கவனிக்க வேண்டியது முக்கியம்'' என்றாள் சம்பக் ராணாவைப் பார்த்து. ''உங்களை இந்த குடிசைகளில் வைத்திருக்கிறார்களே அதற்காகவா நான் வாழவேண்டும்?'' என்று ராணா கேட்டு தமது மகளின் தலையை கோதிவிட்டார்.

''அப்பா! அரண்மனையின் அடிமை வாழ்வைவிடக் குடிசையின் சுதந்திர வாழ்வு சிறந்ததல்லவா?'' என்று கேட்டாள். ''நீ தினம் மண்ணில் படுக்கிறாய். அதனால் பேசுகிறாய்'' என்றார் ராணா.



''மனத்தில் சாந்தியிருந்தால் மண்ணும் குடிசையும் விண்ணாகும்'' என்ற சம்பக், ''நீங்கள் மட்டுமென்ன பஞ்சணையிலா படுக்கிறீர்கள்?'' என்றும் வினவினாள்.

''இந்த மண் என் தாய்''என்று ராணாஉணர்ச்சியுடன் சொன்னார்.

''எனக்கு மட்டும் இது தாயில்லையா?'' என்று சம்பக் கேட்டாள்.

''ஆம் சம்பக்'' -ராணா மெதுவாகப் பேசினார்.

''தாய் நம்மைத் துறக்க ஒப்புவாளா!''

''சில சமயங்களில் ஒப்பவேண்டும்''

''என்ன சமயம் அது?''

''அவள் மானத்தைத் காக்கும் சமயம். அவளுக்கு ஆடை கொடுக்கும் சமயம்''

''புரியவில்லை அப்பா''

''புரியாததற்கு என்ன இருக்கிறது சம்பக்? ஒருவன் துராக்ருதமாக நமது தாயின் சேலையைக் கிழித்து மான பங்கப் படுத்த வருகிறான். அவனை நாம் அழிக்கிறோம். தாயின் மானத்தைக் காக்கிறோம். அந்த மாதிரிதான் இந்தத் தாய் நாட்டின் நிலையும். மொகலாயர் ராஜபுதன சுதந்திர மாதாவை மானபங்கப் படுத்த முயன்றார்கள். நாம் போரிட்டோம். எதிரிகள் குருதியால் தாய்க்கு சிவப்புச் சேலை கட்டினோம்''என்ற ராணா, கையிலிருந்த குழந்தையை தாயிடம் கொடுத்தார். ''ஒரு காலத்தில் இவனும் ராஜபுதனத்தைக் காப்பான்'' என்ற ராணா, எதுமறியாதவர் போல் ''இவன் பெயர் என்ன?'' என்று கேட்டார்.

''ஹரிதாஸ்'' என்றாள் சம்பக்.

''நல்ல பெயர். வெற்றிக்குக் காரணமான பெயர்'' என்று சொல்லிக்கொண்டிருக்கையிலே, ரவிசந்த் அங்கு தோன்றினான். ''ராணா!'' என்று மெதுவாக அழைக்கவும் செய்தான்.

ராணா திரும்பி ரவிசந்தைப் பார்த்து ''என்ன ரவிசந்த்?'' என்று வினவினார்.

''புறப்படத் தயாராயிருக்கிறோம்'' என்றான் ரவிசந்த்.

சம்பக் அவர்களிடை குறுக்கிட்டு, ''அப்பா வரவில்லை. நீங்கள் போய் வாருங்கள்'' என்றாள்.

''என்?''

''அவர் உடல் நிலை சரியில்லை''

இதைக் கேட்ட ரவிசந்த் ராணாவின்மீது தனது கண்களை ஓட விட்டான். ராணாவின் மூச்சு சிறிது தயங்கித் தயங்கி வந்து கொண்டிருந்தது. ''ஆமாம் ராணா! சம்பக் சொல்வது சரி. நீங்கள் இங்கேயே இருங்கள். மொகலாயரின் படை மிகச் சிறிது. நானே சமாளிக்க முடியும்'' என்று சொல்லவும் செய்தான்.

ராணா அவனைப் பார்த்து நகைத்தார். ''ரவிசந்த்! இன்னும் நான் தான் மேவார் ராணா'' என்று சொன்னார் நகைப்பின் ஊடே.

''ஆம் ராணா அதை யாரும் இல்லையென்று சொல்லவில்லையே'' என்றான் ரவிசந்த்.

''அப்படி நான் ராணாவாயிருக்கும்வரை படை சம்பந்தப்பட்ட உத்தரவுகளை நான்தான் பிறப்பிக்க முடியும்'' என்றார் ராணா.

''உத்தரவிடுங்கள் ராணா'' என்று மரியாதையுடன் தலைவணங்கினான் ரவிசந்த்.



''என் புரவியைக் கொண்டுவா'' என்று துவங்கிய ராணா, சட்டென்று திகைத்து நின்றார். ''சைதக் தான் இல்லையே அதற்கு பிறகு என் புரவியென்று தனிப்பட எது?'' என்று வெளிப்படையாகவே சொன்ன ராணா, ரவிசந்த் கொண்டுவந்த புரவிமீது ஏறினார், சற்று சிரமப்பட்டு. அப்படி அவர் சிரமப்பட்டு ஏறியதை சம்பக் அன்று வரை கண்டதில்லை. ஆகவே கேட்டாள் ''அப்பா! நீங்கள் போகத்தான் வேண்டுமா?'' என்று.

புரவியில் அமர்ந்தவண்ணம் அவளிடமிருந்த ஹரிதாஸின் தலையில் தட்டிவிட்டுக் கிளம்பினார் ராணா. ரவிசந்த் அவருக்குப் பின்னால் சென்றான். அவனைத் தொடர்ந்தது சிறு படையொன்று.

இந்த மாதிரி திடீர் திடீரென்று செய்தி வருவதும் ராணா புறப்பட்டுச் சென்று வெற்றியுடன் திரும்புவதும் புதிதல்ல சம்பக்குக்கு என்றாலும், அன்று ஏதோ அவள் மனநிலை சரியில்லை. ராணா சென்றதைப் பார்த்துக் கொண்டே நீண்ட நேரம் நின்றாள். அன்று மாலை ராணா வந்தார். ஜெயத்தைக் குறிக்கும் முரசு அன்றும் முழங்கியது. ராணா புரவியிலிருந்து இறங்கி நின்றார் சில வினாடிகள். பிறகு இருமுறை விழ இருந்தார், தள்ளாடி தமது குடிசைக்குள் நுழைந்தார். சம்பக் அவரை நோக்கி ஓடினாள். அவர் குடிசைக்குள் நுழைந்ததும் அசைவற்று நின்றாள், ராணா தரையில் படுத்துக் கிடந்தார். அவர் உடலில் காயம் ஏதுமில்லை. ஆனால் அதிக பலவீனம் இருந்ததை சம்பக் கண்டாள். ''சம்பக்! எந்த நாட்டுக்கும் ஒருநாள் விடுதலை உண்டு. எந்த மனிதனுக்கும் அதே நியதிதான். அவனுக்கும் ஒருநாள் விடுதலை கிடைக்கும்'' என்று கூறினார். புன்முறுவல் செய்தார். அந்த விடுதலையும் நெருங்கிக் கொண்டிருந்தது.

# 55. மண்ணும் மலரும் !

மொகலாய சாம்ராஜ்யத்தை கால் நூற்றாண்டு காலம் தொடர்ந்து எதிர்த்து, ஹிந்துக்களின் மானத்தைக் காத்து லட்சிய புருஷனாய் விளங்கிய மகாவீரன் மண்ணில் கிடந்ததையும், விடுதலையைப்பற்றி அவர் பேசியதையும் கேட்ட சம்பக் ''அப்பா! மண்ணில் படுத்திருக்கிறீர்கள்'' என்று கூறி, அவர் பக்கத்தில் உட்கார்ந்து அவர் தலையை எடுத்து தனது மடியில் வைத்துக்கொள்ள முயன்றாள்.

ராணா சிறிது அசைந்து தலையைத் திருப்பி சம்பக்கை நோக்கி ''வேண்டாம் மகளே! இந்த மண்ணிலிருந்து என்னை எடுக்காதே'' என்றார். ''ஏன் அப்பா?'' என்று சம்பக் கேட்டாள்.

''அம்மா! இது மேவாரின். மண். பரிசுத்தமானது' இதில் நான் பிறந்தேன். இதிலே கிடக்கிறேன், இதிலேயே இணைந்து விடுவேன், மானத்தை விற்காமல் மரியாதை குன்றாமல்'' என்ற ராணா, ''சம்பக்! ரவிசந்தை அழைத்து வா'' என்று உத்தரவிட்டார்.

''அதற்கு முன்பு ஆகாரம் ஏதாவது கொடுக்கட்டுமா?'' என்று சம்பக் கேட்டாள். ''வேண்டாம். ஆகாரம் நிரம்ப சாப்பிட்டு விட்டேன்'' என்று ராணா சொன்னார்.

''எங்கு சாப்பிட்டீர்கள்?'' — சம்பக்கின் கேள்வியில் வியப்பு ஒலித்தது.

''போன இடத்தில்''

''எங்கு போனீர்கள்?''



''சித்தூருக்கு வெகு அருகில்''

''அப்படியா?''

''ஆம். அங்கு வலுவான மொகலாயர் படைப்பிரிவு ஒன்று வந்தது. அதை நிர்மூலப்படுத்தி விட்டோம். இனி சித்தூர் பக்கம் யாரும் வரமாட்டார்கள்.''

''அங்கு உணவு அருந்தினீர்களா?''

''அந்த வெற்றியே உணவுதான். சித்தூர் மண் நிரம்ப எதிரியின் குருதியைக் குடித்தது. அதன் தாகம்அடங்கியது; என் மனமும் நிரம்பியது.''

''ஆகாரம்?''

''மனத்தின் நிறைவே வயிற்றின் நிறைவும்'' என்று சொன்ன ராணா ''தாமதப்படுத்தாதே; ரவிசந்தை அழைத்து வா'' என்றார்.

சம்பக் வெளியே சென்று ரவிசந்தை அழைத்து வந்தாள். ரவிசந்தை நோக்கிய ராணா, ''ரவிசந்த்! எனது படைத்தலைவர்களைக் கூப்பிடு'' என்றார். ரவிசந்த் குடிசையின் வாயிலுக்குச் சென்று தலையை வெளியே நீட்டி ஏதோ சைகை செய்ய, ராணாவின் மூத்தகுமாரன் அமரசிம்மனும் சகோதரன் சக்தசிம்மனும் மற்றுமிரு படைத் தலைவர்களும் உள்ளே நுழைந்து ராணாவின் முன்பு நின்றார்கள். சம்பக் மட்டும் அவரது பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தாள். ''சம்பக்! என்னை சற்று திருப்பிவிடு. இவர்களை நான் நன்றாகப் பார்க்க வேண்டும்'' என்று ராணா உத்தரவிட ராணாவின் உடலை லேசாகத் திருப்பினாள் சம்பக்.

ராணா தமக்கு எதிரே நின்ற படைத்தலைவர்களை ஏறிட்டு நோக்கினார். சில வினாடிகள் எதும் பேசாமல் பிறகு அவர் உதடுகள் அசைந்து சொற்கள் மிகப் பலவீனமாக வெளியே வந்தன. ''படைத் தலைவர்களே! உங்களுக்கு நான் நன்றிதெரிவிக்கிறேன். பெரும் மாளிகை

களில் வாழ்ந்த உங்களை இந்தக் குடிசைகளுக்கு இழுத்து விட்டேன்'' என்று ராணா மெதுவாகப் பேசினார். யாரும் பதில் பேசவில்லை. ராணா தட்டுத்தடுமாறி கஷ்டப்பட்டு பேசுவதைப் பார்த்ததால் திகைத்து நின்றார்கள். ரவிசந்த் மெதுவாகக் கேட்டான். ''ராணா! எது சொர்க்கம்? எது நரகம்?'' என்று.

''சுகம் சொர்க்கம். கஷ்டம் நரகம்'' என்ற ராணா புன்முறுவல் கொண்டார்.

''மாற்றிச் சொல்கிறீர்கள் ராணா'' என்றான் ரவிசந்த்.

''எப்படி?''—ராணா கேட்டார்.

''மானம் சொர்க்கம். அதை இழப்பது நரகம். நரகத்திலிருந்து எங்களை மீட்டு சொர்க்கத்தை அளித்திருக்கிறீர்கள்'' என்ற ரவிசந்த், ''ராணா! மொகலாயர் பஞ்சணைகளில் புரண்டிருக்கிறேன். அதில் கிடைக்காத ஆனந்தம் இந்த மண்ணில் புரளுவதில் கிடைத்திருக்கிறது'' என்றும் சொன்னான்.

''ரவிசந்த்! மொகலாயர் பஞ்சணைகளில் மலர் தூவுவது வழக்கமாமே?'' என்று ராணா கேட்டார்.

''ஆம் ராணா!''

''இங்கு அப்படி எதாவது இருக்கிறதா? இந்த மண்ணில் யார் மலர் தூவுவார்கள்?''

''தூவ வேண்டியதில்லை ராணா.''

''ஏன்?''

''மண்ணில் மலர்கள் முளைக்கின்றன....''

''மண்மலரைச் சொல்கிறாயா?'' என்ற ராணா சம்பக்கை நோக்கி தமது விஷமக்கண்களைத் திருப்பினார். சம்பக் தனது-அழகிய விழிகளை நிலத்தில் தாழ்த்தினாள். ரவிசந்த் அதைக் கவனித்தாலும் கவனிக்காதவனைப்



போல பேசினான். ''மலர் மண்ணிலிருந்து தன் இச்சைப் படி முளைக்கிறது. சுதந்திரமும் ஒரு மலர். அதுவும் பஞ்சணையில் முளைப்பதுமில்லை, மலருவதுமில்லை, மகாவீரர்களின் மனங்களில் முளைக்கிறது'' என்று.

ராணா சிரமப்பட்டு தனது தலையை அசைத்தார். பிறகு மெதுவாகப்பேசினார்: ''படைத்தலைவர்களே! நான் உங்களை விட்டுப் பிரியும் காலம் நெருங்குகின்றது. என் விடுதலை சீக்கிரம் கிடைக்கும். ஆனால் எனக்கு ஒரு அச்சம் இருக்கிறது'' என்று. ''என்ன ராணா?'' -படைத்தலைவர்கள் ஒரே சமயத்தில் கேட்டார்கள்.

''எனக்குப்பின் என் மகன் இந்தக் குடிசைகளைவிட்டு மாளிகைக்கு மாற இஷ்டப்படலாம். இந்தக் குடிசைகள் மறையும். எந்த மண்ணுக்கும் மானத்துக்கும் நான் ஆயுள் முழுவதும் போரிட்டேனோ அதுவும் மறையும். இப்படி நேரிடும் என்று எனக்குத் தோன்றுகிறது. இத்தகைய மாறுதலிலிருந்து என் மகனைக் காப்பீர்களா? மேவார் பூர்ணமாக விடுதலையடைந்து மொகலாயர் இந்த மண்ணிலிருந்து விரட்டப்படும்வரை மண்ணே என் மகனுக்குப் பஞ்சணையாகவும், மானமே லட்சியமாகவும் அவன் வாழ அவனைக் கட்டாயப்படுத்துவீர்களா?'' என்று கேட்டார் ராணா. ''அப்படியே செய்வோம்'' என்றான் சக்தசிம்மன்.

''சத்தியம் செய்யுங்கள்'' என்றார் ராணா.

படைத்தலைவர் அனைவரும் வாளை உருவி பிரமாணம் செய்தார்கள். ராணாவின் முகத்தில் சாந்தம் குடிகொண்டது. இத்தனைக்கும் அமரசிம்மன் பேசவில்லை. மௌனமாகவே நின்றான். பிறகு ராணா சொன்னார்: ''சக்தசிம்மன்! இனி நான் போரிட வரமாட்டேன். நீயும் ரவிசந்தும் அந்தப் பணியை ஏற்றுக்கொள்ளுங்கள்'' -என்று.

ரவிசந்தும், சக்தசிம்மனும் தலைவணங்கி ஒப்புதலைத் தெரிவிக்க ராணா மனச்சாந்திக்கு அடையாளமாகப்

பெருமூச்செறிந்து மற்றவர்களுக்குப் போக விடை கொடுத்தார்.

எல்லோரும் சென்றபின் ரவிசந்தும் சம்பக்கும் மட்டும் அவருடன் இருந்தனர். ''ஏன் நிற்கிறீர்கள்? நீங்களும் போகலாமே'' என்றார் ராணா.

''இல்லை ராணா, இங்கேயே இருக்கிறோம்'' என்றான் ரவிசந்த். ''ஹரிதாஸ் எங்கே?'' என்று ராணா கேட்டார்.

''எங்கள் குடிசையில் இருக்கிறான்'' என்றாள் சம்பக்.

''அவனை எடுத்து வா'' என்றார் ராணா. சம்பக் வெளியே சென்று சில வினாடிகளில் மகனுடன் திரும்பினாள். ராணா அவனைத் தனது மார்புமீது உட்கார வைத்துக்கொண்டு, ''ஹரிதாஸ்! நான் அக்பர் என்று வைத்துக்கொள்'' என்றார்.

அடுத்த கணம் ஹரிதாஸின் முஷ்டி பலமாக இறங்கியது ராணாவின் முகத்தின்மீது. ராணாவின் பலஹீன நிலையில் அந்தத் துஷ்டனின் கை எத்தனை துன்பத்தை விளைவிக்கக்கூடும் என்று அதிர்ச்சியடைந்த சம்பக் ஆத்திரத்துடன் அவனைத் தூக்கப் போனாள். ''எடுக்காதே'' என்று அவளைத் தடுத்த ராணா தனது இடையிலிருந்த குறுவாளை எடுத்து ''ஹரிதாஸ்! இதை வைத்துக்கொள். நீ பின்னால் பெரிய வீரனாகி நாட்டைப் பாதுகாப்பாய்'' என்று சொன்னார்.

ஹரிதாஸ் தனது சின்னஞ்சிறு கைகளில் அந்தக் குறுவாளின் பிடியைப் பிடித்து உற்சாகத்துடன் ஆட்டினான், பிறகு அதை எடுத்துக்கொண்டு வெளியே ஓடினான். அன்றிலிருந்து பத்தாவது நாள் ராணா மண்ணுடன் இணைந்தார்.

இது நடந்து சில நாட்களுக்கெல்லாம் வசந்தம் வந்தது. எங்கும் காட்டு மரங்கள் புஷ்பங்களைச் சொரிந்தன. அவை தலையில் விழ, அவற்றை தள்ளிவிடாமலே



புஷ்பார்ச்சனை செய்யப்பட்ட தேவிபோல பெஷோலா ஏரிக்கரையில் நடந்து கொண்டிருந்த சம்பக் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து சிந்தனையில் இறங்கினாள். இரவு மிகவும் ஏறி விட்டதாலும் அப்பொழுது சுக்லபட்சமாதலாலும் வெண்ணிலவின் ஆட்சியிலிருந்த அந்த ஏரிக்கரை மண்ணிலேயே மல்லாந்து படுத்து விண்ணில் பவனிவந்த வெண்மதியை நோக்கினாள்.

அவளைத் தேடிவந்த ரவிசந்த் மெதுவாகப் பின்பக்கத்திலிருந்து அவளை நெருங்கினான், படுத்திருந்த அந்த மோகனாங்கியின் இணையற்ற அழகைப் பருகினான். அதனால் ஏறிய உன்மத்தத்தால் அவள் பக்கத்தில் உட்கார்ந்து அவள் உடலுக்குக் குறுக்கே ஒரு கையைப் போட்டான். ''என்ன வேவு பார்க்க வந்தீர்களா?'' என்று வினவினாள் சம்பக்.

''இல்லை'' என்றான் ரவிசந்த்.

''நீங்கள் மேவார் வந்ததே ராணாவை வேவு பார்க்கத் தானே? அந்தக் குணம் எங்கு போகும்?'' என்று கேட்டாள்.

''அது மண்ணில் மறைந்து விட்டது.''

''மண்ணிலா?''

''ஆம் மேவார் மண்ணில்.''

''ஏன்?''

''அங்கு ஒரு மலர் கிடைத்தது.''

''உம்.''

''அதுதான் அக்பர் எனக்குக் கிடைக்கும் என்று ஆசை காட்டிய பரிசு.''

''அக்பரே ஆசை காட்டினாரா?''

''ஆம். ஆனால் கொடுத்தது அவரல்ல. ராணா கொடுத்தார்.''

''பரிசா?''

''ஆம்.''

''மலரா?''

''ஆம் இதோ இந்த மண்மலரை'' என்ற ரவிசந்த் ''சம்பக்! வானிலிருக்கும் சந்திரன் சாட்சியாகச் சொல்கிறேன். இந்த மண்மலர் என் இதய மலர்'' என்றான்.

''ரவிசந்த்!'' என்று அவன் பெயரைச்சொல்லி அழைத்தாள் சம்பக்.

''என்ன சம்பக்?'' - அவன் கேட்டான் சிந்தனை துளிர்த்த குரலில்.

''சந்திரனைச் சாட்சிக்கு அழைக்காதீர்கள். அவன் ஒருநாள் இருப்பதைப்போல் இன்னொரு நாள் இருப்பதில்லை. சில நாட்கள் தேய்கிறான். சில நாட்கள் வளர்கிறான். நிலையற்றவன்'' என்றாள் சம்பக்.

''அப்படியானால் வானத்தின் சாட்சியாகச் சொல்கிறேன்'' என்றான் ரவிசந்த். ''அதைச் சில நாட்கள் மேகங்கள் மூடும்'' என்றாள் சம்பக்.

''அப்படியானால் இந்த மண்ணின் சாட்சியாக சொல்கிறேன்'' என்ற ரவிசந்த் மேற்கொண்டு பேசாமல் மண்ணில் கிடந்த அந்த மோகன மலரை நோக்கிக் குனிந்தான். நான்கு இதழ்கள் இணைந்தன. அந்த நிலை கண்டு பெஷோலா ஏரியின் அலைகள் தரையில் ''உஸ் உஸ்'' என்று பாய்ந்து யாரும் அங்கு வரக்கூடாது என்று எச்சரிக்கை செய்தன. மேலே மரக் கிளைகள் காற்றில் ஆடியதால் மலர்கள் உதிர்ந்தன, அந்த இருவர் மீதும். ''கீழே மண்; மேலே மலர்! இரண்டும் இணைந்த நிலை. இது சொர்க்கம்'' என்று ரவிசந்த் முணுமுணுத்தான்.

மண்மலர் பேசவில்லை, செயற்பட்டது.

19413
3492936

(முற்றும்)